# தாய்வீடு




THAIVEEDU FEBRUARY 2019 பெப்பிரவரி HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

# தமிழ் மரபுத் திங்கள் - 2019



படம்: Wide Dreams photography

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100 info@navawilson.law
416.321.1107 www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BBA, LLB, LLM
BARRISTER AND SOLICITOR
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு....
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

J&L JURIANSZ & LI
VITHU RAMACHANDRAN
BARRISTER & SOLICITOR
Litigation, Real Estate, Employment
Family, Estate, Corporate
Tel: 416-505-3350 | Email: vithu@juriansli.com
Address: 1100 - 5700 Yonge St., Toronto ON

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX ROYAL PROPERTIES
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com


• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
How can we help you plan your future?
. Tax and Estate Planning . Financial Planning . Personal Insurance
. Wealth Management . Retirement Planning . Business Insurance
Download Free MyLifePlan APP

Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON Homes Realty Inc. Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

YOGA CLASSES SCHEDULES AS FOLLOWS
யோக அமிர்தம்
FOR ADULT — RICHMOND HILL — MONDAY AND WEDNESDAY — 6:30 PM TO 8:00 PM — 10865 bay view ave. Richmond hill, Hindu Temple
OSHAWA — SUNDAY AND WEDNESDAY — 8:00 AM TO 9:30 AM. 1211 Harlstone cresent
FOR CHILDREN — RICHMON HILL — MONDAY AND WEDNESDAY — 5:00 PM TO 6:00 PM — 10865 bay view ave. Richmond hill, Hindu Temple
FOR ADULT — AJAX — THURSDAY AND FRIDAY — 6:00 PM TO 7:30
FOR ADULT — NORTH YORK — SATURDAY — 8:00 AM TO 9:30 — 1290 finch ave, west unit 22, keele and finch
Please Contact at
416 729 3419
further more information.

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

LIFEPLAN INVESTMENTS
WHERE IS YOUR MONEY GOING?
WE CAN HELP
PLAN. BUILD. PROTECT
Meena Visvalingam, EPC
Chief Operating Officer (COO)
Free Money Saving Tools
My LifePlan App
416-876-2000
(905) 294 PLAN (7526)
meena@lifeplaninvestments.ca
www.lifeplaninvestments.ca
BANKING | BUSINESS & PERSONAL INSURANCE | TAX & ESTATE PLANNING | WEALTH MANAGEMENT

விசேட சலுகை விலையில்
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
SMART HOME MONITORING
SAVE UP TO $1350
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com
ROGERS

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

416.230.2991
rajahsai9@gmail.com
416.298.4664
80 Nashdene Rd Unit B25-26
ON M1V 5E4
SIVA MAILVAGANAM
Insurance & Investment Broker
SUPER VISA | RRSP | RESP | CRITICAL ILLNESS | LIFE
NON - MEDICAL | DISABILITY | TRAVEL
100 YEAR TERM | 40 YEAR TERM

Uthayan Alex Sivasambu
B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL BANKER
alex-sivasambu@coldwellbanker.ca,
www.sivasamburealty.com

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu Sales Represnative
Cell 416-450-6833
Home Life Top Star Realty Inc. Brokerage
PHONE 905-209-1400 FAX 905-209-1403

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk

Criminal Summary Offences
Provincial offences / Traffic Tickets
Landlord & Tenant Matters
Immigration & Refugee Matters
Anjeline J Thisairajah
B.A(Hons), M.Sc., Ph.D.
Paralegal, Advocate,
Commissioner of Oaths, Interpreter & Translator
T: 647-291-1357

Commercial, Residential & Investment
வீடு, வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
1% Cash Back For Buyer
I WILL PAY YOUR HOME INSPECTIONS AND LAWYER FEE
1% Listing Commission
Reliable, Experienced full-time realtor, Serving Buyer and Seller all over the GTA, First time home buyer, Investment and Preconstruction.
VIRGE CHANDRASEKHARA
SALES REP
ROYAL LEPAGE ignite
Royal LePage Ignite Realty, Brokerage Independently Ownad and Operated
795, Milner Ave #D2, Toronto, ON M1B 3C3
Office : 416.282.3333 / Fax : 416.272.3333
647-628-4958
• virge88@gmail.com • virgehomes.com

www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்
இணையம் .net
முற்றிலும் இலவசம்
inayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டெழும் மரபுரிமைச் சிந்தனைகள்

பன்முகப் பண்பாட்டுச் சூழலில், எமது தனித்துவமான அடையாளங்களைப் பேணிச்செல்ல வேண்டும் என்பதில் ஒரு தரப்பினர் - புதிய தலைமுறையினர் முனைப்போடு இயங்கத் தொடங்கியிருக்கின்றனர் என்பதைத் தெரிவித்திருக்கின்றன 2019ம் ஆண்டின் தமிழ் மரபுத் திங்கள் விழாக்கள்.

பல்வேறு தமிழ் அமைப்புகள் பொங்கல் விழாக்களை நடத்தியிருந்தன. அவை தமக்குள் தாமே செய்த விழாக்களாக இருந்தாலும் மரபுப் பேணல் தொடர்பில் ஓர் உத்வேகத்தை அவர்கள் பெறுகின்றனர்.

நாம் அறிந்தவரையில், ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றத் தொடங்கியிருக்கும் தமிழ் இளையோர் பலர், ஏறக்குறையப் பதினைந்து பள்ளிகளில் முழுப்பள்ளிக்கூடமுமே கலந்துகொண்டிருந்த மரபுரிமை நிகழ்வுளை முன்னெடுத்திருந்தனர். அந்தந்தப் பள்ளிகளின் மாணவரே நிகழ்வுகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வுகள் முழுமையாகத் தமிழர் அடையாளங்களை வெளிப்படுத்தினவா என்று கேட்டால் இல்லை என்பதே விடை. தெலுங்குக் கீர்த்தனைகளும் இறைவழிபாட்டுப் பாடல்களும் மேனாட்டு இசைக்கருவிப் பயன்பாடுகளுமிருந்தன. அது அவர்களின் தவறல்ல. மரபுசார் நிகழ்வுகளாக எவற்றை ஒழுங்கு செய்யவேண்டும் என்ற தெளிவு அவர்களிடையே இல்லை. மரபுரிமை நிகழ்வுகளின் இலக்குகள் எவை? நிகழ்வுகள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்த வேண்டிய செய்திகளும் அறிவூட்டல்களும் எவையெவை? எவற்றை உள்ளடக்கி, எவற்றைத் தவிர்க்கவேண்டும்? என்பவற்றையெல்லாம் சமூகமாகிய நாம் ஊட்டியிருக்கவில்லை. ஆனாலும் வேட்டி, சேலைகள் அணிந்தபடி இதுவே எமது மரபு, இதுவே எமது மொழி என்ற உணர்வுடன் அந்த இளையோர் செயற்பட்டமை போற்றுதற்குரியது.

இவ்வாறான இளையோரே இனிப் பின்தொடரவிருக்கும் இளையோருக்கு வழிகாட்டிகள்.

சமஸ்கிருதமும் தெலுங்கும் எமது ஆடலிலும் இசையிலும் பெரும்பங்கு வகிப்பதே கலை-வழியாகத் தமிழ் அடையாளங்களை எடுத்துச்செவ்வதற்குத் தடையாகவுள்ளது. தமிழர் கலைகளில் தமிழ்மொழியின் ஆளுமை குறைந்திருக்கும் இந்நிலை, எதிர்காலத்தில் எமது அடையாளப் பேணல்களுக்குப் பெரும் சவாலாக அமையும்.

தமிழரிடையே காணப்படும் பல்வகை அரசியல் களங்களும் தமது இருப்புகளை வலுப்படுத்தும் வகையில் தமிழர் மரபுரிமை நிகழ்வுகளை முன்னெடுக்கின்றன. இந்நிகழ்வுகளில் அரசியல் முகங்கள் முன்னிலைப்படுத்தப்படுவதால் நிகழ்வுகளும் அதன் நோக்கங்களும் வலுவிழந்துவிடுகின்றன.

மரபுரிமை என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் மரபுகளின் சால்பே முதன்மையுற வேண்டும்.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டுகளை விட வேகம் கொண்டிருக்கின்றது இவ்வாண்டின் மரபுத் திங்கள். நலிவின்றித் தொடர்ந்தும் வலிமை கொள்வோம்.

...

**முகப்பில்: மார்க்கம் பொங்கல் விழாவில் வில்லிசை**
**படம்: Wide Dreams Photography**


Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com


Printed on recycled paper


# தமிழ் மரபுத் திங்கள் - 2019




இம்முறை தமிழ் மரபுத் திங்கள், பொங்கல் விழாக்களில் கலை நிகழ்வுகளின் தெரிவில் மிகுந்த அக்கறையோடு விழா ஒருங்கிணைப்பாளர்கள் செயற்படுவதை உணரக்கூடியதாயிருந்தது.

தமிழியல் மாநாடொன்றும் இவ்வாண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. புலம்பெயர் சூழலில் தமிழ் ஆசிரியர், மாணவர், ஆர்வலருக்குப் பயன்மிக்க பல கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.




### மக்கள் தலைவர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் மறைவு

- ரதன்

தமிழ் மக்ககளுடன் நெருங்கிய உறவைப் பேணிவந்த ஜோர்ஜ் பெர்னான்டஸ் மறைந்தார்.




### உணவுமுறையும் கனடியர் எதிர்கொள்ளும் சவால்களும்

- நேரு குணரட்ணம்

அன்றாட உணவுமுறையில் பெரும் மாற்றத்தைப் பிரேரிக்கிறது கனடா.




### பூவுலகின் ஓசைகள்

- பா. அகிலன்

தாம் வாசித்தவற்றில் நல்ல நூல்கள் என்று தென்பட்டவற்றுள் சிலவற்றை பகிர்ந்து கொள்ளும் தளம்.




### ஞானப்பழம்

- கீர்த்தி சிங்கம் குமரேஸ்வரன்

தாய்வீடு பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை.


**சமூக - அரசியல் போராளி தமிழ்நதிக்கு ஆனந்த விகடன் விருது!** 2

**இன அழிப்பிலிருந்து மத அழிப்புக்கு** 3
அ. கணபதிப்பிள்ளை

**போலிச் செய்தி எனும் போர்க் கருவி!** 7
க. நவம்

**தொடரும் சீனா, பதறும் கனடா** 8
ரதன்

**உயிர்ச்சத்து B7/B8/H** 10
ரவிச்சந்திரிகா

**வெண்பாவில் மருத்துவம்** 11
பால. சிவகடாட்சம்

**மனோதிடமும் தன்னம்பிக்கையும் உள்ள பிள்ளைகளை வளர்த்தெடுக்க...** 13
புஷ்பா கனகரட்ணம்

**பசுமைச்சுவடுகள்** 18

**கதிரையில் யோகம்** 23

**முதியோர் வதை** 25
குமார் புனிதவேல்

**புகை அறிவுறுத்தும் கருவிகள் / Smoke Detectors** 26
வேலா சுப்ரமணியம்

**வாடகை வீட்டையே சொந்தவீடாக மாற்றலாம்** 28
கரு. கந்தையா

**வாசிப்பை நேசி** 30
நற்குணலிங்கம்

**தமிழர் மரபு விழாவில் 'கள்ளழகன்' வில்லிசை** 32
வயிரமுத்து திவ்வியராஜன்

**வியாழன்: மிகப்பெரிய கோள்** 38
எஸ். பத்மநாதன்


*மேலும் ஆக்க விபரங்கள் 3ம் பக்கம்*

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறைவு

சோசலிசவாதி, தொழிற்சங்கத் தலைவர், பத்திரிகையாளர், இந்திய மத்திய அமைச்சர், கட்சித் தலைவர் என இந்திய அரசியல் வரலாற்றில் 50 ஆண்டுகளாக கோலோச்சிய ஜோர்ஜ் பெர்னான்டஸ் தனது 88வது வயதில் காலமானார். 'The man who threw out Coca-Cola and IBM from India' என பி.பி.சி ஜோர்ஜ் பெர்னான்டசின் மறைவு குறித்து குறிப்பிட்டுள்ளது.

1977ல் இந்தியாவின் கைத்தொழில் அமைச்சராக இருந்த பொழுது அமெரிக்காவின் கொக்கோ கோலா, ஐ.பி.எம். நிறுவனங்களை நிதிமுதலீட்டு முறைகேடுகள் காரணமாக இந்தியாவில் இருந்து வெளியேறுமாறு பணித்தார்.

பெர்னான்டஸ் இன்றைய கர்நாடகா மாநிலத்தின் மங்களூரில் செல்வந்த குடும்பத்தில் 1930ல் பிறந்தார். பெங்களூரில் கல்வி கற்று, பின்னர் மும்பைக்கு நகர்ந்து தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு தீவிர தொழிற்சங்கவாதியானானர்.

புகையிரத ஊழியர்கள் தொழிற்சங்கத் தலைவராக செயற்பட்டு பல வெற்றிகரமான வேலை நிறுத்தங்களை முன்னெடுத்தார். இவற்றுள் முக்கியமானது 1974ல் நடைபெற்ற இந்தியா தழுவிய வேலை நிறுத்தம். சுமார் 14லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். பல்வேறு தொழிற்சங்கங்களையும் இணைத்து, அதிகரித்த தொழிலாளர் ஊதியத்திற்கும், உரிமைகளுக்குமாக இந்தியாவையே முடக்கி, வெற்றிகரமான இவர் முன்னெடுத்த போராட்டம், இந்தியாவின் கறைபடிந்த வரலாறாக இந்திரா காந்தியால் இரும்புக்கரம் கொண்டு கொடூரமாக ஒடுக்கப்பட்டது. தொடர்ந்து 1975ல் இந்திரா காந்தியின் அவசரகாலச் சட்ட நடைமுறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். அதனால் தேடப்பட்ட அவர் தலைமறைவானார். வடக்கில் இருந்து தப்பி தமிழகம் வந்தவர் கருணாநிதியின் தயவில் சென்னையில் மறைந்து வாழ்ந்தார். 1976ல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர் 1977 தேர்தலில் சிறையில் இருந்தவாறே பெருவெற்றி பெற்றார். மும்பாய் நகர-சபையில் கவுன்சிலராக இருந்தவர் 1967 ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதற்தடவையாக போட்டியிட்டு பிரபல காங்கிரஸ் தலைவர் எஸ்.கே. பட்டேலை தெற்கு மும்பைத் தொகுதியில் தோற்கடித்தார். இவ்வாறு அதிரடியாக இந்திய அரசியல் வாழ்வில் நுழைந்தவர், பம்பாயின் சிங்கம் என அழைக்கப்பட்டார்.

இவரது தாய்மொழி கொங்கணி. ஆனால் இவர் தமிழ் உட்பட சுமார் பத்துக்கு மேற்பட்ட மொழிகளில் வல்லவராக இருந்தார். தொழிற்சங்க உலகின் முதுகெலும்பாக விளங்கும் பத்திரிகை உலகிலும் தன்னை இணைத்துத் தேர்ந்த பத்திரிகையாளராகவும் தன்னை வெளிப்படுத்தினார். பின்னர் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். அவையாவன What Ails the Socialists (1972), Socialist Communist Interaction in India, In the year of the disabled: India's disabled government(1981), Dignity for All: Essays in Socialism and Democracy (1991), his autobiography titled George Fernandes Speaks (1991).

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த ஜோர்ஜ் பெர்னான்டஸ், ஈழ மக்கள் விடுதலைப் போராட்டத்தையும் வெளிப்படையாக ஆதரிக்கத் தவறவில்லை. அதனால் தமிழ் நாட்டிற்கு வெளியே விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராக அடையாளப்படுத்தப்பட்டார். ஈழமக்களின் உரிமை வேண்டிய விடுதலை போராட்டத்தை ஆதரித்து, 1997ல் டெல்லியில் நடத்திய மாநாட்டிற்கு அரசு எதிர்ப்பு தெரிவிக்கவே, தன் வீட்டு வளாகத்திலேயே மாநாட்டை நடத்தினார். தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது என மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். பின்னர் 1998ல் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது, யூலையில் இந்திய கடற்படையால் தடுக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கப்பலை, தடையை நீக்கி பயணிக்க அனுமதித்தார்



எனவும் பாக்குநீரினையில் இந்திய கடற்படை நடமாட்டத்தை மட்டுப்படுத்தினர் எனவும் இவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஜே.ஆரின் அராஜக நடவடிக்கைகளை நன்கறிந்தவர். அவ்வப்போது இந்திய ஆங்கிலப் பத்திரிகைகளில் ஜே.ஆரின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளார்.

இவரளவிற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கறிந்த இந்தித் தலைவர்கள் இல்லை எனலாம். வல்வை ந. அனந்தராஜ் எழுதிய வல்வைப் படுகொலைகள் என்ற நூலின் ஆங்கில வடிவமான 'Massacare at Valvetiturai' (வல்வெட்டித்துறை படுகொலைகள்) என்ற நூலுக்கு முன்னுரை எழுதியிருந்தார். இந்திய இராணுவத்தினர் வல்வையில் நடத்திய படுகொலைகளைப் பற்றியது அந்த நூல்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கொலையாளிகளின் சார்பாக வாதிட்ட வழக்கிறஞர்கள் குழாமுக்கு தலைமை தாங்கினார். இந்திய இராணுவம் இலங்கையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அராஜகத்தை வெளிப்படையாகவே கண்டித்தார். இலங்கையை மற்றொரு வியட்நாமாக இந்தியா மாற்றுகின்றது எனவும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்களுடனும் நெருங்கிய உறவைப் பேணினார். திருச்சியில் நடைபெற்ற புலம்பெயர் தமிழர்கள் மாநாட்டில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டுள்ளார்.

இவர் சீனாவிற்கு எதிரான திபெத்தின் போராட்டத்தையும், பர்மாவில் இராணுவத்திற்கு எதிராக நடைபெறும் போராட்டத்தையும் ஆதரித்தார்.

இரு தடவைகள் அமெரிக்காவிற்கு சென்றபோது, இவரை பாதுகாப்பு அதிகாரிகள் நிர்வாண சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

பின்னாட்களில் பி.ஜே.பியுடன் இணைந்து செயல்பட்டமை, இவரை நேசிக்கும் பலரையும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் இவரைப் பார்க்கவைத்தது.

ஒரு தொழிற்சங்கவாதியாக, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களின் ஒரு உற்ற தோழனாக, மிக எளிமையாக வாழ்ந்து, மறைந்தார் ஜோர்ஜ் பெர்னான்டஸ்.

■ ■ ■

# சமூக - அரசியல் போராளி தமிழ்நதிக்கு ஆனந்த விகடன் விருது!

'ஈழம் தொடர்பான எல்லா எழுத்தாளர்களும், எல்லாக் கவிஞர்களும் இன்று மிகப் பெரிய சாதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். ஈழத்து இலக்கியம், தமிழக இலக்கியத்துக்கு முன்னோடியாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்த ஈழத்து இலக்கியத்தில், தமிழ் நதி ஒரு முன்னோடி நதி" என தமிழின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும் சிந்தனைவாதியுமான பா. செயப்பிரகாசம் தமிழ்நதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் 2018ம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான ஆனந்த விகடன் இலக்கிய விருது தமிழ்நதியின் மாயக் குதிரை என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டது.

தமிழ்நதி என எல்லோராலும் அறியப்பட்ட கலைவாணி இராஜகுமாரன், திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவர். 1980களின் நடுப்பகுதியில் ரொரன்ரோவில் வானொலி, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மேடை நிகழ்ச்சிகள் என அனைத்திலும் தமிழ்நதி பங்குபற்றியிருந்தார். இவர் ஒரு கவிஞருமாவார்.

இவர் எழுதிய பார்த்தனியம் நாவல், தமிழ் இலக்கிய உலகில் பலராலும் பாராட்டப்பட்டது. இந்திய பாதுகாப்பு படையினரின் காலத்தை மையமாகக் கொண்டது இந் நாவல். விமர்சகர்களின் பாராட்டுக்களையும் அதிகளவு பெற்றுக் கொண்டது இந் நாவல்.

'முதலிரவில், "உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும்?" என்று கணவனானவன் கேட்டபோது, ஒரு நொடியும் தாமதிக்காமல் "புத்தகங்கள்" என்றாள். அரையிருளில் அவனது முகம் புலப்படவில்லை. எனினும், அந்தப் பதிலால் அவன் திருப்தியடையவில்லை என்பதைத் தொடுதலில் உணர்ந்தாள்.'



இது மாயக்குதிரையில் நித்திலாவின் புத்தகங்கள் என்ற சிறுகதையில் வருகின்றது. இது உங்களுக்கும், எங்களுக்கும் அந்நியமானதல்ல.

அகழ்ந்தாய்ந்து கொணர்ந்திருக்கும் உயிர் வகைகள் கலை மிளிர்ந்து விரிகின்றன. பெயர்ந்து தேசத்துச் சித்திரங்களும் சொந்த நாட்டு வதைகளும் மாயத்தில் விளையும் கதைகள் இந் நூல் என முன்னுரையில் யூமா வாசுகி குறிப்பிடுகின்றார்.

இது வரை ஆறு நூல்களை தமிழ்நதி எழுதியுள்ளார். மாயநதி நூலை டிஸ்கவரி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

ஆனந்த விகடன் வணிக சஞ்சிகையாயினும், ஈழத் தமிழர் மீது அக்கறை கொண்டது. தொடர்ச்சியாக ஈழ மக்கள் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. சீரிய சஞ்சிகையான காலச்சுவடு போன்று ஆனந்த விகடனும், ஈழ மற்றும் புலம்பெயர் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் ஆக்கங்களை பிரசுரித்துள்ளது. இவ்விரு பத்திரிகைகளும் ஈழ, புலம்பெயர் படைப்பாளிகளை உலகத் தமிழர் மத்தியில் அடையாளப்படுத்தின. அவ்வாறான ஒரு பத்திரிகையின் விருதைப் பெற்றதற்கு தமிழ்நதியை வாழ்த்துவோம்.

தமிழ்நதி தொடர்ச்சியாக ஒரு அரசியல், சமூகப் போராளியாக தனது எழுத்துக்களை பதிவுசெய்து வருகின்றார். போரின் போதும், அதன் பின்னரும் ஈழத்தமிழ் மக்கள்படும் வலிகளை தனது எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார். அவரது எழுத்துக்கள் தொடர, இவ் விருது அவரை ஊக்கப்படுத்தும். அவரது முயற்சிகளுக்கு எமது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்நதி, தாய் வீடு குழுமத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் நாமும் வாழ்த்துவோம்.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பிலிருந்து மத அழிப்புக்கு

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கையில் இனங்களுக்கும் மதங்களுக்குமிடையிலான ஒழுங்கு படுத்தப்படாத செயற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றமை சாதாரண விடயமாகப் பெரும்பான்மை அரசியல்வாதிகள் சிலரால் நோக்கப்பட்டாலும் அமைப்பைச் சீர்குலைக்கும் எந்தவொருவிடயத்திலும் எச்சரிக்கையுடன் இல்லாவிடில் இலங்கையில் இனஐக்கியம் என்பது நடைமுறைச்சாத்தியம் அற்றதொன்றாகவே இருந்து வரும்.

அண்மையில் முல்லைத்தீவுப் பாராளுமன்ற அங்கத்தவரான தமிழர் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா செம்மலைப் புத்தர்சிலை அமைத்த வழி-முறை தொடர்பில் கருத்து வெளியிடுகையில் இதனை முல்லைத்தீவில் (முள்ளி-வாய்க்கால்) இடம்பெற்ற இனஅழிப்பைப் போன்று முல்லைத்தீவின்(செம்மலை) மத அழிப்பாகக் குறிப்பிட்டிருந்தார்.

2019ல் தமிழருக்கெதிராக இடம்பெற்றது இனஅழிப்புத்தான் என்பதனைப் பாராறியும்படி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரேரணைகளாக முன்வைக்கப்பட்டிருந்த நிலையிலும் அதனை விடுதலைப்புலிகளுக்கெதிரான போர்வெற்றியாகவே சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு இன்னமும் சொல்லப்பட்டு வருகிறது. இது பதவியைப்பிடிக்கும் தேர்தற்காலப் பரப்புரை உபாயமாகச் சொல்லப்பட்டாலும் சாமானிய மக்கள் மத்தியில் இனவாதத்தினை ஊட்டும் செயற்பாடாகவே கொள்ளத்தக்கது.

தமிழர் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் புத்தவிகாரைகள் புதிதாக நிர்மாணிக்கும் செயலானது போருக்குப் பின்னைய காலப்பகுதியில் பரவலாக முன்னெடுக்கப்பட்டிருந்தமை பலராலும் கண்டிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் இராணுவ அடக்குமுறையின் கீழ் கேட்பாரற்று நிகழ்ந்த பல விடயங்களில் புத்த விகாரைகள் முளைத்தெழுவது வடக்கு மற்றும் கிழக்கில் சாதாரண நிகழ்வு போலத்தான் தோற்றமளித்தது.

தமிழ் மக்களின் கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் கோவில்கள் இடிக்கப்பட்டு அரசியல்வாதிகள் கட்டடங்கள் அமைத்தமையும் இராணுவத்தினர் தமது வழிபாட்டுத் தேவைக்காக புதிய புத்தர் சிலைகளை அமைத்தமையும் அரசமரங்களை நாட்டியமையும் ஏனைய பௌத்த சின்னங்களைப் பரவ விட்டமையும் புத்த பிக்குகள் வரவழைக்கப்பட்டுக் குடியேற்றப்பட்டமையும் மெதுவாக வெளிவந்த உண்மைகளாக மாறின.

இனஅழிப்பின் தொடரியாக மாறியிருந்த தமிழர்களின் காணிகள் உரிமைகோரப்பட முடியாத நிலைமைகள் ஒருபுறமும் வெளிநாடுசென்றவர்கள் நில உரிமை தொடர்பான ஆதாரத்துடன் திரும்பிவராத நிலை மறுபுறமுமாகத் தொடர்ந்து இராணுவத்தாலும் படையினரது குடியிருப்பு மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்குமாக வலிந்கெடுக்கப்பட்ட காணிகள் இன்று தொல்பொருட் திணைக்களத்தினாலும் வனவள ஜீவராசிகள் திணைக்களத்தினாலும் கையகப்படுத்தப்பட்டு வருகின்றமை தமிழருக்குக்கு இழைக்கப்படும் அநீதியாகவே சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இனஅழிப்புக் காலம் முடிந்த 2009 முதல் 2013 வரையில் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் இருந்த பகுதி இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்ததனால் புத்தர் சிலையும் அதனை அமைக்கும் திட்டங்களும் மறைபொருளாகவே இருந்து வந்தது. புத்தர்சிலை விவகாரம் வெளிவந்ததும் 2015 - 2016 களில் பிரதேசசபை முதலில் நீதிமன்றத்தினை நாடியது. அப்பொழுது குறித்த நீதிமன்றம் அந்த வழக்கின் அதிகார எல்லையினை நிர்-ணயம் செய்ய முடியாத காரணத்தால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை இதனால் பௌத்த பிக்குவின் கை ஓங்கியிருந்தது.

> **“ இலங்கையில் இனஐக்கியம் குறித்துப் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தைக்குப் பின்னாலும் இனஐக்கியத்தினைக் குலைக்கும் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற கசப்பான உண்மைதான் இலங்கையில் சிறுபான்மையினரை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. ”**

இதன் பின்னணியில்தான் பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் கணதேவி தேவாலயமாக மாற்றப்படும் நிகழ்வும் இடம்பெற்றிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு பிரதேசம் இப்பொழுது எல்லைக்கிராமமாக மாற்றப்பட்டுவருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்பாக நந்திக்கடலைச் சுற்றியிருந்த தமிழர்களது பொருளாதார வளங்களை படையினரும் போர்சார்ந்த சேவைத்துறையினரும் தம் வசப்படுத்தியிருந்தனர்.

கேப்பாப்புலவு உட்பட பின்னணி நிலங்கள் யாவும் படையினரது கண்காணிப்புப் பிரதேசங்களாக மாற்றப்பட்டன. 2015 ஆண்டின் நல்லாட்சி அரசாங்கத்தின் தோற்றம் மக்களை ஓரளவு விழிப்படையச் செய்திருந்தது. மக்கள் தமது வாழ்வியல் உரிமைக்காகப் போராடும் துணிவினைப் பெறத்தொடங்கினர். சர்வாதிகார ஜனாதிபதி அரசியல் முறையிலிருந்து விடுபட அரசியலுக்குத் தமிழ் மக்களது பங்களிப்பின் தேவை முக்கியம் பெற்றகாலப்பகுதி நல்லாட்சி அரசியற் காலம் என வரையறை செய்யப்பட்டிருந்தது.

இதனிடையே ‘ஒக்டோபர் 26 புரட்சி’யால் பிரதமர் மகிந்தவின் ஆட்சிக்காலம் மீண்டும் உதயமாகியது. பெரிய நம்பிக்கையுடன் சிலைதிறப்புக்கான ஏற்பாடுகள் இடம் பெறலாயின. இதனிடையே இலங்கையில் நடைமுறையிலிருக்கும் தகவலறியும் சட்டத்தின் உதவியுடன் பௌத்த பிக்குவின் செயற்பாடு முழுவதும் சட்டத்துக்குப் புறம்பானது என்ற உண்மை வெளிக்-கொணரப்பட்டிருந்தது.

பிள்ளையார் கோவிலில் தைப்பொங்கல் கொண்டாடிய உள்ளூர் மக்களுக்கு வெளியிடங்களிலிருந்து வந்திருந்த பிக்குவின் ஆதரவாளர்கள் இடையூறு செய்திருந்தனர். பொலிசாரும் பிக்குவின் செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். புத்தர் சிலைத் திறப்புக்கான சகல ஏற்பாடுகளும் அரச நிறுவனங்களது உதவியுடன் முன்னெடுக்கப்படலாயின.

மீண்டும் நீதிமன்றை நாடிய மக்களுக்குப் பல தமிழ்ச் சட்டத்தரணிகள் முழு ஆதரவினை வழங்கியிருந்தனர். பொலிசார் நடந்து கொண்டவிதம் பிழையானதென நீதிமன்றம் தெரிவித்ததுடன் பிள்ளையார் கோவில் வளாகத்தில் புத்தர்சிலை அமைத்தமை தவறென்பதனை சட்டத்தரணிகள் ஆதாரத்துடன் உறுதிப்படுத்தியிருந்தனர். வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் புத்தபிக்கு சமரசத்துக்கான வேண்டுகோளினை முன்வைத்திருக்கிறார். சமரசம் என்பது புத்தர் சிலை வேறொரு இடத்தில் அமைப்பதற்கான சம்மதத்தைப் பெறுவது என்பதாக ஊகிக்க முடிகிறது.

இலங்கையில் பெரும்பான்மை மக்களின் மதம் பௌத்தம். தற்பொழுது நடைமுறையிலிருக்கும் அரசியற்திட்டத்தில் பௌத்-தத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகப் பரவலாகப் பேசப்பட்டுவந்த பாராளுமன்றத்தால் கொண்டுவரப்படவிருக்கும் அரசியற் திட்டத்தில் பௌத்தத்துக்கான முன்னுரிமை இல்லாமற் செய்யப்படும் என்ற ஊகத்துடன் பௌத்த மடாலயங்கள் புதிய அரசியற்திட்டத்தின் வருகைக்கு முட்டுக் கட்டை போட்டிருந்தன. இதனைப் பேரின அரசியல்வாதிகள் சிலர் சாதகமாகப் பயன் படுத்திக் களப்பரீட்சையில் ஈடுபடத் தொடங்கியிருந்தனர்.இந்தப் புத்தர் சிலைத் திறப்பும்கூட அத்தகையதோர் உபாயமாகவே எண்ணக்கூடியதாக நிலைமைகள் மாறிவருகின்றன.

இலங்கையில் உள்ள இடங்களின் பெயர்களில் பல மலை, குளம், மடு, ஆறு, மரம் போன்ற இயற்கை சார்ந்த பெயர்களின் விகுதியுடன் முடிவடைகின்றன. செம்மலைபோன்று செட்டிமலை ஒன்றிருந்தது என்பது புத்த பிக்குவுக்குத் தெரிந்த விடயமாகவும் இருந்திருக்கிறது. பழைய செம்மலைப் பிள்ளையார் கோவில் செட்-டிமலை என்பது தான் புத்தபிக்குவின் வாதமாகவிருந்தது. செம்மலைக் கிராமம் தான் செட்டிமலைக் கிராமம் என்றும் குறிப்பிடுகிறார். வரலாற்று ஆதாரப்படி இலங்கையில் எங்கோ இருக்கும் செட்டி மலை தான் செம்மலை எனக் குறிப்பிடும் பிக்குவின் வாதம் பிழையானது. அப்படி ஒரு பெயர் கொண்ட இடமே செம்மலையில் இருக்கவில்லை என்பது ஆய்வின் முடிவாகியிருந்தது. இதுதான் இந்தவழக்கில் தமிழர்தரப்பின் ஆதாரமாகவும் இருந்து வருகிறது.

இலங்கை முழுவதிலும் பௌத்தமும் இஸ்லாமும் கிறிஸ்துவமும் பரப்பப்படுவதற்கு முன்பாக சைவ சமயம் தான் முழுமையாகப் பரவியிருந்ததென்பது வரலாற்று உண்மை. அதற்காக அடக்குமுறை என்ற பெயரில் மற்றைய மதங்களை அடக்க

தொடர்தல் 9ம் பக்கம்

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


பிரித்தானியாவின் பிரிவினை? 4
ரதன்

நியூ கொறைசன்ஸ் விண்கலத்தின் அரிய சாதனை 43
குரு அரவிந்தன்

மல்லாகம் மகாவித்தியாலயம் 44
முருகேசு பாக்கியநாதன்

தவில் கலைஞர் கிருஷ்ணசாமி சிறீதரன் 48
சி. நற்குணலிங்கம்

எங்கே போகிறோம்? 54
உதயணன்

சிலை சீலையான வேடிக்கை 63
சோக்கல்லோ சண்முகநாதன்

பண்பாட்டு நோக்கில் தைப்பொங்கல் 67
பொன்னையா விவேகானந்தன்

மண்காப்போம் - பன்சேனை 74
ந. அரியரெத்தினம்

சத்தியத்தின் மறுவடிவம் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி 77
பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

இன்றைய நாளின் நினைவுகளுடன்... 77
ஆதிலட்சுமி சிவகுமார்

ஊடக அறவான் பு. சத்தியமூர்த்தி 78
பொன்னையா விவேகானந்தன்

இயக்குனர் கனவு 83
P. விக்னேஸ்வரன்

நோர்வே அரசன் 86
- ஏமோஸ் ஒஸ்
மொழியாக்கம்: என்.கே. மகாலிங்கம்

முகவுரை 91
நொபோரு கராஷிமா

பாரதியாரும் பெண் விடுதலையும் 103
மைதிலி தயாநிதி

சோழர்கால இலக்கியம்: சமய மரபுகள்சார் இலக்கிய ஆக்கங்கள் 107
நா. சுப்பிரமணியன்

இலங்கை இனப்பிரச்சினையும் கார்ட்டூன்களும் விகட விமர்சன ஓவியம் 109
எஸ். தர்மதாஸ்

எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும் இடம் நாடி 113
செல்வம் அருளானந்தம்

நாடக உலகில் ஒரு நடிகமணி 117
‘நடமாடி’ இராஜரத்தினம்

தென் கொரியாவை மாற்றி எழுதும் தனிமைக் கலாச்சாரம் 118
உமை பற்குணரஞ்சன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியாவின் பிரிவினை?

- ரதன் -

ஒரு குடும்பத்தின் விவாகரத்து என்பது, இரு மனங்கள் பிரிவதுடன் மட்டும் முடிவதல்ல. பிள்ளைகள் யாருடன் இருப்பார்கள்? இருக்கும் வீடு யாருக்கு? வீட்டினுள் உள்ள பொருட்கள் யாருக்குச் சொந்தம்? என இப்படிப் பல முக்கிய விடயங்கள் உள்ளன? விவாகரத்து ஒரு குடும்பத்துக்கு உளவியல் ரீதியான பாதிப்பைக் கொடுப்பதுடன், பொருளாதார ரீதியான பாதிப்புகளையும் கொடுக்கும். கனடாவில் Matrimonial, Common Law போன்ற பதங்கள் முக்கியமானவை. இதன் பின்னால் உள்ள சட்ட நுணுக்கங்களை இவர்கள் அறிந்திருக்கவேண்டும். இதற்கப்பால் வழக்கறிஞர்கள், நீதிபதி போன்றவர்கள் இரு பகுதியினருடனும் தீரக் கலந்துரையாடி, விசாரித்து முடிவுகளை எடுப்பார்கள்.

இது ஒரு குடும்பத்துக்கு.

ஒரு நாடு பிரியும் பொழுது! அது பல படிநிலைகளில் முடிவுகள் எடுக்கப்படவேண்டும். முதலில் மக்கள் வாக்களிக்கவேண்டும். பாராளுமன்றத்தில் அதிக உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு பிரிவினையையே இன்று பிரித்தானியா சந்திக்கின்றது. உலகின் அதிக நாடுகளை தனக்குரியதாகிய நாடு இங்கிலாந்து. இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளை இங்கிலாந்து கைப்பற்றியிருந்தது. நீண்டகாலம் - சுமார் நூறாண்டுகளுக்கு மேலாக இந்த நாடுகளை ஆட்சி செய்துள்ளது. நாங்கள் தற்பொழுது வசிக்கும் கனடாவிற்கும், அருகில் உள்ள அமெரிக்காவிற்கும் தாய் நாடு இங்கிலாந்து. இங்கிலாந்தின் ஆக்கிரமிப்பாலேயே, ஆங்கிலம் இன்று உலகின் முக்கிய வணிக மொழியாக மாறியது.

இங்கிலாந்து, யு.கே இன் ஒரு நாடு. யுகே என்பது United Kingdom of Great Britain and Northern Ireland பொதுவாக 'யுகே' அல்லது பிரிட்டன் என அழைக்கப்படும். இங்கிலாந்து, ஸ்கொட்லன்ட், வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்கியது. அயர்லாந்து யுகேவினுடானதல்ல. அயர்லாந்து பிரிட்டன் தீவுகளில் உள்ள இரண்டாவது பெரிய நாடு.

1973லிருந்து பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்துள்ளது. 1975ல் சர்வசனவாக்கெடுப்பு நடத்தி மக்களின் அங்கீகாரத்தைப் பிரித்தானியா பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம் முதன் முதலில் European Coal and Steel Community (ECSC) என்றும், பின்னர் European Economic Community (EEC) என்றும் அழைக்கப்பட்டது. 1993லேயே இது தற்போதைய வடிவத்துக்கு வந்தது. முதலில் ஆறு நாடுகளே அங்கம் வகித்தன. மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸம்பேர்க், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளே அவையாகும். யுரோ என்ற புதிய நாணயம் 1995ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் புதிய நாணயமாக மாறியது. 2002ம் ஆண்டு அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் யுரோவில் தங்களது நிதி நடவடிக்கைகளை மேற்கொண்டன. தங்களது சொந்த நாணயனங்களை யுரோவாகவே மாற்றின. French - Franc, German - Mark, Spanish - Peseta, Dutch - Gulden, Italian - Lira, Finnish - Markka போன்ற நாணயங்கள் இப்பொழுது இல்லை. ஆனால் பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒரு நாடாக இருந்த போதும், யுரோவை அவர்கள் தங்களது நாட்டின் நாணயமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் மக்கள், எல்லைகளற்று எங்கும் செல்லலாம். ஐரோப்பிய ஒன்றிய சட்டதிட்டங்களுக்கமைய, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழலாம். ஆனால் இங்கும் பிரித்தானியா, 'Schengen area' எனப்படும் எல்லைகளற்ற ஐரோப்பிய பிரதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் பிரித்தானியாவின் பழமைவாதிகள், பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதனால் தனது தனித்துவத்தை இழக்கின்றது என கருதினார்கள். இதற்கு அவர்கள் முன்வைக்கும் முக்கிய காரணம் அகதிகள். மேற்கினால் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட உள்நாட்டு போர்கள், தோற்றுவிக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைகள், ஆக்கிரமிப்பு போன்றவற்றால் தோன்றிய குழப்பநிலையும், வன்முறைச் சூழல் போன்றவையும் அந்நாடுகளின் மக்கள் புதிய நாடுகளை நோக்கி நகரவைத்தன. சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்னர் கிழக்கு ஐரோப்பிய



நாடுகளின் மக்கள், வேலை வாய்ப்பினைத் தேடி மற்றைய ஐரோப்பிய நாடுகளையும், பிரித்தானியாவையும் நோக்கி நகர்ந்தார்கள். இதனையும் பிரித்தானியாவின் பழமைவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. விளைவு! டேவிற் கமரோன், தேர்தல் வாக்குறுதியாக சர்வசனவாக்கெடுப்பு நடத்துவேன் என உறுதியளித்திருந்தார். யூன் 23, 2016ல் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் 51.9 வீதமான பிரித்தானியா மக்கள், பிரித்தானிய ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரியவேண்டும் என வாக்களித்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து எவ்வாறு ஒரு நாடு தன்னை விடுவித்துக்கொள்ளலாம் என 50வது சரத்து (Article 50) விரிவாகக் கூறுகின்றது. பிரிவதற்கான நாள் மார்ச் 29, 2019 நள்ளிரவு. டேவிற் கமரோனின் இராஜினாமாவைத் தொடர்ந்து, திரேசா மே பிரித்தானியாவின் புதிய பிரதமரானார். சுமார் ஒரு வருடத்தின் பின்னர் யூன் 8, 2017ல் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. முன்னர் இருந்ததை விட சில ஆசனங்களை இழந்தபோதும், உதிரிக் கட்சிகளின் உதவியுடன், மீண்டும் திரேசா மே பிரதமரானார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிவதே, அவரது முக்கிய வேலையாக விருந்தது.

ஐரோப்பிய ஒன்றிய முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஒரு திட்டத்தை பாராளுமன்றித்தில் ஐனவரி 15ல் முன்வைத்தார். அத்திட்டம் 432-202 என்ற வாக்கு வித்தியாசத்தில் மிக மோசமாக நிராகரிக்கப்பட்டது.

இனி என்ன? அல்லது அடுத்து என்ன? இதுவே இன்று பிரித்தானியாவையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், உலகையும் கேட்கவைக்கும் முக்கிய கேள்வி?

### பிரித்தானியா சந்திக்கும் விளைவுகள் என்ன?

மார்ச் 29 ஐரோப்பிய ஒன்றியத்துடன் எந்த வித ஒப்பந்தமுமின்றி பிரிந்தால், பிரித்தானியா என்ன விளைவுகளைச் சந்திக்கும்? GDP எட்டு வீதத்தால் அடுத்த வருடம் குறையும். வீடுகளின் விலை 30 வீதத்தால் குறையும். வேலையற்றோர் தொகை 4.1 வீதத்திலிருந்து 7.5 வீதமாக அதிகரிக்கும். வட்டி வீதம் அதிகரிக்கும், நாணயப் பெறுமதி குறையும், பணவீக்கம் அதிகரிக்கும். வணிக கட்டடங்களின் பெறுமதி 48 வீதத்தால் குறையும். இவற்றைக் கூறியதே பிரித்தானியாவின் மத்திய வங்கிதான்.

அப்படியென்றால், ஏன் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தார்கள்?

585 பக்கங்கள் கொண்ட பிரிவினைக்கான ஒப்பந்தம் பல விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. Brusseles - ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகம் உள்ள நகரம். இது பெல்ஜியத்தில் உள்ளது. புருசெல்ஸ்க்கு 39 பில்லியன் பவுண்ஸ் (51பில்லியன் அமெரிக்க டொலர்கள்- 68 பில்லியன் கனடிய டொலர்கள்) பிரித்தானியா கொடுக்க வேண்டும். ஆனால் இறுதி விவாகரத்து அதாவது பிரிவினைக்கான கட்டணம் 50 பில்லியனைத் தாண்டும் எனக் கூறப்படுகின்றது. இவை 2025க்கு முன்னராக கொடுக்கப்படவேண்டும். ஆனால் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுக்கான, ஓய்வு ஊதிய தொகை போன்றவை 2064 வரைத் தொடரலாம். மார்ச் 29ன் பின்னர், ஐரோப்பிய பாராளுமன்றத்தில், பிரித்தானியா தனது குரலை ஓங்கச் செய்ய முடியாது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியமே தீர்மானிக்கும்.


1.2 மில்லியன் பிரித்தானிய பிரசைகள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் தாங்கள் தங்கியுள்ள நாடுகளில், தொடர்ந்து தங்கலமா? அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லலாமா போன்ற விடயங்கள் ஐரோப்பிய ஒன்றியமே தீர்மானிக்கும். அதேசமயம் பிரித்தானியாவில் வாழும் 3.2 மில்லியன் ஐரோப்பிய ஒன்றிய பிரசைகள் ஐந்து வருடங்களின் பின்னர் நிரந்தரமாக வாழ பிரித்தானிய அரசிடம் விண்ணப்பிக்கலாம்.

அயர்லாந்துடனான எல்லையினூடான பயணங்கள் எவ்வாறு அமையப் போகின்றன. அயர்லாந்து தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருக்கும். ஆனால் அதன் எல்லையான வட-அயர்லாந்து பிரித்தானியாவிற்குரியது. நில வழி எல்லை மூடப்பட்டால், அல்லது கட்டுப்பாடுகள் அதிகரித்தால், அயர்லாந்து கடல் வழியாக பொருட்களை நகர்த்தவேண்டும். இது ஒரு பெரும் பிரச்சினையாகவேயுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், பிரித்தானியாவிற்குமான சுங்க வரிகள் எவ்வாறு அமையும்? இதனால் பிரித்தானியாவின் தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதாக தெரிகின்றது. எவ்வகையான ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுபாடுகள் உள்ளன? இது இரு பிரதேசங்களுக்குமான பொருளாதாரத்தை பெருமளவு பாதிக்கும். தற்சமயம் பிரித்தானியாவில் தோன்றிய, பிரித்தானியாவுக்கான பொருட்களை Stilton, Melton Mowbray pork pies, Welsh Lamb போன்றவற்றை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரிக்கும். அதே போல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கேயுரிய Parma Ham, feta cheese, champagne போன்ற பொருட்களை பிரித்தானியா அங்கீகரிக்கும். சைப்பிரசில் நிலைகொண்டுள்ள பிரித்தானிய இராணுவத்தளம் அங்கு தொடர்ந்து நிலைகொள்ள ஐரோப்பிய ஒன்றியம் அனுமதியளித்துள்ளது. இந்த இராணுவத்தளம், சைப்பிரசின் மொத்த நிலப்பரப்பில் இது 3 வீதமான பரப்பில் அமைந்துள்ளது. Gibraltar, பிரித்தானியாவிற்கு சொந்தமான பிரதேசம். இது ஸ்பெயினின் நுனிப்பகுதியில் அமைந்துள்ளது. ஸ்பெயினுக்கும், பிரித்தானியாவிற்கும் இப்பிரதேசம் சம்பந்தமான ஒழுங்குமுறைகளை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. மீன்பிடித்தல் விடயமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒரு முடிவிற்கு வரவில்லை. பிரித்தானிய கடற் பொருட்கள், ஐரோப்பிய சந்தையை இலகுவில் விற்கமுடியாத நிலை தோன்றியுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றிய பிரித்தானியா பிரிவினை ஒப்பந்தத்துக்குள் வராது. இது பின்னர் தனியாக முடிவெடுக்கப்படும்.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் எதிராக வாக்களித்தமைக்கு மேற் கூறிய காரணங்களின் தெளிவின்மையும், பிரிவினையால், பிரித்தானியாவிற்கு ஏற்படவுள்ள நட்டங்களுமே காரணம். தற்சமயம் திரேசா மே, மீண்டும் ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்த திட்டம் ஒன்றை பாராளுமன்றில் முன்வைக்கலாம். ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நாடுகளான ஜேர்மனி, பிரான்ஸ் போன்றவை பிரித்தானியா பிரிவதனை விரும்பவில்லை. ஏனெனில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தின் பலம் வாய்ந்த ஒரு நாடு. பிரித்தானியாவின் பிரிவு, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளும் பிரிவதற்கு வழி வகுக்கும். (ஐரோப்பாவில் தீவிர வலது சாரிகட்சிகளுக்கு ஆதரவு பெருகிவருகின்றது. இதனால் ஒவ்வொரு நாடும் தனித்துவத்தை நாடவேண்டும், அகதிகள் தங்கள் நாடுகளுக்குள் வரக்கூடாது என நினைப்பார்கள். இது ஒரு வலதுசாரிச் சிந்தனையாகும். இதனால் ஐரோப்பிய ஒன்றியம் உடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.) ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா பிரியாமல் இருப்பதற்கான சில வழிமுறைகளை அவ்வப்போது செய்யும். அவ்வகையில் தெரெசா மேயின் திட்டங்கள், பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டால் தெரெசா மே ஒரு புதிய பொதுத் தேர்தலை நடத்தலாம் அல்லது மேலும் பல கேள்விகளுடன் மீண்டும் ஒரு புதிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தலாம். அத்துடன் ஸ்கொட்லண்ட் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து இருப்பதனையே விரும்புகின்றது. அவர்கள் பிரித்தானியாவிலிருந்து பிரிவதற்கான சர்வசன வாக்கெடுப்பை மீண்டும் நடத்தலாம்.

எனவே அடுத்து வரும் நாட்களில் திரேசா மே என்ன செய்யவுள்ளார் என்பதிலிருந்தே பிரித்தானியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது. திரேசா மேயின் நடவடிக்கைகளை முழு உலகமும் உன்னிப்பாக அவதானிக்கின்றது. அது அழிவின் ஆரம்பமா? இல்லை புதிய வளர்ச்சியின் ஆரம்பமா?



rathan@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.


**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3


## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலையருக்கான (JK) புதிய வகுப்புகள்



## பெப்பிரவரியில் பதிவுகள் ஆரம்பம்

Toronto District School Board

tdsb.on.ca/kindergarten



Ravi Kana Broker

## COMMITTED TO EXCELLENCE

Call me now to get your **HOME SOLD** 416-725-7284


21

FOR SALE $1,850,000



Toronto - Brimley/Hwy 401/Sheppard 4+2 4

FOR SALE $699,000



Whitby - Thickson/Rossland N Of Dundas 4+1 4

FOR SALE $579,000



Oshawa - Simcoe/Niagara 3 3

FOR SALE $699,800



Toronto - Mccowan / Finch 3 3

FOR SALE $669,900



Oshawa - Taff Pine/Stine 4 3

FOR SALE $669,900



Whitby - Brock St & Hwy 2 3+1 4

FOR SALE $839,999



Whitby - Garrard & Manning 3 2

FOR SALE $569,990



Clarington - Regional Rd 3 & Enfield Rd 3+1 2

MASTERS Hall of Fame

1999-2018

CENTURY 21 Percy Fulton Ltd.

2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200

## Ravi Kana

Broker

Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிச் செய்தி எனும் போர்க் கருவி!

- க. நவம் -

‘போலிச் செய்தி’ தமிழுக்குப் புதிய பதமல்ல. ஆனால் அதன் ஆங்கில வடிவமான ‘fake news’ மேற்குலகில் 3 வருடங்களுக்கு முன்னர் பலரும் அறிந்திராத ஒரு வார்த்தை. இப்போது அது ஜனநாயகத்துக்கும் கட்டுப்பாடற்ற விவாதத்துக்கும் மேற்குலகின் புதிய ஒழுங்கமைப்புக்கும் அச்சுறுத்தல் தரும் வார்த்தையாகி விட்டது. அரசல்புரசலாக அடிபட்டுவந்த அவ்வார்த்தையை அம்பலத்துக்குக் கொண்டு வந்த பெருமை, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பையே சாரும். அவரது பெருவிருப்புக்குரிய வார்த்தையாக மட்டுமன்றி, ‘2017ம் ஆண்டின் வார்த்தை’ என்ற விருதுக் கௌரவத்தையும் தன்வயப்படுத்திக்கொண்ட வல்லமை மிக்க சொல்லாகிவிட்டது!.

போலிச் செய்தி என்னும் பதத்தை 2017 இறுதியில், டொனால்டு ட்ரம்ப் தனது மிகப் பிரியமான சமூக ஊடகமான ட்விட்டரில் பெரிதும் பயன்படுத்தத் தொடங்கினார். பிரபல முன்னணி ஊடகங்களான New York Times, Washington Post, CNN போன்றவற்றைப் போலிச் செய்திகளின் கருவூலங்கள் எனக் குறிப்பிட்டார். CNN, ABC, NBC நடத்திய தேர்தல் கருத்துக் கணிப்புகள் யாவும் போலிச் செய்திகள் எனச் சாடினார். தமக்குப் பிடித்தமற்ற செய்திகளனைத்தும் போலிச் செய்திகளே எனப் பிரகடனம் செய்தார். ட்விட்டரில் இச்சொல்லை இற்றைவரை உபயோகித்து வரும் அவர், ஊடகங்கள் மீது தொடர்ந்தும் அடாவடித்தனம் செய்து வருகின்றார்.

தம்மைப் பற்றிய எதிர்மறையான செய்திகள் எல்லாமே போலிச் செய்திகள் என அங்கலாய்த்துத் திரியும் அமெரிக்க அதிபர், தேர்தல் காலம் முதற்கொண்டு தமக்கு ஆதரவாக மாஸிடோனிய இளைஞர்களால் பரப்பப்படும் செய்திகளை மட்டுமே உண்மைச்செய்தியாக நற்சான்று வழங்கி வருகின்றார். ஊடகங்களை மக்களது எதிரிகள் என்கின்றார். அவர் தொடர்பான அநேகமான CNN, CBS, NBC செய்திகள் எதிர்மறையானவை என்பது உண்மைதான். ஆனால் அவை அனைத்தும் போலிச் செய்திகள் என்பதுதான் தவறு. உண்மையற்வற்றை அவர் போலிச் செய்திகள் என்பதில்லை. பதிலாக, தமக்கு அசௌகரியமானவற்றையும் பாதகமானவற்றையுமே அவர் போலிச் செய்திகள் என்பதுதான் வேடிக்கை! இது ஊடக சுதந்திரத்தின் மீதான, ஆதாரமற்ற தாக்குதலென விமர்சிக்கப்படுகின்றது.

முற்றுமுழுதாகப் புனையப்பட்ட கதைகளே போலிச் செய்திகள் எனப்படுகின்றன.

இவை பொய்யானவை. இட்டுக்கட்டப்பட்டவை. ஆதாரங்களற்றவை. வாசகர்களைத் தவறாக வழிப்படுத்துவதற்கான ஒரு பிரச்சார மார்க்கமாகப் பயன்படுத்தப்படுகின்றவை. அண்மைக்கால உண்மைச் செய்திகளினதை விட, போலிச் செய்திகளின் உலகு மிகமிக விசாலமானது. சிலவற்றுள் சில உண்மைகள் இருக்கக்கூடும். ஆனால் அவற்றில் எவ்வித சூழ்நிலைப் பொருத்தப்பாடும் இருப்பதில்லை. உறுதி செய்யத் தேவையான உண்மைகள், ஆதாரங்கள் இருப்பதில்லை. சிலவற்றில் உறுதி செய்யக்கூடிய சில அடிப்படை ஆதாரங்கள் இருப்பதில்லை. வேண்டுமென்று ஆத்திரமூட்டும் மொழியில், முக்கியமான விபரங்களைத் திட்டமிட்டுத் தவிர்த்து, ஏதோ ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்துவதாகப் போலிச்செய்திகள் வரையப்படுகின்றன. சிலவேளைகளில் தவறுதலாக அல்லது கவனக் குறைவாக உருவாக்கிப் பரப்பப்படுகின்ற போதிலும், போலிச்செய்திகள் பொதுவாகத் தவறானவை. நேர்மையற்றவை. நேர்த்தியற்றவை. ஏமாற்றுவதை அல்லது பழிவாங்குவதை நோக்கமாகக் கொண்டு, உருவாக்கிப் பரப்பப்படுபவை. உண்மையை மூடி மறைப்பவை: பொதுசன அபிப்பிராயத்தின் மீது செல்வாக்குச் செலுத்துபவை. தமக்கான ஆதரவைப் பெருக்கவும் எதிர்ப்பை நசிக்கவும் முற்படும் அரசாங்கங்களதும் அதிகாரம் மிக்கவர்களதும் ஆயுதமாகப் பயன்பட்டு வருபவை.

மனதில் வன்மம் நிறைந்தோர், வக்கிர புத்தி மிக்கோர், போட்டி-பொறாமை கொண்டோர் உட்பட, உள்ளடக்கத்தைப் பற்றிய அக்கறையின்றி, அதிக ‘க்ளிக்’ பெற்றுப் பணம் பண்ண ஆசைப்படுவோர், டொனால்டு ட்ரம்புக்கு ஆதரவாகப் போலிச் செய்திகளை சமூக வலைத்தளங்களில் பரப்பிய மசெடோனியன் வளரிளம் பருவத்தினர் போல, தனிப்பட்ட ஒருவருக்கு ஆதரவு வழங்கும் விருப்புடையோர், ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புவோர், வாசகர்களைக் குதூகலப்படுத்தவென நக்கல் - நையாண்டி செய்வோர், தரமற்ற அல்லது பயிற்றப்படாத ஊடகவியலாளர், ஊடகத்துறை சார் அனுபவமற்றவர்கள், ஊடகவியல் நியமங்களை அல்லது அறநெறிகளைப் பின்பற்றாதோர், அரசியல் நம்பிக்கைகள், கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்த நினைக்கும் ஒருதலைப்பட்சமானோர் எனப் பலரும் போலிச் செய்திகளை உருவாக்கிப் பரவவிடுகின்றனர்.

> “ மனதில் வன்மம் நிறைந்தோர், வக்கிர புத்தி மிக்கோர், போட்டி-பொறாமை கொண்டோர் உட்பட, உள்ளடக்கத்தைப் பற்றிய அக்கறையின்றி, அதிக ‘க்ளிக்’ பெற்றுப் பணம் பண்ண ஆசைப்படுவோர்…. தரமற்ற அல்லது பயிற்றப்படாத ஊடகவியலாளர், ஊடகத்துறைசார் அனுபவமற்றவர்கள், ஊடகவியல் நியமங்களை அல்லது அறநெறிகளைப் பின்பற்றாதோர், அரசியல் நம்பிக்கைகள் கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்த நினைக்கும் ஒருதலைப்பட்சமானோர் எனப் பலரும் போலிச் செய்திகளை உருவாக்கிப் பரவவிடுகின்றனர். ”

இத்தகைய செய்திகள் பரவுவதற்கு, பிரதி பண்ணல், வெட்டி-ஒட்டுதல், ‘கிளிக்’ செய்தல், இணையத்தளங்களில் பகிர்தல் போன்ற தொழில்நுட்ப வசதி வாய்ப்புக்கள் உதவுகின்றன. மனவெழுச்சியையும் கிளுகிளுப்பையும் தூண்டும் வகையில் சில செய்திகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் சில இணையத்தளங்களில் அவை பதிவிடப்பட்டு வாசகர்களை வசீகரித்து, அவர்களை மேலும் பகிரத்தூண்டுகின்றன. சிலவேளைகளில் மனிதர் தகவல் பகிர்வது போலான அல்கோரிதம் எனப்படும் நெறிமுறை கணக்கிடும் முறை மூலம், போலிச் செய்திகள் தயாரிக்கப்பட்டு பரப்பப்படுகின்றன. இம்முறையானது மிக விரைவானதாகவும் தானியங்கும் தன்மை கொண்டதாகவும் இருப்பதால், போலிச் செய்திகளின் பரம்பலைத் துரிதப்படுத்தி விடுகின்றது. உண்மைச் செய்திகளைப் பயன்படுத்தி, ஒரு போரினை வெல்லலாம். தேர்தலில் வெற்றிபெறலாம். அவ்வாறான வெற்றிக்குப் போலிச்செய்திகளும் சுலபமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. காரணம், உண்மைச் செய்திகளைவிட போலிச்செய்திகள் எளிதில் போக்கிடம் போய்ச் சேரவல்லன.

போலிச் செய்திகள் உருவாக்கம் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது. இதற்குப் பக்கத்துணையாக நின்று உதவுகின்ற தொழில்நுட்பம், பல நல்ல விஷயங்களுக்கு உதவி வருகின்ற போதிலும், சில சந்தர்ப்பங்களில் இது தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. தனிநபர்களுக்குத் தொல்லை, தொந்தரவு உண்டாக்கவோ அல்லது அரசியல், சமூக, பண்பாட்டு அடிப்படையில் தீங்கு விளைவிக்கவோ இது பயன்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்ப உதவியுடன் உண்மையான ஒரு செய்தி வெளிவந்தாலும், அதன் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது. மேலும் போலிச் செய்திகளுக்குக் கண்கவரும் வகையில் தலைப்புகள் வைக்கப்படுகின்றன. போலிச் செய்தி என்பது உண்மை இல்லாததை இதுதான் உண்மை என்று திணிக்கும் ஆரோக்கியமற்ற செயற்பாடு. கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு உண்மைச் செய்தி போல தெரியும் போலிச் செய்திகளை மிகவும் ஒழுங்குபடுத்திப் பரப்புகிறார்கள். அவற்றின் தலைப்புகளை மட்டுமே பலரும் படிக்கிறார்கள். அவற்றையே நம்புகிறார்கள். நெருக்கமான நண்பர்கள், உறவினர்கள் பகிரும் செய்தியை அதிகம் ஒப்புக்கொள்கிறார்கள். செய்திகளின் மூலம், உண்மை, உள்ளடக்கம் பற்றி யாருமே கவலைப்படுவதில்லை.

போலிச் செய்தியை ஒரு போராயுதமாகப் பயன்படுத்தும் போக்கு காணப்படுவதால், அதை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பத்திரிகை துறையில் பணியாற்ற அடிப்படை பயிற்சி அவசியம். சேகரிக்கும் தகவல்களைச் சரிபார்க்கும் நுட்பத்தை புரிந்துகொண்டு, சமூகத்துக்கு உண்மையான தகவல்களை மட்டுமே தரவேண்டும். ஆனால், இன்றைய கால கட்டத்தில் தவறான தகவல்களைச் சரி பார்க்காமல் வெளியிடும் போக்கு அதிகரித்து வருகிறது. போலிச்செய்திகளைத் தடுக்க சகலரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். சட்டத்தில் இருந்து ஊடகவியலாளர்கள் அப்பாற்பட்டவர்களல்ல. ஊடகத்திற்கும் முழுப்பொறுப்பு உண்டு. எழுதுகிற ஒவ்வொரு செய்திக்கும் எழுதுகிறவர்களும் பொறுப்பேற்க வேண்டும். அப்போது தான் போலிச்செய்திகளைக் கட்டுப்படுத்த முடியும்.


ஊடகத்தில் செய்திகள் சட்டவிதிகள் இருப்பதுபோல, சமூக ஊடகத்திலும் செய்திகளைப் பகிரும் போதும் அவற்றைக் கண்காணிக்கவிதிகள் உருவாக்கப்பட வேண்டும். சமூக ஊடகங்களில் தனிப்பட்ட முறையில் செய்யப்படும் கேலிகள் அல்லது கிண்டல்கள் குறித்து, உடனடியாக முறைப்பாடு செய்தல்வேண்டும். சில சமயம் சமூக ஊடகங்களில் வேண்டுமென்றே அவ்வாறு சிலர் கேலிசெய்து சேறுபூசி, அவமதிப்பதையே திட்டமிட்ட தொழிலாகக் கொண்டுள்ளனர். பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் உரிய சட்டத்தை கொண்டுவருதல் மூலம், இப்போலிச் செய்திகளைத் தடுக்கமுடியும். இதே வேளை, புனைவுகளைப் பொய் என்று வகைப்படுத்த முடியாது. அங்கதமும், கிண்டலும், கேலியும் உண்மையல்ல. இலக்கியகற்பனை, நகைச்சுவை, கேலி ஆகியவற்றுக்காகப் பொய் சொல்லும் உரிமை உண்டு. ஆனால் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் பொய்களைப் பரப்ப எவருக்கும் உரிமையில்லை. எனவே இணையத் தளங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் வெளியாகும் செய்திகளைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் சட்டம் வரையப்படுவதற்கான காலம் கனிந்து விட்டது என்றே கூறவேண்டும்!

எந்த செய்தியையும் இருமுறை யோசித்து, விமர்சனப்பாங்குடன் அவதானித்தல், கேலிக்காக அனுப்பப்பட்ட செய்தியா என உறுதிசெய்தல், தகவலின் துல்லியத் தன்மையைக் கண்டறியும் மூலோபாயங்களைப் பயன்படுத்துதல், சந்தேகமிருப்பின் பகிராது, ஆதாரம் என்ன? எப்போது செய்தி வந்துதுது? யார் எழுதியது? பக்கசார்பானதா? எனப் பார்த்தல், நிபுணர்களிடம் கேட்டறிதல், உண்மை சரிபார்க்கும் Snopes.com, Factcheck.org போன்ற இணையதளங்களைப் பயன்படுத்துதல் மூலம், படிக்கும் செய்தி உண்மையா இல்லையா என்பதைக் கண்டறிதல் வேண்டும்.

ஆதிகாலம் முதற்கொண்டு போலிச்செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன் போரில் கூட, உண்மையே முதலில் படுகொலை செய்யப்படுகிறது. மஹாபாரதப் போரிலும் போலிச் செய்தி கையாளப்பட்டுள்ளது. துரோணரின் மகன் அஸ்வத்தாமன் இறந்துவிட்டதாக, கண்ணன் பரப்பிய போலிச் செய்தியால்தான் துயருற்ற துரோணரைப் பாண்டவர்கள் கொன்று, பாரதப் போரை வென்றனர். ‘பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த நன்மை பயக்குமெனின்’ என வள்ளுவரும் கூறுகின்றார். எனவே, போலிச் செய்தியை அழிப்பது கடினம் எனச் சிலர் வாதிடுவர். ஆனால், போலிச் செய்திகள் எப்போதும் ‘குற்றமில்லா நன்மை’ பயக்கின்ற தன்மை கொண்டயவையல்லவே! அதனால்தான் அதே வள்ளுவர் ‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என இன்னோரிடத்தில் சொன்னார் என்பது மனங்கொள்ளத்தக்கது!

***உசாத்துணை:***
- James Carson, 'Fake news: What exactly is it…?' - The Telegraph
- Dara Lind, 'President Donald Trump finally admits…' - Vox
- https://www.bbc.com/tamil/global-46177670
- https://guides.lib.umich.edu/fakenews

navam.k@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சீனா, பதறும் கனடா

- ரதன் -

Michael Kovrig, Michael Spavor, Robert Schellenberg என்ற இந்த மூன்று பெயர்களும், அண்மைக் காலங்களில் கனடிய பிரதான ஊடகங்களில் அடிக்கடி இடம் பெறும் பெயர்கள். இவர்கள் மூவரும் சீனாவில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். முதலாமவர் வட-கொரியாவிற்கும் மேற்கு நாடுகளுக்குமான வணிக, மற்றும் கலாச்சார தொடர்புகளை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டி, அதற்கான வேலைகளை செய்து வந்தார். இரண்டாமவர் ஒரு முன்னால் கனடிய வெளிநாட்டு அமைச்சின் அரச அதிகாரி. மூன்றாமவர் போதை மருந்து விற்பனையில் ஈடுபட்டமைக்காக ஏற்கனவே சிறைத்தண்டனை பெற்றவர். மேன்முறையீடு செய்த போது, இவரது தண்டனை மரண தண்டனையாக அதிகரிக்கப்பட்டது. இவர்கள் தடுத்துவைத்திருப்பதற்கான காரணத்தை நீங்கள் அறிவீர்கள்.

இன்று உலகில் அதிகம் உச்சரிக்கப்படும் பெயர் மென் வென்சோ. இவர் டிசம்பர் முதலாம் திகதி, வன்கூவர் விமான நிலையத்தில் மெக்சிக்கோ விமானத்தில் ஏறுவதற்கு முன்பாக கைது செய்யப்பட்டார். இவ்வாறான கைதுகள் அடிக்கடி நடை-பெறுவது சகஜம். ஆனால் இக்கைதின் பின்னால் உள்ள அரசியல், வணிகம் இக்கைதை உலகளவில் பிரசித்தமாக்கியுள்ளது. அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இக்கைது நடைபெற்றது. அமெரிக்க பாதுகாப்பு பிரிவினர், மென் வென்சோவைப் பின்தொடர்ந்துள்ளனர். இவர் வன்கூவர் சர்வதேச விமான நிலையத்தில், விமானம் மாறுவதற்காக நிற்கும் பொழுது கைது செய்யப்பட்டார்.

இவரை நிழல் போல் பின்தொடர வேண்டிய காரணம் என்ன?

மென் வென்சோ, வாவேய் (Huawei) நிறுவனத்தின் தலைமை நிதி அதிபர் (Chief Financial Officer). வென்சோ என்பது இவரது தாயின் பெயர். இவரது தந்தை ரென் சங்பீ (Ren Zhengfei). இவரது சொத்தின் பெறுமதி 4.3 பில்லியன். சீன இராணுவத்தில் தலைமை பொறியியலாளராகக்கடமையாற்றியிருந்தார். சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். இவரே வாவேய் நிறுவனத்தை 1978ல் ஆரம்பித்தார். இன்று 170 நாடுகளில் இந்நிறுவனத்தின் தொழிலகங்கள் உள்ளன. சுமார் ஒரு லட்சத்து எழுபதாயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். இதில் எழுபத்தாயிரம் பேர் (43%) ஆய்வாளர்கள். 2017ல் புதிய தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான செலவு 13.8 பில்லியன் டொலர்கள். அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஈடாக இந்நிறுவனம் வளர்ச்சி பெற்றுள்ளது. மார்ச் 7, 2018 நியூ யோர்க் ரைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதியுள்ளது. 'China's Huawei Is at Center of Fight Over 5G's Future'. இக் கட்டுரையில் 5G, or fifth-generation, wireless networks முக்கிய நிறுவனம். வாவேய், அமெரிக்க அரசினை உளவு பார்க்கின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அதன் செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டன. கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் Qualcomm சன்டியாகோவை மையமாகக் கொண்ட நிறுவனத்தை, சீன நிறுவனமான Broadcom வாங்கவிரும்பியது. இதனை அமெரிக்க அரசு அங்கீகரிக்கவில்லை.

Network transformation providers, Modem and IP suppliers ஆகிய 5ஜி பிரிவுகளில் உலகில் முன்னிலையில் உள்ள நிறுவனம். AT&T, Intel, Ericsson, Samsung, Cavium, Qualcomm, Cisco Systems, LG Electronics, Macom Technology Solutions, Mediatek , NEC ஆகிய நிறுவனங்கள் 5ஜி தொழில்நுட்ப சந்தையில் போட்டி போடுகின்றன.

சீனா தனது தொழில்நுட்பத்தைத் திருடுவதாக கடந்த வருடம் அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது.

FIRRMA (Foreign Investment Risk Review Modernisation Act, CFIUS (Committee on Foreign Investment in the United States), DIUX (Defence Innovation Unit Experimental)போன்ற அரச ஆய்வு அமைப்புகள் சீனா, சிலிக்கன் வலி பிரதேசத்தில் முதலீடு செய்வதை அமெரிக்க அரசு வரவேற்கக் கூடாது என்கின்றன. சீன அரசுடன் நெருக்கமான Baidu நிறுவனம் சிலிக்கன் வளி பிரதேசத்தில் முதலீட்டு நிறுவனத்தை நடத்திவருகின்றது. அடுத்த வருடம் சன் பிரான்சிக்கோ நகரில், அந்நகரின் இரண்டாவது உயர்ந்த கட்டடமான ஓசியன் வைட் சென்ரர் திறக்கப்படவுள்ளது. இது சீன முதலீட்டிலியே கட்டப்பட்டுள்ளது.

சீன, அமெரிக்காவின் தொழில்நுட்பத்தை கணினி உதிரிப்பாகங்களை விற்பனை செய்துள்ளது. ஸ்கைகோம் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக மென் வென்சோ இருந்துள்ளார். இதனாலேயே மென் வென்சோ கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் ஈரானுக்கும், இந்நிறுவனத்துக்குமிடையில் நிதி வழங்கலை H.S.B.C வங்கியே செய்தது. ஆனால் இவ் வங்கிக்கு எதிராக எந்தவித நடவடிக்கையுமில்லை.

சீனாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ZTE, ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்காக 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக அமெரிக்க அரசுக்கு செலுத்தியது. இந்நிறுவனத்தின் அதிகாரிகள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இவை அனைத்துக்கும் பின்னால் ஒரு வர்த்தகப் போட்டியிருப்பதையும் யாரும்

ில் மென் வென்சோவின் கைது நடை-பெற்றது. இரண்டு மாதங்களுக்குள் அமெரிக்க அரசு, கனடிய அரசுக்கு வென்சோவிற்கு எதிரான விரிவான உத்தியோகபூர்வ குற்றப்பத்திரிகையை கையளிக்கவேண்டும். இதன் பின்னர் கனடிய நீதிபதி இதனை விசாரித்து, குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பின், வென்சோவை அமெரிக்காவிற்கு நாடுகடத்த உத்தரவிடலாம்.

டொனால்ட் ரம்ப் தான் தலையிட்டு வென்சோவை விடுதலை செய்வேன் என்ற கருத்துப்பட கூறியிருந்தார். இது இரண்டு நாடுகளின் சட்ட அமைச்சுக்களிடையே நடைபெறுகின்ற ஒரு விடயம். இவ்விரு நாட்டு சட்ட அமைச்சுக்களும் சுதந்திரமாக






பின் கதவின் வழியே வந்து எடுத்துச்செல்கின்றது என்பது மேற்கூறிய அமைப்புக்களின் குற்றச்சாட்டு. Intellectual property theft இதனால் அமெரிக்காவிற்கு ஒவ்வொரு வருடமும் 225-600 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படுவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது. சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் சீன அமெரிக்க பொறியியலாளர்கள், அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் சீனாவிற்கு, அமெரிக்க தொழில்நுட்ப இரகசியத்தை விற்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

வாவேய், பல பெயர்களில் பல நாடுகளில் நிறுவனங்களை ஆரம்பித்தது.

இங்கும் Loblaws நிறுவனம் Zehrs, T&T, Super Store, Fortinos, Provigo, Valu-Mart, ARZ Fine Foods, No Frills போன்ற பெயர்களில் அங்காடிகளைக் கொண்டுள்ளது. Shoppers Drug Mart நிறுவனம் அவர்களுக்குரியது. வாவேய்யும் இதற்குச் சளைத்ததல்ல. மொரிசியஸ் போன்ற நாடுகளில் கூட வாவேய்யின் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. Canicula நிறுவனம் இவ்வாறே மொரிசியசில் பதிவு செய்யப்பட்டது. Skycom நிறுவனத்தை Canicula Hplding நிறுவனம் வாங்கியது. மொரிசியசில் இந்நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளமையால், இதன் பங்குதாரர்கள் பற்றிய விபரங்களைப் உத்தியோகபூர்வமாகப் பெற நீண்ட காலமெடுக்கும். Skycom நிறுவனம், ஈரானுக்கு அமெரிக்க பொருட்களை விற்பனை செய்துள்ளது. ஈரானுக்கும், அமெரிக்காவிற்குமிடையில் வணிகத் தடையுள்ளது. ஈரானுக்கு அமெரிக்க பொருட்களை விற்பனை செய்வது சட்டபூர்வமற்றது. அவ்வகையில் எச்.பி

மறுக்கமுடியாதுள்ளது. ஸ்மார்ட் போன் (smart phone)விற்பனையில் உலக அரங்கில் ஐந்து நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன. Samsung, Apple, Huawei, Xiaomi, Oppo ஆகிய நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன. இவற்றுள் விற்பனையில் சாம்சாங் முன்னிலையில் இருந்தாலும், அப்பிளின் மொத்த விற்பனையை வாவேய் தாண்டிவிட்டது. 2009ல் 20 பில்லியன் வருமானத்தைப் பெற்ற வாவேய், இப்பொழுது 100 பில்லியனைத் தாண்டிவிட்டது. சீன தொலைத் தொடர்பு நிறுவனங்கள் உலக ஸ்மார்ட்போன் விற்பனையில் கணிசமான பங்கைக் கொண்டுள்ளன. உலக நாடுகள் பலவற்றிற்கும் இவை தனது விற்பனையை விஸ்தரித்துவிட்டன. இது அமெரிக்க நிறுவனங்களுக்கு ஆபத்தாக உள்ளது. சீன-அமெரிக்க வர்த்தக போரின் ஒரு எச்சமாக இந்நடவடிக்கை உள்ளது.

மென் வென்சோவின் கைதானது கனடாவை மிகவும் ஒரு சிக்கலான நிலைக்குக்கொண்டு சென்றுள்ளது. கனடாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் கைதிகள் பரிமாற்றம் செய்யும் ஓர் ஒப்பந்தம் (Treaty on Extradition Between the Government of Canada and the Government of the United States of America) நடைமுறையில் உள்ளது. இவ் ஒப்பந்த நடைமுறையின்படி, அமெரிக்காவிலிருந்து கனடாவிற்கும், கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கும் இதற்கு முன்பாகவே பலர் நாடுகடத்தப்பட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், கனடா மென் வென்சோவை கைது செய்து நாடு கடத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. பொதுவாக இவ்வாறான கோரிக்கைகள் அமெரிக்காவின் உயர் சட்ட அதிகாரிகள் மூலமாகவே வைக்கப்படும். டிசம்பர் ஒன்

இயங்குகின்றன. இதில் அரசியல் தலையீடுகள் இருக்க முடியாது. ஜஸ்ரின் ரூடோவோ, டொனால்ட் ரம்ப்போ இதில் எதுவுமே செய்ய முடியாது. கனடாவில் தேர்தல் நெருங்குகின்றது. எதிர்க்கட்சிகள், அரசை நோக்கி கல்லெறியலாம். ஏனென்றால் சீனா. சீனாவில் அரசு நினைப்பதே நடக்கும். சீனாவைப் பொறுத்தவரை தனது பலத்துக்கு எதிரான ஒரு செயலாகவே இதனைப் பார்க்கின்றது. Skycom நிறுவனத்தின் நடவடிக்கைகள் சீன அரசுக்கும் தெரியும்.

நோட்டல் நிறுவனம் சில வருடங்கள் வரை கனடாவின் ஒரு முக்கிய சர்வதேச நிறுவனமாக இருந்தது. திடீரென இந்நிறுவனம் காணாமல் போய்விட்டது. மக்லீன் சஞ்சிகை, 'நோட்டலின் அழிவிற்கு வாவேயே காரணம்' எனக்குற்றஞ்சாட்டுகின்றது. 'வாவேய், நோட்டலின் தொழில்நுட்பத்தை களவாடிவிட்டது' என்பதே குற்றச்சாட்டு. ஆனாலும் கனடா இதுவரை வாவேயை தடைசெய்யவில்லை.

தொடர்ச்சியாகப் பல வெளிநாட்டவரை சீனா கைது செய்துள்ளது. வெகு அண்மையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நாவலாசிரியர் Yang Hengjun ஐ விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்துள்ளது. கடந்த எட்டு மாதங்களில் 26 எழுத்தாளர்கள் சீனாவில் காணாமல் போயுள்ளனர். இதுதான் சீனமுறை. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள்.

கனடாவைப் பொறுத்தவரை, அமெரிக்க அண்டை நாடு. பொருளாதாரத்தில், கனடா பெருமளவு அமெரிக்காவைச் சார்ந்துள்ளது.

தொடர்தல் 9ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8ம் பக்கத் தொடர்ச்சி...

இரு நாடுகளும் தத்தமது சட்டங்களை மதிக்கின்றன. அவ்வகையில் வென்சோவின் கைது என்பது முறையானது. வேன்சோ தற்சமயம் வீட்டு காவலில் உள்ளார். இவருக்காக வாதாட, செல்வந்த வழக்கறிஞர்கள் தயாராக உள்ளனர். ஆனால், வென்சோவை நேரடியாகவே காரணம் காட்டி, சீனா கனடியர்களை கைது செய்வது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இது கனடாவிற்கும், சீனாவிற்குமான உறவைப்பாதிக்கும். வணிக நோக்கில், சீனாவிற்கு செல்லும் கனடியர்கள் கூட செல்லத் தயங்குகின்றார்கள். தற்சமயம் இது சீனாவிற்கு லாபத்தை தரலாம். ஆனால் நீண்ட கால நோக்கில் இது சீனாவிற்கே பாதகமானது. ஆனால் சீனா புதிய வல்லரசாகவே செயற்படுகின்றது.

## பிற்குறிப்பு:

மக்லீன் சஞ்சிகையின் பிரகாரம், மென் வென்சோவிற்காக வாதாடும் வழக்கறிஞர்கள் பின்வரும் மூன்று விடயங்களில் வாதாடி, வென்சோவின் நாடுகடத்தலை தடுக்க முற்படலாம். வென்சோவிற்கு வன்கூவரில் இரு வீடுகள் உள்ளன. அதில் ஒன்றிலேயே காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

There are three specific ‘strong arguments’ Meng’s lawyers might use to get her release, he told his private media meeting. The first is the political motive displayed by Trump. Second, extraterritoriality - that is, U.S. law only applies to acts within the U.S. And third, that Canada does not mirror U.S. laws placing sanctions on those doing business with Iran.

## John McCallum உம் சீனாவும்:

John McCallum மொன்றியலில் பிறந்து, அங்கேயே ஒரு தனியார் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் ஒன்ராரியோவின் ரிரின்றி ஸ்கூல் எனப்படும் தனியார் பாடசாலையில் உயர்தரக் கல்வி பெற்றார். பின்னர் இங்கிலாந்தில் உள்ள கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் தனது இளமானிப் பட்டப்படிப்பை முடித்தார். மொன்றியலில் உள்ள மக்ஹில் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார். பின்னர், பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார். ஜஸ்ரின் ரூடோ மக்ஹில் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது, பல்கலைக்கழகத்தின் கலைப்பீட, பீடாதிபதியாக மக்கொலம் இருந்துள்ளார். ரோயல் வங்கியின் அதி உயர் பதவிகளில் ஒன்றான தலைமை பொருளாதார வல்லுனராக கடமையாற்றியுள்ளார். வட-அமெரிக்காவின் முக்கிய பொருளியல் வல்லுனர்களுள் இவரும் ஒருவர். இவர் மார்க்கம் நகர தொகுதியில், (பின்னர் மார்க்கம்-யூனியன்வில்) தொடர்ச்சியாக ஐந்து தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளார். லிபரல் அரசில் பாதுகாப்பு அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், முன்னாள் போர் வீரர்களுக்கான அமைச்சர், குடிவரவு-குடியகல்வு அமைச்சராக கடமையாற்றியுள்ளார். 2017ல் சீனாவிற்கான தூதுவராக நியமிக்கப்பட்டார். இவரது மனைவி நான்சி லிம், மலேசியாவில் பிறந்த சீன இனத்தவராவார்.

மென் வென்சோவின் கைதின் பின்னர், சீனாவிற்கும் கனடாவிற்குமிடையிலான உறவு ஒரு நெருக்கடியான நிலையை அடைந்திருந்தது. இந்நிலையில், ஜனவரி நடுப்பகுதியில் இவர் கனடா வந்திருந்தார். மென் வென்சோவின் கைது சம்பந்தமாக இவர் கூறிய கூற்றுக்கள்(2) சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. எதிர்க்கட்சிகள் இவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தன. ஜனவரி 26 இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக கனடிய ஊடகங்கள் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து சீன பத்திரிகையான குளோபல் ரைம், கனடாவைக் கண்டித்திருந்தது. கனடா ஒரு 'பயந்த பறவை' என்ற கருத்துப்பட செய்தி வெளியிட்டிருந்தது(1). சைனா டெய்லி என்ற நாளேடும் கனடாவைக் கேலி செய்திருந்தது(3). இதை விட சீன அரசும் கனடாவிற்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்தது. ஒரு தூதுவராக கனடாவிற்கும் சீனாவிற்குமிடையில் நல்லுறவை வளர்த்திருக்க வேண்டும். வென்சோவின் கைது சம்பந்தமாக முறையான கருத்துக்களை சீன அரசிடம் இவர் தெரிவித்திருக்க வேண்டும் போன்ற கருத்துக்களை ஊடகங்களும், உலக அரசியல் ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றார்கள்.

இந்நிலையில் ஜனவரி 28, 2019ல் அமெரிக்க அரசு மென் வென்சோவிற்கு எதிரான தனது குற்றப்பத்திரிகையினை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் நீதி அமைச்சு ரி-மொபைல் நிறுவனத்தின் இரகசியங்களை திருடியமை உட்பட 13 குற்றச்சாட்டுக்களை மென் வென்சோவிற்கு எதிராக சுமத்தியுள்ளது. 2013ம் ஆண்டு, வாவேய் தனது ஊழியர்களுக்கு அனுப்பிய இ-மெயிலில், ரகசியங்களை திருடுபவர்களுக்கு ஊழிய உயர்வு வழங்கப்படும் எனத்தெரிவித்ததாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக தெரிவித்துள்ளன. இவற்றுடன் அமெரிக்காவால் பொருளாதார தடை விதிக்கப்பட்ட ஈரானுக்கு தொழில்நுட்ப உபகரணங்களை விற்றமை, நிதி மோசடி போன்ற குற்றங்களும் அடங்கும்.

இதே சமயம் போலாந்தும் வான்சேயின் அதிகாரி ஒருவரை, தங்களது இரகசியங்களை திருடிய குற்றத்துக்காக கைது செய்துள்ளது.

சீனா மேற்கிலிருந்து தொடர்ச்சியா தொழில்நுட்ப இரகசியங்களை திருடிவருகின்றது என்ற குற்றச்சாட்டின் உண்மை தன்மையின் வெளிப்பாடே, சீன நிறுவனங்கள் மீது, சீன அரசு காட்டும் அதீத அக்கறை. வெளிநாடு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட சந்திரனில் மரம் வளர்க்கும் திட்டத்தினை சீனா எடுத்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. எது எப்படியிருப்பினும் சீனா தன்னை ஒரு முன்னணி வல்லரசாக வளர்க்கும் முயற்சியில் மிக தீவிரமாக செயல்படுகின்றது.

- (1) China’s state-run Global Times responded to the news with a blistering op-ed on Sunday, in which the unnamed author compared Ottawa to a ‘frightened bird,’ and used a vulgar folk saying to describe Canada’s allegedly immoral actions.
- (2) The Trump remarks he was referring to were from December, when the U.S. President told Reuters news agency he might intervene in the Meng case if it would help secure a Sino-American trade deal. Mr. McCallum went on to suggest a deal between Washington and Beijing could bring Ms. Meng back to China in exchange for the release of Mr. Spavor and Mr. Kovrig, the two Canadians detained in China:
- (3) The official China Daily newspaper said in a Monday editorial on McCallum’s departure that those who had attacked him ‘should feel ashamed of themselves.’

***உசாத்துணை:***


- .https://www.treaty-accord.gc.ca/text-texte.aspx?id=101323
- https://www.oas.org/juridico/mla/en/traites/en_traites-ext-usa-can.pdf
- https://www.cbc.ca/news/politics/former-nortel-exec-warns-against-working-with-huawei-1.1137006
- https://www.macleans.ca/opinion/the-huawei-deal-that-the-trudeau-government-missed/




rathan@thaiveedu.com

# இன அழிப்பிலிருந்து...

3ம் பக்கத் தொடர்ச்சி...

நினைப்பது மனித உரிமைகளை மறுப்பதாகவேயிருக்கும். இந்தியாதான் மதக் கலாச்சாரத்தினை இலங்கைக்குள் கொண்டு வந்ததில் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றது. இதில் தமிழ் பௌத்தர்கள் தமிழ் இஸ்லாமியர்கள் தமிழ்க் கிறீஸ்துவர்கள் தமிழ் இந்துக்கள் முக்கியம் பெற்றிருந்தனர். அவர்கள் வரலாற்றுக்காலங்களில் அரச சலுகையுடன் மதங்களைப் பேணிவந்திருக்கிறார்கள்.

இலங்கையில் படையினர் அதிகாரம் மத்தியில் முழுமையாக இருக்கிறது என்ற காரணத்தால் தமிழர்மீது அந்த அதிகாரத்தினைப் பிரயோகிப்பது எந்தவிதத்திலும் நியாயமாகிவிடாது. இதுதான் சுதந்திரத்தின் பின்னைய காலப்பகுதி முழுவதிலும் காணப்பட்டது. இலங்கையில் சிறுபான்மை மக்கள் பயப்படும் இரண்டு விடயங்களாக மத்திய அரசின் படையினரும் அரசு முதன்னிலை கொடுக்கும் பௌத்த மதத்தினைத் தவறாகப் பயன்படுத்த நினைக்கும் புத்த பிக்குக்களும் இருந்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த இருபிரிவினர் மீதும் அவ்வப்பொழுது அரசாங்கம் தனது இறுக்கமான செயற்பாடுகளைப் பிரயோகித்தாலும் அவை நடைமுறைச் சாத்தியமற்றதொன்றாக மாறி வருவருவதனைக் கண்கூடாகக் காணமுடிகிறது. 2014ல் அளுத்கமவில் முஸ்லிம்களுக்கெதிரான இனக்கலவரத்தினைப் பொறுத்தவரை 'வடக்கிலும் கொழும்பிலும் சிங்கள இளைஞர்கள் தாக்கப்படுகிறார்கள்' என்ற பொதுபல சேனாவின் பிக்கு ஞானசாரரது இனக்கலவரத்தினைத் தூண்டக்கூடிய உணர்ச்சிப் பேச்சுச்தான் காரணமென்பது ஊடகங்களாற் செல்லப்பட்ட உண்மையாகும்.

நல்லாட்சிக் காலத்தில் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறுபான்மையினரது நலன்களில் அக்கறை கொண்டிருந்தார். அதேவேளை போர்க்கால மனித உரிமைமீறுதலுடன் தொடர்புடைய படையினருக்குப் பதவிகள் வழங்குவதிலும் படையினர் ஒருவருமே தண்டிக்கப்படக் கூடாது என்பதிலும் உறுதியாகவும் இருந்திருக்கிறார். அவரது இத்தகைய இரட்டை மனோபாவம்தான் இன்றைய அரசியற் சிக்கல்களுக்குக் காரணமாகவும் அமைந்திருக்கிறது.

நீதிமன்ற விசாரணைகளுக்குத் தடையாயிருந்து சிறைத்தண்டனை பெற்ற கலகொட அத்த ஞானசர தேரர் என்ற பிக்குவுக்கு சுதந்திர தினத்தில் பொதுமன்னிப்பு வழங்க வேண்டுமென்று பல நிறுவனங்களினாலும் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும் அழுத்தமானது இலங்கையில் புத்த பிக்குகளுக்கு இருக்கும் மாபெரும் வலுவுக்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறுபான்மையினரது நலன்களில் அக்கறை கொண்டிருந்தார் என்பது உண்மையானது. அதேவேளை போர்க்கால மனித உரிமை மீறுதலுடன் தொடர்புடைய படையினருக்குப் பதவிகள் வழங்குவதும் நீதிமன்ற விசாரணைகளுக்குத் தடையாயிருந்து சிறைத் தண்டனை பெற்ற பிக்குவுக்கு சுதந்திர தினத்தில் பொது மன்னிப்பு வழங்கவேண்டுமென்பதும் அவர் மீது கொடுக்கப்படும் இனவாத அழுத்தத்துக்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

இலங்கையில் இனஐக்கியம் குறித்துப் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தைக்குப்பின்னாலும் இனஐக்கியத்தினைக் குலைக்கும் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற கசப்பான உண்மைதான் இலங்கையில் சிறுபான்மையினரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

இலங்கை ஒரு பௌத்தநாடு (கட்டடமும் புத்தர் சிலைகளும் அமைத்து வணங்கும் தேரவாத பௌத்தம்)என்பதனை உலகம் முழுவதும் பறைசாற்றுவதில் இருக்கும் பிக்குகளின் நேர்மையற்ற ஆர்வமானது இருபகுதி மக்களினது சுதந்திரத்திலும் இனக் கொதிப்புடனான பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதுடன் 71 வருட சுதந்திரத்துக்கு அர்த்தமற்ற நிலையினைத் தோற்றுவித்திருக்கிறது.

மக்கள் அரசியல் பொருளாதார கலாச்சார சுதந்திரங்களை இழந்தநிலையில் சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கான தேவை தான் என்ன? இதுபற்றிய மக்களின் தெளிவுதான் இலங்கைக்கான சுதந்திரமாக இருக்கப்போகிறது.



kanapathipillai.a@thaiveedu.com


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Our Tax Dispute Resolution Services with CRA:
- Unfiled Tax Returns - Last ten years (2009-2018)
- Adjustments, Audits and Appeals
- Voluntary Disclosure Program (VDP)
- GST/HST New Housing/Rental Rebate (NHR/NRRPR)
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Estate and Trust
- Non-Resident Tax

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
INTEGRITY | TECHNICAL EXCELLENCE | PROFESSIONALISM
CONTACT US TODAY... C. 647 219 3110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ச்சத்து B7/B8/H

B உயிர்ச்சத்துகளில் அடுத்தது Biotin என்னும் B7ஆகும். இது உயிர்ச்சத்து B8, H எனவும் அறியப்படுகிறது. நீரில் கரை-வதனால், உடலில் சேமித்து வைக்கப் படுவதில்லை. அதனால் நாளாந்த உண




வில் B7 நிறைந்த உணவுகள் இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

B7 உடலின் வளர்சிதை மாற்றங்களுக்கு மிகவும் அவசியமானது. பல நொதியங்களின் மூலக்கூறுகளில் (coenzyme) ஒன்றாகும். நாம் உண்ணும் உணவுப் பொருட்களை உடல் பயன்படுத்தக்கூடிய சக்தியாக மாற்றுவதற்குத் தேவையானது. DNA என் னும் மரபணுக்களின் சீரான இயக்கத்துக் குத் தேவையானது. கலங்களின் வளர்ச் சியில் இன்றியமையாதது. நகம், முடி உறுதியாக இருக்கத் தேவையானது.

மிகக் குறைந்த அளவிலேயே உடலுக்குத் தேவைப்படுகிறது. மனித உடலின் குடலில் உள்ள பக்டீரியா உணவில் உள்ள B7ஐ பிரித்தெடுக்க வல்லது. இதனால் குறை பாடு அரிதாகவே ஏற்படுகிறது. உடலில் உள்ள B7ன் அளவைக் கண்டுபிடிக்க சரியான ஆய்வுகூடப் பரிசோதனைகள் இன்னும் இல்லை. சிறுநீருடன் வெளியே றும் biotin அளவு கணிக்கப்பட்டு குறைபாடு கண்டுபிடிக்கப்படுகிறது. குறைபாடு உட லில் ஏற்படுத்தும் அறிகுறிகளை அவதா னிப்பதன் மூலமும் குறைபாடு கண்டுபி டிக்கப்படுகிறது.

முடி நிறம் மாறுவது - உதிர்வது, கண்கள், மூக்கு, வாயைச் சுற்றி உள்ள தோல் சிவந்து, அரிப்பு மிகுந்திருப்பது, தோலில் நிற மாற்றம், நாக்கில் வெடிப்பும் புண்க ளும் ஏற்படுதல், பசியற்ற நிலை, வாந்தி வருவது போன்ற உணர்வு, இதயம் இயங் குவதில் மாற்றங்கள், கை கால்களில் விறைப்புத்தன்மை, தசை வலி, களைப்பு, ஆர்வமின்மை, மன அழுத்தம், மாயத் தோற்றங்கள், ஆகியன குறைபாட்டின் அறிகுறிகள் ஆகும்.

குறைபாட்டை ஏற்படுத்தக் கூடிய உடல் நிலைகள் அல்லது நோய்கள் பின்வரு மாறு:

- சர்க்கரைநோய் B7 குறைபாட்டை ஏற் படுத்தலாம் என சில ஆய்வுகள் கூறு கின்றன.
- கர்ப்பமாக இருக்கும் பெண்கள்
- துரித எடை குறைப்பு நடவடிக்கைகள்.
- புகைத்தல்.
- Tube Feeding: உணவு உண்ணுதலில் சிக்கல் ஏற்பட்டு, குழாய்கள் மூலம் உணவூட்டப்படும் நிலை.
- அதிகப்படியான மது பாவனை.
- முட்டை வெண்கருவில் உள்ள புரதப் பொருள் அவிடின், குடல் biotin ஐ உறிஞ்சுவதைத் தடுக்கிறது. உடல் எடையை அதிகரிக்க அதிக அளவில் முட்டை வெண்கருவை மட்டும் உண் பவர்கள் (body builders) பாதிக்கப்பட லாம்.
- முதியவர்கள்.
- Antibiotics, Anticonvulsants வகை மருந்துகள்: Antibiotics எனப்படும் நுண் ணுயிர்க் கொல்லிவகை மருந்துகளை நீண்ட காலம் எடுக்கும்போது குடலில் உள்ள, B7 ஐ உறிஞ்சும் பக்டீரியாக் கள் அழிக்கப்படுகின்றன. Anticonvul-sants வலிப்பைத் தடுக்கும் மருந்துகள் ஆகும். Valproic acid, Carbamazepine (Carbatrol), Phenobarbital, Phenytoin (Dilantin), Primidone (Mysoline) ஆகி யவற்றின் நீண்ட காலப் பயன்பாடு குறைபாட்டை ஏற்படுத்தலாம்.

ஈரல், சல்மன், முட்டை மஞ்சட்கரு, சோயா மா, மதுவம், தீட்டப்படாத தானியங்கள் - அவற்றில் செய்யப்படும் பாண், ரொட்டி வகைகள், பால், காலிஃபிளவர், அவ காடோ, கரட், வத்தாளங் கிழங்கு, வாழைப் பழம் ஆகிய உணவுகளில் B7 உள்ளது. அனைத்து உணவுப்பொருட்களிலும் சிறிய அளவிலேயே காணப்படுகிறது. தகர டின் களில் அடைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருட்களில் B7 குறைவாக இருக்கலாம்.

B7 முடி உதிர்வு, உறுதி அற்ற - உடை யும் தன்மை உள்ள நகங்கள், நரம்புத் தளர்ச்சி (குறிப்பாக நீரிழிவு நோயினால் ஏற்படும் நரம்புச் சிக்கல்கள்) ஆகிய வற்றுக்குச் சிகிச்சையாகப் பயன்படுகிறது. தோலின் நலத்துக்குரிய அழகு சாதனப் பொருட்களில் சேர்க்கப்படுகிறது.


**உசாத்துணை:**


- What you should know about biotin rich foods (2009) https://www.medicalnewstoday.com/articles/320222.php
- Biotin (2018) https://www.webmd.com/vitamins/ai/ingredientmono-313/biotin
- What is biotin (2019) https://www.livescience.com/ 51696-biotin-vitamin-b7.html
- Biotin (Vitamin B7) Sources, Health Benefits and Dosage (2018)
- https://www.news-medical.net/health/Biotin-(Vitamin-B7)-Sources-Health-Benefits-and-Dosage.aspx
- Biotin for Hair Growth: Does It Work? (2019) https://www.healthline.com/health/biotin-hair-growth
- Vitamin H Retrieved on 22nd January 2019 https://www.cancer.gov/publications/dictionaries/cancer-terms/def/vitamin-h
- Vitamin H (2019) https://www.mountsinai.org/health-library/supplement/vitamin-h-biotin
- Learn more about biotin (2019) https://www.sciencedirect.com/topics/medicine-and-dentistry/biotin
- Image of Biotin rich foods (2018) retrieved from https://www.news-medical.net/health/Biotin-(Vitamin-B7)-Sources-Health-Benefits-and-Dosage.aspx


- ரவிச்சந்திரிகா -

*ravichandrika@thaiveedu.com*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பாவில் மருத்துவம்

- பால. சிவகடாட்சம் -

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்*
*- இவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் -*
*- கோலஞ்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ*
*- எனக்குச்*
*சங்கத் தமிழ் மூன்றும் தா*

வாத்தியாரின் கட்டாயத்தின் பேரில் நான் முதன் முதலில் பாடமாக்கிய தமிழ்க்கவிதை இதுதான்.

இது ஒரு நேரிசை வெண்பா என்றெல்லாம் அப்போது எனக்குச் சொல்லித்தரப்பட வில்லை. மனப்பாடம் செய்ய இலகுவானது என்பதற்காக வாத்தியார் அதனை தெரிவு செய்திருக்கலாம்.

*வெண்பா இருகாலிற் கல்லானை*
*- வெள்ளோலை*
*கண்பார்க்கக் கையா லெழுதானைப்*
*- பெண்பாவி*
*பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப்*
*- பெற்றாளென்*
*றெற்றோமற் றெற்றோமற் றெற்று*

என்று ஒரு வெண்பா ஔவையார் பாடியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பாடலில் 'வெண்பா இருகாலிற் கல்லானை' என்பதற்கு தவழ்ந்துகொண்டிருந்த பிள்ளை எழுந்து இருகாலில் நடக்கத் தொடங்கும் பொழுதே வெண்பாவைக் கற்றுக்கொள்ளத் தொடங்கி விடவேண்டும் என்று ஔவையார் கூறுவதாக நாம் பொருள்கொள்ள முடியும்.

இதே ஔவையார்தான் இலகுவாக மனப்பாடம் செய்யக்கூடிய வெண்பா பாடுவது புலவர்களுக்குக் கடினமான விடயம் என்பதையும் சொல்லி வைத்துள்ளார்.

*காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலி*
*- புலியாம்*
*பேசும் உலாவிற் பெதும்பை புலி - ஆசு*
*வலவற்கு வண்ணம் புலியாம்மற் எல்லாப்*
*புலவர்க்கும் வெண்பாப் புலி*

இங்கே புலி என்பது கடுமையானது என்ற பொருளில் வருகின்றது. பிள்ளைத்தமிழ் பாடுவோர்க்கு அம்புலிப் பருவத்தைப் பாடுவது கடினம். உலா பாடுவோர்க்குப் பெதும்பை பருவத்தை பாடுவது கடினம். பொதுவாக புலவர்களுக்கு வெண்பா பாடுவது கடினம் என்கிறார் ஔவையார். வெண்பா பாடுவது கடினம் என்றால் வெண்பாவில் மருத்துவக் கருத்துக்களைப்பாடுவது அதைவிடக் கடினம். எனினும் மருத்துவம் கூறும் வெண்பாக்கள் ஏராளமாக உள்ளன. முழுவதும் வெண்பாவால் ஆக்கப்பெற்ற மருத்துவ நூல்களும் உள்ளன.

வெண்பாக்களுள் பலவகை உள்ளன. இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா, சவலை வெண்பா, குறள் வெண்பா என்று வெண்பாவில் எத்தனை வகை உள்ளதோ அத்தனை வகையான வெண்பாக்களையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஆசாரக்கோவையில் கண்டுகொள்ளமுடியும்.

உடலையும் உள்ளத்தையும் எவ்வாறு சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பது பற்றித்தான் இந்த ஆசாரக்கோவை பேசுகின்றது. இந்நூலில் பெரும்பாலும் இன்னிசை வெண்பாவும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவுமே கூடுதலாக இடம் பெற்றுள்ளன. உதாரணத்துக்கு ஒன்றிரண்டை இங்கு தருகின்றேன்.

*வைகறை யாமம் துயிலெழுந்து தான்*
*- செய்யும்*
*நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து*
*- வாய்வதில்*
*தந்தையும் தாயும் தொழுதெழுக*
*- என்பதே*
*முந்தையோர் கண்டமுறை*
இது ஒரு இன்னிசை வெண்பா.

அதிகாலையில் துயில் எழுந்து அன்று செய்யவேண்டிய தர்மங்கள் குறித்தும் பொருள்தேடுதல் குறித்தும் சிந்தித்து விடியற்பொழுதில் தாய் தந்தையரை வணங்குவது என்பது எமது முன்னோர் கூறி வைத்த முறையாகும்.

*தலையுரைத்த எண்ணெயால் எவ்வுறுப்பும்*
*- தீண்டார்*
*பிறர் உடுத்த மாசுணியும் தீண்டார்*
*- செருப்புக்*
*குறையெனினும் கொள்ளார் இரந்து*

இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

தலையிலே தேய்த்துக்கொண்ட எண்ணெயை பிற உறுப்புக்களில் தேய்த்தல் கூடாது. பிறர் அணிந்த அழுக்கு உடைகளைத் தான் அணிந்துகொள்ளக் கூடாது. செருப்பு இல்லாவிட்டாலும்கூடப் பிறிதொருவர் அணிந்த செருப்பை அணியக்கூடாது.

தமிழ் மருத்துவ நூல்களுட் பெரும்பாலானவற்றில் நேரிசை வெண்பாவே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இந்தவகை வெண்பாக்கள் இலகுவாக மனப்பாடம் செய்துகொள்வதற்கு ஏற்றவை என்பதே இதற்கான காரணமாக இருக்கலாம்.

அதே சமயம் பெரும்பாலான மருத்துவ நூல்கள் விருத்தப்பாவினால் அமைந்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்ற பரராசசேகரம் என்னும் பன்னிரண்டு பாகங்களைக்கொண்ட பெருநூலில் ஒரே ஒரு வெண்பாவைத்தான் என்னால் காணமுடிந்தது. அதுவும் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலாக இருந்தது.

*எண்ணுங் கருவி இருபத்தா றென்றுலகில்*
*நண்ணிய வாகடத்தை நாட்டினான்*
*- மண்ணில்*
*இனிய தமிழால் உரைக்க எந்நாளு*
*- நன்முக்*
*கனியருந்தும் கற்பகமே காப்பு*
- பரராசசேகரம்

'அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் எண்ணிக்கை இருபத்தாறு என்று வாகடத்தில் (வாகடரின் நூலில்) கூறப்பட்டுள்ளது. இந்தச் சிகிச்சை பற்றி வாகடத்தில் கூறப்பட்டுள்ளதைத் தமிழில் தருவதற்கு தினமும் முக்கனிகள் அருந்தும் விநாயகப் பெருமான் துணைபுரிவராக'.

தமிழ் மருத்துவ நூல்களுள் வெண்பாவில் ஆக்கப்பெற்ற நூல்களே காலத்தால் முந்தியவை என்பது எனது ஊகமாகும். மருத்துவம் என்னும் பொழுது அது நோய் அணுகாவிதி, நோயை இனம் கண்டறிதல், நோயின் குறிகுணங்கள், நோய்க்கான மருந்து, பத்தியம், பதார்த்த குணம் என்னும் பலபிரிவுகளை உள்ளடக்கியது. முதலாவதாக நோய் அணுகாவிதியை எடுத்துக்கொள்வோம்.

*திண்ணமிரண் டுள்ளே சிக்க அடக்காமற்*
*பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல்*
*- உண்ணுங்கால்*
*நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி*
*- யுண்பவர்தம்*
*பேர் உரைக்கிற் போமே பிணி*
- தேரையர்

மலசலத்தை உள்ளே அடக்கி வைத்திருக்காமல், அளவுக்கு மீறிய தாம்பத்திய உறவில் ஈடுபடாமல், உண்ணும்போது நீரைக் கொதிக்கவைத்தும் மோரைக் கூடுதலாகச் சேர்த்தும், நெய்யை உருக்கியும் உண்பவர்களின் பெயரைக்கேட்டாலே நோயானது ஓடிவிடும் (நோய் அவர்களை அணுக முடியாது) என்பது இவ்வெண்பாவில் அறிவுறுத்தப்படுகின்றது.

*மூப்புள கா யந் தணிந்து மோகம்*
*- பிறக்குமிள*
*மாப்பிளை போலே யழகு வாய்க்குமே*
*- சேப்புவருங்*
*கோமய முறுங்கறியை கொள்ள*
*- விரண்டு பங்கா*
*யாமலக முண்ண முறையால்*

ஆமலகம் என்றால் நெல்லி. நெல்லிக்காயை முறைப்படி உண்டுவந்தால். மூப்பு அடைந்த உடம்பு தெளிந்து கவர்ச்சி உண்டாகும். இளம் மாப்பிள்ளை போல் அழகு உண்டாகும்.

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே பற்களைப் பாதுகாப்பதற்கு 'மௌத்வாஷ்' எனப்படும் வாய்கழுவியைப் பரிந்துரை செய்துள்ளார்கள் தமிழ் மருத்துவர்கள்.

*மருக்காரை சுக்கு மருதந்தோல்*
*- வெள்வேல்*
*எருக்காவிரை பிரம்போடேழும்*
*- நருக்கிட்டு*
*நாலொன்றாய்க் காய்ச்சி நாலுநாள்*
*- கொப்பளிக்கப்*
*பாலன் பல்லாம் கிழவன் பல்*

மருக்காரை, சுக்கு, மருதம்பட்டை, வெள்வேலம்பட்டை, எருக்கு, ஆவரசு, பிரம்பு என்னும் ஏழு மூலிகைகளுடன் நான்கு பங்கு தண்ணீர் சேர்த்து நாலொன்றாக வற்றும் வரை கொதிக்கவைத்து அக்கஷாயத்தை நான்கு நாட்களுக்குக் கொப்பளித்துவர கிழவனின் பல்கூட சிறுவனின் பல் போல் ஆகிவிடும் என்று இந்த வெண்பாவில் கூறப்படுகின்றது.

நீரிழிவுக்கான மருந்தை எடுத்துரைக்கும் ஒரு வெண்பாவை நோக்குவோம்

*தேற்றான்விதை கடுக்காய் செப்பும்*
*- ஆவாரைவித்து*
*ஏற்ற விளாம்பிசினோ டித்தனையும் -*
*- கோற்றொடியே*
*பங்கொன்று காலாய் பசுவின்*
*- மோரில்பருகப்*
*பொங்கிவரு நீரிழிவு போம்*
- தேரையர்

தேற்றான் விதை, கடுக்காய், ஆவாரை வித்து, விளாம்பிசின் என்னும் நான்கையும் சம அளவில் சேர்த்துப் பசுமோரில் கரைத்துக் குடிக்க நீரிழிவு நோய் தீரும்.

சீழ்பிடித்த புண்ணைச் சுத்தம் செய்து அதற்குக் காரம் என்னும் மருந்து வைத்துக் கட்டுவது வழக்கம். இந்தக் காரம் செய்யும் முறை ஒரு வெண்பாவில் கூறப்படுகின்றது.

*மஞ்சள்அரிதாரந் துருசு மனோசிலை*
*வெண்பாசாணம்*
*மிஞ்சுதுத்தம் புங்கம் பால் வேப்பெண்*
*ணெய் - அஞ்சாமல்*
*அரைத்து வழித்தெடுத்து ஆறாத*
*புண்ணில் இடத்*
*துரத்திவிடும் கள்ளமெனச் சொல்*

மஞ்சள் அரிதாரம் (yellow Arsenic), துரிசு (Copper sulphate), மனோசிலை (realgar), துத்தம் (Zinc oxide), வெண்பாஷாணம் (white arsenic), புங்கமரப்பால், வேப்பெண்ணெய் என்பவற்றைச் சேர்த்து அரைத்துத் தயக்கம் இன்றிப் புண்ணை நன்கு சுத்தம் செய்து அதில் காரம் வைக்க மறைந்திருக்கும் நோய்க்காரணி தூர ஓடிவிடும்.

இரசவர்க்கம், பதார்த்த குணம் என்னும் நூல்கள் நாம் உணவாகவும் மருந்தாகவும் கொள்ளும் பதார்த்தங்களின் குணங்கள் பற்றிக் கூறுகின்றன.

*எப்போதும் தின்ன இதங்கொடுக்கும்*
*- தீவனமாம்*
*தப்பாது நோய் தணிக்கும் தாகமறும்*
*- வெப்பமுடன்*
*ஏதுகனி யானாலும் ஈடு இதற்கில்லை*
*தீதகலும் விளாங்கனியைத் தின்*
- இரசவர்க்கம்

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரு வேறு பொருள்களைத் தரும் வெண்பாக்களும் உள்ளன.

மொத்த விற்பனை செய்யும் செட்டியாரிடம்

தொடர்தல் 12ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JRS College of Business and Health Care Inc.

"Committed to providing quality training"

**Food Handling Training**
(Starting on February 10, 2019)

**Personal Support Worker- Evening Class**
(Starting on February 11, 2019)

**Personal Support Worker Bridging**
(Coming soon)

**Early Childcare Assistant**
(Starting on March 18, 2019)

**Accounting and Payroll Administration**
(Starting on February 25, 2019)

**Health Office Administrator**
(Starting on February 25, 2019)

**STUDENT TESTIMONIALS**

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government."

**Mathu**

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation."

**Thiny**

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks."

**Suba**

**15 Programs**

**Business**
- Accounting & Payroll Admin-PT (50 Weeks)
- Accounting & Payroll Admin 2017 (44 Weeks)
- Computerized Accounting (30 Weeks)
- Office Assistant (16 Weeks)

**Health Care**
- Community Service Worker (52 Weeks)
- Early Childcare Assistant (36 Weeks)
- Health Office Administrator 2017 (39 Weeks)
- NACC PSW 2015-PT (Certificate) (35 Weeks)
- NACC PSW 2015 (Certificate) (35 Weeks)
- Pharmacy Assistant (46 Weeks)

**Technology**
- 3D Animation for Video Games (72 Weeks)
- Graphic Design (34 Weeks)
- Web Development (43 Weeks)
- Computer Network & Security (40 Weeks)
- Engineering Design and Drafting Technologist (28 Weeks)

**Contact info**

**330-4168 Finch Ave East (Midland & Finch)**
**Scarborough, ON M1S 5H6**
**416-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

# வெண்பாவில் ...

**11ம் பக்கத் தொடர்ச்சி...**

சில்லறை மளிகைக்கடைக்காரர் பலசரக்குப் பொருள்கள் வாங்கப் போகின்றார். செட்டியாரிடம் உள்ள வெங்காயம் செத்தலாகிவிட்டது. 'வெங்காயம் இல்லாமல் வெந்தயத்தை வாங்கி ஒரு பிரயோசனமும் இல்லை. ரசம் வைப்பதற்குச் சீரகம் இருந்தால் போதும். சீரகத்தைத் தருவீரேல் பெருங்காயம்கூட வேண்டியதில்லை' என்று செட்டியாரிடம் கூறுகின்றார் சில்லறை வியாபாரி. இது ஒரு பொருள்.

*வெங்காயம் சுக்கானால்வெந்தயத்தால்*
*- ஆவதென்ன*
*இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை*
*- மங்காத,*
*சீரகத்தை தந்தீரேல்வேண்டேன்*
*- பெருங்காயம்*
*வேரகத்துச் செட்டியாரே.*

'இந்த உடம்பு முதிர்ந்து சருகாகிப்போனால் அயச்செந்தூரத்தால் (இரும்பு மாத்திரையால்) என்ன பயன். திருவேரகத்தில் உள்ள முருகப்பெருமானே எனக்கு நல்ல மனதைக் கொடும். இந்த உடம்பைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை' என்பது இப்பாடலுக்குத் தரப்படும் மற்றுமொரு விளக்கம்.

•

*பாலுண்போம் எண்ணெய்பெறில், வெந்நீரில் குளிப்போம்*
*பகல்புணரோம் பகல்துயிலோம் பயோதரமுன் மூத்த*
*ஏலம்சேர் குழலியரோடு, இளவெயிலும் விரும்போம்*
*இரண்டு அடக்கோம் ஒன்றை விடோம் இடதுகையில் படுப்போம்!*
*மூலம்சேர் கணிநுகரோம்மூத்தயிர் உண்போம்*
*முதல்நாளிற் சமைத்தகறி அமிர்தெனினும் அருந்தோம்*
*ஞாலந்தான் படைத்திடினும், பசித்தொழிய உண்ணோம்*
*நமணார்க்கு இங்கு ஏதுகவை? நாம் இருக்கும் இடத்தே!*

*ஆறு திங்கட்கு ஒருதடவை, அவன-மருந்து அயில்வோம்*
*அடர்நான்கு மதிகொருகால், பேதியுறை நுகர்வோம்*
*தேறுமதி ஒன்றரைக்கு ஒர்தரம் நசியம் செய்வோம்*
*திங்கள் அரைக்கு இரண்டுதரம் சவர விரும்புவோம்*
*வீறுசதுர் நாட்கொருக்கால் நெய்முழுக்கைப் பெறுவோம்*
*விழிகளுக்குஅஞ்சனம் மூன்று நாட்கொருக்கால் இடுவோம்*
*நாறு கந்தம் புட்பமிவை நடுநிசியில் முகறோம்*
*நமணார்க்கு இங்கு ஏதுகவை? நாம் இருக்கும் இடத்தே !!*

(யமக வெண்பா பற்றிய விளக்கம் தமிழ்க் குயிலி என்னும் இணையதளத்தில் இருந்து எடுக்கப்பட்டது)

**யமக வெண்பா:**
யமக வெண்பா என்பது நேரிசை வெண்பாவில் ஒரு வகை.
யமகம் என்பது மடக்கு என்னும் பொருளில் அமையும்.

இது, செய்யுளில் சீர், சொல், அடி மடங்கி வந்து, வேறுவேறு பொருளைக் குறிப்பதாக அமையும், அணிவகையான அலங்காரமாகும். இவ்வகையான வெண்பாக்கள் பெரும்பாலும் பயிலப்படுவதில்லை. மருத்துவ நூலில் யமக வெண்பாக்கள் இயற்றப் பெற்றிருப்பது சிறப்பிற்குரியது.

*பத்தியத்தை நோயை யனு பானத்தை லங்கணத்தைப் (பட்டினி)*
*பத்தியத்தை முன்மருகன் பண்ணிலிற் கேள் - பத்தியத்தை*
*யேகமா யார்த்தாலு மேறாச் செவிபோல*
*யேகமா யார்த்தாலு மெய்*

- தேரையர்

இந்த வெண்பாவில், பத்தியத்தை என்னுஞ் சொல் மூன்று இடங்களில் அமைந்திருக்கிறது. யேகமாயார்த்தாலும் என்னுஞ் சொல் இரண்டிடங்களில் அமைந்திருக்கிறது.

முதலாமடியில் வரும் பத்தியத்தை என்பது, பிணி நீங்கும் வரை கடைப்பிடிக்க வேண்டிய உணவுமுறையான பத்தியத்தையும், இரண்டாமடியில் வரும் பத்தியத்தை என்பது, பத்தி + இயம் + அத்தை எனப் பிரிந்து, பத்திய முறையைப் பற்றி அத்தையிடம் என்றும், தனிச்சொல்லில் வரும் பத்தியத்தை பத்தூஇயம் +அத்தூஜ எனப் பிரிந்து, பத்து விதமான இசைக்கருவிகள் சேர்த்து இசைக்கும் இசையை என்றும் பொருளமைகிறது.

ஏகமாயார்த்தாலும் என்பது, ஏகமாய் + ஆர்த்து, ஒரு முகமாக முழங்குகின்ற போது என்றும், ஏகூமாய் + ஆர்த்து எனப் பிரிந்து போய்விட, கெட்டு, ஆரவாரம் செய்து என்னும் பொருளில் மாறி மாறி நின்று பொருளமைக்கும்.

பிணி நீங்குகின்ற வரைக்கும் கடைப்பிடிக்கவேண்டிய பத்தியமும், பிணியினுடைய வகையும், துணை மருந்தான அனுபானத்தையும், நோய் நீங்கத் துணைபுரியும் பட்டினியைப் பற்றியும், மருமகன் மாமியாருக்குச் செய்யும் மரியாதையை ஏற்றுக் கொள்ளும் மாமியாரைப்போல நோயாளி பத்திய முறைகளை ஏற்றக் கொள்ளவும். பலவிதமான சத்தத்துடன் கூடிய முழக்கத்தின் போது சொல்லுகின்ற சொல் காதில் நுழையாததைப் போல இருந்தால், நோய்கள் ஆரவாரம் செய்து கொண்டு உடலைக் கெட்டுப்போய்விடச் செய்யும் என்பதால், பத்தியம் முக்கியம் என்பதை உணர்க என்னும் பொருளை உரைக்கிறது.



Sivakadadcham@thaiveedu.com

**கோலங்கள்**

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini:**

**647 294 0736, 416 491 6057.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதிடமும் தன்னம்பிக்கையும் உள்ள பிள்ளைகளை வளர்த்தெடுக்க...

- புஷ்பா கனகரட்ணம் -

- துறைசார் நிபுணர்கள் வழிகாட்டலின்படி, பெற்றோரியம் சார்ந்து சில கருத்துக்களை 'New York Times' பிரசுரித்திருக்கிறது. இந்த வழிகள், மனோதிடமும் வாழ்க்கையில் வரும் சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய திறமையும் கொண்ட பிள்ளைகளை உருவாக்கும் என்பது இவர்கள் கணிப்பு. -

### வெகுமதி சிறந்ததா? தண்டனை சிறந்ததா?

நம்மில் பலரும் எம் பெற்றோரிடம் தண்டனைகள் பெற்றே வளர்ந்திருப்போம். அதனால், நாமும் அதே வழியை பின்பற்ற முயலுவதில் ஆச்சரியமில்லை. ஆனால், தண்டனை பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதோடு, அனுபவத்தால் வரக்கூடிய கற்றலையும் தடுத்து நிறுத்திவிடுகிறது. தண்டனை, பிள்ளைகளில் எதிர்ப்பை வளர்க்கக்கூடும், வெட்கத்தையோ கோபத்தையோ வரவழைக்கலாம், உணர்வுகளை உள்ள டக்கி வைக்க உந்தலாம், அல்லது எப்படி பிடிபடாமல் மறுபடியும் தப்பை செய்யலாம் என ஆராய வைக்கலாம். Fight/Flight response என்பார்கள். அதாவது, தண்டனை, பிள்ளைகளை சண்டையிடுவதா (fight) தப்பியோடுவதா (flight) என்ற ஒரு அடிப்படை எதிர்செயலை நோக்கி தூண்டுவதால், மூளையின் மதிநுட்ப சிந்தனைக்குரிய frontal cortex தன் வேலையை செய்யாது விட்டுவிடுகிறது. கற்றலுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது.

அப்படியானால், வெகுமதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தண்டனையின் இரட்டை சகோதரர் தான் வெகுமதி என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள். ஒரு வெகுமதி பிள்ளையை உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். ஆனால், படிப்படியாக வெகுமதியின் பயன்பாடு குறைந்து விடும். பிள்ளைகள் மேலும் மேலும் வெகுமதியை எதிர்பார்க்கும் வகையில் அவர்களை மாற்றியும் விடும். உளநல நிபுணர்கள் பல ஆண்டுகாலமாக அறிவுறுத்துவது என்னவென்றால் எப்படி வெகுமதிகள் எங்கள் இயல்பான உந்துதல் மற்றும் மகிழ்வை குறைத்துவிடுகிறது என்பதைத்தான். உதாரணமாக: பணம் கொடுத்து படம் வரைய சொன்னபோது, பணம் வழங்கப்படாத பிள்ளைகளை விடவும் பணம் கொடுக்கப்பட்ட பிள்ளைகள் குறைவாகவே வரைந்தார்கள். வெகுமதி எம்முள் இருக்கும் ஆக்கத்திறனை (creativity) குறைக்கும் என்பதும் கண்டறியப்பட்டிருக்கிறது. வெகுமதிகள் எங்கள் மூளை சுயாதீனமாக, பரந்து, ஆழமாக சிந்திக்கவிடாமல் தடுத்துவிடுகிறது.

தண்டிப்பதா, வெகுமதி அளிப்பதா என்ற சிந்தனையே, நம் பிள்ளைகள் அடிப்படையில் நல்ல மனப்பாங்கு இல்லாதவர்கள் என்ற அனுமானத்தை வைத்து வருகிறது என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். அந்த சிந்தனை போக்கை மாற்றினால், அதாவது நம் பிள்ளைகள் நல்ல மனம் கொண்டவர்கள், அன்பானவர்கள் என்று நாம் சிந்திக்க ஆரம்பித்தால், பிள்ளைகளோடான நம் கலந்துரையாடலில் பெரும் மாற்றம் ஏற்படும். தண்டனைகளும் வெகுமதிகளும் நிபந்தனைகள் சார்ந்தவை. பிள்ளைகள் மேல் இருக்கும் எம் அன்பும் நம்பிக்கையும் நிபந்தனைக்கு அப்பாற்பட்டவை. அன்புடன் பிள்ளைகளை முழுமையாக செவிமடுத்தால், நாம் சொல்வதை கேட்கும் சந்தர்ப்பத்தை நாம் அதிகரிக்கச்செய்கிறோம்.

### பிள்ளைகளிடம் கூச்சலிடுவது:

பிள்ளைகளை அடிப்பது என்பது காலப் போக்கில் குறைந்துக்கொண்டு வருகிறது. ஆனால் கூச்சலிடுவது என்பது பெற்றோராக நாம் எல்லோருமே செய்வது தான்.

உங்கள் கத்தலை நிறுத்த என்ன வழி?

முன்கூட்டியே விடயங்களை திட்டமிடுவது தான்.

வீதியில் வாகனம் வரும்போது குறுக்கே ஓடவேண்டாம் என்று பிள்ளைகளை பார்த்து கூச்சலிடுவோம். இது அந்த கூச்சலிடுதல் பற்றியது அல்ல. பிள்ளைகளை நாம் திருத்தவேண்டும் என்ற நோக்கில் போடும் கூச்சலைப்பற்றித்தான் கருத்தில் கொள்கிறோம். அநேகமாக தினமும் ஒரே விடயங்களுக்காக கத்துவோம். முதல் கத்தல் வேலை செய்யாவிட்டால், இன்னும் பலமாக கத்துவோம். கத்துவது பலனளிக்காது என தெரிந்தால், எப்படி இதனை மாற்றுவது?

> " நம்மில் பலரும் எம் பெற்றோரிடம் தண்டனைகள் பெற்றே வளர்ந்திருப்போம். அதனால், நாமும் அதே வழியை பின்பற்ற முயலுவதில் ஆச்சரியமில்லை. ஆனால், தண்டனை பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதோடு, அனுபவத்தால் வரக்கூடிய கற்றலையும் தடுத்து நிறுத்திவிடுகிறது. "

பயனில்லை என்று தெரிந்தும் இதைச் செய்கிறோம். பெற்றோர் செய்யும் மிகப் பெரும் முட்டாள்தனம் இதுதான் என்கின்றனர் நிபுணர்கள். எந்த நேரமும் பெற்றோரின் கத்தல் கேட்கும் வீடுகளில் வளரும் பிள்ளைகளில் அதிக உளசோர்வு (depression), மற்றும் தன்னம்பிக்கை குறைவு காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அடித்தலுக்கு ஈடாக பிள்ளைகளில் பதட்டம், உளசோர்வு, மனஅழுத்தம் மற்றும் நடத்தை குழப்பங்கள் ஏற்படுகின்றன.

பிள்ளைகளிடம் நீங்கள் சத்தமிடும்போது, அவர்கள் உங்களை அதிகாரம் உள்ளவர்களாக பார்ப்பதில்லை. மாறாக, நீங்கள் வலிமை குறைந்தவராக, கட்டுப்பாட்டை இழந்தவராகத்தான் அவர்கள் கண்ணில் தெரிவீர்கள். பெற்றோராக உங்கள் மன அழுத்தத்தை குறைப்பதற்கு கத்துவது உதவலாம். ஆனால் பிள்ளைகளின் பழக்கத்தை மாற்றுவதற்கு அது உதவப்போவதில்லை. நீங்களே உங்களை கேட்டு பார்க்கலாம், எப்போதாவது பிள்ளைகளோடு கத்துவது அவர்கள் பழக்கத்தில் மாற்றத்தை கொண்டுவந்திருக்கிறதா?

இதற்கு, பெற்றோராக நாம் ஒழுங்குமுறையோடு திட்டமிடுவது அவசியம். எந்த நேரமும் பிழைகளை தேடுவதை எங்கள் பழக்கமாக்கிக் கொள்ளக்கூடாது. பிள்ளைகளிடம் எது நமக்கு வேண்டாம் என்பதை விட, எந்த பழக்கவழக்கம் வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக, உங்கள் பிள்ளை வீட்டினுள் வரும்போது பாதணிகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கழற்றி வைக்கவேண்டும் என நீங்கள் விரும்பினால், முன்கூட்டியே, அதாவது காலையிலேயே பிள்ளைக்கு நீங்கள் அதை அமைதியாக சொல்லலாம். இது முதல் படி - அதாவது நடந்தபின் பேசாமல், முன்கூட்டியே அமைதியாக சொல்கிறீர்கள். இரண்டாவது, நீங்கள் முன்மாதிரியாக நடப்பது. அதாவது, நீங்களும் உங்கள் பாதணிகளை அதே இடத்தில் கழற்றி வைப்பது. மூன்றாவது உங்கள் பிள்ளையின் நடத்தை. உங்கள் பிள்ளை பாதணிகளை நீங்கள் சொன்ன இடத்தில் அல்லது சொன்ன இடத்திற்கு அருகாமையில் வைத்தால் கூட, அதை செய்ததற்காக வெளிப்படையாகப் பாராட்டுவதும், தட்டிக்கொடுப்பதும் முக்கியம். அதாவது, உங்கள் முகபாவனையாலும் சொல்லாலும் செயலாலும் பிள்ளைக்கு உங்கள் பாராட்டை வெளிப்படுத்துவது, அதை ஒரு நாளாந்த பழக்கமாக உங்கள் பிள்ளை ஆக்கிக்கொள்வதற்கு உதவும். இது ஒரு எளிமையான உதாரணம், ஆனால் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவருவதற்கு அடிப்படையானது. வீட்டில் இப்படியான ஒரு நடைமுறையை ஏற்படுத்தும் போது, பிள்ளைகள் நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொள்வார்கள். பெற்றோராக, நாம் கத்துவதற்கான தேவை ஏற்படாது. நமக்கு அழுத்தம் குறையும். பிள்ளைகளும் மகிழ்வாக இருப்பார்கள்.

### பதின்ம வயதினரின் பாடசாலை சார்ந்த அழுத்தம்:

பாடசாலை மீண்டும் ஆரம்பித்ததோடு, வேலைப்பளுவும் அதிகரிக்கிறது. பாடசாலை மற்றும் படிப்பு சார்ந்த அழுத்தம் (stress)நாம் நினைப்பது போல் கெடுதலான விடயம் அல்ல. நம் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு முக்கியமானது. ஆனால், பல சமயங்களில் நாமோ நம் பிள்ளைகளோ படிப்பின் பளுவை, அது தரும் அழுத்தத்தை, ஒரு ஆபத்தான விடயமாகப் பார்க்கிறோம். பளுதூக்கும் உடற்பயிற்சி செய்பவரோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அசௌகரியமாக உணரும் பொழுதிலும், பாரமான பளுவை தூக்குவது தசை கட்டமைப்புக்கு முக்கியம் என உடற்பயிற்சி செய்பவருக்கு தெரியும். அதேபோல் தான் கல்வியும். பாடசாலைகள் எம் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, நம் பிள்ளைகள் பாடசாலையில் அழுத்தத்தை உணர்கிறார்கள், ஆனால் ஒவ்வொரு சவாலையும் கடந்து, பின் அடுத்த ஒரு சவாலுக்கு இட்டு செல்லப்படுகிறார்கள் என்றால், எல்லாமே சரியாக போகிறது என்று தான் பொருள்.

பெற்றோராக நாம் எத்தனை அழுத்தங்களை வெற்றிகரமாக கடந்து வந்திருக்கிறோம் என எண்ணிப் பார்த்தால், அழுத்தம் ஆபத்தான விடயம் அல்ல, வளர்ச்சிக்கு முக்கியம் என்பதை நம் பிள்ளைகளுக்கும் உணரவைக்க முடியும். எங்கள் உடலும் மனமும் ஆரோக்கியமான அழுத்தத்துக்கு ஈடு கொடுக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இதை உணரும் பிள்ளைகள், உதாரணமாக, ஒரு பரீட்சைக்கு முன் மனம் சற்றே பதட்டப்படுகிறது என்றால், தம் உடலும் மனமும் பரீட்சையின் சவாலை ஏற்றுக்கொள்ள தம்மை தயார்படுத்துகிறது என உணர்வார்கள். பரீட்சையை நன்கே எழுதுவதற்கு இந்த மனப்பாங்கு உதவுகிறது. பாடசாலையும் கல்வியும் பிள்ளைகளுக்கு சவாலாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் வளர்ச்சி ஏற்படும். அதேவேளை, எப்படி கடின உடற்பயிற்சிகளுக்கு இடையில் ஓய்வு எவ்வளவு முக்கியமோ, அதேபோல், நம்

தொடர்தல் 14ம் பக்கம்

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதிடமும்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

பிள்ளைகளுக்கும் ஓய்வு தேவை. மொத்தத்தில், அழுத்தத்தை ஆரோக்கியமான, அதேவேளை வளர்ச்சிக்கு தேவையான ஒரு அசௌகரியமான விடயம் என எம் பிள்ளைகளும் நாமும் புரிந்து கொள்ளல் முக்கியமானது.

## மனோதிடமுள்ள பிள்ளைகளை வளர்த்தெடுக்க, மனோதிடமுள்ள பெற்றோராக நாம் இருக்கவேண்டும்:

குழந்தைப்பருவம் எப்பொழுதும் அழகானது மட்டுமல்ல. சவால்கள் நிறைந்தது. குழந்தைகள் கோபம், கண்ணீர், மற்றும் அடம் பிடித்தலும் நிலத்தில் விழுந்து புறழ்வதும், குழந்தைப்பருவத்தில் எதிர்பார்க்க வேண்டிய ஒன்றே. உணர்வுகள் இல்லாமல் மனிதர்கள் இல்லை. பெற்றோராக, நம் எதிர்பார்ப்புகளும் அதற்கு அமைவாக இருக்க வேண்டும். சவாலான பொழுதுகளில் PAUSE buttonஇனை அழுத்த மறக்காதீர்கள் என்கிறார்கள் உளநல நிபுணர்கள். குழந்தை நிலத்தில் விழுந்து புரளும் சந்தர்ப்பத்தில் கூட, இது உதவும். பொதுவாக, பெற்றோரின் இதய துடிப்பு, மூச்சு வேகம் மற்றும் உடல் தொழிற்பாடுகள் நம் குழந்தைகள் உடல் தொழிற்பாடுகளோடு இசைவாக இருக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகவே, பெற்றோராக நாம் அமைதி காக்கும்போது, அந்த அமைதி, ஆறுதல், நம் பிள்ளைகளையும் அமைதிப்படுத்தும்.

பல சமயங்களில், ஏன் இப்படி செய்கிறாய் என நாம் பிள்ளைகளைக் கேட்கிறோம். அதே கேள்வியை, அதாவது நான் ஏன் இப்படி கோபப்படுகிறேன் அல்லது பதட்டப்படுகிறேன் என்ற கேள்வியை நீங்களே உங்களிடம் கேட்டு கொள்ளுங்கள். அதற்கான காரணத்தை கண்டறிந்து திருத்தப் பாருங்கள். எதற்கு 'ஆம்' என்கிறோம், எதற்கு 'இல்லை' என்கிறோம் என ஆராய்ந்து பாருங்கள். பிள்ளையின் அழுகையை, ஆரவாரத்தை நிறுத்த எப்பொழுதும் அவர்கள் கேட்பதற்கெல்லாம் 'ஆம்' என்று நீங்கள் தலையாட்ட தேவையில்லை. அன்புடன் 'இல்லை' என மறுக்க, பெற்றோராகிய நாம் கற்றுக்கொள்ளவேண்டும். 'ஆம்' என சொல்வது அந்த பொழுதுக்கு ஒரு இலகுவான பதிலாக இருக்கலாம். ஆனால், காரணத்தை பிள்ளைகள் புரிந்துகொண்டால், 'இல்லை' என்ற பதில் பயனுள்ளதாகிறது. அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

பிள்ளைகளை உங்கள் சுயமரியாதையின் பிரதிபிம்பமாகப் பார்க்காதீர்கள். அப்படிப் பார்க்கும்போது, உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்கள் இல்லையெனில் ஏமாற்றம் அடைந்துவிடுவீர்கள். பொதுவாக, இது எம் சமூக வரைமுறையாக இருக்கிறது. அதாவது, எம் பிள்ளைகள் சரியாக இல்லை என்றால், அது பெற்றோராகிய நம் தவறு தான் என்பது. அந்த எண்ணத்தை விடுத்து, நாம் அமைதி கொள்ளவேண்டும். நமக்கு ஒரு வாழ்க்கையை நாம் அமைத்துக்கொண்டது போல், எம் பிள்ளைகளுக்கும் ஒரு வாழ்க்கை அமையத்தான் போகிறது.

## பெண்பிள்ளைகளின் தன்னம்பிக்கை-இடைவெளி:

8-14 வயதில், பெண்பிள்ளைகளின் தன்னம்பிக்கை 30% குறைவடைகிறது. 14 வயதில், பெண்பிள்ளைகள் அதி தாழ் நிலையில் இருக்கும்போது, ஆண் பிள்ளைகள் தன்னம்பிக்கை 27% அதிகமாக இருக்கிறது. இந்த தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்க நாம் தான் எம் பெண் பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

உங்கள் மகள் சவால்களை எதிர்கொள்ளப் பயப்படுகிறாரா? தோல்விக்கு பயந்து புதிய விடயங்களில் இறங்கத் தயங்குகிறாரா? வகுப்பில் மற்றோர் முன்னால் பேச வெட்கப்படுகிறாரா? புது நண்பர்களை ஏற்படுத்திக்கொள்ள பின்தங்குகிறாரா? இந்த சந்தர்ப்பங்களில், அதீத யோசனை, மற்றவர்களை திருப்திப்படுத்த அதீத பிரயத்தனம், மற்றும் perfect ஆக தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம், எல்லாமே தோன்ற ஆரம்பித்து, உங்கள் மகளின் தன்னம்பிக்கையை மேலும் குறைத்துவிட தொடங்குகிறது.

பதின்மவயதோடு ஏற்படும் மூளை மாற்றங்கள் பெண்பிள்ளைகளில் தேவையற்ற யோசனைகளை அதிகரித்து விடும் சாத்தியம் இருக்கிறது. அவர்களுக்கு உதவ, புதிய சவால்களை துணிவோடு அணுக நாம் ஊக்கம் அளிக்கவேண்டும். பெற்றோராக உங்கள் வாழ்க்கை சவால்களை எப்படி எதிர்கொண்டீர்கள், தோல்விகளை எப்படி ஏற்றுக்கொண்டீர்கள் என்பது பற்றி எல்லாம் உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். எது ஒரு பிள்ளைக்கு சவாலாக அமையும் என்பது வேறுபடலாம். சிலருக்கு, ஒரு புதிய விளையாட்டு குழுவில் இணைவது சவாலாக இருக்கலாம். அதுவே சிலருக்கு ஒரு நண்பரை வீட்டுக்கு வரவேற்பது சவாலாக இருக்கலாம். இப்படியான சவால்களை எடுக்கவும், பிள்ளைகளின் தேவையற்ற பயத்தை போக்கவும் அவர்களுக்கு உறுதுணையாக இருங்கள். வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அரவணைக்க உங்கள் பிள்ளைகளை தயார்படுத்துங்கள். உங்கள் மனோதிடம், உங்கள் பிள்ளைக்கும் நிச்சயம் தொற்றிக்கொள்ளும்.

## பதின்மவயதில் college/universityக்கு எப்படி தயார்படுத்தலாம்?

உங்கள் பிள்ளைக்கு தொடர்ந்து படிக்க college அல்லது university யில் இடம் கிடைத்திருந்தாலும், அவர்கள் அதற்குத் தயாராக இருக்கிறார்களா? முன்கூட்டியே, highschoolல் இருக்கும் உங்கள் பிள்ளைகளின் சுயாதீனத்தை (independence) பலமாக்குவதன் மூலம், உங்கள் பிள்ளைக்கு நீங்கள் உதவலாம். பெற்றோராக நாம் 100% நம்பிக்கையோடு இருக்கலாம். ஆனால் நம் பிள்ளைகளை பற்றி ஆரம்பத்திலேயே கணிப்பிட்டு பார்க்கவேண்டும்.

இங்கு மூன்று முக்கிய விடயங்கள் அடங்கும்: ஆரோக்கியம், கல்வி, மற்றும் நிர்வாகம். இவற்றில் நம் பிள்ளைகள் எவ்வளவுக்கு சுயாதீனத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்?

ஆரோக்கியம் என்று பார்த்தால், சில பிள்ளைகளுக்கு ஏதாவது நோய் நிலை இருக்கலாம் (நீரிழிவு, Asthma etc), அல்லது ஒழுங்கற்ற நித்திரை பழக்க வழக்கமாக இருக்கலாம். இப்படியான ஒரு பிரச்சினையை தாமாக சுயாதீனமாக கையாளப் பழகி இருக்கிறார்களா என்பது முக்கியம். உதாரணமாக, பெற்றோராகிய நீங்கள் தான் உங்கள் பிள்ளையை காலையில் alarm வைத்து எழுப்பவேண்டும். பாடசாலைக்கு நேரத்துக்கு போக நினைவுபடுத்த வேண்டும் என்றால், உங்கள் பிள்ளை மேற்படிப்புக்கு இடம் மாறிச் சென்று எப்படிச் சமாளிக்க முடியும்?

அடுத்தது கல்வி, பாடசாலை சார்ந்தது. உங்கள் பிள்ளை பள்ளி வேலைகளை தனியாக தரம் பிரித்து, பாடசாலையில் ஒப்படைக்கவேண்டிய விடயங்களை சுயாதீனமாக, சரியாக, நேரத்துக்கு ஒப்படைக்கிறாரா? அல்லது நீங்கள் கண்ணில் விளக்கெண்ணெய் வைத்து அவர்களை மேல்பார்வை பார்க்கவேண்டி இருக்கிறதா? 11ம் வகுப்பின் இறுதியிலும், 'homework police' போல் நீங்கள் உணர்கிறீர்கள் என்றால், நீங்கள் விரைவில் இந்த வேலையில் இருந்து ஓய்வெடுத்து கொள்ளவேண்டும் என்றே பொருள். பாடசாலை வேலை சார்ந்து உங்கள் பிள்ளை பொறுப்பை உணர்ந்துகொள்வது மிக முக்கியம். பல சமயங்களில் எங்கள் பிள்ளைகள் பாடங்களில் என்ன புள்ளிகள் வாங்குகிறார்கள் என்பதிலேயே நம் கவனம் இருக்கும். ஆனால், தன்னிச்சையாக ஒரு பிள்ளை படித்து எடுக்கும் C grade, நீங்கள் பின்னாலும் முன்னாலும் கண்காணிப்பதால் எடுக்கும் A - அல்லது B - இனை விடவும் சிறந்தது. ஏனென்றால், மேல்படிப்பில் வெற்றிபெறுவதற்கு கல்வி-சார்ந்த சுயாதீன பழக்க வழக்கங்களை உங்கள் பிள்ளைகள் வளர்த்துக்கொள்வதென்பது மிக முக்கியம். அதுவே வெற்றியைத் தரும்!

உங்கள் பிள்ளை மேற்படிப்புக்கு தயார் என்பதற்கான மூன்றாவது அறிகுறி, நாளாந்த - எளிமையான விடயங்களை உங்கள் பிள்ளை சுயாதீனமாகச்செய்கிறார் என்பதே. இது ஒரு கால அட்டவணையை (calendar) வைத்துத் தன் அலுவல்களைக் கவனிப்பதாக இருக்கலாம், பாடசாலைக்கு தேவையான படிவங்களை நிரப்புவதாக இருக்கலாம். காலதாமதம் இன்றி செய்ய வேண்டிய விடயங்களை செய்வது, தன் விடயம் சார்ந்து ஒரு எளிமையான தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவது... இப்படி, ஒரு வயத்துவந்தவர்க்குரிய சில காரியங்களைச் செய்யும் பக்குவம் உங்கள் பிள்ளைக்கு இருக்கிறதா? குழந்தை பருவத்தில், பதின்மவயதில், பெற்றோராக நாம் வழிகாட்டினோம். College/university வாழ்க்கைக்கு தானே இந்த விடயங்களை நிர்வகிப்பது என்பது உங்கள் பிள்ளைக்கு இன்றியமையாததாகிறது.




pushpa.k@thaiveedu.com

N.K.S
Drapery & Blinds Fabric LTD

திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.



கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

'கற்க கணிதம் கசடற'
மாணவர்களின் வீட்டுக்கு வருகைதந்து தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.

Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.

H: 905-428-1928
C: 416-819-7923

1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TD Canada Trust | ICICI Bank | Scotiabank | NATIONAL BANK | EQUITABLE BANK | B2B BANK

INSTANT AND EASY CASH FOR IMMEDIATE NEEDS



கடன் செய்து கொடுப்பது எமது கடமை

F.S.C.O.Brokerage # 10687
Mortgage Broker # M08004190

**www.cashbankcanada.com**

வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள

அழையுங்கள் : தம்பி பிரபா

**(416) 645 3027**

1% வட்டி வீதத்தில் ஆரம்பித்து

$1 Million வரை பெற்றுக்கொள்ளலாம்

HomEquity Bank | BRIDGEWATER BANK | Manulife Bank




ஒவ்வொரு டொலரும் முக்கியமானது.

Canada.ca/MyBenefitsAndCredits

Canada Revenue Agency | Agence du revenu du Canada

Canada

# TOMORROW MIGHT BE TOO LATE.
# START NOW

உங்கள் வருங்கால உறவுகளை மின்னியவராக்க



BUILD AN INVESTMENT & PROTECTION FOR YOUR LOVED ONES

- முதல் மாதம் $0 கட்டணம். மருத்துவ பரிசோதனையற்ற ஆயுள் காப்புறுதி upto $500.00 (Non- Medical Insurance) tax free money.
- Critical Insurance - 25 கொடிய நோய்க்குரிய காப்புறுதி. நீங்கள் உயிருடன் இருக்கும் பொழுதே. நீங்கள் விண்ணப்பித்த தொகை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- 20 வருடங்கள் கட்டியனால் போதும். உங்கள் வாழ்நாள் முழுவதும் காப்புறுதி இருக்கும். 20 Year Paid off Life Insurance Policy.
- கட்டணம் மாறாத 40 வருடங்களுக்கான ஆயுள் காப்புறுதி. எந்த நேரமும் நிலையான காப்புறுதிக்கு மாற்றலாம் Without Medical Examination (40 years term Policy).
- RESP உங்கள் பிள்ளைகளுக்கான கல்வி சேமிப்புத்திட்டம் $ 25 முதலீட்டுடனேயே ஆரம்பிக்கலாம். இதற்கு கனடிய அரசு மானியமாக $ 9200 சேமித்து கொள்ளலாம்.
- உங்கள் முதலீடுகள் 100% உத்தரவாதம் (for The Death) RRSP, RIFF, LIF, LIRA(Average Return 7 to 10%).
- Super Visa - உங்கள் Visa நிராகரிக்கப்பட்டால் 100% உங்கள் கட்டணம் திருப்பி பெறலாம்.

SUPER VISA | RRSP | RESP | CRITICAL ILLNESS | LIFE | NON - MEDICAL | DISABILITY | TRAVEL | 100 YEAR TERM | 40 YEAR TERM

**$500,000**
TAX FREE MONEY

| AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|
| | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| 25 | $18.00 | $23.85 | $38.70 | $27.45 | $33.30 | $52.65 |
| 30 | $18.90 | $24.30 | $47.25 | $27.45 | $33.75 | $73.80 |
| 35 | $22.95 | $27.00 | $80.10 | $27.45 | $35.55 | $108.00 |
| 40 | $27.90 | $37.80 | $119.70 | $35.10 | $53.10 | $168.75 |

**SIVA MAILVAGANAM**
Insurance & Investment Broker
**Dir : 416.230.2991**
Fax : 416.298.4664 |
email : rajahsai9@gmail.com.
80 Nashdene Rd Unit B 25-26ON M1V 5E4



TERM PLAN - CONVERTIBLE/RENEWABLE WITHOUT ANY MEDICAL EXAMINATIONS UP TO AGE 70.

RBC Royal Bank | IA PACIFIC | BMO | Canada Life | Manulife Financial | Assumption Life | ROYAL BROKERS CORPORATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உணவுமுறையும் கனடியர் எதிர்கொள்ளும் சவால்களும்

- நேரு குணரட்ணம் -

வளமான மனித வாழ்வின் அத்திவாரமே ஆரோக்கியமான உணவுமுறை தான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதில் கேடு விளைந்தால், அது எமது உடலுக்கு கேடுவிளைவிக்கும் என்பதே யதார்த்தம். கனடாவில் முன்கூட்டிய இறப்பிற்கு, அல்லது உடல்நலக்குறைவிற்கு, முக்கிய மூன்று காரணிகளில் ஆரோக்கியமற்ற உணவு வழக்கம் முக்கிய காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு முக்கிய காரணிகளாக, புகைப்பிடித்தல் மற்றும் அளவுக்கு மீறிய எடை என அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தவகையில் தமது மக்களை ஆரோக்கிய வாழ்விற்கு வழிப்படுத்தும் பொறுப்பு அரசுகளுக்கு உண்டு. அதிலும் மக்கள் சுகாதாரத்தை தமது பொறுப்பில் வைத்துக் கொள்ளும் கனடிய அரசுக்கு, இது மிகமிக அவசியம். இல்லாதுவிடின் கட்டற்று அதிகரித்துச் செல்லும் சுகாதாரச் செலவுகளை, அது மேலும் மேலும் சுமக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். இதை மையப்படுத்தியே உணவு உண்பதற்கான ஒரு வழிகாட்டியை கனடிய மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டு வருகிறது.

இவ்வாறொரு வழிகாட்டி இறுதியாக 2007ல் வெளியிடப்பட்டது. இவ்வழிகாட்டியில் உள்ள பல விடயங்கள் பின்னர், அவ்விடயங்களில் தொடர்ந்த பல ஆராட்சிகளின் வழியாகவும், அதனூடாகப் பெறப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பல புதிய விடயதானங்களாலும், மாற்றத்திற்குள்ளாக வேண்டிய அவசியம் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் 12 ஆண்டுகளில் பின் அதற்கான கதவு இவ்வாண்டில் திறந்திருக்கிறது. இதற்கான முன்னறிவித்தல் கடந்த ஆண்டின் இறுதியில் வெளியிடப்பட்டதும், அது குறித்த பல வாதப்பிரதிவாதங்கள் எழுந்த நிலையிலேயே இறுதி வழிகாட்டி ஆவணம் ஈற்றில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. விஞ்ஞான ஆய்வுத்தரவுகளின் அடிப்படையில் இது வெளியிடப்பட்டுள்ளது எனலாம். இருக்க, பெருவணிகமாக இன்றைய உணவுவிளைச்சலும் விநியோகமும் மாற்றம் கண்டுள்ள நிலையில், அது சார்ந்த பெரு வணிகத்தின் அழுத்தங்களுக்கு பெரிதும் அடிபணிந்து போகாது, துணிச்சலாக இது அமைந்துள்ளது என்பதையும் இங்கு வலியுறுத்திச் சொல்லலாம்.

எமது உணவுமுறையில் பெரு மாற்றத்தை இது பிரேரிக்கிறது. உணவு தயாரிப்பிலும், உணவுண்ணும் முறையிலும், வழிமுறைகளை இது வலியுறுத்துகிறது. அதாவது முன்னர் நான்கு வகையாக உணவுகளைப் பிரித்து, அதில் எவ்வளவு ஒவ்வொரு உணவுவகையிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும், என்று பிரேரித்தவர்கள். இம்முறை அதனை முழுமையாக அகற்றிவிட்டு, ஒவ்வொரு உணவிலும் அரைவாசியை காய்கறி மற்றும் பழவகைகளுக்கு ஒதுக்கிவிட்டு, அடுத்த கால்ப்பகுதியில் புரத உணவுவகைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு கோரும் அதேவேளை, இறுதி கால் பகுதியையும் தானியவகைகளால் (Whole Grain) இட்டு நிரப்புமாறு வேண்டுகின்றனர். அதிலும் உடலுக்கு உற்சாகம் தரும்




புரதவகைகளை, குறிப்பாக மாமிச உணவுகளில் இருந்து பெறுவதைவிட தாவர புரதத்தால் பெரிதும் கொள்ளுமாறு வேண்டியுள்ளனர். மாமிச புரதத்தில் மீன் மற்றும் கோழியை வாரத்தில் சில நாட்களுக்காவது என்பதை ஏற்றாலும் ஏனைய மாமிச வகைகளை தொடர்ந்தும் புறம்தள்ளியே வருகின்றனர். அதேவேளை உப்பு, கொழுப்பு மற்றும் இனிப்பு அதிகம் உள்ளவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றனர். இவற்றைத் தொடர்ந்தும் அதிகரித்த நிலையில் உண்பது இருதய நோய்கள், நீரழிவு மற்றும் புற்றுநோய்க்கு இட்டுச் செல்லும் வாய்ப்பை அதிகரிப்பதாலேயே இந்நிலை வலியுறுத்தப்படுகிறது. இதனால் போத்தில்கள் மற்றும் பக்கட்டுகளில் அடைக்கப்பட்ட இனிப்புப் பானங்களை தவிர்த்து அதிகம் தண்ணீரை அருந்துமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிகரித்த எடைக்கும், ஆரோக்கியமற்ற உணவுவகைக்கும், வீட்டுக்கு வெளியில் வாங்கும் உணவுகள் அதிகம் வழிகோலுவதால், வீட்டில் நீங்களாக ஆராக்கியமான உணவு வகைகளை தயாரித்து உண்ணுவதை வழக்கமாகக்கொள்ளுமாறு கோரப்படுகின்றீர்கள். கடந்த சில சகாப்தங்களாக பெருமளவில் அதிகரித்துவிட்ட துரித வேக உணவகங்கள், மேற்கத்தைய உலகில் மனிதர்களின் உடல்நலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக, பல ஆய்வுகளில் தொடர்ச்சியாக அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில், மக்கள் தாங்களாக ஆரோக்கிய உணவை தயாரித்த பழைய நிலைக்குத் திரும்ப, மீண்டும் உந்தித்தள்ளப்படும் நிலை தற்போது பிறப்பெடுத்துள்ளது. அதேவேளை தயாரிக்கும் உணவுகளை குடும்பமாக இணைந்து உண்ணும் வழக்கத்தை, அதிகரித்துக் கொள்ளுமாறும் வேண்டுப்படுகின்றீர்கள். இது உணவை இரசித்து உண்ணும் நிலையையும், மனோவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் ஆரோக்கிய நிலையை, குடும்ப ரீதியாக வலுப்படுத்தும் என ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. அதேவேளை உணவு தயாரித்தலையும் குடும்பமாக இணைந்து செய்வதில் முனைப்புக் காட்டுவதையும் உற்சாகப்படுத்துகின்றனர். அதேவேளை மதுபாவனைக்கு எதிராக தொடர்ந்தும் சிவப்புக்கொடி காட்டுகின்றனர். மதுபாவனை அதிகரித்த உடலியல் சவாலுக்குக் காரணமாக இருக்கிறது என ஆய்வுகள் பல தொடர்ந்தும் அடையாளம் கண்டுவரும் நிலையில், கனடியர்களின் மதுபாவனை தொடர்ந்தும் ஓரளவாவது ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவை மோசமாகக் கடந்து நிற்பதே, இவ் அபாய எச்சரிக்கைக்கான காரணமாகும்.

அதேவேளை இன்றைய வர்த்தக உலகில் உணவு பதாத்தங்களில் வியாபார அணுகுமுறைகள் உக்கிப்பெருகி நாளும் எம்மை ஆக்கிரமித்து எம்மை பல்வளிகளிலும் தம்பால் ஈர்த்து வருகின்றன. இவற்றிற்கு முகம் கொடுத்து அவற்றிக்கு பலியாகாமல் பயணிப்பதென்பது அதிகரித்த மனக்கட்டுப்பாட்டையும் புரிதலையும் பக்குவத்தையும் எம்மிடையே எதிர்பார்க்கின்றது. அதற்கு எம்மை தயாரித்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தி வேண்டுகின்றனர். அத்துடன் உணவுக்காக வாங்குகின்ற பொருட்களில் அதில் உள்ள 'லேபல்' எனப்படும் விபரக்கோவையில் கவனம் செலுத்துவதை வழக்கமாக கொள்ளுங்கள். அதில் உப்பு, கொழுப்பு மற்றும் இனிப்பின் அளவுகளை கவனத்தில் கொள்ளுங்கள். அதிகமாக இருந்தால் அவற்றை முழுமையாக தவிர்த்துவிடுங்கள் என்கின்றனர்.

உணவுமுறையில் கனடியர்களாக நாம் ஒரு சவால் நிலையில் உள்ளோம் என்பதே உண்மை. அதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தை இவ் வெளியீடு வலியுறுத்துகிறது. அனைத்து வயதுப்பிரிவிலும் ஆரோக்கியமற்ற உணவு வழக்கத்தால், அளவுக்கு மீறிய எடை கனடிய மருத்துவ உலகிற்கு ஒரு பெரும் கரிசனையாக உள்ளது. அத்துடன் புகைப்பிடித்தல் சமீப வருடங்களாக மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளதும், மதுபாவனையில் உலக சராசரியைவிட 3.6 மடங்கு அதிகரித்த மதுபாவனை கனடாவில் உள்ளமையும் மேலும் கரிசனையை அதிகரித்துள்ளது.

அதேவேளை, தமிழர்களாக எமது பாரம்பரிய உணவு மற்றும் கனடிய உணவு என இருவேறு துருவங்களின் மத்தியில், அதிகரித்த சவாலுடனேயே நாம் உள்ளோம். மறுபுறத்தில் எமது முதாதையரின் உணவு வழக்கங்களையே மேற்கண்ட முறைகள் வலியுறுத்துகின்றன என்பதே கசப்பான உண்மையாகும். நாம் எமது பண்டைய வலுநிலையில் இருந்து நிறையவே இன்று புலம்பெயர் வாழ்வில் சறுக்கிவிட்டோம். குறிப்பாக மேற்கத்தைய உலகவாழ்வு மதுபாவனையில் பெரும் சவால் நிலையை தமிழர்களிடையேயும் ஏற்படுத்தியுள்ளது என்பதும் நிதர்சனமான உண்மையாகும். இப்போது பண்டைய தமிழர் வாழ்வுநிலையே சிறந்த நிலை என்கின்றனர் ஆய்வினூடாக. எமது மூத்தவர்களைப் பார்த்து, எப்பிடி இத்தினை வயதில் திடமாக இருக்கிறார்கள்? என எம்மில் பலர் பலவேளைகளில் கேள்வி எழுப்பியிருகின்றோம். அதற்கு அவர்களின் உணவுமுறையே பிரதான காரணமாகும். அதிகரித்த காய்கறிகள், தானியவகை, தாவரபுரதம், இயற்கை விவசாயம் என அனைத்தும் அவர்கள் வாழ்வில் பிரதானமாக இருந்தது. இதனை ஏற்று, எமது பண்டைய நிலைக்கு திரும்ப நாம் தயாரா? என்பதே தற்போது எம்முன் எழுந்துள்ள பாரிய கேள்வி?

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் இணைய பக்கத்திற்கு செல்லவும் https://food guide.canada.ca/en/

■ ■ ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமைச்சுவடுகள்

பசுமைச்சுவடுகள் என்கிற அமைப்பின் மூலமாக சூழல்நேயமிக்க வாழ்க்கை முறை எனும் தொனிப் பொருளிலும் சூழலியல் குறித்த விழிப்-புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் செயற்பட்டுக்கொண்டி ருக்கின்றோம்.

எமது நோக்கங்களாக சூழலை வளப்படுத்தலும் பாதுகாத்தலும், நிலைபேண் அபிவிருத்தி மற்றும் தொடர்ச்சியான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றனவும் காணப்படுகின்றன.

இதன்படி எமது அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட இக்குறுகிய காலத்திற்குள் இதுவரை நான்கு செயற்பாடுகள் செய்துள்ளோம். முதலாவதாக, பருத்தித்துறை காந்தியூர் முன்பள்ளியில் பாலர் வகுப்பு சிறார்களை உள்ளடக்கி அவர்களையும் ஆர்வத்துடன் ஈடுபடவைத்த மர நடுகை செயற்பாடு மற்றும் அச்சிறார்களுக்கான கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தோம்.

இரண்டாவதாக, கரவெட்டி கல்லுவம் பிரதேசத்தில் பனை விதைகள் விதைக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக பனை மற்றும் நிலத்தடி நீர் சம்மந்தமான விடயங்கள் தொடர்பாகவும், இயற்கை விவசாயத்தின் தேவைப்பாடுகள் பற்றியதான விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடனும் கலந்துரையாடல் ஒன்றையும் செயற்படுத்தியிருந்தோம்.

மூன்றாவதாக, மணற்காடு கடற்கரை பிரதேச துப்பரவாக்கல் பணியோடு அமைந்த உயிர்ச்சுழற்சியைப் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடலொன்றும் நடத்தியிருந்தோம்.

இறுதியாக, இந்த வருடத்தின் முதல் வாரம் பருத்தித்துறையில் பொதுவெளி கலந்துரையாடல் ஒன்று ஒருங்கிணைக்கப்பட்டு எமது அமைப்பு தொடர்பான விடயங்கள் மற்றும் சூழலியல் சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கிய நிகழ்வாக முன்னெடுத்திருந்தோம்.

அந்தவகையில், எமது ஒவ்வொரு செயற்திட்டங்களும் கலந்துரையாடலொன்றை உள்ளடக்கியிருப்பதற்குக் காரணமாக, சமூகத்தோடு உரையாடுவதன் மூலமாக நாம் எமது சிந்தனைக்கோணத்தை விரித்துக்கொள்ள முடியும் எனவும், சமூகத்தை சிந்திக்கத் தூண்ட முடியும் எனவும் நம்புகின்றோம்.

தொடர்புகளுக்கு:
https://www.facebook.com/greentrails2018

■ ■ ■









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BUYING OR SELLING

## Residential, Commercial, Land & Investment Properties

*Why choose our team ?*

- Re/Max Realtron is number **#1 in Toronto** (Total Volume Sold Listing and Selling Combined)
- Sathy is ranked in the **Top 0.5%** of all real estate agents in North America
- Comprehensive and multi-media marketing strategy
- Guaranteed **Knowledgeable**, **Efficient**, and **Effective** Real Estate Services.
- Have a **professional team** behind us.
- Guaranteed worry free house selling experience

Call Us for your **Free** Home Evaluation!



**NITHY SATHYAKUMAR**
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

**SATHY SIVASUBRAMANIAM**
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

**HARMONY / TAUNTON** $1,900




**FOR LEASE** BEDROOMS:3 WASHROOMS:3

**ELLESMERE / CONLINS** $1,600



**FOR LEASE** BEDROOMS:2 WASHROOMS:1

**NORTH BLVD/MIDDLE RD** $2,100



**FOR LEASE** BEDROOMS:4 WASHROOMS:3

**LAWRENCE/GALLOWAY** $464,000



**FOR SALE** BEDROOMS:2 WASHROOMS:1

**ELLESMERE/ MORNINGSIDE** $379,500



**FOR SALE** BEDROOMS:2 WASHROOMS:2

**MCCOWAN/401** $539,900



**FOR SALE** BEDROOMS:2+1 WASHROOMS:2

**YONGE/STEELES** $579,000



**FOR SALE** BEDROOMS:2 WASHROOMS:2

**MARKHAM/FINCH** $669,900



**FOR SALE** BEDROOMS:4+1 WASHROOMS:3

**MAJOR MAC/DONALD COUSENS** $679,900



**FOR SALE** BEDROOMS:2+1 WASHROOMS:3

**RALPH CHALMERS / MAJOR MAC** $839,000



**FOR SALE** BEDROOMS:3 WASHROOMS:4

**MAJOR MAC/W.NINTH LINE** $849,900



**FOR SALE** BEDROOMS:4 WASHROOMS:3

**ASHBURN/VIPOND** $853,000



**FOR SALE** BEDROOMS:4 WASHROOMS:3

**BUR OAK/HWY 48** $938,000



**FOR SALE** BEDROOMS:4 WASHROOMS:4

**SW OF 16TH AVE/ MINTLEAF GATE** $959,900



**FOR SALE** BEDROOMS:4 WASHROOMS:4

**WOODBINE/MAJOR MAC** $999,000



**FOR SALE** BEDROOMS:4+1 WASHROOMS:5

**MEADOWVALE/KINGSTON** $549,000



**FOR SALE** BEDROOMS:3 WASHROOMS:3

RE/MAX **Remax Realtron Realty Inc., Brokerage**
Independently Owned And Operated
Bus: 905 470 9800

**Web: realtorsathy.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்ரன் மாநகரசபையின் தமிழ் மரபுத்திங்கள் விழா

பிரம்ரன் மாநகரசபை நடத்திய தமிழ் மரபுத்திங்கள் விழா ஜனவரி 24ம் திகதி மாலை 6:30 மணிக்கு பிரம்ரன் மகநகர சபை மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது. இந்த விழாவில் பிரம்ரன் நகரமுதல்வர் பற்றிக் பிரவுண் உட்பட பல நகரசபை உறுப்பினர்களும் மாநகர, மகாண, தேசிய மட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். அந்த நிகழ்விலிருந்து சில நிழற் படங்கள்.























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# COLLINGWOOD PLACE

By

**Bluesky Properties (Pvt.) Ltd. (Sri Lanka)**

Div. of Engenius Group of Companies (Canada)







- 10 Stories
- 28 Apartments
- December 2018 Completion

*A stylish collection of 28 Modern two & three bedroom Hotel Style Apartments in COLOMBO 6*

**Starting at 19.9 Million SLK (Apx. $175,000)**

**Only 14 left**

**GUARANTEED RENTAL INCOME**

**For More Information Call**

**Sameem Mohamed 416 559 1880**


**Riyaz Rauf 647 283 1966**



Be a part of the fastest growing Century 21 Brokerage...

## Century 21 Innovative Realty Inc.

INDEPENDENTLY OWNED AND OPERATED Brokerage



**Serve more... Earn more... and Keep more...**

## Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Six Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 4 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Three Locations (Scarborough, Ajax and Mississauga)
- Over 250+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...

*within Century21 system

**#7 Office in Canada***

**#9 Company in Canada***

**#15 Office in the World***

**3 Locations to Serve you**

2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
Tel: 416 298 8383

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

1995 Salem Road, Unit 11 & 12
Ajax, ON L1T 0J9
Tel: 905 239 8383

**REAL ESTATE CLASSES**

**STARTING FROM FEB 1ST WEEK**

**CALL 416 298 8383 TO REGISTER**

**Hiring New & Experienced Agents**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரையில் யோகம்

யோகத்தில் இயற்கையோடு ஒத்து எம்மை இயற்கையின் ஓர் அங்கமாக உணர்ந்து எமக்கும் எம்மைச் சுற்றியுள்ள வற்றிற்குமான தொடர்புகளையும் தாக்கத்தையும் உணர்ந்து, இயற்கையால் எமக்கு அளிக்கப்பட்ட சமநிலையைப் பேணி, மனநலத்துடன் எமது சக்தி உடலின் நலத்தையும் பேணி மகிழ்ச்சியுடன் வாழ்வதையே யோக வாழ்க்கை என்கின்றோம்.

இவ்வாறான ஒரு வாழ்க்கை ஒழுங்கான உடல் பயிற்சியுடன், மூச்சுப்பயிற்சியையும் உடல் மற்றும் மனதை ஒழுங்கான ஓய்வு நிலைக்குகொண்டுசெல்லக்கூடிய பயிற்சிகளையும் செய்து நற்சிந்தனையுடன் தியானப் பயிற்சியையும் செய்து வாழ்தலை அடிப்படையாகக் கொண்டது. இவையுடன் ஒழுங்கான உணவு உட்கொள்ளும் ஒழுக்கத்தையும் பெற்று வாழ்வதன் மூலம் யோகக் கலையைச்செய்வதன் பலனை அதிகரிக்கலாம்.

இக்கலையைச்செய்வதற்கு உடம்பு வளையும் தன்மையுடன் இருந்தால் மட்டுமே செய்ய முடியும் என்று பலரும் எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், உண்மையில் இப்பயிற்சியைச் செய்வதனால் வரும் ஒரு பயனே உடம்பில் ஏற்படும் நெகிழ்வுத்தன்மை ஆகும்.

உடம்பில் பிராணசக்தி அதிகரித்து தடையின்றி சீராகப்பாயும் பொழுது உடம்பின் அசைவுகளும் நெகிழும் தன்மையும் அதிகரிக்கும். அத்துடன், மனதும் சுறுசுறுப்புடன் கூர்மையாகச் செயல்படும்.

கதிரையில் இருந்துகொண்டு பல பயிற்சிகளைச்செய்து எம்மால் பல பயன்களைப் பெறமுடியும். கதிரையில் இருந்து செய்யும் பயிற்சிக்கு கவனம்செலுத்துதல் என்பதை முக்கியமானதாக கருத்தில் கொள்ளவேண்டும். உள் உணர்வுகளை கூர்ந்து கவனித்துச்செய்வதன்மூலம் எம்மை நாம் உணர்ந்து பயிற்சியின் பலனை அறிந்து அத்தன்மையைப் பெறமுடிகிறது.

### கதிரையில் இருக்கும் முறை:

- முதுகை நேராக வைத்திருத்தல் அவசியம்.
- தோள்களை ஓய்வாகவும் நேராகவும் வைத்திருக்கவேண்டும்.
- கால்களை அழுத்தி வைக்கவேண்டும்.
- உள்ளங்கைகளை தொடைகளுக்கு மேல் வைத்திருத்தல் வேண்டும்.
- உறுதியான ஒழுங்கான மெத்தை இல்லாத கதிரையில் இருந்து செய்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:

கதிரையில் இருந்து செய்யக்கூடிய யோகப் பயிற்சிகளைச் செய்யும் பொழுது கடைப்பிடிக்கவேண்டிய விதிகளில் சில பின்வருமாறு:

- வெறும் வயிற்றில் பயிற்சிசெய்தல் வேண்டும்.
- மலம் சலத்தை அடக்கிக்கொண்டு பயிற்சி செய்தல் கூடாது.
- காற்றோட்டமான அறையில் இருந்து செய்தல் அவசியம்.
- பயிற்சிக்கு நடுவில் நீர் அருந்தக்கூடாது.
- பாதத்திற்கு அடியில் மிதியடி இருத்தல் நன்று.
- வசதியான பருத்தி உடைகளை அணிந்து செய்தல் நல்லது.
- உடைகள் இறுக்கமாகவோ பயிற்சிக்குத் தடையாகவோ இல்லாமல் தளர்வாக அணிதல் வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் முழுப் பலனையும் அடையலாம். உடம்பின் மையமான முதுகுத் தண்டை மையப்படுத்தி எமது பயிற்சியைக் கட்டமைக்கலாம். முதுகை இயல்பாக முன்னால் வளைக்கலாம், பின்னால் வளைக்கலாம், பக்கவாட்டில் இரு பக்கமும் வளைக்கலாம் இருபக்கமும் திருப்பலாம் அத்துடன் மேல் நோக்கி சிறிது நீட்டிக்கலாம். பச்சிமோத்தாசனம் களின் பயன்களாக நாம் கூறலாம்.

ஆசனம் என்பது ஒரு நிலையில் பெரும் சிரமம் இன்றி சுகமாக அந்நிலையில் குறிப்பிட்ட அளவுநேரம் நிலை நிற்பதே ஆகும். இவ்வாறு கதிரையில் இருந்தபடி பாதத்தை அளுத்திவைத்து மூச்சை வெளியே விட்டவாறு முன்னால் வளைந்து எமது தொடைக்கு மேல் நெஞ்சை வைத்து நாடியை நெஞ்சோடு ஒட்டி கைகளை நிலத்தில் வைத்து முப்பது வினாடி முதல் நாற்பத்தி ஐந்து



> இக்கலையைச் செய்வதற்கு உடம்பு வளையும் தன்மையுடன் இருந்தால் மட்டுமே செய்யமுடியும் என்று பலரும் எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், உண்மையில் இப்பயிற்சியைச் செய்வதனால் வரும் ஒரு பயனே உடம்பில் ஏற்படும் நெகிழ்வுத்தன்மை.

என்னும் இருந்து முன்னால் வளைதல், புசங்காசனம் என்னும் பாம்பாசனம், திரிகோணாசனம் என்னும் முக்கோணாசனம், அர்த்த மச்சேந்திராசனம் என்னும் உடம்பை இருபக்கமும் முறுக்கித் திருப்பும் ஆசனங்கள், கைகளை மேலேதூக்கிக் கும்பிட்டு முதுகுத்தண்டை நீட்டிக்கும் பயிற்சிகளின் நோக்கம் முதுகை நெகிழும் தன்மையுடன் வைத்து சக்தியின் ஓட்டத்தை அதிகரித்து சீர்படுத்துவதே ஆகும். அத்துடன் உள்ளுறுப்புக்களின் செயல்பாட்டையும் துரிதப்படுத்துவதும் இவ்வாசனங் வினாடிகள் பிடித்துக் கொண்டிருப்பதை முன்னால் வளையும் ஆசனத்தால் கிடைக்கும் பெரும் பாலான பலன் கிடைக்கும். இவ்வாறாக பயிற்சிகள் பலவற்றை கதிரையில் இருந்தபடியே செய்யலாம். இன்னொரு உதாரணத்திற்கு கதிரையில் இருந்தபடி அர்த்த மச்சேந்திராசனத்தையும் செய்யலாம். இவ்வசனத்தில் மூன்று திசையில் உடம்பை திரித்து முதுகை முறுக்கின படி நிலை பெற்றிருப்போம். இடுப்புப்பகுதி முன்திசையிலும், நெஞ்சை பக்க வாட்டில் வைத்து, தலையை பின்னால் திருப்பிப் பார்த்தபடி இருப்போம். கைகளின் உதவியுடன் இவ்வாசனத்தைப் பிடித்திருப்போம். இவ்வாசனத்தை கதிரையில் சாய்ந்து இருக்காமல் நேராக நிமிர்ந்திருந்து, மூச்சை வெளிவிட்டவாறு வலது பக்கமாக திரும்பி, தலையை பின்பக்கமாக பார்க்க முயற்சிக்கலாம். வலது பக்கம் திரும்புகையில் வலது கையை உடம்பிற்கு பின் பக்கம் வைத்த படி, இடது கையால் வலது தொடையை வெளிப்பக்கமாகப் பிடித்தும் அல்லது கதிரையில் வலது காலுக்குப் பக்கத்தில் இருக்கும் விளிம்பைப் பிடித்து உடம்பைத் திருப்பியபடி முப்பது வினாடிகளுக்கு இவ்வாசனத்தில் இருக்கலாம். இவ்வாறு இடதுபக்கமும் திரும்பிப் பயிற்சி செய்தல் அவசியம். ஒவ்வொரு பயிற்சிக்கும் அதை சமநிலைப் படுத்தும் மாற்றுப் பயிற்சிகளை செய்வது அவசியம். இப் பயிற்சியால் எமது முதுகுத்தண்டு நெகிழும் தன்மையைப் பெறுவதுடன், முதுகின் வலிமையையும் அதிகரிக்கும், சீரான சக்தியை அதிகரிக்க உதவும், மண்ணீரலில் தேங்கியிருக்கக் கூடிய நச்சுத்தம்மையுடன் கூடிய கழிவுகளை நீக்க உதவுவுதுடன், வாதத்தை சமநிலைப்படுத்தவும் பித்தத்தை குறைக்கவும் உதவியாக இருக்கின்றது. யோக ஆசனப் பயிற்சி என்பது மூச்சில் கவனத்தை வைத்து செய்யப்படும் ஒரு பயிற்சி என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மூச்சை உள்ளே எடுத்தபடி அல்லது மூச்சை வெளியே விட்டபடி ஆசன விதிமுறைக்கு ஏற்றவாறு ஆசனத்தை செய்தல் வேண்டும்.

### நின்று செய்யக்கூடிய பயிற்சிகள்:

நின்று செய்யக் கூடிய பயிற்சிகள் பல உள்ளன. அவற்றுள் சிலவற்றை செய்தால் கால்களை வலிமைபடுத்த உதவும். நின்று செய்யக்கூடிய பயிற்சிகள் எமது உடலின் அத்திவாரப் பகுதியாக கருதப்படும் இடுப்புப்பகுதிக்கு வலுவூட்டும்.

நின்று செய்யக்கூடிய ஆசனங்களுள் சில:

- எளிமைப்படுத்தப்பட்ட பாத காத்தாசனம் என்னும் நின்று முன்னால் வளைதல்.
- எளிமைப்படுத்தப்பட்ட முக்கோண வடிவ ஆசனம்.
- உக்காராசனம் எனப்படும் முழங்கால் களை மடித்தபடி நிற்றல்.
- இயலுமானவர்கள் வீராசனப்பயிற்சியையும் செய்யலாம்.

ஒவ்வொரு ஆசனத்திற்கும் செய்ய வேண்டிய சமநிலைப்படுத்தக்கூடிய மாற்றாசனங்களை, அதே கால அளவில் செய்ய வேண்டும்.

### மூட்டுப் பயிற்சிகள்:

மூட்டை நெகிழ வைக்கவும், சக்தியின் செயல்பாட்டை மூட்டுகளில் அதிகப்படுத்தவும், மூட்டுப்பகுதியில் உள்ள அனைத்துத் தசைகளையும் வலிமைப்படுத்தவும் இப்பயிற்சிகள் உதவும்.

### கண்களுக்கான பயிற்சிகள்:

- ஓய்வான நிலையில் உடலையும் மனதையும் வைத்திருத்தல் வேண்டும்.
- மூச்சு சீரான முறையில் இருத்தல் வேண்டும்.
- இருந்த நிலையில் கண்கள் மேலே பார்க்கவும் பின் நிலத்தைப்பார்க்கவும். (இவ்வாறு ஆறு தடவைகள் செய்யவும்).
- தலையைத்திருப்பாது கண்களை வலது பக்கம் இடதுபக்கம் பார்க்கவும். (இவ்வாறு ஆறு தடவைகள் செய்யவும்).
- கடிகார எண்கள் பக்கமாகவும் கடிகார எண்கள் மறுபக்கமாகவும் கண்களைச் சுழற்றவும். (இவ்வாறு ஆறு தடவைகள் செய்யவும்).

தொடர்தல் 24ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College



You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

BUSINESS ADMINISTRATION
26 Weeks Diploma

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
Immediate Job Opportunities
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges

FOOD SERVICE ASSISTANT
Week End Classes
Starts Jan. 26th, 2019

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks Dipolma

PERSONAL SUPPORT WORKER (PSW)
Immediate Job Opportunities
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

Second Career candidates & International Students Welcome

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016, Access 2016
Quick Books 2017
Sage 50 Accounting 2017
Sage 300 2017, Auto CAD
First Aid & CPR
Food Handler Certification

- 100% Instructor Led Training
- Student Friendly Environment
- Placement Assistance
- Small Class Sizes
- Ample Free Parking
- TTC Accessible

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# கதிரையில் யோகம்...

23ம் பக்கத் தொடர்ச்சி...

- பயிற்சி முடிந்தபின் உள்ளங்கைகளை ஒன்றோடொன்று உரசி கண்களில் வைக்கவும். உரசும் பொழுது வரும் சூடு கண்களுக்கு வலுச் சேர்க்கும்.

**கழுத்திற்கான பயிற்சி:**

உடல் நேரான நிலையில் இருக்க தலையை மட்டும் அசைக்கும் பயிற்சி. மூச்சை வெளியே விட்டவாறு தலையை வலது பக்கமாக முழுமையாக திருப்பவும். மூச்சை உள்ளே எடுத்தவாறு நேரான நிலைக்கு வரவும். மூச்சை வெளியே விட்டவாறு தலையை இடது பக்கமாக முழுமையாக திருப்பவும். மூச்சை உள்ளே எடுத்தவாறு நேரான நிலைக்கு வரவும். இப்பயிற்சியை 3 தடவைகள் செய்யலாம்.

மூச்சை வெளிவிட்டவாறு நாடியை நெஞ்சுப்பகுதிக்கு கொண்டுவரவும். மூச்சை உள்ளே எடுத்தவாறு தலையை வலது தோள் புறமாகச் சாய்த்தவாறு பின்புறமாக கொண்டு செல்லவும். இந்நிலையில் முகம் மேலே பார்த்தவாறு இருக்கும். மூச்சை வெளியே விட்டவாறு தலையை இடது தோள் பக்கமாகச்சாய்த்து நாடியை நெஞ்சுப்பகுதிக்குகொண்டு வரவும். இந்நிலையில் முகம் நிலத்தைப் பார்த்து இருக்கும். இதேபோல் மறுப்பக்கமும் சுழற்றவும். இப்பயிற்சியை ஆறு தடவைகள் செய்யலாம்.

**தோள்களுக்கான பயிற்சி:**

- இயல்பான மூச்சுடன் தோள்களை முன்னோக்கிச் சுழற்றவும். இதனை ஆறு முறை செய்யவும். அதையையே பின்னோக்கியும் செய்யவும்.
- தோள்களை மூச்சை உள்ளே எடுத்தவாறு மேலே தூக்கவும். மூச்சை வெளியேவிட்டவாறு இறக்கவும். இப்பயிற்சியை ஆறு தடவை செய்யவும்.
- விரல் நுனிகளை ஒன்றாக இணைத்து (சமானமுத்திரை) முழங்கைகளை நேரான நிலையில் வைத்து கைகளை முன்பக்கமாக சுழற்றவும். இதனை ஆறு முறை செய்யவும். அதையையே பின்னோக்கியும் செய்யவும்.
- மூச்சை உள்ளே எடுத்தவாறு கைகளை மேல்நோக்கி உயர்த்தவும், மூச்சை வெளிவிட்டவாறு கைகளை கீழே கொண்டு வரவும்.
- மூச்சை உள்ளே எடுத்தவாறு கைகளின் விரல்களை நீட்டியவாறு கைகளை இருப்பக்கமும் நீட்டி விரல்களை ஒன்றாக சேர்த்து முழங்கைகளை மடித்து விரல் நுனிகளால் தோள்களைத் தொடவும். இந்நிலையில் முழங்கைகளை முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் சுழற்றவும்.

**கைகளுக்கான பயிற்சி:**

- வேகமாக விரல்களை நீட்டி மடித்தல்.
- கணுக்கைகளை முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் சுழற்றவும்.
- மூச்சை உள்ளே எடுத்தவாறு கைகளை பக்கவாட்டில் மேலே தூக்கி உள்ளங்கைகளை ஒன்று சேர்க்கவும். மூச்சை வெளியே விட்டவாறு கைகளை கீழ் நோக்கிக் கொண்டுவரவும்.
- மூச்சை உள்ளே எடுத்தவாறு கைகளை விரித்த நிலையில் இருபக்கமாக நீட்டி மேலே மெதுவான நிலையில் கொண்டு செல்லவும். மூச்சை வெளியே விட்டவாறு மெதுவாக கீழே கொண்டுவரவும். இப்பயிற்சியை ஆறு தடவை செய்யவும்.

இப் பயிற்சியைச் செய்வதுடன் யோகக் கலை ஆசிரியரிடம் சில மூச்சுப்பயிற்சி-களையும், எளியசில முத்திரைப்பயிற்சி-களையும் கற்றுச்செய்வது நல்லது. இவற்றுடன் ஒழுங்கான ஓய்வெடுக்கும் பயிற்சியையும் செய்தல் வேண்டும்.

■ ■ ■

யோகசாலை
ஒரு வளமான சமுதாயத்தை நோக்கி
உடல், மனம் மற்றும் ஆத்ம நலம் பேண
ஆசனப்பயிற்சி
மூச்சுப்பயிற்சி
தியானம்

- சிறுவர்கள் ஆர்வமாக கற்றுக் கொள்ளும் முறையில் அமைந்த யோகா வகுப்புக்கள்
- இளையோருக்கான சிறப்பு குறுகிய கால அறிமுகப்பயிற்சி வகுப்புக்கள்
- ஆரம்ப மற்றும் ஆழ்நிலை வகுப்புக்கள்
- முதியோர் நலம் பேணும் சலுகைக்கட்டண வகுப்புக்கள்

பதினைந்து வருட பயிற்சி அனுபவம் பெற்று
உலகப் பிரசித்தி பெற்ற சிவானந்தா அமைப்பில்
பயிற்றுவிற்கும் ஆசிரியர்கள்

யோகசாலையை ஒரு யோகசமூக சாலையாக
உருவாக்க நீங்களும் இணையவும்

தொடர்புகளுக்கு
Tel: 647 760 8156
Email: yogasalai108@gmail.com
Address: 210 Silver Star Blvd, Unit 850, Scarborough, ON
(Midland Ave/ Finch Ave E)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் வதை - Elder Abuse

- குமார் புனிதவேல் -

உலகில் மாற்றம் ஒன்றே நிரந்தரமானது. அம்மாற்றங்கள் சில சமயங்களில் சக(+) வாகவும் சில சமயங்களில் சய(-) வாகவும் அமைகின்றன. நான் சிறு பையனாக இருந்த வேளை மனிதனின் வாழ்நாள் அண்ணளவாக அறுபதாக இருந்தது. இன்று என் வயது முதிர்ந்த வேளை அது எண்பதாக உயர்ந்துள்ளது. இதனை ஒரு சக(+)மாற்றம் என்று குறிப்பிடுவேன். ஆனால் அதுவே வாழ்க்கையில் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு நான் இன்னுமொரு விடயத்தை குறித்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது ஒய்வூதியம் பெறும் வயதும் கூடிக் கொண்டு செல்கிறது. இது ஒரு சகமாற்றம்தானே? மாற்றங்கள் ஏற்படுகையில் சிக்கல்கள் ஏற்படுவது இயல்பு. ஒரு இடைப்பட்ட தலைமுறை தமக்கு முந்திய தலைமுறையையும் பிந்திய தலைமுறையையும் பராமரிக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உள்ளார்கள். இந்த இடைப்பட்ட தலைமுறையானவர்கள் பல இடைஞ்சல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆரோக்கியமாக முதிர்ச்சியடைபவர்கள் தனித்து வாழ்வதற்கே விரும்புகின்றனர். இந்நிலையில் இடைப்பட்ட தலைமுறையினர் முந்தியவர்களுடையதும் பிந்தியவர்களுடையதுமான வைத்திய, ஆரோக்கியத் தேவைகளைக் கவனிக்க வேண்டியுள்ளது. சிறுவயதில் தமது பிள்ளைகளைப் பிள்ளை பராமரிப்பு இடங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் விடும் அதே காலகட்டங்களில் முதியவர்களை அவர்களின் ஆரோக்கியத்திற்காக அங்காடிகள், முதுமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதுடன் வைத்தியத்தேவைக்காக வைத்தியசாலைகளுக்கும் வைத்தியரிடமும் அழைத்துச் செல்லவேண்டிய நிலையில் உள்ளார்கள். தற்போதைய காலகட்டத்தில் ஆணும், பெண்ணும் வேலை செய்ய வேண்டிய அவசியமும் உள்ளது. இதனால் இவர்கள் அதிக மனஉளைச்சல் உடையவராகக் காணப்படுகிறார்கள்.

இவர்கள் இவ்வுணர்வுகளின் விளைவினால் முதியோர்களைத் தம்மை அறியாமல் வதைப்படுத்துகிறார்கள். முதியவர் வதை என்பது திடீர் எனத் தோன்றும் விடயம் அல்ல. சிறுசிறு நிகழ்வுகளில் ஆரம்பித்துக் காலப்போக்கில் தமது ஆளுமையை செலுத்தி, தம்மில் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தமக்குச் சாதகமாக பாவித்து, வதைக்கு உள்ளாகும் முதியவர்களின் விருப்பு வெறுப்புகளை உதாசீனம் செய்வதாக மாறுகிறது.

இவர்கள், தாம் விரும்பாத ஒரு பொருளை வாங்குவதற்கு முதியவரை நிர்ப்பந்திப்பார்கள். அவர் அதனை வாங்காதவிடத்து அவருக்குக் குற்றவுணர்வு ஏற்படும் விதத்தில் நையாண்டி செய்வர். இச்செய்கை, இதனைப் பார்க்கும் மூன்றாமவர் மனதில் வெறுப்பைத் தோன்றுவிக்கும். இத்தகைய செய்கைகளை உளவியல் வன்முறை எனக்குறிப்பிடுவேன். அடுத்த நிலை சிறு சிறு அங்கச் சேட்டையாகத் தொடங்கி, முதியவர்களைத் தள்ளி விடுவது என வளர்ந்து பின் காதைத்திருகுவது, அடிப்பது வரை செல்லலாம்.

### பாடையில் மேடை கட்டும் கலாச்சாரம்:

நான் அறிந்த தகவல் ஒன்றை தருகின்றேன். ஒரு தாயானவள் வீட்டில் பகல் வேளைகளில் தனியாக இருக்கும்போது, மகனும் மருமகளும் தரையில் சுண்ணக்கட்டியால் கோடு வரைந்து (chalk lines), அந்தப் பகுதிக்குள் செல்லக் கூடாது எனக் கட்டளை இட்டிருந்தார்கள். அதே மகனும் மருமகளும் அந்த அம்மையார் இறந்த வேளை ஊரைக் கூட்டி வெகு விமரிசையாக இழவு வீட்டைச்செய்தார்கள். இதனைப் 'பாடையில் மேடை கட்டும் கலாச்சாரம்' எனச்சொல்லலாமா? முதியவர்வதை பெருமளவு நெருங்கிய உறவினர்களால் அதாவது பிள்ளைகள், மருமக்களால் இடம் பெறுகிறது. ஆனால் வதைக்கு உட்படுத்தப்பட்ட முதியவர்கள் அதனை உலகுக்கு எடுத்துச் சொல்லத் தவறி விடுகிறார்கள். காரணம் தமது குழந்தைகளை இழிவு படுத்துவது தமக்கு இழிவு என அவர்கள் கருதுவதே. திருவள்ளுவர் காலம் முதற்கொண்டு நாம் வளர்த்து வந்த மனப்பான்மை இது. 'எமது குழந்தைகள் குறைவுடன் காண்பதற்குத் தாமே காரணம் என எண்ணுவதே' எனத் திருவள்ளுவர் தனது 114வது குறளில் குறிப்படுகிறார்.

*தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தால் காணப்படும்.*

மேலும் தம்மை வதைப்படுத்துபவர் தயவில் தாம் தங்கி இருப்பதனால், அவர்களின் அந்த விடயத்தை உலகுக்குத் தெரிவிப்பதனால் தனக்குக் காட்டப்படும் சிறு அனுசரணையும் இல்லாது போய்விடும் என்ற அச்சமும் ஒரு காரணமாகும்.

முதியவர்கள் சில சந்தர்ப்பங்களில் முதியோர் இல்லங்களில் தங்கி இருப்பார்கள். இத்தகையோரில் சிலர் அங்குள்ள அனுசரணை ஊழியர்களின் வதைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் முதியவர்கள் பாடுபட்டுத்தேடிய செல்வம் திட்டமிட்டு அவர்களின் உறவுகளால் திருடப்படுகின்றன. இதனை நிதித்திருட்டு வன்முறை எனக் குறிப்பிடலாம். அவர்களின் வங்கிக் கணக்கில் தமது பெயரை இணைத்து, பின்னர் அவர்களின் செல்வத்தை சிறுகச் சிறுகக் கையாடுவது பல இடம் பெறுகிறது. சில சந்தர்ப்பங்களில் சட்டத்தரணியின் மூலம் அவர் முடிவுகளை எடுப்பதற்கான உரிமங்களைப் பெற்று அதன் மூலம் சொத்துகளைத் தமதாக்கிக் கொள்வதுமுண்டு.

முதியவர்வதை என்பது பராமரிப்பின்மை, தனிமைப்படுத்துவது, உரிய வேளையில் உணவு கொடாதிருப்பது, உரிய வைத்தியத்திற்கு அழைத்துச் செல்லாதிருப்பது, பராமரிப்புக்குத் தக்க ஏற்பாடு செய்யாதிருப்பது முதலானவையும் அடங்கும்.

> “ முதியவர்வதை என்பதில்
> பராமரிப்பின்மை, தனிமைப்படுத்துவது,
> உரிய வேளையில் உணவு கொடாதிருப்பது,
> உரிய வைத்தியத்திற்கு
> அழைத்துச் செல்லாதிருப்பது, பராமரிப்புக்குத்
> தக்க ஏற்பாடு செய்யாதிருப்பது
> முதலானவையும் அடங்கும். ”



பாராமுகமாயிருப்பதென்பது உடல்வதையால் ஏற்படும் வேதனையிலும் கொடியது. அசட்டையாய் இருப்பது போல அவமதிப்புச் செய்வதும், பலர் முன்னிலையில் முதியவர் செய்த சிறு தவறை பூதாகாரமாக சுட்டிக்காட்டி அவமதிப்புச் செய்வதும் மனோரீதியான வதையாகும். இப்படிச் செய்வதால் முதியவர்கள் தமது தன்னம்பிக்கையை இழக்கிறார்கள். அந்நிலையில் பராமரிப்பவர்கள் தமது காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

முதியோர் வதைகளையும் காரணங்களையும் பார்த்தோம். இனி, அதன் தாக்கத்தையும் அவற்றைத் தவிர்க்கும் வளிமுறைகளையும் கவனிப்போம்.

- பொதுவாக உடல் வதைகள் இடம் பெறுவதன் தடயங்களாக உடலில் கீறல், கண்டல் காயங்கள் காணப்படலாம். மேலும் சில சந்தர்ப்பங்களில் சுளுக்கு, எலும்பு முறிவு போன்றவற்றையும் காணத்தக்கதாயிருக்கும்.
- மனோநிலை வன்முறை இடம்பெறும் வேளையில் முதியவர்களின் நடைபாவனையில் மாற்றமும் மறதிக்குணமும் பெரிதும் காணப்படும். பொதுவாகப் பலர் இதனை முதுமையின் விளைவு எனக் கொள்வதுண்டு. அது தவறு.
- எப்போது ஒரு முதியவரை மரியாதைக் குறைவாக யாராவது பேசுகிறார்களோ அங்கு முதியவர்வதை இடம்பெறுவதாகக் கொள்ள வேண்டும்.
- முதியவர் வங்கிக்கணக்கில் இருந்து காரணம் இல்லாமல் கையிருப்புப் பணம் குறைவது மற்றும் வீடுகளில் பணம் காணாமற் போவது நிதிவன்முறையின் தடயமாகக் கொள்ளலாம்.
- பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் உடல் வதைகளைப் போலவே காயங்கள் இருக்கக்கூடும். உள்ளாடைகளில் இரத்தக்கறை காணப்பட்டாலும் கவனிக்க வேண்டும்.
- பாராமுகம் முதியவரைப் பராமரிப்பவர்களால் ஏற்படுகிறது. பராமரிப்பவர், மற்றவர்கள் முதியவருடன் கதைப்பதை அல்லது அவரைப் பார்க்க வருபவரை தவிர்ப்பதாய் இருக்கலாம்.

முதியவர் வதையை எப்படித் தவிர்க்கலாம் எனப் பார்ப்போம்.

பிழை பிடிப்பது எளிது, அதை தவிர்ப்பது சிறப்பு. எனவே இவற்றை கவனமாக வாசியுங்கள்.

- முதியவர்களைத் தனிமைப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அது அவர்களுக்கு வேதனையையும் தனிமையையும் தாழ்வு மனப்பான்மையையும் கொடுக்கும்.
- முதியவர்களுடன் தொடர்பில் இருங்கள். அவர்கள் நடைமுறையில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதில் அவதானமாயிருங்கள்.
- முதியவர்களை சுறுசுறுப்பாய் வைத்திருங்கள் சுறுசுறுப்பானவர்கள் வதைப்படுவது குறைவு.
- முதியவர்களைச் சமயம் மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- முதியவர்கள் மூர்க்கக்குணம், மற்றும் கோபக்காரர்களுடன் வசிப்பதனை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



kumar.punithavel@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை அறிவுறுத்தும் கருவிகள் / Smoke Detectors

- வேலா சுப்ரமணியம் -

தீ விபத்து ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் எமது உயிர்களைக் காக்கும் தோழனாகச் செயற்படக் கூடியவை smoke detectors. அதாவது நெருப்பின் வேகம் அதிகரிக்க முன்னதாகவே இவை எமக்கு அத்தகைய ஆபத்தை அறிவுறுத்துவதால் நாம் எமது உயிரைப் பாதுகாக்கும் விதத்தில் வெளியேறவோ அல்லது மாற்று நடவடிக்கைகளை எடுக்கவோ வழி கோலுகின்றன. கனடிய பாதுகாப்புச் சபையின் விதிமுறைகளுக்கு அமையவும்(Canada Safety Council) கனடிய சுகாதார அமைச்சின் (Health Canada) நியமங்களுக்கு அமைவாகவும் ஒரு வீட்டில் உள்ள ஒவ்வொரு தளத்திலும் நல்ல நிலையில் இயங்கக் கூடிய, ஆகக் குறைந்தது ஒரு புகை அறிவுறுத்தும் கருவியாவது பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்மாடிக் கட்டடங்களாக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு குடியிருப்பு அங்கத்திலும் (Each Apartment unit) இத்தகைய புகை அல்லது நெருப்பை அறிவுறுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் மிக அவசியம். தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.

ஆனால், எம்மவர் மத்தியில் பலரிடமும் அலட்சியப் போக்கே காணப்படுகின்றது. பொரியல் செய்வதற்காகவும், சாம்பிராணி கொழுத்துவதற்காகவும், புகை பிடிப்பதற்காகவும் இயங்கிக்கொண்டிருக்கும் இத்தகைய கருவிகளை நிரந்தரமாக கழற்றிவிடுவதும் அல்லது அதற்குரிய பற்றறிகளை கழற்றி விடுவதும் ஒரு பழக்கமாகவே

**வீடும் விடியலும் - 152**

காணப்படுகிறது. இவற்றைக் கண்டு பிடித்தால் அபராதம் விதிக்கப்படலாம் என்பது ஒருபுறமிருக்க, இத்தகைய அசட்டைத்தனம் சிலவேளைகளில் விலை மதிக்க முடியாத உயிராபத்தைக்கூட ஏற்படுத்திவிடும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே ஒவ்வொரு வீட்டுரிமையாளரும் ஒவ்வொரு தளத்திலும் குறிப்பாக படுக்கை அறைக்குச் சமீபமாகவும், சமையலறைக்குச் சமீபமாகவும் இத்தகைய கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்வதோடு அவற்றை கிரமம் தவறாது பராமரித்து வரவேண்டியதும் மிக அவசியமாகும்.

2016ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதியிலிருந்து புகையை அறிவுறுத்தும் கருவி வீட்டின் ஒவ்வொரு தளத்திலும் பொருத்தப்படவேண்டும் என்பது ஒன்ராறியோவில் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. தவறுபவர்களுக்கு கண்டுபிடிக்கப்பட்டால் அபராதம் விதிக்கப்படும் என்பது ஒரு புறம் இருக்க, இத்தகையை தவறுகளினால் வருடா வருடம் எத்தனை பேரின் உயிர்கள் வீணாகப் பலியாகின்றன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

கடந்த ஒரு மாதத்திற்குள் 2 சிறுவர்கள் உட்பட நால்வர் Oshawa விலும் இருவர் Brighton லும் ஒருவர் Tottenham லும் பரிதாபமாக நெருப்பில் அகப்பட்டு இறந்துள்ளனர். கடந்த பெப்ரவரியில் ஒரே குடும்பத்தில் மூவர் Bramptonல் பலியாகி உள்ளனர். இன்னும் பலர் பல இடங்களிலும் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஏன் இத்தகைய அனர்த்தங்கள், தவறுகள் நடக்கின்றன?

### அறியாமை:

புகை அறிவுறுத்தி கருவியின் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பது ஒரு முக்கிய காரணம். வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும்



இத்தகைய கருவிகள் ஏன் பொருத்தப்பட்டிருக்கின்றன. எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றி குடியிருப்போர் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம்.

### கவலையீனம்:

பலருக்கும் இது பற்றித் தெரிந்திருந்தாலும் இதனைப்பற்றி பெரிதுபடுத்தாது இருப்பது அல்லது அசமந்த போக்கு என்பது மற்றொரு புறம். அதாவது முக்கியம் என்று தெரிந்தாலும் சுவையான சமையலுக்காக இவற்றைக் கழற்றி விடுவார்கள். ஆனால் மீண்டும் பொருத்துவதில் அக்கறை காட்டுவதில்லை.

வீட்டில் சாம்பிராணி, தீபம் போன்ற பூசைகளுக்காகவும் பலர் இவற்றைக் கழற்றி விடுவதை அவதானித்திருக்கிறேன். 'மிக விரைவில் மேலே போவதற்கான பிராத்தனை'யாக இது இருக்கும் என்பதை இவர்கள் கண்டு கொள்வதில்லை.

### பராமரிப்பு:

புதிய வீடுகளில் புகையறிவுறுத்தும் கருவிகள் வீட்டில் உள்ள பிரதான மின் இணைப்புடன் பொருத்தப்பட்டிருக்கும். இதனால் காலத்திற்குக் காலம் மின்கலங்களை (Batteris)மாற்ற வேண்டியிருக்காது. ஆனால் மின்னிணைப்பு இல்லாமற்போகும் பட்சத்திலும் இயங்குவதற்காக(Backup) பற்றரிகள் தேவைப்படலாம் அவற்றைக் காலத்திற்குக் காலம் மாற்றுதல் வேண்டும்.

பழைய வீடுகளில் மின்கலங்களில் இயங்கும் புகை அறிவுறுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு தடவை மின் கலங்களை மாற்றுவதில் கவனம் செலுத்தவேண்டும். கோடைகால, மாரிகால நேர மாற்றத்தின்போது தவறாது இவற்றை மாற்றுதல் சிறந்த நடைமுறையாக இருக்கும்.

புகையறிவுறுத்தும் கருவிகள் தூசு பிடித்துப் போவதால் அவை செயலற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன. மாதம் ஒரு முறையாவது இவற்றை Vacuum செய்து சுத்தப்படுத்தவேண்டியது மிக அவசியம்.

பலரும் இவற்றைச் சுத்தம் செய்யத் தவறுவதால் தற்போது வரும் புதிய கருவிகள்



தூசு பிடித்ததும் சத்தமிடும் விதத்தில் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். ஒரு வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் புகையறுவுறுத்தும் கருவிகள் அல்லது காபனோரொக்சைட்டை அறிவுறுத்தும் கருவிகள் ஆயுட்காலம் வரைக்கும் சரியாக வேலை செய்யும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இவை முதல் 5 வருடங்களுக்கு மட்டும்தான் சரியாக இயங்கக் கூடியது என அதன் உற்பத்தியாளர்கள் அறிவுறுத்தி உள்ளதுடன் இதனைக் கண்காணிக்கும் பொருட்டு பொருத்தப்படும் திகதி அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### இவற்றை எப்போது மாற்றுதல் வேண்டும்?

புகையறுவுறுத்தும் கருவிகளில் பச்சை நிற விளக்கு எரிந்து கொண்டிருப்பதை பலரும் அவதானித்திருக்கலாம். இது மின்வளம் இருப்பதை அறிவுறுத்துகிறதே தவிர அதன் செயற்பாட்டை உறுதிப்படுத்தவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும். அவற்றில் இருக்கும் Test Buttonஐ அழுத்தினால் சத்தம் போடுவதை அவதானிக்கலாம். இதனை ஒரு அடிப்படை சோதனைமுறை என எடுக்கலாமே தவிர இது முற்றிலும் சரியான அல்லது உறுதியான சோதனை முறை அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளவும். Toronto தீயணைக்கும் படையினரின் அறிவுறுத்தலின் படி மாதம் ஒருமுறை Test Button மூலம் அவற்றை சுத்தம் செய்யும் போது சரிபார்த்துக் கொள்ளலாம் எனவும், வருடம் ஒரு முறையாது உண்மையான புகைமூலம் 'Burn and Smoke Without Flame' பரீட்சித்தல் அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மறுவார்த்தைகளில் கூறுவதனால் எம்மவர்க்கு இலகுவாகக் கிடைக்கக்கூடிய பரீட்சைக்கான கருவி 'ஊதுபத்தி' என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பொதுவாகக்கூறுவதானால் 10 வருடத்திற்கு ஒருமுறையாவது இத்தகைய கருவிகளை முற்றாக மாற்றி விடுதல் அவசியம். பிரதான மின் இணைப்புடன் பொருத்தப்பட்டதாயினும் சரி, பற்றறியில் இயங்குபவையாக இருந்தாலும் சரி 10 வருடத்திற்கு ஒருமுறை மாற்றி விடுதல் சிறந்தது எனப் பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இவற்றில் இருக்கும் Sensor காலப்போக்கில் செயல் இழந்து போவதால் இவற்றை மாற்றுதல் அவசியமானது.

காலத்திற்குக் காலம் மாகாண அரசோ மத்திய அரசோ மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு புதிய புதிய சட்டங்களைக் கொண்டுவந்தாலும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி நலன்பெறும் பொறுப்பு குடியிருப்பாளர்களின் கையிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு தளத்திலும் புகையறுவுறுத்தும் கருவி பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று 2006ல் கொண்டு வரப்பட்ட சட்டம் தற்போது ஒவ்வொரு படுக்கையறைக்கும் உரிய கட்டட நியமமாக மாற்றப்பட்டிருக்கிறது. தற்போது கட்டப்படும் புதிய வீடுகளில் இவற்றை அவதானிக்க முடியும்.

ஒரு சிறிய அளவிலான பணத்தைக் காலத்திற்குக்காலம் செலவழிப்பதன் மூலமும், ஒரு சிறிய நேரத்தை ஒதுக்கி இவற்றைப் பராமரிப்பதன் மூலமும் விலை மதிப்பற்ற உயிர்களைக் காக்க ஒவ்வொருவரும் கவனம் எடுப்போம் என உறுதிகொள்வோமாக.

'Test your smoke alarms monthly with smoke. Models that have a test button also Need to be tested monthly with smoke because the test button may only tell you that the buzzer works, and not necessarily that the smoke–sensing mechanism is functioning'.



velasubramaniam@thaiveedu.com

வீட்டுப் பரிசோதகர் ஒரு வீடு விற்பனை முகவரானால்

வீடு வாங்க:



வீடு விற்க:



வாங்கப்போகின்றீர்களா?
- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய்க் கிடைக்கும்
- வாங்கிய பின் ஏமாற்றங்கள் இருக்காது
- வளம்சேர்க்கும் வாழ்நாள் முதலீட்டின் முதற்படி

விற்கப்போகின்றீர்களா?
- விற்கமுன் வீட்டின் பிழைகள் களைய இலவச ஆலோசனை
- விற்றபின் வரும் தடங்கல்களை விற்கமுன் தவிர்க்கலாம்
- விற்றபின் வரும் பெறுமதி இழப்புக்களைத் தடுக்கலாம்
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதியை ஈட்டலாம்

நம்பிக்கை, நாணயம்
10 வருட வீட்டுப் பரிசோதனை அனுபவத்தடன் கூடிய ஒரு வீடு விற்பனை முகவர்

Highest Standard Agents... Highest Results!



Vela Subramaniam B.A. (Hons)
Experienced Home Inspector
Sales Representative
Direct: 416 786-0760
vela4homes@gmail.com
www.dreamgtahomes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416 264-0101 Fax: 905 201-9229
205 - 7 Eastvale Dr, Markham, ON. L3S 4N8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THANA INSURANCE INC

உங்கள் பிள்ளைகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு இன்றே Thana Insurance Inc ல் முதலீடு செய்யுங்கள்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலக் கல்விக்காக கனடிய அரசு இனாமாக வழங்கும் மானியத் தொகைகளை பெற்றிடுங்கள்

கனடிய அரசு முதலீட்டு தொகைக்கு 20 - 40% மானியமாகவும்ஊக்குவிப்பு தொகையாக ஆரம்பத்தில் 500 கனடியன் டொலர்களும் வருடாந்தம் 100 கனடியன் டொலர்களும் வழங்குகிறது.

இவற்றுடன் மேலதிகமாக எமது காப்புறுதி நிறுவனம் மட்டுமே 15 வீதத்தை வழங்குகிறது.
இந்த மானியங்களை 25 டொலர் முதலீட்டுடனேயே பெற ஆரம்பிக்கலாம்
உங்கள் பிள்ளை புலமைப்பரிசில் பெற்றாலோ மேற்படிப்பைத் தொடரா விட்டாலோ முதலீட்டுப் பணம் தாயிடம் கொடுக்கப்படும்.
திட்டம் முடிவடையும் போது உங்கள் முதலீட்டுக்கு 100 வீதம் உத்தரவாதம்.



Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416.728.5772
office : 416.519.3896
80 Nashdene Road #D218
Toronto ON M1V 5E4

THANA INSURANCE Inc.

வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

# Excellent plaza for Sale



## தரம் மிக்க நிறுவனங்கள் சிறந்த முதலீடு!

முதன்மை வாய்ந்த இடம்,
பெருமளவு வாடிக்கையாளர்களை
உள்ளடக்கிய வணிகச் சுற்றாடல், அனைத்துப்
பொருட்களையும் கொண்ட உயர்வான
பராமரிப்பில் பேணப்பட்ட நிலையம்,
போதிய வாகனத் தரிப்பிட வசதி,
ரொறன்ரோவில் இருந்து
30 நிமிடத் தூரம் மட்டுமே.

## Cell: 416 880 8585

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
#3-1286 Kennedy Rd, Scarborough, ON M1P 2L5



416 270 1111

BASKARAN SINNADURAI
BROKER
Cell:416.880.8585
baskaran.toronto@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வீட்டையே சொந்தவீடாக மாற்றலாம் / Rent to Own

பல ஆண்டுகளாகவே தொடர்ந்தும் வாடகை வீட்டிலேயே குடியிருந்து வரும் நம்மவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று வீடு தேடி அலைந்து வீடு மாறுவது கொஞ்சம் வேதனைக்குரிய விடயம்தான். அவர்கள் சொந்தமாக வீடு ஒன்றை வாங்கிக் குடியேறாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். போதிய முற்பணம் (Down Payment), நிரந்தரமான வேலை, வருமானம், நல்ல நம்பிக்கை மதிப்பெண் (Credit Score) இல்லாதிருத்தல் அல்லது இவைகளெல்லாம் இருந்தும்கூட சிலருக்கு அந்தப் பொறுப்பை எடுக்கத் தயக்கம் இருத்தல் அல்லது 'சொந்தவீடு ஒரு சுமை' எனப் புரிந்துகொள்ளல் போன்றவை காரணமாக இருக்கலாம்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வீடு விற்பனைத்துறையில் இருப்பதாலும் இது சம்பந்தமாக பல தரப்பட்டவர்களுடன் பழகிய அனுபவம் உண்டு என்பதாலும் அவற்றை இங்கு பகிர்ந்து கொள்ளலாம் என்பது என் நோக்கம்.

பொருளாதார ரீதியில் வெற்றி கண்டவர்களில் 90%க்கு மேற்பட்டவர்கள் (கனடாவில் மாத்திரமல்ல, உலகளாவிய ரீதியில்) Real Estate சொத்தில் முதலீடு செய்தே செல்வம் சேர்த்தவர்கள். மிகுதி 10% ஆனவர்கள்தான் சம்பள வருமானத்திலோ, சுய தொழில் மூலமாகவோ முன்னுக்கு வந்தவர்கள்.

சொந்தமாக ஒரு வீடு: இதை நன்கு ஆராய்ந்து பார்த்தால்... எவருக்கும் இருக்க ஒரு இடம் தேவை. அது சொந்த வீடாக இருந்தால் மனநிறைவைத்தருவது உண்மை. விரும்பிய மாதிரி அந்த வீட்டை நீங்கள் அழகுபடுத்தலாம். இடவசதி கூடத்தேவையெனின் அவ்வீட்டின் முடிக்காத பகுதிகளை உ+ம் Basementஐ செய்து முடிக்கலாம். அல்லது ஒரு பகுதியை Addition / Extension ஐக் கூட்டிக் கட்டலாம்.

அடிக்கடி இடம் மாறத் தேவையில்லை. இதனால் பல நன்மைகள். பிள்ளைகள் பாடசாலைகளை மாற்றத் தேவையில்லை. அவர்களது சிறுவகுப்பு நண்பர்களை இழக்கத்தேவையில்லை. தொடர்ந்து ஒரு சுற்றாடலில் வசிக்கும் போது சுற்றாடலைப் பற்றிய புதிய பயம் தோன்றாது. அயலவர்களே உங்கள் வீட்டையோ, பிள்ளைகளையோ கவனிக்கக்கூடிய சூழ்நிலைகளும் உங்களுக்கு இருக்கும்.

சொந்தவீடு ஒன்றை வாங்கி வசிக்கும் போது நீங்கள் கட்டும் வீட்டுக்கடனில் வட்டி போக மிகுதி ஒரு பகுதி சேமிப்பாக மாறுகிறது. 25 வருடத்தில் உங்கள் கடன் முடிந்து வீடு உங்களுக்குச் சொந்தமாகி விடுகிறது. இடையில் உங்களுக்கு பிள்ளைகளின் படிப்புப் செலவுக்கோ, உங்களின் மருத்துவச் செலவுக்கோ பணம் தேவைப்படின் அந்த வீட்டினிலேயே கடன் எடுக்கும் வசதியும் உண்டு. அது மாத்திரமல்ல ரொறன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவது யாவரும் அறிந்ததே. காரணம் வெளிநாட்டவர்களும் அவர்களின் பிள்ளைகளும் கனடாவில் விரும்பிக் குடியேறும் முக்கிய நகரம் ரொறன்ரோ. ஆதலால், வீட்டின் விலைகள் தேவை அதிகரிப்பு (demand) இருப்பதால விலையேற்றம் தவிர்க்க முடியாததாகவே உள்ளது. இவ்விலையேற்றமும் உங்கள் சொத்து மதிப்பை (Asset Worthy) அதிகரிக்கவே செய்கிறது.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின் வாடகை என்றுமில்லாதவாறு பெரிதாக அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வருடத்தில் 15 - 20% அதிகரிப்பை அவதானித்தோம். சொந்த வீடு உள்ளவர்களை இது பாதிக்கவில்லை என்பது ஒரு நல்ல விடயம்.

1989ல் வீட்டுக்கடன் வட்டிவீதம் 12% இருந்தது அதற்கு முன் 1980 வருடப்பகுதியில் 21% வரை இருந்ததாம். இப்போது இருக்கும் வட்டிவீதம் அவற்றுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவானது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

வீடு வாங்கும்போது முக்கியமான விடயம் இடத்(Location)தெரிவு என்பார்கள். ஆனால் அதைவிட இன்னுமொரு முக்கியமான விடயம், வீட்டை வாங்கும் தருணம் (Timing).

முதலிட முற்பணம் (Down Payment) இல்லாதவர்கள் உறவினர்களிடம் நண்பர்களிடம் உதவிக்கடன் கேட்டு முதலிடலாம். பிள்ளைகள் வேலை செய்பவர்களாக இருந்தால் அவர்கள் Line of Credit மூலம் கடன் பெற்று உதவலாம். உங்கள் Credit, வேலை, வருமானம் நல்ல நிலைமையில் இருந்தால் சில வங்கிகள் முதலிடும் முற்பணத்திற்குத் தனியாக ஒரு கடனைத் தந்து, மீதிக்கு வீட்டுக்கடனாக முழுவதையுமே




வழமையில் குளிர் மாதங்களில் - நவம்பர் முதல் ஏப்பிரல் வரை வீடு விற்பனை குறைவான காலமாகும். விற்றாக வேண்டும் என்ற கட்டாய தேவை உள்ளவர்கள் விற்கப் போடும் வீட்டை நன்கு பேரம் பேசி வாங்கக் கூடிய தருணம் தான். ஆகவே சரியான தருணத்தில் இது. வீட்டைப்பார்த்து வாங்குவது கவனிக்கப்படவேண்டிய ஒன்று. முதன் முறையாக வாங்க நினைப்பவர்களும் சரி, இருக்கும் வீட்டை விற்றுவிட்டு பெரிதாக ஒன்றை வாங்க நினைப்பவர்களும் சரி இத்தருணத்தை பாவிப்பது நல்லது.

சொந்த வீடு வைத்திருப்பவர்கள் அடையும் இன்னுமொரு நன்மை. விடு விலையேறும் போது அவர்கள் முதலிட்ட பணத்திற்கு மாத்திரமல்ல வங்கி உங்களுக்கு கடனாகத்தந்த பணத்திற்கும சேர்த்தே விலையேறுகிறது உ+மாக $800,000 விலையான ஒரு வீட்டை $100,000 முதலீட்டுடன் ஒருவர் வாங்கினார் என வைப்போம். வீட்டின் விலை 3 வருடத்தில் 15% விலையேறினால் அந்த வீட்டின் விலை $920,000 ஆக உயர்ந்திருக்கும். இதன்படி பார்த்தால் அவரது முதலீடு 3 வருடத்தில் $120,000 ஆல் அதிகரித்திருக்கிறது. அது அவருடைய முதலீட்டுக்கு வருடத்திற்கு 40% வளர்ச்சியாகும். இது போன்ற வளர்ச்சி எந்த ஒரு பங்குச் சந்தையிலும் கிடைக்காத ஒன்றாகும். அது மாத்திரமல்ல அந்த வீட்டை விற்று லாபம் எடுத்தாலும் அதற்கு வருமான வரி கட்டத்தேவையில்லை என்பது இன்னுமொரு நல்ல விடயமாகும்.

இக்கட்டுரையின ஆரம்பத்தில், வீடு வாங்காமல் பின் போடுவதற்கான காரணங்கள் சில கூறினோம். அவற்றைச் சிறிது கவனிப்போம்.

தங்களுடைய Credit ஐச் சரியாகப் பராமரிக்காதவர்கள் விடயத்திற்கு வருவோம். இவர்கள் ஒரு வீட்டுக் கடன் அல்லது வீட்டு முகவரை அணுகி ஆலோசனை கேட்பது நல்லது. Credit என்பது சரிசெய்ய முடியாத ஒரு விடயமே அல்ல. உங்கள் Credit ஐ எப்படி நல்ல நிலைக்கு மீட்கலாம் என் பதை அனுபவமுள்ள முகவர்கள் உங்களுக்கு சொல்லித் தருவார்கள்.

தரும் சந்தர்ப்பங்களும் உண்டு. வீடு கை மாறும் போது உள்ள சட்டத்தரணிக்குக் கொடுக்க வேண்டிய செலவுகளும் இதர சிறு செலவுகளும் உங்கள் சொந்தப்பணமாக இருத்தல் அவசியம்.

வீடு ஒரு சுமை என நினைத்து பொறுப்பு எடுக்கத் தயங்குபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் சொந்தமாக வீடு வைத்திருக்கும் தங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் கலந்துரையாடுதல் நல்லது. அவர்கள் அனுபவிக்கும் நன்மை, தீமைகளை அறிந்தால் முடிவெடுக்க உதவும். அவர்கள் சொந்த வீடு ஒன்றை வாங்கியிருப்பதால் முன்னுக்கு வந்திருப்பதாக அறிந்தால் இவர்களும் அதில் ஊக்கம் கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர் 30 வருடங்களாக கனடாவில் வாழ்கிறார். அவர் ஒரு தொடர்மாடி வாடகைக்கட்டடத்தில் வசித்து வருவது தெரியும். இக்கட்டுரையை எழுத ஆரம்பித்ததும் அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அவர் அவ்வாழ்க்கையில் என்ன நன்மை தீமைகளை அனுபவிக்கிறார என வினவினேன். அவர் சொன்ன விடயங்களை அப்படியே தருகிறேன்.

- தானும் மனைவியும் மாலைநேர வேலைக்குச் செல்லும்போது, பேத்தியார் தான் பிள்ளைகளைக் கவனிப்பா. Fire Alarm அடித்ததும் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு படியால் கீழ் இறங்கிப் பின் ஏறுவதற்குள் தான் படாதபாடு பட்டுவிடுவேன் என்பது பாட்டியின் முறைப்பாடு.
- கீழே Laundry க்கு போனால் சப்பாத்துகளையும் மிகவும் அழுக்கான மிதியடிகளையும் Washing Machine க்குள் போடுகிறார்கள். அதனுள் நாங்களும் பிள்ளைகளின் உடுப்பைப் போட்டுத் தோய்க்க சங்கடமாக இருக்கும்.
- பிள்ளைகள் தங்கள் நண்பர்களை வீட்டுக்கு கூட்டிவருவதைத் தவிர்க்கிறார்கள். தாங்கள் வசிக்கும் கட்டடம் துப்பரவாக இல்லை என்று நினைப்பது தான் காரணம்.
- கடையிலிருந்து பொருட்களை வாங்கி வந்தால் மேலே முழுவதையும் கையில் தூக்கிச் செல்லும் போது சில சமயம் சிரமமாக இருக்கும்.
- ஒரு நிகழ்ச்சி (Function) என்றால் விருந்தினர்கள் வந்து வாகனங்களை நிறுத்

- கரு. கந்தையா -

துவதற்குக் கஸ்டப்படுவதைப் பார்க்கிறோம்.

- மற்ற தொடர்மாடி வாடகைக் கட்டடங்களிலிருந்து கரப்பான், மூட்டைப் பூச்சி, எலிகள் மற்றும் சமையல் மணம் வருவதும் தடுக்கமுடியாத ஒன்றாயுள்ளது.
- சில சமயங்களில் மேல்வீட்டாரின் தண்ணீர்க்குழாய்களின் ஒழுக்கு நமது வீட்டுக்குள்ளும் வந்ததுண்டு.
- வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதும் சில இடங்களில் சிரமமாக இருக்கின்றது. வாகனங்கள் உடைக்கப்படுவதும் களவாடப்படுவதும் சில தொடர்மாடிக் கட்டடங்களில் சாதாரணமான விடயங்களாகும்.

இவை அவர் சொன்னவிடயங்கள் இதை விடவும் மேலும் பல அசௌகரியங்கள் இருக்கக்கூடும்.

### வாடகைக்கு இருக்கும் வீட்டை எப்படி சொந்தமாக்கலாம்:

விடு வாங்க விரும்பும் சிலருக்கு நல்ல வேலை வருமானம் இருந்தும் Credit Score, Down Payment போதிய அளவு இல்லாது இருக்கலாம். இவர்கள் இந்த அணுகு முறையைக் கையாண்டு வெற்றி பெறலாம். ஒருவருடத்துள் தங்கள் Credit ஐயும் Down Payment ஐயும் சரி செய்துவிடலாம் என்று நம்புபவர்கள் Rent to Own முறையில் வீட்டை வாங்க அனுபவமுள்ள வீட்டு முகவர்களை அணுகி வெற்றி காணலாம்.


வீட்டை விற்பவருக்கு உடனடியாகப் பணம் தேவையிருக்காத பட்சத்திலும் வாடகைக்கு ஒருவருடத்துக்குக் கொடுத்துவிட்டு வருட முடிவில் கை மாற்ற ஒத்துக்கொள்ளும் வீட்டுச்சொந்தக்காரர்களுடன் வாடகைக்கு இருந்து கொண்டு வீடு வாங்கும் முறையிலான ஒப்பந்தத்தை எழுதிக் கொண்டால் சரி.

வீடு விற்பனை மந்தமாக இருக்கும் காலங்களில் இதற்கு வீட்டுச் சொந்தக்காரர்கள் சிலர் ஒத்துக்கொள்ள வாய்ப்புண்டு. இதை இரு வெவ்வேறு முறைகளில் செய்யலாம்.

- Deposit ஆக பணத்தை கொடுத்து ஒரு வருடத்திற்கு வாடகை மாதம் எவ்வளவு என்று ஒத்துக்கொண்டு வருட முடிவில் என்ன விலைக்கு வாங்குவது என்பதைத் தீர்மானித்து இப்போதே ஒப்பந்தத்தில் எழுதிக்கொண்டு வாங்குவது.
- Deposit க்கு போதிய பணம் இல்லாத இடத்து, மாத வாடகையை விட மேலதிகமாக ஒவ்வொரு மாதமும் ஒரு தொகையைச் சேர்த்துக்கொடுத்து, ஒருவருடத்தில் கொடுக்கப்பட்ட மேலதிக பணத்தை Deposit ஆக மாற்றி அந்த வீட்டை ஒத்துக்கொண்ட விலையில் வாங்குவது.

ஆக வாடகைக்கு இருக்க ஒரு வருடத்துக்கு வீடும் கிடைத்தாயிற்று. அவ்வருடத்துள் தங்கள் நிலைமையை நன்கு ஆக்கிய தும் வீட்டை வாங்கிக்கொள்ளும நிலைமையும் ஆகிவிட்டது.

உங்கள் வாடகைப்பணத்தில் இன்னொருவரின் Mortgage ஐ கட்டாமல், உங்கள் சொந்த வீட்டின் Mortgage ஐக் கட்டலாமே என்பது தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம்.



karu@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARE YOU TIRED OF DOING THE SAME JOB AND LOOKING FOR A CAREER CHANGE ?

**Beta College இல்**

CNC / Electrical துறைகளில் வேலைவாய்ப்புக்கான வகுப்புக்கள்

OFFICE / ACCOUNTING வேலைகளுக்கான வகுப்புக்கள்

ELECTRICAL LICENCE PRE EXAM COURCES -309A /442A

RESTAURANT MANAGEMENT COURSES

EI, Maternity எடுத்தவர்கள் $28000 வரை பெற வாய்ப்பு

உங்கள் உறவினர் நண்பர்கள்
கனடாவில் மேல் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்புகள்
( Now Accepting International students )

வாரம்தோறும் FOOD HANDLER CERTIFICATE க்கான வகுப்புகள்
ஒரே நாளில் CERTIFICATE வழங்கப்படுகிறது .
தமிழிலும் பரீட்சை எழுதலாம்



**DIPLOMA COURSES**
CAD/CAM TECHNOLOGY
- Autocad / Solidworks/ Inventor/Mastercam/CNC Programming
AUTOMATION TECHNOLOGY
- PLC/HMI/VFD/ Industrial
COMPUTERIZED ACCOUNTING
FOOD SERVICE WORKER
OFFICE ADMINISTRATION
ACCOUNTING AND PAYROLL

**Certificate Courses**
Video Editing
Sound Editing
Photoshop
QUICK BOOK
SIMPLY ACCOUNTING
MS OFFICE - word /Excel / outlook
COMPUTER PROGRAMMING - C++ / JAVA/ PYTHON/SQL

**beta College**
of Business & Technology

2347 Kennedy Road, Suite 301, Toronto ON, MIT 3T8, Canada
www.betacollege.ca, info@betacollege.ca
**416 449 beta (2382)**
(Approved as a private career college under the Private Career College Act 2005)



# OUR FREE SERVICES / WHY? REALTOR KATHIR

## For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

**LOW Commission**

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

**SELL WITH KATHIR & GET MAX. PRICE**

**Buy with Kathir & Get Dream Home**

**HomeLife/Future Realty Inc.,**
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

**Kathir Kathirgamanathan** B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசி

- சி. நற்குணலிங்கம் -

இன்றைய சிறார்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. 'இளமையில் கையாளும் வாசிப்புப் பழக்கமே கல்விக்கு அடித்தளம்' என்பதை சிறார்களுக்கு உணர்த்தி, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவேண்டும். வாசிப்பு என்பது மௌனமான முறையில் நிகழ்கின்ற ஓர் உரையாடல் போன்றது. வாசிப்பானது பொருள் உணர்ந்து, ஆழமாக, நிதானமாக, பரந்துபட்டு நேசித்த நூல்களை வாசிக்க வேண்டும். அப்போது தான் அவை மனதில் ஆழமாகப் பதியும். வாசிப்பில் ஈடுபடும் போது மனிதனை மனிதனாக மாற்றக்கூடிய நூல்களை நேசித்து வாசியுங்கள் பயன் பெறுவீர்.

தற்போதைய சமூகம் அறிவு மையச் சமூகமாகும். சவால்கள் நிறைந்த சமூகமாகும். இவற்றுக்கு ஈடுகொடுக்க கல்வி மட்டும் போதாது, வாசிப்பின் மூலம் பெற்ற அறிவும் அனுபவமும் தேவை. வாசிப்பும் கற்றலின் ஒரு பகுதி என்பதை உணர்வதுடன் வாசிப்புக்கு நேரம் ஒதுக்கி நேசித்து வாசித்து, வாசிப்பின் சுகங்களை அனுபவியுங்கள். பூரணமனிதராக மாற்றமடைவீர்கள்.

அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ள 21ம் நூற்றாண்டுக்கு ஈடு கொடுத்து வாழ வாசிப்பு அவசியமானதாகும். வாசிப்பின் மூலம் பலரது பல்வேறு வகையான அனுபவங்களை பெற்றுக்கொள்ளமுடியும். வாழ்வின் வெற்றி தோல்விகளின் சுகங்களை அறிந்துகொள்ள, பல்துறைசார் அறிவைப் பெற்றுக்கொள்ள, அவை மூலம் நமது வாழ்க்கைப் போக்கில் மாறுதல்களையும் திருத்தங்களையும் ஏற்படுத்தி சீர்வாழ்வில் ஈடுபட முடியும்.

வாசிப்பை இளமை முதல் முறையாக நேசிக்கத் தவறியமைதான் இன்றைய கலாசார சீரழிவுகளுக்கும் ஒரு காரணமாக அமைகின்றது. வாசிப்பின் மூலம் உளநலம் சீரடைவதுடன் பண்பட்ட மனிதராக மிளிரவும், சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவும், அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளவும், சமூகத்துக்கு ஏற்புடையதான மனப்பாங்குகளை விருத்தி செய்யவும், ஆளுமை விருத்தி பெறவும், அறிவு வளம் பெறவும், அதன்வழி மனித நேயம் தோன்றவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்துகொள்ளவும் அதன் வழி வாழவும் வாசிப்பு உதவுகின்றது. எனவே வாசிப்பை நேசியுங்கள்.

சமூகத்தில் ஆரோக்கியமான விழிப்புணர்வு விதைக்கப்பட வேண்டும். விரிவான சிந்திப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். தனியாள் அகத்தடைகள் வெற்றி கொள்ளப்பட வேண்டும். இவை இலகுவாக வாசிப்பின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு சிறு பராயம் முதல் ஊட்டவேண்டும். இவற்றின் மூலம் தவறான எண்ணங்கள் சீரமைக்கப்படும். எதிர்கால வாழ்வு சிறக்கும். சீரழிவற்ற சமுதாயம் தோற்றம் பெறும்.

வாசித்துக்கொண்டேயிரு பல கல்விமான்களதும் அனுபவசாலிகளதும் அறிவை, அனுபவங்களை பகிர்ந்துகொள்ள முடியும். அவை உனது வாழ்வுக்கு விடிவெள்ளி. கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னைக்கொன்றுவிடும். கண்ணைத் திறந்துபார் நீ அதை வென்றுவிடலாமென அப்துல்கலாம் கூறினார். 'உழைத்துப் பிழைக்கவேண்டும். உழைப்பு நின்றுவிட்டால் பிழைப்பு படுத்துவிடும். நுழைந்து சாதனை புரிய மனதிலே உழைக்கும் எண்ணத்தை பதியவை' எனக் கல்விமான் ஒருவர் கூறியுள்ளார். உழைப்பையும் விடாமுயற்சியையும் மூலதனமாகச் செலுத்தி வாழ்வில் வெற்றி காணலாம். அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் உலக வரலாற்றில் அழியாத இடம்பெற்றதற்கு அடிப்படைக் காரணம் அவரது இடைவிடாத உழைப்பும் விடாமுயற்சியுமாகும்.

இவ்வாறான நல்ல விடயங்களை வாசியுங்கள். மாறாக ஆபத்தான பாலியல் தொடர்புகள், புகைத்தல், மது, போதைப்பழக்கம் போன்ற நலிவியல் விடயங்களில் அறிவை வளர்க்கக்கூடாது. ஒவ்வொரு மாணவரும் வாசிப்பை நேசிக்கவேண்டும். வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படும் காரியமாக ஆகிவிடுவது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து விடும்.

வாசிப்பு என்பது மௌனமான முறையில் நிகழ்கின்ற ஓர் உரையாடல் போன்றது. இன்று நேரத்தை வீணடிக்கப் பல வடிவங்களில் பொழுதுபோக்குகள் உருவாகி வாசிப்பை நோகடித்துள்ளன. நேரத்தை நிர்வகிக்கும் உத்திகளில் இன்று கைபேசிகளும், இணையமும் முக்கிய இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளன. அதீத இணையப் பாவனையானது இளைய சமுதாயத்தை பாதிக்கிறது. இணையப்போதை, இணையத்துக்கு அடிமையாதல், இணையப் பாவனை நோய் எனப் பல்வேறு பெயர்களில் இப்பிரச்சினையை பெயரிடுகிறார்கள். இவை மன உளைச்சல், மனவிரக்தி, பொருளாதாரப் பாதிப்பு என்பவற்றையும் தோற்றுவிப்பதாக ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. இத்துடன் தொலைக்காட்சியை அதிக நேரம் பார்ப்பதால் ஆயுள் குறையும் என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியிப்பட்டுள்ளது. எனவே இவைகளில் உள்ள நாட்டத்தைக் குறைத்து வாசிப்பில் உங்கள் நேரத்தை செலவு செய்யுங்கள். குனிந்து வாசிப்பவர் எப்போதுமே வாழ்வில் நிமிர்ந்து நிற்பார். வாசிப்பை நேசிக்கின்றவர்கள் பட்டியலில் உங்கள் பெயரும் இடம் பெறும்வண்ணம் இருக்க இன்றே வாசிப்பை சுவாசியுங்கள்.

'வாழ்நாள் முழுவதும் வாசித்துக் கொண்டே இரு' என்ற சொற்றொடரானது ஒவ்வொருவருக்கும் ஏற்றதாகும். எவரொருவர் வாசிக்காதவராக இருக்கிறாரோ அவர் மனதில் அறியாமை என்ற தூசி படிந்திருக்கும். மனித வாழ்வியல் மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் வாசிப்பு என்ற செயற்றிறனை ஊக்குவிக்குமுகமாக பல்வேறு நாடுகளில் ஐப்பசி மாதக் காலப்பகுதி வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாசிப்பு வாழ்வியலின் ஒரு பகுதியான செயலுருவாக அமைய வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். வாசிப்பை நேசித்த மனிதர்கள் சிறந்த அறிவுடைமையையும், கல்வியையும் பெற்று வாழ்வியல் நெறியில் முழுமை பெறுகின்றனர். நெப்போலியன் 5 வயதில் இருந்தே வாசிப்பை நேசித்த மனிதர். போருக்கு செல்லும் போதும்கூட வாசிப்பிற்காக முக்கிய நூல்களை எடுத்துச் செல்வதை நெப்போலியன் வழக்கமாகக் கொண்டிருந்தார். புத்தகத்தை இரவல் வாங்கி வாசித்த ஆப்ரகாம் லிங்கன் பின்னாளில் அமெரிக்க அதிபரானார். இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்த ஜவகர்லால் நேரு உறங்க ஒதுக்கிய 5 மணி நேரத்திலிருந்து தினந்தோறும் 2 மணி நேரத்தை திருடி வாசிப்புக்கு செலவு செய்துவந்த ஒருவர். வாசிப்பின் மகத்துவத்தைப் புரிந்ததால்தான் நஞ்சு கொடுக்கப்படும் நேரம்வரை கிரேக்க நாட்டுக் கவிதைகளை படித்துக் கொண்டிருந்தார் சோக்கிரடீஸ். தூக்குக் கயிறு முத்தமிடும் வரை வாசித்துக்கொண்டிருந்தார் உமாமுக்தர். தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும்வரை வாசித்துக்கொண்டிருந்தார் பகவத்சிங். படுக்கிற இடம் கூட படிக்கிற இடத்துக்கு அருகில் கேட்டார் அண்ணல் அம்பேக்கர். இவர்கள் வாசிப்பை நேசித்ததால் இவர்களை நாம் இன்றும் சுவாசிக்கிறோம்.


“ 'வாழ்நாள் முழுவதும் வாசித்துக்கொண்டே இரு' என்ற சொற்றொடரானது ஒவ்வொருவருக்கும் ஏற்றதாகும். எவரொருவர் வாசிக்காதவராக இருக்கிறாரோ அவர் மனதில் அறியாமை என்ற தூசி படிந்திருக்கும். ”



நூல்கள் மனிதரின் அறிவை வளர்க்கும் அமுதசுரபிகளாகும். பலரின் வாழ்க்கையை மாற்றியமைத்தவையும் நூல்களே ஆகும். நல்ல நூல்கள் நல்ல நண்பர்களுக்கு சமமாக விளங்குகின்றன. ஒருவர் தேடி எடுத்து விரும்பிப்படிக்கும் நூல்களைக்கொண்டே அவரின் குணநலன்களை அறிந்துகொள்ளலாம், என உளவியல் அறிஞர்கள் கூறுவர். வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப் படுத்தப்படின் அது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துவிடும். இசையில் நாட்டமுள்ள பிள்ளைகளுக்கு வாசிப்பிலும் நாட்டத்தை இலகுவில் ஏற்படுத்த முடியும். அமெரிக்காவிலுள்ள மனோதத்துவ சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமூலம் தொடர்ச்சியான முறையில் இசையை கற்றுவருவதன் மூலம் வாசிப்பு ஆற்றல் உட்பட மொழி விருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் மூளையில் மாற்றம் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. எனவே இசையினூடாகவேனும் வாசிப்பு வளரட்டும்.

சிறந்த கருத்துப்புனைவை மேற்கொள்ளும் நூல்கள் எமக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளன. வாசிப்பு பழக்கமென்பது அருமையான சுவை என்பதுடன் அழகான பசியும்கூட. ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்தும் உணர்வாய் உய்வுற்று எமைத் தொடர்ந்து வரும். வாசிப்பதற்கு ஓரளவேனும் ஆர்வமும், வாசிப்பதனால் நன்மையே தவிர தீமை இல்லை என்பதான எண்ண மேலீடுகளும் எம்மிடையே ஏற்பட வேண்டும். வாசிப்பு என்பது புதியதொரு உலகத்தின் சாளரங்களைத் திறந்து காட்டும் அதிசயக் கண்ணாடி. பல்பரிமாணமுடைய புதிய அரிய தகவல்களை அள்ளித்தரும் அட்சயபாத்திரம். நாடுகளின் எல்லைகளைச் சுருக்கி உலகத்தை நுகரும் அனுபவத்தைக்கொடுக்கக்கூடிய புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல. ஆனால் அவை என்றென்றும் உயிரோடிருக்கின்றன. சிறந்த நூல்களைப் படிப்பது சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த மனிதர்களுடன் பேசுவதற்கு ஒப்பாகும். சிலர் வாசிப்பை இழந்து விட்டு அறிவைத் தேடுகிறார்கள். ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி என்றார் ஜூலியஸ் சீசர். உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு என்றார் சிக்மண்ட் பிராய்ட். புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே என்றார் லெனின். நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றார் ஆப்ரகாம்லிங்கன். இவ்வாறான புத்தகப் பொன்மொழிகள் கூட ஆரம்பகாலத்தில் மக்கள் மனதை ஈர்த்து வாசிப்பில் நாட்டத்தை தூண்டியுள்ளன.

நூல்களின் இருப்பிடமான நூலகம் சென்றும் வாசிப்பில் ஈடுபடலாம். நூலகங்கள் அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோல். வீட்டுக்கொரு நூலகம், வீதிக்கொரு நூலகம் என்பது அண்ணா புரட்சிக்கவியின் எண்ணங்களாகும். இன்று நூலகப் பயன்பாடும் வீழ்ச்சியை நோக்கிப் போகும் ஒரு நகர்வாகவே காணப்படுகிறது. நூல்கள் எங்கள் ஆசான்களாகும். ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளங்களாகும். வாசிப்பிலுள்ள உயிரோட்டத்தையும் அதனால் கிடைக்கும் புத்துயிர்ப்பையும் இளம் சமூகம் பெற்றுக்கொள்ள ஏப்ரல் 23 சர்வதேச புத்தக தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



natkunalingam@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dedicated & Trusted
Real Estate Agent
with 20 years of experience!

BUYING
SELLING
LEASING
RESIDENTIAL, COMMERCIAL
& INVESTMENT PROPERTIES

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE
LANDMARK
Brokerage
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc
Real Estate Sales Representative
Call me 416 - 616- 8751



HOMELIFE HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7

Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com



With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987

New Location

Digital Prints from 16"x20" to 40"x60"
- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined



BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழர் மரபு விழாவில் 'கள்ளழகன்' வில்லிசை

- வயிரமுத்து திவ்வியராஜன் -

மார்கழி கையசைத்து விடை கொடுத்து தைமகளை வணங்கி வரவேற்கும் காலம் 2019. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது பழமொழி. நாம் வாழும் கனடிய தேசம் தை மாதத்தினை தமிழர் மரபுரிமை மாதமாக சிறப்புச்செய்து தமிழர்களை கௌரவித்துள்ள சூழலில் மாகாண அரசுகளும், கல்விச்சபைகளும், பொது அமைப்புக்களும் தமிழர் மரபினைச் சிறப்பாகக்கொண்டாடி வருகின்றன. உலகம் முழுவதும் இந்தக் கொண்டாட்டங்கள் பரவி வருகின்றன. தமிழரின் தொன்மையையும், சிறப்புக்களையும் உலகம் இப்போது முன்னையை விடக் கூடுதலாக அறிந்து வருகின்றது. இதற்கு உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழர்களின் வாழ்வும், அந்தந்த நாடுகளின் பல்கலாச்சாரச் சூழல்களும் வழங்கப்படும் வாய்ப்புக்களும் சாதகமாக இருக்கின்றன.

தை 13, 2019 அன்று ஸ்காபறோவில் Mary Ward Catholic Secondary கல்லூரியில் நாடு கடந்த தமிழீழ அரசின் கனடாக் கிளையினர் கொண்டாடிய தமிழர் மரபு விழாவில் இளஞ்சிறார்களின் கலைநிகழ்வுகளுடன் சோக்கெல்லோ சண்முகம் குழுவினர் 'கள்ளழகன்' என்னும் வில்லிசை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. இந்த வில்லிசையைக் கலைஞர் மெலிஞ்சிமுத்தன் எழுதி நெறிப்படுத்தியிருந்தார். தமிழர் வாழ்வில் சொல்லப்படாத கதைகளைச் சொல்லுவது ஒருவகையில் வரலாற்றுத் தேவையும் ஆகும். அதனை 'கள்ளழகன்' வில்லிசை செய்திருக்கிறது. அந்த வகையில் இதில் பங்கேற்ற அனைத்துக்கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.






சோக்கெல்லோ சண்முகம் அவர்களுடன் வேந்தன், குகன் தம்பி, கணியன் பிறேமகாந்தன், கிளாறா சாந்தி, மொறின் கமலநாதன் மெலிஞ்சிமுத்தன், கனி விமலநாதன், கில்டா பிறேமகாந்தன் ஆகியோரும் அணிசெய் கலைஞர்களாக ஹார்மோனியம் - பத்திநாதன் விஜயநாதன், தபேலா - வல்லிபுரம் இராஜ்குமார், தாளம் - நளினி குகசீலன், உடுக்கு - அதிபர் சின்னத்தம்பி ஆகியோரும் மேடையை அலங்கரித்தனர்.

தமிழ் வனப்பின் பாடலோடு தந்தனத்தோம் தொடர்ந்தது.

'குளிரங்கி அணிந்தாள்' - எங்கள் மொழியழகி. கனல் அவள் உடல் - மோகக்கலை அவள் குழல். கூன்விழாத முதுகு நிமிர்த்திப்பார் அளந்தாள். வேரிழந்து வந்தோர்க்குச் சோர்வறுத்தாள். செம்மொழி எனக் கண்சிமிட்டிச் சிரித்தாள். அங்கதப் புன்னகையால் ஆன்மா வருடி இங்கு வந்தாள் வில்பூட்டி.

*'சொல்கூடக் காமம் போலச்*
*சுடுகுதடி உனைச் சொல்ல*
*தமிழே நீ தாயல்ல நித்திய காதலி'*

என்று தமிழைப் போற்றித் தொடர்ந்த வசனங்களும் சோக்கல்லோவின் ஆத்மார்த்தக் குரலில் இலக்கியத்தரம் மிகுந்ததாக பார்வையாளர்களை நிமிர்ந்து இருக்கவைத்தன. 'கள்ளழகன்' பெயரே வித்தியாசமாக இருந்ததால் பார்வையாளர்கள் அக்கறையோடு கதை கேட்கத் தொடங்கியதைக் காண முடிந்தது.

'கள்ளழக'னுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் தாய் இறந்துபோக 'கள்ளழகன்' தனது பிள்ளைகள் இருவரையும் நன்றாகப் படிக்கச்செய்து சமூகத்தில் பெரியவர்கள் ஆக்க வேண்டும் என்று கடுமையாக உழைக்கின்றார். மார்க்சியக் கருத்துக்களாலும் ஈர்க்கப்படுகிறார். சாதி, பேதமற்ற சமத்துவ சமுதாயத்துக்குமாகப் பாடுபடுகிறார். சாதிமான்கள் இவரை ஒதுக்கிறார்கள்...நாட்டுச்சூழல்...விடுதலை இயக்கங்கள்... போராட்டங்கள்...இரண்டு பிள்ளைகளும் இரண்டு வெவ்வேறு இயக்கங்களில் இணைகிறார்கள். இயக்க முரண்பாட்டில் அண்ணனைச் சுடுமாறு தம்பிக்கு உத்தரவு... இறுதி யுத்தத்தில் தம்பியும் இறந்து போகிறான். இரண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்த தந்தை 'கள்ளழகன்' இறுதியில் பிச்சைக்காரனாக நலிந்த உடலோடு கையேந்தி நிற்கிறார்.

இதுவே கதை. 'கதை கற்பனை' என்று சொல்லப்பட்ட போதும் இதுபோன்று பல கதைகள் எமது ஈழதேசத்தில் பல இடங்களிலும் நடந்திருக்கின்றன. கதை கேட்ட எங்களின் கண்கள் நடந்து முடிந்து போன யுத்தகால நிஜங்களை நினைத்து பனித்தன. மனம் கனத்தது.

பாடல்கள் இனிமையாகவும், சுருதி பிசகாமலும் இருந்தன. பிரதான பாடகரான மெலிஞ்சிமுத்தன் தான் சிறந்தபாடகரும் கூட என்பதை இங்கும் நிரூபித்தார். இணைந்து பாடிய பாடகி மொறின் கமலநாதன் அவர்களும் மிகவும் சிறப்பாக இணைந்து பாடினார். ஹார்மோனியம் வாசித்த பத்திநாதன் விஜயநாதன் அவர்கள் நாடறிந்த நாட்டுக்கூத்துக்கலைஞர் என்பதும், மெலிஞ்சிமுத்தனின் தந்தையார் என்பதும் குறிப்பிடத்தக்கது. உடுக்கு வாத்தியத்தை இசைத்த அதிபர் சின்னத்தம்பி அவர்கள் பல்துறை வித்தகர்.

ஒருசில குறைபாடுகளுக்கு அப்பால் சொல் புதிதாய், பொருள் புதிதாய், நயம் புதிதாய், சமூகநலன் நோக்கிய வில்லிசையாய் 'கள்ளழகன்' எங்கள் நெஞ்சங்களில் நிறைந்தார். சோக்கெல்லோ வில்லடிப்பாட்டுக்குழுவினரின் கலைத்தொண்டு தொடரட்டும். வாழ்த்துவோம்.



thiviyarajah@thaiveedu.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொன்றியல் நகரில் தமிழ் மரபுத் திங்கள் விழா

தைமாதத்தின் மரபுத்திங்கள் நிகழ்வுகள் கனடாவில் பல்வேறு இடங்களில் இடம்பெற்றாலும், அனைத்திற்கும் முன்னுதாரணமான நிகழ்வாக, கனடாவில் மட்டுமல்ல புலம்பெயர் தேச வரலாற்றிலேயே முதன்முறையாக மொன்றியல், கியூபெக்கில் உள்ள முப்பத்திரண்டு தமிழ் அமைப்புக்கள் 'ஒற்றுமையே எங்கள் பலம்' எனும் கோட்பாட்டில் ஒன்றிணைந்து நடத்திய ஒரு பெருவிழா, ஜனவரி 13, 2019 ஞாயிறு அன்று, இலக்கம் 3500 Boulevard du Souvenir, Laval ல் அமைந்துள்ள Le Château Royal மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

மண்டபத்தில் பார்க்கும் இடமெங்கும் நம் பாரம்பரிய கலாச்சார உடைகளுடன் 1500 க்கு மேற்பட்ட நம்மவர்கள் நிறைந்திருந்தார்கள்.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் தைப்பொங்கல்

மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் வருடாந்தத் தைப்பொங்கல் கொண்டாட்டம் வெள்ளிக்கிழமை 18.01.2019 ஆமடேல் மண்டபத்தில் (Armadale Community Centre, 2401 Denison Street, Markham) நடைபெற்றது.










# மொன்றியலில் நடைபெற்ற 'ஆத்ம ஜோதி' நூற்றாண்டு விழா

மொன்றியல் ஆத்ம ஜோதி இணையத்தினால் மார்கழி மாதம் 01ம் நாள் சனிக்கிழமை, 'ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழா 2018' கொண்டாடப்பட்டது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் பொங்கல் விழா

வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டுக் கழகத்தினரின் பொங்கல் விழா வோட்டர்லூ வட்டார மக்களினால் கடந்த ஜனவரி 20, 2019 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல், Waterloo Christ Church மண்டபத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.






# வெஸ்ட் ஐலண்ட் தமிழ்ச் சமூகத்தின் ஒன்று கூடல்

வெஸ்ட் ஐலண்ட் தமிழ் சமூகத்தின் மத்தியில் வாழும். நலன் விரும்பிகளின் கூட்டமைப்பில், எமது சமூகத்தின் இடையே நிலவும் கருத்து வேறு பாடுகளை களைந்து, நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் 'ஒன்று கூடலும் இராப்போசன விருந்தும்' சனிபுறாக்கில் அமைந்துள்ள 'அங்கோறியா சனசமூக நிலைய'த்தில் நடைபெற்றது.

நகைச்சுவை விருந்து, அனைத்து வயதினருக்குமான பொழுதுபோக்கு, போட்டி நிகழ்ச்சிகள், பரிசில்கள் என்று சிறப்பாக நடைபெறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழன்: மிகப்பெரிய கோள்


- எஸ். பத்மநாதன் -

வியாழன் (Jupiter) சூரியனிலிருந்து ஐந்தாவதாக அமைந்துள்ள கோள் ஆகும். சூரிய மண்டத்தின் மிகப்பெரிய கோள் இதுவாகும். சூரிய மண்டலத்திலுள்ள புதன், வெள்ளி, புவி, செவ்வாய் போன்ற உட்கோள்கள் போலில்லாது இது புறக்கோள் தன்மைகொண்டது. வாயுக்கோளமாகவும், சூடான பாறையும் திரவமும் கொண்ட கோளாகவும் உள்ளது.

ரோமக் கடவுளரின் தலைவராக கருதப்பட்ட ஜுப்பிட்டர் என்ற பெயரில் இக்கோளும் அழைக்கப்படுகிறது. மிகவும் பெரிய கோள் என்பதால் ஜுப்பிட்டர் என சூட்டப் பெற்றுள்ளது.

சூரியனிலிருந்து 484 மில்லியன் மைல் தூரத்தில் உள்ள இக்கோளானது 28,273 மைல் வேகத்தில் சுற்றுகிறது. ஞாயிற்று தொகுதியில் இதுவே மிகவும் சுழற்சி கூடிய கிரகமாகும். வியாழனின் ஆரை 43,440 மைல்களாகும். 9.3 மணித்தியாலத்தில் தன்னைத்தானே ஒரு தடவை சுற்றும் இக்கோளானது சூரியனைச் சுற்ற 12 ஆண்டுக-ளாகின்றன. வியாழன் பூமியின் விட்டத்தைப் போல் 11 மடங்குள்ளது. பூமியின் எடையை விட 318 மடங்கு அதிகமானது. புவியீர்ப்பு விசையைப் போல் 2.5 மடங்கு விசை வியாழனில் உண்டு. இந்த ஈர்ப்பு விசை காரணமாக இக்கோள் சிறுகோள்கள், வால் நட்சத்திரங்கள், வளையங்கள் முதலான பல வான்பொருட்களை இழத்துக் கொண்டு சுற்றுகிறது. சூரிய குடும்பத்தில் உள்ள எல்லாக் கோள்களையும் ஒன்று சேர்த்தாலும் அவற்றை விட 2½ மடங்கு பெரியது வியாழனாகும்.

வியாழன் 90%, ஹைட்ரஜன் (Hydrogen), 10% ஹீலியம் (Helium) வாயுக்களால் நிரம்பியுள்ளது. அமோனியா, சல்பர் என்பனவும் கலவைகளாக இங்கு உள்ளன. வியாழனில் உள்ள பெருஞ்சிவப்புப் பிரதேசம் (the great red spot) பல ஆய்வுகளுக்கு உட்பட்டுள்ளது. 1830ம் ஆண்டு முதல் இப்பகுதி உள்ளதாக அறியப்பட்டுள்ளது. இது எப்படி சிவப்பாக உள்ளது என்பதற்கு இன்னும் திட்டவட்டமான காரணிகள் கூறப்படவில்லை. எனினும், இந்த சிவப்பு பிரதேசம் ஒரு மாபெரும் புயல் நிரம்பியதாக கருதப்படுகிறது. இங்கு வீசும் புயலானது அமோனியாவுடன் சேர்ந்து இவ்வாறான நிறத்தில் தெரிவதாக ஒரு கருத்து உண்டு. 10,000 மைல்கள் அகலமான இப்பகுதி பூமியைக் கூட உள்ளடக்கக்கூடியது. இங்கு 2500 பாகை பாரன்ஹைட் வெப்பம் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.



வியாழனுக்கு 79 துணைக்கோள்கள் (moons) உள்ளன. சூரிய குடும்பத்தில் அதிகம் துணைக்கோள்கள் உள்ள கிரகம் வியாழன் ஆகும். இவற்றில் பல 10 கிலோ மீட்டர் அல்லது அதை விடக் குறைவான விட்டம் கொண்டவை. Galilean Moons எனப்படும் Lo, Europa, Ganymede, Callisto என்பவை முக்கியமானவை. 1610ல் கலிலியோவினால் இந்நான்கு துணைக்கோள்களும் கண்டுபிடிக்கப்பட்டன. வியாழனின் வளையங்கள் தூசியால் ஆனவை. சிலந்தி வலையடுக்கு போன்று இவை உள.

சூரிய தொகுதியில் வெள்ளி, சந்திரனுக்கு அடுத்தபடியாக பிரகாசமுள்ள கிரகம் வியாழன். வியாழனை வெறுங்கண்களால் பார்க்க முடியும். பபிலோனியர்களை இதனை முதலில் அவதானித்துள்ளாரகள். சூரியன் மறைந்த பின்பு கிழக்கு திசையில் சந்திரன் தெரியும். அதற்கு சற்று அருகே மேற்கு புறத்தில் தெரிவது வியாழன். எமது கண்ணுக்கு தெரியும் வியாழன் வெகு தொலைவில் உள்ளதால் அது சிறிய ஒரு புள்ளியாகவே தெரியும். இதன் அருகில் ரோகினி, கார்த்திகை நட்சத்திரங்கள் தெரியும். வியாழன் இடம் மாறினாலும் இந்நட்சத்திரங்கள் இடம் மாறாமல் இருக்கும்.

வியாழனில் அடிக்கடி மின்னல்கள் தோன்றுமென கருதப்படுகிறது. இதன் உட்புறத்திலிருந்து வெளிப்படும் வெப்பம் காரணமாக நீர்மேகங்களினால் இடி மின்னல் புயல்கள் ஏற்படுகின்றன என கருதப்படுகிறது. தினத்துவமான முகில் அமைப்புக்களை வியாழன் கொண்டுள்ளதால் எண்ணற்ற அதிசயங்கள் நிகழ்கின்றன. 50 கி.மீட்டர் தடிப்புள்ள முகில் கூட்டங்களில் உள்ள அம்மோனியா துகள்கள் பல வண்ணங்களை ஏற்படுத்துகின்றன. சூரியனின் ஒளிபட்டு நிறம் மாறுகின்றன எனவும் ஆய்வுண்டு.

வியாழனுக்கு பல்வேறு விண்வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாசாவினால் அனுப்பப்பட்டவை Pioneer 10, 11 ஆகும். Pioneer 10, 1972லும் Pioneer 11 1973லும் அனுப்பப்பட்டன. இவை வியாழனின் மேற்பரப்புப் படங்களை எடுத்து அனுப்பின. தொடர்ந்து Voyager 1, 2 என்பவை 1979ல் அனுப்பப்பட்டன. இவ்வாய்வுகள் மூலம் வியாழனின் வளையங்கள், துணைக்கிரகங்கள் பற்றி அறியப்பட்டன. Cassini கப்பல் 2000ம் ஆண்டளவில் வியாழனுக்கு அருகில் சென்றது. இது வளிமண்டல ஆய்வுகளைச் செய்தது. அத்துடன் Galileo (1995 - 2003), Ulysses (1992), New Horizons (2007), Juno (2016) ஆகிய விண்வெளிக்கலங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் கலிலியோ விண்கலம் 1995ல் வியாழன் மண்டலத்திற்குள் நுழைந்து 2002 வரை ஆய்வுசெய்து துணைக்கிரகங்கள் பற்றிப் பல தகவல்களை தந்தது. 2011ல் அனுப்பப்பட்ட Juno விண்கலம் யூலை 2016ல் வியாழனை அடைந்தது. வெற்றிகரமாகப் பல ஆய்வுகளை செய்துள்ளது. 2022ல் Jupiter Icy Moons Explorer கலமும் 2023ல் Europa Clipper கலமும் அனுப்பப்பட உள்ளது.

வியாழனில் விண்கலம் தரையிறங்குவது இன்றுவரை முடியாத காரியமாக உள்ளது. காரணம் சந்திரன், செவ்வாய் போன்ற திடமான மேற்பரப்பு இங்கு இல்லை. இது திரவ - வாயுப் பொருட்களால் ஆனதாகும். எனவே மேற்பரப்பில் இறங்குவதன் மூலம் மேற்பரப்பு உடைந்து விடலாம். புவியை விட 2.5 மடங்கு ஈர்ப்பு விசை இங்குண்டு. அத்துடன் மேற்பரப்பு -108 C வரை குளிரான இந்த சூழலில் எந்த வகையிலும் உயிர் வாழ முடியாது. உடல் உறைந்து விடலாம்.

Hubble எனப்படும் விண்வெளி நோக்கியால் வியாழனின் துருவப்பகுதிகளில் நீல ஒளி வளையங்கள்(auroras) தெரிவதும் கண்டறியப்பட்டுள்ளது. அதிக சக்தியுள்ள அணுவைவிடச் சிறிய துகள்கள் விண்வெளியில் பறக்கும்போது வியாழனின் காந்தப்புலனால் பிடிக்கப்பட்டு வடக்கு அல்லது தெற்கு துருவத்திற்கு தள்ளப்படும்போது இவை ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

பபிலோனியர்களால் முதலில் அவதானிக்கப்பட்டு பல்வேறு ஆச்சரியங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்கும் வியாழன் என்னும் இக்கிரகம் பற்றிய விண்வெளி ஆய்வு ஒரு புறமுமாக நடைபெற்று வருவது இன்றைய யதார்த்தமாகும். எண்கணக்கில்லாத மகிழ்வூட்டக் கூடிய தன்மையில் தொடர்ந்தும் வியாழக் கிரகம் எமது வெற்றுக் கண்களுக்கு தெரிகிறது.

***உசாத்துணை:***

- Jupiter https://solarsystem.nasa.gov/planets/jupiter/overview/
- Jupiter distance https://www.universetoday.com/44615/distance-from-the-sun-to-jupiter/
- The Great Red Spot https://www.space.com/33551-jupiter-heats-up-great-red-spot.html
- Moons of Jupiter https://solarsystem.nasa.gov/planets/jupiter/in-depth/
- Jupiter rotation https://www.psi.edu/epo/resources/inmotion/jupiter_earth
- Pioneer spacecrafts https://en.wikipedia.org/wiki/Pioneer_program
- Voyager spacecrafts https://voyager.jpl.nasa.gov/frequently-asked-questions/fact-sheet/
- Galileo spacecraft https://en.wikipedia.org/wiki/Galileo_(spacecraft)
- Spacecrafts to Jupiter https://www.space.com/12548-jupiter-missions-nasa-spacecraft-history.html
- Juno spacecraft https://www.nasa.gov/mission_pages/juno/main/index.html
- Jupiter icy moon explorer https://en.wikipedia.org/ wiki/Jupiter_Icy_Moons_Explorer
- Europa clipper https://en.wikipedia.org/wiki/Europa_Clipper
- Cassini https://en.wikipedia.org/wiki/Cassini%E2%80%93Huygens#Jupiter_flyby
- Hubble highlights https://www.nasa.gov/content/hubble-highlights-studying-the-outer-planets-and-moons




pathmanathan.s@thaiveedu.com







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போறற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நியூ கொறைசன்ஸ் விண்கலத்தின் அரிய சாதனை

- குரு அரவிந்தன் -

அண்டவெளியில் சுமார் 30 கிலோமீட்டர் நீளமான விண்கல் ஒன்று, நியூ ஹரைசன்ஸை (New Horizons) மிகவேகமாகக் கடந்து சென்றதைத் தொலைக்காட்சியில் பார்த்தபோது புதுவருடத்தைக் கொண்டாடிக்கொண்டிருந்தவர்களுக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது. பூமியில் இருந்து நூறு, இருநூறு அல்ல, சுமார் 6.5 பில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் இந்தப் பாறை போன்ற பெரியதொரு பொருள் விரைவாகக்கடந்து சென்றதை நியூ ஹரைசன்ஸ் என்ற விண்கலம் தெளிவாகப் படம் பிடித்திருந்தது. அதிவேகமாகச் செல்லும் பொருட்களையும் அதனால் படம் பிடிக்க முடியும் என்பதை அந்தப்படம் நிரூபித்திருந்தது. சூரிய குடும்பத்தில் இருந்து அதி தூரத்திற்குச் சென்ற முதல் விண்கலம் இதுதான் என்ற பெயரையும் தற்போது நியூ கொறைசன்ஸ் பெற்றுக் கொண்டது. இந்த விண்கலத்திற்குக் கொடுக்கப்பட்ட பணிப்பின்படி அடுத்த கட்டமாக சுமார் 3500 கிலோ மீட்டர் தூரத்தைக் கடும் பனிப்பிரதேசத்திற்குள்ளால் கடக்க வேண்டி இருக்கின்றது. பெரும் பனிப் பாறைகள் சூழ்ந்த பகுதிக்குள் பிரவேசிக்கும் போது அவற்றுடன் இந்த விண்கலம் மோதலாம் என்றும் அதனால் செயலிழக்கலாம் என்றும் விண்வெளி நிபுணர்கள் கருதுகின்றனர். தனது செயல் திட்டத்தில் ஒரு பகுதியாக பல புகைப்படங்களையும் வேறு பல தகவல்களையும் இன்னும் சேகரிக்க வேண்டிய பொறுப்பு நியூ கொறைசன்ஸ் விண்கலத்திற்கு இருக்கின்றது.

2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி அனுப்பப்பட்ட இந்த விண்கலம் சுமார் பதின்மூன்று வருடங்களாக விண்ணில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. பூமியில் இருந்து புறப்பட்ட இந்த விண்கலம் சுமார் ஒன்பது மணித்தியாலங்களில் அதிவிரைவாக சந்திரனைக் கடந்து சென்றது. 36,400 மைல்கள் வேகத்தில் இந்த விண்கலம் செல்கின்றது. புளுட்டோ கிரகத்தை 2015 ஆம் ஆண்டு படங்கள் எடுத்ததன் பின் மேற்கொண்டும் அண்டவெளியில் பயணத்தைத்தொடர்ந்தது. அமெரிக்காவின் கேப் கனவெரல் விமானப்படைத் தளத்தில் இருந்து, நாஸா நிறுவனத்தால் ஏவப்பட்ட இந்த விண்கலம், யூப்பிட்டர் கிரகத்தை நோக்கிச் சென்ற போது பெரும்பாலும் உறங்கு நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தது. 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி மீண்டும் தொழிற்படத் தொடங்கியது. 2015 ஜனவரி 15ம் திகதி புளுட்டோ நோக்கி விரையத்தொடங்கியது. 2015 யூலை 14ம் திகதி புளுட்டோவுக்கு மேலாக 7,800 மைல் உயரத்தில் பறந்தது. புளுட்டோ கிரகத்திற்கு அருகே மேலாகப்பறந்த முதலாவது விண்கலமும் இதுதான். 2016 ஒக்டோபர் 25ம் திகதி வரையும் புளுட்டோ பற்றிய புகைப்படங்களையும், தகவல்களையும் அனுப்பிக் கொண்டே இருந்தது. இதைத்தொடர்ந்து கைபர் பெல்ட் (Kuiper belt) என்று சொல்லப்படுகின்ற அண்டவெளி பிரதேசத்தை நோக்கி விரைந்தது. அங்கே என்ன இருக்கிறது என்பதை அறிவதே நாசாவின் நோக்கமாக இருக்கின்றது.

அவர்கள் எதிர்பார்த்தபடியே நியூ ஹரைசன்ஸ் அப்பகுதிக்குள் புகுந்து 2200 மைல்களுக்கு அப்பால் இருந்த விண்கல் ஒன்றின் சில படங்களை எடுத்து அனுப்பி இருக்கின்றது. அல்ரிமா தூலா என்ற புனைப்பெயர் கொண்ட (MU69), சுமார் 20 மைல் நீளமும் 10 மைல் அகலமும் கொண்ட விண்பொருள் ஒன்றையே நியூ கொறைசன்ஸ் முதலில் படம் எடுத்திருக்கின்றது. அந்த உருவம் பார்ப்பதற்கு மென்திரள் வடிவத்தில் சினோமான் போன்ற தோற்றமாகத் தெரிகின்றது. வேறு கோணத்தில் பார்த்தால், இரண்டு உருவங்கள் ஒன்று சேர்ந்து இருப்பது போலவும் தெரிகின்றது. சூரியனில் இருந்து புளுட்டோவையும் கடந்து ஒரு பில்லியன் மைல்களுக்கு அப்பால் இந்த விண்பொருள் காணப்பட்டது. சுமார் 4.5 பில்லியன் வருடங்களாக அதேவட்டத்தில் சூரியனைச் சுற்றிக்கொண்டு இருப்பதாகவும், பூமியைப் போல தன்னைத்தானே சுற்றுவதாகவும் முதல் சுற்று தகவலில் இருந்து தெரிகின்றது. புளுட்டோ போன்ற கோள்களும் இப்படித்தான் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இந்த விண்கலம் அனுப்ப இருக்கும் மேலதிக விபரங்களுக்காக தரைக்



கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் பொறுமையாகக் காத்திருக்கிறார்கள்.

'சூரிய குடும்பத்தைப்பற்றி அறிந்துகொள்ள MU69 மிகவும் உதவியாக இருக்கும்' என்று கொலறாடோ சவுத்வெஸ்ட் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த அலன் ஸ்ரென் என்பவர் குறிப்பிட்டார். பூமியில் உயிரினங்கள் தற்போது வாழ்வதற்கு இந்த விண்பொருட்களும் ஏதோ ஒரு விதத்தில் முக்கிய காரணமாக இருந்திருக்கலாம் என்றும் அவர் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்தார். நியூ கொறைசன்ஸ் மேலதிக செய்தி அனுப்புவதை தை மாதம் 10ம் திகதி வரை நிறுத்தி வைத்திருந்தது. காரணம் சூரியனின் மறுபக்கத்திற்குச் செல்வதேயாகும். சூரிய வெளிச்சத்தில் இருந்துதான் நியூ கொறைசன்ஸ் சக்தியைப் பெறுகின்றது என்பதால், அடுத்த கட்ட நடவடிக்கைக்காக சில நாட்கள் பொறுத்திருக்கவேண்டி வந்தது.

நியூ கொறைசன்ஸ் விண்கலம் தனது பயணத்தின் போது புளுட்டோ கிரகத்தை நோக்கி முதன் முதலாக அருகே சென்று புகைப்படங்களை எடுத்து அனுப்பி இருந்தது. ஒரு விநாடியில் 14 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும் வேகத்தில் சென்றிருந்தது. இந்த விண்கலம் புளுட்டோவையும் அதனுடைய சந்திரனான சாரன், நிக்ஸ், ஹைட்ரா போன்றவற்றை பற்றியும் ஆராய்ந்து தகவல் அனுப்பி இருக்கின்றது. புளுட்டோவைக் கடக்கும்போது ஏதாவது விண்கற்களில் மோதி நொருங்கிப் போகலாம் என்ற பயம் கலந்த எதிர்பார்ப்பும் தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் இருந்தது. ஆனால் அந்தத் தடைகளை எல்லாம் கடந்து நியூ கொறைசன்ஸ் தன் பாதையில் வேகமாகவும், வெற்றிகரமாகவும் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஜனவரி மாதம் 19ம் திகதி 2006ம் ஆண்டு பூமியை விட்டுப் புறப்பட்ட நியூ ஹரைசன்ஸ் மிகவிரைவாகப் பயணம் செய்து, திட்டமிட்ட படியே சந்திரனைக் கடந்து, ஏப்ரல் 7ம் திகதி செவ்வாய்க் கிரகத்தையும் தாண்டிச் சென்றது. தொடர்ந்து தனது பாதையில் பயணித்த நியூ கொறைசன்ஸ் யூன் 13ம் திகதி 132524 APL என்ற சிறு கோளுக்குக் கிட்டவாகச்சென்று படங்களை எடுத்துக் கொண்டது. இதை எல்லாம் விரைவாகக் கடந்து தனக்குப் பணிக்கப்பட்ட பணியைச் செய்வதற்காக விரைந்து நவம்பர் மாதம் 28ம் திகதி புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது. தொடர்ந்து தனது பயணத்தை மேற்கொண்ட நியூ கொறைசன்ஸ் 2007ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி வியாழனை நோக்கிச் சென்றது. பெப்ரவரி 28ம் திகதி வியாழன் கிரகத்திற்கு அருகே சென்று படங்களை எடுத்துக் கொண்டது. மார்ச் மாதம் 5ம் திகதி வியாழனை விட்டு விலகிச் சென்றது. யூன் மாதம் 9ம் திகதி 2008ம் ஆண்டு சனிக்கிரகத்தைக் கடந்துசென்றது. 2011ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் திகதி யுரேனஸ் கோளைக் கடந்துசென்றது. 2014ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நெப்டியூன் கோளைக் கடந்து சென்றது. 2015ம் ஆண்டு யூலை மாதம் 14ம் திகதி புளுட்டோவை அண்மித்துப் படங்கள் எடுத்தது மட்டுமல்ல அதன் நிலாவான சாரன் நிலவையும் படங்கள் எடுத்திருந்தது.

2021ம் ஆண்டு வரையுமாவது இந்தத்திட்டத்தைத் தொடரும்படி விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். நிதி உதவி இருந்தால் 2030ம் ஆண்டுவரை இந்த விண்கலத்தால் செயற்படமுடியும் என்று நாசா குழுவினர் தெரிவித்தனர்.

தற்சமயம் ஒன்பது நாடுகள் விண்வெளிக்கு விண்கலம்களை அனுப்பக்கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றன. அவையாவன ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரான்ஸ், யப்பான், இஸ்ரேல், ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளாகும். பிரித்தானியா, உக்ரேன், தென்கொரியா, மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் இந்த வசதிகளைக் கொண்டிருந்தாலும் இதுவரை விண்கலம்களை அனுப்புவதற்குத் தாமாக முயற்சி எடுக்கவில்லை. சென்ற மாதம் சீனா விண்கலன் ஒன்றைச் சந்திரனுக்கு வெற்றிகரமாக அனுப்பி இருந்தது. அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தாக சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பிய பெருமை சீனா தேசத்திற்கு உண்டு. மிக வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சி விண்வெளி ஆராய்ச்சிக்குப் பெரும் துணையாக இருக்கின்றது.

ஒருகாலத்தில் எல்லை கடந்து, அதன் பின் கடல் கடந்து நாடு பிடித்த காலம் போய் இன்று பொருளாதார வசதி படைத்த நாடுகளால் விண்ணைத் தாண்டி சூரிய குடும்பத்தில் கோள்களைப் பிடிக்கும் படலம் ஆரம்பித்துவிட்டது. அடுத்த கட்ட நடவடிக்கையாக சூரிய குடும்ப எல்லையையும் கடந்து, தேவை ஏற்படின் நட்சத்திரங்களைப் பிடிக்கும் காலமும் விரைவில் உருவாகலாம். நிலாவைப் பிடித்தவர்களுக்கு நட்சத்திரங்களைப்பிடிப்பது ஒன்றும் கடினமான காரிமாக இருக்கப்போவதில்லை. ஆனால் இதையெல்லாம் நீண்ட காலம் அனுபவிக்கக் கூடியதாக மனித வாழ்க்கை இதுவரை அமையவில்லை. பிறப்பும் இறப்பும் எப்போ நடக்கும் என்று தெரியாமல், தனது ஆயுட்காலத்தில், நட்சத்திரங்களை நோக்கித் தொலைதூரம் பயணிக்கமுடியாமல் மிகக்குறுகியதாகவே மனிதவாழ்க்கை இதுவரை எமக்கு அமைந்திருக்கின்றது.

***உசாத்துணை:***

• https://www.nasa.gov/mission_pages/newhorizons/main/index.html



*kuruaravindan@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் மகாவித்தியாலயம்

- முருகேசு பாக்கியநாதன் -

## அறிமுகம்:

மல்லாகம் மகாவித்தியாலயம் 159 வருட வரலாற்றினைக் கொண்ட பாடசாலையாகும். 2010ம் ஆண்டு இப்பாடசாலையின் 150வது வருட நிறைவினை விமரிசையாகக் கொண்டாடினார்கள். அதன் போது ஒரு நினைவு மலரும் வெளியிடப்பட்டது. இப்பாடசாலை மல்லாகத்தில், காங்கேசன்துறை வீதிக்கு அருகில் இரு மருங்கிலும் அமைந்துள்ளது.

19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவ மிஷனரிமார் பரவலாக கிறிஸ்தவ பாடசாலைகளை அமைத்ததோடு கிறிஸ்தவ தேவாலயங்களை அமைத்து சைவசமயி-களை கிறிஸ்தவத்திற்கு மாற்றிக் கொண்டிருந்தவேளை, ஒரு சைவ விழிப்புணர்ச்சி நாவலர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டு அது யாழ் குடாநாடெங்கும் பரவலாக பலரை திரண்டெளச் செய்தது. அதன் பயனாகவே மல்லாகத்தில் வாழ்ந்த பெரியோர்கள் சிலரில் உதித்த எண்ணக் கருவே ஒரு சைவப்பாடசாலையாக 1860ம் ஆண்டு மலர்ந்தது.

தற்போதைய பாடசாலைக்குத் தெற்கேயுள்ள பங்களா ஒழுங்கைக்கு வடக்கே ஒரு தற்காலிக கொட்டகை அமைத்து பாடசாலை ஆரம்பமாகியது. இவ்வாறாக பாடசாலை இயங்கி வரும்போது மாணவர் தொகை சிறிது சிறிதாகக் கூடிச் சென்றது. இதன் காரணமாக இடவசதி போதாமல் இருந்தது. அப்போது மல்லாகத்தில் பிரசித்த நொத்தாரிசாக இருந்த திரு தெ.க. துரையப்பா அவர்கள் 1890ல் 6 பரப்பு நிலத்தை விலைக்கு திரு சீனிவாசகம் ஐயரிடம் வாங்கிக் கொடுத்தார். அங்கே ஒரு நீள் வடிவான மண்டபத்தைக்கட்டி அதனைப் பிரித்தடைத்து வகுப்புக்களை நடத்தினர். இக்காலத்தில் மல்லாகம் ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை என்று அழைக்கப்பட்டது. 1913ம் ஆண்டு வரை திரு. தெ.சு. துரையப்பா அவர்கள் தலைமை ஆசிரியராக விருந்தார். அவரே பாடசாலையின் நிறுவனராகவும் இருந்தார். அவரைத் தொடர்ந்து நல்லூரைச் சேர்ந்த திரு. எஸ். வியாகேசம் அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவரது காலத்திலும் ஒரு கொட்டில் அமைக்கப்பட்டது. 1915ல் திரு.வியாகேசம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராகச் சென்றார். அதன் போது அவரது உடன் பிறப்பான திரு எஸ். இராமலிங்கம் அவர்கள் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றார். 1917ல் மயிலிட்டி திரு. எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் கல்கத்தாவில் கல்விகற்று 1916ல் பி.ஏ பட்டதாரியாக வெளிவந்தார். இவருடைய காலத்தில் திரு. அ. சரவணமுத்து, திரு. மு. சிற்றம்பலம் அவர்களும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இக்காலத்தில் புகழ்பூத்த வித்துவான் சி. கணேசையர் அவர்கள் தமிழ் இலக்கியமும், தமிழ் இலக்கணமும் கற்பித்தார். அவர் இங்கு கல்வி கற்பித்தனால் இப்பாடசாலை பெருமை கொண்டது. திரு.எஸ்.இரத்தின சபாபதி அவர்கள் கணித ஆசிரியராகக் கடமையாற்றினார்.

## பாடசாலையின் முதல் பரிசளிப்பு விழா:

1919ம் ஆண்டு பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதற்குப் பிரதம விருந்தினராக அப்போதைய கல்வி அதிகாரி (வித்தியாகத்தர்) அழைக்கப்பட்டு அவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதிபர் சி. சுவாமிநாதன் தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது. இவரது காலத்திலேயே முதன் முதலாக அப்பாடசாலை மாணவர்கள் ஈ.எஸ்.எல்.சி (ESLC - Elementory School Leaving Certificate) என்னும் பரீட்சையில் பங்குபற்றினார்கள். இப்பரீட்சைக்கு இப்பாடசாலையில் இருந்து 8 பேர் தோற்றினார்கள். அதில் 6 பேர் சித்தியடைந்தார்கள். இது தற்போது நடைபெறும் 5 வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை போன்றதாகும். இதில் சித்தியடைந்தவர்கள் வேறு உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்கமுடியும்.

## பாடசாலையின் பெயர் மீண்டும் மாற்றம் பெற்றது:

1919 டிசம்பர் மாதம் திரு. வை. செல்லப்பா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்றார். அவரது காலத்தில் 'மல்லாகம் ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை'யாக விளங்கிய பாடசாலை, பின்னர் பெண்களுக்கும் கல்வி வழங்க முன்வந்தது. இதனால் 'மல்லாகம் கலவன் பாடசாலை' என்று 1945ல் பெயர் மாற்றம் பெற்றது. செல்லப்பா அவர்கள் 1951 வரை தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் மாணவர் தொகை 200ற்கும் மேலானது. ஆரம்ப பாடசாலை விடுகைப் பத்திரம் (ஈ.எஸ்.எல்.சி) பரீட்சையின் பெறுபேறுகள் கூடியதால் மாணவர்கள் தொகை கூடிச் சென்றது. இவரது காலத்தில் குத்துச் சண்டைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இப்பாடசாலை மாணவர் ஒருவர் முதலாம் இடத்தைப் பெற்றார்.

நிறுவனர் திரு.தெ.சு. துரையப்பா அவர்கள் பாடசாலையை அவரது மகனான திரு. சு.து. கனகராயருக்கு நன்கொடையாகக் கொடுத்தார். இதன்பின்னர் திரு.த.பொன்னம்பலம் அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். அவரே உப. அதிபராகவும் கடமையாற்றினார். 01-05-1951 தொடக்கம் 31-12-1970 வரை மல்லாகத்தைச் சேர்ந்த திரு. சி. பொன்னையா அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் பாடசாலையின் பழைய மாணவருமாவார். இவருடைய காலத்தில்தான் க.பொ.த (சாதாரண) வகுப்பு ஆரம்பக்கப்பட்டது. விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டு விஞ்ஞானம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. மாணவர் தொகை தொடர்ந்து அதிகரித்தே வந்தது.

1955ல் பாடசாலையானது 2ம் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. 1960ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பெடுத்தது. அததோடு முகாமையானர் முறை ஒழிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகம் மத்திய அரசின் கீழ் வந்தது.

உடற்பயிற்சி ஆசிரியராக திரு.அ.தம்பித்துரை நியமிக்கப்பட்டார். பாடசாலையில் விளையாட்டு மைதான வசதிகள் இல்லாது விட்டாலும் உடற்பயிற்சிப் போட்டிகளில் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்தார்கள். திரு. பொன்னையா அவர்களது காலத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவரது காலத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பில் 1953ல் முதன் முதலில் செல்லையா சிவசுப்பிரமணியம் என்ற மாணவன் சித்திபெற்றார். உபஅதிபராகக் கடமையாற்றிய திரு. க.இராசையா அவர்கள் ஆங்கிலப்பாடமும் போதித்தார். இவர் பல மாணவர்களை ஆங்கிலத்தில் புலமைமிக்க மாணவர்களாக உருவாக்கினார்.



ஜனவரி 1971 முதல் திரு.அ.சிவசுப்பிரமணியம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் ஜனவரி 1980 வரை கடமையாற்றினார். இவர் புதிய கல்வித்திட்டத்தை அமுல்படுத்த, அழகியற்பாடங்கள், தொழில் நுட்பப்பாடங்களுக்கு வசதி செய்துகொடுத்தார். பாடசாலையை விட்டு விலகியோருக்கான இயந்திரப் பொறிமுறைக் கல்வி, வீட்டு மின்சுற்று அமைப்புப் போன்ற பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் இதன் மூலம் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது.

## பாடசாலையின் பெயர்கள்:

1972ம் ஆண்டு வரை இயங்கிய மல்லாகம் கனிஷ்ட வித்தியாயாலயம், மல்லாகம் மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. 1979ல் மீண்டும் கனிஷ்ட வித்தியாலயம் தனித்து இயங்கத் தொடங்கிடங்கியது. 1973ம் ஆண்டு வரை மல்லாகம் ஆங்கில பாடசாலை என்ற பெயருடன் இயங்கியது. அத்தோடு அதேயாண்டு முதல் மல்லாகம் மகா வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. அத்தோடு இப் பாடசாலை பொதுவாக மக்களால் 'மல்லாகம் இந்துக் கல்லூரி' என்றும் அழைக்கப்பட்டது. அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஒரு சைவசமையியாக விளங்கியதானால் சைவசமயம் தொடர்பான போட்டிகள், பூசைகள், கலை நிகழ்வுகளுக்கு முழு ஊக்கம் வழங்கினார். அத்தோடு மல்லாகம் இந்து இளைஞர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்படும் மல்லாகம் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் என்பனவற்றை நடத்த பாடசாலை நேரம் தவித்த ஏனைய நேரங்களில் உதவினார். 1973ல் அகில இலங்கை ரீதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் இப்பாடசாலையானது முதலாவது இடத்தையும், மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இதற்கு உறுதுணையாகக் கடமையாற்றிய சைவப்பண்டிதர் திரு. ச. சச்சிதானந்தம் அவர்கள் பயற்சிகளைக் கொடுத்தார்.

1980ல் திரு. அ. மகாதேவன் அதிபராகக் கடமை ஏற்றார். இவர் இப்பாடசாலையின் பழைய மாணவராவர். இவர் காலத்தில் பாடசாலை பல்துறையில் வளர்ச்சி பெற்றது. க.பொ.த(சாதரண) பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் உயர்தரப் படிப்பிற்காக வேறு உயர்பாடசாலைகளை நாடிச் செல்வதனை அறிந்த அதிபர் அதனைத் தடுத்து நிறுத்தி, அங்கேயே க.பொ.த (உயர்தரம்) படித்திடும்படியாக 1980இலேயே க.பொ.த உயர்தர கலை வகுப்புக்களைத் தொடங்கினார். இதனால் பாடசாலையின் தரமும் 1C பாடசாலையாகவும் உயர்ந்தது. இந்நிகழ்வு பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பெரும் உந்துசக்தியாகவிருந்தது. கலைப் பிரிவு உயர்தர வகுப்பினை ஆரம்பிக்கும்போது திருமதி ந. ஞானலிங்கமும், திருமதி ச. இராஜேந்திரமும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். ஆசிரியர் சங்கம், பெற்

தொடர்தல் 47ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் மகா...

44ம் பக்கத் தொடர்ச்சி...

றோர் ஆசிரியர் சங்கத்தை அடிக்கடி கூட்டி கல்லூரி வளர்ச்சியில் அக்கறை கொள்ள வைத்தார். அத்தோடு வருடாவருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழா போன்றவை நடத்தப்பட்டன. மாணவர்களுக்கு முதன் முதலில் சீருடை வழங்கப்பட்டது. 1980ல் மல்லாகத்தைச் சேர்ந்த சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய திரு.ந.சிவப்பிரகாசம் அவர்களால் இயற்றப்பட்ட கல்லூரிக் கீதம், பாடசாலையின் சங்கீத ஆசிரியரான திரு. அ. வர்ணகுல சிங்கம் அவர்களால் இசையமைக்கப்பட்டு அதேயாண்டு சாவோடை மைதானத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் முதன் முதலாக உயர்தர வகுப்பு மாணவர்களால் இசைக்கப்பட்டது.

மல்லாகம் மகா வித்தியாலயம் என்பதனை ஊர் மக்கள் சிலர் 'மகாதேவன் வித்தியாலயம்' என்று அழைக்கும் அளவிற்கு மகாதேவன் அவர்களின் சேவைகளைக் கண்டது எனலாம். 1980ல் யாழ் கல்வித்திணைக் களத்தினால் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் 'ஹோட்டல் முகாமைத்துவ வகுப்பு'கள் ஆரம்பிக்கப்பட்டன.

### நாட்டில் ஏற்பட்ட போர் நிலை:

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்ற யுத்தம் காரணமாக அது விரிவடைந்து 'வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன்' என்ற போராக மாறி பல இழப்புக்களுடன் போர் நடைபெற்று வருகையில் தீடீரென இந்திய அமைதி காக்கும் படை வடமாகாணம் முழுவதும் வந்திறங்கி வடக்கு கிழக்கு மாகாணங்களையே தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அதன் பின்பு நிலைமை சிறிது சிறிதாக மாற்றமடைந்து விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கு இடையேயான போராக மாறியது. இதனால் பாடசாலைக்கு கட்டட, தளபாட, உபகரண - பலத்த சொத்திழப்புக்கள் ஏற்பட்டன.

1981ம் ஆண்டின் புதிய கல்விச்சீர்திருத்த வெள்ளையறிக்கையின்படி இப்பாடசாலை மல்லாகம் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு இயங்கியது. இதன் கொத்தணி அதிபராக இப்பாடசாலையின் அதிபர் திரு.அ.மகாதேவன் அவர்களே கடமையாற்றினார். 1989ல் முதல் மாணவர் உயர்தர வகுப்பில் சித்திபெற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகினார்.

### முறைசாரக் கல்வியின் ஆரம்பம்:

1990ல் முதன் முறையாக யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் இப்பாடசாலையில் தையல் தொழிலகம், ஆங்கில - தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு, மோட்டார் பொறிமுறைத் தொழில்நுட்பம் முதலிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் திருமதி ந.ஞானலிங்கம் உப. அதிபராகக் கடமையாற்றினார். 1991ம் ஆண்டு திரு. ஆ.கமலநாதன் அதிபராகக் கடமையேற்றார். இவர் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினார்.

1993ல் மீண்டும் திரு. வி. சச்சிதானந்தம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரும் பாடசாலை வளர்ச்சியிலும் இணைப்பாட விதானச் செயற்பாட்டிலும் அதிக அக்கறை கொண்டு உழைத்தார்.

### 1995ம் ஆண்டு போர்ச் சூழ்நிலையால் பாரிய இடப்பெயர்வு:

1995 நடுப்பகுதியில் ஏற்பட்ட 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையின் போது வடபகுதியின் முழுப்பாடசாலைகளும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டது. முதல் இடப்பெயர்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருடன் ஊரெழுவில் அமைந்திருந்த கண்ணாடித் தொழிற்சாலையில் தற்காலிகமாக பாடசாலை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அங்கும் நடத்த முடியாத நெருக்கடி நிலை ஏற்படவே, உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அவர்களுடன் சேர்ந்து பகுதி நேரப்பாடசாலையாக இயக்கப்பட்டது. தொடர்ந்தும் பிரச்சினை வரவே வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துடன் இணைந்து வகுப்புக்களை நடத்தினர். ஆனால் அதுவும் பலகாலம் நீடிக்கவில்லை. அவர்களும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து கோண்டாவில் பஸ் டிப்போவில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இங்கும் தொடர்ந்து வகுப்புக்களை நடத்த முடியாது போகவே நீண்டதூரப் பயணமாக வல்லைவெளியூடாக நடந்து சென்று வடமராட்சியை அடைந்து அங்கு புட்டளை மகாவித்தியாலயத்தில் பகுதிநேரப் பாடசாலையாக இயங்கியது. இங்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இடம்பெயர்ந்து தமது வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்தது. 1996ல் மீண்டும் திரும்பி வந்த வேளையில் மல்லாகத்தில் உடனடியாகப் பாடசாலையைத் தொடங்கி நடத்த முடியாதிருந்ததனால் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் ஏனைய பாடசாலைகள் நடத்திக் கொண்டிருந்த கொட்டில்களில் இவர்களும் வகுப்புக்களை நடத்திக்கொண்டிருந்தார்கள். மல்லாகம் மகாவித்தியாலயத்தில் பாடங்கள் நடத்த முடியும் என இராணுவத்தின் அனுமதியினைப் பெற்று, மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்குச் சென்று வகுப்புக்களை ஆரம்பித்தனர். இது ஒரு துணிகரமான செயற்பாடாகும், பல இராணுவத் தடை முகாம்களைத் தாண்டியே பாடசாலைக்குச் செல்லவேண்டியிருந்தது. இதற்கு அதிபர் திரு. வி. சச்சிதானந்தம் அவர்களின் துணிவும் வழிகாட்டலுமே உறுதுணை புரிந்தன. இதற்கு உறுதுணையாக பிரதி அதிபர் திரு. மா. நாகேந்திரசீலன் அவர்களும் கணித ஆசிரியர் திரு. சி. டியுக் பல்குணன்லாலா மற்றும் ஏனைய ஆசிரியர்களும் உதவி புரிந்தனர். இந்த இடம்பெயர் வேளையிலும் க.பொ.த சாதாரண பரீட்சையிலும் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்வேளையில் அதிபர் வி. சச்சிதானந்தம் அவர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அவரது முகாமைத்துவ டிப்பளோமா பயிற்சிக்காகக் திருகோணமலைக்குச் சென்றார். அவ்வேளையில் தற்காலிக அதிபராக மா. நாகேந்திரசீலன் அவர்கள் 23-03-1998 முதல் 01-01-1999 வரை கடமையாற்றினர்.

அதிபர்கள் சச்சிதானந்தன், மகாதேவன் அவர்கள் முயன்றும் பெறமுடியாத பாடசாலைக்குரிய மைதானத்தை சத்தியசீலன் அவர்களது முயற்சியினால் கைகூடியது. பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியோரது ஒத்துழைப்புடன் மைதானம் சொந்தமாகப் பெறப்பட்டது. மீண்டும் அதிபர் சச்சிதானந்தம் அவர்கள் 02-01-1999 முதல் 06-04-2000 வரை அதிபராகக்கடமையாற்றினார். இவரது மாற்றத்தைத் தொடர்ந்து திரு. மா. நாகேந்திரசீலன் நிரந்தர அதிபரானார். தற்போது பாடசாலையின் தரம் 1C என்பதாகும். 2017ம் ஆண்டு தகவலின் படி திருமதி ரி.தில்லைநாதன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகிறார். பாடசாலை, இவரது காலத்தில் க.பொ.தசாதாரண பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றதுடன் ஏனைய நடவடிக்கைகளிலும் பாடசாலை முன்னேறி வருகின்றது.

*உசாத்துணை:*

- 150வது வருட கொண்டாட்ட சஞ்சிகை
- www.mallakammahavidyalayam.com
- https://www.facebook.com/Mallakam-maha-vidyalayam-276780249040805/



*packiyanathan.m@thaiveedu.com*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவில் கலைஞர் கிருஷ்ணசாமி சிறீதரன்

- சி. நற்குணலிங்கம் -



தவில் வாத்தியம் எப்போது உருவானது எப்போது பாவனைக்கு வந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆனால் 15ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் 12 இடங்களில் தவில் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தவிலின் ஒரு பக்கம் மறுபக்கத்தை விட சற்று பெரிதாக இருக்கும். சிறிய பக்கத்தில் Rortia என்ற மரத்தால் செய்யப்பட்ட குச்சியினாலும், பெரிய பக்கத்தை கூடுகள் மாட்டிய விரல்களாலும் முழங்குவர். எனினும் இடதுகையில் குச்சியையும், வலது கையில் விரல்களையும் பயன்படுத்தும் கலைஞர்களும் இருக்கிறார்கள். கர்நாடக இசைக்கச்சேரியில் பிரதான பாடகர்தான் முதலில் தொடங்குவார். பக்கவாத்தியம் பின் தொடரும். வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற வாத்தியங்களின் தனிக்கச்சேரிகளில் அந்தந்த வாத்தியங்கள் தான் தொடங்கும். நாதசுவரக் கச்சேரிகளில் நாதசுவரம்தான் பிரதான வாத்தியம். ஆனால் நாதசுவரக் கச்சேரி தொடங்கும் போது தவில் வாசிப்போடுதான் தொடங்கும். இது தவில் வாத்தியத்தின் தனிச்சிறப்பு. தமிழர் இல்லங்களிலும், தமிழ் சமூக வழிபாட்டிலும் இவ் இசை முக்கிய பங்கு பெறுவதாலும், மங்கல காரணமான செயற்பாடுகளில் முக்கிய பங்கு பெறுவதாலும் இதனை மங்கல இசை என்பர். மங்கலம் என்ற சொல் ஆக்கம், பொலிவு, நற்செயல், திருமணம், அறம், வாழ்த்து, சுபம் போன்ற பொருள்களில் கையாளப்படுகின்றது.

தமிழர்களின் இசை வாழ்வியலோடு, உணர்வோடு கலந்தது. பிறந்தது முதல் மறையும் வரை ஒவ்வொரு அங்கத்திலும் இசையை வைத்து தங்கள் வாழ்க்கை முறையை பிணைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள். அந்த வரிசையில் தவில் கலைஞனாக நாம் காண்பவர் கொழும்பை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் கிருஷ்ணசாமி சிறீதரன். கலைப் பயணம் சிலருக்கு அவர்களது பெற்றோர்களால் வழியமைக்கப்படுகிறது. ஆனால் இவரோ பின்புலம் இல்லாது தானே தனக்கு வழிதேடிக்கொண்டவர். இவர் தனது சிறுவயதிலேயே பெற்றோரின் கண்காணிப்பை வழிகாட்டலை இழந்துவிட்ட ஒருவர். கிருஷ்ணசாமிக்கும், சிவகாமி சுந்தரிக்கும் மகனாகப்பிறந்தார். இவர்கள் இருவரும் 1983ம் ஆண்டு கலவரத்தில் காணாமல் போய்விட்டார்கள். இவரைவிட்டு பெற்றோர்கள் மறைந்து போனமைதான் இவர் தன் வாழ்வில் சந்தித்த மிகவும் சோகமான சம்பவம். இவர் தனது பாட்டியின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தவர்.

இளமைக்காலம் இவருக்கு மிகவும் சோகமே. கல்வியில் கவனம் செலுத்தமுடியாமல் ஐந்தாம் தரத்துடன் நிறுத்திவிட்டு,பணத்துக்காக தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள கோயிலில் வேலை செய்தார். அக்கோயிலுக்கு தவில், நாத்ஸ்வர கலைஞர்கள் வருவதுண்டு. தாளம் போடுபவர் வராத நாட்களில் இவரை உதவிக்கு அழைப்பதுண்டு. இக் குழுவினருடன் சேர்ந்த பின்னர் இவருக்கு தவில் கலையில் 13வது வயதில் ஆசை ஏற்பட்டது. தான் ஒரு தவில் கலைஞனாக வரவேண்டும் என்ற கனவும் ஆரம்பித்தது.


இவரது வாழ்க்கையைப் பார்க்கும் போது எனக்கு ஞாபகத்துக்கு வருவது..., 'ஏழ்மையாக இருந்த ஒருவனுக்கு படிப்பே வரவில்லை. படிப்பை விட்டுவிட்டு வேலை தேடத்தொடங்கினான். அவனை பசியோ வாட்டியது. ஒரு நாடக அரங்கத்துக்கு சென்று அங்கு வருவோரின் குதிரைகளை பாதுகாப்பதுடன், மேலதிகமாக குளிப்பாட்டி சுத்தம் செய்து வைப்பான். அவனது தொழில் பற்றுக்கு அதிக வருமானம் கிடைத்தது. இறுதியில் அந்த தொழிலுக்கு முதலாளியாக வந்தான். அவன் வேறு யாருமில்லை, அவந்தான் உலகப்புகழ் பெற்ற சேக்ஸ்பியர் ஆவார்.' நல்ல மனதுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. இவர் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி பழனி, வாக்கர் கணேஷ் ஆகிய தவில் வித்துவான்களை ஆசானாகக் கொண்டிருந்தார். மனிதர்களைப் பொறுத்த மட்டில் நன்மைகளைச்செய்வதற்கு இயற்கை பல வழிகளைத் தந்துள்ளது. அதில் பிரதானமானது நாம் அடுத்தவருக்கு செய்யும் உதவியாகும். நாம் சேர்த்த சொத்துக்களை இல்லாதோருக்கு கொடுத்து நற்பயனைச் சேர்த்தல்வேண்டும். நாம் செய்யும் உதவிகள் ஒருபோதும் வீணாவதில்லை. செய்த உதவியானது செய்கின்றவரின் உயிரையும், குடும்பத்தையும் காக்கும் என்பது நிஜம். நாம் செய்கின்ற உதவியானது சரியானவர்களை சேரவேண்டும் நல்ல தேவையை பூர்த்தி செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் முன்வந்த நாதஸ்வர வித்துவான் செல்வராசா என்பவரின் உதவியுடன் தஞ்சாவூர் சென்று இரண்டு வருடங்கள் தவில் வித்துவான் தங்கவேல் என்பவரை குருவாக ஏற்று தவிலை நன்கு கற்று நாடு திரும்பினார். இவர் தன் இலட்சியத்தை அடைவதற்காக தவில் மேதைகளின் இசைத்தட்டுக்களை அடிக்கடி கேட்டு உள்வாங்கி வருகின்றார்.

தவில் கலை வாழ்வில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஆலய உற்சவங்கள், திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், பிரதான நிகழ்வுகள் என விரல் விட்டு எண்ணமுடியாத நிகழ்வுகளை சந்தித்துவரும் ஒரு தவில் கலைஞனாக இன்று மிளிர்ந்துகொண்டிருக்கும் சிவா என அன்பாக அழைக்கப்படும் சிறீதரன் அவர்களின் இசையால் கவரப்பட்டவர்கள் அவருக்கு பல்வேறு பட்டங்கள், பாராட்டுக்கள், வாழ்த்துக்களை வழங்கி கௌரவித்துள்ளனர். அந்த வரிசையிலே அகில இலங்கை ஆன்மீக சேவாசங்கம் 'சிறந்த சமூக ஆர்வலர்' என்ற பட்டத்தையும், சர்வதேச இந்துமத குருபீடம் 'லய ஞானமணி' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். அருள்மிகு சிறீமுத்துமாரியம்மன் திருக்கோவில், கலாபொக்க, மடுல்ல ஆலய பரிபாலனசபை, தோட்ட இந்துவாழ் சமூகம் இவரது தவில் இசையைப் பாராட்டி வாழ்த்து மடல் ஒன்றினையும், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் தொழிற்சாலைப்பிரிவு, பாராட்டுச்சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள். கடந்த வருடம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நவராத்திரி விழா நிகழ்வில் இவரது தவில் வாசிப்பை மெச்சி சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டார். 2015ம் ஆண்டு ரணில்விக்கிரமசிங்க பிரதமராக பதவி ஏற்ற பதவி ஏற்பு வைபவத்தில் தவில் கானமழை பொழிந்தமையைப் பாராட்டி சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி படத்துடன் வெளியிடப்பட்டிருந்தது.

எத்தகைய கொடிய மனம் கொண்டவரையும் மென்மனம் கொண்டவராக மாற்றும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இசைக் கலையை தன்னுடன் இணைத்துக்கொண்டமையை தனக்கு கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றார் சிறீதரன் அவர்கள்.

இவரது சிறந்த குணயியல்புகள் இவரது தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளது. பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே, நாம் வாழும் வாழ்வு அர்த்தமானதாக இருக்க வேண்டும். வாழ்ந்தோம் எனும் சொல்லுக்கும், வாழ்வு எனும் சொல்லுக்கும் ஒரு சிறப்பான அர்த்தம் இருக்கிறது. ஏதோ வாழ்ந்தோம் என்றில்லாமல் பலருக்கும் அர்த்தமாக வாழ்ந்தோம் என்று வாழ்வு இருக்கவேண்டும் என வாழ்பவர். 'நான் சாதிப்பேன்' என்ற உறுதியான எண்ணம் நெஞ்சில் கொழுந்துவிட்டு எரிய வேண்டும் உற்சாகம் எனும் அனலை எப்பொழுதும் அணையவிடக் கூடாது. சாதனையின் சிகரத்தை எட்டவேண்டுமானால், தடைகள் பலவற்றையும் ஒருவர் சந்திக்க வேண்டியது இயற்கையே என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர். திறமைகளை வளர்த்துக்கொண்டால் வெற்றி உறுதி என்பதில் தன்னம்பிக்கை கொண்டவர். சாதனைகள் தூரமில்லை என்பதில் உறுதி கொண்டவர். இவ்வாறான பண்புகளைக் கொண்டவர்தான் சிறீதரன்.

எதிர்காலக் கலைஞர்கள் நட்சத்திரமாக பிரகாசிக்க விரும்பினால் நீ யார் என்பது முக்கியமல்ல. உன் மனது எதை விரும்புகிறதோ அது நிச்சயம் உன்னை வந்து சேரும். கனவுகாண்! பின்னால், கனவுகளை எண்ணங்களாக்கி செய்கையாக்கு உரிய இடத்தை அடைவாய். மேலும் நல்ல குருநாதரை தெரிவு செய்யவேண்டும், ஒரே குருநாதருடன் கற்றலை மேற்கொள்ள வேண்டும், குரு பக்தி இருக்க வேண்டும், தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும், தொடர் கற்றலில் ஈடுபட வேண்டும். முழுமையாகக்கற்ற பின்தான் இக்கலைத் தொழிலில் காலடி எடுத்துவைக்க வேண்டும். உங்களையே நீங்கள் அறிந்துகொள்ளுங்கள் என்றார் சாக்கிரட்டீஸ். தன்னை அறிந்து கொள்ளாத எந்த மனிதனும் வாழ்க்கையில் வெற்றிபெறுவது சாத்தியமில்லை. உங்கள் தொழில் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பை தேடுவது அவசியம். வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும் என எண்ணாதீர்கள். சிலந்திப் பூச்சி வலை பின்னும் போது எத்தனை தடவை அது அறுந்துவிட்டாலும் அந்தத் தோல்வியில் அசராமல், விடாமுயற்சியுடன் தன் வலையைக்கட்டி முடித்துவிடுவதைப் போல் தன்னம்மிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் தொழிலில் ஈடுபட்டால் நீ சாதனைக்குரியவர்தான்.



natkunalingam@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



## யோகேஸ்வரி ஆனந்தசுந்தரம்

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி ஆனந்தசுந்தரம் அவர்கள் ஜனவரி 05, 2019 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நடராசா - நாகம்மா இணையரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி - தையல்நாயகி இணையரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், கிருஷ்ணராஜா, மங்களநாகநாயகி, வேதநாயகி, மிகிராணன், சுகுணராஜா, தேவநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரவியலஷ்சுமி, காலஞ்சென்ற தருமகிருஷ்ணர், சரோஜா, தேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதிகா, தியாகராஜா, மெய்யழகன், மதிவதனி, சிவகாமி, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடேசன், இந்திராவதி மற்றும் தங்கவேல், செல்வராஜா, காலஞ்சென்றவர்களான ஆனந்தகணேசன், பாக்கியலட்சுமி, சிவசுப்பிரமணியம் மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், இராசேஸ்வரி ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், வசந்தகோகிலம், ஜெயவதனி, விமலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் அபிஷேக், அஸ்விதா, குணதீபன் - சுகந்தனா, தவலக் ஷன், பிரியந்தனா, பவித்ரா, ஜனகன், அஞ்சலா, லக் ஷ்மன், அபிஷ்னன், ஹரணி, வருணன், ஐனுஜா, திவானி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு ஜனவரி 13ம் நாள் ரொறன்ரோவில் நடைபெற்றது.

கிருஷ்ணராஜா: 14163982450, 14165283416
வேதநாயகி: 14162657433,
சுகுணராஜா: 14167320714, 14167557664
மங்களநாகநாயகி: 94771304833
மிகிராணன்: 94776013985
தேவநாயகி: 94245681017



## ராஜலட்சுமி ராஜரட்டினம்

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜலட்சுமி ராஜரட்டினம் அவர்கள் ஜனவரி 26, 2019 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கொக்குவிலைச் சேர்ந்த அப்பாதுரை ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா இணையரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - ராஜரட்டினம் அவர்களின் அன்பு மனைவியும் ரஞ்சினி(பபி), நந்தினி(நந்தா), குமுதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணபாலசிங்கம், அ. முத்துலிங்கம், பாலசரஸ்வதி (பேபி), காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சீவரட்டினம், சுந்தரலிங்கம் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் சண்முகாதேவி, கமலேஸ்வரி, கமலரஞ்சனி, விவேகானந்தராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான பாக்கியதேவி, லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் யோகரத்தினம், ஶ்ரீதில்லை ஈஸ்வரன், மற்றும் காலஞ்சென்ற ரஞ்சித் ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜன்- ஜெசிக்கா, ரமணன் - மாதங்கி, மாதவன் - சுபா, பைரவி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் விக்னா - அனுஷா, பகிர் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் குமணன் - கிருஷாந்தினி, நகுலன் - குழலி, கர்ணன் - ரூபி, மோகன் - கோதை, ஜீவா - பரம், முகுந்தன் - சுகந்தி, ரமணன் - ராகினி, அருணன் - மஞ்சு, வைதி - பாலா, சஞ்சயன் ஆகியோரின் அன்பு மாமியும் அஞ்சலி, வினேஷ், சரினா, ரியா, பைரன், கைலன், அப்சரா, ரமணீசன், சுவாசினி, வத்சன் ஆகியோரின் பெரிய அப்பம்மாவும் ப்ரேடன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு ஜனவரி 30ம் நாள் ரொறன்ரோவில் நடைபெற்றது.

யோகரத்தினம், பபி: 14163356930
நந்தினி: 14164921966
குமுதினி: 14168902432
பாலசரஸ்வதி(பேபி): 14162923621
அ. முத்துலிங்கம்: 16472205555




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மரபுத் திங்கள் - 2019

**- கந்தசாமி கங்காதரன் -**

## மார்க்கம் பொங்கல் விழா

மார்க்கம் நகர சபையின் ஆதரவோடு தமிழ் மரபியற் பண்பாட்டு மையம், மார்க்கம் கலையரங்கத்தில் நடத்திய மார்க்கம் பொங்கல் விழாக் கலை நிகழ்ச்சிகள் சனவரி 13ம் நாள் ஞயிற்றுக்கிழமை நடைபெற்றன.

மார்க்கம் நகர முதல்வர், பிராந்திய சபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், யேர்க் பிராந்தியக் காவற்றுறை அதிகாரிகள் என்று பல்லின சமூகத்து விருந்தினர்களும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கலை நிழ்ச்சிகளில் தமிழ் மொழிக்கும் பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் வழங்கியதோடு தமிழ் அல்லாத மொழியிலான கலை நிகழ்வுகள் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருந்தன.

பறை முழங்க, ஆதிசிலம்பம் தற்காப்புக் கலைக் கூட்டத்தின் சிலம்பாட்டத்தோடு நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து வேணுகானாலய மாணவர் புல்லாங்குழல் இசைத்தனர். தென்னாசிய இசைக்கூட மாணவர் திரையிசை, தமிழிசைப் பாடல்களைப்பாடினர்.

கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதியை அழகான நாட்டியமாக அரங்கேற்றினர். கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்வதில் தொடங்கி மாதவியோடு போய் தவறுணர்ந்து திரும்பி வந்து கண்ணகி-யோடு சேரும்வரைவான கதை நடனமாக அனைவரையும் கொள்ளைகொண்டது. பரதாலயா நடனப்பள்ளி மாணவியர் துள்ளிசையோடு கூடிய ஒரு கிராமியப்பாடலுக்கு நடனமாடித் தாளம் போட வைத்தனர்.

அதைத் தொடர்ந்து, நாட்டிய சமர்ப் பணா கலைக்கூட மாணவியர், தாளவாத்தியங்கள் அதிர, சங்கம் முழங்க, பண்டைத் தமிழரின் போர்க்கருவிகளான வாள், வேலோடு கேடயத்தையும் கொண்டு ஒரு போர்க்களத்தையே மனக்கண் முன்கொண்டு வந்தனர். அதன் தொடர்ச்சியாக ஒரு திரைப்படத் தன்னம்பிக்கைப் பாடலுக்கான நடனத்தையும் நிகழ்த்தினர்.

ஸ்ரீ அபிராமி நடனக்கலைக்கூட மாணவியர் இரண்டு பாடல்களோடு தை மகளை வரவேற்றுப் பொங்கலையும் நடனத்தோடு கொண்டாடி மகிழ்ந்து அவையோரையும் மகிழ்வித்தனர்.

அடுத்து ‘தகிட நடனப் பள்ளி’ மாணவியர் பாம்பு நடனமொன்றை வழங்கினர். தமிழ் மரபியற் பண்பாட்டு மையத்தை வாழ்த்திப் பாடினர் ஓம் ஸ்ரீ சக்ர கான சபா மாணவியர்.

இவ்வளவு நேரம் நிகழ்ந்த நடன, இசை நிகழ்ச்சிகளுக்கு ஓர் இடைவேளை விட்டதுபோல தமிழ்ப் பூங்கா மாணவர் மூவர் தமிழர் மதங்கள், தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் பற்றிய ஒரு கலந்துரையாடலை ஆங்கிலத்தில் நிகழ்த்தினர். பார்வையாளர் மத்தியில் கலைநிகழ்ச்சிக-ளில் பங்கேற்க வந்த மாணவரும் இருத்திருக்கலாம்.

மீண்டும் தமிழிசைப் பாடல்களை வழங்கினர் கலா பிரம்ம இசைக் கல்லூரி மாணவியர். பாரதியார் பாடலும் இடம்பெற்றது.

தமிழ்ப் பூங்கா மாணவர் வழங்கிய வில்லிசை அவையோரை மிகவும் கவர்ந்ததை அவையோரிடமிருந்து அவ்வப்போது எழுந்த சிரிப்பு உறுதிப்படுத்தியது. திறமை மிக்க மாணவர்கள். நல்ல பயிற்சி.

மார்க்கம் முதியோரும் தமிழன்னையின் அணிகலன்கள் பற்றிய ஒரு நிகழ்வை வழங்கினர். அவர்களின் முயற்சியும் ஆர்வமும் மெச்சத்தக்கது. அந்நிகழ்வில் இரு மாணவியர் ஆடிய நடனமும் அருமை.

அடுத்து, நாட்டிய கலாஷேத்திரா மாணவியர் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலொன்றுக்கு நடனம் வழங்கினர் தொடர்ந்து, சிவசக்தி நுண்கலைக்கூட மாணவியர் நல்லதொரு நடனத்தை வழங்கினார். ஆனால் 3 தடவை இடைநடுவில் பாடல் நின்றுவிட்டது. பாடல் கோப்பில் சிக்கலாக இருக்கலாம். தடங்கல் ஏற்பட்டதும் அம் மாணவியர் அவையோரை நோக்கி வணங்கியபடி அசையாது நின்று பொறுமை காத்தமை பாராட்டுக்குரியது.


படம்: ஈகுருவி

அடுத்து அபிநயஷேத்திரா மாணவியர் உழவுத் தொழிலை மேன்மைப்படுத்தும் நடனத்தோடு தொடர்ச்சியாக தமிழ்மொழியை போற்றிப் புகழும் பாடலொன்றுக்கும் நடனம் வழங்கினர்.

இவ்வளவு நேரமும் பரதமும் கிராமிய நடனமுமாக இருந்த அரங்கு அன்றைய நிகழ்வில் அதுவரையிலும் இல்லாத ஒரு வகை நடனத்தைக் கண்டது. கவியாலயா நடனப்பள்ளியின் மாணவர் வழங்கிய ஒயிலாட்டமே அது. இங்கும் பாடல் தடைப்பட்டது. மாணவியர் பொறுமை காத்தனர். சிறப்பு. இத்தகைய பல்வேறு தமிழரின் பாரம்பரிய நடனங்களும் இவ்வாறான நிகழ்வுகளில் அடிக்கடி மேடையேற்றப்படவேண்டும்.

இவ்வாறாக முத்தமிழும் கலந்த கலை நிகழ்வுகள் அன்றைய விழாவை நிறைத்திருந்தன. 5 மணித்தியாலத்தையும் தாண்டிக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

நிகழ்வுகளின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம் என்பது அவையோரின் பரவலான கருத்து.

நிகழ்ச்சியை ஆங்கிலத்தில் தொகுத்து வழங்கிய வினோத் சுதாகரன் அருமையான ஒரு தேர்வு. நல்ல தெளிவான குரலும் கூட. சிலம்பம், பறை பற்றிய அவரது ஆங்கில விளக்கம் தமிழ் தெரியாதோருக்குப் பேருதவியாக இருந்திருக்கும். தமிழில் தொகுத்து வழங்கியவர் ஆண்டுதோறும் தனக்குத்தொகுத்து வழங்கும் வாய்ப்பு வழங்கப்படுவதற்காக விழாக்குழுவினருக்கு மேடையில் வைத்து நன்றி சொல்லத்தேவையில்லை.

பெரும்பாலான நுண்கலை ஆசிரியர்கள் இவ்வாறான நிகழ்வுகளுக்கு பயிற்சி, ஒத்திகை என்று கடும் உழைப்பின் பின்னரே கலைநிகழ்வுகளை எதுவிதமான எதிர் பார்ப்புமின்றி வழங்குகின்றனர். அவர்களது கலைப்பள்ளியின் பெயரையும் ஆசிரியர்களது பெயரையுமேனும் ஒழுங்காக, தெளிவாக அவையோருக்கு அறிவிக்க வேண்டியது விழாக்குழுவினரின் பொறுப்பு. தொகுத்துவழங்குவோருக்குத் தெளிவான தகவல்கள் வழங்கப்படவேண்டும். தொகுத்து வழங்குவோரும் அந்தப் பெயர்களைத் தவறின்றிச்சொல்ல அக்கறை எடுக்க வேண்டும்.

சிறப்பு விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு மாலையோ பொன்னாடையோ அணிவிக்கப்பட்டால் தமிழர் அல்லாதோர் பெரும்பாலும் மேடையை விட்டு இறங்கும் வரையில் அல்லது மண்டபத்தை விட்டு வெளியேறும் வரையில் அவற்றைக் கழற்றுவதில்லை. தமிழ்ச் சமூகத்து விருந்தினர்கள் குறைந்தது படம் எடுத்து முடியும் வரையிலாவது அவற்றைக் கழற்றாதிருக்கப் பழகவேண்டும்.

நாம் நடத்துவது தமிழ் மரபுத் திங்கள் நிகழ்ச்சியே என்பதை உணர்ந்து, அதைச் செயலிலும் காட்டும் மார்க்கம் தமிழ் மரபியற் பண்பாட்டு மையத்தினருக்குப் பாராட்டுகள்.

•

## உலகத் தமிழியல் மாநாடு:

கனடாத்தமிழ்க் கல்லூரி, அறிவகம் ஆகியன முதன்மையாகத் தமிழ் மொழியைக் கற்பிக்கின்ற நிறுவனங்கள். இவ்வளவு காலமும் தமிழ் மரபுத்திங்களைக் கொண்டாடிவிட்டு தமது நிறுவனங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்புச்செய்வதோடு தமிழ் மரபுத் திங்களை நிறைவு செய்துவந்தன. இந்த இரு நிறுவனங்களும் எப்போதோ செய்திருக்க வேண்டிய ஒரு பெரும் பணியைக் காலத்தாழ்த்தியேனும் இம்முறை செய்திருக்கின்றன. ஈழம், சிங்கப்பூர், அமெரிக்கா, கனடாவிலிருந்து தமிழ்அறிஞர்கள், ஆசிரியர்களை அழைத்து ‘தமிழியல்: இன்றும் இனியும்’ எனும் பொருளில் புலம் பெயர் சூழலில் தமிழ்க் கல்வியின் எதிர்காலம் பற்றிய அக்கறையோடு ஒரு மாநாட்டை அருமையாக நடத்தி முடித்திருக்கின்றன.

புலம் பெயர் சூழலில் தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், தமிழ் கற்போர், கற்போரின் பெற்றோர், தமிழ் ஆர்வலர்கள் எல்லோருக்கும் பயன்மிக்க ஆய்வுக் கட்டுரைகளை அழைக்கப்பட்டிருந்த பேராளர்கள் வாசித்தனர். முடிவில் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்களும் நிகழ்ந்தன.

இரு நாள் மாநாட்டில் பகலில் ஆய்வரங்குகள் நிகழ்ந்தன. முதல் நாள் மாலை நடந்த கலைநிகழ்ச்சியில், பறையிசை, வில்லிசை, நாட்டுக்கூத்து, சிலம்பம், கரகம், புலியாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, காவடி, கும்மி, கிராமிய நடனங்கள், பரதம் என்று பாரம்பரியத் தமிழ்க்கலைகள் பலவும் அரங்கேறின. மிகக் கவனமாகத் தெரிவு செய்யப்பட்ட கலை நிகழ்வுகள் அவை.

அந்நிகழ்வுகளை வழங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய அனைத்துக்கலைஞர்களுக்கும் பாராட்டுகள். கூடவே, சிறு சிறு குறைகள் இருப்பினும் இத்தகையதொரு மாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடித்த கனடாத்தமிழ்க்கல்லூரிக்கும் அறிவகத்துக்கும் பாராட்டுகள்.



gangatharan.k@thaiveedu.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51ம் பக்கத் தொடர்ச்சி...

## மொன்றியல் மாநகரில் தமிழ்மரபு திங்கள்!

அடிப்படையில் பல்வேறு நாடுகளையும், மொழிகளையும், கலாசாரத்தையும் கொண்டவர்கள் வசிக்கும் நாடாக விளங்கும் கனடாவைச் சேர்ந்த தமிழர்கள், அந்நாட்டிற்குச் செய்த பங்களிப்பையும் தமிழ் மொழியின் சிறப்பியல்புகள், கலாசாரம், பாரம்பரியம் போன்றவற்றைப் போற்றும் வகையிலும், எதிர்காலக் கனடிய சந்ததியினருக்கு அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதம் தமிழ் மரபுத்திங்களாகக் கொண்டாடப்படும் என்று அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் கடந்த 2016ம் ஆண்டு ஒக்ரோபரில் அறிவிக்கப்பட்டது.

மரபுத்திங்கள் நிகழ்வுகள் கனடாவில் பல்வேறுஇடங்களில் இடம்பெற்றாலும் அனைத்திற்கும் முன்னுதாரனமான நிகழ்வாக, கனடாவில் மட்டுமல்ல புலம்பெயர் தேச வரலாற்றிலேயே முதன்முறையாக மொன்றியல், கியூபெக்கில் உள்ள முப்பத்திரண்டு தமிழ் அமைப்புக்கள் ‘ஒற்றுமையே எங்கள் பலம்’ எனும் கோட்பாட்டில் ஒன்றிணைந்து நடத்திய ஒரு பெருவிழா, 13-01-2019 ஞாயிறு அன்று, “Le Château Royal மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

மண்டபத்தில் பார்க்கும் இடமெங்கும் நம் பாரம்பரிய, கலாச்சார உடைகளுடன் 1500ற்கு மேற்பட்டவர்கள் நிறைந்திருந்தார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின. லவால் கற்பகவிநாயகர் ஆலய பிரதமகுரு பாலசந்திர குருக்களின் ஆசி உரையைத் தொடர்ந்து, தாயகப்போரில் உயிர்நீத்த அனைத்து போராளிகளுக்காகவும் பொது மக்களுக்காகவும் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, திருமுருகன் கோவில் கலைநெறிக் கல்விக்கூட மாணவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்தும் கனடியத் தேசியப் பண்ணும் பாடப்பட்டன.

ரோறன்ரோவிலிருந்து சிறப்பு விருத்தினர்களாக வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் முன்னால் மாநகர உறுப்பினரும் இந்த தமிழ் மரபுத்திங்கள் உருவாக்கத்திற்கு காரணகர்த்தாவாக விளங்கியவருமான நீதன் சண் அவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள். அடுத்து, மதுராலயா நாட்டியப்பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினராக வருகைதந்த திரு. ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து, திரு நீதன் சண் அவர்கள், இவ்விழாவினை நடத்திய 32 அமைப்புக்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மொன்றியல் மக்களின் ஒற்றுமை பற்றியும் மரபுத்திங்களைப் பற்றியும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக கனடிய கலாச்சார, பல்கலாச்சார அமைச்சர் பப்லோ ரொட்ரியூஸ் அவர்களுடன், கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், கியூபெக் மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்கள், மொன்றியல், லாவல் மாநகரசபை முதல்வர்கள், உறுப்பினர்கள், கியூபெக் பல்லின நாடுகளின் சமூக தலைவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக பிரம்ரன் மாநகரசபை முதல்வர் கலந்து சிறப்பித்ததுடன், தனது உரையில் தாயகத்தில் 2009 நடைபெற்ற இனப்படுகொலை பற்றியும் நீதிவிசாரணை, பொறுப்பு கூறும் விடயத்திலும் இலங்கை அரசு காட்டுகின்ற அசமந்த போக்கினைக்கண்டித்ததுடன் முள்ளிவாய்க்கால் நினைவு மையத்தை அமைப்பதற்கான காணி ஒன்றினை வழங்குவதற்கான உறுதிமொழியினையும் வழங்கினார்.

•

## மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் பொங்கல் விழா:

மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் வருடாந்தத் தைப்பொங்கல் கொண்டாட்டம் வெள்ளிக்கிழமை 18.01.2019 ஆமடேல் மண்டபத்தில் (Armadale Community Centre, 2401 Denison Street, Markham) தலைவர் திரு.இ.சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

150க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். அங்கத்தவர்கள் பொங்கல், சிற்றுண்டிகள் கொண்டுவந்தும் நன்கொடைகள் வழங்கியும் விழா இனிதே இடம்பெற உதவினர்.

திரு. பொன்னையா விவேகானந்தனின் தைப்பொங்கலைப் பற்றிய விளக்கமான பேச்சு விழாவுக்கு மேலும் மெருகூட்டியது.

வழமைபோன்று அங்கத்தவர்களின் இன்னிசை விருந்தும் இடம்பெற்றது.

•

## ஸ்ரோவில் தமிழர்மரபு விழா:

கடந்த ஜனவரி 25ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்ரோவில் (Stouffville) பன்முகப் பண்பாட்டு மையத்தினர் இவ்வாண்டு தமிழர் மரபு விழாவைச் சிறப்பாக நடத்தினர். இவ்விழா Stouffville District Secondary Schoolல் நடைபெற்றது.

ஸ்ரோவில் பகுதியில் வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் நடத்துகின்ற 6வது தமிழர்மரபு விழா இதுவாகும். மிக அழகான, பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் விழா மண்டபமும் வெளிப்புறமும் அழகுபடுத்தப்பட்டிருந்தன. ஏறக்குறைய 700க்கு மேற்பட்ட மக்கள் அங்கே குழுமியிருந்தனர்.

ஸ்ரோவில் பகுதியையும் அதை அண்டிய பகுதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மத்திய, மாகாண, மாநகர அரசியல்வாதிகள் பலரும் அங்கு வந்திருந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். அவர்கள் தமிழர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பாராட்டி உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் உச்சச் சிறப்பு, மருத்துவர் திரு.வி.சிவமைந்தன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டமையே. யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான மறைந்த சு. வித்தியானந்தன் அவர்களின் மகனான திரு சிவமைந்தன் அமெரிக்காவில் மருத்துவராகப் பணியாற்றி வருகின்றார். இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய திரு.சிவமைந்தன், ரொறன்ரோ பல்கலைக்கழகத் தமிழ் இருக்கைக்காக 20,000 டொலர்களை வழங்கினார். பல்கலைக்கழகப் பிரதிநிதியாக வந்திருந்த Cynthia Foo இந்தத் தொகையை மேடையில் பெற்றுக்கொண்டார். கூடியிருந்த அவையோர் 6,000 டொலர்களை வழங்கினர். 26,000 டொலர் பணம் தமிழ் இருக்கைக்காக இந்த தமிழர் மரபு விழாவில் சேகரிக்கப்பட்டமை சிறப்பாக அமைந்தது.

தமிழர் மரபையும் பண்பையும் வெளிப்படுத்தி நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளின் நடுவே திரு. பொன்னையா விவேகானந்தன் தமிழ் இருக்கையின் முக்கியத்துவம் குறித்துச் சிற்றுரை ஒன்றை வழங்கினார்.

இந்த தமிழர் மரபு விழாவில் ஸ்ரோவில் பகுதியில் வாழும் முதியோர் வழங்கிய திரைப்பாடலொன்றுக்கான ஆடல் நிகழ்ச்சி எல்லோரையும் கவர்ந்தது.

இவ்விழா ஸ்ரோவில் பகுதித் தமிழ் மக்களை இணைப்பதாகவும் அதன்மூலம் பலர் பயன்பெறக்கூடியதாகவும் அமைந்திருந்தது.

•

## கனடியத் தமிழர் பேரவையின் பொங்கல் விழா:




கனடிய தமிழர் பேரவை தனது 12வது பொங்கல் விழாவை வழமை போல் கடந்த சனவரி 19, 2019 சனிக்கிழமை, மார்க்கம் நகரிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் கொண்டாடியது. தமிழரது கலை, கலாச்சாரங்களைப் பறைசாற்றுவதோடு, தமிழர் தெருவிழா உட்பட, கடந்த வருடம் பேரவை மேற்கொண்ட செயற்திட்டங்களையும் எடுத்துக்கூறிய இந்த விழாவில் மிகக்கடுமையான காலநிலையையும் பொருட்படுத்தாது 800க்கும் மேலான மக்கள் பங்குபற்றியிருந்தது பெருமைக்குரிய விடயம்.

இராவிருந்துடன் கூடிய இவ்விழாவில் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் றொட் பிலிப்ஸ், பிரம்டன் நகரமுதல்வர் பற்றிக் பிறவுண், ஸ்ரோவில் நகரமுதல்வர் இயன் லோவாட், ரொறன்ரோ பிரதி நகரமுதல்வர் மைக்கல் தொம்சன், மார்க்கம் பிரதி நகரமுதல்வர் டொன் ஹமில்டன், ரொறன்ரோப் பல்கலைக்கழக ஸ்கார் பரோ வளாக அதிபர் விஸ்டம் டெட்டி, நாடாளுமன்ற, மாகாணசபை, மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட்ட பல அரசியல்வாதிகள், பொதுச் சேவையாளர்கள், காவற்றுறையினர், ஊடகவியலாளர், வணிக சமூகத்தினர், சமூகத் தலைவர்கள், பல்வேறுபட்ட ஆசிய சமூகங்களின் தலைவர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

விழாவின் முக்கிய அம்சமாக, தமிழ் இசைக்கும் தமிழர்கள் தங்கள் இசைத் திறமைகளை உலக அரங்குகளில் மிளிர வைக்க சந்தர்ப்பம் வழங்கியமைக்குமாக இசையமைப்பாளர் டி. இமானுக்கு இவ்வாண்டுக்கான ‘மாற்றத்துக்கான தலைவர்கள்’ விருது வழங்கப்பட்டது. அதே வேளை, டி. இமான் அவர்கள் ரொறன்ரோ பல்கலைக்கழகத் தமிழ் இருக்கைக்காக ‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ்’ என்னும் பாடலொன்றை இலவசமாக உருவாக்கியதோடு, தன் கடுமையான வேலைப் பளுவையும் தள்ளி வைத்துவிட்டு இந்த விழாவுக்கு வந்து பாடல் இறுவட்டை வெளியிட்டும் உதவியிருந்தார். அத்தோடு, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்கார்பரோ வளாகத் தமிழ்க்கற்கையின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வரும் முனைவர் பிரெண்டா பெக் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான ‘மிகச்சிறந்த சேவைக்கான’ விருதும் வழங்கப்பட்டது. ரோறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மூலப்படிவங்களைப் பிரதியிட்டுப் பாதுகாக்கும் பணிக்காக முனைவர் பெக் அவர்கள் நான்கு லட்சம் டொலர்களை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

கனடிய தமிழர் பேரவையின் தலைவர் மருத்துவர் வடிவேலு சாந்தகுமார் இவ்விழாவில் பேசும்போது, இவ்வாண்டின் அதி முக்கிய நிகழ்வாக அமையப்போகும் முள்ளிவாய்க்கால் நினைவுகளின் 10வது ஆண்டு நிகழ்வுகளை கனடிய, உலகத் தமிழர்கள் மனதில் நிறுத்தி எமது மக்கள் அமைதியானதும், நீதியுடனுமான நிறை வாழ்வை அனுபவித்தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு எம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்.

இந்நிகழ்வின் விசேட அம்சங்களாக திருமதி ஜனனி குமார் அவர்களது சிலம்பொலி ஷேத்திரா நடனப் பள்ளி மாணவிகளின் நடனமும் திருமதி ஐஸ்வர்யா பிரபாகர் அவர்களது கரகாட்டம், சிலம்பாட்டமும் தலைமைத்துவம், மாற்றங்களுக்கான நடுவத்தைச் சேர்ந்த இளையோரின் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இப்பெருநிகழ்வைத் சாத்தியமாக்கிய பெருமை பெரும் புரவலர்களையும் விளம்பரதாரர்களையும் நலன் விரும்பிகளையுமே சாரும். இவர்களோடு கூடவே இந்நிகழ்வு வெற்றிகரமாக நிறைவேறப் பல தொண்டர்களினதும், குறிப்பாகப் பல இளையதலைமுறையினரதும் ஆர்வமான பங்களிப்பையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. கனடியப் பெரும் சமூகத்துக்கும் வருங்காலத் தமிழ்ச்சமூகத்துக்கும் இப்படியான விழாக்கள் தமிழர் கலாச்சாரம், வரலாறு பற்றிய பெருங்கதை சொல்லிகளாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

•

**வோட்டர்லூ தமிழ்**

தொடர்தல் 53ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52ம் பக்கத் தொடர்ச்சி...

## கலைப் பண்பாட்டுக் கழகத்தினரின் பொங்கல் விழா:

வோட்டர்லூ தமிழ் கலைப் பண்பாட்டுக் கழகத்தினரின் பொங்கல்விழா வெகு விமரிசையாக வோட்டர்லூ வட்டார மக்களினால் கடந்த 20.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 3:00 மணி முதல் Waterloo Christ Church மண்டபத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் பொங்கல் பொங்கியும் கோலாட்ட, கும்மி நடனங்களுடன் இசை நிகழ்வும் சிறுவர்கள் பங்கு கொள்ளும் சிறப்பு நிகழ்வுகளும் பார்வையாளர்கள் அனைவரும் பங்கு கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேள்விகள், விடுகதைகள் போன்ற நிகழ்வுகளும் எமது பாரம்பரிய அறுசுவை உணவை வாழையிலையில் பந்திபோட்டு வழங்கும் சிறப்பும் இடம்பெற்றன.

மிகவும் குளிரான காலநிலையிலும் வோட்டர்லூ, சுற்று வட்டாரங்களிலிருந்தும் பலர் சமுகமளித்து பொங்கல் விழாவினைச் சிறப்பித்தமை பாராட்டத்தக்கது.

•

## ரொறன்ரோ பல்கலைக்கழகம் கொண்டாடிய தமிழர் மரபுத் திங்கள் விழா:

கனடா அரசால் தமிழர் மரபுபுரிமை திங்களாக ஜனவரி அங்கீகரிக்கப்பட்ட பின்னர், முதற்றடவையாக ரொறன்ரோ பல்கலைக் கழக ஸ்கார்பரோ வளாகம், தமிழர் மரபு நிகழ்வை நடத்தியிருந்தது. பல்கலைக்கழக நிர்வாகமும் பல்கலைக்கழகத் தமிழ் இருக்கைக்கான வினையாற்று அணியினரும் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் ஸ்கார்பரோ வளாக முதல்வர் உட்பட பல பேராசிரியர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டிருந்தனர். கல்விச்சபை அறங்காவலர்களும் ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்து சிறப்பித்திருந்தனர்.

வழமைபோல் சம்பிரதாய நிகழ்வுகளுடன் தொடங்கிய விழாவில் சிறப்பாக அமைந்தது ரொறன்ரோப் பல்கலைக்கழகம் இசையமைப்பாளர் டி. இமான் அவர்களுக்குப் பல்கலைக்கழகம் வழங்கிய மதிப்பளிப்பு.

ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்காக ஒரு சிறப்புப் பாடலுக்கு இசையமைத்திருந்தார் திரு இமான். ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற இந்தப் பாடலை எழுதியவர் கவிஞர் யுகபாரதி. கனடா வந்து நிகழ்வுகளில் கலந்து கொண்ட டி. இமான், “இந்த இருக்கை அமைவதற்காகத் தொடர்ந்தும் உதவுவேன்” எனத்தெரிவித்தார். கூடவே, பல்கலைக்கழகமும் இருக்கைக்கான வினையாற்றுக் குழுவும் அவருக்கு ‘இருக்கைத்தூதுவர்’ (Ambassador of Tamil Chair) என்ற உயர் மதிப்பை வழங்கிச் சிறப்பித்தனர்.

பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரான திருமதி பிரன்டா பெக் அவர்களின் பங்களிப்பும் இந்த நிகழ்வில் சிறப்பானதாக இருந்தது. தனது உரையின்போது தமிழின் சிறப்புகளை எடுத்துச்சொன்னார். பொன்னிவள நாடு என்ற தான் எழுதிய ஆய்வு நூலின் வழியே வரும் பணத்தை இருக்கைக்காக அன்பளிப்புச் செய்வதாகவும் தெரிவித்தார்.

தமிழை வாழ்த்தி ஆடல்களும் நடைபெற்றன. திருமதி நிரோதினி பராராஜசிங்கம், திருமதி ஜனனி குமார் ஆகியோரின் மாணவியர் ஆடல்களை வழங்கினர். இது போன்ற நிகழ்வுகளில் முற்றிலும் மரபையும் மொழியையும் வெளிப்படுத்தும் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சிறந்தது.

நிகழ்வில் எல்லோரையும் கவர்ந்த விடயம், ‘பொன்னர் சங்கர்’ என்ற பொன்னிவள நாட்டு வீரர்களின் சிறப்பை மாணவர் வில்லுப் பாட்டாக எடுத்து வந்தமையே. ஆசிரியர் திரு. சண்முகநாதன் ரமணீகரன் இதை உருவாக்கியிருந்தார். அழகான தமிழில் நகைச்சுவை உணர்வோடும் வில்லிசைக்கே உரித்தான மரபுகளோடும் பாடி அசத்தினார்கள். அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இந்த வில்லுப்பாட்டு பல அரங்குகளில் நடைபெறவேண்டிய ஒன்றாகும்.

தமிழ் இருக்கை பற்றி இருக்கை ஒருங்கிணைப்பாளர் சிவன் இளங்கோ அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார். எழுத்தாளர் முத்துலிங்கம் அவர்கள் இமானுக்காக மதிப்பளிப்பை வழங்கினார்.

முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து இந்த நிகழ்வை சிறப்பித்திருந்தனர். எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக இந்த நிகழ்வுகளை முன்னெடுப்போம் எனப் பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்தது.




•

## நாடு கடந்த தமிழீழ அரசின் கனடாக்கிளை கொண்டாடிய தமிழர் மரபு விழா:

தை 13, 2019 அன்று ஸ்காபறோவில் Mary Ward கத்தோலிக்கப் பள்ளியில் நாடு கடந்த தமிழீழ அரசின் கனடாக் கிளையினர் கொண்டாடிய தமிழர் மரபு விழாவில் இளஞ்சிறார்களின் கலைநிகழ்வுகளுடன் சோக்கெல்லோ சண்முகம் குழுவினர் ‘கள்ளழகன்’ என்னும் வில்லிசை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. தமிழர் வாழ்வில் சொல்லப்படாத கதைகளைச் சொல்லுவது ஒரு வகையில் வரலாற்றுத் தேவையும் ஆகும். அதனைக் ‘கள்ளழகன்’ வில்லிசை செய்திருக்கிறது. அந்த வகையில் இதில் பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

•

## கனடா திருமறைக் கலாமன்றத்தின் மரபுத் திங்கள் விழா 2019:

கனடா திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கிய பொங்கல் விழா 2019, சனிக் கிழமை சனவரி 12ம் நாள் மாலை, மிகச் சிறப்பாக நடைபெற்றுது.

700க்கும் அதிகமான இருக்கைகளைக் கொண்ட ஸ்காபரோ - சிறீ சத்ய சாய்பாபா மண்டபத்தில், மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில், பொங்கல், மரபுரிமை பற்றிய தலைப்புக்களில் மட்டுமே பின்னப்பட்ட முத்தமிழ் நிகழ்வுகளை உள்ளடக்கி, கனடா திருமறைக் கலாமன்ற நிர்வாகத்தினர், மிக நேர்த்தியாக விழாவை நடத்தியிருந்தார்கள்.

எம்தோள் எழுந்தது, எஞ்சுவோர் எவருமில்லை என்று கூறி, பொங்கலோ பொங்கல் என்ற இனிய வாழ்த்துகளை, கனடா திருமறைக்கலாமன்றத்தின் சார்பில் வழங்கி, நிகழ்ச்சிகளுக்குள் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

பொங்கல் விழா, சூரியனுக்கான விழா, உழவர்களுக்கான விழா. இதைப் பிரதிபலிக்கும் வகையில் மேடையமைப்பு மிக இலாவகமாக உருவாக்கப்பட்டிருந்தது. மண்டப வாயிலில் அழகான மரபுக் கோலம் மக்களை வரவேற்றது. மண்டப வாயிலில், அழகான தமிழ் உடைகளில் சின்னஞ்சிறு மழலைகள் முதல் பெரியோர் வரை அனைத்து வயதிலும் தமிழ் உடை அணிந்து, நிரைகோர்த்து வர, அவர்கள் முன்னே, விவசாயியாக வேடமேற்ற ஒருவர் பொங்கல் பானையை ஏந்திவர, இரு பெண்கள் தட்டங்களில் தமிழுணவு, ஆரத்திப் பொருட்களைக் கையிலேந்தி பவனிவர, அழகான தமிழ்ப் பாடலுடன் ஊர்வலம் மண்டபத்தினுள் நுழைந்தது. ஊர்வலத்தில், கனடியக் கொடி, திருமறைக் கலாமன்றக் கொடி, மரபுத் திங்கள் கொடி ஆகியவற்றை மூன்று இளைஞர்கள் ஏந்தி வந்தார்கள். தமிழுணர்வு பொங்க நிகழ்வுகள் ஆரம்பித்தன.

அழகான தமிழிசையான பறை இசை முழங்க, மேடையில் இளைஞர்கள் பறை அடித்தபடி நடனமாடினர். தொடர்ந்து, பஞ்ச பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை மனிதவாழ்வில் எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றன என்றும், தமிழ் பாரம்பரியத்தில் பஞ்ச பூதங்களுக்கு காலாகாலமாக வழங்கப்பட்டுவரும் முக்கியத்துவம் குறித்தும் சுருக்கமான கானமும் காட்சியும் வழங்கப்பட்டது.

ஆசியுரையை வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவான சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்களும் தூய ஆரோக்கிய அன்னை தமிழ்க் கத்தோலிக்கப் பங்குத்தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரும் வழங்கினர்.

தொடர்ந்து தமிழ் மணம் கமழும் அழகான பாடல்கள், சிறந்த நடனங்கள், தமிழ் கவிதைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் சிறிய நாடகங்கள் போன்றவை சிறப்பாகக் கோர்க்கப்பட்டு மேடைக்கு எடுத்துவரப்பட்டன. பொங்கல், தமிழ்மொழி குறித்த சிறார்களின் சிற்றுரைகளும் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தன.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, கனடிய மண்ணில் மிக நீண்ட காலம் தொண்டாற்றும் நான்கு பிரமுகர்களும், பாரம்பரிய தமிழ்க் கலைகளுக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் பிரமுகர் ஒருவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, மிக நீண்டகாலமாக கனடா திருமறைக் கலாமன்றத்தின் வளர்ச்சிக்காக பேராதரவு வழங்கி வருபவரும் சட்டத்தரணியுமான திரு. நாதன் சிறீதரன் அவர்களும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ கரி ஆனந்தசங்கரி, மாகாணசபை உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம், அருட்திரு பீற்றர் ஜித்தேந்திரன், அருட்திரு ஸ்ரனிஸ்ரன், திரு.லேனாட் செல்வரட்ணம், மருத்துவர் போல் ஜோசப், திருமதி. ஜெயசீலி இன்பநாயகம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

1965ம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும், அளப்பரிய கலைப்பணிகளைப் புரிந்து வருகிறது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனரான அருட்கலாநிதி மரியசவிரி அடிகள், யாழ் பல்கலைக் கழகம் உட்பட, இலங்கை இந்திய பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், பிலிப்பைன்ஸ் போன்ற உலகளாவிய பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்த நெறிக்கான பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். தொடர்ந்தும் பல பல்கலைக் கழகங்களின் கௌரவ பேராசிரியராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். மன்ற இயக்குனரின் கலை, கல்வி, தமிழ்மொழி, சைவசித்தாந்தம் போன்றவற்றிற்கான அளப்பரிய பங்களிப்புக்காக, பல்வேறு பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இயக்குநரின் வழிகாட்டுதலில், கனடா திருமறைக் கலாமன்றத்தை, அதன் நிர்வாக உறுப்பினர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி சீரிய கலைப்பணி புரிந்து வருவது பாராட்டிற்குரியது.

மிகச்சிறந்த ஒரு கலைவிழாவை முத்தமிழும் இனிக்கும் தமிழ்ச்சுவையோடு வழங்கியதற்காக கனடா திருமறைக் கலாமன்றத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உதயணன் -

# எங்கே போகிறோம்?

விமானத்தில் பறந்து கொண்டு இருக்கிறோம். விமானம் நிறையப் பயணிகள் இருக்கிறார்கள். சுற்றிவரப் பார்த்தால் எனக்குப் பக்கத்தில் என் மனைவியும் எங்கள் மூன்று பிள்ளைகளும் இருக்கிறார்கள். எல்லோரும் ஆசிய நாட்டவர் போலத் தெரிகிறது. நான் என் மனைவியைப் பார்த்துக் கேட்டேன்? "நாங்கள் எங்கே போகிறோம்?"

அவள் இரண்டு கைகளையும் விரித்து, 'எனக்குத் தெரியாது,' என்பது போலத் தலையை அசைத்தாள். எனது குரல் கேட்டு முன் ஆசனத்தில் இருந்த முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் என்னை எட்டிப் பார்த்தார். அவருடைய பேச்சு, நடை, உடை பாவனைகளைப் பார்த்தால் முதல் முறையாக விமானத்தில் ஏறி இருப்பவர் போலத் தெரிந்தது. அவர் சிரித்து விட்டு, "இது கூட உனக்குத் தெரியாதா? வெளிநாட்டுக்கு போகிறோம். உழைக்கப்போகிறோம். காசு, பணம், வட்டி!"

"எப்படி?"

"முட்டாள், முட்டாள்! இது கூடவா தெரியாது? எங்களுடைய மொழி, கலை, கலாச்சாரம் என்று எவ்வளவு இருக்கிறது? அதுகளைக் கைகழுவி வித்துப் போட்டு..." என்ற அவர் முடிப்பதற்குள் ஒரு மணிச் சத்தம் கேட்டது. 'ஓ, மணி அடிக்கிறது. யாரோ இறங்கப் போகிறார்கள். ஆனால் பஸ் வண்டியைப்போல, விமானத்தில் மணி அடித்து வெட்டவெளியில் இறங்க முடியாதே' என்று எண்ணிக் குழம்பிக் கொண்டு இருக்கையில் மீண்டும் மணிச்சத்தம், 'ஓ, தொலைபேசி அடிக்கிறது' நான் சட்டென்று எழுந்து கட்டிலில் உட்கார்ந்தேன். "நான் விமானத்தில் பேசிக் கொண்டிருந்தது எல்லாம் கனவா?" ஓடிப்போய்த் தொலைபேசியை எடுத்துக் "ஹலோ" என்றேன்.

"மாமா, நான் அறிவழகன் பேசுறன். உங்களாலை உடனடியாக யாழ்ப்பாணம் வர முடியுமா?" என்று கேட்டான். இதைக்கேட்டதும் எனக்கு முற்றாக விழிப்பு வந்துவிட்டது.

"என்னப்பா பிரச்சினை? இப்ப இஞ்சை கனடாவிலை இரவு பன்ரண்டு மணி. நீ எங்கேயிருந்து பேசுறாய்? லண்டனிலை இருந்தா?"

"இல்லை மாமா. நான் ஊருக்கு வந்திட்டன். நாலைஞ்சு நாளுக்கு முந்தி தங்கச்சி தமிழரசி ரெலிபோனில் அம்மாவுக்குக் கடுமையான சுகவீனம் என்று சொல்லி அழுதாள். அப்பா போன பிறகு எங்களுக்கு அம்மாதானே எல்லாம். எனக்கு மனம் பொறுக்கேல்லை மாமா. உடனே புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்திட்டன் மாமா" என்று அவன் தன் தாயின் சுகவீனம் பற்றிச் சொன்னபோது அவனுடைய குரல் கம்மியது.

"சரி, சரி. கவலைப்படாதை. நான் கெதியாய் அங்கை வாறன். தங்கச்சி தமிழரசியைக் கூப்பிடு. அவளை ரெலிபோனிலை பேசச் சொல்லு," என்றேன்.

தமிழரசி வந்து போனைக்கையில் எடுத்ததும், "மாமா" என்று கதறி அழத் தொடங்கி விட்டாள்.

நான் அவளைச் சமாதானப்படுத்தி, "அழாதையம்மா. அம்மாவுக்கு என்ன நடந்தது? விபரமாகச் சொல்லம்மா" என்று கேட்டேன்,

அவள் அழுதழுது நடந்ததைச் சொன்னாள். அவளுடைய அம்மா, அதாவது எனது அக்கா, இரண்டு மூன்று நாட்களாகத் தலையைச் சுற்றுகிறது என்று சொல்லிக் கொண்டு இருந்தாவாம். ஒரு நாள் திடீரென இரண்டு மூன்று தரம் சத்தி எடுத்திருக்கிறா. சத்தியில் கொஞ்ச இரத்தமும் இருந்ததாம். திடீரென்று மயங்கி விழுந்து விட்டாவாம். அவள் உடனே தாயை எங்கள் குடும்ப வைத்தியர் 'டொக்டர்' பொன்னம்பலத்திடம் கொண்டு போயிருக்கிறாள்.

அவர் சோதனை செய்து, தேவையான மருந்துகளைக் கொடுத்து, "பயப்படாதை, சுகமாகிவிடும். ஏதாவது வித்தியாசமாகத் தெரிந்தால் உடனே இஞ்சை கொண்டு வா. இரண்டு மூண்டு நாளைக்கு யாராவது பெரியவர்களை வீட்டில் துணைக்கு வைத்துக் கொள்ளுறது நல்லது" என்றாராம்.

தமிழரசி உடனே லண்டனில் இருந்த தமையன் அறிவழகனைத் தொலைபேசியில் அழைத்துக் கதறியிருக்கிறாள்.

நான் சிரித்தேன். "என்னக்கா, நாங்கள் இளம் வயதில் விளையாட்டாகச் செய்த ஒப்பந்தம் ஒன்று நினைவிருக்கிறதா? தமிழரசி பிறந்திருந்த நேரம். நானும் என் மனைவியும் புகழேந்தியும் உங்களைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தம். அப்ப அவனுக்கு இரண்டு வயது. யாரோ 'மாப்பிள்ளை புகழேந்தி வந்திருக்கிறாக... ஒருக்கால் சிரிம்மா' என்று கேலி செய்ய... தமிழரசி தனது பிஞ்சுக் கால்களை உதறி

கனடாவுக்குத் திரும்ப ஆயத்தமானேன். அக்கா மீண்டும் புகழேந்தி-தமிழரசியின் விவாகம் பற்றிப் பேச்செடுத்தார். "வேலைப் பராக்கிலை கல்யாண அலுவலை மறந்து விடாதை. டொக்டர் பொன்னம்பலம் என்ன தான் ஆறுதல் சொன்னாலும், எனக்குப் பயமாய் இருக்கிறது. இவளை இப்படியே விட்டுவிட்டு நான் செத்துப் போனால்,



அக்கா படிப்படியாகக் குணமாகி வழமையான வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார். நானும் கனடாவில் போட்டதைப் போட்டபடி விட்டுவிட்டு யாழ்ப்பாணம் வந்து இரண்டு கிழமைகள் ஆகிவிட்டன. ஒரு நாள் நான் கனடாவுக்குத் திரும்புவதுபற்றிப் பேச்சு வந்தது.

அக்கா, "எல்லாம் சந்தோசம். இவள் தமிழரசி அவசரப்பட்டு உன்னையும் அறிவழகனையும் கூப்பிட்டு, உங்களுக்கு வீண் அலைச்சலையும் செலவுகளையும் உண்டாக்கிவிட்டாள். எனக்கு ஒரேயொரு கவலைதான். தமிழரசிக்கும் ஒரு கல்யாணம் முடிந்து விட்டால் எனக்கு முழு நிம்மதி கிடைத்துவிடும்" என்று சொன்னார்.

'களுக்' என்று சிரித்தாள். நினைவு இருக்கிறதா?"

இப்பொழுது வளர்ந்து இளம் பெண்ணாகி விட்ட தமிழரசி அங்கே வந்தாள். நான் தமிழரசியைக்கூப்பிட்டு, "தமிழரசி, உனக்கும் உன் அத்தான் புகழேந்திக்கும் கல்யாணம் பேசிக்கொண்டிருக்கிறோம். சம்மதம்தானே" என்று கேட்டேன்.

அவள், "போங்க மாமா" என்று நெளிந்தாள். அவளுடைய வெண்ணிறக் கன்னங்கள் செந்நிறமாகின. அவள் கிராமத்தில் அடக்க ஒடுக்கமாக வளர்ந்த பெண். அப்படித்தான் இருப்பாள்.

அக்காவுக்கு நல்ல சுகமாகிவிட்டது. நான்

என்ரை உயிர் அடங்காது தம்பி" என்று தழுதழுத்த குரலில் அக்கா கவலைப் பட்டார்.

நான் அக்காவை மனதாரச் சமாதானப் படுத்தினேன். "கவலப்படாதை அக்கா, நான் கனடா போனதும் என் மனைவி வளர்மதியுடனும் மகன் புகழேந்தியுடனும் ஆலோசித்து ஒரு கல்யாண நாளை முடிவு செய்து உங்களுக்குத் தெரிவிக்கிறேன். எங்களுக்கும் கனடாவில் பல தமிழ்க் குடும்பங்களுடன் தொடர்புகள், உறவுகள், குடுக்கல் வாங்கல்கள் இருக்கு. அதனாலை கலியாணத்தை முதலிலை இஞ்சை செய்வம். எங்கட அப்பா, அம்மா கும்பிட்ட இந்தச் சிவகாமியம்மன் கோயிலிலை பெரிய

தொடர்தல் 57ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

## என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

# 416.873.5780

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply



KAPITAL CARE MORTGAGE INC. Lic-12623

**Kethes**

**Sivasubramaniyam AMP**

*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்

கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

**CALL NOW 647 313 4701**



RAGULAN KUGANATHAN
REAL ESTATE REPRESENTATIVE
+94 77 227 6639



THEEBARAJ CHANTHIRALOGAM
REAL ESTATE REPRESENTATIVE
+94 77 227 6181



LAND FOR SALE
IN KAITHADY
**RS. 7,200,000 CAD $53,730**



HOUSE FOR SALE
IN MULLAITIVU
**RS. 7,000,000 CAD $52,095.73**




2 STORY COMMERCIAL SPACE
FOR SALE IN MULLAITIVU
**RS. 100, 000,000 CAD $744,730.37**



BEAUTIFUL HOUSE FOR SALE
IN MANNAR
**RS. 16,500,000 CAD $122,741**



LAND FOR SALE IN NEAR
PALANIAANDAVAR KOVIL, IRUPALAI
**RS. 3,500,000 CAD $19,402**



LAND FOR SALE
IN IYAKKACHCHI – PALAI
**RS. 3,400,000 CAD $25,318.30**



LAND FOR SALE
IN CHAVAKACHERI
**RS. 3,000,000 CAD $22,340**



LAND FOR SALE
IN KOKKUVIL
**RS. 6,000,000 CAD $43,907.66**



LAND FOR SALE
IN HOSPITAL ROAD
**RS. 20,000,000 CAD $147,218.11**



LAND FOR SALE
IN VALALAI
**RS. 3,000,000 CAD $22,725**



LAND FOR SALE
IN IRUPALAI
**RS. 11,000,000 CAD $83,780**



HOUSE FOR SALE
IN ARIYALAI
**RS. 6,000,000 CAD $49,100**



LAND FOR SALE
IN POINT PEDRO
**RS. 2,500,000 CAD $18,667.42**



LAND FOR SALE
IN SANKOLAI, MAVIDDAPURAM
**RS. 7,700,000 CAD $57,416.14**



BEAUTIFUL HOUSE FOR SALE
IN ARALI, JAFFNA
**RS. 8,000,000 CAD $61,100**



LAND FOR SALE
IN TELLIPALAI EAST
**RS. 15,000,000 CAD $113,680**



LAND FOR SALE
IN TELLIPALAI EAST
**RS. 5,300,000 CAD $40,155**



LAND FOR SALE
IN VASAVILAN WEST, JAFFNA
**RS. 3,300,000 CAD $25,150**



SOLD

...ND FOR SALE
IN TEMPLE ROAD
**RS. 25,500,000 CAD $186,650**



SOLD

HOUS... ...ITH SHOP FOR SALE
IN ALAVEDDI
**RS 5,000,000 CAD $37,222**



SOLD

...USE FOR SALE
IN SANGILIYAN ROAD, JAFFNA
**RS. 17,500,000 CAD $132,490**



KKS ROAD FACING COMMERCIAL
BUILDING FOR RENT
**RS. 120,000 CAD $891.92**



HOUSE FOR SALE
IN POINT PEDRO
**RS. 3,500,000 CAD $26,144.98**



LAND FOR SALE
IN PALALY SOUTH
**Rs. 2,500,000 CAD $18,900**

## வீடு காணி வியாபாரம் வாங்க விற்க

**RE/MAX**
**NORTH REALTY**

நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்...

**+94 77 566 0000 / 416 230 7007**

No: 83, Kannathiddy Road, Jaffna, Sri Lanka | www.remaxnorth.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறோம்...

54ம் பக்கத் தொடர்ச்சி...

பந்தல் போட்டு, அம்மனுக்கு விசேட அபிஷேகங்கள் செய்து, எல்லாச் சொந்தங்களையும் கூப்பிட்டுச் சாப்பாடுபோட்டு அம்மனுடைய ஆசீர்வாதத்துடன் இந்தக் கல்யாணத்தைச் சிறப்பாகச் செய்ய வேணும் எண்டு எனக்கு ஆசை. பிறகு, உங்களையும் நெருக்கமான சொந்தங்கள் சிலரையும் கூட்டிக் கொண்டு கனடாவுக்குப் போய் அங்கேயும் கொண்டாடுவம்"

அக்கா அண்ணாந்து வானத்தைப் பார்த்துத் தனது இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டார். பின்னர் எனது இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டு "தம்பி" என்று நாத்தழதழக்க அழைத்தார். "நீ இருக்க எனக்கு என்னடா குறை?" என்று உருகினார். கண்ணீர் அவருடைய இரு விழிகளையும் கலக்கி வழிந்தது.

நான் இரவு ரயிலில் பயணித்து அடுத்த நாள் காலை கொழும்புக்கு வந்தேன். இரவு ஒன்பது மணிக்குத்தான் கனடா விமானம் என்றார்கள். கொழும்பில் ஒரு நாள் சுற்றலாம் என்று உற்சாகமாக இருந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிரே தெருவுக்கு மறுபக்கம் ஒரு தமிழ்ச் சாப்பாட்டுக் கடை தெரிந்தது. தெருவைக் கடந்து உள்ளே போய்க் காலை உணவை முடித்துக் கொண்டேன். அங்கே தோசை நன்றாக இருந்தது. சாம்பார்தான் பழங்கஞ்சி மாதிரி. அந்தக் கடைக்குள் ளேயே முகப்பில் ஒரு சின்னக்கடை இருந் தது. அதில் இருந்த ஒரு இளைஞன், நான் என்னுடைய பெட்டிகளை இழுத்துப் பறித் துக் கொண்டிருந்ததைப் பார்த்து, "ஐயா, ரக்ஸி ஏதாவது வேணுமா?" என்று அன்பாகக் கேட்டான்.

"ஓமப்பா. எனக்கு இரவுதான் ஃப்ளைட். பகல் முழுக்கக் கொழும்பில் சில வேலைகள் இருக்கு. யாராவது நல்ல 'ரக்ஸி'க் காரரைத் தெரிந்தால் சொல்லு" என்றேன். அவன் வெளியே எட்டிப் பார்த்து, "முருகையா" என்று கூப்பிட்டான். இன்னொரு இளைஞன் ஓடி வந்தான். அவனுக்கு விபரம் சொன்னதும் அவன் உற்சாகமாக "வாங்கையா" என்று சொல்லி எனது பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

முதலில் வெள்ளவத்தையில் இருந்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்குப் போனேன். அதன் செயலாளர் கந்தசாமி மாஸ்ரரைச் சந்தித்து வெகு நேரம் பேசினேன். அவர் எங்கள் ஊரவர். அவர் 'எழுத்தாளர் சிற்பி கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியத்துக்காக கொட்டாஞ்சேனையில் மகன் வீட்டில் தங்கியிருக்கிறார்' என்று சொன்னார். உடனே ரக்சியில் ஏறி அந்த ஐம்பது வருட கால நண்பரைத் தேடி ஓடினேன்.

திரும்பி வரும் வழியில் பிள்ளைகளுக்குப் பிடித்தமான துணிமணி நிறைய வாங்கினேன். அதிலும் என் அக்கா மகளைக் கட்டப் போகின்ற என் மூத்த மகன் புகழேந்திக்கு நிறைய வாங்கினேன். மனைவி வளர்மதிக்கு எதுவும் வாங்கவில்லையே என்றதும் மனம் 'திக்' என்றது. "முருகையா, திருப்பட்டா ரக்ஸியைச் செட்டித் தெருப் பக்கம்" என்று உளறினேன்.

பிறகு ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போய் நானும் முருகையனும் நன்றாகச் சாப்பிட்டோம். ஆளுக்கு ஒவ்வொரு ஐஸ்கிறீம் வாங்கி நாவால் தடவி உறிஞ்சி உறிஞ்சி அனுபவித்தோம். எனக்கு 'சுகர்' பிரச்சினை உண்டு. வீட்டுக்குப் போன பின்னர் வளர்மதி கண்ணிலும் காட்ட மாட்டாள். "ஹலோ தம்பி, ராசா, சுப்பராய் இன்னும் இரண்டு ஐஸ்கிறீம் கொண்டாங்க"

பழைய பாசத்தால் வீரகேசரி ஞாயிறு பதிப்பு ஒன்றை வாங்கிக் கைப்பையில் திணித்துக் கொண்டேன்.

முருகையன் சரியான நேரத்தில் ரக்ஸியைக்கொண்டு வந்து விமான நிலையத்தில் நிறுத்தி விட்டுப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்து விட்டுத் திரும்பி வந்து எனக்கு முன்னால் கைகட்டிக் கொண்டு நின்றான். நான் மீற்றரைப் பார்த்துச் சில நோட்டுகளை எடுத்து இரண்டாய் நாலாய்ப் மடித்து அவனுடைய உள்ளங்கையில் வைத்துத் திணித்து, "மிச்சத்தை நீ வைத்துக்கொள்" என்று சொல்லி அவனுடைய தோளைத் தட்டினேன்.

அவன் கண்களில் நீர் மல்கக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான். நல்ல பையன், ஒருவனுக்கு சின்ன வயதிலேயே இவ்வளவு பணிவும் நேர்மையும் பொறுப்பும் இருந்தால் பிற்காலத்தில் அவன் நல்லவனாய் வருவான். இவனுடைய பெற்றோர் ஏதோ ஒரு பிறப்பில் பெரும் தவம் செய்தவர்கள்.

அதிகாலை மூன்று மணிக்கு விமானம் கனடா விமான நிலையத்தில் வந்து இறங்கியது. நான் கொண்டு வந்த பொருள்-பண்டங்களைத் தேடி எடுத்துக் கொண்டு, விமானநிலைய தரிப்பிடத்தில் விட்டு விட்டு வந்த காரில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டேன். மனைவி வளர்மதியைத் தொலைபேசியில் கூப்பிட்டு அரை மணி நேரத்தில் வீட்டுக்கு வந்து விடுவேன் என்று சொன்னேன். ஆனால் நான் காரை ஓட்டிய வேகத்தில் வீடு போய்ச்சேர இரண்டு மணித்தியாலங்கள் ஆகும் போலிருந்தது. மனம் அவ்வளவு பாரமாக இருந்தது.

என் மனைவி வளர்மதி நல்லவள், புத்திசாலி, குறிப்பறிந்து நடப்பவள், என்னில் உயிரையே வைத்திருந்தாள். எனது கண்கள் கலங்கினால் அவள் கதறி விடுவாள்.

நான் கொழும்பில் ஒரு லண்டன் கொம்பனியில் நல்ல பதவியில் இருந்த போது, எங்களில் ஐவரைத் தெரிவுசெய்து, அவர்களில் ஒருவருக்குப் பதவி உயர்வு தந்து, லண்டன் தலைமையகத்துக்கு மாற்றுவதற்கு ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்த ஐவரில் நானும் ஒருவனாக இருந்தேன்.

இந்தக் கட்டத்தில்தான் அப்பாவும் அம்மாவும் வளர்மதியின் புகைப்படத்தைக் கொண்டு வந்து எனக்குக் காட்டி கல்யாணம் பேசினார்கள். நான் லண்டன் பதவியைப் பற்றி விளக்கியதும் அவர்கள், "உன் விருப்பப்படி செய்யப்பா" என்று சொல்லிக் கல்யாணப் பேச்சைக் கைவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஒரு நாள் நான் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் தொலைபேசி அடித்தது. வரவேற்பறையில் கடமையில் இருந்த பெண் பேசினாள். "உங்களைச் சந்திக்க ஒரு பெரியவர் வந்திருக்கிறார். நீங்கள் 'பிஸி'யாக இருக்கிறீர்கள் என்று தெரியும். உங்களைப் பார்ப்பதற்காகவே ஊரிலிருந்து வந்ததாகச் சொன்னார். உட்கார வைத்திருக்கிறேன். வர முடியுமா?" என்று கேட்டாள்.

"சரி. இதோ வருகிறேன் உட்காரச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு மாடிப்படிகளில் இறங்கினேன். வரவேற்பறையில் 50-60 வயது மதிக்கத் தக்க ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். எனவே நேராக அவரிடம் போய் "நான்தான் சிவநேசன். என்னையா பார்க்க வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

'ஆமாம்' என்னும் பாவனையில் தலையை ஆட்டிக் கொண்டு எழுந்தவர், ஒரு புன்னகையுடன், "அந்த நாட்களில் நாங்கள் அப்பாவின் பெயரைச் சொல்லித்தான் எங்களை அறிமுகப்படுத்துவோம். இன்றைக்கு பிள்ளைகளின் பெயரைச் சொல்லி எங்களை அறிமுப்படுத்த வேண்டிய சூழ்நிலை. நான் வளர்மதியின் அப்பா" என்றார்.

"ஓ, உட்காருங்கள். அப்பா, அம்மாவிடம் நான் லண்டன் போகக் கூடிய வாய்ப்பு உட்பட எல்லாம் விபரமாகச் சொல்லியிருந்தேனே" என்று கூறிக் கொண்டு பக்கத்து நாற்காலியில் நானும் அமர்ந்தேன்.

"சொன்னார்கள். ஆனாலும் ஒரு விடயத்தை உங்களிடம் நேராகச் சொல்லி விட வேண்டும் என்று நெஞ்சுக்குள் ஒரு தவிப்பு. அதனால் நேரில் வந்தேன்".

"சொல்லுங்கள்".

"ஒரு பிரபலமான சோதிடரிடம் உங்கள் இருவருடைய சாதகங்களையும் காட்டினேன். அவர் 'இவ்வளவு சிறப்பான விவாகப் பொருத்தங்கள் அமைவது அபூர்வம். எண்பது தொண்ணூறு வயது வரை நீண்ட ஆயுளுடன் ஒற்றுமையாகச் சந்தோசமாக வாழ்வார்கள்' என்று சொன்னார். நான் இன்னமும் சோதிடத்தை நம்புகின்ற பழைய காலத்து மனுசன். இந்தச் செய்தியை உங்களுக்கு எனது வாயால் சொல்ல வேண்டும் என்று இந்தப் பாழ்பட்ட மனம் துடித்தது, அவ்வளவுதான். நான் வருகிறேன்" என்று எழுந்தார்.

நானும் எழுந்து நின்று கைகூப்பி வணங்கி, "போய் வாருங்கள்" என்றேன். இரண்டு அடிகள் எடுத்து வைத்தவர் சட்டென்று நின்று "ஒன்றை மறந்து விட்டேனே, சீதனம் பற்றி" என்று தொடங்கினார்.

நான் கையை உயர்த்தி "தயவு செய்து சீதனம் பற்றி எதுவும் பேசாதீர்கள். இந்தக் கல்யாணம் முற்றானாலும் நான் சீதனம் எதுவும் வாங்க மாட்டேன்" என்று சொன்னேன்.

"உங்கள் அப்பா எல்லாம் சொல்லியிருக்கிறார். நாங்கள் சீதனம் எதுவும் தருவதாக இல்லை. எங்களுக்குப் பிறகு எங்களுடைய சொத்தெல்லாம் மகளுக்குத் தானே. ஆனால் இந்தக் காலத்தில் நீங்கள் ஏன் சீதனம் வேண்டாம் என்று இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை".

உயரத்தில் தெரிந்த வானத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு 'எனக்கு மனைவியாக வந்து, கோயில் கோயிலாக, வீதிவீதியாக அலைந்துலைந்து, எனது தலைமுறைக்கு ஒரு வீரனையோ வீராங்கனையையோ நொந்து சுமந்து பெற்றுத் தரப்போகும் தெய்வத்தாய்க்கு நான் அல்லவோ அன்பளிப்புக் கொடுக்க வேண்டும். மகளுக்குச் சீதனம் கொடுப்பதற்காகப் பட்ட கடனைத் திருப்பிக்கட்ட முடியாமல் கண்ணீர் விட்ட எத்தனை பெற்றோரை நான் பார்த்திருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு திரும்பிப் பார்த்தேன்.

அந்தப் பெரியவர் தூரத்தில் போய்க் கொண்டிருந்தார்.

எனது லண்டன் பயணத்தைத் துறக்கத் தீர்மானித்தேன். வளர்மதியை மணந்து கொண்டேன். வாழ்க்கை ஒளிமயமானதடா!

இது சிங்களத்துக்குப் பொறுக்கவில்லை.

கனடா நல்ல நாடு. எங்களுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் புகழேந்தி நன்றாகப் படித்தான். கனடாவில் ஒரு ஆபிரிக்கக் கொம்பனியில் தலைமைப் பதவியில் இருக்கிறான். அடுத்தது மல்லிகா. மற்றவள் சுமதி. இரண்டுபேரும் நன்றாகப் படிக்கினம்.

ஒரு நாள் நானும் நண்பரும் ஓர் உணவகத்தில் உணவருந்திக்கொண்டு இருக்கும்போது தெரிந்த குரலொன்று சிரித்துக் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கைகளைக் கோர்த்தபடி ஒரு சோடியொன்று வெளியே சென்றுகொண்டிருந்தது. திடுக்கிட்டுப் போனேன். அது எனது மூத்த மகன் புகழேந்தி. அவளுடைய நடையுடை, பாவனை, நிறம், தலையலங்காரம் ஆகியவற்றைப் பார்த்தால் அவள் ஒரு ஆபிரிக்கப் பெண் போலத்தெரிந்தாள். எனது மகன் ஓர் ஆபிரிக்கக் கொம்பனியில் வேலை பார்க்கிறான் என்ற உண்மை சடாரென்று ஒரு கூரிய ஈட்டியாக எனது நெற்றிக்குள் புகுந்து பிடரியைக் கிழித்துக் கொண்டு வெளியேறியது.

வீட்டுக்கு ஓடினேன். நெஞ்சில் கிடந்த குப்பைகளை மனைவியின் மடியில் கொட்டினேன்.

இப்படியான ஒரு தருணத்தில்தான் அக்காவுக்குச் சுகவீனம் என்று தகவல் வந்தது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை என்று நினைக்கிறேன். உடம்பு கொஞ்சம் களைப்பாக இருந்தது. நண்பகல் உணவுக்குப் பின் சிறிது உறங்கலாம் என்று மாடியில் படுக்கை அறையில் படுத்திருந்தேன். "போடா வெளியே" என்ற வளர்மதியின் உரத்த குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து,

தொடர்தல் 58ம் பக்கம்




நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)

ROYAL DE MONTRÉAL 2011 INC
4372, Papineau, Montréal, Qc, H2H 1T6

Sugumaran Sinniah
Chartered Real Estate Broker

திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !

Direct : 514.299.3186

email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

**Delta Academy Inc.**

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAF3M |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCV4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 10 | |
|---|---|
| Tamil | LITBD1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Tamil | LITCU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Tamil | LITDU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

KINDERGARTEN TO GRADE 12
**TUTORING & HOMEWORK HELP**

Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

**416.751.2011**
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

# எங்கே போகிறோம்...

**547 பக்கத் தொடர்ச்சி...**

அவசர அவசரமாக கீழே இறங்கி வந்தேன்.

புகழேந்தி!

“என்னப்பா உன்ர பிரச்சினை?” என்று கேட்டபோதுதான் கவனித்தேன். அவனுக்குப் பின்னால் அந்தப் பெண்ணும் நின்றிருந்தாள்.

“நான் இவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டேன்” என்றான்.

“அடி, ராஸ்கல்” என்று பக்கத்து நாற்காலியை உயரத் தூக்கிக் கொண்டு ஓரடி முன்வைத்தேன். வளர்மதி தலையை ஆட்டிக் கொண்டு ஓடி வந்து நாற்காலியைப் பிடித்தாள். “வேண்டாம்” என்று கெஞ்சினாள். அவளுடைய கண்களில் வெள்ளம்.

நான் அமைதியானேன். “சரி, என்னப்பா உன்ர பிரச்சினை?” என்று மீண்டும் கேட்டேன்.

“எனக்கு வயது பதினெட்டுக்கு மேல்” என்றான்.

“பெத்தவனுக்குப் பிள்ளை தனது வயதைச் சொல்கிறது, நல்லது. என்ன சொல்ல வாறாய்” என்றேன்.

“நான் இவ்வளவு காலமும் உழைத்த பணத்தில் பெரும்பகுதியை இந்த வீட்டுக்காகவே செலவழித்தேன். நான் திருமணம் செய்துள்ள இவளை நீங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. நாங்கள் ஒரு நல்ல வீடு வாங்க நீங்கள் போதிய பணம் தரவேண்டும்”

“தராவிட்டால் என்னடா செய்வாய்?” என்று என் மனைவி அதட்டினாள்.

“அவருக்கு வயது பதினெட்டுக்கு மேல். கனடாச் சட்டப்படி அவர் கோர்ட்டுக்குப் போகலாம்” என்று மனைவிக்குச் சொல்லி விட்டு, புகழேந்தி பக்கம் திரும்பி, “நீங்களும் புறப்படுங்கள். இரண்டு வாரங்களுக்குள் ஒரு நல்ல முடிவைச் செய்வேன்” என்று சொன்னேன்.

அன்றிரவு முழுவதும் வளர்மதி சீறிச்சீறி அழுது கொண்டே இருந்தாள். நான் நல்ல நித்திரையில் கிடப்பது போல கண்களை மூடிக் கொண்டு நெஞ்சுக்குள் கண்ணீர் வடித்துக் கொண்டேயிருந்தேன்.

விடிந்தது. தேனீர் மேசையில் சந்தித்தோம். வளர்மதியின் கண்கள் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. நான் எனது முடிவை அவளுக்கு விளக்கி, “புகழேந்தியின் செயல் அங்கே எட்டுவதற்கு முன்னர் நாங்கள் அக்கா பக்கத்தில் இருக்கவேண்டும்” என்றேன். அவள் சரி என்றாள்.

நான் தொடர்ந்தேன் “எங்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் வழிப் பேரப்பிள்ளைகள் தமிழராய் இருக்கவேண்டும் என்பது எனது ஆசை”.

வளர்மதி மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். புகழேந்தி வந்து போனதில் இருந்து அவள் அதிக நேரம் மவுனமாகவே இருக்கிறாள். புகழேந்தி எங்களுடைய மூத்த மகன். குடும்பத்துக்கு ஒரேயொரு மகன். அதற்காக? லட்சங்களைக் கொட்டிக் கட்டிய வீடு தீப்பிடித்து எரிகிறது என்பதற்காக எல்லோரும் சேர்ந்து எரிந்து போகலாமா? விலை மதிக்க முடியாத செல்வங்களையாவது பாதுகாக்க வேண்டாமா? எங்களுக்கு மிஞ்சியிருக்கிற விலை மதிக்க முடியாத செல்வங்கள் எங்களுடைய இந்த இரண்டு பெண்பிள்ளைகள் தான்.

நானும் வளர்மதியும் பிள்ளைகளும் புறப்பட்டோம். கனடா அரச அலுவலகத்தில் ஒரு முக்கியமான வேலை இருந்தது. அதை முடித்துக்கொண்டு நாங்கள் கணக்குகள் வைத்திருந்த வங்கிகளுக்குப் போனோம். நான் வேலை பார்த்த கொம்பனிக்குப் போய் எனது வேலை விலகல் கடிதத்தைக் கொடுத்தேன். காரணம் கேட்ட சிலருக்கு, “யாழ்ப்பாணத்தில் இருக்கும் அக்கா ஒரு நோயாளி. கொஞ்சக் காலம் அவரோடு இருக்கலாம்” என்று போகிறோம்’ என்றேன்.

கடைசியாக சட்டத்தரணி சத்தியநாதனுடைய அலுவலகம் போனோம். ஐம்பதுகளில் அவனும் நானும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நல்ல நண்பர்களாகச் சண்டை பிடித்துச் சண்டை பிடித்துக் கல்வி கற்றோம். சண்டைக்குக் காரணம் ‘எனக்குப்பிடித்த தமிழ் ஆசிரியர் கேதீஸ்வரநாதன், அவனுக்குப் பிடித்த தமிழ் ஆசிரியர் வித்துவான் வேந்தனார்’ என்பதாகும்.

சத்தியநாதன் என்னை மட்டும் தனது அறைக்குள் அழைத்துச் சென்று, “ஏன்டா, அவசரப்படுகிறாய்? புகழேந்தியின் போக்குவாக்கு என்னவென்று பொறுத்துப் பார்க்கலாமே”.

“அதுவல்ல சத்தி, புகழேந்தியின் முடிவை அறிந்தால் அக்காவுக்கு என்னவாகுமோ? தமிழரசி என்ன செய்வாளோ? அக்காவின் கடைசிநாள் வரை நான் அவளோடு இருப்பேன். தமிழரசிக்கும் ஒரு நல்ல வழிவகுத்துக் கொடுப்பேன்”.

சத்தியநாதன் நான் சொன்னபடி தயாரித்த உறுதிப்பத்திரத்தை எனது கையில் தந்து, “இருவரும் படித்துப் பார்த்துக்கையொப்பம் இடுங்கள்” என்றார். அதில் நான் சொன்னபடி, எங்களுக்குச் சொந்தமான வீட்டையும் அதில் உள்ள எல்லாப் பொருட்களையும் எங்கள் பாவனையில் இருந்த இரண்டு கார்களையும் எங்கள் மூத்த மகனான புகழேந்திக்கு அன்புடனும் பாசத்துடனும் அன்பளிப்பாக வழங்குகின்றோம்” என்று இருந்தது.

கையொப்பம் இட்ட பத்திரங்களை சத்தியநாதனிடம் திருப்பிக் கொடுத்து, “எங்களுடைய விமானம் மூன்று மணிக்குப் புறப்படும். அதற்குப் பிறகு தொலைபேசியில் புகழேந்தியைக் கூப்பிட்டு, நாங்கள் கனடாவை விட்டுப்போய்விட்ட செய்தியைச் சொல்லி இந்தப் பத்திரங்களையும் வீட்டுத் திறப்புகளையும் அவனிடம் ஒப்படையுங்கள்” என்றபோது எனது கண்கள் கலங்கின. சத்தியநாதன் என்னைக் கட்டிப் பிடித்து, “கவலைப்படாதே. நான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்கிறேன்” என்றார்.

வளர்மதி கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தாள். எனக்குள் நான் தெளிவாக இருந்தேன். என் பிள்ளைகளோடு எம் வாழ்வை மீண்டும் யாழ்ப்பாணத்தில் கட்டியெழுப்ப முடியும் என நான் நம்பினேன். என் பெண் பிள்ளைகள் வழிப்பேரப்பிள்ளைகள் தமிழர்களாகவே இருப்பார்கள் என்பதிலும் உறுதியாக இருந்தேன்.

நான் கனடாவுக்கு வந்த போது அகதியாகவே வந்தேன். போகும்போதும் ஒருவகையில் அகதியாகவே போகின்றேன். வரும்போது எடுத்துவந்த பாசத்தை மட்டும் இந்த நாட்டில் விட்டுச் செல்கின்றேன். என்னவாயிருந்தாலும் மூத்தமகன். உணர்வெங்கும் ஓர் உறுத்தல் இருக்கத்தான் போகின்றது. வளர்மதிதான் பாவம்.

பாரத்தைக் காலத்தின் கையில் கொடுத்து விட்டு கனடாவை விட்டுப் பிரிந்தோம்.



uthayanan@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா திருமறைக் கலாமன்றத்தின் மரபுத் திங்கள்

கனடா திருமறைக் கலாமன்றத்தின் மரபுத் திங்கள் விழா ஜனவரி 12ம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றுது.

தமிழ் மணம் கமழும் அழகான பாடல்கள், சிறந்த நடனங்கள், தமிழ் கவிதைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் நாடகங்கள் போன்றவை சிறப்பாகக் கோர்க்கப்பட்டு மேடைக்கு எடுத்துவரப்பட்டன.
பொங்கல், தமிழ்மொழி குறித்த சிறார்களின் சிற்றுரைகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தன.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, கனடிய மண்ணில் மிக நீண்ட காலம் தொண்டாற்றும் நால்வரும்,
பாரம்பரிய தமிழ்க் கலைகளுக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஒருவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



படம்: gtavideo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
## 416-908-5656

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOUSES FOR SALE




Amazing Open Concept Home In Great Area Of Whitby ** High End Finishes Throughout ** Dark Hardwood Flooring ** Fully Fenced In Oversized Rear Yard ** Garage Access To House ** Master Has 4 Piece Ensuite, Walk-In Closet. There Is Nothing To Do But Move In And Enjoy ** Best Priced House Of The Area




Beautiful Upgraded 3-Bed/Bath Freehold Townhome In New 'Duffins Village' Community. Immaculately Kept & Shows Pristine. Upgraded Kitchen. Hardwood Floors & Potlights. Enormous Master & 5Pc Ensuite W/ Walk-In Closet. Add'l 4Pc On 2nd. Large Fenced Yard. 3-Car Parking. New School & Park W/In Walking Distance. Transit At Doorstep. Greenspace & Trails.




Gorgeous 3+2 Bdrm Brick Bungalow In Sought After Woburn Community!! 2 Upstairs Bdrms Easily Converted Back To 3 Bdrms!! This Charming Home Is Perfect For A Larger Family Or Convert To A Basement Apartment! Newer Roof (2016), High Efficiency Furnace (2017), Central Air Conditioner (10 Yrs)! Large Ravine Like Lot Backing Onto Green Space! Close To Schools, Parks, Shopping & TTC!




Professionally Renovated In 2018 | 11Ft Vaulted Ceilings | Freshly Paved Driveway | Designer Kitchen | Quartz Counter Top | Engineered Flooring | New Bathrooms | New Furnace & Ac | Led Pot Lights | New Stainless Steel Kitchen Appliances | Laundry Can Be Shared Between Upstairs & Downstairs (In Common Area) | Fully Finished Basement Apartment With Separate Entrance | Minutes Close To Shopping On Kennedy Road | Highway 401




Backsplit With A Super Large Backyard,2 Car Garage In Prestigious Seven Oak. Meticulously Maintained For 46Yrs By The Current Owner. Home Boasts With A Cozy Living O/L Front Garden,Dining O/L Serene Backyard. Master With 2Pc Ensuite. Upgraded Kitchen & Windows. Birds/Animal View From Bedroom Windows. Lower Level Wet Bar Can Easily Be Converted To Kitchen. Side Entrance Proposes Rental Income Possibility.




Located In The Desirable Amberlea Community! Hrdwd Flrs/Ceramics Throughout Main & 2nd Flr. Gourmet Kitchen W/ Granite Counters/Bkft Bar & Sgwo To Deck, Large Mbr Features 4Pc Ensuite W/ Jacuzzi Tub/Wicc. Main Family Rm W/ Fp & W/O, Fin. Rec Rm & 5th Bdrm In Bsmt. Over 3000 Sqft Of Finished Living Space, Direct Garage Access. (Mostly Newer Windows/16, High Eff Furnace/09, Cac/03 & 35 Yr Roof Shingles/06, Kit/Baths/07)




Detached 4 Bedroom House On A Premium 60 Ft Lot, Located In High Demand L'amoreaux Location. Cozy Family Room With Fireplace And Walk Out To Garden. Huge Master Bedroom With Ensuite Bath. Recreation Room With Bar, Steps To Public Transit, Churches High Ranking Schools, Hwy 401,404, Shopping Malls, Go Station, Rec Facilities & More. Wonderful Location.




Truly Exceptional Home! Back To Ravine Spent On Upgrades From Builder, Link Style Town House In High Demand Area Of Richmond Hill With W/O, Finished Basement ! 9Ft Ceiling, Fully Upgraded Kitchen With Granite Counter, Marble Floor, Tall Cabinet And Very Big Pantry With Organizer. Oak Stairs With Iron Wickes, Finished W/O Basement W/ 4Pc Bath, Den, Fireplace, Very Good Size Deck (10X10 Ft). Peaceful Child-Friendly Cul-De-Sac




Absolutely Stunning Pride Of Ownership Home With Upgrades Galore - Landscaped Backyard Oasis With Remote Controlled Waterfall, Prof Finished Deck With Deck/Garden Lighting, Finished Basement Installed With Premium Sub Flooring, Heated Floors In Basement Bath, Kitchen Comes With Stain Steel Appl (Gas Stove), Under Cabinet Lighting, Stone Countertop And Backsplash. Freshly & Tastefully Painted, Hardwood Floors, Shutters And Much More




Bright & Sunfilled South Facing Detached Bungalow In The Heart Of Richmond Hill. Private & Secluded Home With An Attached Garage. Some Of The Best Schools Inc. Bayview Sec. & Walter Scott Are In The Catchment. Steps To Catholic Community Church. A Very Convenient Location With Steps To All Amenities.




Very Bright & Beautiful House, Functional Layout, Modern Kitchen With Full Upgrades, Living Area 4400 Sqft, 9' Ceiling Main Floor,Laundry Room On 2nd Floor, Finished Basement With In-Law Apartment, California Shutters, Beautiful Backyard Deck With Pergola, Crown Molding, 2 Fireplaces, Private Balcony, Totally Upgrade With High Quality Materials. Furniture Are For Sale




Tributes Lakeside Community. Short Walk To The Lake&Trail. Backs On The Waterfront Trail. Professionally Finished Basement Complete With Bath Steam Room, Gym Rm, Games Rm, Rec Rm W/ Wet Bar, B/I Fridge, Freezer, Dishwasher&Microwave, Walkout To 16X32 Inground Pool, Cabana & Hot Tub. La Related To Seller. Pls Attach Disclosure. No Sign On Property. Over 4800Sqft Living Space. Note: 2nd Flr Laundry Rm




Gorgeous Forest Hill Home, Premium Corner Lot, Bright Contemporary Open Floor Plan, 9 Ft Ceiling, Double Car Detached Garage, Gas Fireplace, Hardwood On Main Floor, Ceramic In Kitchen, Lots Of Windows. Large Ad Spacious, Minutes To 407, Walmart, Restaurants, Shopping, Hospital, Schools, Church. Neighbourhood Has So Much More To Offer.




Spent On Upgrades In 2018. Prem Corner Lot By Lebovic Homes Across Frm Gorgeous Park (Playground&Gazebo). Designer Kit W/Granite Countertops, Marble Backsplash, Cust Pantry, Storage&Bf Bar. Gleaming Hdwd Flrs On Main Flr&Stairs. Huge Open Fin Bsmt W/Side Entrance Frm Garg, Full Washrm, 2nd Laundry, Extra Large Windows, Cold Rm, Rough-Ins For Kit & Gas Line To Bsmt Already Put In. 2 Car Garg W/ Side Dr—Window. Beautifully Maintained Backyard




Recently Upgraded Detached Home Backing On South. Cozy And Very Bright. $$$ Spent On New Modern Kitchen With Granite Countertop, S.S Appliances, Potlights, Eat-In Kitchen Overlook Secluded Backyard.Neutral Color, Skylight,Newly Painted.New Hardwood Fl,New Washrms. Ground Fl 3Pc Washrm Potential Ensuite For Convenience. New Stylish Interlocking Driveway(3 Cars). Walking Distance To Unionville H.S, Plaza ( Nofril,Bank,Restaurants)




Most Sought-After Community In Thornhill ! Don't Miss Out ! Family House In A Top-Ranking School Zone, Nestled On A Quite Street With Mature Trees. $$$ Recently Renovated Driveway And Interlock, Brand New Master Bdrm Washroom. Comfortable 4+1 Bdrm. Smooth Ceiling With Led Pot Lights, Upgraded Gourmet Kitchen With Granite Countertop And Trendy Cupboards. Seek No Further For Amply Park Space And Woodland With German




Fully Renovated 2 Storey 4 Bedroom Home On A Large 50 X 175 Ft Lot. Brand New Hardwood Floors Throughout. Custom Gourmet Kitchen With Quartz Counter-Top. Upgraded Light Fixtures And Pot Lights Throughout. Professionally Painted. Crown Mouldings & Smooth Ceilings Throughout. Fully Renovated Bathrooms. Large Open Concept Finished Basement. Large Bedrooms. New Copper Wiring. Private Treed Backyard. See Virtual Tour!




Location, Location, Location- Rare Opportunity Buy In High Demand Sheppard Ave. Investors Delight 50'X 143'! Lot-Land Value Only- No Showing (Preferably). Driveway Access From Quiet Lane At Rear. Prop.Facing Open Field. Private Dead End Street. Corner Lot.




Spectacular Upgrd Executive Hm In High Demanded Local 2966Sq Ft Per Mpac.Step 2 Park!Gorgeous & Fabulous Finishes!Abslutly Stunng!Dbl Designed Dr Entr.Grand 17'Fam W/Wall Blt F/P(17).9'Ceil.Oak Circ Stair.Functnal & Practical Design!4Bdrm/4Baths!Tot Reno'd Mbr W/Spa-Like 5Pc Ens&Skylite.$$$ Spent In Upgds.Hdwd T/O,Pot-Lite,Gourmet Kit W/Extra Tall Cabs,18'X18'Tile,Valance Lightg,Grnte C-Top,Mbl B/S,Ctrl Islnd.Intlk Drvwy/Wlkwy/Patio.M/F Lndry.Dir Acs.To Garge

RE/MAX Hall of Fame

RE/MAX
RE/MAX CROSSROADS REALTY INC., BROKERAGE
1055 McNicoll Ave. Scarborough, ON M1W 3W6

YS

YATHAVANN SELVARAJAH

Dir: 416.992.4474

Office: 416.491.4002



selva@topremax.ca • www.houzzvalue.ca • www.gtanewcondo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CENTURY 21 Innovative Realty 9th Annual Gala

## Award Night 2018





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை சீலையான வேடிக்கை

- சோக்கல்லோ சண்முகநாதன் -

ஒரு கலைஞனின் கதை

நான் பத்திரிகைத்துறையில் ஒப்புநோக்காளர் மட்டு-மில்லை, பத்திரிகை நிருபராக, எழுத்தாளராக, அச்சக மனேஜராக என்று பல்வேறு பிறவிகள் எடுத்தவன். சிந்தாமணி, தினபதி பத்திரிகைகளில் ஒப்புநோக்காளராகப் பணியாற்றினேன்.

எந்த வேலையையும் மிக இலகுவாகச் செய்துவிட்டுப் போகமுடியாது. ஒவ்வொரு வேலையிலும் பல்வேறு சிரமங்கள் உண்டு. அத்துறை சார்ந்தவர்களைக் கேட்டால் தங்களுடைய மனவேதனைகளை மணித்தியாலக்கணக்கில் கொட்டித் தீர்ப்பார்கள்.

வழக்கம் போல நான் மாலை மூன்று மணிக்கு இரவு நேர வேலைக்குப் போன போது ஆசிரியர் சிவநாயகம் என்னை வரச்சொன்னதாகச் சொல்லப்பட்டது. இரண்டாவது மாடியில் இருந்த ஆசிரியர் அறைக்குச் செல்கின்றேன். முதன்முதலாக அவரைச் சந்திக்கின்றேன்.

'உம்முடைய பெயர் என்ன?'

'சண்முகநாதன்'.

'இல்லை உமக்கு இன்னுமொரு பெயர் உண்டு'.

'சோக்கெல்லோ சண்முகம்'.

'நீர் புதிதாக வந்தனீர்!' அவரே சொன்னார்.

'ஓம் ஐந்து நாட்களுக்கு முன்'.

'கவனமாக புறூவைப் பாரும்'. இவ்வளவும் தான் எனக்கு ஆசிரியரால் சொல்லப்பட்டது. மிகுதிக்கதையெல்லாம் தலைமை ஒப்புநோக்காளரால் எனக்குச் சொல்லப்பட்டது.

ஒரு பெரிய கூட்ட முன்னறிவிப்பு அது. அமைச்சர் ஒருவர் கலந்துகொண்டு ஒரு முக்கிய பிரமுகரின் சிலையைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சி. அந்தச் செய்தியை வாசித்து பிழைதிருத்தி மூன்று கட்டங்களிலும் நானே அதில் மாட்டியிருந்தேன், கெலிபுறூவில், பேஜ்புறூவில், இறுதிப்பார்வைக்காக வரும் (Final Page) புறூவிலும் நானே கையெழுத்திட்டிருந்தேன். அவையெல்லாம் விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்டன. என்னுடைய அதிஸ்டம் மூன்றிலும் சிலை திறப்புவிழா என்றே இருந்தது. பத்திரிகையில் இது எப்படி சீலையாக மாறியது.

இது அச்சுப்பேயினுடைய சேட்டை என்று நாங்கள் பேசாமல் இருந்துவிட்டோம். நிர்வாகம் விடவில்லை. அவர்கள் விசாரித்து அது இப்போது ஆசிரிய பீடப் பக்கம், உதவி ஆசிரியர்கள் மேல் திரும்பியது. இலங்கையில்தான் புறூவ்றீடர்களாகிய எங்களை ஒப்புநோக்காளர் என்று சொல்கின்றார்கள். இங்கிலாந்தில் எம்மையும் உதவி ஆசிரியர் என்றே அழைக்கின்றார்கள். இனிக்கவலைப்பட்டு என்னசெய்ய, நாங்கள் இங்கிலாந்தில் பிறக்கவில்லைத் தானே?

எல்லாப் பக்கங்களையும் அடித்து, மடித்து வெளியே அனுப்புகிற ஒரு பாரிய இயந்திரம் எம்.டி குணசேன என்ற இந்த நிர்வாகத்தினரிடம் உண்டு. முதல் பிரதி வெளியே வந்தவுடன் அதை மேலோட்டமாகச் சரிபார்த்து தொடர்ந்து அச்சிடும் அறிவிப்பைக் கொடுக்க ஒரு உதவி ஆசிரியர் மெசின் பக்கத்தில் நிற்பார். 'சிலை திறப்புவிழா' சீலை திறப்பு விழாவாக மாறியிருந்ததை அவரால் அவசரத்தில் பார்க்கமுடியவில்லை. ஓகே சொன்னதும் இயந்திரம் தனது வேலையை முடிக்க மற்றவர்கள் அதை மாகாணம் முழுவதும் விநியோகித்துவிட்டார்கள். கொழும்பு பதிப்பு (City Edition) அது கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்பட்டுவிட்டது. செய்தி ஒரு அமைச்சரோடு சம்பந்தப்பட்டது என்பதால் இத்தனை பரபரப்பு. நடந்தது இதுதான், எல்லா இடத்திலும் 'சி' என்று காட்சியளித்த அந்த எழுத்து அச்சுக்குப் போகமுன்பு 'பிரின்ட்' தெளிவாக இருப்பதற்காக ஒருமுறை மண்ணெண்ணெய் பிறசால் அதை (பக்கம் முழுவதையும்) துப்புரவு செய்வார்கள். அப்போது மை அடைத்திருந்த 'சி' எழுத்து 'சீ'யாக மாறியது. குற்றம் யாரிலும் சுமத்த முடியாத கட்டம். தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று நானும் சந்தோசப்பட்டேன்.

இவையெல்லாம் எனது மனதிலே ஓடிக்கொண்டிருப்பதால், நான் எந்த ஒப்புநோக்காளரையும், பத்திரிகை ஆசிரியரையும் குறைசொல்வதில்லை. மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்று ஒன்று இன்றைக்கும் இருக்கத்தான் செய்கின்றது.

என்னுடைய இரவு சிவ்றிற்குத் துணையாக 'கும்பமுனி' - ஆண்தான் இவர். என்னுடைய கிராமமாகிய ஏழாலையைச் சேர்ந்தவர். இவர் மத்தி, நான் 'மேற்கு'. இவ்வளவுதான் வித்தியாசம். வேலை செய்வார். புறூவ் வராத நேரங்களில் 'ராங்'கில் இருக்கும் பிளேன் டீயை எம்முடைய கோப்பைகளில் வைத்துக்கொண்டு கதைப்போம். பால் தேநீரும், வெறுந் தேநீரும் குறிப்பிட்ட நேரங்களில் கொண்டுவந்து வைப்பார்கள். 'கும்பமுனி' வேட்டியும் சேட்டும் தான். கப்பித்தாவத்தை கோவிலில் குறைந்த வாடகைக்குக் கிடைத்த அறையில் தங்கியவர். மிகவும் சிக்கனமானவர். தான் தபாலிடும் கடிதங்களுக்கு ஏற்கனவே பாவிக்கப்பட்ட சீல் விழாத, அல்லது தெரியாத, அல்லது மறைக்கப்பட்ட முத்திரைகளையே பாவிப்பார்.

தலைமை ஒப்புநோக்காளர் 'ஏன் ஐயா இப்படிச் செய்கிறீர்கள்' என்று கேட்டால், 'சம்பளம் ரொம்பக்கம்மி' என்று அவருக்கே திருப்பி அடிப்பார். மிகவும் நகைச்சுவையாகப் பேசுவார். அவர் வேலை முடிந்ததும் இரவு 3மணி அல்லது நான்கு மணிக்கு தனியே நடந்து கப்பித்தாவத்தையில் இருக்கும் தனது அறைக்குப் போவார். வெறும் என்வலப்பில் சில வெற்றுத்தாள்களை மடித்து என்வலப் தெரியுமாறு தனது மேல் பொக்கற்றில் வைத்திருப்பார். இரவிலே திரிகின்ற முடிச்சுமாறிகள் இதை இலகுவாகப் பறித்துக்கொண்டு ஓடுவார்கள். ஒருமுறை இவரைப்பிடித்த முடிச்சுமாறி இவரிடம் பணம் கேட்டிருக்கின்றார். ஏதோ சில்லறைகள் கொடுத்திருக்கின்றார். அடுத்த முறை வரும்போது பெரிய நோட்டாகக் கொண்டு வரும்படி அடித்திருக்கின்றார்.



அவர் இவரின் என்வலப்பை எடுக்கவில்லை. ஏற்கனவே பழக்கப்பட்டவரோ... என்னவோ? சில வருடங்களுக்கு முன் இவர் மூளைக் காய்ச்சலால் ஊரில் தன்னுடைய வீட்டில் அமரராகி விட்டார்.

எனக்கு இந்த 'பிற்பொக்கற்' அனுபவமில்லை. இரவு இராணிகளின், அவர்களின் மாமாக்களின் செயற்பாடுகள் எல்லாம் நன்கு தெரியும். ஒரு டொக்கியுமென்ரி படம் செய்வதற்கு என்னிடம் தகவல்கள் உண்டு. இரவில் மட்டுமல்ல கொழும்பில் பகலில் கூட இவர்களின் தொந்தரவுகள் இருக்கும். கொழும்புப் பொலிசாரையே இவர்கள் கிள்ளுக்கீரையாக நினைக்கிறார்கள். அப்போதெல்லாம் இரவு ஒன்பது மணியிலிருந்து விடிய ஐந்துமணி வரை கொழும்பை இவர்கள் ஆட்சி செய்கிறார்கள் என்றால் மிகையாகாது. மலிபான் வீதி, புறக்கோட்டை, கொம்பனி வீதி, கொட்டாஞ்சேனை, ஆதுருப்பு வீதி இன்னும் பலஇடங்களில் இவர்களைப் பார்த்து நான் அனுதாபப்பட்ட பல சம்பவங்கள் உண்டு.

அங்குள்ள கடைவாசல்களிலேயே குடும்பம் நடத்துபவர்கள் உண்டு. கடைக்காரர்கள் தண்ணி ஊற்றி எவ்வளவு ஈரமாக்கினாலும் துடைத்துப்போட்டு இருக்கிற குடும்பங்கள் உண்டு. கடைகளுக்கு உடுப்புத் தோய்த்துக் கொடுப்பவர்கள், தச்சு வேலை செய்பவர்கள், வண்டி இழுப்பவர்கள் இப்படிப்பலர். சிறுவனாக அவன் பின்பு வாலிபனாக, சிறுபெண்ணாக அவளே பின்பு, இரவு இராணியாக இப்படிப்பல சோகமான காட்சிகள். வாடிக்கையாளனிடம் பணத்தை முன்கூட்டியே வாங்கி குழந்தைகளிடம் சாப்பாட்டிற்குக் கொடுத்துவிட்டு வாடிக்கையாளனோடு போகிற பலபெண்களை நான் பார்த்திருக்கிறேன். இன்றைக்கும் கண்ணகியா? மாதவியா? கற்பில் சிறந்தவள் என்று பட்டிமண்டபம் நடத்துவோரையும் பார்த்திருக்கிறோம். இவற்றை எல்லாம் நான் அனுதாபத்தோடு பார்ப்பதால் என்னை வந்து எத்தனையோ மாமாக்கள் ஐம்பது ரூபா தா? ஏன்று கேட்டவர்கள் உண்டு. நான் அந்த நாட்டின் பிரதமரானால் இதற்கான தீர்வை உடனடியாகக் காண்பேன்.

சண்முகராஜா தினபதி, சிந்தாமணி நேர்முகப் பரீட்சையின்போது எனக்குத் தந்த கட்டுரை 'எனது பாடசாலை அனுபவம்'. உடனேயே வேலைக்கு எடுத்து விட்டார். அந்தநேரம் பிழையாக எழுதியிருந்தாலும் எடுத்திருப்பார். அவர்களுக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. அங்கு பிழைபிழையாக புறூவ் பார்ப்பவர்களும் இருக்கின்றார்கள். என்னை தினபதி, சிந்தாமணி காரியாலயத்துள் நுழையச்செய்ததே கும்பமுனிதான். இன்றைக்கும் அதே கட்டுரை தான் நேர்முகப் பரீட்சைக்கு.

தொடர்தல் 64ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை சீலையான...

63ம் பக்கத் தொடர்ச்சி...

ஆசிரிய தலையங்கம் எழுதாத ஆசிரியர்களை எனக்குத் தெரியும். எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் தானே ஆசிரிய தலையங்கம் எழுதுவதுடன் தானே நேரடியாகப் புறாவ் பார்ப்பார். எங்களுக்கு அவரின் புறாவ் ஒருநாளும் வந்ததில்லை. அபூர்வமாக ஒருமுறை சண்முகராஜா பார்த்ததாக எனக்கு ஞாபகம். சண்முகராஜாவும், சிவநாயகம் அவர்களும் நண்பர்களாகவே பழகினார்கள். சண்முகராஜா ஒரு எம்.ஜி.ஆர் பக்தன். சினிமா பக்கங்கள் அவர் கூடுதலாகச் செய்தவர். வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை சண்முகராஜாவே புனைப்பெயரில் விமர்சனம் செய்தவர். அண்மையில் தாய்வீடு பத்திரிகையில் வந்த விக்னேஸ்வரன் எழுதிய ஒரு கட்டுரையில் 'நல்லவேளை அது சிவநாயகம் பார்வையில்கூடப் படாது போய்விட்டது' என்று குறிப்பிட்டு, இந்த விமரிசனத்தைத் தான். சம்பவம் என்னவென்றால் காரிருளில் என்று நடிகமணி தொடங்கும் பாடல் காட்சியில் பூரணச்சந்திரன் பின்புலத்தில் இருந்தது.

இப்படி வல்லமையுள்ள சண்முகராஜா ஆங்கிலம் நன்கு பேசுவார். எனது காலத்திருந்த ஒப்புநோக்காளர்களில் எவருமே ஆங்கிலம் பேசவில்லை. வேக்ஸ் மனேஜர், பேர்சனல் மனேஜரிடம் பேசுவதற்கு, அவர்கள் சண்முகராஜாவின் துணையை நாடினார்கள். அதனால் அவர்களில் குதிரை விடுபவராகச் சண்முகராஜா இருந்தார். நான் தேயிலைத்தோட்டத்தில் ஆங்கிலேயர்களுடன் வேலைசெய்ததாலும் ஆங்கில மீடியத்தில் படித்ததாலும் ஆங்கிலம் பேசும் வல்லமை எனக்கு இருந்தது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரடியாகப் பேசியது சண்முகராஜாவுக்குப் பிடிக்கவில்லை.

சிலசில சந்தர்ப்பங்களில் அது பிரதிபலித்தாலும் அவர் பெரிதாகக் காட்டிக்கொள்ளவில்லை. நான் அங்கிருந்து விலகிப்போகும் வரை என்னோடு நன்றாகவே நடந்துகொண்டார். பின்பு கொழும்பில் நடந்த எனது கலைநிகழ்வுகளுக்கு மிகுந்த பிரபல்யம் கொடுத்து எழுதினார். என்னோடு பல முறை சந்தித்துப் பேசினார்.

தினபதி, சிந்தாமணியிலும் ஐந்து ஆண்டுகள் முடிந்திருக்கவேண்டும். நானாக விலகுவதாக அவர்களிடம் எழுதிக் கொடுத்தேன். எந்தத் தகராறும் இல்லை. ஏன் செய்தேன் என்பது எனக்கே தெரியாது. நான் என்னென்ன வேலைகள் செய்தேன் என்பதை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தேயிலைத்தோட்ட சுப்பவைசர், கொண்டக்டர். சைக்கிளில் உடுவில் தொகுதி முழுவதும் வீடுவீடாகப் பத்திரிகை விநியோகம் செய்தவன், சர்பத்கடை தொழிலாளி, சுன்னாகம் கலைச்செல்வி சஞ்சிகை - கலாதேவி அச்சக முகாமையாளர், மீண்டும் தேயிலைத்தோட்டங்களில் வேலை, (கலுகல எஸ்டேட், நமுனகல - சதர்லன்ட், எல்ல - ஊவாபென்கெட் பண்டாரவளை - பலாந்தோட்டை நாவலப்பிட்டி - கையன் போட் நாவலப்பிட்டி), நண்பர் விநோதன் அவர்களோடு அரசியல் மேடைகளில் பேச்சாளன், கூட்ட ஏற்பாட்டாளன், பொதுசனத் தொடர்பு உத்தியோகஸ்தர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பலநோக்குகூட்டுறவுச்சங்க அச்சக முகாமையாளர், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தினகரன் பத்திரிகை நிருபர், வானொலி நிருபர், வெளிநாட்டு பயண ஏற்பாட்டாளர், புறாவ் றீடர், மெசின் விற்பனையாளர், நாடக நடிகர், வில்லுப்பாட்டுக்கலைஞர், இலக்கியப் பேச்சாளர், எழுத்தாளர் என இருபத்திரண்டு தொழில்கள் இதுவரை செய்துள்ளேன். என் இனிய நண்பர்களே! என்னுடைய பலமும், பலவீனமும் இதுதான்.

தினபதியிலும், சிந்தாமணியிலும் வேலை செய்தவர் மாஸ்டர் சிவலிங்கம். இவர் கிழக்கிலங்கையைச் சேர்ந்த கலைஞர். இவர் ஆசிரிய பீடத்திலிருந்தவர், உதவி ஆசிரியர்களில் ஒருவர் சிந்தாமணியில் சிறுவர்களுக்கான கதைகள் எழுதுபவர், வானொலியிலும் கதைகள் தொடராகச் சொன்னவர். இவர் கதை சொல்லுகின்ற பாணி குழந்தைகளுக்கு நன்கு பிடிக்கும்.

இவர்தான் இலங்கையின் வில்லிசையின் பிதாமகன். இந்தியாவில் படித்துவிட்டு முதன்முதலில் இலங்கையில் வில்லிசையைச் செய்தார். திருப்பூங்குடி ஆறுமுகம், நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி சிறிதேவி வில்லிசைக்குழு), சுதுமலை சபா சதாசிவம், தாவடி வடிவேல் குழுவினர், மன்னார் இராஜம் புஸ்பவனம் (காயத்திரி அம்மா), உடுப்பிட்டி வானம்பாடி யோகராஜன் குழுவினர், நாச்சிமார் கோவிலடி ராஜன் குழுவினர், உடப்பு சோமாஸ்கந்தர், அச்சுவேலி மதியழகன், நாச்சிமார் கோவிலடி ஸ்ரீஸ்கந்தன் குழுவினர், உடப்பு சோமாஸ்கந்தரின் மகள், தாவடி வடிவேலு அவர்களின் மகன், வானம்பாடி யோகராஜனின் இங்கிலாந்தில் வசிக்கும் மகன் இன்னும் தொடராகச்செய்யும் சில கலைஞர்களுடைய விபரம் கிடைக்கவில்லை. தொடங்கி சில மாதங்கள் மட்டும் நடத்திய குழுக்களுடைய பெயர்களும், தேவைக்கு மட்டும் செய்பவர்களுடைய பெயர்களும் சேர்க்கப்படவில்லை. கிழக்கிலங்கையைச் சேர்ந்த சில கலைஞர்களுடைய விபரங்களும் இதில் சேர்க்கப்படவேண்டும். பேராசிரியர் மௌனகுரு அவர்கள் இதில் எமக்கு உதவுவார்.

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களிடம் நான் வில்லிசை தொடங்குவது பற்றி முதன் முதலில் சொன்னேன். எனக்குச்சில ஆலோசனைகள் சொன்னார். பெரிதாக உற்சாகம் இல்லை. தான்பட்ட சிரமங்கள் இவனும் அனுபவிக்கப் போகின்றான் என்று எண்ணியிருப்பார்.

மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை' என்ற நாடகம் மொழும்பிலே நடைபெற்றது. றோபேட் இதை நெறியாள்கை செய்திருந்தார். இதற்கான ஒரு விமரிசனத்தை தினபதியில் எழுதியிருந்தேன். அது மலையகத்தையும் அந்த மக்களையும் பிரதிபலித்த கதை. என்னோடு தொடர்புடைய ஒரு கதை. முழுமையான உணர்வோடு இந்த விமர்சனத்தை எழுதியிருந்தேன். 'இந்த தோட்ட மக்களுடைய வாழ்வு உங்களுக்கு எப்படித் தெரியும்?. என்ன, நேரில் பார்த்தமாதிரி விமர்சனம் எழுதியிருக்கிறீர்கள்' என்று கேட்டார். அப்போதுதான் அந்த மக்களோடு இரவு, பகலாக பதினைந்து வருடங்கள் வாழ்ந்த கதையை அவருக்குச் சொன்னேன்.

கூட்டிப்போனார். சைவச்சாப்பாடு என்றேன். அவர் சொன்னார்? 'சைவம்' நான் அதெல்லாம் பார்த்துக்கொள்வேன் என்றார். சாப்பாட்டு நேரம் தொடங்கியது. எல்லோரும் சாப்பிடத் தொடங்கிவிட்டார்கள். எனக்கு புரியாணியும், ஒரு முழு பொரித்த கோழியும் வைக்கப்பட்டது. நான் சாப்பிடாமல் இருப்பதை அவதானித்த மூன்று, நான்கு பெரியவர்கள் வந்து சொன்னார்கள் என்ன கோபம் இருந்தாலும் முதலில் சாப்பிடுங்கள் பிறகு பேசித் தீர்த்துக்கொள்ளலாம். கொஞ்சம் பிந்தினாலும் அவர்கள் நிண்ட நிலையில் தீத்திவிடுவார்கள் போலிருந்தது. பக்கத்திலிருந்த பழங்களையும், பழயூசையும் மளமளவென்று எடுத்துச் சாப்பிட்டேன். அவர்கள் போய்விட்டார்கள். கூட்டிப்போனவன் வந்தான். 'உனக்குச் சைவச்சாப்பாடு எண்டு சொன்னனான்' எண்டு அவனிடம் சொன்னேன். அவன் இதுக்கா இவ்வளவு கோபம், இந்தாங்க எண்டு, கோழிமேல் இருந்த புரியாணி சோற்றைத் தட்டி கோழியை எடுத்துவிட்டுத் தந்தான். இவனை என்ன செய்ய!

(தொடரும்).



sanmuganathan@thaiveedu.com

அரியாலை மக்களின் சரித்திர சாதனையை நோக்கிய பயணம் ....

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா - 2019

கலை இலக்கியப் போட்டிகள்

வடமாகாண ரீதியிலான நாடகப் போட்டிகள்

- சமூக / நவீன நாடகம்
- சரித்திர / இதிகாச / புராண நாடகம்
- இசை நாடகம்
- நாட்டுக்கூத்து
- நாட்டிய நாடகம்

1. மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்படும்.
2. அந்தந்த வகைக்குரிய மரபு சார்ந்ததாக இருக்க வேண்டும்.
3. நாட்டுக்கூத்து எந்த வகையைச் சார்ந்ததாகவும் இருக்கலாம்.
4. 45 நிமிடங்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்ப முடிவுத்திகதி 15.02.2019

தொடர்புகளுக்கு : கு பிரதீபன் (கலைச் செயலாளர்) 0772367527

முதலாம் பரிசு - ரூ 50,000.00 இரண்டாம் பரிசு - ரூ 30,000.00 மூன்றாம் பரிசு - ரூ 20,000.00

சர்வதேச ரீதியிலான இலக்கியப் போட்டிகள்

| சிறுகதை | | கவிதை | | குறும்படம் | | புகைப்படம் (ஒளிப்படம்) | |
|---|---|---|---|---|---|---|---|
| முதலாம் பரிசு | - ரூ 30,000.00 | முதலாம் பரிசு | - ரூ 30,000.00 | முதலாம் பரிசு | - ரூ 100,000.00 | முதலாம் பரிசு | - ரூ 20,000.00 |
| இரண்டாம் பரிசு | - ரூ 20,000.00 | இரண்டாம் பரிசு | - ரூ 20,000.00 | இரண்டாம் பரிசு | - ரூ 50,000.00 | இரண்டாம் பரிசு | - ரூ 10,000.00 |
| மூன்றாம் பரிசு | - ரூ 10,000.00 | மூன்றாம் பரிசு | - ரூ 10,000.00 | மூன்றாம் பரிசு | - ரூ 30,000.00 | மூன்றாம் பரிசு | - ரூ 5,000.00 |

- ஆக்கங்கள் தமிழர்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்
- இவை இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலோ, சஞ்சிகைகளிலோ, அல்லது இணையத்தளத்திலோ பிரசுரமாகவில்லை என்றும், இந்தப் போட்டி முடிவுகள் வெளியாகும் வரை அவற்றை பிரசுரத்திற்காக அனுப்புவதில்லை என்றும் உறுதிமொழி தரப்பட வேண்டும்
- சிறுகதைகள் 1200 சொற்களுக்குட்பட்டவையாகவும், கவிதைகள் 500 சொற்களுக்குட்பட்டவையாகவும், இருத்தல் வேண்டும்.
- குறும்படங்கள் 30 நிமிடங்களுக்குட்பட்டவையாகவும் இப்போட்டிக்காகத் தயாரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்
- புகைப்படங்கள் 12"X8" அளவில் அமைதல் வேண்டும்.
- தங்களது பெயர் முகவரியை தனியாக குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.
- ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முடிவுத் திகதி 15.02.2019.
- ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி : திரு.ப.ஸ்ரீஸ்கந்தன் (தலைவர் – கலை), 400/2, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 0779823428
- ஆக்கங்கள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : ariyalainationalday@gmail.com

1919 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்டோவில் நகர மக்கள் கொண்டாடிய
# தமிழ் மரபுத் திங்கள் விழா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு நோக்கில் தைப்பொங்கல்

- பொன்னையா விவேகானந்தன் -

## முன்னுரை:

கடந்த நூறு ஆண்டுகளுக்கு பேரெழுச்சி பெற்றதோர் தமிழர் விழாவாக நாம் தைப் பொங்கல் விழாவை அடையாளம் காண முடியும். தமிழரின் நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியில் தமிழர் பல்வேறு விழாக்க ளைக் கொண்டாடி வந்ததுள்ளனர். கி.பி. மூன்றாம் ஆண்டுக்குப் பின் மெய்யியல் வழிபாட்டுநெறிகள் (சைவம், வைணவம்) தமிழரிடையே தாக்கம் செலுத்த ஆரம்பித்த பின்னர், பல தமிழர் விழாக்கள் மெய்யியல் வழிபாட்டு நெறிகளுடன் தம்மைப் பிணைத் துக்கொண்டன. எடுத்துக்காட்டாக, இறை வழிபாட்டுடன் இணைக்கப்பட்ட சித்திரைப் புத்தாண்டைக் கருதலாம். வடஇந்தியர்க ளின் கொண்டாட்டமான தீபாவளியும் இக் காலத்திலேதான் தென்னிந்தியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்குறித்த செந்நெறி இறைவழிபாடுகள் மக்களிடையே ஆளுமை செலுத்தித் தமக் குள் போட்டியிட்டுக்கொண்டன. இந்த மதப் போட்டிகளில் வெற்றிகளும் தோல்விகளும் சமூகம் மீதான ஆளுமையை தம்பக்கமே வைத்துக்கொண்டன. இருபதாம் நூற்றாண் டில் ஏற்பட்ட திராவிட இயக்கத் தோற்றம், தனித்தமிழ் விழிப்புணர்வு என்பன எழுச்சி பெறும்வரையில் மெய்யியல் மதநெறிகள் மக்களிடையே தமது மாற்றுக்குறையாது பாதுகாத்துக் கொண்டன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற் றாண்டின் இறுதிவரை தமிழில் தோன்றிய இலக்கியங்கள் கடவுளரையும் வேந்தரை யும் மட்டுமே பாட்டுடைத்தலைவர்களா கக் கொண்டிருந்தன என்பதை இதற்குச் சான்றாகக் கருதலாம். (சிலப்பதிகாரம் விதிவிலக்கு)

ஆட்சியில் ஆங்கிலேயரும் மொழியில் சமஸ்கிருதமும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த வேளையில்தான் மறை மலையடிகள் போன்றோர் தனித்தமிழ் இயக்கத்தையும் ஈ.வெ.ராமசாமி போன்றோர் திராவிடச் சிந்தனையையும் தோற்றுவித்த னர்.

இதன்வழியே ஏற்படுத்தப்பட்ட விழிப்பு- ணர்வே தமிழர்களுடைய அடையாளங்க ளையும் வேர்களையும் தனித்துவத்தோடு தேடப்பட்டமைக்குக் காரணமாயிற்று.

இதனிடையே மற்றுமொரு வரலாற்று உண்மையையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## நாட்டுப்புற வாழ்வியலில் பொங்கல்:

வரலாற்றுக்காலந்தொட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழச்சமூகத்தில் கல் வியறிவு கொண்ட சிறு விழுக்காட்டினரே ஏட்டு இலக்கியங்களை உருவாக்கி வந் துள்ளனர். தொல்காப்பியர், சங்ககாலப் புலவர்கள், சமயக்குரவர்கள் எல்லோரும் இதில் அடங்குவர். ஏட்டு இலங்கியங்கள் பெரிதும் கல்வியறிவு கொண்டோரிடையி- லேயே கொண்டாடப்பட்டன. உயர்ந்த மானு டச்சிந்தனைகளும் தமிழருடைய பண்பாட் டுச் சிறப்புகளும் இவர்களாலேயே இலக் கியங்கள் தோறும் பேணப்பட்டன. ஆட்சி யதிகாரத்தோடு இணைந்து இந்தக் கற்ற றிவாளர் சமூகம் இயங்கியது. தமிழ் நாட் டில் காலூன்றிய மெய்யியல் இறைநெறி களும் இந்தக் கற்றறிந்தோர் குழுமத்தை யும் ஆட்சியதிகாரத்தையுமே இலக்கு வைத் தது.

அக்கால்ததில் மொத்தத்தமிழர் எண்ணிக் கையில், ஆளுமைச் சமூகம் உட்பட கற் றறிந்தோர் சமூகம் பத்து விழுக்காட்டுக்கும் குறைவானதாகவே இருந்திருக்க வேண் டும். மெய்யியல் இறைவழிபாட்டு நெறிக ளும் இந்தச் சூழலுக்குள்ளேயே காலூன்றி வளர்ந்தன.

அவ்வாறாயின் ஏனைய தொண்ணூறு விழுக் காடு தமிழர்கள் யார்? அவர்களின் கல்வி நிலை என்ன? வாழ்வியல் பின்னணி என்ன? என்ற வினாக்கள் எழுகின்றன.

இன்றும் தமிழகத்தின் கிராமங்கள் தோறும் வாழ்ந்து வருகின்ற பாமர மக்களே அந்தத் தொண்ணூறு விழுக்காடு மக்களின் இன் றைய தொடர்ச்சிகள் ஆவர். கற்றறிவாளர் சமூகம் ஒருபுறத்தில் இயங்க, மறுபுறத்தில் நாட்டார் சமூகமாக இயங்கினர் கிராமத் தோர். ஏட்டுக்கல்வியறிவு பெற்றிராத இவர் களை ஏட்டிலக்கிய சமூகம் பெரிதும் கண்டுகொள்ளவில்லை. உழவு உட்பட பல்வேறு தொழில்களோடும் கிராமங்க ளுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கை யையுமே இவர்கள் கொண்டிருந்தனர்.

மெய்யியல் இறைநெறிகள் தமிழருக்குள் காலூன்ற முதல், ஆட்சியதிகார சமூகத் துக்கும் பாரமக்களுக்குமிடையே இடை வெளி குறைவாக இருந்தமைக்குச் சங்க இலக்கியங்கள் சான்றாக உள்ளன.

தமது மெய்யியல் கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் மக்களிடையே பரப்ப முயன்ற இறைநெறிகள் ஆட்சி அதிகாரத்



தையும் கற்றறிந்தோரையுமே குறிவைத்து. கல்வியறிவு இல்லாத நாட்டார் சமூகத்தை அவைகள் பெரிதும் கண்டுகொள்ளவில்லை. அதுமட்டுமன்றி இந்து மதநெறிகள் வர் ணம் என்ற சாதியப் பிரிவை அறிமுகப்ப டுத்தி, தலித், தாழ்த்தப்பட்டோர் என்ற பெயர்களோடு பெரும்பாலான நாட்டுப்புற மக்களை தமது இறைநெறிக்கு வெளியே வைத்தது. 1930களுக்குப் பின்னர் மேற் கொள்ளப்பட்ட ஆலய நுழைவுப்போராட் டங்களுக்குப் பின்னரே நாட்டுப்புற மக் கள் மெய்யியல் வழிபாட்டு ஆலயங்க ளுக்குள் காலடி வைக்கத் தலைப்பட்டனர்.

இவ்வாறான நாட்டுப்புற மக்கள், கல்வி யறிவு இல்லாதிருந்த பொழுதிலும் பல்வ கைப்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புக ளால் பெரிதும் பாதிக்கப்படாதவர்களாகவே இருந்தனர். இதனாலேயே பண்டைய தமி ழரின் பண்பாட்டுத் தொடர்ச்சி இவர்களி டையே பாரியளவிலான மாற்றங்களுக்கு உட்படாமல் பேணப்பட்டு வந்திருக்கின்றது. ஓர் இனத்தின் பண்பாட்டு நிலைக்களன் களாக அவ்வனத்தாரின் கிராமிய வாழ் வியலே நிலைபெற்றிருக்கின்றன.

மெய்யியல் இறைநெறிகளோடும் பிறவி னத்தார் பண்பாட்டு மரபுகளோடும் இணைந்து இலக்கியம் வாயிலாகக் குறிப்பிடப்பட்ட தமிழர் மரபுகள் பலவும் செவ்வியல் மரபு களாகவே அமைந்தன. இவ்வாறான ஏட்டி லக்கியங்கள் மரபுகள் நாட்டார் மரபுக ளைத் தவிர்த்தே வந்துள்ளன. அறிவாளர், அதிகாரம் என்ற வட்டத்துக்குள் ஆளுமை செலுத்திய மெய்யியல் இறைநெறிகளுக் குக்கட்டுப்பட்டவர்களாக இலக்கியம் யாத் தோர் நாட்டார் வாழ்வியலைக் கண்டு கொள்ளாது விட்டனர். ஏறக்குறைய பதி னைந்து நூற்றாண்டுகாலத் தமிழ் இலக் கிய மரபு நாட்டார் வழக்காற்றியலைப் பெரிதும் கண்டுகொள்ளவே இல்லை. குற் றாலக் குறவஞ்சி மட்டும் விதிவிலக்காக அமைந்தது.

இந்த நாட்டுப்புற மக்களே பண்டைய பல்வேறு விழாக்களையும் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் இன்றுவரை சுமந்து வந்தோராவர்.

ஆளுடைச் சமூகமும் அறிவுடைச்சமூகமும் பெரிதும் ஆரிய, ஆங்கில ஆதிக்கத்துக் குள்ளேயே அமிழ்ந்திருந்தன. தமிழரின் மொழி, சடங்கு, சம்பிரதாயம், இசை, ஆடல் போன்ற இனத்தின் தனித்துவ களங்கள் எல்லாவற்றிலும் ஆங்கிலமும் ஆரியமும் ஊடுருவியிருந்தன. இந்தச் செவ்வியல் மரபுகளே தமிழர் மரபுகள் என வெளிக் காட்டும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட் டன. நாட்டுப்புறத் தமிழர்கள் காலங்கால மாகக் கொண்டாடி வருகின்ற தனித்துவம் மிக்க பல விழாக்களை இச்சமூகங்கள் பெரிதும் கண்டுகொள்ளவில்லை.

எனினும் பெரும்பாலான நாட்டுப்புறக்கிரா மங்கள் இந்த அந்நியக் காற்றுப்படாத தூய தமிழ்ப்பண்பாட்டுக் களங்களாகவே இருந்தன.

## தமிழர் தேசியவிழாவான பொங்கல்:

இனி தொடக்கத்துக்கு வருவோம். திராவி டச் சிந்தனையும் தனித்தமிழ் எழுச்சியும் ஏற்பட்டவேளை, தமது அடையாளங்களை இலக்கியங்களுக்கும் இருந்து மட்டும் தேட வில்லை. அவை மாசு படாமல் பாதுகாக் கப்படும் இடங்கள் கிராமங்களே எனக் கண்டுகொண்டன. அதன் வழியே தமிழர் மரபுகளையும் வேர்களையும் கிராமங்களிலே தேட முற்பட்டன. பல்வகைத் தனித்துவங் களையும் அடையாளங்களையும் அங்கி ருந்தே மீட்டன.

தமிழர் நாட்டார் விழாக்கள் தனித்துவமா னவை. தொழில் விழாக்கள், மெய்யியல் இறைநெறியில் இருந்து மாறுபட்ட சிறு தெய்வத் திருவிழாக்கள் என சிறப்பான தனித்துவங்களைக் கொண்டவையாக இருந் தன.

இந்நிலையில்தான் நாட்டுப்புற மக்கள் மக்கள் எழுச்சியோடு கொண்டாடிய தைப் பொங்கலான அறுவடைத் திருவிழாவின் சிறப்புகளைத் திராவிடச் சிந்தனையாள ரும் தனித்தமிழ் இயக்கத்தோரும் நன்கு ணர்ந்தனர். பொங்கலின் சிறப்புகளை விரி வாக்கி, அதையே தமிழரின் தேசிய விழா வாக்கினர்.

மெய்யியல் இறைவழிபாட்டு நெறிகளிலி ருந்து மாறுபட்ட, தமிரின் தனித்துவங்களை மட்டுமே சுமந்த ஒரு விழாவாகப் பொங்கல் விழாவைச் சிறப்புடையதாக்கினர். இதை யடியொற்றியே பாரதிதாசன்

'தைம்மதி பிறக்கும் நாள் தமிழர்தங்கள்
செம்மை வாழ்வின் சிறப்புநாள் வீடெலாம்
பாலும் வெல்லப் பாகும் பருப்பு நெய்
ஏலமும் புதுநெருப் பேறி, அரிசியைப்
பண்ணிலே பொங்கப் பண்ணித் தமிழர்
எண்ணிலே மகிழ்ச்சி ஏற்றும் இன்பநாள்!
தலைமுறை தலைமுறை தவழ்ந்து வரும்
நாள்!"

என்ற பொங்கல் பாடலை எழுதினார். இப்பாடலில் தலைமுறை தலைமுறை தவழ்ந்துவரும் நாள் எனப் பாவேந்தர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

ஆடலும் பாடலும் நிறைந்ததாகவே நாட் டார் வழக்காற்றியல் வாழ்வு இருந்திருக் கின்றது. வாழ்வின் அனைத்துப் படிநிலை களையும் பாடல்களாகவே பாடிக்கொண் டாடியிருக்கின்றனர். பல்வகைப்பட்ட ஆடற் கலைகளை ஆடி மகிழ்ந்திருக்கின்றனர். தாம் வழிபட்ட அனைத்து சிறுதெய்வங்க ளுக்கும் ஆண்டுதோறும் விழாவெடுத்துக் களிப்புற்றிருக்கின்றனர்.

இவ்வாறான தமிழர், உண்டி கொடுத்து உயிர்காக்கும் உழவுத்தொழிலை தெய் வத்துக்கு இணையாகப் போற்றியிருப்பர் என்பதில் ஐயமில்லை.

ஆவணித் திங்களில் விதை விதைத்து, அதை முளையாக்கிப் பயிராக்கி, வளர்த்து, இடர்களில் இருந்து காத்து விளைவித்துப் பயனை வீட்டுக்குக் கொண்டு வருதற்கு சில மாதங்களாகும். நிறைவில் உழவின் பயன் வீடு வந்தடையும் போது அந்த உழவர் குடும்பம் அடையும் மகிழ்வுக்கு அளவேயில்லை. அந்த மகிழ்வைத் தமி ழர் அறுவடை விழாவாகவே கொண்டாடியி ருக்கின்றனர். அதற்கான சான்றுகள் இலக் கியங்களில் நிறையவே உள்ளன. 'பொரு படை தருஉம் கொற்றமும் உழவர் ஊன் றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே" எனப் புறநானூறு உழவைச் சிறப்பிக்கின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் உழவுத்தொழி லுக்கு அடுத்தே போர்த்தொழிலைப்போற் றியிருக்கின்றன. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என ஒரு புலவர் உழவர்களை உயர்த்துகின்றார்.
வாழ்வின் பலநிலைகளிலும் வேண்டுதல் களுக்காகவும் மனநிறைவுக்காகவும் பல் வேறு தெய்வங்களை வணங்கி, விழாவெ டுத்த தமிழர், அறுவடை நிறைவுற்ற நாளில், வயல் சிறக்கக் காரணமான கதிரவனுக்கு நன்றி கூறி வணங்கியிருப்பர் என்பது இயல் பானதே.

மெய்யியல் இறைநெறிகள் வலுவாக வேரூன்றியிராத காலத்தில், சமணரான இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தின் இறை வணக்கத்தில் 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" எனக் கதிரவனையே வணங் குகின்றார். குடிமக்கள் காப்பியம் எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம் கூறும் கதி ரவ வணக்கம் உழவுத்தொழிலோடு தொடர் புடையது என்பதையும் நாம் உணர வேண் டும்.

உழவைக் கொண்டாடும் நோக்கத்தோடு மட்டுமன்றி, உழவு சிறக்கக் காரணமான கதிரவனையும் நன்றியோடு வணங்கும் பண்போடு இணைந்து தோற்றம் கொண் டதே அறுவடை விழாவென நாம் கருதலாம். தமிழர் வாழ்வில் உற்ற துணையாக விளங் கிய விலங்கு மாடு. உழவுத்தொழிலில் பெரும் பங்காற்றிய மாடுகளுக்கு நன்றி கூறும் உயரிய உள்ளம் கொண்டவர்களா கத் தமிழர் இருந்தனர்.

தொடர்தல் 68ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு நோக்கில்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வாறு வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் தொழிலோடு இணைந்து பண்டைத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட கொண்டாட்டமாகவே அறுவடை விழாவைக்கருதலாம்.

இன்று கொண்டாடப்படும் பொங்கல்விழா அறுவடை விழாவின் தொடர்ச்சியே எனக் கடந்த கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றில் இந்த விழா பல்வகை மாற்றங்களை உள்வாங்கியிருக்கக் கூடும் என்பதை நாம் மறுக்கவில்லை. பிறவினத்தோரின் கலப்பற்ற கிராமிய வாழ்வாக இருந்தபோதும் காலவோட்டத்தில் ஏற்படும் வாழ்வியல் மாற்றங்கள் இயல்பானதே. பண்பாடுகளும் மரபுகளும் கூட அசைவுகள் என்ற வகையில் மாற்றங்களை உள்வாங்கிச் செல்வது நடைமுறைக்கு ஒப்பானது. இதன்வழியே அறுவடைவிழா, காவவோட்டத்தில் தை மாதத்துக்குரிய பொங்கல் விழாவாகப் பெயர்கொண்டு, ஐந்து நாட்கள் நடத்தப்படுகின்ற கொண்டாட்டமாக விரிந்திருக்கின்றது.

இனி ஐந்து நாட்களும் கொண்டாடப்படுகின்ற பொங்கல்விழா பற்றி விரிவாக நோக்குவோம்.

### போகிப்பொங்கல்:

போகி என்ற சொல் போக்கி என்ற சொல்லின் திரிபாக வந்ததென்பர். பழையவற்றைப் போக்குதல் என்ற செயலின் வழியாகத் தோன்றியது போக்கி என்ற தொழிற்பெயர்ச் சொல். மார்கழி நிறைவு நாளன்று வீட்டைத் தூய்மை செய்து பழையபொருட்கள் எல்லாவற்றையும் தீமூட்டி எரிக்கும் நிகழ்வே போகிப் பொங்கலாகும்.

மறுநாள் கதிர்ப்பொங்கல் என்பதால் வீட்டையும் சுற்றாடலையும் தூய்மை செய்வர். குப்பைகளையும் கழிவுகளையும் ஓரிடத்தில் குவிப்பர். அறுவடையின் வாயிலாகப் பயன்பெற்றுப் பல தேவையான புதிய பொருட்களை வாங்கியிருப்பர். அவ்வேளை பல பயன்படாத பொருட்களையும் அகற்றி குப்பைகளோடு குவிப்பர். பின்னர் அவற்றுக்குத் தீமூட்டி எரித்து மகிழ்வர். வீட்டுக்கு வண்ணம் தீட்டுதல், மாடுகளைத் தூய்மை செய்து பொங்கலுக்கு அணியம் செய்தல் என்பனவும் இந்த நாளில் நடைபெறும்.

தமிழகக் கிராமங்களில் பலவிடங்களில் இந்நாளன்று வைகறையில் நிலைப்பொங்கல் செய்வர். வீட்டின் முன்வாயில் நிலைக்குப் மஞ்சள் பூசி, திலகமிட்டு, தோகை விரிந்த கரும்பொன்றைச் சாத்தி நிற்கச் செய்து வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, குங்குமம் வைத்து, தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி வீட்டுத்தெய்வத்தை வணங்குவர். பெரும்பாலும் இதைக் குடும்பத் தலைவி நடத்துவார்.

பழையவற்றை அகற்றும் இந்தநாளைக் கொண்டாட்ட நாளாகவே கருதினர் தமிழர். மறுநாட்களில் வரக்கூடிய விழாக்களிப்பின் தொடக்கமாகப் போகியைப் பொங்கலாகவே கருதிப்போற்றினர். ஆண்டின் நிறைவு நாள் என்பதால் கடந்த ஆண்டுக்கு நன்றி சொல்லும் விழா என்றும் சிலர் இதைக் கருதுவர்.

போகியன்று வேப்பிலை, ஆலாப்பூ, ஆவாரம்பூ, போன்றவற்றை வீட்டுக்கூரையில் செருகுவர். இவை நோய்த்தொற்றைத் தடுக்கும் தன்மை கொண்டன.

வீட்டில் உள்ள குப்பை, கழிவுகளை எரித்தல் என்ற நிகழ்வை மெய்யியல் அடிப்படையிலும் சிலர் நோக்குகின்றனர். சிந்தையில் இருக்கும் துயரங்களையும் எதிர்காலம் பற்றிய அச்சங்களையும் அகற்றி, அவற்றையும் எரித்துப் புதிய ஆண்டைத் தொடங்குவோம் என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விழாவாகவும் போகிப்பொங்கலைக் கருதுகின்றனர்.

இந்தநாளில் சிறுதானியங்களில் உணவு செய்வர். எள், பயறு, உழுந்து போன்ற தானியங்களில் உணவு செய்து சிறுதெய்வங்களுக்குப் படைத்துத் தாமும் உண்பர்.

இந்தப் போகித்திருநாளை வடநாட்டாரே அறிமுகப்படுத்தினர் என்றும் இதன் வழியாகப் பழைமை வாய்ந்த ஏடுகளையும் பாரம்பரிய பொருட்களையும் எரியூட்ட வழிவகுத்தனர் என்ற கருத்தும் உண்டு.

### கதிரவப் பொங்கல்:

இந்நாளே தைத்திங்களின் முதல்நாளாகும். கதிரவன் வெப்பம் தரவல்ல வடதிசையை நோக்கி நகர்வதைப் போன்ற தோற்றத் தருகின்ற முதல்நாள். இதை வடமொழியில் சங்கராந்தி என்பர். மார்கழி மாதத்தில் பனியும் புகாருமாய் முடிக்கிடந்த நிலம் கதிரவனின் வடசெல்வோடு சற்று வெளிக்க



ஆரம்பிக்கும். தை முதல்நாள் தொட்டு, வெப்பம் அதிகரிக்கத் தொடங்கும். தைத் திங்களில் தொடக்கநாள் என்பதோடு, வெப்பகாலத்தின் தொடக்க நாளாகவும் அமைகின்ற நாளையே தமிழர் தம்முடைய அறுவடைவிழா நாளாகக் கொண்டாடினர்.

பண்டைக்காலத்தில் நெற்பயிர் முழுமையான பயனைத் தருவதற்கு நான்கு முதல் ஐந்து மாதங்கள் வரை செல்லும். ஆவணியில் விதையிட்டால் மார்கழித் திங்கள் இறுதியில் அறுவடை செய்வர். உழவின் வழியே பெற்ற பயனைக் கொண்டாடுவ தற்கேற்ற காலமும் இதுவே. உழவர் பொருளாதார மேன்மை காணும் இந்த மாதத்தின் சிறப்பைப் பலவழிகளிலும் போற்றியிருக்கின்றனர். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது பொதுவான பழமொழி.

உழவர்கள் வயலில் முதன்முதலில் அறுவடை செய்து எடுத்துவந்த கதிர்களைப் பத்திரப்படுத்தி வைப்பர். பொங்கலன்று அந்தக் கதிர்களைக் குற்றி அரிசியாக்கி, அதில் பொங்கல் செய்து, கதிரவனுக்கு நன்றி தெரிவிப்பர்.

போகிப்பொங்கலன்று இரவே வீட்டு முற்றத்தில் வட்டமாக சாணத்தால் மெழுகி வைப்பர். மறுநாள் பொங்கலுக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடிப்பர்.

கதிர்ப்பொங்கலன்று அதிகாலை வீட்டிலுள்ள அனைவரும் எழுந்து நீராடி புத்தாடை அணிவர். கதிரவன் உதிப்பதற்கு முன்பாகவே முதல்நாள் மெழுகப்பட்ட சாணத்தரை மீது அரிசிமாவில் கோலமிடுவர். கோலத்தின் ஒருபுறத்தில் தலைவாழையிட்டு நிறைகுடம் வைப்பர். மங்கல விளக்குகளும் வைப்பர். கோலத்தின் நடுவே மூன்று கல் வைத்து அடுப்பு மூட்டுவர். மஞ்சளும் இஞ்சியும் மாவிலையும் கட்டப்பட்ட புதிய பானையை அடுப்பிலே வைத்து தூய நீருற்றிக் கொதிக்க வைப்பர். இதனிடையே கரும்பு, தோட்டத்தில் விளைந்த பல்வகைப் பழங்கள், விளைபொருட்கள் பலவற்றையும் பொங்கும் பானையைச் சுற்றி வைப்பர்.

நீர் கொதித்துவரும் வேளையில் பால் ஊற்றுவர். பால் கொதிக்கும் நிலையில் பானையில் இருந்து பொங்கி வழியும். பெரும் கதிரவன் தோன்றும் தருணத்தில் இது நிகழ வேண்டும் என அனைவரும் விரும்புவர். அதுவும் கதிரவன் தோற்றும் திக்கை நோக்கி பால் பொங்கி வழியுமாயின் பொங்கலிடுவோர் பெருமகிழ்ச்சி கொள்வர். பால் பொங்கும் வேளைக்காகக் காத்து நின்ற குடும்பத்தார் அனைவரும் பொங்கும் போது, ‘பொங்கலோ பொங்கல்’ எனச் சத்தமிட்டு மகிழ்வர்.

பின்னர் எடுத்து வைத்த அரிசியை குடும்பத்தலைவர் இருகைகளாலும் அள்ளியெடுத்து பயபக்தியோடு பானையில் இடுவார். பின்னர் குடும்பத்தோர் அனைவரும் பானையில் அரிசி இடுவர். தொடர்ந்து ஏனைய பொங்கலுக்குரிய பொருட்களும் வெல்லமும் சேர்க்கப்பட்டு, பக்குவமான வகையில் பொங்கல் செய்யப்படும். இதேவேளை ஏனையோர் அவல், கடலை, மோதகம் என்பவற்றையும் மற்றுமொரு அடுப்பில் செய்வர்.

இவையாவும் செய்யப்பட்டவுடன், நிறைகுடத்துக்கு முன்பாக தலைவாலையில் கதிரவன் எழுந்திருக்கும் திசை நோக்கிப் படைக்கப்படும். மங்கல விளக்குகளைக் குடும்பத்தலைவி ஏற்றுவார். படைத்தவுடன் குடும்பத்தார் அனைவரும் சுற்றிநின்று கதிரவனை நன்றியோடு வணங்குவர். பலர் பாடல்களும் பாடுவர். உழவர்கள் கதிரவனை நோக்கி நிலத்தில் விழுந்து வழங்குவர்.

இவ்வேளை பெரும்பாலும் பிறதெய்வங்களை உழவர்கள் வணங்குவதில்லை. சாணத்தில் அறுகம்புல் செருகி வைத்து வணங் கும் வழக்கம் பின்னாளில் இடையிட்டுத்தோன்றியதாக இருக்கவேண்டும். பட்டாசு கொழுத்துதல் போன்றனவும் பின்னாட்களில் வணிக நோக்கத்தோடு அறிமுகமானவையாகும்.

பொங்கல் படைக்கப்பட்டு, கதிரவனை வழிபட்டபின், அனைவருமாக கூடியிருந்து பொங்கல் உண்டுமகிழ்வர். பின்னர் அயலோர் வீடுகளுக்கும் பொங்கலை எடுத்துச் சென்று வழங்குவர். தனித்து வாழ்வோருக்கும் துறவிகளுக்கும், இயலாதோருக்கும் பொங்கல் உட்பட பல்வகை உணவுப்பொருட்களைக் கொண்டுசென்று வழங்குவர்.

### மாட்டுப்பொங்கல்:

மாடு என்றால் செல்வம் என்பதே தமிழ் கூறும் பொருள். தமிழர்களின் மிக நீண்ட வாழ்வியலில் மாடுகள் ஓர் அங்கமாகவே திகழ்ந்து வந்துள்ளன. மாடுகளுக்காகவே பெரும் போர்களும் உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன. தொல்காப்பியம் கூறும் புறத்திணையில் காணப்படும் போர் மரபுகள் ஆநிரை கவர்தலையும் காத்தலையும் அடிப்படையாகக் கொண்டன.

மாடு என்ற விலங்கினம் உடலளவில் பலமானது என்ற போதிலும் மென்னியல்பு கொண்ட விலங்கான, மாந்தரோடு இயைந்து இணைந்துவாழும் உயிரினமாகவே இருந்தது. தாம் வளர்க்கும் மாடுகளை உழவர்கள் குடும்ப உறுப்பினர்களாகவே கருதினர். பெண் மாடான பசு மாந்தரின் உணவுத்தேவைகளைக் கணிசமாக நிறைவேற்றியது. ஆண்மாடான காளை உழவு, பயணம் போன்ற தேவைகளில் பெரும்பங்கு வகித்தது.

பண்டைய வாழ்வியல் மக்களின் செல்வத்தின் அளவு மாடுகளை வைத்தே கணக்கிடப்பட்டது. மாடுகளைத் தெய்வங்களுக்கு இணையாகப் போற்றிய தமிழர், மாட்டிறைச்சி உண்பதை முற்காலம் முதலே தவிர்த்து வந்துள்ளனர்.

பல்வேறு சிறப்புகளைக்கொண்ட ஆவினத்தைத் தமிழர் போற்றத்துணிந்தமை மாடுகள் மீது அவர்கள் கொண்டிருந்த பேரன்பை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

உழவுத்தொழில் சிறக்க உதவியோர் வரிசையில் கதிரவனுக்கு அடுத்த இடத்தை மாடுகள் பிடித்துக்கொள்கின்றன. இவை இரண்டுமே பயனை எதிர்பாராமல் மாந்தருக்கு உதவி வருகின்றவை. அதனால் தமிழரின் உயர்ந்த நன்றிக்குரியவையாகி விடுகின்றன. அந்த நன்றியறிதலைப் பெருங்கொண்டாட்டமாகவே நிகழ்த்திவருகின்றனர் தமிழர்.

கதிரவப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. இதைப் பட்டிப் பொங்கல், கன்றுப்பொங்கல் என்றும் அழைப்பர். பொங்கல் நாளான்று காலை, மாடுகள் கட்டும் தொழுவத்தைத் தூய்மை செய்வர். மாடுகளை நன்றாகக் கழுவி அவற்றையும் தூய்மை செய்வர். கொம்புகளைச் சீவி கூராக்கி, பளபளக்கும் வண்ணங்கள் தீட்டுவர். கொம்புகளில் குஞ்சங்களும் கட்டுவர். கழுத்தில் தோல் பட்டைகள் அணிவித்து மணிகளும் கட்டி விடுவர். மாடுகளில் நெற்றியில் பொட்டுகளும் வைப்பர். காளைகளுக்கு புதிய மூக்கணாங்கயிறு, தாம்புக்கயிறும் அணிவிப்பர்.

ஏர், கலப்பை போன்ற உழவுக்கருவிகளையும் தூய்மை செய்வர். எல்லாவற்றையும் ஓரிடத்தில் வைத்து பொட்டுகள் இடுவர்.

பின்னர் மாலைப்பொழுதில் தொழுவத்துக்குள் அல்லது அருகே பொங்கல் செய்யத் தொடங்குவர். முதல்நான் பொங்கலைப் போலவே பல்வகைப் பழங்களும் தானியங்களும் பொங்கலின்போது படைக்கப்பட்டிருக்கும். மாடுகளுக்குப் பிடிக்கும் என்பதற்காக வெண்பொங்கல் செய்யும் வழக்கமும் உண்டு. பொங்கிய பின், விளக்கேற்றி, ஒளியேந்தி மாடுகளை வழிபடுவர். எல்லா மாடுகளுக்கு பொங்கிய பொங்கலையும் பழங்களையும் காய்கறிகளையும் ஊட்டுவர்.

நிறைவில் ‘பொங்கலோ பொங்கல் மாட்டு பொங்கல், பட்டி பெருகுக, பால் பானை பொங்குக, நோவும் பிணியும் தெருவோடு போக” என்று கூறி மாடு பொங்கல் உண்டபின் அருந்திய மிகுதி நீரைத் தொழுவம் எங்கும் தெளிப்பர்.

ஐந்தறிவு கொண்ட விலங்குதானே, நன்றி சொன்னால் அதற்குப் புரியவா போகின்றது? என்றெண்ணி விட்டுவிடாமல் மாடுகளையும் மாந்தநேயத்தோடு போற்றும் பண்பு மானுடத்தின் உயர்ந்த இயல்பாகும். மாட்டுப்பொங்கல் இதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

### காணும் பொங்கல்:

பொங்கல் கொண்டாட்டங்களில் இது நான்காம் நாள் கொண்டாட்டமாகும். முதல்

தொடர்தல் 69ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு நோக்கில்...

68ம் பக்கத் தொடர்ச்சி...

மூன்று நாட்களும் தமது குடும்பச் சூழலுக்குள் பொங்கலைக்கொண்டாடிய தமிழர் இந்த நான்காம் நாளைச் சமூகக் கொண்டாட்டமாக்கினர். ஊர் மக்களாக ஒன்றிணைந்து அன்பும் பண்பும் சிறக்க இந்நாளை சமூகப்பெருவிழாவாகக் கொண்டாடுவர். இந்நாளிலே குடும்பமாகச் சென்று, பெரியோர்களை நாடி வாழ்த்துகள் பெறுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்நாளிலே கிடைக்கப்பெறும் பெரியோரின் ஆசி ஆண்டு முழுமைக்கும் நன்மை தரும் என்று நம்பினர்.

அன்றையநாள் ஊருக்கு நடுவே உள்ள திடலில் கூடுவர். கொண்டுவந்த சிற்றுண்டிகளை ஊரவரோடு பரிமாறி உண்டு மகிழ்வர். ஒருவரையொருவர் கண்டு, அன்பு நெகிழப் பேசிக் களிப்பர். அந்தத் திடலில் பல்வகைக் கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடுசெய்திருப்பர். பெரும்பாலும் கிராமியக்கலைகள் யாவும் இங்கு வெளிப்படும். உறியடித்தல், வழுக்குமரம் ஏறுதல் தலையணைச் சண்டை போன்ற விளையாட்டுகளுடன் பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளும் இந்நாளில் நடைபெறுவன.

இந்நாளிலேதான் ஏறு தழுவுதல் என்ற பழந்தமிழர் விளையாட்டான சல்லிக்கட்டும் இடம்பெறுகின்றது. காளை மாடுகளை எப்போதும் பலம்மிக்கதாகவே தமிழர் வளர்ப்பர். உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் வலுவான காளைகள் வேண்டும். இந்தக்காளைகள் சிலபொழுதுகளில் கட்டுக்கடங்காமல் திமிறிப் பாயவல்லவை. அவ்வேளை இக்காளைகளை அடக்கும் வல்லமைகளையும் நெறிமுறைகளையும் ஆண்கள் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறான காளைகளை அடக்கவல்ல ஆண்கள் ஊர் நடுவே வீரர்களாகவே கணிக்கப்பட்டனர். இவ்வாறு காளைகளை அடக்கும் இளைஞர்களுக்கே தமது மகளைத் திருமணம் செய்து வைப்போம் என பல பெற்றோர் கருதிவந்துள்ளனர். போர்களத்தில் வீரர்களை அடையாளம் காணமுன், கிராமத்துமக்கள் ஏறுதழுவுதல் வீரவிளையாட்டின் வழியே வீரர்களை அடையாளம் கண்டனர்.

மாடுகளை மந்தைகளாக மேய்க்கச்செல்லுமிடங்களில் மாடுகளைக்கவர்ந்து செல்லப் பகைவர்கள் வருவர். அவர்களை எதிர்த்து நின்று மாடுகளைக்காக்க வேண்டிய வீரமும் மேய்ப்போருக்கு இருக்க வேண்டும். மேய்ப்போரின் வீரத்தை அடையாளம் காணவும் ஏறுதழுவுதல் பயன்பட்டது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏறுதழுவுதல் பற்றிய பல செய்திகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் மாடுகளின் கழுத்தில் பரிசுப் பொருட்களைக் கட்டிவிட்டு ஓடவிடுவர். அந்தக்காளையை அடக்குவோர் அந்தப் பரிசை எடுத்துச்செல்வர். அதில் உலோகக் காசுகளைக் கட்டிவிடும் வழக்கமும் ஏற்பட்டது. கலகலக்கும் உலோகக் காசுகளை சல்லிக்காசு என்றழைக்கும் வழக்கம் கிராமங்களில் உள்ளது. இதுவே சல்லிக் கட்டு என்றழைக்கப்பட்டு இன்று ஜல்லிக் கட்டாக மருவி நிற்கின்றது. இதனை ஒரு சாரார் மஞ்சுவிரட்டு என்றும் அழைத்து வருகின்றனர்.

நான்காம் நாளான காணும் பொங்கல், கலைநிகழ்ச்சிகளும் விளையாட்டுகளும் நிறைந்த விழாவாக, சமூக ஒருமைப்பாட்டை மீள வலியுறுத்தும் பொதுமைக்களமாக இன்றும் திகழ்ந்து வருகின்றது.

இந்நாளைக் கணுப்பொங்கல் என அழைக்கும் ஒரு வழக்கமும் இருக்கின்றது. இந்நாளில் கணுப்பிடி என்னும் ஒருவகை நோன்பைப் பெண்கள் கடைப்பிடிப்பர் என்றும் தமது உடன் பிறந்த ஆண்மக்கள் நலமாக இருக்க வேண்டும் என வேண்டி இந்த நோன்பு கடைப்பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்நாளில் சல்லிக் கட்டு விளையாட்டில் ஈடுபடப்போகும் ஆண்கள், புண்படாது நலமாகத் திரும்ப வேண்டும் என்று பெண்கள் வேண்டுவதே இயல்பானதே. இப்போது இந்த நோன்பு பெரிதும் வழக்கத்தில் இல்லை.

## சிற்றில் பொங்கல்:

சிற்றில் பொங்கல் இப்போது பெருவழக்கில் இல்லையென்றே கூறலாம். தொடர்ந்து நான்குநாள் கொண்டாட்டத்தின் பின் வீட்டுப் பெண்கள் பலரும் சோர்வடைந்திருப்பர். இந்நிலையில் இந்த ஐந்தாம்



நாளில் வீட்டிலுள்ள சிறுபெண்களே சமையல் செய்யப் பணிக்கப்படுவர். அதாவது விடலைப் பருவத்தினரான சிறு பெண்கள் பெரியோருடைய துணையுடன் தாமாகவே சமையல் செய்து பெரியோருக்குப் பரிமாறுவர். இப்பெண்கள் சமையலைக் கற்றுக் கொண்டு, ஏனையோருக்குப் பரிமாறும் முறைகளைத் தெரிந்துகொள்ளும் நாளாகவும் இது அமைகின்றது. இந்நாளில் இவர்களின் சமையல் திறனை ஊக்குவித்துப் போற்றுவர் பெரியோர்.

சிறிய இல் என்ற பொருள்பட, சிற்றில் என்ற சொல் இங்கு கையாளப்பட்டுள்ளது. சிறுமியர் மணலில் கட்டி விளையாடும் சிறு வீட்டையும் சிற்றில் எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறாக பல்வேறு சிறப்புகளுடன் இந்த ஐந்து நாட்களும் தொடர்ச்சியாகக்கொண்டாடப்பட்டன. இதுபோன்று தொடர்ச்சியாகக் கொண்டாடும் இனஞ்சார்ந்த விழாக்கள் வேறில்லை.

## பொங்கல் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகள்:

பொதுவாகப் பண்பாட்டுக்கூறுகளை அகச்சார்பு, புறச்சார்பு என இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு மானுடக் குழுமத்தின் தனித்துவமான வாழ்வியலோடு இரண்டறக்கலந்து காலங்காலமாகப் பேணப்பட்டு வருகின்ற நடத்தைகளை அகச்சார்புக் கூறுகள் எனக் கருதலாம். விருந்தோம்பல், நன்றியறிதல் போன்றன அகத்திலிருந்து மலர்கின்ற பண்பாட்டுக் கூறுகளாகும். பொங்கல் விழா தமிழர் வாழ்வியலின் பல அகக்கூறுகளோடு இணைந்த விழாவாகும்.

தீபாவளி என்ற பண்டிகையும் தமிழரால் கொண்டாடப்பட்டு வருகின்றது. வடநாட்டாரின் மெய்யியல் இறைநெறியைத் தழுவிய கொண்டாட்டம். தென்னிந்தியர் இந்தப் பண்டிகையை எவ்வித ஆழமான பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிராமல், களிப்புற்றுப் பொழுதுபோக்கும் விழாவாகவே கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவும் தமிழருடைய கொண்டாட்டக் கூறுகளில் ஒன்றாகிவிட்டது. இது தமிழருடைய தனித்துவமான அகக்கூறோடு ஒட்டாமல் புறத்தே நிகழ்கின்ற விழாவாகவே இருக்கின்றது. உனவே இது புறச்சார்பு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாகும்.

தமிழ்மக்களுடைய அகவியலின் உன்னதமான வெளிப்பாடாகப் பொங்கல் விழா வைக்கருதலாம். இனி பொங்கல் வெளிப்படுத்தும் பண்பாட்டுக்கூறுகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## அன்புடை உள்ளம்:

விலங்குவகை வாழ்விலிருந்து மாந்தரை விடுவித்துப் பண்புடை உலகத்துக்கு இட்டுச்சென்றது அன்பு என்ற உயர்வுணர்வே. அன்பெனும் ஊற்றை உள்ளமெங்கும் நிறைத்து அதைப் பண்படுத்தினர் மாந்தர். அதன்வழியே பற்று, பக்தி, அருள், இரக்கம் என்ற நல்லுணர்வுகள் மனதிடையே விளைந்தன. குடும்பவாழ்வையும் கூட்டு வாழ்வையும் அன்பென்ற அகவுணர்வே கட்டமைத்தது. அன்பின் வழிநின்று கூடி வாழ்தலின் வழியே பற்றும் பக்தியும் விழாக்களும் உருவாகின. உள்ளத்தின் பெருக்கெடுத்த அன்பூற்றின் உயர்ந்த அடையாளமாகப்பொங்கலைக் கருதலாம். தொழில் மீதும் உதவியோர் மீதும் சுடி வாழ்வோர் மீதும் கொண்ட அன்பின் வெளிப்பாடே பொங்கல் விழா. பொங்கல் விழா வாயிலாக வெளிப்படும் அனைத்துப்பண்பாட்டுக் கூறுகளுக்கும் இந்த அன்பே திறவுகோலாக அமைகின்றது.

## அரிசிப் பண்பாடு:

தமிழர்களின் முதன்மை உணவு அரிசியே. 'வரப்புயர நெல் உயரும்" என்ற ஔவையின் கூற்றே இதற்குச்சான்றாகும். உணவே உயிரிருப்பின் தளம். அத்தளத்தின் களம் நெல் விளையும் வயல். வயல் வழியே விளைந்து வருகின்றது அரிசி. இந்த அரிசியைக் கொண்டே பல்வகை உணவுக் பொருட்களை ஆக்கி உண்டு மகிழ்ந்தனர் தமிழர். அரிசியைக் கொண்டு பல்வகை உணவுப் பொருட்களைச் செய்துண்ணும் பண்பாடு தென்னிந்தியர்களுக்கே உரியது. அரசியோடு வெல்லம், பால் சேர்த்து பொங்கும் மரபு தென்னிந்தியர்களிடம் மட்டுமே காணப்படுவதாகும்.

அரிந்துகால் குவித்த செந்நெல்'
- அகநா னூறு 116ம் பாடல்

'பழஞ்செந்நெல்லின் முகவைக் கொள்ளாள்'
- அகம்- 126

'பால் பெய்செந்நெற் பாசவல் சேர்ற்றோடு'
- அகம்- 237

'வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்'
- அகம்- 40

'வெண்ணெல் வைப்பின் பருவூர்ப்பறந்தலை'
- அகம்- 96

'வெண்ணெல் வைப்பின் நல்நாடு பெறினும்'
- அகம்- 201

என்ற சங்கப்பாடல் வரிகள் நெல்லின் சிறப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவாகக் கூறியிருக்கின்றன.

'உயர்நெல்லின் ஊர்கொண்ட உயர் கொற்றவ"(மது.83) என்ற நெல்லின் சிறப்பைக் கொண்டே பாண்டியன் நெடுஞ்செழியன் போற்றப்படுகின்றான்.

சங்க இலக்கியங்கள் நெல்லின் பல வகைகளைக்குறிப்பிடுகின்றன. குளத்தின் நீரைப் பெற்று விளையும் நெல்லை 'வெண்ணெல்' என்றும் வானம் பார்த்த பூமியில் மழையை நம்பி விளையும் நெல்லை 'ஐவன வெண்ணெல்' என்றும் குறிப்பிட்டனர். நெல்லில் இருந்து தோன்றுபவற்றை அரிசி, சோறு, வல்சி, அடிசில் எனப் பல்வகைப் பெயர்களால் அழைத்தனர்.

உலகில் பேசப்படும் பல மொழிகளுக்கும் அரிசி என்ற சொல்லைத் தமிழே வழங்கியிருக்கின்றது என்பதிலிருந்து தமிழருக்கும் அரிசிக்கும் உள்ள நெருக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். பின்னாட்களில் நிறைகுடத்தின் கீழ் நெல் அல்லது அரிசி வைக்கும் வழக்கமும், வைதீக ஆகம முறைப்படி நடக்கும் சடங்குகளில் அரிசி தூவி வாழ்த்துவதும் அரிசியைத் தமிழர் போற்றியமைக்குச் சான்றாகின்றன.

தமிழருடைய உணவுகளில் அரசியாகத் திகழும் அரிசியை முதன்மையாகக்கொண்ட பொங்கல் விழா தமிழரின் உணவுப்பண்பாட்டின் உயரிய அடையாளமாகத்திகழ்கின்றது.

## தொழிலைப் போற்றுதல்:

ஒவ்வொருவரும் செய்யும் தொழிலே அவரவர் வாழ்வுக்கு ஆதாரமாகின்றது. ஆதலினால் அத்தொழிலை மதித்துப் போற்றுவது மானுடப் பண்புமாகின்றது. ஆனால் உழவுத் தொழிலை மாந்தர் அனைவரும் போற்றவேண்டும் என்பதை தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளன.

உலகப்பொதுமை கொண்டு, மானுடத்துக்கான நன்னெறிகளை உரைத்த வள்ளுவர் தொழில்களில் உழவை மட்டுமே சிறப்பித்துள்ளார். உழவுக்கொ ஓர் அதிகாரத்தையே அவர் ஒதுக்கியிருப்பதே உழவின் சிறப்பை வெளிப்படுத்திவிடுகின்றது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (உழவு: குறள் 1031)

என்ற குறள் வாயிலாக, உலகமே உழவை நம்பிச் சுழன்றுகொண்டிருக்கின்றது. அதனால் உழவே தலை என்கின்றார் வள்ளுவர். உண்டிதந்து உயிர்காக்கும் உழவுத் தொழிலைப் போற்றிக் கொண்டாடுவது உயர்வானதொரு மானுடப் பண்பு. வரலாற்றுக் காலந்தொட்டே தமிழர் உழவுத் தொழிலைப் மிகவுயர்வாகப் போற்றி வந்துள்ளனர். இதன்வழியேதான் பின்னாளில் தோன்றிய பாரதியாரும் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்றார்.

பொங்கல்விழா உழவுத்தொழிலைக் கொண்டாடும் ஒப்பற்றதோர் விழா என்பதில் எவருக்கும் ஐயமில்லை. தொழில் போற்றும் மானுடப் பண்பைத் தமிழர் இவ்விழா வழியே வெளிப்படுத்துகின்றனர். இப்பண்பின் வழியே வளர்த்த தமிழரே தாம் செய்யும் ஏனைய தொழில்களையும் போற்றி வருவதைக் காணலாம்.

## நன்றியுணர்வு:

மானுடச் சிந்தையில் தோன்றும் ஒப்பற்ற பண்புணர்வுகளில் தலையாயது நன்றியு

தொடர்தல் 70ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு நோக்கில்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

ணர்வு. ஒருவருக்கு உதவுதல் பொதுவான மானுடப் பண்பு. ஏற்கனவே உதவிய ஒரு வருக்கு உதவுதல் ஒருவகைக்கடன். அத னால்த்தான் 'நன்றிக்கடன்' என்பார்கள்.

தொழிலில் உழவைச் சிறப்பித்த வள்ளு வர் பண்புகளில் நன்றியறிதலைச் சிறப் பிக்கின்றார்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்ற குறள் வாயிலாக, நன்றி மறந்தவர்க்கு உய்வே இல்லை என்கின்றார் வள்ளுவர். வள்ளுவருக்கு முன்பாகவே சங்க இலக் கியங்களில் நன்றி தொடர்பான பண்புகள் கூறப்பட்டுள்ளன. தமிழர் நன்றியறிதல் என்ற பண்பொழுக்கத்தைக் கைக்கொண் டவர்களாக இருந்துள்ளனர். அவ்வொழுக் கத்தைப் பொங்கல் விழா வாயிலாகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர்.

உலகுக்கு மழையும் வெயிலும் தந்து காப் பவன் கதிரோன். கதிரவனின் செயற்றிறத் தாலே உலகம் இயங்குகின்றது. வாழ்வு பெறுகின்றது. தமிழர் இதை நன்குணர்ந் திருந்தனர். தமது வாழ்வின் ஏற்படும் நன் மைதீமைகளுக்காகப் பல்வேறு தெய்வங் களை வழிபட்ட தமிழர், உழவுத்தொழில் தொடர்பில் கதிரவனையே நன்றிக்குரிய முதற்பொருளாகக் கருதினர். இவர்கள் நன்றி கூறாவிடில், கதிவன் சினங்கொள்ளப் போவதில்லை, கதிரவனுக்குப் பழிவாங்க வும் தெரியாது. எனினும் ஒளி தந்து காத்த கதிரவன் மேல் இவர்கள் பேரன்பு கொண் டிருந்தனர். அந்த அன்பின் வழிநின்று கதி ரவன் மீதான தமது நன்றிப் பெருக்கை வெளிப்படுத்தினர். இந்த நன்றி வெளிப் பாடு தமிழ் மாந்தருக்குப் பெரும் நிறை வைத் தந்தது. அந்த நிறைவே உணர்வை வலுப்படுத்துவதாகவும் அமைந்தது.

தமிழரின் நன்றியறிதலின் மற்றுமொரு சிறப்பு மாடுகளுக்கு நன்றி கூறும் பண்பு. இந்தப் பண்பொழுக்கத்தின் அகவுணர் வைப் புரியாமல் வெளியே நின்று நோக் குவோருக்கு, மாடுகளுக்கு நன்றி சொல் வது மூடநம்பிக்கையாகத் தோன்றக் கூடும். ஆனால் அதுவே நன்றி கூறும் மானுடப் பண்பின் உச்சநிலை என்பதை உணர வேண்டும். ஐந்தறிவு கொண்டதும் வாய் பேசாததுமான மாடுகள் உழவருக்கு ஆற் றிய உறுதுணையை மனதில் இருத்தி, அவற்றை தமது உறவுகளாகவே போற்றி னர் தமிழர்.

பிறவுயர்களையும் தம்முயிர் போல் போற் றும் மாந்த நேயத்தை மாட்டுப்பொங்கல் விழா வெளிப்படுத்துகின்றது.

இந்நாளில் தமக்கு உதவியோருக்கு அன் பளிப்புகள் வழங்குவதையும் உழவர்கள் கொண்டுள்ளனர். உழவு சிறக்க உதவிய தொழிலாளர்களுக்கு நன்றியுணர்வுடன் புத்தாடைகள், பரிசுப்பொருட்களையும் வழங்குவர். இன்று உழவர்கள் மட்டுமல்ல, வணிகர்களும் இவ்வாறு பல அன்பளிப்பு களைத் தமது பணியாளருக்கு வழங்குவ துண்டு.

## கூட்டுணர்வு:

யாதும் ஊரே யாவரும் கேளிர் என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறி வைத்தோர் தமிழர். பல்வேறு படி நிலைகளில் கூடிச் செயலாற்றும் பண்பு பண்டைக்காலம் தொட்டே நிலவி வந்துள் ளது. தமிழர்கள் விருப்போடு மேற்கொண்ட விழாக்கள் அனைத்துவே கூட்டுணர்வின் வெளிப்பாடே. போர்களும் பிளவுகளும் இருந்தபோதும் சான்றோரும் சமுகமும் கூட்டுணர்வை வலியுறுத்தியே வந்துள்ள னர்.

'ஊரொடு பகைக்கின் வேரொடு கெடும்' 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" போன்ற முதுமொழிகள் கூட்டுணர்வுக்கு வலிமை யூட்டும் வகையிலே உருவாகின. விழைவு என்ற சொல்லிலிருந்து பிறந்ததே விழா என்பதாகும். ஊரோடு கூடி உறவாடும் நோக்கோடு ஏற்பட்ட விழைவே விழாக்க ளானது.

அவ்வாறோ விழாக்களில் பொங்கல் விழா முதன்மையிடத்தைப் பெறுகின்றது. பொங் கல்விழா நடைபெறுகின்ற ஐந்து நாட்க ளும் குடும்பமாகவும் சுற்றாடலாகவும் ஊரா கவும் கூடியே கொண்டாடுகின்றனர். கருத்து வேறுபாடுகள் கொண்டோரும் இந்த நாட் களிலே வேற்றுமைகளைத் துறந்து ஒற் றுமையாகிவிடுகின்றனர். மாந்த நேயத்தின் அடித்தளம் இந்த கூட்டுணர்வே. பலமா கக் கட்டமைக்கப்பட்ட கூட்டுத்தளத்திலி ருந்தே பண்பாடும் மரபுகளும் முழுமையை நோக்கி வடிவம் கொள்கின்றன.

சமுதாயத்தின் கூட்டுணர்வை ஆண்டு தோறும் வலிமைப்படுத்துவதோடு, ஒரு- வரையொருவர் புரிந்து இணைந்தும் செயற் படுவதற்குரிய களங்களையும் பொங்கல் விழா உருவாக்கிக்கொடுக்கின்றது. காணும் பொங்கலன்று கூடுவோர் புதிய உறவு களுக்கும் அறிமுகமாகின்றனர். அன்பும் உளவும் நட்பும் இதன்வழியே வளம் பெறு கின்றன.

தலைமுறை தலைமுறையாகக் கூட்டுக் குடும்பவாழ்வு என்ற பண்பொழுக்கத்தை இன்றும் கைக்கொண்டு வருபவர்களாகத் தமிழர் திகழ்கின்றனர். இதற்குத் தளமிட் டுவரும் விழாக்களில் பொங்கலே முதன் மையானது.

## விருந்தோம்பல்:

மானுடப் பண்புகளில் விருந்தோம்பலுக்குத் தனியிடமுண்டு. தமிழர் இலக்கியங்கள் விருந்தோம்பலைப் போற்றியளவுக்கு வேறு எந்த பண்பையும் போற்றியதாகத் தெரிய வில்லை. வீட்டுக் வருவோரையும் நல்ல உணவையும் விருந்து என்ற ஒரு சொல் லால் அழைக்கும் பண்பு தமிழர்களுக்கே உரித்தானது.

'உண்டால் அம்ம, இவ் உலகம் இந்திரர் அமிழ்தம் இயைவதுஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே..."

எனப் புறநானுறு கூறுகின்றது.

'இந்திரருக்குரிய அமிழ்தம் தமக்கு வந்து கூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டவர் இல்லை' என்கிறது இப்பாடல்.

பொங்கல் விழாவின் உயர்வானதொரு அங்கம் விருந்தோம்பல். பொங்கல்விழா ஒரு குடும்பத்துக்குள் நிகழ்த்தப்பட்டாலும் அச்சுற்றாடலின் வாழும் தனித்தோர், துற வியர், வறியோர், பிறவினத்தோர் எல்லோ ரையும் தேடிச்சென்று பொங்கலைக் கொடுத்து மகிழ்வர். அவ்வாறானோரை வீட்டுக்கு அழைத்தும் பொங்கல் கொடுப் பர்.

பிறருக்குக் கொடுத்துத் தாமும் உண் ணும் பண்பை வளர்க்கும் பண்பறி கள மாகவும் பொங்கல் திகழ்கின்றது.

## ஆக்கம் போற்றுதல்:

சமூகம் சார்ந்த விழாவொன்றைக் கொண் டாடுவதற்குப் பல நோக்கங்கள் உள்ளன. தமிழருக்கே உரித்தான பல நாட்டுப்புற சமூகவிழாக்கள் ஆக்கவுணர்வை அடிப்ப டையாகக் கொண்டன. ஆக்கவுணர்வைக் கொண்டாடுவதிலும் பொங்கல்விழாவே முதனிலை பெறுகின்றது. தமிழர் உற்பத் திச் சமூகமாகத் தம்மை உருவாக்கிக் கொண்டு, உணவுப் பொருளாக்கத்தில் தம்மை வெகுவாகவே ஈடுபடுத்திக்கொண் டனர். பயிர்செய்தலும் மந்தை வளர்தலும் அன்றாட வாழ்வின் அங்கங்களாயின. உற்பத்தியாக்கத்தில் வெற்றியும் நிறைவும் கண்ட தமிழர் ஆக்கிய பொருட்களைக் கொண்டாடிப் போற்றும் பண்பையும் பெற் றனர்.

தீபாவளி அழிவைப் போற்றும் விழாவா கும். திருமால் நரகாசுரனை அழித்தமைக் காகத் தீபாவளியைக் கொண்டாடுவதாக வடநாட்டார் கூறுகின்றனர். இது அழிவு தொடர்பான சாவுணர்வையே வெளிப்ப டுத்துகின்றது. வடநாட்டாரின் பல்வேறு விழாக்கள் அழிவின் வழியாக விளைந் தவையாகவே இருக்கின்றன. மகிஷாசுரன், சூரன், இரணியன், இராவணமவன் என, வேண்டாதவர்களை அழித்தமையையே விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழரோ பெரிதும் ஆக்கங்களைப் போற் றும் விழாக்களையே கொண்டாடி வருகின் றனர். ஆடிப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு என்பன சில சான்றுகள். பொங்கல்விழா அதியுயர்ந்த ஆக்கவுணர்வின் வெளிப்பா டாகும்.

## பெரியோரைப் போற்றுதல்:

பொங்கல் விழாக்களிலே பெரியோர் அனைவரும் சுறுசுறுப்பாகப் பல பணிகளில் ஈடுபட்டுச் சுற்றிச் சுழன்று செயலாற்று வர். பெரியோரின் இச் செயற்பாடுகளே சிறியோருக்கு வாழ்வுக்கான பாடங்கள் கின்றன. பொங்கல் கொண்டாடும் முறை களையும் காரணங்களையும் பெரியோரி டம் கேட்டறியும் சிறியோர் இயல்பாகவே பெரியோரிடம் பெருமதிப்புக் கொள்வர். அவர்களையே தமது வழிகாட்டியாக்கி அவர்களைப் போலவே செயற்படவே முனைவர். இந்தப்பொங்கல்விழா சிறியோ ருக்குப் பண்பறிவிக்கும் ஒருவகைப் பள் ளியே.

ஊரில் வாழும் பெரியோர்கள் பலரும் இந் தப் பொங்கல்விழாக்களை ஊர்விழாவாக முன்னின்று நடத்துவர். அவரிலும் மூத்தோர் கூடவே நின்று நல்ல அறிவுரைகளை வழங்குவர். அவ்வாறான பெரியோரை இளையோர் தேடிச்சென்று ஆசிகள் பெறு வர். அப்பெரியோரை மனதிருத்தி உயர் வாகப் போற்றுவர். பொங்கல்விழா வாயி லாகப் பெரியோரைப் மதிக்கும் பண்பு சிறப்பாகவே போற்றப்பட்டு வருகின்றது.

## கலை வெளிப்பாடுகள்:

நெடிய வாழ்வியலைக் கொண்ட இனத்தின் அனைத்து அசைவுகளில் கலையின் இயக் கம் இரண்டறக் கலந்திருக்கும். அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நடத்தையிலும் அது இழையோடிக்கொண்டிருக்கும். உரலில் இடிக்கும்போதும் அம்மியில் அரைக்கும் போதும் கூட எழும் தாளலயங்களைச் சுவைத்தவாறே பணிகளைச் செய்வர்.

நாட்டுப்புறத் தமிழர் வாழ்வு அறிவறிந்த கலைகளால் நிறைந்தது. அவைகளில் கைவினைக் கலைகள், நிகழ்த்து கலைகள் என்பன முதன்மையானவை. விழாக்கா லங்களில் கலைஞர்கள் அரங்கிலும் பொது விடங்களிலும் நிகழ்த்துபவை நிகழ்த்து கலைகள் எனப்படுவன. ஓரினத்தாரின் பண்பாண்டு மரபுகளைக் காலந்தோறும் பேணிச்செல்வதில் நிகழ்த்துகலைகளுக்கு முக்கியபங்கு உண்டு.

இவ்வாறான கலைவெளிப்பாடுக ளுக்கான சிறந்தவொரு களமாகவும் பொங்கல் விழா திகழ்கின்றது. தமிழகத்தின் ஊர்கள் தோறும் நடைபெறும் பொங்கல் கலைவி ழாக்கள் ஒவ்வொன்றுமே தனித்துவமானவை. கலை மரபுகளும் வெளிப்படுத்தும் பண் பாட்டுக் கூறுகளும் இடத்துக்கிடம் வேறு பட்டுக்காணப்படும். ஈழத்துக் கிழக்கின் கூத்து மரபு வடமோடி எனில், வடக்கின் மரபு தென்மோடியாகும். தமிழகமெங்கும் இந்த வேறுபாடுகளைக்காணலாம். இவை யாவுமே தமிழருடைய பொதுக்கலை மர பியலே.

இவ்வாறான மாறுபாடுடைக் கலைவடி வங்களை பொங்கல் விழாவின் போது ஊர்கள் தோறும் காணலாம். தமிழர்கள் பயன்படுத்தும் அத்தனை மரபுசார் இசைக் கருவிகளும் இக்காலங்களிலே பயன்படுத் தப்படும்.

பரதம், கர்நாடக இசை போன்ற வைதீக நெறிகளோடு கலந்துவிட்ட தமிழர்கலை- களை விடவும் நாட்டுப்புற மக்கள் போற்றி வரும் கலைகளிலேயே தமிழரின் பாரம்ப ரிய மரபுகளையும் தனித்துவங்களையும் அடையாளம் காணலாம். இதற்கு பொங் கல் விழா விரிவான களங்களை அமைத்துக் கொடுக்கின்றது.

## நாட்டார் விளையாட்டுகள்:

இக்காலத்தில் அனைத்துலக விளையாட் டுகள் பல மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றபோதும் கிராமங்களில் பாரம்பரிய மரபுசார் விளையாட்டுகள் பேணப்பட்டு வருகின்றன. காணும்பொங்கலன்று பொது வெளிகளில் பல்வேறு கிராமிய விளை யாட்டுகளைச் சிறப்பாக நடத்துவர்.

உறியடித்தல், வழுக்குமரம் ஏறுதல், கிளித் தட்டு, கபடி, சடுகுடு போன்றன நாட்டார் விளையாட்டுகளில் சிலவாகும். பொங்கல் விழாவின்போது இவை பெரும்போட்டிக ளாக நடத்தப்படும். இளைஞர்கள் ஆர்வத் தோடு இதில் கலந்துகொள்வர்.

இவ்வாறான பாரம்பரிய விளையாட்டுகளை உயிர்ப்போடு காத்துச்செல்வதிலும் பொங் கல்விழா கணிசமாகப் பங்காற்றி வருகின் றது.

## முடிவுரை:

தமிழரின் மிக நீண்ட வரலாற்றோடு இணைந்து வலுவான தளத்தில் உயர்ந்த பண்பாட்டின் குறியீடான இயங்கி வரு கின்றது பொங்கல்விழா. தொடக்க காலத் தில் அறுவடைவிழாவாகத்தோற்றங்கொண்டு காலவோட்டத்தில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளையும் ஏற்றுக்கொண்டு, இன்று பொங்கல் என்ற பெயரோடு தமிழ்த்தேசிய விழாவாக பெருவளர்ச்சி கொண்டிருக்கின் றது தமிழரின் பொங்கல் விழா.

உலகளாவிய நிலையில் தனித்துவமான இனங்கள் பலவும் உலகமயமாதல் என்ற பேராயுதத்தால் தாக்குண்டு, மெல்ல மெல் லத் தமது தனித்துவங்களை இழந்துவ ரும் அபாயம் நிகழ்ந்துவருகின்றது. இந் நிலையில் இவ்வாறான இனங்கள் தமது தனித்துவ நடத்தைகளின் வேர்களைக் கண் டறிந்து, அவற்றைத் தலைமுறைதோறும் புகட்டுதல் அவசியமாகும்.

தமிழரைப் பொறுத்தளவில் தைப்பொங்கல் விழாவை முழுமையாகப் புரிந்துகொண் டாலே போதுமானது. தமிழினத்தின் தனித் துவ வாழ்வியல் சிறப்பியல்புகளை எளிதில் அடையாளங்காணப் அது வழிவகுத்து விடும்.

தாயங்களில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் நிரந்தரமாக வாழத்தலைப் பட்டுவிட்ட தமிழர், தமது வாழ்தளங்களில் இனஞ்சார் பண்பாட்டு விழுமியங்களையும் மரபுகளையும் பேணிச் செல்லவல்ல கள மாகவும் பொங்கல் விழாவே திகழ்கின் றது.

பொங்கலைப்போற்றி எமதெழில் காப்போம்.

***உசாத்துணை:***
- *திராவிட மானுடவியல் - பக்தவத்சல பாரதி*
- *பண்பாட்டு வேர்களைத் தேடி*
- *நாட்டார் வழக்காற்றியல் மையம்*
- *நாட்டுப்புறவியல்*
- *முனைவர் சு.சண்முக சுந்தரம்*
- *சங்க இலக்கியங்கள்*
- *திருக்குறள்*
- *பண்பாட்டு அசைவுகள் - தொ.பரமசிவன்*
- *http://shodhganga.inflibnet.ac.in/bitstream/10603/23405/10/10_chapter%205.pdf*



*vivekanandan.p@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் சில...

**February 01, 2019**

தமிழ்ப் பூங்காவின் மரபுத் திங்கள் 2019

**February 02, 2019**

வாழையடி வாழை 2018 நீர்வேலி நலன்புரிச் சங்க 20வது வருடாந்த இராப்போசன நிகழ்வும் கலை விழாவும்

**February 03, 2019**

மகாவின் தமிழ் இசை விழா

Gore Meadows வெளிப்புற பனி சறுக்கல் மையம் திறப்புவிழா

**February 04, 2019**

கறுப்பு நாள் பிப்ரவரி - தமிழ்த்தாய் மன்றம்

சிங்களத்தின் சுதந்திர நாளுக்கு எதிராக கண்டனப் போராட்டம் - கனடியத் தமிழர் தேசிய அவை

**February 05, 2019**

பெருகிவரும் வீடுகள் நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கத்தை துரிதப்படுத்துவோம் - Voices of Scarborough

**February 09, 2019**

நினைவுகள் இரவு 2019

தொல்காப்பியக் கருத்தரங்கு - 2019

**February 10, 2019**

தமிழ் தொழில்நுட்ப கூட்டமைப்பு சந்திப்பு - 2019

CTYAd; 2019ம் ஆண்டின் விருது விழாவும் இராப்போசன விருந்தும்

**February 10, 2019**

பொங்கல் விழா 2019 - யா/விக்ரோறியா கல்லூரி சுழிபுரம் பழைய மாணவர் சங்கம்

கனடிய அனலைதீவு ஐயனார் ஆலய பொதுக்கூட்டம்

**February 12, 2019**

ஸ்கார்பரோ ரூஜ் பார்க் தொகுதி22 கல்விச்சபையின் கேள்வி பதில் மன்றம்

**February 16, 2019**

சொல்வது எழுதுதற் போட்டி 2019 - அறிவகம்

ஒருத்தி திரைப்படம் முதல் திரையிடல் நிகழ்வு

கிக்கு ஏறுதே - ஒட்டாவா தமிழ் மாணவர் அமைப்பு

சங்கீத கலா விகாரா

**February 17, 2019**

தையிட்டி மக்கள் ஒன்றிய குளிர்கால ஒன்றுகூடல்

அனலைதீவு கலாச்சார ஒன்றியத்தின் இராப்போசன விருந்து 2019

**February 23, 2019**

கலையமுதம் 2019 - மாபெரும் கலை இரவு

கரீபியன் குளிர்கால விழா 2019

பொதுக்கூட்டம் - யாழ் மத்திய கல்லூரி முன்னாள் மாணவர்கள்

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம் நடத்தும் மாசி மாத இலக்கியக் கலந்துரையாடல்

எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் நடத்தும் 4 வது வருடாந்த 'கறுப்பின மக்களின் வரலாறு' மாத கொண்டாட்டம்

www.inayam.net

தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

இணையம்

inayam.net

முற்றிலும் இலவசம்

inayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாத் தமிழ்க் கல்லூரி

# கனடா - உலகத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழியல் மாநாடு - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்காப்போம் - பன்சேனை

- ந. அரியரெத்தினம் -

2009ம் ஆண்டு தாய் மண்ணில் இடம் பெற்ற சோக நிகழ்வுகள் தாய் மண்ணை நேசித்த அனைவரையும் உலுக்கி எடுத்த ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்து விட்டது. அது மட்டுமன்றி தற்பொழுதும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்ற வகையில் நாம் அந்த சோகத்தின் ஆழத்தை உணர்ந்தவர்களாகவும் அவற்றின் தாக்கங்களை ஜீரணிக்க முடியாதவர்களாகவும் நாட்களை கழித்துக்கொண்டிருக்கின்றோம். அதே நேரம் இந்த துன்பியல் நிகழ்வுகள் 'தாய் மண்' செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களையும் தடுமாற்றம் அடையச் செய்வதற்கும் அது காரணமாக அமைந்துவிட்டது. இங்கே தடுமாற்றம் என்பது விரக்தி, அவநம்பிக்கை, பயம், விலகி இருத்தல், வெறுப்பு, எல்லாமே முடிந்துவிட்டது என்ற ஆழ்துயரம், இனி எதுவுமே செய்ய முடியாது என்ற கையறுநிலை... என பலரையும் பலவிதமாக தடுமாற்றமடையச் செய்ததை நாம் மறுக்க முடியாது.

ஆனாலும் இவ்வித தடுமாற்ற நிலைமைகள் இருந்தாலும் துவண்டு போய்விடாது தம்மை தாமே சுதாகரித்துக் கொண்டு தமது தாய் மண் தொடர்பான இலட்சியங்களை தொடர்ந்து செயற்படுத்த வேண்டிய தேவையை, யதார்த்தை உணர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏராளம் மண் பற்றாளர்களையும் நாம் காண முடிகிறது. ஆம் இடர் வந்த நேரத்திலும் இவ்வாறான இனப்பற்றும், மனிதநேயமும் கொண்டு செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த மனிதர்களையே நாம் உண்மையான தாய் மண் பற்றாளர்கள் என்று கூறுவதில் தவறு இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

உலகப்பந்தில் ஏராளம் நாடுகளில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் புலம்பெயர் தாய் மண் மக்கள், மனிதநேய அடிப்படையில் மனித நேயச் செயற்பாடுகளை தாம் பிறந்த மண்ணுக்காக மேற்கொண்டு வருவது நாம் அறிந்ததே. இன்னும் சிலர் தாய் மண்ணில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் தொழில்களை ஆரம்பித்தல், சிதைவடைந்து மறைந்து போய்க்கொண்டிருக்கும் குளங்களை தூர்வாரி புரைமைத்து தாய்மண்ணின் நிலக்கீழ் நீர்வளத்தை பேணும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், நாகதாளிப்பண்ணைகளை கட்டாந்தரைகளில் விளைவித்து அதனூடாக நாகதாளியை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல் என அபிவிருத்தி சார்ந்த வித்தியாசமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தாய் மண்ணுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான பல்வேறு விதமான செயற்பாடுகள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் நலிவடைந்த மக்களின் புரைமைப்புக்களுக்கு மட்டுமன்றி புண்பட்ட அவர்களின் உள்ளங்களுக்கு ஆறுதல்களையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமன்றி உலகப்பந்தில் ஓர் இனமாக தர்மத்தின் அடிப்படையில் தாய் மண் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார விடிவுகள் கிடைக்கும் வரை புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து சென்றுகொண்டிருக்கும். இத்தகைய மனித நேய உதவிகள் தான் ஒரு உறவுப்பாலமாக அமைந்திருந்து அவர்களுக்கு ஒரு வித நம்பிக்கையையும், பற்றுறுதியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் என்பதையும் தூர நோக்கில் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

மேலும் தாய் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் அவலங்களை பொதுவாக நாம் அறிந்திருந்தாலும் எல்லைக் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் அவலங்கள் சராசரியான அவலங்கள் அல்ல என்பதை நாம் அனைவரும் அறிந்திருப்பதும், அவற்றில் அக்கறை எடுப்பதும் அவசியமானது. அதுமட்டுமல்ல அந்த பகுதி மக்களின் குடியிருப்பும் வாழ்வும் அது அவர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் இருப்புடனும் வாழ்வுடனும் தொடர்புபட்டதாக அமைந்துள்ளது என்பதையும் நாம் என்றும் மறந்துவிடக்கூடாது.

தாய் மண் தொடர்பான மனித நேய உதவிகள் பன்முக பார்வை சார்ந்தவையாக அமைந்திருப்பதை நாம் நோக்கமுடிகிறது. ஆனாலும் இவ்வாறான மனித நேய உதவிகள் தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் வினாக்களும் எழுந்து கொண்டும் இருக்கின்றன. இவை இயல்பானதே. இவை தொடர்பான ஒரு தேடலாகவும், ஒரு எல்லைக்கிராமத்து மக்களது உணர்வுகளை அவர்களது நிலையிலிருந்து உள்வாங்கும் வகையிலும் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்டக்களப்பில் உள்ள எல்லைக்கிராமமான பன்சேனைக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. கனடா நாட்டிலிருந்து செயற்படும் 'அன்பு நெறி' என்ற அமைப்பு ஆதரவற்ற நிலையில் இருந்து அல்லல்பட்டுக்கொண்டிருந்த இந்த கிராமத்தை 2017ம் ஆண்டு பொறுப்பெடுத்து, அவர்களது துயர்களை துடைத்துக் கொண்டிருக்கிறது.



### பன்சேனை:

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரு எல்லைக் கிராமமே பன்சேனை எனப் பொதுவாகக் கூறலாம். இதன் நிர்வாகம் வவுணதீவு மண்முனை மேற்கு பிரதேசசெயலர் பிரிவிற்குள் உள்ளடங்குகிறது. இங்கே 176 குடும்பங்களைச் சேர்ந்த 800 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்துடன் படுவான் கரையின் எல்லைக்கிராமமாக அமைந்திருப்பதால் இது பலவகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. ஆனாலும் ஓரளவு அடர்த்தியான காட்டுநிலம் பன்சேனை கிராமத்தை சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் சகோதர இன மக்களுக்கும் பன்சேனை கிராம மக்களுக்குமிடையே நேரடித் தொடர்புகள் குறைவாகவே உள்ளது.

மக்களின் பொருளாதாரம் பெரும்போக விவசாயத்திலும் கால்நடைகளை வளர்ப்பதிலும் மட்டுமே தங்கியுள்ளது. இந்த பெரும்போக நெற் பயிர்ச்செய்கைக்காக இவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கும் இரண்டு அல்லது மூன்று ஏக்கர் வானம் பார்த்த நிலத்தை மட்டுமே இவர்களுடைய சொத்தாகக் கூறமுடியும்.

### தனித்துவம்:

இக்கிராமத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய பல தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. இங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்ற நூறுசதவீதமானவர்களும் தமிழர்களாக இருப்பதால் இது ஒரு தனித் தமிழ் கிராமமாகக் காணப்படுகிறது. இக் கிராமத்திலுள்ள மக்கள் குறிப்பாக இளம் வயதினர் மதுவுக்கோ, போதைப்பொருட்களுக்கோ, புகைத்தலுக்கோ உட்படாதவர்களாகக் காணப்படுகின்றனர். பொதுவாக மூன்று நேரமும் உணவாக சோறு உட்கொள்ளப்படுவது இவர்களது வழமையாக உள்ளது. அதே நேரம் கூட்டுக்குடும்ப முறை, ஒற்றுமை, விருந்தோம்பல் போன்ற கிராமத்துக்குரிய நல்ல பண்புகள் இப்பொழுதும் இங்கே சிதைவடையாது காணப்படுகின்றன.

### பிரச்சினைகள்:

நகரத்திலிருந்து தூரவிலகி காட்டுப்பகுதிகளில் இருக்கின்ற விவசாயக்கிராமங்கள் போன்று பன்சேனைக் கிராமத்திற்கும் போக்குவரத்து பிரச்சினைகள் காணப்படுவது இயல்பானதே. ஆனால் மழை காலத்தில் யாரும் எந்தவகையிலும் பன்சேனைக் கிராமத்திற்கு பயணம் செய்ய முடியாத அளவுக்கு பாதைகள் வெள்ளத்தால் தடைப்பட்டுவிடும். ஆம் இந்த கிராமத்து மக்களும் வேறு எந்த இடங்களுடனும் தொடர்பு கொள்ளமுடியாத நிலையில் அநாதரவாக தனித்து விடப்பட்ட கிராமமாக பன்சேனை மாற்ற மடையும்.

இங்கே பாரி என்ற அழகான பெயருடன் தரம் - 11 வரை வகுப்புக்களைக் கொண்ட அரசாங்க பாடசாலை ஒன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஓரளவு கட்டட வசதிகள் கொண்ட இந்த பாரி பாடசாலை வெளியிடங்களிலிருந்து வரும் ஆசிரியர்களை மட்டுமே நம்பிச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் போக்குவரத்து தடைப்படும் காலங்களில் பன்சேனை கிராமத்தின் கல்வி முழுமையாக முடங்கிப்போய்விடும். இதே போன்றே வைத்தியவசதி, உணவு போன்ற விடயங்களிலும் பெரிய பாதிப்புகளை பன்சேனை கிராமமக்கள் எதிர்நோக்குவார்கள் என்பதை நாம் ஊகித்துக்கொள்ள முடியும்.

அது மட்டுமல்ல விவசாயத்தை தவிர வேறு எந்த தொழில் வாய்ப்பும் இல்லாத இந்தகிராமத்தில் மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்படும்பொழுது இவர்களின் வாழ்வியலுக்கு ஆதாரமான பயிர்ச்செய்கை பாதிக்கப்படும் வெள்ளத்தினால் மட்டுமல்ல மழையை மட்டுமே நம்பி பயிரிடப்படும் பயிர்கள் வரட்சி ஏற்படும் பொழுதும் மோசமாகப் பாதிக்கப்படும். இவ்வாறு ஏதோ ஒரு காரணத்தால் இவர்களுடைய விவசாயத்திற்கோ, கால்நடைகளுக்கோ இழப்புகள் ஏற்படும் பொழுது இவற்றை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் பன்சேனை கிராம மக்களின் அன்றாட வாழ்வியல் கேள்விக்குறியாகிவிடுகிறது.

இதனால் வாழ்வதற்குரிய வருமானத்துக்கு வேறு எந்த மார்க்கமும் இல்லாத காரணத்தால் வேறுவழி இல்லாத நிலையில் பலர் தற்கொலைகளுக்கு முயல்கிறார்கள். அப்படி பரிதாபகரமான சில நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

### தொடரும் யானைகளின் தாக்கம்:

யானைகள் நடமாடும் காடுகள் இந்த கிராமத்தின் எல்லைகளாக உள்ளன. இதனால் மனிதர்களுக்கும், பயிர்களுக்கும் யானைகளால் ஏற்படும் அழிவுகள் ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை தொடர்கதையாக இங்கே தொடர்ந்துகொண்டிருக்கிறது.

காட்டு யானைகளால் ஏற்படும் அழிவுகளை விட, சிலரால் திட்டமிடப்பட்டு இப்பகுதியில் இறக்கிவிடப்பட்ட யானைகளால் ஏற்படும் அழிவுகள் தான் மோசமாக உள்ளன. காட்டுவேலைகள் உட்பட பல்வேறு கனரக வேலைகளுக்காக யானைகளைப்பயன்படுத்தும் வழக்கம் இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வந்தது. தற்பொழுது யானைகள் செய்த வேலைகளுக்கு பதிலாக இயந்திரங்கள் தாராளமாக பயன்படுத்தப்படுகின்றன. எனவே வேலைகள் செய்வதற்கு பயன்படுத்திய அந்த யானைகளை பன்சேனை போன்ற தமிழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளை அண்டிய காட்டுப் பகுதிகளில் இறக்கிவிடுகின்றனர். யானைகள் அதிகம் இல்லாத வடக்கு வன்னிக் காட்டுப் பகுதிகளிலும் இதே செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மனிதர்களுடன் பழகிய இந்த யானைகளை மனிதர்கள் விரட்டித் துரத்தமுடியுமா? ஆம் யானைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் கூட பன்சேனை மக்களுக்கும் அவர்களின் பயிர்ச்செய்கைக்கும் மோசமானதாக மாறிக்கொண்டிருக்கிறது.

### அழிவின் உச்சம்:

மட்டக்களப்பில் படுவான்கரையின் எல்லைக்கிரமம் தான் பன்சேனை. இதனால் போராட்டம் நடைபெற்ற காலங்களில் இருபகுதியினருக்கும் மோதல்கள் நடைபெறுகின்ற முக்கிய பகுதியாகவும். இரு பகுதியினரும் ஊடுருவுகின்ற பகுதியாகவும், இருபகுதியினரும் ஆக்கிரமிக்கின்ற பகுதியாகவும் இக்கிராமம் இருந்து வந்துள்ளது. இதனால் தொடர்ச்சியான அழிவுகளை பன்சேனைக் கிராமம் எதிர்நோக்கி வந்துள்ளது.


2007ம் ஆண்டு கிழக்கில் இறுதியுத்தம் ஆரம்பித்த நேரத்திலும் படுவான்கரையில் முதல் ஆக்கிரமிப்பிற்கும், அழிவிற்கும் பலியான கிராமம் பன்சேனை தான்.

பன்சேனை மக்கள் தமது உயிர் பாதுகாப்பு கருதி ஏதிலிகளாக மட்டக்களப்பு நகரை நோக்கி புலம்பெயர்ந்தனர். இதற்கு முன்பும் பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் புலம்பெயர்ந்திருந்தாலும் இதுதான் பன்சேனை மக்கள் எதிர் நோக்கிய இறுதி இடப்பெயர்வாக அமைந்திருந்தது.

அது, 2007ம் ஆண்டு மார்ச் மாதம். அதே நேரம் இங்கே அவர்கள் வாழ்ந்த மண் மயான பூமி போல ஆகிக்கொண்டிருந்தது. பன்சேனைக் கிராமத்திற்குள் பிரவேசித்த இராணுவம் மக்கள் யாருமற்று அநாதரவாகக் கிடந்த அந்த கிராமத்தில் இயல்பாக எங்கும் செய்யும் அழிவுகளை மிகத் தாராளமாகவும் விருப்பம் போலவும் மேற்கொண்டனர்.

*தொடரும்...*

ariyaratnam.n@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals




**For Sellers**

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!




**Please visit my new Website for Best tools**

**www.vela4homes.com**

| Detached | Detached | Detached |
|---|---|---|
| 3Br<br>3WR,<br>Fully upgraded<br>Best Value | 4BR<br>5WR<br>3 Garages<br>4100 sft<br>Best Value | 4+3 BR<br>7 WR<br>3 Garages<br>7000 sft<br>Brand new |
| Ajax | Pickering | Pickering |











## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியத்தின் மறுவடிவம் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி

- ச.வே. பஞ்சாட்சரம் -

உள்ளத்தால், பேச்சால், செயல்களால் பொய்மை கலவாத வாழ்வுகொண்ட ஒருவனுக்கு சத்தியமூர்த்தி என்று பெயரிட்டு வைத்த பெற்றோரின் தீர்க்க தரிசனம் பாராட்டப்பட வேண்டியதாகும். இளைய, இனிய, ஏராளம் உயிர்களை இன விடுதலைக்காக ஆகுதியாகிக்கொண்டு தொடர்ந்த தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் இலட்சியப் பிழம்பாய் இறுதி வரை வாழ்ந்து இரையோன என் மாணவனான ஊடகவியலாளன் சத்தியமூர்த்தி பற்றியே இங்கு எழுதுகிறேன்.

யாழ். இந்துக் கல்லூரியில் என் தமிழ்ப் பாட மாணவர்களுள் ஒருவனாக விளங்கிய சத்தியமூர்த்தி எல்லாரிடமும் குழைந்து குழைந்தும் ஆசிரியரான, மூத்தவர்களான என் போன்றவர்களிடமும் அந்தக் குழைவோடு பணிவாகவும் பழகும் பண்பானது எனக்கும் அவனுக்கும் இடையில் நிலவிய உறவை நெருக்கம் மிக்கதாக்கியது. அதனால் எனது ஊரின் மேற்கெல்லைக் கற்பக விநாயகர் ஆலயச் சூழல் அவனது பூர்வீகம் என்றும் அவனது தாயார் பாட்டி வீட்டில் இருந்து இணுவில் இராமநாதன் கல்லூரிக்கு எங்கள் தோட்டத்தின் ஓரமாக நான் காண நடந்து சென்று படித்து வந்தவர் என்றும், அவர் கிழக்கு மாகாணத்தில் மன்னம்பிட்டியில் மணமாகிச்சென்று பின் இணுவில் வைத்தியசாலையில் பெற்றெடுத்து அங்கு கொஞ்சகாலம் வளர்ந்த பிள்ளை அவன் என்றும் அறிய நேர்ந்தது. அதனால் எங்கள் உறவு இன்னும் இறுகமாகியது. அதனால் அவனது நண்பன் ஒருவனின் கவிதைகளை வீடு தேடி என்னிடம் கொணர்ந்து தந்து திருத்துவித்து, சாற்று கவி எழுதுவித்து, அச்சிட்டு நூலாக்கி யாழில் குமாரசாமி மண்டபத்தில் வெளியீட்டு விழாவும் நடத்துவித்திருந்தான்.



அன்று அவ்வாறு பிறருக்குரியவனாக விளங்கிய அவனை 1995 செம்மணியூடான வலிகாமம் ஒட்டுமொத்தத் தமிழரின் இடப்பெயர்வில் வன்னி போய்ச் சேர்ந்து, அங்கு நாமிருவரும் சந்தித்த போது அவனை சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்புவெறியை எதிர்க்கும் அதே வேளை நடுநிலை தவறாத உத்தம ஊடகவியலாளனாகவும் கண்டு பெருமிதமுற்றேன். அக்காலத்தில் புதுக்குடியிருப்பில் இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன், வேலணையூர் சுரேஷ், முல்லைக்கமல், கை.சரவணன் முதலியவர்களுடன் சேர்ந்து எழுகலை இலக்கியப்பேரவையை ஆரம்பித்து, 'ஈழநாடு' மாத இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டு, 'பு. சிந்துஜன்' என்ற புனைபெயரில் கவிதைகளும் சிறுகதைகளும் எழுதி வந்தான்.

2005ல் அவனுக்கு சமனான பணிவும், பண்பும் கொண்டவளும் ஈழநாடு, ஈழநாதம் பத்திரிகை ஆரியர் குழாங்களில் பணியாற்றியவளும் திருமலையைச் சேர்ந்தவளுமான பொன்னுத்துரை நந்தினி என்னும் மங்கை நல்லாளை கந்தர்வ மணம் புரிந்து சிந்து என்னும் மழலைச் செல்வத்தைப் பெற்றான்.

2006ல் நான் கனடாவுக்கு வந்த பின் கனடாவிலிருந்து வெளிவந்த உலகத்தமிழ் பத்திரிக்கை, கனடியத் தமிழ் வானொலி, ரீ.ரீ.என் தொலைக்காட்சி என அவன் எழுதிய, வழங்கிய துணிகரமான, நேர்மையான அரசியல் ஆய்வுகளால் அவன் 2009ல் எறிகணைக்கு இரையான போதும் இன்று வரையும் அவனை கனடியத்தமிழ் சமூகம் நினைந்து நினைவு கூருகிறது. ஈழவிடுதலை இலட்சிய நெருப்பைத் திரிதூண்டி வருகிறது. அவனைத் தமிழினம் என்றும் ஏந்தும் என்பதில் ஐயம் இல்லை.



panchacharam@thaiveedu.com

# இன்றைய நாளின் நினைவுகளுடன்...

இன்றைய நாளின் நினைவுகளுடன்...

2009 ஜனவரி மாத இறுதியில் சுதந்திரபுரம் பாதுகாப்பு வலயம் என சிறிலங்கா அரசால் அறிவிக்கப்பட்டது.

சனங்கள் சுதந்திரபுரத்தில் குவிந்தார்கள்.

பெப்ரவரி நான்காம் நாள் சிறீலங்காவின் சுதந்திரதின கொண்டாட்டம் சுதந்திரபுரத்தில் குவிந்திருந்த தமிழ்ச்சனத்தின் தலையில் விடிந்தது.

நினைத்துப்பார்க்க முடியாதளவுக்கு செல் தாக்குதல்.

போர்விமானங்களும் கணக்குவழக்கின்றி குண்டுகளை கொட்டிக்கொண்டிருந்தன...

எங்கே ஓரங்குல நிலம் கிடைத்தாலும் சனங்கள் அதில் நெருக்கியடித்து அமர்ந்து கொண்டார்கள்.

நாங்களும் கொஞ்சப்பேர் அருகருகாக இடம்பிடித்து இருந்தோம். ஆளாளுக்கெல்லாம் ஆறடிக்கணக்கென்றில்லை. அங்குலங்கள் தான்.

கலாக்காவுக்கும் எனக்கும் கெடிக்கலக் கம். கலாக்காவும் நானும் எப்போதும் அடி பங்கருக்குள்தான்.

நடுச்சாமத்தில் செல் ஒன்று எங்களின் பங்கர் அருகே விழுந்துவெடித்தது. நான், கலாக்கா உள்ளிட்ட சிலர் உள்ளே அகப்பட்டோம்.

எப்படியோ அதில் உயிர்தப்பி ஓடி...திசைக்கொருவராகப் பிரிந்தோம்...

என்னை ஒரு போராளியின் குடும்பம் அரவணைத்தது.

செல்களுக்கு தப்ப தெருக்களில் விழுந்து விழுந்து எழும்பி வடக்கு சுதந்திரபுரம் போனோம்.

அங்கு தொடர் வேட்டுச்சத்தம்.

“பிடிச்ச சனத்தை முன்னாலை விட்டு பின்னாலை ஆமி வாறான்...ஓடுங்கோ...” என்றபடி சனங்கள் ஓட...நாங்களும் ஓடினோம்.

ஓடிவந்து தொண்டு நிறுவனம் ஒன்றின் வளவுக்குள் புகுந்தோம்.

அங்கும் தரித்திருக்க முடியாத செல்லடி. வேட்டுமழை.

காயப்பட்டவர்கள் போக எஞ்சியவர்கள் ஓடினோம்.

இரணைப்பாலைப்பக்கம் போகலாம் என என்னை அழைத்துச் சென்ற போராளி குடும் பத்தினர் கூறினர்.

‘ஆற்றில் விழுந்தபிறகு எந்தப்பக்கம் இழுத்துக்கொண்டால்தான் என்ன’ என்ற மனநிலை.

இரவு இரணைப்பாலைக்கு புறப்பட்டோம். (இரணைப்பாலைக்கு வந்துசேர்ந்தது ஒரு தனிக்கதை).

எம்மை மேளதாளத்துடன் வழியனுப்பி வைக்க விரும்பியமாதிரி, ஆமி வேட்டு மழையை தொடக்கியது. கூடவே... செல்களும்.

செல்லென்றால் கற்பனைகூட பண்ணமுடியாத வகைகள். அஞ்சு இஞ்சி செல்லில் இருந்து, ஆட்லறி, மல்றிபரல் என்று எல்லாம் முழங்கின. அரைமணித்துளிக்குள் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விதம்விதமான செல்களை இராணுவத்தினர் பொழிந்து தள்ளினர்.

நிலத்தோடு ஒட்டிக்கிடந்துவிட்டு, மீண்டும் புறப்பட்டோம். துணைவரையும் மைந்தனையும் பிரிந்தநிலையில், உயிரைப் பாதுகாக்க அலைந்தேன்.

அந்த போராளிக் குடும்பத்தினர் தங்களுடன் என்னையும் இரணைப்பாலைக்கு அழைத்து வந்தனர்.

வந்து இறங்கிய கணமே அங்கும் செல்கள் வரவேற்று ஆசிவழங்கின.

நாங்கள் இருந்த வளவிற்குள் நிறையச் சனங்கள். எல்லோரும் தெரிந்தவர்கள்தான்.

இரண்டொருநாட்கள் கழிந்தன...

என்னை அழைத்து வந்த குடும்பத்தினர் ஒரு பதுங்குகுழியை அமைத்தனர். அவர்களின் மூன்று வயது மகனும் நானும் எப்போதும் அதற்குள் தான்.

“பெரியம்மா எனக்கு பயம். என்னை கவனமாக வைச்சிருங்கோ...” என அந்தப் பிஞ்சு கெஞ்சும்.

நானும் ஒரு குழந்தையாகவே அவனுடன் இருப்பேன். அதுவே என்னை ஆறுதல்படுத்தியது.

ஒருநாள் இரவு...வழக்கம்போல பங்கருக்குள் அமர்ந்திருக்கிறோம்.

பகல் முழுவதும் கடுமையான செல்லடி. காதுகள் கிட்டத்தட்ட செயலிழந்து விட்டன. உறக்கம் வரவேயில்லை. எக்கணமும் மரணிக்கலாம் என்ற நிலை. ‘காயப்பட்டால் அவ்விடத்திலேயே இறந்துவிட உதவிடு’ எனக் கடவுளிடம் கேட்டுவைத்தேன்.

நள்ளிரவாக இருக்கவேண்டும்.

“ஆதியக்கா...ஆதியக்கா...”என வெளியே ஓர் ஆண்குரல் அழைக்கிறது.

‘எனது துணைவருக்கு அல்லது மகனுக்கு ஏதோ நடந்துவிட்டது. அதை தெரிவிக்கவே கூப்பிடுகிறார்கள்...’ என எண்ணிய மனம் அச்சத்தில் உறைந்துவிட்டது.

‘எனக்கு ஏதாலும் நடந்தால்கூட நீங்கள் மனம் தளரக்கூடாது...’ எனச்சொல்லிப்போன துணைவரின் குரல் என்னுள் ஒலித்தது.

வெளியே அந்த ஆண்குரல் என்னை அழைத்தபடியே இருந்தது. பதில்குரல் தரமுடியாமல் என்உடல் நடுங்கியது.

அதனிடையே யாரோ கதைக்கும் குரல் காதில்விழுகிறது.

“காலமை தேவிபுரத்துக்கு சாமான்கள் எடுக்கப்போனனாங்கள். சத்தியமூர்த்தி மாமா எங்களோடை வந்தவர்... அங்கை ஒரு செல்பீஸ் அவருக்கு பிடிச்சிட்டுது...அந்த இடத்திலேயே...”

சத்தியமூர்த்தியின் மருமகன் குலுங்கி அழுதபடி செய்தி சொன்னான்.

ஓம்... உலகத்திற்கு செய்தி சொல்லிவந்த ஒரு ஆற்றல்மிகு செய்தியாளன் அன்று உலகிற்கு செய்தியானான்.

அந்த முகம்... ஆதியக்கா என அழைக்கும் அந்தக்குரல்... பலதடவை சமையலறையை எட்டிப்பார்த்து, “ஆதியக்கா மச்சம் சாப்பிடமாட்டா. மரக்கறி வையுங்கோ” என்னும் அந்தப்புரிதல்... மனம்விட்டு பகிர்ந்துகொள்ளும் கருத்துக்கள்... எல்லாமே மறக்க இயலாதனவாய்...

எங்களின் ஊடகநண்பன் பு. சத்தியமூர்த்தி இராணுவத்தினரின் செல்வீச்சில் உயிரிழந்து இன்று பத்தாவது நினைவு நாள். அவரின் நேசப் புதல்விக்கு 13வயது.

காலம் கொடியது. இப்படியானதும் இன்னும் கொடியதுமான ஏராளமான தாங்க முடியாத துயரங்களுடன் என்னை வாழப் பணித்துள்ளது.

- ஆதிலட்சுமி சிவகுமார்

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக அறவான் சத்தியமூர்த்தி

- பொன்னையா விவேகானந்தன் -

தாயக விடுதலைப் போராட்டம் உச்சமடைந்திருந்த பொழுதில் வன்னிப்பகுதியிலிருந்து செய்திகளையும் போர் பற்றிய ஆய்வுகளையும் வழங்கியவர்களில் திரு. புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முதன்மையானவர்.

'ஓர் இனத்தின் அடையாளம் அந்த இனத்தை வெளிப்படுத்தும் ஊடகமே' என்பதை அடிக்கடி கூறுபவர் திரு. சத்தியமூர்த்தி. அவ்வாறான ஊடகத்தை இனம் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் மிகப் பொருத்தமான பயன்படுத்திய ஊடகவியலாளர் இவர். போர்ச்சூழலுக்குள் வாழ்ந்தவாறே போரின் அகப்பொருளையும் புறப் பொருளையும் தெளிவாக வெளிப்படுத்தி வந்தவர் சத்தியமூர்த்தி.

நான் கனடியத் தமிழ் வானொலியில் பணியாற்றிக்கொண்டிருந்த வேளை இரண்டாயிரத்தின் தொடக்கத்தில் அரசியல் ஆய்வாளராக எம்மோடு இணைந்தவர் சத்தியமூர்த்தி. குறுகிய காலத்திலேலேயே அவருடைய ஊடக ஆளுமையையும் செய்திகளையும் ஆய்வுகளையும் வெளிப்படுத்தும் நேர்த்தியையும் நாம் புரிந்து கொண்டோம். அவருக்கென எமது வானொலியில் பல நேயர்களும் உருவானர்கள்.

அவருடைய ஊடக பரிமாணம் மிகப் பெரியது. ஊடகவியலாளர்களுக்கு நல்ல மொழிப்புலமை இருக்க வேண்டும். இருக்கும் புலமைளைக் கொண்டு அழகுற எழுதத் தெரிய வேண்டும். இந்த வகையில் மிகச் சிறந்த எழுத்துலக ஊடகவியலாளராகவும் இவர் திகழ்ந்துள்ளார்.

எழுதவல்ல ஊடகவியாளர் எல்லோராலும் செய்திகளைப் பேச்சு வடிவிலும், ஆய்வு நோக்கிலும் கூறுவது கடினம். அதுவும் ஓர் நேர்காணலில் சிந்தாமல் சிதறாமல் விடைகளைக் கூறுவது இன்னும் கடினம். இந்த அனைத்துப்பகுதிகளிலும் சிறந்து விளங்கிய ஒரே ஊடகவியலாளர் திரு. சத்தியமூர்த்தி.

குறுகிய காலத்தில் ஈழத்தின் அத்தனை ஊடகப்பரப்புகளிலும் காலூன்றித் தனித்துவமாகத் திகழ்ந்தவர் இவர். அரசியல் ஆய்வுகளிலும், செய்திகளிலும் இவர் பேசும் மொழியும் கடைப்பிடிக்கும் ஊடக அறமும், மானுடப் பண்பும் இதுவரை நாம் யாரிடமும் காணாதது.

வனொலியில் செவ்வி காணும் எம்மை விளிக்கும் போது ஆணாக இருந்தால் ஐயா என்பார். பெண்ணாக இருந்தால் அம்மணி என்பார். ஆய்வுகளில் போது அனைத்து அரசியல் தலைவர்களின் பெயர்களையும் திரு. என்ற மதிப்புக்குரிய அடைமொழியோடுதான் அழைப்பார். ஆய்வுகளின் போது அவருக்கு திரு. மகிந்த ராஜ-பக்ஷ என்பது போலவேதான் திரு. வேலுப்பிள்ளை பிரகாரன் என்று அழைப்பார்.

ஒரு தடவை பிரகாரன் அவர்கள் இவரைத் தனியாகக் கூப்பிட்டு, ஊடகத்தில் "நீ சொல்வதுதான் சரி. அப்படியே தொடர்ந்து செய்" என்று கூறியிருக்கின்றார்.

முதலில் கல்வித்துறையிலும் பின்னர் சுகாதாரத்துறையிலும் பணியாற்றிய திரு. சத்தியமூர்த்தி தனக்கான பாதை எது என்பதையும் தனக்குப் பொருத்தமான பணி என்ன என்பதையும் நன்கு பகுத்துணர்ந்தே, ஊடகம் என்ற அறவழிக் கருவியைச் சத்தியமூர்த்தி தனதாக்கினார்.

தொடக்கத்தில் எழுத்து மீது அவர் கொண்டிருந்த பெருவிருப்பே ஊடகப்பணிக்கு அவரை இழுத்து வந்தது.

மட்டக்களப்பினைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், தந்தையின் பணி காரணமாக யாழ்ப்பாணம் மண்டதீவில் வசிக்க நேர்ந்தது. அங்கு தான் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

யாழ். இந்துக்கல்லூரி மாணவரான அவர், மாணவப் பருவத்தில் இருந்தே எழுதும் பணியினை மேற்கொண்டு வந்தார். 1995 இன் பின்னர் யாழ். இடப்பெயர்வுடன் தனது பல்கலைக்கழக வாழ்க்கையை இடை நிறுத்தினார்.

போர்ச்சூழலும் பிற இடையூறுகளும் தொடரவே மேற்படிப்பை நிறுத்திக் கொண்டு, வன்னி ஊடகளுடன் இணைந்து பணி



யாற்றத் தொடங்கினார். தொடக்கத்தில் ஈழநாடு பத்திரிகையிலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதாரம் சஞ்சிகையிலும் கிடைத்த வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்தினார்.

காலவோட்டத்தில் முல்லை மாவட்ட கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய அவர், அதன் மூலமும் ஊடகச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு முனைந்தார். அந்தக் காலப்பகுதியில் அவர் புதுக்குடியிருப்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்ட எழுகலை இலக்கியப் பேரவையில் முக்கிய செயற்பாட்டாளர்களாக அன்று விளங்கிய இளம் படைப்பாளர்களுடனும், ஆர்வலர்களுடனும் கைகோர்த்து அந்த அமைப்பின் வளர்ச்சியில் கூடுதல் பங்காற்றினார்.

இந்த நிலையில் எழுகலை இலக்கியப் பேரவை, ஈழநாதம் மக்கள் நாளிதழ், மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் முல்லை மாவட்ட கல்வித் திணைக் களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் இதழியல் கற்கை நெறி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்தக் கற்கை நெறியின் போது வன்னியில் செயற்பட்டுவந்த பல்வேறு ஊடகத்துறைசார் பணியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

அந்தக் கற்கைநெறி வாயிலாக, பெருமளவான படைப்பாளர்களும் ஊடகச் செயற்பாட்டாளர்களும் வெளிவந்தனர். அவ்வாறானவர்களில் ஒருவராக பு. சத்தியமூர்த்தியும் தன்னைப் படம் போட்டு, இன்னமும் மெருகேற்றி வெளியேறினார். அந்தக் கற்கை நெறியினை முன்னெடுப்பதற்கான முழுமையான முனைப்பில் கல்வித்திணைக்களம் ஈடுபடுவதற்கான ஏற்பாட்டினை அவரே மேற்கொண்டிருந்தார்.

அதே காலப்பகுதியில் வன்னியில் இருந்து வெளிவந்த கலை பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' கலை இலக்கிய சஞ்சிகை, மற்றும் ஈழநாதம் உட்பட்ட ஊடகங்களின் முக்கிய இடத்தினை சத்தியமூர்த்தியினுடைய படைப்புக்கள் பெற்றிருந்தன.

தொடர்ந்து சத்தியமூர்த்தியினுடைய ஊடகப் பணியானது புலம்பெயர் மக்களை நோக்கி விரிவடைந்தது. அரசியல் விமர்சனங்களை மேற்கொள்ளும் அவர் இலக்கியத்திலும் தன்னாலான பங்களிப்பினை மேற்கொண்டார்.

விடுதலைப்புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தின் கீழ் செயற்பட்ட ரீ.ரீ.என் (தமிழ் ஒளி), தரிசனம் தொலைக்காட்சிகளுக்கான நாளாந்த செய்திப்பார்வைத் தொகுப்பு, அரசியல் கலந்துரையாடல்கள், உள்ளூர் நடப்புகள் உட்பட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுத்த அவர், குறுகிய காலத்தில் புலம்பெயர் தமிழர்களால் நன்கறியப்பட்ட ஒருவராக மாற்றம் பெற்றார்.

இதே காலப்பகுதியில் அனைத்துலக தொடர்பகத்தின் கீழ் செயற்பட்ட இணையத்தளம் ஒன்றின் செய்தி தொகுப்பாளராகவும் செயற்பட்ட அவர், புலம்பெயர் ஊடகங்கள் பலவற்றிற்கும் எழுதிவந்தார். குறிப்பாக பரிஸ் ஈழமுரசு, எரிமலை சஞ்சிகை, கனடா வின் உலகத்தமிழர் பத்திரிகை உட்பட்ட பல ஊடகங்களில் இவரது பல்வேறு படைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

அதேபோல தாயகத்தில் வெள்ளிநாதத்திலும், ஈழநாதத்திலும் குறிப்பிட்ட அளவான இவரது படைப்புக்கள் வெளிவந்தன. தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் நாள் நோக்கு மற்றும் நிலவரம் நிகழ்சிகளில் இவரது செவ்விகள் அடிக்கடி இடம்பெற்றன.

தாயகத்தில் ஊடக வளர்ச்சியினை இன்னும் மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் தோற்றம் முதல் அதன் இறுதிக் காலம் வரையில் அவரது கல்லூரிக்கான பணி ஓயாதே இருந்தது. கல்லூரியின் கற்கை நெறியின் போது செய்தி தொடர்பிலான விரிவுரைகளாகவே அவரது பணி அமைந்திருந்தது.

குறிப்பாக போராளிகளுக்கான வழிகாட்டி, மற்றும் குறிப்பிட்டகாலம் மாணவர்களுக்காக வெளியாகிய 'கடுகு' உட்பட்ட சஞ்சிகைகள் என்பனவற்றிலும் இவரது படைப்புக்கள் தொடராக வெளிவந்தன. பத்திரிகை முதல் தொலைக்காட்சி வரையான அவரது பரந்துபட்ட ஊடக அனுபவம் அவரிடம் நிறைந்தே காணப்பட்டது. பு. சத்தியமூர்த்தி மற்றும் சிந்துஜன் ஆகிய பெயர்களில் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் அறிவியல் நகர்ப்பகுதியில் உள்ள அவரது வீட்டில் இருந்து இடம் பெயர்ந்து படிப்படியாக ஒவ்வொரு இடமாக அவர் தனது பணி இடத்தினைச் சார்ந்தே குடியமர்ந்து வந்தார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடியான காலத்திலும் ஒதுங்கிவிடாமல் ஊடகப்பணியினை ஆற்ற வேண்டும் என்ற வேட்கை அவரிடம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இடப்பெயர்வின் தொடராய் வள்ளிபுனத்தில் இருந்து தனது குடும்பத்தினரை இரணைப் பாலை என்ற இடத்தில் இருத்திவிட்டு வள்ளிபுனம் பகுதிக்குச் சென்றவேளை எறிகணைத் தாக்குதலுக்கு உட்பட்டு அவரது உயிர் பிரிந்தது.

உடனடியாகவே அவர் நாட்டுப்பற்றாளராக மதிப்பளிக்கப்பட்டார்.

அவரது மனைவி கமலநந்தினி. அவர், தனது சகோதரனின் மகன் மாவீரர் சிந்துஜன் நினைவாகத் தனது மகளுக்கு சிந்து எனப் பெயரிட்டார். தனது மகளை ஓர் அரச தந்திரி ஆக்கவேண்டும் என்பதே அவர் கனா. வாழ்புலமொன்றில் வாழ்ந்துவரும் சிந்து ஐ.நா.வின் கூட்டத்தொடர்களுக்கு சென்றுவரும் சிறுமியாகவே உள்ளார்.

திரு. சத்தியமூர்தி மட்டுமல்ல, தமிழீழம் இழந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை இருபத்தியைந்துக்கு மேல். இவர்களில் மயில்வாகனம் விமலாராஜன். தராகி சிவராம், நடேசன், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி போன்றோர் மிக முக்கியமானவர்கள்.

தனது 37வது அகவையில், பெப்ரவரி 12ம் திகதி 2009 அன்று எறிகணை வீச்சில் அகப்பட்டு சாவினைத் தழுவிக் கொண்டார். இன்றவர் இருந்திருப்பின் இனப்படுகொலையின் வலுவாக சாட்சியாகவும் சமகாலத்தில் வாழும் மக்களுக்கு அறஞ் சார்ந்த பலமாகவும் திகழ்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

சத்தியமூர்த்தி இனப் படுகொலையின் ஆதாரப் பொருளாக மட்டும் இன்னுயிரை ஈயவில்லை. போர்ச்சூழலின் உண்மைகளைச் சுமந்தும் சொல்லியும் வந்த ஊடக வழிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

இக்கட்டுரையை எழுதுவதற்கான தகவல்களை வழங்கிய http://indosri.com/news, http://www.eelampres என்ற இரு இணையத் தளங்களுக்கும் நன்றி.



vivekanandan.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய தமிழர் பேரவையின் வருடாந்த பொங்கல் நிகழ்வு

கனடிய தமிழர் பேரவை தனது 12 வது பொங்கல் விழாவை வழமை போல் கடந்த ஜனவரி 19, 2019 அன்று, மார்க்கம் நகரிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் கொண்டாடியது. தமிழரது கலை , கலாச்சாரங்களைப் பறைசாற்றுவதோடு, தமிழர் தெருவிழா உட்பட, கடந்த வருடம் பேரவை மேற்கொண்ட செயற்திட்டங்களையும் எடுத்துக்கூறிய இந்த விழாவில் மிகக்கடுமையான காலநிலையையும் பொருட்படுத்தாது 800 க்கும் மேலான மக்கள் பங்குபற்றியிருந்தது பெருமைக்குரிய விடயம்..

இராப் போசனத்துடன் கூடிய இவ்விழாவில் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் றொட் பிலிப்ஸ், பிரம்டன் நகரபிதா பற்றிக் பிறவுண், ஸ்ரோவில் நகரபிதா இயன் லோவாட், ரொறொண்டோ பிரதி நகரபிதா மைக்கல் தொம்சன், மார்க்கம் பிரதி நகரபிதா டொன் ஹமில்டன், ரொறொண்டோ பல்கலைக்கழக அதிபர் விஸ்டம் டெட்டி மற்றும் பல பாராளுமன்ற, மாகாணசபை, மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட்ட பல அரசியல்வாதிகள், பொதுச் சேவையாளர்கள், காவல்துறையினர், ஊடகவியலாளர், வர்த்தக சமூகத்தினர், சமூகத் தலைவர்களும் பல்வேறுபட்ட ஆசிய சமூகங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

விழாவின் முக்கிய அம்சமாக, தமிழ் இசைக்கும், தமிழர்கள் தங்கள் இசைத் திறமைகளை உலக அரங்குகளில் மிளிரவைக்க சந்தர்ப்பம் வழங்கியமைக்குமாக இசையமைப்பாளர் டி.இமானுக்கு இவ்வருடத்துக்கான 'மாற்றத்திற்கான தலைவர்கள்' விருது வழங்கப்பட்டது. அதே வேளை, டி. இமான் அவர்கள் ரொறொண்டோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்காக 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னும் தமிழ்க் கீதமொன்றை இலவசமாக உருவாக்கியதோடு, தன் கடுமையான வேலைப் பளுவையும் தள்ளிவைத்துவிட்டு இந்த விழாவிற்கு இந்தியாவிலிருந்து தன் செலவிலேயே வந்து கீத இறுவட்டை வெளியிட்டும் உதவியிருந்தார். அத்தோடு, ரொறொண்டோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத் தமிழ்க் கற்கையின் மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் முனைவர் பிரெண்டா பெக் அவர்களுக்கு இவ் வருடத்திற்கான 'மிகச் சிறந்த சேவைக்கான' விருதும் வழங்கப்பட்டது. ரொறொண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மூலப்படிவங்களைப் பிரதியிட்டுப் பாதுகாக்கும் பணிக்காக முனைவர் பெக் அவர்கள் தன் சொந்தப் பணத்திலிருந்து சுமார் நான்கு லட்சம் டாலர்களைத் தானம் செய்திருந்தார்.

கனடிய தமிழர் பேரவையின் தலைவர் மருத்துவர் வடிவேலு சாந்தகுமார் இவ்விழாவில் பேசும்போது, இந்த வருடத்தின் அதி முக்கிய நிகழ்வாக அமையப்போகும் முள்ளிவாய்க்கால் நினைவுகளின் 10வது ஆண்டு நிகழ்வுகளை கனடிய மற்றும் உலகத் தமிழர்கள் மனதில் நிறுத்தி எமது மக்கள் அமைதியானதும், நீதியுடனுமான நிறைவாழ்வை அனுபவித்தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு எம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்.

இந்நிகழ்வின் விசேட அம்சங்களாக ஜெனனி குமார் அவர்களது சிலம்பொலி ஷேத்ரா நடனப் பள்ளி மாணவிகளின் நடனமும் ஐஸ்வர்யா பிரபாகர் அவர்களது கரகாட்டம், சிலம்பாட்டம், மற்றும் "தலைமைத்துவம், மாற்றங்களுக்கான நடுவ" த்தைச் சேர்ந்த இளையோரின் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இப் பிரமாண்டமான நிகழ்வைத் சாத்தியமாக்கிய பெருமை பெரும் புரவலர்களையும், விளம்பரதாரர்களையும், நலன் விரும்பிகளையுமே சாரும். இவர்களோடு கூடவே இந்நிகழ்வு வெற்றிகரமாக நிறைவேறப் பல தொண்டர்களினதும், குறிப்பாகப் பல இளையதலைமுறையினரின் ஆர்வமான பங்களிப்பையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. கனடிய பெரும் சமூகத்துக்கும், வருங்காலத் தமிழ்ச் சமூகத்துக்கும் இப்படியான விழாக்கள் தமிழர் கலாச்சாரம், வரலாறு பற்றிய பெரும் கதை சொல்லிகளாக அமையும் என எதிர்பார்க்கலாம்.































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயக்குநர் கனவு

இராஜசுந்தரம் அவர்களின் தலைமைத்துவத்தில் தமிழ்ச் சேவை ஒன்று ஒரு கலைத்துவமான சேவையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவரது ஆலோசனைச் சபை நடத்திய அறிவிப்பாளர்களுக்கான மீள்பரிசோதனையொன்றைத் தவிரப் பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. நான் எனது தொழில் வாழ்க்கையை மீட்டுப்பார்க்கையில் அந்த மீள்பரிசோதனையில் நான் தெரிவுசெய்யப்படாதது ஒன்று மட்டும்தான் எனக்கு ஏற்பட்ட ஒரு சிறிய பின்னடைவு. அதிலிருந்து மீண்டு வந்த எனக்கு எந்தவிதமான பாரிய தோல்விகளும் ஏற்படவில்லை. அப்படி எனக்கேற்பட்ட தோல்விகள் என்றால் எனக்குக் கிடைத்த மிகச்சிறந்த புலமைப்பரிசுகள் இரண்டு இறுதிநேரத்தில் கிடைக்காமற்போனதை மட்டுமே சொல்லலாம். ஒன்று தொழிற்சங்கத்தலையீட்டால் பறிக்கப்பட்டது. இது எழுபதுகளின் பிற்பகுதியில் இடம்பெற்றது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இயங்கிய அரசியற்கட்சியொன்று சார்பான தொழிற்சங்கத் தலைவர், தமது அங்கத்தவருக்குத்தான் ஜேர்மனியில் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சிபெறுவதற்கான அந்தப் புலமைப்பரிசு வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியபடியால் அது அந்த அங்கத்தவருக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் நான் பணியாற்றிய காலத்தில் தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கவில்லை. தொழிலாளர்கள் சுரண்டப்படும் பெருந்தோட்டத் தொழிற்துறை, பெரும்தொழிற்சாலைகள் மற்றும் பெருந்தொகையானவர்கள் பணிபுரியும் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங்கள் அவசியம். ஆனால் திறமையும் கடும் உழைப்பும் உடையவர்கள் நேரடியாகவே மக்களின் அபிமானத்தைப் பெறக்கூடிய ஒலி, ஒளி பரப்புத் துறைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அவசியமா என்பது எனது நிலைப்பாடாக இருந்தது. ஆகமிஞ்சிப் போனால் வருடத்துக்கொருமுறை போனஸ் பேச்சுவார்த்தை நடத்துவதே ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தில் இயங்கிய தொழிற்சங்கங்களின் பிரயோசனமான செயற்பாடாக இருந்தது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் சிங்கள சேவையில் பணிபுரிந்த விரல்விட்டு எண்ணக்கூடிய இடதுசாரிகளான திறமைமிக்க தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்களைத் தவிர தமது பணிகளைச் சிறப்பாகச் செய்யாது ஒருவித சண்டித்தன மனப்பான்மையுடன் தமது சுயலாபங்களுக்காகத் தொழிற்சங்கங்களில் இணைந்துகொண்டவர்களே அதிகமாக இருந்ததாக நான் கருதினேன். தொழிற்சங்கத்தால் எனது புலமைப்பரிசு தடைப்பட்டதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தில் இயங்கிய தொழிற்சங்கங்களின் மீது நான் கொண்டிருந்த அபிப்பிராயம் மேலும் உறுதியானது.

மற்றைய புலமைப்பரிசில், நான் வடக்கில் முகம்கொடுத்த பிரச்சினை காரணமாகக் கைநழுவிப் போனது. இவையிரண்டும் தொலைக்காட்சி சம்பந்தமான புலமைப் பரிசுகள். இவற்றைத் தவிர எனது தொழில் முன்னேற்றத்தில் எந்தவிதமான பின்னடைவும் எனக்கு ஏற்படவில்லை. புலமைப்பரிசுகள் கைநழுவிப் போனமையைப் பாரதூரமாகக் கருதமுடியாது. அவை கிடைக்காமற்போக அதற்குப் பின்னர் கிடைத்த புலமைப்பரிசில்கள் எனது தொழில் வாழ்க்கையைத் துரிதகதியில் நகர்த்தியதோடு பின்னாளில் எனது வாழ்க்கையின் திசையை மாற்றியமைத்தன. உதாரணமாகத் தொழிற்சங்கத்தலையீட்டினால் எனக்குக் கிடைக்காமற்போன ஜேர்மனிப் புலமைப்பரிசு எனக்குக் கிடைத்திருந்தால் நான் இலங்கை திரும்பி ரூபவாஹினிச் செய்திப்பிரிவில் ஒரு தயாரிப்பாளராக மாத்திரமே பணியாற்ற முடிந்திருக்கும். நாடு அப்போதிருந்த நிலையில் செய்திப்பிரிவில் உயர்பதவியைப் பெற்றிருக்க முடியாது. ஆனால் அதன்பிறகு எனக்கு மலேஷியாவுக்குக் கிடைத்த புலமைப்பரிசுக்குச் சென்றுவந்ததனால் எனது படைப்பாற்றலை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிப் பிரிவில் தயாரிப்பாளராகப் பணியாற்றமுடிந்ததோடு மிகவிரைவிலேயே தமிழ்நிகழ்ச்சிப் பிரிவுக்குத் தலைமைதாங்குவதற்கான நிர்வாகப்பதவியும் கிடைத்தது. 1984ம் ஆண்டு எனது 34-ஆகுவது வயதிலேயே நான் பணியாற்றிய ஊடகத்துறையில் குறிப்பிடத்தக்க பொறுப்புவாய்ந்த முக்கியமான நிர்வாகப்பதவியைப் பெற்றுவிட்டேன். எல்லாம் நன்மைக்கே.

கடுமையான உழைப்பு சிறந்த பயனைத் தானாகக் கொண்டுவந்துசேர்க்கும் என்பது அனுபவ வாயிலாக நான் அறிந்த உண்மை. வாழ்க்கையில் இழப்புகளும் தோல்விகளும் ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் ஏற்படுகின்றன. கடுமையாக உழைப்பவருக்கு இழந்ததைவிடச் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை. இதை எனது கல்லூரி வாழ்க்கையிலிருந்தே உறுதியாக உணர்ந்திருக்கிறேன்.

நான் ஊடகத்துறையில் பணியாற்றுவது பற்றிச் சிறுவயதில் நினைத்துக்கூடப் பார்த்ததில்லையென்று முன்னர் சொல்லியிருக்கிறேன். ஆனால் திரைப்படக் கலையில் அதீத ஆர்வம் சிறுவயதுமுதலே எனக்குத் இருந்தது. இத்தனைக்கும் எனது பதினைந்தாவது வயதுவரை அதிகமாகத் திரைப்படங்கள் பார்த்ததில்லை. திரைப்படங்கள் பற்றிய தகவல்களையும் அறிவையும் நான் பெற்றுக்கொண்டது வீட்டில் வாரந்தோறும் வாங்கப்படும் இந்திய சஞ்சிகைகள் மூலமே. அநேகமாக சினிமா ஆசையென்பது ஒரு நடிகராக வரவேண்டுமென்பதாகவே பெரும்பாலும் இருக்கும். ஆனால் நான் ஒரு திரைப்பட இயக்குனராகவேண்டுமென்றே எண்ணினேன். அதேநேரம் இலங்கையில் தமிழ்த் திரைப்படத்துறையென்று ஒன்றில்லாத காரணத்தால் அத்துறையைத் தொழிலாகக்கொள்ள முடியாதென்ற யதார்த்த அறிவும் எனக்கிருந்ததால் அதைத் தீவிரமான விருப்பமாகக் கொள்ளமுடியவில்லை.


C. நடராஜசிவமும் நானும்

நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிக்குச் சேர்ந்தபோது தமிழ்த்திரைப்படங்கள் பற்றிய புரிதல் ஓரளவுக்கிருந்தது. இயக்குனர்கள் சிறீதர், கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், கே. பாலச்சந்தர் போன்றவர்களைப் பிரதானப்படுத்தி அவர்களின் படங்களை மக்கள் சென்று பார்க்கும் நிலை அப்போது ஏற்பட்டிருந்தது. தமிழ்த் திரைப்



முதற்பரிசுபெற்ற எனது திரைக் கதைப்பிரதி நூல்வடிவில்

படங்கள் பற்றிய அவ்வாறான ஒரு விழிப்புணர்வும் இரசனையும் உள்ளவனாகவே நானும் இருந்தேன். அப்படியிருந்த எனக்கு உலகின் சிறந்த திரைப்படங்கள் மற்றும் இயக்குநர்கள் பற்றிய அறிவைத் தந்தவர் அப்போது பகுதிநேர அறிவிப்பாளராகவும் இளைஞர் மன்றம் என்ற இளைஞர்களுக்கான நிகழ்ச்சியை வாரந்தோறும் தயாரித்து வழங்கிக்கொண்டிருந்தவருமாகிய ஜோர்ஜ் சந்திரசேகரன். எனக்கும் அவருக்குமான உரையாடல்கள் பெரும்பாலும் புத்தகங்கள், நாடகங்கள், சினிமா முதலியவை பற்றியனவாகவே இருக்கும். அதிலும் சினிமா மிகக்கூடுதலான இடத்தைப்பிடித்தது. அக்கிராகுருசோவா, விற்றோறியோ டி சீக்கா, சத்தியஜித்ரே, இக்மார்பேக்மன், ஃபெலினி போன்ற பல பிரசித்திபெற்ற இயக்குநர்களின் பெயர்கள் எனக்கு அறிமுகமாகின. ஒலிபரப்புக்கூட்டுத்தாபனக் கன்ரீனில் நடைபெறும் எமது உரையாடல்களில் அங்கு அப்போது பணியாற்றிக்கொண்டிருந்த எழுத்தாளரும் கலை இலக்கிய விமர்சகருமான கே.எஸ். சிவகுமாரனும் அவ்வப்போது கலந்துகொள்வார். அவரும் ஒரு திரைப்படப் பிரியர். தான் பார்க்கும் திரைப்படங்கள்பற்றிக் கூறி அவற்றைச் சென்று பார்க்கும்படி என்னைத் தூண்டுவார். கொழும்பில் தனியாக ஓர் அறையில் வாழ்ந்துகொண்டிருந்த எனக்குத் திரைப்படங்கள் பார்ப்பது குறிப்பாக ஆங்கிலத் திரைப்படங்கள் பார்ப்பது ஒரு பொழுதுபோக்காக மட்டுமல்ல, எனது சினிமா இயக்குனராகும் ஆர்வத்தை மேலும் தூண்டிவிடும் ஒரு செயலாகவும் இருந்தது.

இப்படி எனது திரைப்படத் தாகம் அதிகரித்திருந்த வேளையில்தான் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் அரசாங்கம் 1972ம் ஆண்டு அரச திரைப்படக்கூட்டுத்தாபனத்தைத் தோற்றுவித்தது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அண்மித்ததாக புலர்ஸ்றோட்டில் அரச திரைப்படக் கூட்டுத்தாபன அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்கெதிரே ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது. அதிலே அப்போது பாவனையில் இல்லாத சினிமாத் திரையரங்கொன்று இருந்தது. அந்த நிலப்பரப்பில் அறுபதுகளின் பிற்பகுதியில் பிரமாண்டமான பொருட்காட்சியொன்று நடைபெற்றபோது அந்தப் பொருட்காட்சியின் ஒரு அங்கமாக இந்தத் திரையரங்கும் அமைக்கப்பட்டுப் பொருட்காட்சி முடிந்ததும் கைவிடப்பட்ட நிலையிலிருந்த அதை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் கையேற்று தரங்கனி என்று பெயரிட்டு அதில் உலகப் பிரசித்தி பெற்ற திரைப்படங்களைத் திரையிட்டது. நுழைவுக்கட்டணம் ஒரு ரூபாய் மட்டுமே. அந்தத் திரையரங்குதான் நான் எனக்கான சினிமாவை இனம்கண்ட இடம். அங்கே பல திரைப்படங்களைப் பார்த்திருக்கி றேன். ஜோர்ஜ் எப்பொழுதுமே போற்றும் சத்தியஜித்ரேயின் படங்களை அங்குதான் முதன்முதலில் பார்த்தேன். அவரது பதர்பாஞ்சாலி திரைப்படத்தைப் பார்த்தவுடனேயே என்னுள் ஓர் ஒளி தோன்றிதைப்போன்று உணர்வேற்பட்டது. அதுவரை சிறீதர், கோபாலகிருஷ்ணன், பாலச்சந்தர் ஆகியோரது தமிழ்த் திரைப்படங்கள் ஏற்படுத்திய இரசனையையும் நான் காங்கேசன்துறை இராஜநாயகி படமாளிகையில் பார்த்த கௌ-போய் படங்களும் ஸ்பாட்டகஸ், ஹேக்குலீஸ் மற்றும் ஜேம்ஸ்பொண்ட் போன்ற ஆங்கிலத் திரைப்படங்கள் ஏற்படுத்திய இரசனையையும் கொண்டு திரைப்படக் கலையை உணர்ந்திருந்த எனக்கு உண்மையான திரைப்படக் கலையென்பது வேறு என்ற சிந்தனையைத் தரங்கனியில் பார்த்த திரைப்படங்கள் தோற்றுவித்தன. சத்தியஜித்ரேயின் பதர்பாஞ்சாலியைத் தொடர்ந்து அவரது மற்றைய படைப்புக

தொடர்தல் 84ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குநர் கனவு...

83ம் பக்கத் தொடர்ச்சி...

ளான டீன்கன்யா, அபுசன்ஸார், சாருலதா, அபராஜிதோ போன்ற திரைப்படங்கள் திரைப்படக்கலையின் புதிய பரிமாணத்தைக் காட்டிநின்றன. சத்தியஜித்ரே ஒரு திரைப்பட மேதாவியென்ற எண்ணம் எனது மனதில் ஆழமாகப் பதிந்தது. அவரைப்பற்றி மணிக்கணக்கில் ஜோர்ஜுடன் பேசுவது மனதுக்குப் பிடித்தமான, எனது படைப்பார்வத்தைத் தூண்டும் செயலாக இருந்தது. ஜோர்ஜ் சந்திரசேகரன் சத்தியஜித்ரே தனது முதல் படத்தைத் தயாரிப்பதற்குப்பட்ட கஷ்டங்கள் முதல் அவரது திரைப்படங்களைப்பற்றிக் கதைகதையாகச் சொல்வார். அதுமட்டுமல்லாமல் சத்தியஜித்ரேயை மிகவும் கவர்ந்த இத்தாலிய இயக்குநர் விற்றோறியோ டி சீக்காவின் பைசிக்கிள் தீஃவ் திரைப்படத்தைக் கட்டாயம் பார்க்கும்படி கூறிய ஜோர்ஜ் அத்திரைப்படம் தரங்கனியில் திரையிடப்பட்டபோது என்னுடன் வந்தார். அவர் ஏற்கனவே அத்திரைப்படத்தைப் பார்த்திருக்கிறார். அந்தத் திரைப்படத்தை ஜோர்ஜுடன் சேர்ந்து பார்த்தபின்னர் விற்றோறியோ டி சீக்கா, சத்தியஜித்ரே போன்றோரின் 'நியோறியலிஸப் பாணி'த் திரைப்படங்கள்தான் உண்மையான திரைப்படங்கள் என்ற எண்ணம் என்னுள் ஆழமாக வேரூன்றியது. அந்தத் திரையரங்கில் அக்கிராக்குருசோவாவின் செவின்சமுராய் திரைப்படத்தையும் பார்த்தேன். அத்திரைப்படத்தில் கதைசொல்லும் பாணியைப் பின்பற்றிப் பிற்காலத்தில் வெளிவந்த சில திரைப்படங்களைப் பார்த்திருக்கிறேன். செவின்சமுராயின் கதையும் சொன்ன விதமும் மிகவும் பிடித்திருந்தாலும் ஜப்பானியர்களின் நடிப்பும் அங்க அசைவுகளும் செயற்கையாக இருப்பது போல நான் உணர்ந்ததால் எனக்கு மிகவும் இயல்பான நடிப்பை வெளிப்படுத்தும் சத்தியஜித்ரேயின் பாணித் திரைப்படங்களே பிடித்திருந்தன.

உண்மையில் 1971ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இடதுசாரி முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் எடுத்த பல நடவடிக்கைகள் நாட்டின் பலதுறைகளின் அபிவிருத்திக்கு வித்திட்டது. குறிப்பாக, இலங்கையில் நாடக, சினிமா மற்றும் இலக்கியத் துறைகளில் மிகப்பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஹொலிவூட் மற்றும் இந்திய வர்த்தகத் திரைப்படங்களின் இறக்குமதி மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது. அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் தெரிவுசெய்யப்படும் திரைப்படங்கள் மட்டுமே திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டன. அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்காகத் தமிழ்த் திரைப்படங்களைத் தெரிவுசெய்யும் குழுவின் தலைவராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் திரு. கே.எஸ். நடராஜா அவர்கள் பணியாற்றினார்கள். அதேபோல் இந்திய சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. திரைப்படங்களைத் திரையிடுவதற்கான கட்டுப்பாட்டை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் கொண்டிருந்ததால் சிங்களத் திரைப்படத்துறை ஒரு புதிய பாதையில் முன்னேறத்தொடங்கியது. தமிழில் இந்தத் தடைகள் சினிமாத் தயாரிப்பிலும் சஞ்சிகை வெளியீடுகளிலும் சிறிதளவு முயற்சிகளை மேற்கொள்ள உதவினாலும் பாரிய பலனை அளிக்கவில்லையென்றே கூறவேண்டும். பல புதிய சிங்கள இயக்குநர்கள் திரைக்கதைகளை அரச திரைப்படக்கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்துத் தமது தகுதியை நிரூபித்துக் கூட்டுத்தாபனத்திடம் பண உதவிபெற்றுப்பல புதிய சிங்களத் திரைப்படங்களைத் தயாரித்தார்கள். சிங்களத் திரைப்படங்களைத் திரையிடுவதால் கூட்டுத்தாபனத்திற்குப் பெரியளவு வருவாய் கிடைக்காதபோதும் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களை இறக்குமதிசெய்து திரையிடுவதன்மூலம் கூட்டுத்தாபனம் பெரும் இலாபம் சம்பாதித்து அதைச் சிங்களத் திரைப்பட அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதாக அப்போது தமிழ்த் திரைப்பட ஆர்வலர்கள் பரவலாகப் பேசிக்கொண்டார்கள். அதன் உண்மைத்தன்மை எனக்குத் தெரியாது.

இலங்கையில் சினிமாக் கலைஞர்களதும் பார்வையாளர்களதும் இரசனையை வளர்ப்பதற்கென ஐரோப்பிய நாடுகளின், குறிப்பாக கொம்யூனிச நாடுகளான கிழக்கைரோப்பிய நாடுகளின் திரைப்பட விழாக்கள் பெருமளவில் இலங்கையில் அப்போது நடைபெற்றன. ருமேனியா, செக்கோஸ்லாவாக்கியா, போலந்து, பல்கேரியா போன்ற நாடுகளின் திரைப்பட விழாக்களில் நான் பார்த்த திரைப்படங்கள் திரைப்படக்கலை பற்றிய முற்றிலும் புதிய பரிமாணங்களைக்



விற்றோறியோ டி சீக்காவின் பைசிக்கிள் தீஃவ்ஸ் - 1948



சத்தியஜித்ரேயின் பதர்பாஞ்சாலி - 1955

காட்டின. அப்போது நடைபெற்ற இந்தியத் திரைப்பட விழாக்களில் பெங்காலி, மலையாளம், கன்னடம் மற்றும் ஹிந்தி மொழிகளில் எடுக்கப்பட்ட மிக யதார்த்தமான திரைப்படங்கள் திரையிடப்பட்டன. மலையாளத்தில் ஆடூர் கோபாலகிருஷ்ணன், கன்னடத்தில் கிரிஸ் காசரவல்லி, கிறிஷ் கர்னாட், ஹிந்தியில் ரித்வி கட்டக், அவதார் கிருஷ்ணா கவுல், ஷியாம் பெனகல், பெங்காலியில் மிர்ணாள் சென் போன்ற திரைப்பட இயக்குநர்களின் திரைப்படங்கள் எனக்கு அறிமுகமாகின. திரைப்பட விழா என்றாலே ஒரு திருவிழா மனநிலை ஏற்பட்டுவிடும். நுழைவுச்சீட்டுகளை நான் போய் முன்பதிவுசெய்து ஜோர்ஜும் நானும் அல்லது நடராஜசிவமும் நானும் திரைப்படங்களைப் பார்க்கச் செல்வோம். நாம் போவது அநேகமாக இரவு இரண்டாவது காட்சியென்பதால் கொட்டாஞ்சேனையில் வசித்த ஜோர்ஜ் சில சமயங்களில் வரமாட்டார். நடராஜசிவமும் நானுமே எப்போதும் எல்லாத்திரைப்பட விழாக்களுக்கும் செல்வோம். நடராஜசிவமும் நானும் அநேகமாக இரவு இரண்டாவது காட்சியைப் பார்த்துவிட்டு பம்பலப்பிட்டியில் அப்போது பின்னிரவிலும் திறந்திருக்கும் மேஃபெயர் உணவகத்தில் சாப்பிட்டுவிட்டு பம்பலப்பிட்டியிலுள்ள லோறிஸ் றோட்டில் நான் தங்கியிருந்த வீட்டிலே அவரும் தங்குவார். திரைப்படங்களைக் கொட்டாஞ்சேனை, மருதானைப் பகுதிகளிலுள்ள திரையரங்குகளில் பார்த்தால் நான் மருதானையிலிருந்த நடராஜசிவம் வீட்டுக்குச்சென்று தங்குவேன். இப்படி எமது பெரும்பொழுது திரைப்படங்கள் பார்ப்பதிலேயே கழிந்தது.

நடராஜசிவம் தனது படைப்பாற்றலை எழுத்து மூலமோ நிகழ்ச்சித் தயாரிப்பு மூலமோ வெளிக்காட்டாவிட்டாலும் ஒரு திரைப்படத்தைப்பற்றியோ நாடகத்தைப் பற்றியோ மிக ஆழமாக இரசித்து உரையாடுவதற்கேற்ற அறிவும் இரசனையும் கொண்டவர். ஒரு திரைப்படத்தைப் பார்த்த பின்னரான அதுபற்றிய உரையாடல்தான் ஒருவரது திரைப்பட அறிவையும் இரசனையையும் விருத்தி செய்கிறது. அந்த வகையில் நடராஜசிவத்தின் நட்பு எனக்கு மிகவும் உதவியிருக்கிறது. நடராஜசிவம் நல்ல குரல்வளமும் திறமையும் மிக்க வானொலிக்கலைஞராக அப்போது விளங்கினார். வானொலியில் தயாரிக்கப்பட்ட பல நிகழ்ச்சிகளில் அவரைத் தயாரிப்பாளர்கள் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்வார்கள். நான் தயாரித்த இரசமஞ்சரி, பரீட்சார்த்த நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் பலவற்றில் முக்கிய கலைஞராக அவர் இருந்தார். நான் பிரதான நாடகத் தயாரிப்பாளரானதன் பின்னர் தயாரித்த ஒதெல்லோ நாடகத்தில் அவர் ஒதெல்லோவாக நடித்தமை வானொலி நாடக நடிப்பிற்கு உதாரணமாகக் காட்டும் வகையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்று.

நடராஜசிவம் சில சிங்களப் படங்களைத் தமிழுக்கு மொழிமாற்றம் செய்த போது அவற்றில் நடிகர்களுக்குக் குரல்கொடுத்திருக்கிறார். அர்ச்சுனா என்ற இயக்குநர் தான் சிங்களத்தில் தயாரித்து இயக்கிய கலியுக காலய என்ற திரைப்படத்தை கலியுக காலம் என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்தபோது அதில் பிரதான பாத்திரத்தில் நடித்த ரோணி ரணசிங்கவுக்கு நடராஜசிவம் குரல்கொடுத்திருந்தார். அமுதன் அண்ணாமலை அதில் பாடலொன்றைப் பாடியிருந்தார். அந்தத் திரைப்படத்தை நான் வெள்ளவத்தை சவோய் தியேட்டரில் பார்த்தபோது ரோணி ரணசிங்கவின் நடிப்புக்கு நடராஜசிவத்தின் குரல் அற்புதமாகப் பொருந்தியிருந்தது.

என்னுடன் எப்பொழுதுமே திரைப்படம் பார்க்கும் நண்பராக இருந்த நடராஜசிவம் எனது சினிமா ஆர்வத்தை நன்கு உணர்ந்தவராக சினிமாவில் எடிற்றிங் என்கின்ற படத்தொகுப்பைக் கற்பது சினிமா உலகுக்குள் பிரவேசிக்கவும் திரைக்கதை எழுதவும் உதவும் என்று கூறி அவருக்கு அறிமுகமாகவிருந்த சந்திரன் என்னும் சிங்களத் திரைப்படப் படத்தொகுப்பாளரை எனக்கு அறிமுகம்செய்துவைத்தார். அவர் தமிழில் சில திரைப்படங்களை இயக்கியுமிருக்கிறார். சந்திரன் தன்னிடம் வந்து எடிற்றிங் பழகலாம் என்றவுடன் அவர் அப்போது ஒரு திரைப்படத்தை எடிற்செய்துகொண்டிருந்த நாரஹன்பிட்டியிலுள்ள சிலோன் ஸ்ரூடியோவுக்கு நடராஜசிவமும் நானும் சென்றோம். அவர் அப்போது 'துப்பத்தாகே ஹித்தவத்த' (ஏழைகளின் நண்பன்) என்ற சிங்களத் திரைப்படத்தை எடிற்செய்துகொண்டிருந்தார். கதாநாயகனாக பப்ரிஸ் பர்னாண்டோ என்பவர் நடித்தார். அவர் எம்.ஜீ.ஆர்.-ஐப் பின்பற்றி அவர் பாணியிலேயே ஏழைகளுக்கு உதவும் கதாநாயகனாக சில படங்களைத் தயாரித்து நடித்துக்கொண்டிருந்தார். அவற்றில் ஒன்றுதான் துப்பத்தாகே ஹித்த வத்த. அதன் இயக்குனரும் ஒரு தமிழர்தான். அவரது பெயர் லெனின் என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகமில்லை. தொடர்ந்து சில நாட்கள் சந்திரனிடம்சென்று அவர் எடிட் செய்வதை அவதானித்துக்கொண்டிருந்தேன். அனேகமாக நடராஜசிவமும் என்னுடன் வருவார். சிலநாட்களின் பின்னர் எனது வேலை நேரங்களுடன் சந்திரனின் வேலை நேரங்கள் ஒத்துவராமையால் என்னால் அதைத் தொடரமுடியவில்லை, கைவிட்டுவிட்டேன். அந்தக்கால எடிற்றிங் என்பது மிகவும் சிரமமான வேலை. மூவியோலாவில் படச்சுருள்களைத் திரும்பத் திரும்ப ஓடவிட்டு, அந்தச் சிறிய திரையில் கூர்ந்து பார்த்து சரியான காட்சிகளை வெட்டி ஒட்டுவதெல்லாவற்றையும் கைகளாலேயே செய்யவேண்டும். இப்போது டிஜிற்றல் மென்பொருட்கள் மூலம் செய்பவர்களால் அந்த வேலையைக்கற்பனை கூடச் செய்துபார்க்க முடியாது. இப்படி எனது சினிமா இயக்குநர் ஆர்வத்தை எப்படியாவது நான் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்பதில் நடராஜசிவம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார்.

பின்னாட்களில் நான் ரூபவாஹினியில் சேர்ந்து இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து இயக்கியபோது அதில் பிரதான பாத்திரத்தில் நடராஜசிவம் நடித்தார். அது இலங்கைத் தொலைக்காட்சி வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வு. அதனைத்தொடர்ந்து அவர் பிரபல சிங்கள நாடகத் தயாரிப்பாளர் பராக்கிரம நீரியல்லவின் சிங்கள நாடகத்தில் நடித்ததன் மூலம் புகழ்பெற்று தொடர்ந்து பல சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களில் நடிகராகத் திகழ்ந்தமை விரிவாகப் பதியப்படவேண்டிய ஒன்று.


நான் திரைப்படக்கலையில் காட்டிய ஆர்வம் எனது திரைப்பட இயக்குநர் கனவை நனவாக்காவிட்டாலும் 1980ம் ஆண்டில் அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய தமிழ்த் திரைக்கதைப் பிரதிப்போட்டியில் நான் எழுதிய கிராமத்தின் இதயம் என்ற எனது திரைக்கதைப் பிரதி முதலிடம் பெற்றமையும் அதைத் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் தம்பிஐயா தேவதாஸ் புத்தகமாக வெளியிட்டமையும் எனக்குச் சிறிது மனஆறுதல் அளிக்கிறது. அதுமட்டுமல்ல, திரைப்படங்களை ஆழ்ந்து பார்த்ததன் மூலம் கதை சொல்லுதல், கதாபாத்திரங்களின் நடவடிக்கைகள், மனஉணர்வு வெளிப்பாடு போன்றவற்றில் நான் பெற்ற அனுபவம் எனது வானொலி நாடகத் தயாரிப்பிலும் பின்னர் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பிலும் எனக்கு மிகவும் உதவியது. எனது வானொலி, தொலைக்காட்சி நாடகப் படைப்புகள் இரசிகர்களதும் விமர்சகர்களதும் பாராட்டைப்பெறக் காரணம் சினிமா பார்ப்பதால் என்னில் எற்பட்ட ரசனை முதிர்ச்சி
எனக்கூறலாம்.



தொடரும்....

wikneswaran.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பிரகதி

## சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்

**OVER 10,000 YEARS OLD TRADITIONAL SYSTEM OF TAMIL MEDICINE.**

**வர்ம முறையிலும், மருந்தில்லா மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.**

அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். இது ஒரு பாரம்பரிய பரம்பரை ராஜ வைத்தியசாலை. இந்தக் கால மருத்துவ விஞ்ஞானிகளைப் போல ஆதிகால மருத்துவ விஞ்ஞானிகளே நம் சித்தர் பெருமக்கள். தவம்,ஞானம் எனப் பல வழிகளைக் கண்டறிந்தார்கள். அதில் ஒரு பங்கு தான் வைத்தியம். வைத்தியமுறைகள் பலவகைகளாக இருந்தாலும், அவர்கள் மூலிகைகளைக் கொண்டு பல வியாதிகளைக் குணமாக்கியும், ஆராய்ச்சி செய்தும் சுவடிகளில் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சீடர்களுக்கும், சில நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும் கற்றுத் தந்தும் இருக்கிறார்கள் மக்களின் நலன் கருதியே சித்தர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள். பல மருத்துவ முறையில் வந்திருக்கும் வியாதிக்கு மருந்தில்லை. ஆனால் சித்த மூலிகை வைத்தியத்தில் அப்படியில்லை. பல வியாதிகளுக்கு மருந்து இருக்கிறது. இன்னமும் மருந்திருக்கும் அளவுக்கு வியாதிகள் உலகத்தில் உருவாகவில்லை. எப்படிச் சொல்கிறேன் என்றால் ஒரே ஒரு மூலிகை 30 விதமான வியாதிகளைக் குணப்படுத்தும் அளவுக்கு உள்ள மூலிகைகளும் உண்டு. அதைப் பரம்பரையாக கையாண்டு வந்து கொண்டிருந்த பரம்பரையில் வந்ததே அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். நரம்புத் தளர்ச்சி, முடக்கு வாதம்,பக்கவாதம், சிறுநீரகம், சொரியாஸிஸ், கர்ப்பப்பைக் கட்டி, ஆண் பெண் மலட்டுத் தன்மை, குழந்தையின்மை, அல்சர், மூட்டுவலி, இருதயம் சம்பந்தமான நோய்கள், மூளைக் கட்டி, ரத்தசோகை,சர்க்கரை வியாதி, தலைமுடி கொட்டுதல், மாலைக் கண்நோய், காது, ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால்,வெண் குஷ்டம்,முள்ளந்தண்டு வட வலி, மூட்டு வலி, மூட்டுத்தேய்மானம், மஞ்சள் காமாலை, வெள்ளைப்படுதல், அனைத்து விதமான புற்று நோய்கள், வலிப்பு (Seizure), ஆட்டிசம் (Autism), முரசு கரைதல், தூக்கமின்மை, மூலம், பௌத்திரம், நரம்பு வாதம் (Varicose Vein) மாறாத படுக்கைப்புண், தீப்புண், ஒற்றைத் தலைவலி, முடி உதிர்தல், தைராய்டு, உடல் எடையை கூட்ட, அல்லது குறைக்க, உடலில் ஏற்படக் கூடிய அனைத்து வியாதிகளையும் அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சையில் பரிபூரணமாக குணப்படுத்திட முடியும். உணவே மருந்து, மருந்தே உணவாக கடைப்பிடிக்கப்படுகிறது.
வியாதிகளில்லாத உலகை உருவாக்க விரும்புகிறது

### புற்று நோய் மற்றும் மரபணு நோயாளர்களுக்கு ஓர் அறிவிப்பு:

எந்த வகையான புற்றுநோய் மற்றும் மரபணு நோயாக இருந்தாலும் நோயாளி வாயால் உணவு உட்கொள்ளக்கூடியதாக இருக்கும் போதும் உறுப்புகளை வெட்டி அகற்ற முன்னரும் நாம் உங்களுக்கு உதவ முடியும் உங்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை முழுமையாக வாழ நாம் உங்களுக்கு உதவ முடியும்

### முக்கிய எச்சரிக்கை:

எந்த வைத்திய முறையானாலும், நோய்களை சரியாகக் கண்டறிந்து, அதற்கான மருந்தை கூறப்பட்ட பத்தியத்துடன் எடுக்கும் போது, குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அதன் முன்னேற்றத்தினை நீங்கள் உணர முடியாது போனால் உங்களுக்கு நோய் மாறாது இருக்கிறது என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். அதனைத் தொடர்வது பற்றி நீங்கள் நிச்சயம் சிந்திக்க வேண்டும்..
வியாபார விளம்பரங்கள் மட்டுமே உங்கள் முடிவுகளை தீர்மானிக்கக் கூடாது. மூலிகைகளின் தரம், செய் முறை, அதன் ஆயுட்காலம், வைத்தியரது திறமை, நம்பகத்தன்மையையும் ஆராய்ந்து தீர்மானியுங்கள்.
இதனால் உங்கள் பணமும்,கால விரயமும், மன உளைச்சலும் தவிர்க்கப்படும்.

## சித்தர்களின் பழங்கால முறையில் ரசமணி, ரசலிங்கம் செய்து தரப்படும்.

**PREMI.S**
**பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்), இரசவாதி**
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist Siddha System of Medicine (IND),
Natural Medicine Practitioner© (CAN)

**Proudly Sponsored By:**
Yogic Health & Food Bank
www.sivarppanamfoundation.org



**நிவாரணம் பெற அழையுங்கள்**
கனடா மற்றும் இந்தியா தொடர்புகளுக்கு
**TEL: +1416-624-7927 | +1647-278-3100**
**Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com**
**880 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1H 2Y2**
(Painted Post & Markham Rd)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே அரசன்

## - ஏமோஸ் ஒஸ்

### ஹீப்றூவிலிருந்து: சொன்ட்றா சில்வர்ஸ் றொன்


### தமிழில்: என்.கே. மகாலிங்கம்



ஏமோஸ் ஒஸ் மே 4, 1939 - டிசம்பர் 28, 2018. நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், குழந்தை இலக்கியங்கள், கட்டுரைகள் என்று 45 நூல்களின் ஆசிரியர். பத்திரிகையாளர், அறிவாளி. பென் கூரியன் பல்கலைக்கழகத்தில் ஹீப்றூ இலக்கியப் பேராசிரியர். இவரின் நூல்கள் 45 மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளது. எந்தவொரு இஸ்ரேலிய எழுத்தாளரிலும் பார்க்க இது அதிகம். அவருக்குப் பல விருதுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில: Peace Prize of the German Book Trade. The Legion of Honour of France Israel Prize, Goethe Prize, Franz Kafka Prize.

1967 ஆண்டு தொடக்கம் இஸ்ரேலிய பலஸ்தீனப் பிரச்சினைக்கு இரு மாநிலத் தீர்வை முன்னெடுத்து வாதிட்டு வந்தவர்களுள் இவர் முக்கியமானவர். Peace Now இயக்கத்தின் முன்னோடி. இஸ்ரேலிய பலஸ்தீனப் பிரச்சினை, ஆதனப் பிரச்சினையே அன்றி மதப் பிரச்சினையோ, பண்பாட்டுப் பிரச்சினையோ, மரபுகள் பற்றிய பிரச்சினையோ அல்ல. அதைத் தீர்ப்பதற்கு வலி உண்டாக்கும் சமரசங்கள்தான் தேவை என்றார். இஸ்ரேலியர், பலஸ்தீனியரின் நிலங்களில் செய்யும் குடியேற்றங்களை எதிர்த்தார்.

'இஸ்ரேலின் படைப்பாற்றல் மிக்க எழுத்தாளர், மதிப்புமிக்க அறிவாளி' என்று த நியுயோர்க் ரைம்ஸ் இவரைப் புகழ்ந்துள்ளது.




கிபுற்ஸ் யெகற் என்ற எங்கள் கிபுற்ஸில் - கிராமத்தில் சிவி ப்றொவிசோர் என்பவன் வாழ்ந்தான். உயரம் குறைந்தவன். வயது ஐம்பத்தைந்து. திருமணமாகவில்லை. அடிக்கடி கண்களைச் சிமிட்டுவான். கெட்ட செய்திகளைச் சொல்வதில் விருப்பமானவன்: பூகம்பங்கள், விமான விபத்துக்கள், குடியிருப்பவர்களின் மீது கட்டடம் இடிந்து விழுதல், தீ விபத்து, வெள்ளப் பெருக்கு என்பன அவற்றில் சில. பத்திரிகைகள் வாசிப்பான். எல்லாவிதமான செய்திகளையும் அதிகாலையிலேயே வாசித்து விடுவான். அதனால் எங்கள் உணவு அறையின் வாசலிலேயே, சீனாவில் இருநூற்றைம்பது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்துள் அகப்பட்டுக் கொண்டார்கள் என்றோ, கரிபியன் கடலில் புயலில் அகப்பட்டு ஒரு படகு கவிழ்ந்து அறுநூறு பயணிகள் மூழ்கிவிட்டார்கள் என்றோ சொல்லி எங்களைத் திகைக்க வைத்து விடுவான். அத்துடன், மரண அறிவிப்புக்களை மனப்பாடம் செய்திருப்பான். எவருக்கும் தெரிவதற்கு முன்பே புகழ்பெற்ற எந்த மனிதன் இறந்து போனான் என்று அவனுக்குத் தெரியும். அதை கிபுற்ஸிலுள்ள எல்லாருக்கும் அறிவித்து விடுவான். ஒருநாள் காலை நான் மருத்துமனைக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில் என்னை வழி மறித்தான்.

'விஸ்லாவ்ஸ்கி என்ற ஒரு எழுத்தாளரைக் கேள்விப்பட்டிருக்கிறாயா?'

'ஓம், ஏன்?'

'அவன் இறந்து போனான்.'

'அதற்காக வருந்துகிறேன்.'

'எழுத்தாளரும் இறப்பார்கள் தானே.'

இன்னொரு முறை நான் உணவு அறையில் எனக்காக ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருந்தபோது என்னைப் பிடித்துக் கொண்டான்.

'உன்னுடைய பாட்டன் இறந்து விட்டதாக மரண அறிவிப்பில் பார்த்தேன்.'

'ஓம்.'

'மூன்று ஆண்டுகளுக்கு முன் உன்னுடைய மற்றப் பாட்டன் இறந்துவிட்டார் அல்லவா?'

'ஓம்.'

'அப்போ இவர் தான் கடைசி.'

சிவி ப்றொவிசோர் தான் கிபுற்ஸின் தோட்டக்காரன். ஒவ்வொரு நாளும் அதிகாலை ஐந்து மணிக்கே தோட்டத்திற்குச் சென்று நீர் தெளிப்பானை நிலைமாற்றி வைப்பான். பூப்படுக்கைகளின் மண்ணைக்கிளறி விடுவான். செடிகளை நடுவான். அவற்றின் கிளைகளை நறுக்கி விடுவான். நீர் ஊற்றுவான். புல்வெளியிலுள்ள புல்லை இரைச்சலிடும் இயந்திரத்தால் வெட்டுவான். பூச்சி மருந்து அடிப்பான். கரிம, இரசாயன உரங்களை இடுவான். அப்போதும் அவனுடைய இடுப்புப் பட்டியில் ஒரு சிறிய ரான்சிஸ்ரர் வானொலிப் பெட்டி கட்டப்பட்டிருக்கும். அது அவனுக்கு அவலமான செய்திகளை தொடர்ந்து அளித்துக்கொண்டிருக்கும்.

'நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? அங்கோலாவில் மிகப்பெரிய படுகொலை நடந்திருக்கிறது.'

அல்லது, 'மத விவகார அமைச்சர் இறந்து போனார். பத்து நிமிஷங்களுக்கு முன் தான் அதை அறிவித்திருந்தார்கள்.'

கிபுற்ஸிலிருந்த மற்ற அங்கத்தவர்கள் அவனைத் தவிர்த்தார்கள். உணவறை மேசையில் அவனுடன் அவர்கள் அதிகம் சேர்ந்து இருப்பதில்லை. கோடை கால மாலை நேரங்களில் தனியாக பச்சை நிற இருக்கையில் இருந்துகொண்டு புல்வெளியில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டிருப்பான். அந்த நீண்ட இருக்கை உணவறையின் முன்னுள்ள பெரிய புல்வெளியின் தொடக்கத்தில் இருந்தது. மென்காற்று அவனுடைய சேர்ட்டை ஊத வைத்து உயர்த்தி, அவன் அணிந்திருந்த சுவெற்றரை உலர்த்தும். வெப்பமான கோடை காலச் சந்திரன் உயர்ந்த சைப்பிரஸ் மரங்களின் மேலாக சிகப்பாக ஒளிர்ந்திருக்கும். ஒருநாள் மாலை சிவி ப்றொவிசோர் அடுத்த இருக்கையில் தனியான இருந்த லூணா ப்ளாங்க் என்ற ஒரு பெண்ணுக்கு வணக்கம் சொல்லி விட்டு, சோகமாக 'ஸ்பெயினில் அநாதை விடுதி ஒன்றில் தீப்பிடித்து எண்பது அநாதைகள் புகையை உள்ளிழுத்ததால் இறந்து

தொடர்தல் 87ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே அரசன்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

விட்டார்கள். அதைக் கேள்விப்பட்டிருக்கிறாயா?' என்றான்.

நாற்பது வயது நிரம்பிய லூணா கணவனை இழந்த ஓர் ஆசிரியை. நெற்றி வியர்வையை ஒரு கைக்குட்டையால் துடைத்து விட்டு, 'அது மிகப்பயங்கரமானது,' என்றாள்.

'அவர்களுள் மூன்று பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டுள்ளார்கள். அவர்களும் மோசமான நிலையில் தான் உள்ளார்கள்,' என்றான் சிவி.

நாங்கள் எல்லோரும் வேலையில் அவன் காட்டும் அர்ப்பணிப்புக்கு மதிப்பளித்தோம். கிபுற்ஸில் அவன் வாழ்ந்த இருபத்திரண்டு ஆண்டுகளில் ஒரு நாளாவது சுகமில்லை என்று விடுப்பு எடுத்ததில்லை என்று அவனுடைய வேலைக் குறிப்பில் உள்ளது. அவனுடைய அர்ப்பணிப்பால் கிபுற்ஸ் பூத்துக் குலுங்குகிறது. உபயோகத்தில் இல்லாத நிலம் முழுவதிலும் பருவ காலப் பூ மரங்கள் நட்டான். இங்கும் அங்கும் கல் பதிகைத்தோட்டம் செய்திருக்கிறான். அதில் பலவகையான கற்றாளை மரங்களை நட்டிருக்கிறான். முந்திரிக் கொடிகளுக்கு பலகையில், தட்டிப் பந்தல்கள் கட்டியிருக்கிறான். உணவறைக்கு முன்னால் ஒலி எழுப்பும் நீரூற்று அமைத்து அதைத் தங்க மீன்களாலும் நீர்த் தாவரங்களாலும் நிரப்பியிருக்கிறான். நல்ல அழகியல் உணர்வுள்ளவன். அதை அனைவரும் பாராட்டுவார்கள்.

ஆனால் அவன் பின்னால் அவனை நாங்கள் மரண தேவதை என்று அழைத்து வம்பு பேசுவோம். அத்துடன் அவனுக்கு பெண்கள் மீது ஆர்வம் இல்லை என்பது மட்டுமல்லாமல் என்றுமே அவனுக்குப் பெண்கள் இருந்ததில்லை என்றும் சொல்லுவோம். றோனி சின்டின் என்ற ஓர் இளைஞன் சிவியைப்போல நையாண்டி செய்து அருமையாக நடித்துக் காட்டுவான். அதை நாங்கள் பார்த்து வெடித்துச் சிரிப்போம். பின்மதியத்தில் கிபுற்ஸில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் தங்கள் தாழ்வாரங்களில் இருந்து கோப்பி குடித்துக் கொண்டு அல்லது வீட்டின் முன்னாலுள்ள சிறிய தோட்டத்தில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது, சிவி ப்றொவிசோர் செய்தித்தாள்களை வாசிப்பதற்காக சங்கக்கட்டடத்திற்குச் சென்று, அவனைப் போன்ற தனியான ஆட்கள் ஐந்தாறு பேருடன் இருந்து வாசிப்பான் அல்லது விவாதிப்பான். அவர்களும் அவனைப் போல நல்ல வாசகர்கள் அல்லது வாதம் செய்பவர்கள். அல்லது வயதேறிய பிரமச்சாரிகள் அல்லது மனைவி இழந்தவர்கள், அல்லது விவாகரத்தானவர்கள்.

றெவ்கே றொமாத் என்பவன் தலை மொட்டையான சிறிய மனிதன். அவனுக்கு வௌவால் போன்ற விசாலமான காதுகள். இருந்த இடத்திலிருந்தே முணுமுணுத்துக் கொண்டு, பதிலடித் தாக்குதல்கள் வன்முறையைத்தான் விரைவுபடுத்தும். ஏனெனில் பழிக்கும் பழி பழி வாங்குதலை மேலும் அதிகரிக்கும். பதிலடித் தாக்குதல்கள் பதிலடித்தாக்குதல்களையே அதிகரிக்கும் என்று சொல்லுவான்.

அவனை மற்றவர்கள் உடனடியாகத் தாக்குவார்கள்: 'நீ என்ன சொல்லுகிறாய்? அவர்களை சும்மா விடக்கூடாது! கட்டுப்பாடாக இருப்பதும், சமாதானப்படுத்துவதும் அராபியர்களை மேலும் தைரியமாக்கி விடும்.'

சிவி ப்றொவிசோர் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி, 'இறுதியில் அது யுத்தத்தில் தான் முடியும். அது பயங்கரமான யுத்தமாக மாறும்,' என்பான்.

எமானுவல் க்ளொஸ்மன் ஒரு திக்குவாயன். அவன் பரபரப்பாகச் சொல்வான்:

'யு..யு..யு..த்தம். மி..மி..கவும் ந..ந..ந..ல்லது. நா..ங்கள் வெ..வெ..ல்வோம். நா..ன் அ..வர்களின் நி..நி..லத்தை எ..டுப்பேன். ஜோ..ஜோர்.. டான் வரைக்கும் உ..ள்ள.'

றெவெக்கா றொத் உரத்துச் சிந்திப்பான்: 'பென் குரியன் மிகப் பெரிய சதுரங்க விளையாட்டுக்காரன். அவன் ஐந்து அசைவுகளை முன்னமே சிந்தித்து விடுவான். ஆனால் அவனுடைய பிரச்சினை என்னவென்றால் வன்முறையாகத் தான் எதையும் செய்வான்.'

> **வாழ்வில் நடக்கும் குரூரங்களைப் பார்க்காமல் நாம் கண்களை மூடிக்கொண்டிருப்பது, என்னைப் பொறுத்த வரையில், மடத்தனமும் பாவமும் ஆகும். எங்களால் அதிகம் செய்யமுடியாது. ஆனால் அவை நடக்கின்றன என்பதையாவது குறைந்தது நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.**

அந்த விஷயத்தில் சிவி ப்றொவிசோர் சோகத்துடன் வருவதுரைப்பான். 'நாங்கள் தோற்றால் அராபியர்கள் வந்து எங்கள் எல்லாரையும் அழித்துவிடுவார்கள். நாங்கள் வென்றால் ரஷ்யர்கள் வந்து எங்களை நொருக்கி விடுவார்கள்.'

எமானுவல் க்ளொஸ்மன் மன்றாடி, 'போ..போ..தும் ந..ண்பர்களே. அ..அ..மைதியாக இ..இ.. ருங்கள். எ..எ.. ன்னை பத்திரிகை வா..வா..சிக்க வி..வி..டுங்கள்.' என்பான்.

சிவியும் சில கண அமைதிக்குப் பிறகு, 'நீங்கள் கேள்விப்பட்டனீங்களா? நோர்வே அரசனுக்குக் கல்லீரல் புற்றுநோயாம். எங்கள் பிராந்திய சபைத் தலைவருக்கும் புற்றுநோயாம்,' என்றான். நகைச்சுவை நடிகன் றொனி சின்டலின் சிவியைச் சப்பாத்துத் தைப்பவனிடத்தில் அல்லது புடவைக்கடையில் கண்டபொழுதெல்லாம் ஏளனத்துடன், 'மரணத்தின் தேவதையே, இன்றைக்கு எந்த விமானம் நொருங்கியது?' என்று கேட்பான்.

சிவி ப்றொவிசோரும் லூணா ப்ளாங்கும் ஒருவகையான வழக்கத்திற்கு ஆட்பட்டார்கள்: ஒவ்வொரு நாள் மாலையிலும் பேசிக்கொண்டார்கள். புல்வெளியில் போட்டிருந்த இடதுபக்கம் இருந்த நீண்ட இருக்கையில் வலதுபக்க ஓட்டில் அவன் இருப்பான். வலது பக்கம் இருந்த நீண்ட இருக்கையில் இடதுபக்க ஓட்டில் அவனுக்குப் பக்கத்தில் அவள் அமர்ந்திருப்பாள். அவளுடன் பேசும்போது அவன் கண்கள் அடிக்கடி சிமிட்டிக் கொண்டிருக்கும். அன்று அவள் வெயிலுக்கு கையில்லாத ஒரு ரவிக்கைப் போட்டிருந்தாள். கைக்குட்டையை விரல்களுக்குள் இடையில் வைத்து அடிக்கடி கசக்கிக் கொண்டிருந்தாள். அவன் உழைப்பால் உருவாகிய கிபிற்ஸின் தோட்டங்களைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தாள். அவனால் தான் பசுமையான புல்வெளியிலும் மலர்ச்சியான பழத்தோட்டத்தின் நிழலிலும், பூத்துக் குலுங்கும் பூப்படுகைகளிலும் அவர்கள் வசிக்கிறார்கள் என்று சொன்னாள். அலங்காரமான வார்த்தைகளைப் பாவிக்கும் இயல்பான போக்கு அவளிடம் நிறையவே இருந்தது. அவள் மூன்றாம் வகுப்புப் பள்ளி ஆசிரியை. அவள் பென்சிலால் அழகாக வரைந்த ஓவியங்கள் எங்கள் அடுக்ககங்கள் பலவற்றின் சுவர்களில் தொங்குகின்றன. அவள் முகம் வட்ட வடிவமும் புன்சிரிப்பும் உடையது. கண்ணிமைகள் நீண்டவை. கழுத்தில் சற்று சுருக்கங்கள் விழுந்திருந்தன. கால்கள் மிக மெலிந்தவை. முலைகள் இல்லை என்றே சொல்லலாம். அவள் கணவன் பல ஆண்டுகளுக்கு முன்பே காசா எல்லையில் சிறப்புப்படையில் கடமை ஆற்றியபோது யுத்தத்தில் கொல்லப்பட்டு விட்டான். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. கிபுற்ஸ் அங்கத்தவர்கள் அவளை ஒரு போற்றத்தக்கவளாகவே மதித்து வந்தார்கள். இடர்களிலிருந்து மீண்டவள் என்ற வகையிலும் தன் முழு ஆன்மாவையே கல்வியளிப்பதிலேயே செலவிடுபவளாகவும் அவளை அவர்கள் கருதுகின்றனர். சிவி றோசாப் பூக்களிலுள்ள விதம் விதமான இனங்கள் பற்றிச் சொன்னான். அதற்கு அவள் ஆவலுடன் தலை அசைத்தாள், அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் அவளுக்கு உடன்பாடு இருப்பது போல. சூடான் நாட்டைப் பேரழிவுக்கு உட்படுத்தும் வெட்டுக்கிளி தொற்றுநோயின் பயங்கரத்தை விரிவாக விபரித்தான்.

லூணா சொன்னாள், ' நீ மிகவும் உணர்ச்சியுள்ள ஒரு மனிதன்,'

சிவி கண்களைச் சிமிட்டி, 'சூடான் உண்மையில் பசுமையான நாடல்ல,' என்றான்.

லூணா, 'உலகம் முழுவதிலுள்ள சோகத்தையும் நீ ஏன் உன் தோள்களில் சுமக்கிறாய்?' என்றாள்.

சிவி அதற்கு, 'வாழ்வில் நடக்கும் குரூரங்களைப் பார்க்காமல் நாம் கண்களை மூடிக்கொண்டிருப்பது, என்னைப் பொறுத்த வரையில், மடத்தனமும் பாவமும் ஆகும். எங்களால் அதிகம் செய்யமுடியாது. ஆனால் அவை நடக்கின்றன என்பதை யாவது குறைந்தது நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்,' என்றான்.

ஒரு கோடை கால மாலையில் லூணா ப்ளாங் சிவியை தன் இருப்பிடத்திற்கு கோப்பி குடிப்பதற்கு அழைத்தாள். அவன் தன் வேலை முடிந்த பின் அணியும் உடையில் அங்கே சென்றான். நீண்ட காக்கி காற்சட்டையும் அரைக் கை நீல நிறச்சட்டையும் அணிந்திருந்தான். வானொலி, அணிந்திருந்த பட்டியில் இணைக்கப்பட்டிருந்தது. செய்தி கேட்பதற்காக சரியாக எட்டு மணிக்கு அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். லூணாவின் அறையின் சுவர்களில் பென்சிலால் அவள் வரைந்த பல ஓவியங்கள் எளிய சட்டங்களில் தொங்கின. கனவு காணும் இளம் சிறுமிகள், நிலக்காட்சிகள், மலைப்பாறைகள், ஒலிவ் மரங்கள். ஜன்னலின் கீழே இரண்டு ஆள் படுக்கும் கட்டில். அதில் சித்திரவேலைப்பாடுகள் போட்ட கீழைத் தேய தலையணைகள் இருந்தன. வெள்ளை நிற இரவு மேசையில், உயரத்தை வைத்து நேராக சில நூல்கள் அடுக்கப்பட்டிருந்தன. வான் கோ, செசான், கோகை ஆகியோரின் ஓவியங்கள், குறுகிய அளவுள்ள கசுற்றோ விவிலியம் கடைசியாகவும், ஹாசிஃபிறியா லே'ம் வெளியிட்ட நாவல்களும் அதில் இருந்தன. அறையின் மத்தியில் ஒரு வட்ட வடிவ மேசை. அதன் பக்கத்தில் இரண்டு கைநாற்காலிகள். மேசையில் சித்திர வேலைப்பாடுகள் செய்த மேசை விரிப்பு. அதன் மேல் கோப்பைகளும் குவளைகளும், கோப்பியும் குக்கிகளும் வைக்கப்பட்டிருந்தன.

சிவி ப்றொவிசோர், 'உன்னுடைய அறை மிகவும் அழகாக, சுத்தமாக, துப்புரவாக உள்ளது,' என்றான்.

அதைக் கேட்டுச் சங்கடப்பட்ட லூணா ப்ளாங், 'நன்றி, அதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது,' என்றாள்.

ஆனால் அவளுடைய குரலில் மகிழ்ச்சி தெரியவில்லை. தடுமாற்றத்தில் ஏற்பட்ட பதற்றம் தான் தெரிந்தது.

கோப்பி குடித்தார்கள். குக்கி சாப்பிட்டார்கள். அலங்காரச் செடிகளைப் பற்றியும் பழ மரங்களைப் பற்றியும், இக்காலங்களில் எல்லாவற்றுக்கும் அனுமதி கிடைத்ததால் பாடசாலைகளில் ஏற்படும் ஒழுங்கீனப் பிரச்சினைகளைப் பற்றியும் பறவைகளின் இடப்பெயர்வு பற்றியும் பேசினார்கள்.

சிவி கண்ணைச் சிமிட்டிக் கொண்டு, 'ஹிரோஷிமாவில் அணுகுண்டு விழுந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்னும் இன்னும் பறவைகள் இல்லை என்று செய்தித்தாளில் வாசித்தேன்,' என்றான்.

லூணா திரும்பவும் சொன்னாள், 'உலகத்திலுள்ள கவலைகள் எல்லாவற்றையும் உன் தலையில் போட்டுக் கொள்கிறாய்.'

'முந்தா நாள் என்னுடைய யன்னலுக்கு வெளியே ஒரு கொண்டலாத்திக் பறவையைக் கண்டேன்,' என்றாள்.

அதன் பின் முன்மாலை நேரங்களில் தோட்டத்திலிருந்த இருக்கையில் அடர்த்தியான காகிதப்பூ மர நீழலில் அல்லது லூணாவின் அறையில் கோப்பி குடித்துக் கொண்டு தொடர்ந்து சந்தித்துக் கொண்டனர். சிவி நாலு மணிக்கு வேலை முடிந்து வீட்டு வந்து குளித்து விட்டு கண்ணாடியின் முன் நின்று தலை சீவி, இஸ்திரி போட்ட காக்கி காற்சட்டையையும் லேசான நீல சட்டையையும் அணிந்து அவளைப் போய்ச் சந்திப்பான். சிலவேளைகளில் ஆண்டுதோறும் மலரும் மலர்களின் நாற்றுக் கன்றுகளை அவளின் சிறிய தோட்டத்தில் நடுவதற்காகக் கொண்டு போய் அவளிடம் கொடுப்பான். ஒருமுறை யாக்கோவ் ஃபிச்மனின் கவிதை நூல் ஒன்றை அவளிடம் கொடுப்பதற்காகக் கொண்டு சென்றான். அவள், அவனுக்கு ஒரு பையில் கசகசாக் கொட்டையில் செய்த குக்கிகளையும் பென்சிலால் வரைந்த சைப்பிரஸ் மரமும் இரண்டு கிளைகளும் உள்ள ஓர் ஓவியத்தையும் கொடுத்தாள். எட்டோ எட்டரை மணிக்கோ நல்லிரவு சொல்லிவிட்டு, சிவி துறவிகள் மடம் போன்ற தன் அறைக்குத் திரும்பிவிடுவான். அந்த அறையின் காற்றில் பிரமச்சாரிகளின் மணம் மிக அதிகமாக இருக்கும்.

மரண தேவதை தன் சிறகுகளை கறுப்பு விதவையின் மீது விரித்து விட்டது என்று இரவுணவு அறையில் றொனி சின்டலின்

தொடர்தல் 88ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே அரசன்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

சொன்னான். பின்மதியம் ஒன்றில் சங்கக் கட்டடத்தில் றூவெக் றொத் சிவியைப் அன்புடன் பகிடி பண்ணினான். ‘அப்படியானால் கை ஒன்று அளவான கையுறை ஒன்றைக் கண்டு பிடித்து விட்டது, இல்லையா? என்றான். சிவிவையயும் லூணாவையும் அந்த வம்புப் பேச்சுகளும் கிண்டல்களும் கலவரப்படுத்தவில்லை. அவர்களுக்கிடையே இருந்த உறவு தினமும் பலமாக வளர்ந்தது போலத் தோன்றியது. தன் ஓய்வு நேரத்தில் போலந்து நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரான ஐவொஸ்கிவிச்சின் நாவல் ஒன்றை ஹீப்றூ மொழிக்கு மொழியாக்கம் செய்வதாக சிவி அவளுக்குச் சொன்னான். அந்த நாவல் முழுவதும் மென்பண்பும் துயரங்களுமே இருந்தன. ஐவொஸ்கிவிச்சின் மானிடரின் நிலை அபத்தமானது. ஆனால் பரிதாபகரமானது. லூணா தலை சற்றுச் ஒரு பக்கம் சரிய, உதடுகள் விரிந்திருக்க, சூடான கோப்பியை அவனுடைய கோப்பையில் ஊற்றிக் கொண்டு அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஐவொஸ்கிவிச்சினுடைய துயரங்களை ஈடு செய்வதற்கு கோப்பி ஒருவகையில் உதவும் என்பது போல அதைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவர்களுக்கிடையே இருந்த தொடர்பை மதிப்புமிக்க ஒன்றாக அவள் உணர்ந்தாள். இதுவரை தட்டையானதாக சலிப்பானதாக இருந்த அவளுடைய நாட்கள் அந்த உறவு அழகானதாக ஆக்குகிறது என்று நினைத்தாள். நுரைத்துக் கொண்டு வளைந்து வளைந்து ஓடும் ஆறு ஒன்றும், இரண்டு உயரமான குன்றுகளுக்கு இடையிலுள்ள பள்ளத்தாக்கில் அவர்கள் இருவரும் ஒரு குதிரையில் ஒன்றாகச் சவாரி செய்வதாக ஒருநாள் கனவு கண்டாள். அவளுடைய முலைகள் அவனுடைய முதுகை அழுத்திக் கொண்டும் கைகள் இடுப்பைச் சுற்றிக் கொண்டும் இருந்தன. பலவற்றை விபரமாக அவனுடன் பேசி இருந்தாலும் இந்தக்கனவைப் பற்றி சிவிக்குச் சொல்வதில்லை என்று தீர்மானித்திருந்தாள். போலந்து நாட்டு நகரமான யானொவ்வில் மாணவனாக இருக்கவே கனவு கண்டதாக அவனும் சொன்னான். ஆனால், புதிதாக ஆரம்பமான சாலுற்ஸ் என்ற இளைஞர் இயக்கத்தில் சேர்ந்ததாகவும் படிக்க இருந்த திட்டத்தைக் கைவிட்டதாகவும் சொன்னான். இருந்தும் அவன் கற்பதை நிறுத்தவில்லை. மேசை விரிப்பில் இருந்த சிறிய துணுக்கைகளைக் கவனமாகப் புறக்கிக்கொண்டிருந்த லூணா, ‘நீ இளைஞனாக இருந்தபோது மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவனாக இருந்திருப்பாய். இப்போதும் அப்படித்தான் இருக்கிறாய்.’ என்றாள்.


சிவி, ‘உனக்கு என்னைப் பற்றி நல்லாகத் தெரியாது,’ என்றான்.

‘சொல்லு, நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன்,’ என்றாள்.

‘சிலியில் ஒரு எரிமலை வெடித்துள்ளது, அதன் குழம்பு பாய்ந்து ஓடி நாலு கிராமங்களை முற்றாக அழிந்துவிட்டது, எவரும் அதிலிருந்து தப்பமுடியவில்லை என்று இன்றிரவு வானொலியில் கேட்டேன்,’ என்றான் சிவி.

சோமாலியாவில் பட்டினியால் தாக்கப்படும் மக்களைப்பற்றி ஒருநாள் மாலை நெகிழ்ச்சியுடன் விபரமாக விபரித்துக் கொண்டிருந்தான். அப்போது அவள் அவன் மேல் ஏற்பட்ட இரக்கத்தினால் சடுதியாக அவனுடைய கை ஒன்றைப்பிடித்து தன்னுடைய நெஞ்சின் மேல் வைத்தாள். சிவி நடுங்கிப் போய் முரட்டுத்தனமாக கையைத் திரும்ப இழுத்துக் கொண்டான். அவன் கண்கள் தீவிரமாகச் சிமிட்டின. வளர்ந்த பின் எவரையும் வேண்டுமென்று அவன் தொட்டதில்லை. அவனை எவராவது தொட்டால் அவன் விறைத்துப் போவான். நல்ல செழிப்பான மண்ணையும் இளம் செடிகளையும் தொடுவதில் மட்டும் விருப்பம் உள்ளவன், அவன். ஆனால் ஆண்களின் அல்லது பெண்களின் தொடுதலை அவன் விரும்புவதில்லை. அது அவனுடைய முழு உடம்பையும் சுருக்கிக் குறுகச் செய்து விடும், நெருப்புச் சுட்டது போல. கைகுலுக்குவதையும் சரி முதுகில் தட்டுவதையும் சரி முழங்கைகள் உணவு மேசையில் தெரியாத்தனமாகப் படுவதையும் சரி அவன் எப்பொழுதுமே தவிர்த்துவிடுவான். அன்று அவன் சற்று நேரத்தின் பின் எழுந்து போய் விட்டான்.

லூணாவைப் பார்ப்பதற்கு அவன் அடுத்த



இரவு பத்தரை
மணிக்கு எதையாவது
இடையில்
சுற்றிக்கொண்டு
முகில்களையும்
கைவிடப்பட்ட
கொங்கிறீற்
பாதைகளையும்
வீதி விளக்குகளின்
மஞ்சள் ஒளியில்
மினுமினுக்கும்
ஈரத்தையும்
பார்ப்பதற்காக
தாழ்வாரத்தில்
போய் நிற்பான்.

நாள் போகவில்லை. அவர்களுடைய உறவு அவன் விரும்பாத ஓர் இடத்தை நோக்கி அவனைத் தள்ளுகிறதாக நினைக்கத் துவங்கினான். லூணா அவளின் வழக்கமான பண்புடன் எப்படியோ அவனைப் புண்படுத்திப்போட்டேன் என்று ஊகித்துக்கொண்டாள். அதனால் அவனிடம் மன்னிப்புக் கேட்கவும் தீர்மானித்தாள். ஆனால் எதற்காக மன்னிப்புக்கேட்பது என்று அவளுக்குத்தெரியவில்லை. கேட்கக் கூடாத கேள்வி ஒன்றைக் கேட்டு விட்டேனா? அல்லது அவனுடைய வார்த்தைகளில் இருந்த மறைவான முக்கியமான அர்த்தத்தை என்னால் கிரகிக்க முடியாமல் போய் விட்டதா?

இரண்டு நாட்களுக்குப்பின் அவன் அறையில் இல்லாத நேரம் அறைக் கதவின் கீழால் ஒரு குறிப்பை எழுதி உள்ளே தள்ளிவிட்டாள்: ‘நான் உன்னை வேதனைக்கு உள்ளாக்கி இருந்தால் உன்னிடம் மன்னிப்புக்கேட்கிறேன். மீண்டும் கதைப்போமா?’

சிவி அதற்கு இன்னொரு குறிப்பு எழுதிப் பதிலளித்தான்: ‘அப்படிக் கதைக்காமல் இருப்பதே நல்லது. அதுவும் மோசமாகவே முடியும்.’

இருந்தும் இரவுணவு முடிந்த பின் உணவறையின் கதவுக்கு முன்னால் இருந்த வேப்ப மரத்திற்கு முன்னால் அவனுக்காக அவள் காத்திருந்தாள். அவன் வந்த போது நாணத்துடன், ‘நான் உனக்கு என்ன செய்தேன்?’ என்று கேட்டாள்.

‘ஒன்றுமில்லை.’

‘அப்படியானால் என்னை நீ ஏன் தவிர்க்கிறாய்?’

‘புரிந்து கொள்ள முயற்சி செய். அதில்.. பயனில்லை.’

பின்னர் அவர்கள் திரும்பவும் வேண்டுமென்றே சந்திக்கவில்லை. அப்படி அவர்கள் வழியில் அல்லது சிறிய சேமிப்பு அறையில் சந்தித்தால் ஒரு கணம் தயங்கி விட்டுத் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டு தங் கள் வழியில் சென்று விடுவார்கள்.

மதிய உணவு நேரத்தில் றொனி சின்ட்லின் தன் மேசையில் உள்ளவர்களுக்கு, மரண தேவதை தன் தேனிலவை இடையில் முறித்துக்கொண்டுவிட்டது என்று சொன்னான். இப்பொழுது திரும்பவும் அவர்களுக்கு ஆபத்து வரப்போகிறது என்றும் சொன்னான். உண்மையில் அன்று பின்மதியம் சிவி சங்கக் கட்டடத்திலிருந்த பிரம்மச்சாரிகளுக்கு, துருக்கியில் போக்குவரத்துப் பெரிதாக இருந்த நேரத்தில் பெரியதொரு பாலம் ஒன்று உடைந்து விழுந்து விட்டது என்று சொன்னான்.


இரண்டோ மூன்றோ மாதங்களின் பின் லூணா ப்ளாங் பாரம்பரிய இசைக்குழுக்களுக்கும் ஆசிரியர் கூட்டங்கள் பலவற்றுக்கும் கூட வருவதை நிறுத்திக் கொண்டாள். தலைமுடிக்கு செம்புச் சிவப்பு நிறச் சாயமும், உதடுகளுக்கு பிரகாசமான உதட்டுச்சாயமும் பூசிக்கொள்ள ஆரம்பித்தாள். சிலவேளைகளில் இரவுணவுக்கு வருவதையும் தவிர்த்தாள். சுக்கொத் விடுதலை நாட்களில் - யூத அறுவடை கால விடுதலை நாட்கள் - நகரத்தில் சில நாட்கள் தங்கிவிட்டு பக்கவாட்டில் நீளமாக வெட்டிய ஆடை அணிந்து கொண்டு திரும்பி வந்தாள். அந்த ஆடைகள் அவள் வயதுக்குச் சற்று அதிகப்படியானது என்றே நாம் எண்ணிக்கொண்டோம். இலையுதிர் கால ஆரம்பத்தில் அவளைச் சிலவேளைகளில் கண்டோம். பரந்த புல்தரையில் போட்டிருந்த இருக்கையில் அவளிலும் பார்க்க பத்து வயது குறைவான, வாரத்திற்கு இரண்டு முறை கிபுற்ஸிற்கு வரும் கூடைப் பந்து பயிற்சியாளருடன் குந்தியிருந்தாள். இரவில் தட்டித் தட்டிப் பழகப் பயிற்சி எடுக்கிறாளாக இருக்கும் என்று றொனி சின்ட்லின் சொன்னான். இரண்டோ மூன்றோ கிழமைகளின் பின் கூடைப் பந்து பயிற்சியாளனைக் கைவிட்டு கிபுற்ஸ்சின் முன்னோடி இளைஞர் பிரிவின் இருபத்திரண்டு வயதுள்ள தளபதியுடன் காணப்பட்டாள். அதை எவரும் கண்டும் காணாதது போல இருக்கவே முடியவில்லை. அதனால் கல்விக்குழு தொழில்சார் விளைவுகளை ஆலோசிப்பதற்காக எச்சரிக்கையுடன் கூடியது.

ஒவ்வொரு மாலையும் சிவி ப்றொசோர் தனிமையில், தன் கைகளாலே நிறுவிய அலங்கார நீரூற்று அருகிலுள்ள இருக்கையில் அசைவின்றி இருந்து கொண்டு புல்வெளியில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டிருப்பான். அவனைக் கடந்து சென்று அவனுக்கு மாலை வணக்கம் சொன்னால் மட்டுமே அவனும் மாலை வணக்கம் சொல்லி விட்டு, தென் கிழக்குச் சீனாவில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தைப் பற்றி துயரத்துடன் சொல்லுவான்.

அந்த இலையுதிர் காலத்தில் எந்தவித எச்சரிக்கையுமின்றி, கிபுற்ஸ் செயலகத்தின் அனுமதியுமின்றி லூணா ப்ளாங் தன் சகோதரியைப் பார்க்க அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டாள். சகோதரியே அவளுக்கான பயணச்சீட்டையும் அனுப்பியிருந்தாள். ஒருநாள் காலை பஸ் தரிப்பிடத்தில் துடுக்கான ஆடைகளும், பிரகாசமான நிறத்தில் கழுத்துத் துண்டு அணிந்து, உயர்ந்த குதிக்கால் காலணியில் தடுமாறிக் கொண்டு பெரியதொரு கைபெட்டியை கையில் இழுத்துக் கொண்டு நின்றாள். ‘ஹொலிவூட்டிற்காக ஏற்கெனவே ஆடை அணிந்துகொண்டு விட்டாளா? கறுப்பு விதவை மரண தேவதையிடமிருந்து ஓடிச் செல்கிறாளா?’ என்றான் றொனி சின்ட்லின். செயலகம் அவளுடைய கிபுற்ஸின் அங்கத்துவத்தை மேலும் விசாரணை நடத்துவதற்காக இடை நிறுத்தி வைக்கத் தீர்மானித்தது.

அதற்கிடையில், வீடு பற்றாக்குறை இருந்த போதும், வீட்டுக் குழுவின் சில அங்கத்தவர்கள் தங்கள் கண்களை அந்த வீட்டில் வைத்திருந்தபோதும் லூணா ப்ளாங்கின் அறை இருட்டில் பூட்டிக்கிடந்தது. ஐந்தோ ஆறோ சாதாரண வீட்டுச் செடிகள், படரும் கொடிகள், காட்டுச் செடிகள், கள்ளிகள் போன்ற சில சிறு மரங்கள் வீட்டின் சிறு முக மண்டபத்தில் இருந்தன. அவற்றுக்கு சிவி ப்றொவிசோர் நீர் விடவும் பாதுகாக்கவும் சிலவேளைகளில் செல்வான்.

அதன் பின் மாரி காலம் வந்தது. கீழிறிங்கிய முகில்கள் அலங்கார மரங்களின் மேல் பரவிக் கிடந்தன. தடித்த களி மண்ணால் வயல்களும் பழத்தோட்டங்களும் வரம்பு கட்டப்பட்டு நின்றன. பழம் பறிப் போரும் வயல்வேலை செய்வோரும் ஆலைகளில் வேலைக்குப் போனார்கள். சாம்பல் நிற மழை இடைவிடாது பெய்தது. இரவில் வடிகால் ஓடைகள் சத்தத்துடன் ஆடின. குளிர்காற்று தடுப்புக்களிலிருந்த வெடிப்புக்களால் உள்ளே நுழைந்தன. சிவி ப்றொவிசோர் ஒவ்வொரு இரவும் செய்திகளைக் கேட்பதற்காக விழித்திருந்தான். செய்திகள் கேட்ட பின் இடைவேளையில் மேசையில் தலையைக் குனிந்து கொண்டு, வாத்துக்கழுத்து விளக்கொளியில், ஐவொஸ்கிவிச்சின் வேதனைகள் நிரம்பிய நாவலின் சில வரிகளை ஹீப்றூ மொழிக்கு மொழியாக்கம் செய்வான். லூணா அவனுக்குக் கொடுத்த பென்சில் ஓவியம் - இரண்டு சைப்ரஸ் மரங்களும் ஒரு கிளையும் உள்ள அவனுடைய கட்டிலுக்கு மேல் தொங்கியது. அந்த மரங்கள் துக்கத்துடனும், கிளை வெறுமையாகவும் காட்சியளித்தன. இரவு பத்தரை மணிக்கு எதையாவது இடையில் சுற்றிக் கொண்டு முகில்களையும் கைவிடப்பட்ட கொங்கிறீற் பாதைகளையும் வீதி விளக்குகளின் மஞ்சள் ஒளியில் மினுமினுக்கும் ஈரத்தையும் பார்ப்பதற்காக தாழ்வாரத்தில் போய் நிற்பான். பெருமழைபெய்து இடையில் நின்ற போது லூணாவின் தாழ்வாரத்தில் உள்ள செடிகள் எப்படி இருக்கின்றன என்று சிறு நடை நடந்து சென்று பார்த்து வருவான். விழுந்து கொண்டிருக்கும் இலைகள் படிகளை ஏற்கெனவே நிரப்பியிருக்கும். பூட்டியிருக்கும் அறையிலிருந்து சவர்க்காரம் அல்லது ஷம்பூவிலிருந்து இலேசாக நறு மணம் கசிந்து மணக்கிறது என்று நினைத்துக் கொள்வான். வெறுமையான பாதை ஊடாக சற்றுநேரம் திரிவான். மரக்கிளைகளிலிருந்து மழைத்துளிகள் அவனுடைய மூடப்படாத தலையில் விழும். பின் தன் அறைக்குத் திரும்பி இருட்டில் கண்களை மூடிக்கொண்டு அன்றைய கடைசிச்செய்திகளைக் கேட்பான். ஒருநாள் அதிகாலையில் ஈரமான உறைந்த இருள் அனைத்தையும் மூடியிருக்கையில், பால் கறக்கச் சென்ற பால்காரன் ஒருத்தனை வழிமறித்து, ‘நீ கேள்விப்பட்டாயா? நோர்வேயின் அரசன் கடந்த இரவு இறந்துவிட்டான். கல்லீரலில் புற்றுநோய்,’ என்று சோகத்துடன் சொன்னான்.



mahalingam.k@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்திலிருந்து வெளிவரும்

# புதிய சொல்

கலை இலக்கியச் செயற்பாடுகளும் பதிப்பு முயற்சிகளும் வெறும் பண்பாட்டுச் செயற்பாடு மட்டுமல்ல.
அவை ஓர் இனத்தின் ஆன்மாவை உயிர்ப்புடன் வைத்திருப்பதுடன் இருப்பையும் உறுதிப்படுத்துவன
என்கிற நம்பிக்கையுடன் ஈழத்தவருக்கான தனித்துவமான கலை இலக்கிய வடிவங்களையும்
செல்நெறிகளையும் கண்டடையவேண்டும் என்றும்
அதற்கான தளங்களை உருவாக்கவேண்டும் என்ற முனைப்புடனும்
ஈழத்திலிருந்து புதிய சொல் இதழ் வெளிவருகின்றது.

## புதிய சொல் இதழ்களை கனடாவிலும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

தொலைபேசி 416-854-6768
மின்னஞ்சல்: **puthiyasol@gmail.com**
முகநூல்: **www.facebook.com/puthiyasol**

*வீடு வாங்க... விற்க...*
*உங்கள் பிரதிநிதி*

Residential • Commercial • Investment





Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future
Realty Inc. Brokerage

205 7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com

The spring market started early this year.
Are you thinking of selling?
Opportunity is knocking!
Call me today to get free home evaluation.

GET STAGED
GET SOLD
GET MORE $$$

ATTIC INSULATION
We also do Insulation Removal
Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space
SAVE Heating & Cooling Costs
PREVENT Roof Rot & Mold
Do Your Attic Insulation!!!
ENERecon Insulation 416-939-9353
416-847-7171
Stay Warm in Winter. Be Cool in Summer.

# JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

*"We provide reliable year around Tax and Accounting services."*

Starting from
$24.90 Plus tax

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுருக்கமான தென் இந்திய வரலாறு பிரச்சினைகளும் விளக்கங்களும்

## முகவுரை:

தென் இந்தியா பற்றிய நீலகண்ட சாஸ்திரியாரின் மிகச்சிறந்த வரலாற்று நூலான 'தென் இந்தியாவின் வரலாறு' (A History of South India) 1955ல் பதிப்பிக்கப்பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த நீலகண்ட சாஸ்திரியார் தென் இந்திய வரலாற்றை நிலைப்படுத்துவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். தான் ஒரு பிராமணர் என்ற முறையில் வட இந்திய மற்றும் சமஸ்கிரதப் பண்பாட்டின் தாக்கத்தை தென் இந்திய வரலாற்றில் வலியுறுத்தியுள்ளார். அவரது இந்தக் கருதுகோள் அந்நூலில் உள்ள குறைபாடு என்று நம்புகிறேன். தற்கால மற்றும் நவீனகாலப் பகுதிகளைத் தவிர்த்துவிட்டு, சங்ககாலம் மற்றும் விசயநகர அரசின் வீழ்ச்சி வரையிலான இடைக்காலப் பகுதிகளையே இந்நூல் கொண்டுள்ளது. இருந்த போதிலும், தென் இந்திய வரலாற்றுக்கான கல்வெட்டு மூலங்கள் உட்படச் சான்றுகளை ஆராய்வதில் முழுமையாகவும், மிக உன்னிப்பாகவும் இருந்துள்ளார். முன்னர் குறிப்பிட்ட ஒரு தலைச் சார்புடைய கோட்பாடுகளால் சிற்சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதைத் தவிர மற்ற இடங்களில் அவரது வாதங்கள் விவேகத்தோடு உள்ளன. ஆகவே, மிகச் சிறந்தது இந்நூல் என்பதும் சாஸ்திரிக்கு இணையாக இம்மாதிரியான மற்றொரு நூலை எழுதுவதற்கு யாரும் இல்லை என்பதும் தெளிவு.1

இதுபோன்ற ஒரு நூலை வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவது கடினமாக இருந்துள்ளமைக்கு வேறுபல காரணங்களும் உள்ளன. தமிழ்த் தேசிய இயக்கத்தின் வெளிப்பாடாக இருந்த திராவிட இயக்கம், 1960 களில், தென் இந்தியாவின் அரசியலிலும், கல்வியியலிலும் தீவிரமடைந்திருந்தது. தமிழ்த் தேசியவாதிகள் ஏற்காத கருத்துக்களை, அவை கல்வியியல் சார்புடையதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ள போதிலும் அவற்றைக் கடுமையாக எதிர்த்தனர். இதன் விளைவாக, தென் இந்திய வரலாற்றில் 1955 இலிருந்து, முக்கியமாக 1980க்குப் பிறகு வளர்ச்சி ஏற்பட்டபோதிலும், எந்த வரலாற்று ஆசிரியரும் இச்சவாலை எதிர்கொள்ளவில்லை. இருந்தபோதும், இம்மாதிரியான ஒரு நூலை எழுதுவது கடினம் என்று வரலாற்றியல் ஆய்வாளர்கள் கருதியதற்கு மற்றுமொரு காரணமாக வரலாற்று வரைவியல் கருதுகோள்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கலாம். ஐரோப்பாவில் பலகாலம் நிலவிவந்த முறையே 1950 வரை இந்தியாவிலும் பின்பற்றப்பட்டது. இவ்வகையில் மன்னர்களின் வம்சாவளிப் பட்டியலால் உருவாக்கப்பட்ட, மாறுபடும் அரசியல் வரலாறு அதன் முக்கிய கோட்பாடாக இருந்தது. ஆயினும், விடுதலைக்குப் பின்னர் மார்க்சிய வரலாற்றுக் கோட்பாடுகளால் வரலாற்றியல் ஆய்வாளர்கள் ஈர்க்கப்பட்டனர். வரலாற்று வரைவியலில் புதிய போக்குகள் 1960 களிலும் அதன் பின்னரும் தோன்றின. ஐரோப்பாவில் அன்னலிஸ் கோட்பாடுகள் (Annales School) மேலோங்கத் தொடங்கின. அடிப்படைத் திட்ட ஆய்வுகள் நீண்டகாலப் பிரச்சினைகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டனர். இந்தியாவில் கீழ்த்தட்டு மக்களைப் பற்றிய ஆய்வுகள்(Subaltern Studies) மேலோங்கி, ஆள்பவர்களைத் தவிர்த்து ஆளப்படுவோர் பற்றிய ஆய்வுகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. சோவியத் கூட்டாட்சி, 1993ல் வீழ்ச்சியுற்ற பின்னர் மார்க்சியக் கோட்பாடுகள் தம் பொலிவை இழந்தன. இந்நூற்றாண்டின் இறுதியில் பின்நவீனத்துவக்கல்வியியலில் ஏற்பட்ட புயலில் மொழியியலாளர் எனப்படுவோர் வரலாற்று வரைவியலைக் கடுமையாகச் சாடினர் (Clark 2004). ஜீன் பிராங்கோ லியோடார்ட் (Jean - Francois Lyotard) என்பார் 'பெருங்கதை விளக்கங்கள்'க்கு சாவு மணி அடித்தார் (Lyotard 1984). எனவே இக்கால கட்ட வரலாற்று வரைவியலில் நூல் எழுதுவது மிகச்சிரமமாயிற்று.

பொதுவாகவே வரலாற்று நூல் எழுதுவ-தென்பது மிகச் சிரமமானது. சாஸ்திரியின் நூல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தொல்லியல் சான்றுகளின் புதுக்கண்டு பிடிப்புகளோடு, புதிய கோட்பாடுகளும் விமரிசனங்களும் வெளியிடப்பட்டன. இவற்றில் சில சர்ச்சைகளால் சூழப்பட்டன என்




றாலும் பல இச்சர்ச்சைகளில் சிக்கவில்லை. இருந்தபோதிலும் தென் இந்திய வரலாற்றின் தற்காலப் போக்கினை அனைவரும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக எல்லாக் கருத்துக்களையும் இந்நூலில் நான் அளித்துள்ளேன். மிக முக்கியமாக சாஸ்திரியாரின் நூலில் விடுபட்ட நவீனகால மற்றும் இக்கால வரலாறுகளையும் நான் சேர்த்துள்ளேன், இப் பேராசையின் பயனாக இந்நூலின் அளவு பெரிதாகியுள்ளது, இதனால் தனியொருவனாக இந்நூலை வடிவமைக்க இயலவில்லை. எனவே, நவீன காலத்திற்கு முந்தைய தென் இந்தியா வரலாற்று ஆய்வில் நீண்டகாலமாக என்னுடன் ஈடுபட்டுள்ள எ. சுப்பராயலு, ப. சண்முகம் ஆகியோருடனும், தோக்கியோ பல்கலைக்கழகத்தில் பயின்ற, என்னுடைய மாணவர்களாயிருந்து நவீனகாலத் தென் இந்திய வரலாற்றை ஆய்வு செய்தவர்களுமான சுகாசு மிஜு"ஷிமா மற்றும் பல மாணவர்களது உதவியை நாடிப் பெற்றுள்ளேன். மேலும் என்னுடைய நண்பர்களான ஹருகா யனாகிசவா, பார்வதி மேனன், ஹிரோஷி யமஷிதா மற்றும் மகாலட்சுமி ஆகிய ஆய்வாளர்களும் வெகுவாக தங்கள் பங்களிப்பை அளித்துத் துணைபுரிந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நான் மிகுந்த கடமைப்பட்டுள்ளேன். முக்கியமாக, சுப்பராயலு, மிஜு"ஷிமா ஆகியோர் இந்நூலைப் பதிப்பிப்பதிலும் மிகுந்த துணை புரிந்துள்ளனர். சுப்பராயலு, 13 புதிய நிலப் படங்களை வரைந்தும். காலமுறைப் பட்டியல்களையும், அரசகுல வேந்தர் பட்டியல்களையும் உருவாக்கித் தந்துள்ளார். இவர்கள் அனைவருக்கும் நான் நன்றியுடையவனாவேன்.

இந்தியா வரலாற்றில் காலப்பகுப்பு பிரச்சினைக்குரியது, (Singh 2011:1) பழங்காலம், இடைக்காலம், நவீனகாலம் மற்றும் தற்காலம் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதாரணமான காலப் பகுப்பிலும் கூட ஒவ்வொரு கால கட்டத்தின் பண்புகள் மற்றும் கால வரையறையைத் தீர்மானிக்கின்ற வகையில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. தென் இந்திய வரலாற்றைப் பல கால கட்டங்களாக வகுத்து, அவற்றுள் அரசியல், சமுதாய - பொருளியல், பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட உட்பிரிவுகளாக இந்நூலைப் பிரித்துள்ளேன. இவ்வுட் பிரிவுகள் ஒவ்வொரு காலத்திற்குமாக ஆக்கப்பட்டுள்ளன.

தென் இந்தியாவை அடையாளம் காணவும் அதன் நிலப்பரப்பைத் தீர்மானிக்கவும், நிலப்பரப்பு அடிப்படையில் அதன் பரப்பு எல்லைகளை வரையறுக்க வேண்டும், விந்திய மலைக்குத் தெற்கேயிருந்து இந்தியத் துணைக் கண்டத்தின் தென்முனை வரையிலான இப்பகுதி வடமொழி இலக்கியங்களில் தட்சிணாபதம் (Dakshina-pada)என்று அழைக்கப்பட்டுள்ளது, மகாராஷ்டிரம், சத்தீஸ்கர், ஒடிசா மாநிலங்களின் சில பகுதிகளையும் இப்பகுதியில் அடக்கலாம். இருந்தபோதும் இப்பகுதியை மொழியியல் அடிப்படையில் நிர்ணயம் செய்தோமாகில் திராவிட மொழிகள் பேசும் மாநிலங்களான கர்நாடகம், தெலுங்கானா(2), ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளா ஆகியவை அடங்கும். ஆரிய மொழிகள் பேசும் பகுதிகளோடு ஒப்பிட்டால் இந்த ஐந்து திராவிட மாநிலங்கள் தனித்த அடையாளமுள்ள பண்பாட்டுக் கூறுகளைக் காட்டுகின்றன, தென் இந்தியப் பண்பாட்டுக் கூறுகளை உருவாக்குவதற்கு, ஆரிய மொழிகளைப் பேசும் விந்திய மலைக்கு அருகே உள்ள பகுதிகளும் வரலாற்றின் நீண்டபோக்கில் பெரும்பங்காற்றியுள்ளன.

மேலும் குறைந்தபட்சம் தற்காலத்தில் திராவிட மொழிகளைப் பேசும் பகுதிகளை மட்டும் எடுத்துக்கொண்டாலும் கூட தென் இந்தியா ஒரே தன்மையும், ஒரு சார்பையும் கொண்டதல்ல. மொழிக் குடும்பங்களிலும் வட்டாரப் பண்பாடுகளிலும் மாற்றமுள்ள மக்களைக் கொண்டது. உதாரணமாக, தமிழ், கன்னட, தெலுங்கு மக்களுக்கு இடையே ஆரியர் சமூகம், பண்பாடு பற்றி வேறுபட்ட கருத்துக்களை நாம் காணலாம் (3). தவிரவும் தென் இந்திய மக்களுக்கிடையேயும் சமூக மற்றும் வர்க்க வேறுபாடுகள் இயல்பிலேயே உள்ளன. வரலாற்று ஆசிரியர்களிடையேயும் அவரவர் ஆய்வு நிலைகளுக்கேற்ப வேறுபாடுகளும் நிலவுகின்றன.

எனவே இம்மாதிரியான ஒரு வரலாற்று நூல், எல்லா வாசகர்களையும் திருப்திப் படுத்த இயலாது. இதற்கு மாற்றாக பழம் சர்ச்சைகளை மீண்டும் துவக்கி புதியவைகளுக்கு வழி வகுக்கும் பெரும் விவாதங்களை இந்நூல் உருவாக்கிடும் என்பது திண்ணம். இவ்வகை விவாதங்கள் தென் இந்திய வரலாற்றை ஆய்வதற்கு உரிய ஆரோக்கியமானவை என்று நான் வரவேற்கிறேன். இந்நூல் தென் இந்திய வரலாறுகள் பல எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருக்குமெனில் நான் மிகவும் மகிழ்வேன்.

- 1. இந்நூலின் முக்கியத்துவத்தைக் கருதி, இந்தியாவில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழக அச்சகம் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது. (Sastri 2009). இப்பதிப்பில் இரா. சம்பகலட்சுமி முன்னுரையும், ராஜன் குருக்கள் பின்னுரையும் எழுதியுள்ளனர்.
- 2. ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு 2014. ஜுன் 2ம் நாள் 29வது மாநி-லமாக தெலுங்கானா உருவாக்கப்பட்டது. நூலின் முன்னுள்ள நிலப்படத்தில் இப்பிரிவினை காட்டப் பட்டுள்ளபோதும், குறுகிய கால எல்லைக்குள் இம்மாற்றத்தை இந்நூலில் கொண்டு வர இயலவில்லை. எனவே இயல்களில் காணப்படும் ஆந்திரப்பிரதேசம் என்ற பகுதியை 1956 இலிருந்து பிரிவினை ஏற்பட்ட மேலே குறித்த காலவரையரைக்குட்பட்ட பகுதியாகவே கருத வேண்டும். இம்மாற்றம் பற்றிய விரிவான தகவல்களுக்குப் பகுதி 8.2.1ஐப் பார்க்கவும்.
- 3. இவ்வேறுபாடுகளை அறிய 8.2.1 பகுதியைப் பார்க்கவும்.

***உசாத்துணை:***


- *Clark, Elizabeth A. 2004. History, Theory and Text: u;istorians and the Linguistic Turn. Cambridge: Harvard University Press.*
- *Lyotard, Jean - Francois. 1984 (1979). The Postmodern Condition: A Report on knowledge. Trans. Geoffrey Bennington and Brain Massumi. Minneapolis: University of Minnesota Press (La Condition postmoderne: Rapport sur le savoir. Pairs: Editions de Minuit, 1979).*
- *Sastri, K.A. Nilakanta 2009. The Illustrated u;istory of South India: From Prehistory to the Fall of Vijayanagar, with an Introduction by R. Champakalakshmi and an Epilogue by Rajan Gurukkal. New Delhi: Oxford University Press.*
- *Singh, Upinder. 2011. Rethinking Early Medieval India. New Delhi: Oxford University Press.*


■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவுலகின் ஓசைகள்



**- பா. அகிலன்:**


யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் கலை வரலாற்றைக் கற்பிக்குமிவர் கவிஞராக எழுத்துத் துறையில் பிரவேசித்தவர். இவரின் கவிதை, கட்டுரைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. சில நூல்களின் இணைத் தொகுப்பாசிரியராகவும் பணியாற்றி உள்ளார். 'காலத்தின் விளிம்பு: யாழ்ப்பாணத்தின் மரபுரிமையும் அவற்றைப் பாதுகாத்தலும்', 'அம்மை' ஆகியவை அவரது அண்மைய நூல்களாகும்.

**மாதம் சில நூல்கள்:**

**தாம் வாசித்தவற்றில் நல்ல நூல்கள் என்று தென்பட்டவற்றை, வாசகர்களும் படிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில், வாசித்தோர் தாம் நேசிக்கும் நூல்களைப் பகிர்ந்து கொள்ளும் தளம் இது.**

**Early Settlements in Jaffna**
**கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி**
**வெளியீடு: க்ரியா. சென்னை**
**ஆண்டு: 1987**


1983ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வை அடியொற்றிய இந்நூலானது, மிகச் சில தொல்லியல் ஆய்வுகளே யாழ்ப்பாணத்தில் அப்போது நிகழ்ந்து முடிந்திருந்தவொரு காலகட்டத்தில் வெளிவந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சிலவற்றின் முடிவுகளும் வெளிவராதவொரு நிலையில் வெளிவந்த முன்னோடி நூலாகும் என்பதுடன், தமிழர் வரலாற்றை மிகப் பிற்பட்ட காலகட்டத்திற்குரியதாக கூறி வந்த பேரினவாத எடுத்துரைப்புக்களுக்கு மத்தியில் பரந்துபட்ட தளத்தில் யாழ்ப்பாண வரலாற்றை தொல்பொருள் மூலாதாரங்களை அடிப்படையாக வைத்து முதலில் எடுத்துக்கூறிய நூலுமாகும். அடிப்படையில் பன்மைத்தன்மையுடைய இதன் முறையியல் ஒரு அகழ்வாய்வு நோக்கு என்பதைத் தாண்டிய சமூக பண்பாட்டுப் புலமைப் பிரதியாக மேற்படி ஆய்வை மாற்றியுள்ளது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் நிலவுரு அமைவுகள், சூழலியலம்சங்கள், குடியேற்ற முறைகள் - கால கட்டங்கள், அவற்றின் அமைவிடங்கள், பண்டைய தொடர்பாடல் வலையமைப்பு, பொருள்சார் கோல அமைவுகள், இடப் பெயர்கள், சாதி. மதம் - வழிபாடு என அது விரித்துள்ள யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய பல விடயங்கள் யாழ்ப்பாணத்தை ஏனைய இடங்களிலிருந்து வேறுபட்ட, தனித்துவம் மிக்க ஓரலகாகக் காண்கிறது. ஆசிரியரது அகன்று ஆழ்ந்த புலமை வீச்சு




இந்நூலில் திறந்துவிட்ட பல துறைசார் ஆய்வுகளுக்கான பாதைகள் பின் வந்தவர்களால் தொடரப்படாமல் காடு மண்டியுள்ளது என்பது மிகப்பெரிய கவலையை அளிக்கிறது.

**மெய்யுள்**
**மு.தளைசிங்கம்**
**வெளியீடு: சமுதாயம் பிரசுராலயம் கோவை**
**ஆண்டு: 1985**


1974ல் மு.தவின் மறைவுக்குப் பின் இந் நூல் வெளிவந்தது. 'பூரண இலக்கியமும் அதன் தேவைகளும்', 'மெய்யும் உள்ளும் மெய்', 'புதுயுகமும் அது நோக்கிய மாற்றங்களும்', 'வர்க்கவியலும் குணவியலும்', 'பரிணாமம் - தூக்கம், கனவு, விழிப்பு, துரியநிலைகள்', 'கலப்புவலயம்', 'மெய் முதல்வாதம்', 'ஒளிபடைத்த கண்ணினாய்', 'நான் நாகரிகத்தின் வீழ்ச்சியும், நாம் நாகரிகத்தின் எழுச்சியும்', 'வந்துவிட்டது சத்திய யுகம் விழித்தெழுங்கள்', 'அண்டை வீடுகள்' முதலான பதினொரு அத்தியாயங்களையுடைய மேற்படி நூல் கலை, இலக்கியம், மெய்யியல், இறையியல், உளவியல், மார்க்சியம், அறிவியல் எனப் பலதுறைகள் ஊடாக நுழைந்து நிறுவனமயப்பட்ட அனைத்தையும், அவற்றின் பாரம்பரிய எடுத்துரைப்புக்களையும் கேள்விக்குள்ளாக்கி, அவற்றினைப்புதிய கண் கொண்டு பார்க்கிறது. 'மெய்யுள்' என்பதைக் கலையை அழிக்கும் ஒரு கலையாக அவர் அறிமுகஞ் செய்கிறார். அதாவது பழைய கலைவெளிப்பாட்டு உருவங்களை அழிப்பதும், அவற்றைக் கலப்பதும், அவற்றையெல்லாம் கடந்து செல்வதுமான ஒன்றாக அவரால் கூறப்படும் மெய்யுளானது தத்துவ, சரித்திர, விஞ்ஞான உருவங்களாகவும், சமூக, பொருளாதார, அரசியல், ஆத்மீக மெய் வாழ்க்கை அனுபவங்களாயும் அமையும் அதேவேளை, கலை வெளிப்பாட்டின் கற்பனைத் தளங்களை தகர்த்து,




நித்திய சத்தியம் நோக்கிய ஊடுருவலாகவும் அமையவேண்டும் என்கிறார். அவ்வகையில் கலையானது வாழ்க்கையில் இருந்து வேறுபட்ட ஒன்றல்ல எனவும், அதுவே பெருங்கலை இயக்கமெனவும் வாதிடுகிறார். 1960களில் உலகிலேற்பட்ட மாற்றுச் சிந்தனைகளுக்குச் சமாந்தரமான எண்ணவீச்சுக்களை தமிழில் சுயமாகப்பிரதிபலித்த ஒருவராகக் காணப்படும் மு.த அவர்கள், அவரை கூர்மையாக அவதானித்த பலரும் கூறுவது போல 20ம் நூற்றாண்டுத் தமிழின் மாபெரும் ஆளுமைகளுட் தலையாயவர்.

**புதுமெய் கவிதைகள்**
**தா. இராமலிங்கம்**
**ஆண்டு 1964**

கவிதைகளுக்கூடாக எமக்குத் தெரியவரும் தா. இராமலிங்கம் ஒரு கிளர்ச்சிக்காரர். குறிப்பாக 1960களில் யாழ்ப்பாண சமூகத்தில் மேலாதிக்கஞ் செலுத்திக் கொண்டிருந்த கருத்து நிலைகளுக்கு எதிர்ப்புறத்தில் அவரது கவிதைகள் இருந்தன. அடிப்படையில் எந்தவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிர்ப்புறத்தில் இருத்தல், முடிவற்ற விடுதலை வேட்கை என்ற அவரது அடிப்படைக்கருத்துநிலை அவரது எழுத்து வெளியில் சாதியம், ஆணாதிக்க சமூகக் கருத்தியல் என்பன மீதான விமர்சனங்களாக அடிப்படையில் இருந்தன. அதே சமயம் அவரது கவிதைகளின் ஊற்றுக் கண் காமம், ஆத்மார்த்தம் என்ற பிரிபட முடியாத இருபெரும் உணர்வுப் பெருக்கோடு இறுக்கமாய்க் கட்டப்பட்டுள்ளது. அவரது பெண்கள் வலியவர்கள். வலிமை மிக்க ஆணுடலின் கீழ் பெண்ணுடலை தாழ்வுடையதாகக் காட்டும் ஆண் முதன்மைச் சிந்தாந்தப் பாரம்பரியத்தில் பெண்ணுடலை வலிமையுடையதாக்கி ஆணுடலை தாழ்வுச் சிக்கலுக்குள்ளாக்குமவர், அடிப்படையில் எந்தவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிர்ப்புறத்தில் இருத்தல், முடிவற்ற விடுதலைவேட்கை என்ற அவரது அடிப்படை இயல்பினை அவரது, தமிழ் இனக்குழும விடுதலை கவிதைகள் தொடக்




கம் ஆழ உள்ளோடிச் செல்லும் ஆன்மீக விடுதலை நாட்டம் வரை காணலாம். விட்டு விடுதலையாதலின் பேரெல்லையாய் அவர் அதனைதான் கண்டாரெனவும் வாதிக்க முடியும் சாதாரணமான புழங்கு மொழியை, கட்டும் முறையினால் தா. இராமலிங்கம் உருவாக்கும் அசாதாரணத்துவம், ஈழத்துக் கவிதையின் மொழியை ஒரு புதிய திசையை நோக்கித் திறந்து விடுகிறது. இப்பின்னணியில் நின்று தா. இராமலிங்கத்தின் மேற்படி தொகுப்பை இன்று பார்க்கும்போது நவீனத்துவத்தை வெறும் வடிவச் சங்கதியாக அல்லாமல், அதனை ஒரு மனோநிலையாக ஈழக்கவிதைகளில் முதலில் உட்கொண்டிருப்பது இராமலிங்கத்தின் கவிதைகளே எனக் கூறத்தோன்றுகிறது.

**மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள்**
**ஏ.ஜே. கனகரட்ணா**
**வெளியீடு: அலை வெளியீடு**
**ஆண்டு 1981**

மேற்படிநூல் 'The Novel and revolution' (Alan Swingewood / 1975), Socialist realism and Literary theory (Gary Saul Morsan / 1979), Form, Content, Marxist criticism (Reggie Sriwardene / 1980-81) ஆகிய ஆங்கிலக்கட்டுரைகளின் நேரடியான அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் மொழியாக்கமாயும், நூலாசிரியரால் எழுதப்பட்ட சுய ஆக்கமொன்றுடையதாகவும் காணப்படுகிறது. குறிப்பாக 'அதிகாரி, ஆட்சி, சோசலிசம்' எனும் தலைப்பிலான முதற்கட்டுரை, கலை தொடர்பான லெனினிடம் காணப்பட்ட யதார்த்தவாதச் சாய்வையும், அவர் எவ்வாறு நவவேட்கைவாதக் கலை வெளிப்பாடுகள் மீதான தரக்குறைவான பார்வையைக் கொண்டிருந்தார் என்பதிற் தொடங்கி, அது எவ்வாறு நவீனவாதம் தொடர்பான லெனினிசப் பார்வையை நிர்ணயிக்கும் ஒன்றாகியது என்பது வரை விவாதிக்கிறது. முடிவாகச் சோசலிச யதார்த்தவாதம் பெறுகிற முன்னுரிமை வரை நகரும் இந்த நீண்ட கட்டுரை கலையாக்கம் - வெளிப்பாடு என்பன மீதான கட்சி சார்ந்த சர்வாதிகாரம் 'சோவியத் இலக்கியத்தின் மீது காரிருளாகக் கவிந்தது'




எனக் கூறி முடிவுக்கு வருகிறது. 'சோசலிச யதார்த்தவாதமும் இலக்கியக் கோட்பாடும்' எனுமிரண்டாம் கட்டுரை சோசலிச யதார்த்தவாதத்தின் சூத்திரப்பாங்கைக் கேள்விக்குள்ளாக்கி கலை - பண்பாடு - வெளிப்பாடு என்பனவற்றின் இயல்புகள் தொடர்பான மீள் வாசிப்பை வற்புறுத்துகிறது. மூன்றாங் கட்டுரையான 'உருவம், உள்ளடக்கம், மார்க்சிய விமர்சனம்' - பாரம்பரிய மார்க்சியத்தின் உள்ளடக்க முதன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இறுதிக்கட்டுரையான 'மார்க்சியமும் இலக்கியமும்' மார்க்சியத்தின் அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் தொடர்பான பாரம்பரிய நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அவ்வகையில் பண்டித மார்க்சியத்தைக் கேள்விக்குள்ளாக்குவதும், அதனூடாக நவமார்க்சியப் போக்குகளை தமிழுக்குத் தந்த முன்னோடி எழுத்துக்களின் தொகுதியாகவும் இந்நூல் அமைகிறது.

**அக்கா**
**அ. முத்துலிங்கம்**
**ஆண்டு: 1964**

அ. முத்துலிங்கம் அவர்களது முதற் சிறுகதைத் தொகுப்பு. 1958-1961 வரை எழுதிய 11 கதைகளாலானது. இக்கதைகள் 1950களின் முன்னான பின்னான காலகட்டத்து யாழ்ப்பாணத்தின் சமூக வாழ்வின் சித்திரங்களாலானவை. அ. முத்துலிங்கத்தின் சிறு பராய நினைவுகளால் நெய்யப்பட்



டுள்ள இக்கதைகள் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கொக்குவில், கோண்டாவில், இணுவில் ஆகிய கிராமங்களைப் பகைப் புலமாகக்கொண்டவை. விவசாயம், புகை

தொடர்தல் 93ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92ம் பக்கத் தொடர்ச்சி...

யிலை வர்த்தக வாழ்க்கைப்பின்னணி மற்றும் கல்வி - பொருளாதார நிலை மாற்றங்கள் என்பவற்றுக்கு உள்ளாகும் மத்தியதர வர்க்கங்களின் கிராமிய வாழ்க்கை நிலபரங்களின் சாட்சியங்களாக நிலைபெறும் இக்கதைகள் பிரதேசத்துவம் - மண்வாசனை நிரம்பப் பெற்று யாழ்ப்பாணப் பண்பாட்டுக் கோல அமைவின் நுட்பமான உட்புலங்களூடாக இயல்பாகப் பயணஞ்செய்கின்றன. எந்தப் பிரகடனங்களையும் - சுலோகங்களையும் உச்சரிக்காத அவை சமூகத்தின் அதிகார அடுக்குமுறை, நம்பிக்கைகள், வழக்காறுகள் என்பனவற்றைக் கோடி காட்டி மனித உணர்ச்சிப் பெருக்கின் முன்னால் அனைத்து மனிதரும் வறியராகப் போய்விடுவதன் சாட்சியங்களாகி, வாழ்க்கையெனும் பெருநாடகத்தை இடைவிடாமல் நடத்தியபடியே உள்ளன. இக்கதைகளிற் தொழிற்படும் அவரது மொழியும், மொழிதலும் அவரையும் அவரது அக்காவையும் சிறுகதை வரலாற்றுப்புலத்தில் மிக முக்கியமான இடத்திற்கு எடுத்துச் செல்கின்றன. அவற்றில் யாழ்ப்பாண மொழி வழக்காறு இலக்கியச் செழுமையுடையதாகிப் பிரயோகமாகிறது. இச் சிறுகதைத் தொகுப்பு எமக்குக் காட்டும் முத்துலிங்கம் அவர்களை என்றுமே எமது நினைவுகளிலிருந்து வெளியெடுக்க முடியாது.

**தமிழில் இலக்கிய வரலாறு**
**கா. சிவத்தம்பி**
**வெளியீடு:நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்**
**ஆண்டு: 1988/ 1998/ 2000**

இந்த நூலின் மூலவடிவம் Literary history in Tamil - A histriographical analysis எனும் தலைப்பில் 1982ல் ஆங்கிலத்தில்




எழுதப்பட்டு 1986ல் வெளிவந்தது. அதன் தொடர் வடிவமே 'தமிழில் இலக்கிய வரலாறு' ஆயிற்று. தமிழில் இலக்கிய வரலாறு எழுதுதலுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டாயினும், அவ்வரலாற்று எழுத்துக்களின் வரலாற்றை வாசிக்கும் முறை என்று நோக்கும்போது தமிழில் அவ்வகைப்பட்ட முதன் முயற்சியாக இந்நூலே அமைகிறது எனலாம். 'இலக்கிய வரலாறு எனும் பயில்துறை, அதன் புலமைப் பரப்புப் பற்றிய சுருக்க அறிமுகம்', தமிழிலக்கிய வரலாற்றின் வளர்ச்சி. தமிழிலக்கிய வரலாற்றில் பிரச்சினை மையங்கள் தமிழிலக்கிய வளர்ச்சியைப் பார்க்கும் முறை: கால வகுப்புப் பிரச்சினைகள்' எனும் அத்தியாயங்களையுடைய இந்நூல் மார்க்சிய - நவமார்க்சிய அடித்தளத்தினை அடிப்படையாகக் கொண்டது. வரலாறு என்பதைக் கட்டமைப்புக்களாகவும் அவை தமக்கான ஒரு கருத்துநிலை அடித்தளத்தை உடையனவென்பதையும், அது தான் சார்ந்த சமூக பொருளாதார உற்பத்தியுறவுகள் சார்பானதாகவும் கொள்ளும் இந்நூல் 1960களுக்குப் பிற்பட்ட அர்த்தம் அதிகாரம் பால்நிலை சம்மந்தப்பட்ட சிந்தனைகளையும் உட்செரிக்க முனைந்துள்ளது. அவ்வகையில் தமிழிலக்கிய வரலாறுகளின் அடியோட்டங்களாக அமையும் கருத்துநிலைகளையும், அவை எவ்விதம் அவற்றைக் காலந்தோறும் கட்டமைத்துள்ளன என்பதையும் விரிவாக வாதத்திற்குட்படுத்தும் இந்நூல் வரலாற்று எழுத்தின் அரசியல் பற்றி வாசிப்பதற்கும், வரலாற்றை உடைத்துப் பகுப்பாய்வதற்குமான சிந்தனைகளைத் தமிழுக்கு அறிமுகஞ் செய்த முன்னோடி நூல்களுள் ஒன்றெனலாம்.

**பலஸ்தீனக் கவிதைகள்**
**தொகுப்பு எம். ஏ நுஃமான்.**
**வெளியீடு: வாசு வெளியீடு கல்முனை**
**ஆண்டு: 1981**


முஹமத் தர்வீஸ் தொடக்கம் முயின் பசைசோ வரையான 09 பலஸ்தீனக் கவிஞர்களின் 30 கவிதைகளுடைய இந்த நூலை நுஃமான் மற்றும் முருகையன் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர். பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரி



வித்தலை முதன்மை நோக்காகக் கொண்டு இந்நூல் வெளியிடப்படுவதாக அதன் முன் னுரையில் நுஃமான். கூறியுள்ளார். ஈழத்துக்கு நீண்ட மொழியாக்கப் பாரம்பரியம் உண்டாயினும் மேற்படி நூலது தமிழ்நிலையாக்கம் பிற பண்பாடொன்றின் பிரதி என்பதைத் தாண்டி அதனை தமிழ்வயப்படுத்தியுள்ளது என்பதுடன், அதன் கருப்பொருளைச் சொல்லுடலை மட்டுமின்றி அதன் ஒலியுடலைத் தொனிநிலைகளையும் சேர்த்தே கைப்பற்றி உள்ளது என்பது அதன் சிறப்பாகும். அராபியிலிருந்து ஆங்கிலத்துக்குப் போய் அங்கிருந்து தமிழுக்கு வந்த ஒரு மொழியாக்கம் எனும் வகையில் இது வியப்பூட்டும் ஓரம்சமுமாகும். ஏதிர்ப்பிலக்கியமாக அடக்குமுறைக்கு எதிரான பெருங்கலக் குரலை வெற்றுப் பிரச்சார மாகவன்றி தாக்கவலுவுடைய சொற்கள் கொண்டு மேற்படி கவிதைகள் முடைந்துள்ளன என்பதுடன், அவை அதிகம் வாய்மொழி ஆற்றுகை நிலைப்பட்ட எடுத்துரைப்பை கவிதைகளிற் பேணுவதையும் அவதானிக்க முடியும். 'ஓ பெரிய தேசமே / ஓ ஆழ்ந்த காயமே / தனிப்பெருங் காதலே' என பத்வா துவான் தேசம் மீது கொள்ளும் உறவுறவு நூல் முழுவதும் விரவிச் செறிந்துள்ளது. இக்கவிதைகளூடாக இலக்கியத்தித் தேசம் என்பது கட்டப்படும் முறைமை நினைவுகள் தொழிற்படும் முறைமைகள் எனப் பல தள வாசிப்புக்களுக் கான களங்களைத் திறக்கின்றன. இன்று திரும்பி 1980களின் ஈழத் தமிழ் கவிதைகளை பார்க்கும்போது இம்மொழியாக்கத்தின் தாக்கத்தனை மேலும் புரிந்துகொள்ளலாம்.

**The Evolution of an Ethnic Identity**
**K. Indrabala**
**Kumaran Books house**
**2007**


Peopling of the region, the early Iron Age: The beginnings of civilizations, Aryan and Dravidian, Ila and Dameda, The early historic period, Hela and Demela, The period of consolidation. The final phase ஆகிய 08 அத்தியாயங்களையுடைய மேற்படி நூல் இலங்கையின் சிங்கள - தமிழ் ஜனரஞ்சக வரலாற்று எழுத்துக்களிற் காணப்படும் காலனியகால இனச் (race) சட்டகத்திற்குப்




பதிலாக இனக்குழுமச் (ethnic) சட்டகத்தை முன்னிறுத்துகிறது அத்துடன் இலங்கையின் தொல்லியலாய்வுகள் பேரினவாதக் கதையாடல்களுக்கு ஏற்ப திரிக்கப்படுவதை எடுத்துகாட்டி DNA பரிசோதனைகளது முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அத்துடன் சிங்களமும், தமிழும் இலங்கையில் பேசப்படுவதற்கு முன்னர் வேறு இடைக்கற்கால மொழிகள் வழக்கில் இருந்தற்கான சாத்தியங்களைக் கூறுமவர் கல்வெட்டுக்களிற் காணப்படும் அவ்வகைச் சொற்களின் மூலங்களை தேடாமல் நிகழும் முற்கற்பித மொழி முடிவுகள் பற்றிப் பேசி, தாய் மொழி மாற்றம் என்ற எண்ணகருவை அழுத்துகிறார். அவற்றின் பின்னணியில் 'இலங்கை' என்ற சொல்லே ஒரு முண்டா மொழிச் சொல்தான் எனக் கூறுகிறார். மேலும் இலங்கையின் பெருமதங்கள் பற்றிய பல எடுத்துரைப்புகள், அடிப்படையில் அரசியற் புராணகிதத்தன்மை கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுமவர். குறிப்பாக இலங்கை வரலாற்றில் தமிழக நீக்கம் என்றவொரு விடயம் ஒரு தொடர் செயற்பாடாகவிருப்பினும், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட கடல் ஒரு இணைக்கும் கடல் என எடுத்துக்காட்டுகிறார். சுருக்கமாக தேசியவாத வரலாற்று எழுத்தியலை குழப்பும் இந்நூல் வரலாறு பற்றிப் புதிதாகச் சிந்திப்பதற்கான பல வாயில்களைத் திறக்கிறது.

**The Incomplete Thombu**
**T. Shanaathanan**
**Raking Leaves**
**2011**


படைப்பாளியின் புத்தகம் அல்லது புத்தகக் கலை (Artist book /Book art) எனும்




சமகாலக் காண்பியக் கலைப்பயில்வு வடிவமொன்றினூடாக வெளிப்படுத்தப்பட்ட இந்நூல் ஒரு யுத்தகால இடப்பெயர்வுகளின் ஞாபகப்பேரேடாக அமைகிறது. 1983 முதல் 2009 வரை ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட பன்மை இடப்பெயர்வுகளின் வலிகளையும், காயங்களையும் பதிவிடும் இந்நூல் இடப்பெயர்வு நினைவுகளின் மையமாக வீடுகளை இனங்காண்பதுடன், அதனையே நூலின் பிரதான கருப்பொருளாகவும், கருத்தாடற் களமாகவும் மாற்றுகின்றது. அவ்வகையில் 'ஆசிரியர்' அல்லது படைப்பாளியை முன்வைத்து தமது வீட்டை - வீடு சார்ந்த நினைவுகளைப் அவரோடு பகிருபவர்கள் தமது கைபட வரைந்த தத்தமது கைவிடப்பட்ட அல்லது அழிந்த அல்லது அழிக்கப்பட்ட வீடுகளின் தளப் படத்தையும், அதையொட்டிய கதைகளையும் அதனொரு பகுதியாக, மேற்படி வரைதலின் கட்டடக்கலை நியமவழிப்பட்ட மறுவரைகளும், அவை மீதான சனாதனனின் எதிர்வினைகளான உலர் பஸ்ரல் வரைபுகளும் அதன் மறுபகுதியாகின்றன. இந்த வீடுகள் தமிழ் வரலாற்றின் பல்வேறுபட்ட சமூக பொருளாதார வரலாற்றுப் பண்பாட்டு விடயங்களையும் ஒருங்கே கொண்டுள்ளனவாயினும் இழத்தலின் காரணமான மனக்காயம் அவற்றை மேவி அவற்றின் மீது படர்துள்ளன. சனாதனன் தன்னுடைய வலிமை மிகுந்த எதிர்வினை வரைபுகளால் அவற்றை இழப்பின் பன்மை உணர்வுப் பலமாகவும் மென் எதிர்ப்புக் களமாகவும் மாற்றுகிறார். அதேநேரம் அவை இன்னொரு வகையில் பன்மைத் தன்மையுடைய கூட்டுக்குரல்களது, தொகுப்பட்ட ஞாபகங்களது வெளிப்பாடாகியுள்ளன. வரலாற்றின் பெருங்கதையாடல்கள் முன்பதாக மறைந்து போகும் பல ஆயிரம் சாதாரண மனிதர்களது பெருங்கதைகளை பேசுவதன் மூலம் இந்நூல் உருவாக்கும் கருத்துடல் ஈழத் தமிழர் வரலாற்றை மேலும் வலிமையுடையதாக்கிறது.

**தமிழ் வரலாற்றுப்படிமங்கள் சில வற்றில் ஒரு பெண்ணிலை நோக்கு**
**செல்வி திருச்சந்திரன்**
**குமரன் புத்தக இல்லம்**
**1997**


ஆதிகால பால் நிலைப்பாட்டு சமூக வரையறைகள். பக்தியின் மறுபக்கம் பெண்களின் மறுதலிப்பா?. தமிழர் சமூக அரசியல் பின்னணியில் தேவதாசிகள் என்னும் படிமத்தின் உருமாற்றங்கள், தமிழ் இலக்கியத்தில் பெண் வெறுப்பு: ஒரு விளக்கம், முற்போக்குவாத, தேசிய பால்நிலை உருவாக்கங்களும் அவற்றின் முரண்பாடுகளும்,



யாழ்ப்பாண சமூகத்தில் கருத்தியலும் கட்டமைப்புகளும் நிர்ணயிக்கும் பால் நிலைப்பாடு, தேசவழமைச் சட்டத்தின் சமூகப்பரிணாமங்களும் யாழ்ப்பாணப் பெண்களின் சமூகப்பாங்கும், பால்நிலைச் சமத்துவத்துக்கும் மரபு வழி நோக்கலுக்கும் உள்ள சில முரண்பாடுகள் ஆகிய பிரதான தலையங்களின் கீழ் மிக விரிவான முறையில் காலந்தோறும் தமிழ் பண்பாட்டில் பெண்ணின் சமூக இருப்பு தொடர்பாக உருவாக்கப்பட்ட கருத்தாக்கங்களைப்பெண்ணிய நோக்கினால் விசாரணை செய்யும் ஒன்றாக இந்நூல் காணப்படுகிறது. பால் நிலை அசமத்துவம் எவ்விதம் தமிழ் பண்பாட்டின் அனைத்துக் களங்களிலும் ஊடுருவியுள்ளது என்பதையும் அதன் நுண்ணரசியற் புலங்களையும் வாசிக்கும் இந்நூல் தேசியவாதக்கருத்தியல், முற்போக்கு மற்றும் திராவிடக்கருத்தியற் களங்களில் நிகழும் பால்நிலைப்பட்ட நோக்குநிலைகளையும் விசாரிக்கிறது. பொதுத் தமிழ் பண்பாட்டில் பெண்ணைக் கட்டமைக்கும் முறையைப்பாதுப்படையாக பேசும் இந்நூல் சுட்டிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்திற் பெண் காலந்தோறுக் கட்டமைக்கப்படும் விதம் பற்றியும் விசாரணை செய்கிறது. தமிழ் பண்பாட்டின் பால்நிலை அரசியலின் அசைவியக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்நூல் அடித்தளம் இடுகிறது.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பழம்

## - கீர்த்தி சிங்கம் குமரேஸ்வரன்

**அமரர் திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு நினைவாக நடத்தப்பட்ட உலகளாவிய ஈழத்துப் படைப்பாளிகளின் சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற, கீர்த்தி சிங்கம் குமரேஸ்வரனின் சிறுகதை.**



ராகவன் சற்று நிதானமாகவே தனது சொகுசு வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். வழமைக்கு மறாகா இன்று பிரித்தானியாவின் பலபகுதிகளில் பலத்த காற்றோடு கனத்த பனி மழை பெய்யக் கூடும் என்று ஆங்கில வானொலி எச்சரித்திருந்தது.

சொகுசு வாகனத்தில் பொருத்தியிருந்த தொலைபேசி அழைக்க வானொலியை அவசரமாக அரைவாசியாகக் குறைத்துக் கொண்டு பதில் கொடுத்தான். அது இன்னுமொரு வியாபார நண்பனின் அழைப்பு இருவரும் பரஸ்பரம் சுகம் விசாரித்த பின்பு தொலைபேசி மூலமாகவே பேரம் பேசிக் கொண்டார்கள். ராகவனும் தனது குறிப்புப் புத்தகத்தில் பல இலக்கங்களைக் குறித்துக் கொண்டான். வாகனம் செலுத்திய வண்ணமே அதன் லாப நஸ்டங்களை துல்லியமாகக் கணித்துக் கொண்டான். பிரித்தானியாவில் வளர்ந்து வரும் ஒரு தமிழ்த் தொழிலதிபர் என்ற தோரணை இலகுவாக அவனது பேச்சிலே தவழ்ந்த வளைவு சுழிவுகளில் தொனித்தது.

மெல்லிய பனி கரைத்து விசிறிய மழைச் சிதறலையும் பொருட்படுத்தாது ராகவனின் சொகுசு வாகனம் அந்த அரை இருள் கலந்த அதிகாலை வேளையில் பனிச் சகதியை துளைத்த வண்ணம் அவனது தொழில் ஸ்தாபனத்தின் முன் வாசலில் வந்து நின்றது.

ஆங்கிலப் பெயரிடப்பட்டு அழகாக வெளிச் சமுட்டப்பட்டு வாடிக்கையாளர்களைக் கவரக் கூடியவிதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் வியாபார நிலையம் நான்கு ஐந்து வேலையாட்கள் பணியாற்றிடும் ஒரு நடுத்தர வியாபார நிலையம்.

ராகவன் சற்று மிடுக்கான தோரணையில் தனது கைப்பையை தூக்கியபடி உள்ளே நுழைகிறான். அங்கங்கே பணியில் ஈடுபட்டிருந்த பணியாட்கள் ராகவனைப் பார்த்து காலை வணக்கம் செலுத்திக் கொள்கின்றனர். அவர்களில் ஒருவன் புதியவனாக... சற்று பயந்தவனாக... ராகவன் அவனையும் கண்களால் அளந்துகொண்டு பரஸ்பரம் தானும் பதிலுக்கு காலை வணக்கம் செலுத்திய வண்ணம் தனது அலுவலக அறைக்குள் நுழைந்தான்.

அலுவலக சுழல் நாற்காலியில் அமர்ந்தவன் சற்று குரலை உயர்த்தி "மோகன் கான் ஐ காவி எ மினிற் பிளீஸ்" என்று தனது முகாமையாளரை பக்குவமாக அழைத்தான். அவனது அழைப்பை எதிர் பார்த்திருந்தவன் போல "யா... சூர் சேர்..." பதிலோடு வேகமாக அருகே வந்தான் மோகன்.

"எவ்விறித்திங் இஸ் அன்டர் கொன்ரோல் மோகன்?" பவ்வியமாக கேட்க "யா..யா... நோ புறப்ளம் சேர்" ஒரு இனிதான புன்னகையுடன் பதிலளித்தான் மோகன்.

"பாங்கிங் எல்லாம் ரெடியா இருக்கா?" ராகவன் தமிழில் கேட்க

"யா..யா... எல்லாம் லாக்கரிலை ரெடியாயிருக்கும்...

"புதிசா ஓராளை எடுத்திருக்கிறீங்களா?..."

"ஓமோம்... கிறிஸ்மஸ் ரைம்... கட்டாயம் எக்ஸ்ரா ஸ்ராவ் வேணும் சேர்" மோகன் பணியாளின் தேவையைச் சுட்டிக்காட்ட...

"யா.. யா... சூர்... யூ நோ வட் யூவார் டூயிங்" ராகவன் தனது அலுவலக சுழல் இருக்கையில் மறுபக்கம் சுழன்று லாக்கரின் பொத்தான்களை அழுத்துகிறான்.

"இன்னும் பேர்மனன்ற் இல்லை... நீங்களும் ஒருக்கா ஆளைப் பாருங்கோவன்...

பிடிச்சிருந்தா ஆளை வைச்சிருப்பம்.." மோகன் தீர்க்கமாகப் பதிலளித்தான். ராகவனும் ஆமோதிப்பது போல தலையசைத்துவிட்டு லாக்கரில் இருந்து முதல் நாள் வியாபாரத்தால் வந்த பணத்தை எடுத்து எண்ண ஆரம்பிக்கிறன்.

இருபத்து நான்காயிரம் பவுண்டுகள் நேரடியாகவே வங்கியிலிட்டாக வேண்டும். அதன்பின்பு அவனது அடுத்த கிளைக்கு போயாக வேண்டும் இப்படியாக அவனுக்கு சொந்தமாகவிருக்கும் நான்கு வியாபார நிலையங்களுக்கும் சென்று அன்றாட அலுவல்களைக் கவனித்து விட்டு வீடு திரும்ப எப்படியும் இரவு எட்டுமணியாகி விடுகிறது.

அதன்பின்பு வீடுவாசல் மனைவி மக்கள் என்று அவனது குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்க நேரம் எங்கே கிடைக்கப்போகிறது.. வேலைக்களைப்போடு வீடு திரும்புபவன் தடார் என்று கட்டிலில் விழுந்து சரியவும் மறுபடி காலையில் அலாரம் அடிக்க திடுமென எழுந்து ஓடவும் தான் ஒரு நாளின் கால அவகாசம் கணக்காக இருக்கிறது.

சில சமயங்களில் எதுக்குத்தான் இந்த வியாபார முயற்சியில் இறங்கினேன் என்று ராகவன் தனக்குத்தான் நொந்து கொள்வதும் உண்டு. நிம்மதியாக ஒரு நாளையேனும் குடும்பத்துடன் செலவிட முடியாதபடி ஏழு நாட்களும் கண்ணும் கருத்துமா வியாபாரத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டிய ஆரம்ப வளர்ச்சி நிலையில் இருக்கும் முதலாளியாக அவன்...

"கான் ஐ கம் இன் சார்" ஒரு பயந்த குரல் அலுவலக் கதவோரம் ஒலிக்க திரும்பிப் பார்க்கிறான் ராகவன். முன்னாலுெ அந்தப் புதிய பணியாள் ஒரு தட்டிலே தேனீரை அவனுக்காக நீட்டியவண்ணம் மிகுந்த பயபக்தியோடு நின்றிருந்தான்.

"யா.. யா கம் இன்" ராகவனின் பார்வை அவனை மறுபடியும் புலனாய்வு செய்தது.

பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் மிகுந்த மரியாதையுடன் தேனீரை நீட்டியபடி நின்றான். அவனது பார்வையிலே எதிர்காலம் பற்றிய ஏக்கம் தெரிந்தது. இறந்த காலத்தில் உடைந்து போன கனவுகளும் கற்பனைகளும் அவனது கண்களுக்குள் இன்னும் உறைந்து போயிருந்

தொடர்தல் 96ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பழம் ...

95ம் பக்கத் தொடர்ச்சி...

தன.

தற்சமயம் போர் நடந்துகொண்டிருக்கும் ஒரு அன்னிய தேசத்திலிருந்து உயிர் தப்பிக்க பிரித்தானிய மண்ணுக்கு தஞ்சம் தேடி வந்தவன் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

“தாங்ஸ்... யூ கான் கோ” ராகவன் தேனீரையும் அவனைப்பற்றிய அபிப்பிராயத்தையும் தெளிவாக எடுத்துக் கொண்டான்.

நானும் இப்பிடித்தானே ஒரு முப்பது வருசத்துக்கு முதல்... இலங்கையிலையிருந்து அகதியா அந்த நாட்டுக்கு வந்து... குளிர் கூதலெண்டு பாராது “பட்டேல்” கடைகளிலே இராப் பகலா மாடா உழைச்சு... ராகவனது மனம் அவனையும் அறியாது பழைய நினைவுகளால் எங்கோ தொலை தூரம் இழுக்கப்பட்டுப் போகிறது...

“நான் வந்து என்னுடைய ஏழ்மையான சூழ்நிலையிலே... அப்பிடியான கஸ்ரமான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டன். ஆனா இண்டைக்கு என்னோட பிள்ளைகள் மிகவும் சொகுசா... எதிர்காலத்தைப் பற்றிய எந்தவித கவலையும் இல்லாமல் வாழு-துகள்.. இது வரைக்கும் அவையள் வீட்டிலே படுக்கையைவிட்டு எழும்பியிருக்குங்களோ தெரியாது...” ஒரு விரக்தியான முறுவல் அவனது மேவாயை அசைக்கிறது.

தனக்குத்தானே மனதுக்குள் பிள்ளைக-ளைக் கடிந்து கொண்டவன் கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் பதினொரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. கைகளும் மனமும் பரபரப்பாக வேலையை துரிதமாக முடித்துக்கொண்டு அடுத்த கிளையை நோக்கிப் பயணிக்க தயாராகினான்.


அவனை வழியனுப்ப வந்த மோகன் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு தொலைபேசி இலக்கத்தை எடுத்து நீட்டியபடி “சேர் உங்களைத் தேடி நேற்றுப் பின்னேரம் ஓராள் வந்தவர்.. உங்கடை பழைய நண்பனாம்... பெயர் கூட ஏதோ... குமார் எண்டு சொன்னவர். அவசரம் எதுமில்லை நேரமிருந்தா ஒருக்கா உங்களை கோல் பண்ணச் சொன்னவர்.”

“குமாரா?... எனக்கு ஆர் அப்பிடி பிரண்ட்... ஞாபகம் இல்லையே..” தலையைக் குடைந்தவன் மோகன் கொடுத்த அந்த இலக்கத்தைப் பத்திரப் படுத்திக் கொண்டு அங்கிருந்து விலகினான்.

வழமையான இயந்திரமயமான பகல்வேளை அன்று வேகமாக ஓடியது ராகவனுக்கு. கணிசமான பணிகளை துரிதமாக முடித்து விட்டு இன்று சற்று நேரத்தோடு வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். வீட்டு வாசலை அவனது சொகுசு வாகனம் நெருங்கவும் வாயில் கதவுகள் தானாக திறந்து கொண்டன. பிரமாண்டமான வீடு. அதன் முற்றத்தில் தானியங்கி மின் விளக்குகளும் பாதுகாப்புக் கமிராக்களும் தாராளமாகவே பொருத்தப்பட்டிருந்தன. வீட்டைச்சுற்றி வர பாதுகாப்பு மதில்கள் பெரிதாக எழுந்து நின்றன. நடுவிலே சிகரம் வைத்தது போல தனியாக விசாலமாக நிமிர்ந்து நின்றது அவனது மூன்று மாடி வீடு.

அந்த தெரு முழுவதுமே அத்தகைய வசதிபடைத்தவர்கள் வாழும் விலாசங்கள் தான். பெரிய கோடிஸ்வரர்கள் வரிசையில் விரல் விட்டு எண்ண முடியாது விட்டாலும் ஓரளவுக்கு லண்டனில் வாழும் தமிழ்ப் பணக்காரர்களில் ராகவனும் ஒருவன் என்பத அவனது வீடு முழுமையாக அங்கீகரித்தது.

வாகனத்தை ஒழுங்காக தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு கைப்பையை எடுத்தபடி நகர்ந்தான். அருகாக மகன் சுரேனது பி.எம் டபிள்யூ வாகனம் ஒழுங்கீனமாக நிறுத்தப்பட்டிருந்தது அதனருகே மகள் ஸ்ருதியின் பென்ஸ்காரும்தான் தாறுமாறாக அங்கு மிங்கும் கீறப்பட்டு காயப்பட்டு “என் பிள்ளைகளோ.. கவனம் இல்லாமல் பாவிக்கிதுகள். அதுகளுக்கு அருமை தெரிஞ்சாத் தானே..அப்பன் உழைக்கவெண்டு இருக்கிறனல்லே...” தனக்குள்ளே பிள்ளைகளைக் கடிந்துகொண்டு வீட்டினுள்ளே நுழைகி-றான்.



**எல்லாம் தாய் குடுத்த செல்லம். உன்னோட படிச்சவங்கயெல்லாம் இண்டைக்கு ரொப் லெவல்லை இருக்கிறாங்கள் தெரியுமோ... நீ குழந்தைப்பிள்ளை மாதிரி இப்பவும் பிளேஸ்ரேசனை வைச்சு தட்டிக் கொண்டிருக்கிறாய்..**

மனைவியின் ஜெகுவார் சொகுசு வாகனம் தரிப்பிடத்தில் இல்லை. ஆகவே அவள் வீட்டிலே இல்லை...” “ஓ மை கோட்... நான் மறந்துபோனன்: அப்போதுதான் ராகவனுக்கு நினைப்பே வந்தது. “வசந்தி இண்டைக்கு தன்னோடை ஓல்ட் ஸ்கூல் ஆலும்னி கெற்ருகெதர் எண்டு என்னை வேளைக்கே வரச் சொன்னவள். சா.. நான் சுத்தமாக மறந்து போனன்...”

“படிக்கிற காலத்திலை ஒழுங்கா ஸ்கூல் பக்கமே போயிருக்கமாட்டினம் வெளிநாட்டுக்கு வந்து கொஞ்சம் காசும் கையிலை பிடிச்சவுடனே... ஏதோ அந்த ஸ்கூலிலை படிச்ச படியாத்தான் வெளிநாட்டுக்கு வந்து வெள்ளைக் காரரோடை இங்கிலீசு பேசக் கூடியதாக இருக்காம்...கெட்ருகெதர் வைக்கிறதும் அலுமினி டேய் நகைப்பாக இருந்தது ராகவனுக்கு.

போட்டிருந்த சப்பாத்தை உரிய இடத்தில் உதறி விட்டு உள்ளே நுழைகிறான். பிரமாண்டமாக வீடு உயர்தர இஸ்ராலியன் வகைத்தளபாடங்கள் அதி நவீன இலத்திரனியல் சாதனைங்களின் அலங்கரிப்பு என்ற ஒரு இருத்தோராம் நூற்றாண்டின் அரண்மனையை அங்கு ஞாபகமூட்டியது.

மகள் ஸ்ருதி தந்தை வந்திருப்பதைக் கூட அறிந்து கொள்ளாமல் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் முற்று முழுதாக மூழ்கியிருந்தாள். அவளுக்கு போட்டியாக அண்ணன் சுரேன் இன்னுமொரு பிளேஸ் ரேசன் விளையாட்டில் கரைந்து போயிருந்தான்.

கைப்பையை சோபா மீது வைத்த ராகவன் சற்று செருமியபடியே... “ஸ்ருதி நீ இண்டைக்கும் ரியூசனுக்கு போகேலையோ... எக்சாம் வாறதை மறந்திட்டியா...

ஸ்ருதி ஒரு முறை தந்தையை பார்த்து முறுவல் பூத்தவிட்டு “காய் டாட்... ஆர் யு ஆல்ரைட்” மறுபடியும் தொலைக்காட்சியில் மூழ்கினாள்.

உன்ரை வயசுப்பிள்ளைகள் டிகிரி முடிச்சிட்டு வேலை செய்ய ஆரம்பிச்சிட்டுதுகள்.. நீ இன்னும் ஏ-லெவல் நாலு வரிசம் ற்றீ-சிற் எடுக்கிறாய்...ஸ்ருதி எதுவும் போசாது ரீவியின் வாலியூமை சற்று அதிகப்படுத்தினாள்.

வேலை முடிந்ததும் மன – உடற்களைப் போடு வீடு திரும்பிய ராகவனுக்கு இதனைப் பார்க்க தலைக்கு மேலே எதுவோ எல்லாம் செய்தது. அங்கே மேலும் இருக்கப் பிடிக்காதவனாய் தனது கோர்ட்டை கழற்றி உரிய இடத்தில் தொங்கவிட்டு விட்டு அங்கிருந்து நகரவும் அவனது கைத் தொலைபேசி மும்மரமாக அலற ஆரம்பித்தது.

கைபேசியின் அலறல் - தொலைக்காட்சியின் முன் ஸ்ருதியின் குமுறல் - பிளேஸ் ரேசனில் சுரேனின் கூக்குரல் - கேலைக்களைப்பால் ஏற்பட்ட ரென்சன் என்று அத்தனையும் அவனை அமுத்த “கான் யு ஸ்ரெப் இற் பிளீஸ்” ராகவனின் உரத்த கூச்சலோடு அத்தனை சத்தமும் அப்படியே அடங்கின.
தந்தையைச் சற்று மிதமான கோபத்தோடு ஸ்ருதியும் சுரேனும் பார்க்க “வட் இஸ் யுவர் பியூச்சர் பிளான் சுரேன்”... சுரேனைப் பார்த்து சற்று ஆத்திரமாகக் கத்தினான் ராகவன்.

“ஏதாவது வேலைக்கு போற நோக்கம் இருக்கா” ஆத்திரத்தோடு தமிழில் தொடர்ந்தான். “எல்லாம் தாய் குடுத்த செல்லம். உன்னோட படிச்சவங்கயெல்லாம் இண்டைக்கு ரொப் லெவல்லை இருக்கிறாங்கள் தெரியுமோ... நீ குழந்தைப்பிள்ளை மாதிரி இப்பவும் பிளேஸ்ரேசனை வைச்சு தட்டிக் கொண்டிருக்கிறாய்.. கடைசி என்னோட வந்து பிசினெஸ்சையாவது கவனிக்கேலாதா? சா...” அங்கிருந்த அமைதியை மறுபடி கைத்தொலைபேசி ஒலித்துக் குலைத்தது. ஆத்திரம் கலந்த கரகரத்த குரலில் “கலோ” என்றான் ராகவன். மறு முனையில் ஒரு பெண்ணின் மெல்லிய குரல் பதில் கொடுக்க “ஐ ஆம் சாரி... ஐ ஆம் நொட் இன் த ஒப்பீஸ் நவ்...பிளீஸ் கால் மீ ருமாறோ” பதிலளித்துவிட்டு கைபேசியை முற்றிலுமாக அணைத்து வைத்தான். அங்கே மேலும் தரிக்கப் பொறுக்காதவனாய் டைனிங் மேசை வரை சென்று ஏதாவது உணவ பரிமாறத் தயாராக இருக்கிறதா என்று நோட்டம் வைத்தான். எல்லாமே வெறித்துக்கிடந்தது. அன்று பகல் இவர்களுக்கு பிஸ்சாக் கடைக்காரன்தான் உணவு பரிமாறியிருக்கிறான் என் பதன் அடையாளங்களாக அதன் எச்சங்கள் டைனிங் மேசையெங்கும் பரவிக்கிடந்தன.

ஆக மொத்தத்தில் இன்று வீட்டிலே சமையல் செய்யப்படவில்லை...மனைவி வசந்தி காலையிலேயே அவளது ஸ்கூல் பங்சனுக்கு சென்றிருக்க வேண்டும்.

அல்லது வேறு எங்காவது சென்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சம் தொலைபேசியிலாவது ராகவனுக்கு எடுத்துச்சொல்லியிருக்கலாம்... எங்கு போகிறேன் எப்போது வருவேன் என்று எதையும் கூறாது... வரவர அவளது போக்கே சரியில்லை... ராகவன் மனதிலே ஒரு நெருடல்..

இவ்வளவு கஸ்ரப்பட்டு உழைக்கும் கணவனுக்கு கொடுக்கக்கூடிய குறைந்த பட்ச அன்பைச்கூட தர மனமில்லாத மனைவியாக வசந்தியும்... அவளது அன்புக்காக மட்டுமே இன்னமும் ஏங்கிக் கிடக்கும் கணவனாக ராகவனும் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்கு மோலாக ஒன்றாக வாழ்ந்து கழித்து விட்டார்கள்.

நீண்ட வயசு வித்தியாசத்தில் திருமணம் செய்ததன் விளைவை கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொண்டிருந்தான் ராகவன்.

ஒரு கிளாசில் அப்பிள் ரசத்தை ஊற்றி மனச்சஞ்சலம் தீரும் வகையில் மெதுவாகச் சுவைத்தான் ராகவன்.

மாடிப்படிகளில் இருந்து ஆத்திரமாகவும் வேகமாகவும் சுரேன் ஒரு கைப்பையைத் தூக்கியவண்ணம் வீட்டை விட்டு வெளி-யேறுவது தெளிவாகத் தெரிந்தது ராகவனுக்கு. அதனை அவன் நிதானிப்பதற்கு முன்னதாகவே “திசிஸ் நொட் எ கோம்... இற்ஸ் எ பிரிசின்... ஐ டோன்ற வோன் ருபி கியர்” சுரேன் ஆத்திரமாக உரத்த குரலில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு வேகமாக வெளியேறினான். அவன் கடந்து போகும் போது ஏதோவொரு போதைவஸ்தின் நொடியும் அவனோடு கூடவே அகன்றதை ராகவன் ஒன்றும் உணராமல் விடவில்லை.

“ஏய் சுரேன்... நில்லு” ஆதங்கத்தோடு தடுக்க முனைந்த ராகவனின் வார்த்தைகள் தந்தை எள்ற ஸ்தானத்தில் நின்று சற்று வெட்கித்து தலை குனிந்தன... “நான் எதுகும் பெரிசா சொல்லேலையே...அதுக் குள்ளை அவருக்கு மூக்கு நுனியிலை கோபம் வந்திட்டுதோ” ராகவன் சங்கடப் படுவதைப் பார்த்து மெல்லியதாக முறு-வலித்தபடியே ஸ்ருதி “டோன் வொறி டாட்... கீ ஸ் ஒன்லி கோயிங் அத்தை கவுஸ்”

“ஓ அவங்களாலை தான் எல்லாப் பிரச்சனையும்... அத்தை... புத்திமதி சொல்ல வேண்டிய சொந்தபந்தமே பிள்ளைக-ளைக் கெடுக்கிறதெண்டால்.. தங்கடை பிள்ளைகள் நல்லா படிச்சு முன்னுக்கு வரவேணும் மற்றவன் வீட்டு பிள்ளைகள் கெட்டு நொந்து குட்டிச்சுவராப் போக வேணும்..” மனைவி வழி உறவாகிலும் ராகவன் அவர்களை மனதுக்குள் முழுமையாகக் கடிந்து கொண்டான்.

பலத்த மனவேதனையோடும் கவலையோடும் அப்பிள் யூசைப் பருகியபடியே சோபாவில் வந்து அமர்ந்த ராகவனின் நினைவுகள் மெதுவாக தூரப் போகின...

ராகவன் லண்டனுக்கு அகதியா வந்த காலத்திலை ஒரு பெட்டி அறைக்குள் அனாதையாக அடைப்பட்டுக்கிடந்தது வும்.. இரவு பகல் என்று பணி பாராது கடினமாக உழைத்து அவனது நோயுற்ற தாயாருக்கு மருந்துவச்செலவுக்காக ஊருக்கு பணம் அனுப்பி வைத்ததும் மெல்லென அவனது மனதிலே நினைவாகப் படர்கிறது...

“என்னுடய காலம் வேறை என்னுடய பிள்ளைகளின் காலம் வேறை.. நான் கஸ்ரத்திலே வளர்ந்தவன்... கஸ்ரப்பட்டு இந்த நாட்டுக்கு வந்தவன்...கஸ்ரப்பட்டு வாழ்க் கையிலை முன்னேறினவன் என்றை அம்மாவோடை கஸ்ரம் அறிஞ்சு கடமை செய்தவன்... ஆனா என்னுடைய பிள்ளைகள் அப்பிடி இல்லையே... இந்த நாட்டிலே பிறந்ததுகள்...நான் உருவாக்கின செல்வாக்கிலை செல்லமா வளர்ந்ததுகள்... ஒரு வேளை எனக்கும் ஏதாவது நோய் நொடியெண்டு வந்து நானும் விழுந்திட்டா... இதுகள் என்னை வைச்சு பாக்குங்களா இல்லை தூக்கி எறிஞ்சிட்டு போயிடுங்களா”

“நான் என்ன பெரிசா அம்மாவுக்கு செய்திட்டன்... மருத்துவச் செலவுக்கும் அவா-வோடை தேவைக்கும் போதிய அளவு பணம் அனுப்பிக் கொண்டுதானே இருந்தன். இங்க வாங்கோ நல்ல மருத்துவ

தொடர்தல் 97ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பழம் ...

96ம் பக்கத் தொடர்ச்சி...

வசதி இருக்கு வைச்சுப் பாக்கிறன் எண்டு கேட்டா... மாட்டனெண்டிட்டாவே..."

"ஒருவேளை நான் கொஞ்சம் கட்டாயப்ப டுத்தி கேட்டிருந்தா இஞ்சை வந்திருப் பாவோ... இஞ்சை கூப்பிட்டிருந்தா ஒரு வேளை அவாவோடை உயிரை காப்பாற் றியிருக்கலாமோ... உயிரை காப்பாற்றியி ருந்தா குறைஞ்ச பட்சம் என்னை நேசிக் கிற ஒரு உயிர் எனக்கு பக்கத்திலை இன்னும் இருந்திருக்குமோ"

"நீ தான் இங்கை வர மறுத்திட்டியே அம்மா"

"அம்மா..." அவனை அறியாமலே வாய் விட்டு அழைத்தான் ராகவன்.

"என்ரை அகதி அந்தஸ்தை காப்பாற்றத் தானேம்மா... உன்னை கடைசிவரைக்கும் வந்து பாக்காமல் விட்டிட்டன்.. நீ கூட... எப்பவும் சுகமா இருக்கிறன் எண்டு பொய் தானே சொல்லீட்டிருந்தாய்..."

அவனை விட்டு வெளியேறிய விசும்பல் ஒன்று மட்டும் போதும் கண்ணிலே துளிர்த்த நீர்த்துளிக்கு தாய்ப் பாசம் என்று சாட்சி சொன்னது.

"இண்டைக்கு நானுமொரு பிரித்தானியப் பிரசை... சொத்துப்பத்து கார் பங்களா அது இது எண்டு... கோடி கோடியா இருக்கு.

இந்த நாட்டுக்கு அதிகப் படியான வரி கட்டுற கௌரவப் பிரசையா... நானும் ஒருத்தன். எல்லாம் இருந்தும். சின்ன வய சிலையிருந்து நான் நல்லாக வரவேணும் எண்ட கனவுகளோடையே வாழ்ந்த என் னோடை அம்மா... இப்ப என்னோடை இல்லையே..."

"போர்க் கால சூழ் நிலையிலை... தீராத நோயோட தனிய ஊரிலையிருந்து எவ்வ ளவு சிரமப்பட்டிருப்பா... கடைசி நேரத் திலை உயிர் போற தறுவாயிலை பிள் ளையைக் காணக் கிடைக்கேலையெண்டு எவ்வளவு அழுதிருப்பா"

யாரோ முன் வாசல் கதவைத் திறந்து உள்ளே வரும் ஓசை கேட்க நினைவுகளில் இருந்து மீண்டான் ராகவன்.

மனைவி வசந்திதான்... ராகவனைக் கண் டதும் சற்று கோபமாகவே உள்ளே நுழைந் தாள். நாற்பது வயதுக்குரிய நாய்க்குண மும் இருபது வயதுக்குரிய அலங்காரமும் அழகும் அவளிலே தென்பட்டது.

"ஓ... இங்கைதான் இருக்கிறீரா.. நான் என்னவோ இன்னமும் ஒபீசிலையிருந்து வரேலையாக்கும் எண்டு நினைச்சன்" ஒய் யாரமாக ராகவனை நோக்கி நடந்து வந் தவள் சற்று அகங்காரமாகவே தொடர்ந் தாள்.

"ஐ திங்.. யூ ஆர் என்யோயிங் யுவர் டிரிங்..."அப்பிள் யூஸ் அருந்திக் கொண் டிருந்த ராகவனைப் பார்த்து மது அருந் துவதாக நினைத்துப் பேசினாள்.

"பெரிய மல்ரி மின்லியனர் ராகவனோட வைப்... ஒரு பங்சனுக்கு தனியா போனா என்ன குடியா மூழ்கிப்போகிடும்..."


"உன் கஸ்பெண்ட் எங்கை.. உன்னோடை வரலையோ எண்டு கேட்டா... பதிலுக்கு நானும் ஈ என்னு இழிச்சிட்டு வரவேண்டியது தானே."

"நீர் இங்கே மூக்கு முட்ட குடிச்சிட்டு... மல்லாந்து கிடப்பீர்..." வசந்தி வந்ததும் வராததுமாக தொடர்ந்து பொரிந்து தள் ளினாள்.

"கேய் வசந்தி... ஐ யஸ்ற் கேம் புறொம் தி ஒப்பீஸ்...

திசிஸ் ஒன்லி அபிள் யூஸ்..." ராகவன் மறுக்க

"ஸ்ரொப் இற்...எதுக்கெடுத்தாலும் வாயிலை பொய்... எப்ப தான் எனக்கு ஒரு நல்ல



**குடும்பத்தில் எந்த அங்கீகாரமும் அற்றவனாக... பெட்டிப் பாம்பாக... பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக... வெளிவட்டத்திலே ராகவனுக்கு கிடைத்த நட்புகளும் உறவுகளும்கூட ஏதுவுமே உண்மையில்லாது... எதையோ தந்திரமாக தட்டிப்பறிக்கும் மந்திரவாத உறவுகளாக...**

கஸ்பெண்டா நடந்திருக்கிறீர்...ஆ... எப்ப என்னுடைய விருப்பு வெறுப்புகளை கேட்டு நடந்திருக்கிறீர் சொல்லும்"

வசந்தி தொடர்ந்து பொரிந்தாள்.

கொழும்பிலை பெரிய பெரிய கனவுகளோட படிச்சுக்கொண்டிருந்த என்னை... உம் மோட சுயநலத்துக்காகத்தானே வயசு வித் தியாசம் பாராம ரண்டாம்தாரமா கட்டிக் கொண்டந்தனீர் ஆ...இப்ப எல்லா ஆசை யும் தீர்ந்திட்டுதாக்கும்..."

"ஏதோ அண்டைக்கிருந்த எங்களோட பொரு ளாதார சூழ்நிலை ரண்டு பிள்ளைக்கு அப்பாக்காரன் எண்டதைக்கூட நான் யோசிக்கேலை...லண்டனுக்குவர ஆசைப் பட்டு உமக்கு பின்னாலை வந்திட்டன்..."

"வந்து பாத்த பிறகுதானே தெரிஞ்சிது... தலையிலை கிடந்தது டோப்பு.. எஞ்சினியர் எண்டது எல்லாம் வெறும் டுப்பு..." அவ ளும் டி.ஆர் போலவே அடுக்குவசனம் பேசினாள்.

மகள் ஸ்ருதி கொல்லென்று சிரித்து விட்டு தந்தையை கொஞ்சம் பரிகாசம் செய்வது போன்ற ஒரு பார்வையால் வீழ்த்தி விட்டு... தாய் வசந்தியை அங்கிருந்து அழைத் துச் சென்றாள்.

ராகவனுக்கு என்னவோ செய்தது. "இப் படி குடும்ப சூழ்நிலை இருந்தா... எப்பிடி பிள்ளைகள் உருப்படும்." பிள்ளைகளுக்கு முன்னாலையே பெத்த தகப்பனை ஒரு தாய் இப்பிடி அவமதிப்பா நடத்தினா.. பிள்ளைகள் எப்பிடி சிராக வளரும்..."

கிளாசில் எஞ்சியிருந்த அப்பிள் யூசை அப்படியே உறிஞ்சிக் குடித்து...அவனுக் குள் பீறிட்ட ஆத்திரத்தை அருவெருப்போடு அடக்கிக் கொண்டான்.

"என்ன செய்ய அவளின்ரை கோபத்தி- லும் நியாயம் இருக்கே" அவனுக்கான சில அந்தரங்கங்கள் வசந்திமேல் எழுந்த கோபத்துக்கு இயலாமையோடு தடை- போட்டன.

அங்கிருந்து எழுந்து சென்றவன் அருகே யிருந்த நிலைக்கண்ணாடியில் தனது முகத்தை உற்றுப் பார்த்தான். முகம் பொலிவிழந்து தோல் சுருங்கி... தலை முடி முழுவதுமாய் உதிர்ந்து.. ஒருவேளை எனக்கு வயசு போட்டுதோ... என்ன ஐம் பத்தைஞ்சு வயசுதானே ஆகுது. ஆனா அறுபத்தி ஐந்துக்கு மேலை தோற்றம் வசந்தி சொன்னதிலும் நியாயமிருக்கு... நானும் அவசரப்பட்டு இந்தளவு வயசு வித்தியாசத்திலை அவளைக் கலியாணம் செய்திருக்கக் கூடாது. ஆனா அந்த நேரத் திலை எனக்கிருந்த சூழ்நிலை... இரண்டு கைக் குழந்தையோடை எப்பிடி தனியா லண்டனிலை காலத்தைக் கடத்துவன்.

பகல் முழுவதும் தனது தொழில் ஸ்தாப னத்திலை அத்தனை ஊழியர்களையும் அதிகாரம் செய்து பணிபுரியும் ஒரு தொழி லதிபர்.

வீட்டுக்கு வந்ததும் குடும்பத்தில் எந்த அங்கீகாரமும் அற்றவனாக... பெட்டிப் பாம்பாக... வெறும் பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக... வெளிவட்டத்திலே ராகவ னுக்கு கிடைத்த நட்புகளும் உறவுகளும் கூட ஏதுவுமே உண்மையில்லாது...எதையோ தந்திரமாக தட்டிப்பறிக்கும் மந்திரவாத உறவுகளாக...

சாதாரண வாழ்க்கை வாழ்ந்தபோது கிடைத்த மிக அன்னியோன்னியமான, நேசம் மிக்க நட்புவட்டங்கள் கூட பணக்காரனாகிய பின்பு மெல்ல மெல்ல விலகி விலகி... வியாபார உறவுகளாக வாசலுக்கு வெளியே தொங்கிக் கிடக்கின்றனவே...

வாழ்க்கையின் சூட்சுமமே என்னவென்று தெரியாது விழித்தான் ராகவன்...

"ஒரு வேனை நான் தனிப் பிள்ளையாக பிறந்ததாலை தான் இந்த நிலையோ... நாலு சகோதரங்களுடன் கூடப்பிறந்திருந் தால் யாராவது ஒருத்தர் உண்மையாக இருந்திருப்பினமோ...

இவ்வளவு சம்பாதித்தும் ஓடியோடி உழைத் தும் என்ன பயன்... உரிய காலத்தில் உரிய பருவத்திலை விளையாத வெதும்பல் கனிகள் போலை என் பிள்ளைகள்...

ஏதோ ஒரு எதிர்பார்ப்போட வந்து ஏமாந்து போனனே எண்டு இல்லாத கனவோடை வாழும் என் ஆசை மனைவி..."

"நல்லது கெட்டதுகளை சொல்லிக்டு டுக்க வேண்டிய உரிமையான உறவுகளே... பிள்ளைகளை அணைச்சுக்கெடுத்து குடும் பத்திலை குழப்பம் செய்கின்ற சூட்சிகள்...

வாழ்க்கையே கசந்தது ராகவனுக்கு..

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த அற்ப வாழ்க்கை...

ஒவ்வொரு நாளும் காலையில் டாக்டர் கொடுத்த மாத்திரைகளை அள்ளி வாயில் போடும் போதெல்லாம் இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று தான் எண்ணிப்பார்ப் பான் ராகவன்..

வர வர மாத்திரைகளை விட வாழ்க்கையே மேலாகக் கசந்தது அவனுக்கு... இருந் தாலும் அவனது அடிமன ஆழத்தில் ஒரு இலட்சியம்... இன்னும் நிறைவேறாத கனவாக இருக்கிறது அவனுக்கு... அவ னது வாழ்க்கை முடிவதற்கு முன்னதாக அவன் பிறந்த மண்ணுக்கு ஏதாவது செய்ததாக வேண்டும்...

போர் சூழ்நிலையில் சிக்குண்டு சிதறி திசைமாறி யாருமில்லாத அனாதையாகி நோய்க்கு மருந்துகூட வாங்க வாய்ப்பின்றி இறந்து போன தனது தாயின் நினைவாக ஒரு இலவச மருத்துவமனை கட்டியாக வேண்டும்.

முழுக்க முழுக்க இலவசமாக... யாருமில் லாத வயோதிபர்கள் தங்குவதற்கான இன் னுமொரு வயோதிபர் இல்லம். எப்படியும் கட்டியாக வேண்டும்.

யாரை வைத்து அதனைச் செயற்படுத்த லாம்... அது தான் அவனது பெருத்த கேள்வி... யாருமே அவனுக்கு நம்பிக்கை யானவர்களாக தெரியவில்லையே...

பலத்தயோசனையோடு எழுந்தவன் டைனிங் மேசை வரை சென்று அருகே இருந்த வைன் கபினெற்றில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானம் ஒன்றை உருவி எடுத்தான். அப்பிள் ரசம் அருந் திய அதே கிளாசில் ஊற்றி அப்படியே சுவைத்தான். சிந்தனை மெல்ல மெல்ல விரிவாக தொனித்தது அவனுக்கு

மனம் கசந்துபோகும் நேரத்திலெல்லாம் அவனக்கு இருக்கும் ஒரே நெருங்கிய கூட்டாளி. "யோனி வோக்கர்" மட்டும் தான். பணக்காரத்தோரணையில் தொப்பி அணிந்து எடுப்பாக ஒரு மனிதன் வாக்கிங் ஸ்ரிக் கோடு போத்தலில் நடுவே நின்று கொண் டிருப்பான்.

எதனையும் எதிர்பார்க்காத தற்போதய உற்ற நண்பன் இவன் மட்டும்தான்...

போத்தலைப் பார்த்து முறுவலித்தவன் திடீரென்று எதையே நினைத்தவனாக... "யார் அந்த குமார்... ஒரு வேளை நண் பன் எண்ட கோதாவில் உதவி ஏதாவது கோட்டு வந்திருப்பானோ"

விரைந்து சென்று காலையில் மோகன் கொடுத்த நம்பரை தேடியெடுத்து டயல் செய்தான். மறுமுனையில் குமார்...யாரது உங்களை எனக்கு ஞபகமில்லையே...

"டேய்.. ராகவன்... அது நான்தான்ரா.. குமாரவேல்... சூப்பியா"... மறு முனை யில் தனது பட்டப்பெயரையே மிகப்பெரு மையாக்கி ஒலித்தது அந்த நெருக்கமான குரல்.

"டேய் சூப்பி.. எப்பவடா இங்க வந்தாய்" ஆனந்தத்தின் ஆச்சரியத்தின் ஆர்ப்பரிப் பில் ராகவன் கூச்சலிட ஒரு பாலிய நட்பு அங்கே மீண்டும் முகிழ்த்தது.

"நில்லு நில்லு... நான் இப்பபே உன் னட்டை வாறன்" குமாரின் விலாசத்தைப் பெற்றுக் கொண்ட ராகவனின் சொகுசு வாகனம் வீர் என்று விரைந்தது.

ராகவனது வருகைக்காக காத்திருந்த குமாரவேலைக் கண்டதும் ராகவன் கட்டி யணைத்து... மகிழ்ச்சியால் உருகிய கண் ணீரால் ஒரு முப்பது ஆண்டுப் பிரிவின் உணர்வுகளை ஒரு கணத்தில் பரிமாறிக் கொள்வது அவ்வளவு இலகுவான காரிய மல்ல..

குமாரவேலும் தான் இப்ப நல்லாப் பழு தாப் போனான். உயர்தரம் வரைக்கும் ராகவனோடை கூடப்படிச்சவன் குமாரவேல்.

இருவருமாகத்தான் லண்டனுக்கு ஆரம் பத்தில் புறப்பட்டு வந்தார்கள். கொழும் பிலை ஏஜன்சிகாரன் சொன்ன தொகையை விட அதிகமா கேட்டபோது உடனேயே அவ்வளவு தொகையை ராகவனாலை குடுக்கமுடியாது அந்தரப்பட்டபோது "நீ

தொடர்தல் 98ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பழம் ...

97ம் பக்கத் தொடர்ச்சி...

முதல்லை போய் உழைச்சு அனுப்பு மச்சான்.. நான் அடுத்ததா வந்து சேருவன்" என்று பெரிய மனதோடு குமாரவேல் ராகவனுக்கு அன்று பணத்தை தந்து உதவியதும். அதே மாதிரி ராகவனும் குடுத்த பணத்தை உரிய நேரத்தில் திருப்பி அனுப்பியபோதும் குமாரவேலால் லண்டனுக்கு வந்து சேரமுடியாது போனதும் நிறையக் காலம் கொழும்பிலேயே தங்கியிருந்து வேறு ஏஜன்சி மூலமாக வர பலதடவை முயற்சி எடுத்தது இறுதியில் ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டுக்கு வந்து சேர்ந்ததாக ராகவன் அவ்வப்போது லண்டனிலிருந்து கேட்டு அறிந்தது பழைய கதைதான்.

வெளிநாட்டில் தன்னை இஸ்திரப் படுத்திக் கொள்ள தன்னையே தொலைத்த ராகவனின் இயந்திர வாழ்க்கை குமாரவேலது தொடர்பை நீண்ட காலமாக துண்டித்திருந்தது.

"உனக்கு எத்தனை பிள்ளைகள்..." குமாரவேலு அமைதியாக் கேட்டான்...

மூத்த சம்சாரத்துக்கு இரண்டு பிள்ளைகள்... மற்றவர்க்கு இன்னும் இல்லை ராகவன் பதிலளித்தான்.

"நான் எல்லாம் அறிஞசனான்" ஒரு கண அமைதியின் பின் "மூத்தவாவை இப்பவும் சந்திக்கிறனியோ"

"சா.. அது அப்பவே முடிஞ்சு போச்சு.. கோர்ட்டிலை வாதாடி என்னட்டைத்தான் பிள்ளைகள் வளரவேணும் எண்டு கேட்டு இரண்டு பேரையும் வாங்கி எடுத்துப்போட்டன்...

ஒரு சில கணங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமைதியாகவே இறந்தனர்.

"அவளும் ஒத்துக் கொண்டுதான் தந்தவள்... அவளுக்கும் என்னோடை வாழப் பிடிக்கேலையாம். அதுக்காகத்தானே இன்னொருத்தனுக்கு பின்னாலை போனவள்.

"அது ஒரு இருபது வருசக்கதையடா... பிள்ளையள் எல்லாம் இப்ப நல்ல வளர்ந்து நல்லாப்படிச்சிருக்கினம்.. இதைக் கூறும்போது ராகவனது அடிமனதில் ஏதோ ஒரு உறுத்தல்.. அது சரி உனக்கெத்தினை பிள்ளையள்?..."

"எனக்கு இரண்டு பிள்ளைகள் மச்சான். இரண்டுபேரும் பெரதெனியாவிலை மெடிசின் முடிச்சிட்டு கொழும்பிலை வேலை செய்யினம்."

"அப்ப நீ எப்பிடி இங்கை... இப்ப யாரோடை?". ராகவனின் அங்கலாய்ப்பு.

நான் ஒரு மெடிக்கல் கொன்பிரன்சுக்காக லண்டனுக்கு வந்திருக்கிறன். அப்பிடியே உன்னையும் பாக்கலாம் எண்டு தெரிஞ்சவையிட்டை இங்கை வந்து விசாரிச்சுப் பாத்தன்...

ராகவனின் புதிர் போட்ட பார்வையைப் புரிந்து கொண்டவனாக...

"நீ எப்பிடி மெடிக்கல் றெப்பாகினாய் எண்டுதானே யோசிக்கிறாய்" சற்று சிரித்தபடியே.

"அது பெரிய கதை மச்சான்... நான் அங்கை இஞ்சையெண்டு கடன் பட்டு நீ அனுப்பின காசையும் போட்டு முதல்லை பிரான்ஸ் வரைக்கும் வந்து பார்த்தன்... என்னர ராசிக்கு வெளிநாட்டு வாழ்க்கை பொருந்தேலை... என்னர கெட்டகாலமோ நல்லகாலமோ தெரியாது.. வந்து ஒரு கிழமைக்குள்ளை அப்பிடியே அங்கையிருந்து என்னை பிடிச்சு அனுப்பிப் போட்டாங்கள்.

ஏற்கனவே எங்கடை குடும்ப நிலைமை கடும் கஸ்ரம்... ரண்டு மூண்டு தடைவ ஏஜன்சிக்கு காசு கட்டி ஏமாந்தும் போனம்... இனி ஆரிட்டை போய் உதவி கேக்கிறது. பட்ட கடனை கொஞ்சம் கொஞ்சமா ஊரிலேயே உழைச்சு கட்டித் தீர்ப்ப மெண்டிட்டு அப்பிடியே கொழும்பிலையே தங்கி இருந்திட்டன். ஊருக்கு போனாத்தானே பிரச்சனை..." மெல்லச் சிரித்தான் குமாரவேல்.

அங்கைதான் ஆனந்தியைச் சந்திச்சன். அவள் அப்ப கொழும்பு மெடிகல் கொலிச்சிலை படிச்சு கொண்டிருந்தாள். எனக்கும் அவளுக்கும் இடையிலை ஏற்பட்ட



**நோயின்ரை வேதனை தாங்கமுடியாமல் எத்தனையோ தடைவ என்ரை உயிரை மாய்ச்சுக்கொள்ள போயிருப்பன்... அப்பவெல்லாம் என்னர மகன்தான் என்ரை மனசிலை வந்து நிப்பான். வேதனை எல்லாம் காணமல் போயிடும்.**

நட்பு படிப்படியாக காதலா மாறிச்சிது. ரண்டு பேரும் திருமணம் செய்து கொண்டம் நானும் அவளுக்கேற்ற தராதரத்திலை இருக்கவேணுமெண்டதுக்காக அங்கேயே திரும்ப படிக்க ஆரம்பிச்சன். படிப்படியான முன்னேற்றம். பிள்ளைகளை கவனமாக வளர்த்து மருத்துவத்துறையிலையே படிக்க வைச்சன்.

"நாட்டிலை பெரிய பிரச்சனை நடந்தது. ஊரிலை இருந்த எங்கடை இனசனம் எல்லாம் கொழும்பு அங்கை இஞ்சை யெண்டு அள்ளுப்பட்டு ஓடிச்சிதுகள். அப்பதான் நான் உன்னுடைய அம்மாவையும் பார்த்தன்..."

இறந்து விறைத்துக் கிடந்த ராகவன் திடுமென உயிர்தெழுந்தான்... "அம்மாவை கடைசியா பாத்தனியா?..."

குமாரவேலு நிதானமாகத் தலையசைத்தான்...

என்னோட மனைவி வேலைசெய்த கொஸ்பிற்றலிலை... 1993ம் ஆண்டு... வடபகுதியிலை இருந்து கடுமையான நோயாலை பாதிக்கப்பட்ட நோயாளிகள் எண்டு சில வேரை செஞ்சிலுவைச் சங்கம் கொழும்புக்கு கொண்டு வந்திருந்தது.

அதிலைதான் உன்னோட அம்மாவும் இருந்தா...

நோய் நல்லாப் பரவீட்டிது... உன்னைப் பற்றிய எந்த விபரத்தையும் சொல்லக்கூடிய மனநிலையிலை அம்மா இருக்கேலை...

ராகவன் சற்று உடைந்தவனாக "அப்பதான் நான் இங்கை பிரஜா உரிமைக்கு போட்டிட்டு இருக்கிறனே... அது அம்மாவுக்கும் தெரியும்... அதுதான் நான் அங்கை வாறதை அம்மா கொஞ்சமும் விரும்பேலை.." ராகவன் உடைந்து விழுந்தான்...

"நான் நல்ல சுகமாயிருக்கிறன்... நீ எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு ஆறுதலா வா வாதம்பி எண்டுதானே கடைசி வரைக்கும் கடிதம் போட்டவா"... ராகவன் அந்தரித்தான்.

"எங்கை உனக்கு உண்மை தெரிஞ்சிட்டா... நீ அங்கை வந்திடுவாய் எண்ட பயத்திலை அம்மா மறைச்சிருக்கிறா... பெத்த தாயல்லே" ... குமாரவேலது கண்களும் கெஞ்சம் பனித்தன. ஒரு பெருமூச்சோடு தன்னையும் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு தொடர்ந்தான் குமாரவேல்.

"நீயில்லாட்டி என்ன மச்சான்... கடைசி நிமிசம் மட்டும் உன்ரை அம்மாவை என்ரை மடியிலைதானே வைச்சிருந்தன்...

"குமாரவேல்..." என்று ஈனமாக அழுதவன் "நான் எந்தப் பிறவியிலையடா உந்தக் கடனை அடைக்கப்போறன்" வீரிட்டு அழுதான் ராகவன்.

ராகவனை அமைதிப்படுத்திய குமாரவேல் தொடர்ந்தான்.

"கடைசியா ஒரு வார்த்தை மட்டும் உன்னை காணும் போது சொல்லு எண்டு என்னட்டைச் சொன்னவா..."

"நோயின்ரை வேதனை தாங்கமுடியாமல் எத்தனையோ தடைவ என்ரை உயிரை மாய்ச்சுக்கொள்ள போயிருப்பன்... அப்பவெல்லாம் என்னர மகன் தான் என்ரை மனசிலை வந்து நிப்பான். வேதனை எல்லாம் காணமல் போகிடும் அவன் பெரிய பணக்காரனா என்னை பாக்க வருவான் எண்ட நம்பிக்கைதான் இப்பவும் என்ரை மனசிலை நிலைச்சுநிக்கிது."

"என்னை மாதிரி இனிமே யாருமே இந்த கொடிய நோயாலையும் போராலையும் பாதிக்கப்பட்டு துன்பத்தை அனுபவிக்க கூடாது...போர் பொல்லாதது...போர் இல்லாத நாடா எங்கட நாடு மாற வேணும்... பசி பிணி பஞ்சம் எண்டு இனிமே யாருமே அழக்கூடாது... என்ரை மகன் பெரிய பணக்காரனா வரும்போது இதையெல்லாம் மற்றுவான் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கிறது..."

"உயிர்போற தறுவாயிலை மயக்க நிலையிலைக புலம்பின புலம்பல் இது"

குமாரவேல் அமைதியாகச்சொல்லி முடிக்க ராகவன் குழந்தைபோல தேம்பித் தேம்பி அழுதான்.

அதுக்கு பிறகு உன்னை தொடர்புகொள்ள பல தடவை முயற்சி எடுத்தன்... யாருக்குமே உன்னோட தொடர்பு இருக்கேலை...

"இந்தா மச்சான்... உன்ரை கையிலை குடுக்கச் சொல்லி உன்னோட அம்மா... என்னட்டை தந்த மோதிரம்... உன்னோடை மனிசியின்ரை கையிலை போடவெண்டு பாதுகாத்து வைச்சிருந்ததாம்..."

இரண்டு இதயங்கள் இணைந்த சின்னம் பதித்த அம்மாவின் மோதிரம்... இது... இது... அம்மாவுக்கு அப்பா போட்டுவிட்டது.

ராகவனின் பலத்த குரலெடுத்த அழுகையோடும் - குமாரவேலின் அரவணைப்போடும்...

குலுங்கிக் குலுங்கி அழுத ராகவனின் கண்ணீரோடும் ஆசுவாசப்படுத்திய குமாரவேலின் வார்த்தைகளொடும்... சில நிமிடங்கள் நிலைகுலைந்து கரைந்தன...

வெளிநாட்டுக்கு வந்தவர்கள் பெரிதாக எல்லாத்தையும் அடைந்து விட்டார்கள் என்பதும் தவறு... ஊரிலேயே தங்கிக் கொண்டவர்கள் எல்லா விதத்திலுமே தோற்று விட்டார்கள் என்பதும் தவறு... ராகவனே தொடர்ந்தான்.

"வா... வெளிலை கொஞ்சதூரம் காலாற நடந்திட்டு வரலாம். சின்ன வயசில ரண்டு பெரும் ஊரிலை நடப்பமே அதுமாதிரி... கொஞ்சம் பிறெஸ் எயர் எடுத்தமாதிரியும் இருக்கும் மனசும் கொஞ்சம் லேசாகும்" குமாரவேல் இளம்பருவ நினைவுகளோடு இணைய அவனை அழைத்தான்.

இருவரும் வாசல் கதவை அடைத்து விட்டு தெருவில் இறங்கி நடக்கின்றனர்.

கடும் குளிர்தான் இருந்தாலும் இப்போது மனசு கொஞ்சம் லேசாகத் தெரிந்தது ராகவனுக்கு...

"கொஞ்சம் குளிரா இருந்தாலும்... வெளிய நடக்க சந்தோசமா இருக்கடா..." ராகவன் ஆமோதிப்பது போல தலையசைத்தான்.

பனித்தூறல் குமாரவேலின் முகத்தை நனைக்க "மழை பெருக்கப் போகுதெண்டு நினைக்கிறன் குடையொண்டு எடுத்திட்டு வரட்டே மச்சான்"

"சாச்சா அது தன்பாட்டிலை விழட்டும்... இயற்கையை தடுக்கவேண்டாம்...

வெளி நாட்டிலை இருக்கிற எங்களை மாதிரி ஆக்கள் மன இறுக்கங்களுக்குள்ளை அடிபட்டு... உணர்வுகள் எல்லாம் உடைபட்டு... செத்த பிணங்களாத்தான் உலாவருகினம்... இப்பிடியான இயற்கையை கூட அனுபவிக்கிறதுக்கு நேரம் இல்லாத ஜடங்கள் மாதிரி..."

"அதுதான்... நான் இன்னும் ஊரிலையே இருக்க விரும்பிறன் மச்சான்..." சொல்லி விட்டு குமாரவேல் பலமாகச் சிரித்தான். "ஓம்... என்னோட கடைசி காலங்களும் ஊரிலைதான் இருக்கும்... அமைதியா... நிம்மதியா... உன்னோட நண்பனா..." இருவரும் சிரிக்கின்றனர்...

"என்னவோடா... மனசிலை ஒரு உறுத்தல்... அம்மாவுக்கு செய்ய வேண்டிய கடமையை கடைசி நேரத்திலை செய்ய முடியாமப் போச்சு... அதுதான் வருத்தம்.

இப்ப எல்லாம் இருந்தும்...எதுவுமே இல்லாத அனாதையாக நடுத்தெருவிலை நிக்கிறனே...

எனக்கு ஒரு உதவி செய்வியா குமாரவேல்... எனக்கு ஊரிலை ஒரு எல்டர்லி-கோம் கட்டவேணும்... பக்கத்திலையே ஒரு இலவச மருத்துவமனையும் கட்ட வேணும்...

அங்க வந்து தங்கிற தாய்மார் எல்லாரையும் என்னுடைய தாயாக நான் பராமரிக்க வேணும்... அதுக்காக எவ்வளவு பணம் செலவானாலும் பறவாயில்லை அதை நான் செய்வன்... ஆனா அதை நீதான் முன்னுக்கு நிண்டு நடத்த வேணும்... "ராகவன் தீர்க்கமாகச் சொன்னான்.

சற்று யோசித்த குமாரவேல் சிரித்தபடியே "ஞானப்பழம்" விடுதிக்கு பெயர் நல்லாயிருக்கா...

இருவரும் இளைய பருவ மகிழ்ச்சியோடு பலமாகச் சிரித்தனர்.

இருவரது சிரிப்பொலியோடு ஞானப்பழமும் சில ஆண்டுகளில் ஊரிலே கனிந்து இனித்தது.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RE/MAX ACE Realty Inc., Brokerage**

# *Awards & Gala 2018.*






















**RE/MAX® ACE**
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

416-270-1111 416-270-7000
3-1286 Kennedy Road Toronto, ON M1P 2L5
**www.remaxace.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மண்ணில் முதன்முறையாக ரியல் எஸ்டேட் துறைக்கு ஒரு அங்கிகாரம் வழங்கிய RE/MAX NORTH REALTY நிறுவனம் தனது முதலாம் ஆண்டு பூர்த்தி விழாவை மிக கோலாகலமாக NORTH GATE BY JETWING ல் கொண்டாடியதுடன் ரியல் எஸ்டேட் துறையில் சாதனைகள் புரிந்த விற்பனை முகவர்களுக்கு விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது

யாழில் இதுவே ரியல் எஸ்டேட் துறையினருக்கு கிடைத்த முதல் அங்கிகாரம் ஆகும்.

RE/MAX
NORTH REALTY
+94 77 566 0000
www.remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Inforce life -Annual General Meeting




















**iNFORCE LIFe**
**Financial Services Inc.**
**Delivering Promises. Building Trust.**

10 Milner Business Court, Unit 707, Scarborough,, ON, M1B 3C6
tel: **416-321-6000 / 416-909-0400**
fax: 416-321-6025
info@inforcelife.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONGRATULATIONS

## To Our 103 Award Recipients For the Year of 2018
























HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE

## HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE

Tel: 416-284-5555, 905-550-3333, Fax: 416-284-5727
111 Grangeway Ave., #301, Toronto, ON M1H 3E9
165 Dundas St. W, #900-4, Mississauga, ON L5B 2N6
Web: www.homelifegalaxy.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரும் பெண் விடுதலையும்

- மைதிலி தயாநிதி -

'அடிமைகள் யாராயினும், அவர்களுக்கு விடுதலை கொடுத்தால், அதினின்றும் யுகப்பிரளயம் நிச்சயமாக நேரிட்டு, அண்டசச்சுவர்கள் இடிந்துபோய் ஜகத்தே அழிந்து விடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப்படுத்தி ஆள்வோருடைய சம்பிரதாயம்' *(பாரதியார் நூல்கள்: கட்டுரைகள், பக்கம் 209).*

பாரதியாரின் பெண்விடுதலைப் பாடல்களைப் படித்த பின்னர், அவ்விடயம் தொடர்பாக உரைநடையில் அமைந்த அவரின் கட்டுரைகளை வாசிக்கும்போது, பெண் விடுதலையைச் சமூகத்தில் எவ்வாறு செயற்படுத்தல் வேண்டும் என்பது குறித்து அவர் பல்வாறாகச் சிந்தித்திருந்தமை புலனாகின்றது. வெறும் கற்பனாவாதியாக மட்டும் இராது பெண்விடுதலை தொடர்பாகச் செய்ய வேண்டியன யாவை என்பது குறித்து அவர் விரிவாகத்தனது கட்டுரைகளில் பேசுகின்றார். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த அவர் (1882-1921) தனது வாணாளில் பெண்விடுதலை தொடர்பில் காட்டிய அபரிமித ஆர்வமும், ஈடுபாடும் வாசகர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்குபவை.

பெண்விடுதலைக் கருத்துகள் தொடர்பில் பாரதியார் எதிர்மறை விமர்சனத்திற்குள்ளானதுமுண்டு. எடுத்துக்காட்டாக, C.S. லக்ஷ்மி Economic and Political Weekly இல் எழுதிய Symbols, Women and Tamil Nadu Politics (ஜனவரி15, 1983)எனும் கட்டுரையினைக் குறிப்பிடலாம். விமர்சனப் பகுப்பாய்வடிப்படையில் பார்க்கும் போது, பாரதியார் ஏனையவர்களால் சித்திரிக்கப்படுமளவிற்கு முற்போக்கானவர் இல்லை (Bharati, on critical analysis, was not as much of a progressive as he is made out to be) என்பது அவரின் வாதம். இதற்கு ஒரு மறுப்பினை சி.கே. இராமன் ஜூலை 23, 1983 திகதிய இதழில் வெளியிட்டுள்ளார். பெண்விடுதலை என்பது 'தொலைதூரக் கனவாக' இருந்த காலகட்டத்தில் பாரதியார் பெண் விடுதலை தொடர்பான தனது கருத்துகளினைக் கூறினார் என்பதைக்கவனத்தில் எடுத்தலின் அவசியத்தினை அவர் அதில் வலியுறுத்தியுள்ளார். கருத்துகளை மதிப்பீடு செய்யும் போது எழுத்தாளர் வாழ்ந்த காலம், சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுத்தல் மிக முக்கியமானது.

பெண்விடுதலைக்கு எதிரான சமூகத்தின் உளவியற் பயங்களைப் பாரதியாரே தனது கட்டுரைகளில் விவரிக்கின்றார்: 'பெண் கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்கள்'; 'பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு லோகமும் கட்டாயம் இடிந்து பூமியில் விழும் என்றும் வால் நட்சத்திரம் வகையராக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள்'; 'பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஜனசமூகம் குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர், பிறர் தமது கண்முன் ஸ்வேச்சையுடன் வாழ்வதை தாம் பார்க்கக் கூடாதென்ற அசூயையால் சொல்லுகிறார்களே ஒழிய வேறொன்றும் இல்லை' என்கிறார். சமூகத்தில் பெரும்பான்மையோர் பெண்விடுதலை தொடர்பாக இத்தகைய அச்சத்திலும், குழப்பத்திலும் இருக்கும் காலகட்டத்திற்றான் பாரதியார் பெண்விடுதலைக்கு ஆதரவான கருத்துகளை சுதேசமித்திரனில் எழுதுகிறார்.

இக்கட்டுரை பெண் விடுதலையை பாரதியார் எவ்வாறு ஊக்குவித்தார் என்பது குறித்தும், அது தொடர்பாக எத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது குறித்தும் அவர் கொண்டிருந்த சிந்தனைகளை ஆராய்கிறது. சென்னை திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயம் 1950ம் ஆண்டு வெளியிட்ட பாரதியார் நூல்கள்: கட்டுரைகள் எனும் நூலின் ஐந்தாம் பதிப்பினை இது ஆதாரமாகக் கொண்டது. இந்நூல் பாரதியார் எழுதிய 105 கட்டுரைகளினை தத்துவம் (28), மாதர் (17), கலைகள் (28), சமூகம் (32)எனும் தலைப்புகளில் வகுத்துத்தருகின்றது. இந்நூலின் முதற்பதிப்பிற்கு பாரதி பிரசுராலயம் எழுதிய முன்னுரையும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. 1910ம் ஆண்டு தொடக்கம் 1920ம் ஆண்டு காலம்வரை பாரதியார் பெரும்பாலும் 'சுதேசமித்திரனில்' எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் என்று அம்முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் தொடர்பான 17 கட்டுரைகளிற்



சில உரையாடல் வடிவிலும், கற்பனைக் கதையாகவும் அமைந்துள்ளன. இரு ஆக்கங்கள் ('பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?' 'சியூசீன் என்ற சீனத்து ஸ்திரீயின் கதை') அவரது மகள் தங்கம்மாவினால் கூட்டங்களில் வாசிக்கப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண், பெண் இருவரும் தனிமனிதர்களாகக் கணிக்கப்படல் வேண்டும் என்பதும், அவர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக இயங்கக் கூடிய சமூக வெளி இருக்க வேண்டும் என்பதும் பாரதியின் கருத்துகள். ஆனால், ஆண்களால் அடிமைப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் பெண்கள் இவ்வாறு சுதந்திரமாக இயங்க முடியாதிருக்கின்றனர். விடுதலை என்றாலென்ன என்ற வினாவை எழுப்பி, அதற்கிவ்வாறு விடையளிக்கின்றார் பாரதி. 'பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வையாமலும், கொல்லாமலும், அவர்களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றப்படி ஏறக்குறைய 'நான் எது பிரியமானாலும் செய்யலாமென்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக்கிடத் தகும்' என்கிறார். இது பிரிட்டிஷ் தத்துவவாதியும், மானிடவியல் அறிஞருமான ஹேபேட் ஸ்பென்சரின் (1820-1903) 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்டமானதெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை' எனும் கருத்தினை ஒட்டியது என பாரதியாரே குறிப்பிடுகின்றார். இங்கு பாரதியார் குறிப்பிடுவது தனிமனித சுதந்திரம். இது உலகில் பெரும்பான்மையான ஆண்மக்களுக்கே இன்னும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்ளும் அவர், ஆண்கள் ஒவ்வொரு நாட்டிலும் இதற்காகப் பாடுபடுகின்றனர் என்று கூறுகின்றார். 'ஆண்மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப்பட்டிருக்கும் கொடுமை சகிக்கமுடியாது. ஆனால், இதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண் கூட்டத்தை ஆண் கூட்டம் அடிமைப்படுத்தி வைத்திருப்பதால் விளைகின்றன' என்று பெண்ணடிமைத்தனம் எல்லா அடிமைத்தனங்களிலும் கொடுமையானது

தொடர்தல் 104ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரும் பெண்...

103ம் பக்கத் தொடர்ச்சி...

என்கிறார்.

பெண்ணைத் தனியாளாகப் பார்த்தல், ஆண்கள் அனுபவிக்கும் சுதந்திரங்களைப் பெண்ணும் அனுபவித்தல் எனும் பெண் விடுதலையின் அடிப்படைத் தத்துவங்கள் இந்தியப் பண்பாட்டிற்குப் புதுமையானவை எனினும், ஆண்-பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே இந்தியா நவீனத்துவத்தை நோக்கிப் பயணிக்கமுடியும் என்று பாரதியார் கருதினார். இந்தியா நவீனமயமாதல் (modernity) என்பது இந்தியா காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரநாடாக உருவாவதற்கு இன்றியமையாததோர் அம்சமாகும். இந்தியர்கள் தம்மைத் தாமே ஆளத் தகுதியற்றவர்கள். நவீனத்துவத்தை சற்றும் எட்டாதவர்கள். தமது பெண்களை அடிமைகளாக நடத்துவதன் மூலம் இதைத் தெரிந்து கொள்ளமுடியும் எனும் கருத்து மேனாடுகளில் பரவலாக இருந்து வந்தது. எனவே, இந்தியாவின் நவீனமயமாக்கத்தின் அளவுகோல் பெண்களின் சமூகத்தரத்தில் தங்கியிருந்தது. இத்தகைய காலகட்டத்தில் பாரதியார் சுதேசமித்திரன் வாசகி ஒருவர் பத்திரிகாசிரியருக்கு எழுதிய கடிதத்தின் சாரத்தைத் தந்து, பெண்களின் நிலை சமூகத்தில் மேலோங்குவதற்கு ஐரோப்பிய முன்னுதாரணத்தைப் பின்பற்ற வேண்டிய தன் அவசியத்தை 'நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்' என்ற கட்டுரையில் விளக்குகின்றார். 'உலகத்தில் ஒரு ஸ்திரீ ஜனனம் எய்திய மாத்திரத்திலே பூமாதேவி மூன்றே சொச்சம் முழம் கீழே அமிழ்ந்து போய் விடுவதாக இந்நாட்டில் முந்தைய ஆண் மக்கள் எழுதி வைத்திருப்பதையும், அது போல் ஸ்திரீகளை இழிவாகவும் குறைவாகவும் சொல்லும் வேறு பல சாத்திர வசனங்களையும் மேற்கோள் காட்டி, அந்த மாது நம் பெண்மக்களின் ஸ்திதி விலங்குகளின் ஸ்திதியைக் காட்டிலும் பரிதாபத்துக்கு இடமாக விளக்கி மிகவும் வருத்தமும் உணர்த்தியிருந்தார். இப்படிப்பட்ட நம்முடைய ஸ்திரீகளின் நிலைமையை நவீன ருஷ்யாவில் ஸ்திரீகளின் விஷயமாக ஏற்பட்டிருக்கும் சட்டங்களுடன் ஒப்பிட்டுப்பாருங்கள். அப்போதுதான் நம்மை ஐரோப்பிய நாகரிகம் எந்த சக்தியினாலே கீழே வீழ்த்திற்று என்பதும், எந்த அம்சங்களில் நாம் ஐரோப்பிய நாகரிகத்தின் வழியைப் பின்பற்றத்தகும் என்பதும் தெளிவுறப் புலப்படும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமைகள் கிடையாது. இருபாலோரும் சமானமாகவே கருதப்படுவார்கள் என்று ருஷ்யச் சட்டம் கூறுமிடத்திலே நாம் ஐரோப்பிய நாகரிகத்தின் கருத்தை அனுஸரித்தல் மிக, மிக, மிக, மிக, அவசரம்' என்று பாரதியார் கூறுகின்றார். ஆண்-பெண் சமத்துவக்கோட்பாட்டினை இந்தியா கடைப்பிடிக்க வேண்டியது எவ்வளவு அவசரமான விடயம் என்பதை 'மிக' என்ற சொல்லை நான்கு முறை பயன்படுத்தியதன் மூலம் அவர் புலப்படுத்தியுள்ளார்.

'பெண் விடுதலைக்குப் பெண்களே பாடுபடல் வேண்டும்' என்ற கருத்தினையும் பாரதியார் வலியுறுத்தினார். 'எல்லா தேசங்களிலும் பெண்கள் மேன்மேலும் சுதந்திரம் பெற்று மனித ஜாதியை மேன்மைப்படுத்த முயற்சி செய்கிறார்கள். தமிழ்நாட்டு ஸ்திரீகள் மாத்திரம் தமது மனுஷ்ய பதவியை ருசுப்படுத்துவதற்கு யாதொரு வழியும் செய்யாமல் இருக்கிறார்களே! ஏன்? என்ன காரணம்?' என்று கட்டுரையொன்றிற் கேட்கின்றார் (பக்கம்298). பெண் விடுதலைக்கு உழைக்க முன்வரும் பெண்களை அவர் பாராட்டப்பின்னின்றதில்லை. 'தமிழ் நாட்டின் விழிப்பு' எனும் கட்டுரையில் தமிழ் நாட்டுப் பெண்கள் விடுதலை அமைப்புத் தலைவி மங்களாம்பிகையையும், அவருக்குத் துணையாக நிற்கும் தியோசபிக்கல் சபையைச் சேர்ந்த அன்னி பெசண்டையும் இவ்வாறு பாராட்டுகின்றார்: 'இவ்விருவராலும் இப்போது பாரததேசத்தில் உண்மையான பெண் விடுதலை உண்டாக ஹேது ஏற்பட்டது. இவ்விருவருக்கும் தமிழுலகம் கடமைப்பட்டது. இவர்களுடைய கட்சி என்னவென்றால்: ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு. மனம் உண்டு. புத்தி உண்டு. ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்களுமல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவும் அல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியேதான். புறவுறுப்புகளில் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி.' பெண்கள் விடுதலை அமைப்பு தமிழ் நாட்டில் பலமடைந்து வருவது குறித்து மகிழ்ச்சியுறுவதாகக் கூறும் அவர் பெண் விடுதலை பொருட்டு தர்ம யுத்தமொன்றினைத்தொடங்குமாறு பெண்களுக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

'பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?' எனும் கட்டுரையில் திருமண வாழ்வில் கணவன் - மனைவி சமத்துவத்தைத் தோற்றுவிப்பதற்கான தர்ம யுத்தத்தைக் கணவன்மாருடன் இந்தக் கணமே தொடங்குமாறு பெண்களுக்கு பாரதியார் அறிவுறுத்துகின்றார். இங்கு தேசவிடுதலைக்கான சொல்லாடல்களை பாரதியார் பயன்படுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. ஒரு ஸ்திரியானவள் சாத்விக எதிர்ப்பு முறையை அனுசரிக்க விரும்பினால் தனது கணவனிடம் சொல்லத்தக்கது யாதெனில், 'நான் எல்லாவகைகளிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று இராத்திரி சமையல் செய்யமாட்டேன். எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்று கொண்டிருப்பேன். உனக்குச் சோறு போட மாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் ரஸ்தாவில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும் மாட்டேன்.' என்று சொல்லி விடுவதுடன் இந் நிலைப்பாட்டை மாற்றக்கூடாது என்கிறார். 'இங்ஙனம் கூறும் தீர்மான வார்த்தையை, இந்திரிய இன்பங்களை விரும்பியேனும், நகை, துணி முதலிய வீண் டம்பங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர்வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும் மாற்றக்கூடாது. சிறிது சிறிதாக, படிப்படியாக ஞாயத்தை ஏற்படுத்திக்கொள்வோம் என்னும் கோழை நிதானகட்சியாரின் மூடத்தனத்தை நாம் கைக்கொள்ளக்கூடாது. நமக்கு ஞாயம் வேண்டும். அதுவும் இந்தக் கணத்தில் வேண்டும்' என்று உறுதியாக இருக்குமாறு பெண்களுக்கு அறிவுறுத்துகின்றார். பெண் விடுதலைக்கான போராளிகளாக பெண்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பது இதன் சாராம்சம்.

தனிமனித சுதந்திரத்தை ஆணுக்கு இணையாகப் பெண்ணும் அனுபவிக்கக்கூடியதாக இருக்க வேண்டுமாயின் பெண்ணைக் குறித்த சமூகத்தின் பார்வை, அணுகுமுறை, சமூகப் பழக்க வழக்கங்கள் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்படல் வேண்டியதன் அவசியத்தை பாரதியார் வலியுறுத்துகிறார். 'பெண் விடுதலை' எனும் கட்டுரையில் பெண் விடுதலைக்கான ஆரம்பப்படிகள் எனப் பின்வருபவற்றை அவர் பட்டியலிடுகின்றார். விளக்கத்தின் பொருட்டு அவர் மொழியைச் சற்று மாற்றியுள்ளேன்.

- பருவமடைய முன்னர் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது. (பால்ய விவாக ஒழிப்பு)
- விருப்பமில்லாத ஆடவனை மணம் செய்யுமாறு வற்புறுத்தலாகாது (பலாத்கார மண ஒழிப்பு)
- விவாகத்தின் பின்னர் கணவனை விட்டு நீங்கப் பெண்ணிற்கு இடமளிக்கவேண்டும். அதற்காக அவளை அவமதிக்கக் கூடாது
- சொத்தில் பெண்களுக்கு உரிமை வேண்டும்.
- மணம்புரியாது தனியே இருந்து வசிக்க விரும்பும் பெண்களை அவர்கள் விரும்பியவாறு கைத்தொழில், வியாபாரம் செய்து சீவிக்க இடம் கொடுக்கவேண்டும்.
- கணவனைத் தவிரப் பிற ஆடவருடன் பேசக் கூடாது எனும் நிபந்தனையை ஒழிக்க வேண்டும்.
- ஆண்களைப் போலவே உயர்தரக்கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பெண்களும் பயில வசதிகள் செய்ய வேண்டும்.
- தகுதியுடன் அவர்கள் அரசாங்கத்தில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் தடுக்கக் கூடாது
- சுயராஜ்யம் கிடைக்கும்போது பெண்களுக்கும் இராஜாங்க உரிமைகளிலே கட்டாயம் பங்கு கொடுக்க வேண்டும்.

பெண் விடுதலையைப் பாரதியார் பல்வேறு வழிகளில் ஊக்குவித்து எழுதினார். 'தமிழ் நாட்டு நாகரிகம்' எனும் தலைப்பிட்ட கட்டுரையில் தமிழ் நாட்டில் பெண்கள் புராதன காலத்தில் அதிக சுதந்திரத்துடன் இருந்தனர் என்பதற்கு பழந்தமிழகத்தின் ஒரு பகுதியான சேரநாடான கேரளத்தில் பெண்கள் 'மிக உயர்ந்த சுதந்திரம்' உடையவர்களாக இருப்பது மட்டுமன்றி, பெண் சந்ததியினருக்கே சொத்துரிமை இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

இதே கட்டுரையில் தமிழ்ப் பெண்கள் அறிவில் ஆண்களுக்குச் சளைத்தவர் அல்லர் என்பதற்கு ஔவையாரை முன்வைத்து அவர் கூறும் வாதம் சுவாரஸ்யமானது. 'இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே ஆண்மக்களுக்குச் சமானமான உரிமைகளை பெண்களுக்குக் கொடுப்பது தகாதென்று வாதம் பண்ணும் கட்சியார், மாதர்கள் இயற்கையிலேயே ஆண் மக்களைக் காட்டிலும் அறிவில் குறைந்தவர்கள் என்றும், ஆதலால் வீட்டுக் காரியங்களுக்கே அவர்கள் தகுதியுடையோர் ஆவர் அல்லாது, அறிவு வன்மையால் நடத்த வேண்டிய நாட்டுப் பொதுக்காரியங்களை நிர்வகிக்க அவர்களுக்குத் திறமை கிடையாது என்றும் தர்க்கிக்குமிடத்தே, அதற்கு ஒரு சாட்சியமாக, 'ஆண் மக்களில் ஷேக்ஸ்பியர் எனும் கவியரசர் எழுதியிருப்பது போன்ற கவிதை எழுதும் திறமை கொண்ட ஸ்திரீ ஒருத்தி நமது நாட்டில் எப்போதேனும் தோன்றியிருப்பதுண்டா? ஏன் தோன்றவில்லை? இதனால் இயற்கையிலே ஸ்திரீகள் ஆண் மக்களைக் காட்டிலும் புத்தியில் குறைந்தவர்கள் என்பது தெளிவாக விளங்குகின்றதன்றோ?' என்கிறார்கள். தமிழ் நாட்டிலோவெனில் இப்படிப்பட்ட வாதம் செல்லாது. அதற்கு நேரிடையாக இந்நாட்டில் ஸ்திரீகள் 'ஔவையாரைப் போல் கவிதையும், சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண்மகன் இங்கு பிறந்திருக்கிறானா? ஏன் பிறக்கவில்லை? இதினின்றும் ஆண்மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத் திறமையில் குறைந்தவர்கள் என்பது தெளிவாக விளங்குகின்றதன்றோ?' என்று வாதிடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்' என்று கூறுகின்றார்.

மேலும், ஔவை குறள் எனும் நூல் உபநிஷதத்திற்கு சமானமாகக் கருதப்பட்டு வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டும் பாரதியார், வள்ளுவரினும் மிகச் சிறந்த புலவர் ஔவை எனக் கணிக்கின்றார். வள்ளுவர் அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் பாட 1330 குறள்களை இயற்ற வேண்டியிருந்தது. ஆனால், ஔவையோ ஒரு வெண்பாவிலேயே அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களையும் உள்ளடக்கிப் பாடியுள்ள மைமையை எடுத்துக்காட்டுகின்றார்.


ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து இம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

இங்கு ஈதல் என்பதைப்பொருளால் மாத்திரமன்றி, வாக்காலும், மனத்தாலும், உடற்செய்கையாலும் பிறர் இன்னல் நீக்கி, அவர்களுக்கு இனியன புரிதல் எனப் பாரதியார் மீள்வாசிப்புச் செய்கிறார்.

அத்துடன், வெளிநாடுகளில் நடைபெறும் பெண்விடுதலை தொடர்பான முயற்சிகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பாரதியார் பெரிதும் ஆர்வம் காட்டினார். அவர் அவ்வாறு அறிமுகப்படுத்தியவருள் ஒருவர்தான் சியூ, சீன் (Qiu Jin) 1875-1907 எனும் சீனப்புரட்சிக்காரி. அவளின் வாழ்க்கை வரலாற்றைத் தந்ததுடன், 'விடுதலைக்கு மகளிரெல்லோரும் வேட்கை கொண்டனம்' எனத் தொடங்கும் அவளின் கவிதை ஒன்றினையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

பெண்விடுதலை விடயத்தில் அவர் முஸ்லிம்களையும் இணைத்துக்கொள்ள விரும்பினார். 'ஏக பத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண்-பெண் சமத்துவம்' என்ற கொள்கைகளை முஸ்லிங்களும் பின்பற்றல் வேண்டும் என்பது அவர் கருத்து. அவரின் இக்கருத்துக்கு அக்காலத்தில் முஸ்லிம்கள் மத்தியில் எவ்வித எதிர்வினை இருந்தது என்பது ஆராயப்பட வேண்டியது. பல்தாரமணப் பிரச்சினையை மையமாகக் கொண்டு 22.05.1920ல் சுதேச மித்திரனில் 'ரெயில்வே ஸ்தானம்' எனும் சிறிய கதையை பாரதியார் எழுதினார். இக்கதையில் முஸ்லிம் ஒருவர் சகோதரிகளை ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியராகக்கொள்ளலாம் என்ற தவறான செய்தி இடம் பெற்றிருந்தமை குறித்துப் பின்னர் அவர் பத்திரிகை ஆசிரியரிடமும், வாசகரிடமும் மன்னிப்புக் கோருகிறார்.

இறுதியாக, பெண் விடுதலை விடயத்தில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் பாரதியார் தயாராக இருக்கவில்லை என்பதை அவரின் 'இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை' எனும் கட்டுரை காட்டுகின்றது. *'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா நீ வாழ்க, வாழ்க!'* என்று தான் வாழ்த்திய மகாத்மா காந்தி பெண் விடுதலையின் ஆரம்பப்படிகளுள் ஒன்றான 'விதவைகள் மறுமணம்' தொடர்பில் கொண்டிருந்த கருத்துகளை பாரதியார் மறுதலிக்கின்றார். 15 வயதுக்கு உட்பட்ட விதவைகளும், மற்றும் இளம் கைம்பெண்களும் மாத்திரம் மறுவிவாகம் புரியலாம் என்பது காந்தியின் கொள்கை. இதைச் சாடும் பாரதியார், 'விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரை புனர் விவாகம் செய்து கொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத் தக்க மாதரை மறுமணம் செய்து கொள்ளலாம்.' இதைத்தைரியமாகத் தலைவர்கள் போதிக்க வேண்டும். மக்களும் தைரியமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறுகின்றார்.



maithilithayanithy@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்கால இலக்கியம்: சமய மரபுகள்சார் இலக்கிய ஆக்கங்கள்

- நா. சுப்பிரமணியன் -

சோழர்காலப்பகுதியின் சமய மரபுகள்சார் இலக்கிய ஆக்கங்கள் பற்றிய பார்வையிலே சைவப் பேரலக்கியங்களில் முதலாவதான சேக்கிழாரின் பெரியபுராணத்தின் உருவாக்கப் பின்புலம் பற்றி நோக்கிவருகிறோம். அவ்வாக்கம் சீவகசிந்தாமணிக்கு எதிராக எழுந்தது என்ற தகவல் கடந்த கட்டுரையிறுதியில் முன்வைக்கப்பட்டது அத்தொடர்பிலான விளக்கங்களுடன் இக்கட்டுரை தொடர்கிறது.

திருத்தொண்டர்புராண வரலாறு என்னும் சேக்கிழார் நாயனார் புராணம் என்றநூலின் 20முதல் - 24வரையான நான்கு பாடல்களிலே இத்தகவல் விரித்துரைக்கப்படுகிறது. சோழ நாட்டு மக்களும் மன்னனும் சீவகசிந்தாமணியின் சுவையிலே ஈடுபட்டுத் திளைத்திருந்த சூழலைக்கண்டு மனம் நொந்தசேக்கிழார் அந்நிலைமையை மாற்றும் முனைப்புடனேயே சைவத்திருத் தொண்டர் வரலாற்றை 'திருத்தொண்டர் புராண'மாக விரித்துரைக்க முற்பட்டார் என்பதே மேற்படி பாடல்கள் தரும் தகவலாகும்.

மேற்படி தகவலைத் தந்துள்ளதான சேக்கிழார் நாயனார் புராணம் என்ற இந்நூலின் ஆசிரியர் தமிழகத்தின் சிதம்பரம் தலத்தைச் சார்ந்த கொற்றவன்குடி என்ற

**இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை: 61**

ஊரினரான உமாபதி சிவாசாரியாராவார். இவர் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் சைவ சித்தாந்த தத்துவ ஆசிரியர்களில் ஒருவர் என்பது சைவ உலகில் பொதுவாக அறியப்பட்ட செய்தியாகும். அவருடைய காலம் 13ம் நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் 14ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையானதாகும்.

பெரியபுராணம் 12ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்ததாகும். அவ்வகையில் சேக்கிழார் நாயனார் புராணம் என்ற நூலானது பெரியபுராணத்தின் பின் ஏறத்தாழ 150 ஆண்டுக் காலப்பகுதிக்குள் எழுந்த தென்பதை உணர்ந்துகொள்ளலாம். அவ்வகையில், அன்றைய தமிழ்ப் புலமைச் சூழலில் குறிப்பாக சைவத்தமிழ் இலக்கியவாதிகள் மத்தியில் நூறாண்டுகளுக்கு மேலாக நிலவிவந்திருக்கக் கூடிய ஒரு செவிவழிச் செய்தியையே உமாபதி சிவாசாரியார் தமது மேற்படி நூலில் பதிவு-செய்துள்ளார் என்பது ஊகித்துணரக்கூடியதேயாகும்.

பெரியபுராணத்தின் உருவாக்கப் பின்புலம் தொடர்பான இச்செய்தியானது தமிழகத்தில் பொது ஆண்டுக்கு பின் (கி.பி.) 6 - 7ம் நூற்றாண்டுகளில் உருவான 'சைவ-சமண மோதல்' என்ற பிரச்சினை அம்சமானது பொ.ஆ.பி. 12 - 13ம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்தது என்பதையும் இலக்கியத்தளத்தில் அது தீவிரமாக வெளிப்பட்டு நின்றது என்பதையும் உணர்த்துவதாகும்.

இப்பேரிலக்கியம் சுந்தரமூர்த்திநாயனாரின் திருத்தொண்டத்தொகை மற்றும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை முன்னோடியாகக்கொண்ட தென்பதை முன்னரே (கடந்த கட்டுரையில்)நோக்கியுள்ளோம். அந்நூல்கள் தந்துள்ள வரிசைப்படியே நாயன்மார்களின் கதைகள் இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றன. அவ்வகையில் முதலாவதாக அமையும் தடுத்தாட் கொண்ட புராணம் என்ற கதைப்பகுதியானது சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடியது வரையான கதையம்சங்களை எடுத்துரைக்கிறது. அதனைத்தொடர்ந்து திருத்தொண்டத்தொகையில் இடம்பெற்ற பெயர் வரிசைப்படி முதலில் தில்லைவாழந்தணர்கள், திருநீலகண்டர், இயற்பகையார் என ஒவ்வொருவரைப் பற்றிய கதைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வகையில் 63 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்களின் கதைகளை இது எடுத்துரைக்கிறது. கதைப்பகுதிகள் ஒவ்வொன்றும் புராணம் என்ற தலைப்புடன் அமைந்துள்ளன. (உ-ம்: கண்ணப்ப நாயனார் புராணம், காரைக்காலம்மையார் புராணம்).

இப்பேரிலக்கியத்தின் பெயரைத் திருத்தொண்டர் புராணம் என்றே குறிப்பிட்டுள்ளார். (கடவுள் வாழ்த்து: 10ம் பாடல்.) ஆயினும் பெரியபுராணம் என்ற பெயரே பெருவழக்கில் நிலைபெற்றுவிட்டது. 'பெரியவர்களின் - அதாவது வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர்களின் புராணம்' என்ற பொருளிலேயே இப்பெயரை இவ்வாக்கம் பெற்றது எனத் தெரிகிறது. இவ்வாக்கத்துக்கு ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் என்ற ஒரு பெயரும் கல்வெட்டுகளில் பயின்றுவந்துள்ளது என்பது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. சைவ மரபிலே ஆளுடைய நம்பி என்ற சொல் சுந்தரரைக் குறிப்பதாகும். (பார்க்க:பேராசிரியர் அரங்க இராமலிங்கம் பெரியபுராணம் சில சிந்தனைகள்-ப.130.)

இத்தொடர்பிலே 'புராணம்' என்ற பெயர் தாங்கிய இலக்கியவகை பற்றியும் தமிழில் அது பயிலத்தொடங்கியமை பற்றியும் அம்மரபில் பெரியபுராணத்துக்குரிய முக்கியத்துவம் பற்றியுமான சில வரலாற்றுக் குறிப்புகளை இங்கு பதிவுசெய்வது அவசியமாகிறது.

புராணம் என்பது காவியம் போலவே வடமொழியிலிருந்து தமிழுக்கு அறிமுகமான ஒரு பேரிலக்கியவகையாகும். 'புராணம்' என்ற சொல்லுக்கு 'தொல்கதை' (மிகப் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் கதை) என்பது பொருள். இந்திய மரபிலே பண்டைக்காலம் முதலே சமூகமத்தியில் செவிவழியாகவும் எழுத்திலும் பேணப்பட்டுவந்துள்ள பெருங்கதைகள் பல புராணங்கள் என்ற பெயரால் சுட்டப்பட்டுவருகின்றன.

இவை, உலகத்தோற்றம், அரசமரபுகளின் உருவாக்கம், வம்சங்களின் வரலாறு மற்றும் கடவுளர் பற்றியும் அவர்களது பேராற்றல் பற்றியுமான நம்பிக்கைகள் முதலியவற்றை முக்கிய உள்ளடக்க அம்சங்களாகக்கொண்டு கதைகளின் வடிவில் அமைந்தனவாகும். கடவுளர் பற்றிய நம்பிக்கைகள் சார்ந்து வடமொழியில் எழுந்த புராணங்களில் முக்கியமானவை 'பதினெண் மஹாபுராணங்கள்' என்ற பெயரில் வழங்கிவருகின்றன.

இவ்வாறான வடமொழிசார்ந்த புராண மரபுசார் செய்திகளும் கதையம்சங்களும் தமிழகச் சூழலில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறியப்படத்தொடங்கிவிட்டன. தமிழின் காலத்தால் முற்பட்ட இலக்கிய ஆக்கங்களான சங்கப்பாடல்களில் - குறிப்பாக திருமுருகாற்றுப் படை மற்றும் பரிபாடல் ஆகியவற்றில் - இவ்வகைச் செய்திகளும் கதையம்சங்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றையடுத்து எழுந்தவையான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய தமிழின் முதற் பேரிலக்கியங்களிலும் இத்தகைய பதிவுகளைக் காணலாம்.

ஆயினும் பொ.ஆ.பி. ஆறாம் நூற்றாண்டையடுத்து, தமிழகத்தில் சைவம் மற்றும் வைணவம் ஆகிய சமயங்கள் சார்ந்த 'பக்தியியக்க'ங்கள் உருவானதன் பின்னரேயே மேற்படி புராணமரபுசார் சிந்தனையம்சங்கள் தமிழர் சமூகமட்டத்திற்குப் பரவலான நிலையில் எடுத்துச் செல்லப்பட்டன. மேற்படி சமயப்பிரிவுகளிரண்டையும் சார்ந்த பக்தியியக்கங்களை முன்னெடுத்தவர்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் அச்சமயநிலைகள் சார்ந்த நம்பிக்கைகளை - குறிப்பாக, சிவன், திருமால் ஆகிய தெய்வங்களின் உயர்நிலைகள் மற்றும் அருளாற்றல்கள் முதலியன தொடர்பான நம்பிக்கைகளைச் சராசரி சமூகமாந்தரிடம் இசைத்தமிழ்ப் பாடல்களின் ஊடாக இட்டுச்சென்றவர்கள் என்பதறிவோம். இவர்களுடைய இவ்வகை முயற்சிகளுக்கு ஆதாரங்களாக அமைந்திருந்தவை வடமொழி சார்ந்தவையான மேற்குறித்த பதினெண் மஹாபுராணங்களுட் பலவற்றின் கதையம்சங்களேயாகும்.

> **நாயன்மார் பலரின் வாழ்க்கை முறைகள் பற்றிய தகவல்களை ஒரு கள ஆய்வாளருக்குரிய தேடலூக்கத்துடனும் பொறுப்புணர்வுடனும் திரட்டித் தொகுத்துக்கொண்ட பின்னரே அவர்கள் பற்றிய கதைகளைச் சேக்கிழார் பெரியபுராணமாகக் கட்டமைக்க முற்பட்டுள்ளார்.**

மேற்சுட்டியகால நாயன்மார்களிருவரின் பாடற்பகுதிகளுட் சில புராணம் என்ற பெயர் சுட்டியமைந்தன என்பதும் இங்கு குறிப்பிடவேண்டிய முக்கிய செய்தியாகும். அவை, நாவுக்கரசரின் 'தசபுராணம்', 'இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை' மற்றும் 'ஆதிபுராணத் திருக்குறுந்தொகை' ஆகியனவும் (திருமுறை: 4:14, 5:209, 214) மணிவாசகரின் சிவபுராணமும் (திருவாசகம்:1) ஆகும்.

வடமொழிசார் புராணமரபு தமிழில் பரவலாக அறியப்படத்தொடங்கிய மேற்படி பக்தியியக்கக் காலகட்டத்தை அடுத்து ஏறத்தாழப் பொ.ஆ.பி. 10ம் நூற்றாண்டளவிலே தமிழ்ச் சூழலிலே புராணம் எனப் பெயர்தாங்கிய தனிநிலையிலான பெருநூல்கள் எழத்தொடங்குகின்றன. இவ்வகையில் குறிப்பாக, பொ.ஆ.பி. 12ம்நூற்றாண்டு வரையான காலப்பகுதியல் சாந்திபுராணம், புராண சாகரம், கன்னிவனபுராணம், அஷ்டாதச புராணம் ஆகிய தலைப்பக-ளிலான ஆக்கங்கள் தமிழிலே எழுந்துள்ளன என ஆய்வுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறாக அறியப்பட்ட ஆக்கங்கள் பேணப்படாத நிலையில் அழிந்துபட்டன. அந்நிலையில் பேணப்பட்டனவாக இன்று எமக்குக்கிடைக்கும் முதலாவது புராண ஆக்கம் என்ற பெருமைக்குரியதே நாம் இங்கு நோக்கிவரும் பெரியபுராணம் ஆகும். (இது 12ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்தது என்பது மேலே நோக்கப்பட்டது)

இவ்வாக்கம் இரு காண்டங்களும் 13 சருக்கங்களும் 4286 விருத்தப்பாக்களும் கொண்டதாக திகழ்கிறது. இவ்வாக்கத்துக்குப் புராணம் என்ற பெயர் வழங்கப்பட்டாலும் கட்டமைப்பு நிலையிலே காவியம் என்ற பேரிலக்கிய வகைக்குரிய எடுத்துரைப்பு மற்றும் வருணனை மரபுகளையும் கொண்டதாகவே இது திகழ்வது. (பின்னாளில் கச்சியப்பசிவாசாரியார் பாடிய கந்தபுராணத்திலும் இப்பண்பைச் சிறப்பாக அவதானிக்கமுடியும்). இவ்விடத்தில், புராணம் மற்றும் காவியம் ஆகிய இரு இலக்கிய வகைகளுக்கும் உள்ள பொதுத்தன்மைகள் மற்றும் வேறுபாடுகள் ஆகியன தொடர்பான சில முக்கிய செய்திகளை இங்கு சுருக்கமாகவேனும் பதிவுசெய்வது அவசியமாகிறது.

இவையிரண்டும் வடமொழியில் உருவாகித் தமிழில் அறிமுகமானவை என மேலே கண்டோம். இவற்றுள் புராணம் என்பது குறித்த ஒரு கதையம்சத்தை விரித்துரைப்பது. அவ்விரித்துரைப்புச் செயற்பாட்டிலே குறித்தசில 'அற-ஒழுக்க' அம்சங்களும் சமய மரபுசார் நம்பிக்கைகளும் வழிபாட்டு மரபுகள்சார் செய்திகளும் வலியுறுத்தப்படும். புராணக்கதையை விரித்துரைப்பவர் ஒரு போதனையாளர், அதாவது ஆசிரியர். கேட்போர் மாணவர்கள் அல்லது பொது மக்கள். வடமொழியில் எழுந்த புராணங்கள் பலவும் சூதர் என்ற மகாமுனிவரால் சக முனிவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டவையாகவே அறியப்படுவன.

இவ்வாறான புராணக்கதைகளுக்கு குறிப்பாகப் பண்டைய புராணங்களுக்குத் தோற்றக்காலம் என ஒன்று குறிப்பிடப்படுவதில்லை. ஏனெனில் அவை மக்களுடைய வாழ்வியல் அநுபவங்களினூடாக முகிழ்த்துப்படிப்படியாகக் கதைவடிவத்தை அடைந்தவையாகும். வடமொழிசார்ந்தவையாக மேற்குறித்த பதினெண் மஹாபுராணங்களுட் பலவும் இவ்வாறு உருவாகிவளர்ந்தனவேயாகும்.

காவியம் என்ற பேரிலக்கியவகையானது குறித்த ஒரு கவிஞனின் படைப்பாகும். அவ்வகையில் அது குறித்த ஒரு காலகட்டத்தில் உருவானதாகும். புராணங்களைப் போலவே காவியங்களும் 'அற-ஒழுக்க' அம்சங்களையும் சமய மரபுசார் நம்பிக்கைகளையும் வழிபாட்டுமரபுகள்சார் செய்திகளையும் உள்ளடக்கங்களாகக் கொண்டு உருவானவைதான். ஆனால் மேற்படி உள்ளடக்க அம்சங்களை மையப் படுத்திக் கதை கூறுவது மட்டும் காவியத்தின் நோக்கமன்று. உலகியல் சார்ந்த உணர்வுகள் மற்றும் இன்ப-துன்ப அநுபவங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி ஒரு மானிடநிலைப்பட்ட வாழ்வியலைக் கற்பிதமாகக் கட்டமைத்துக் காட்டுவது என்பது காவியத்தின் சிறப்பியல்பாகும்.

இம்முயற்சியிலே ஈடுபடும் கவிஞர் புராணக் கதைகளை விரித்துரைக்கும் முனிவர்களைப் போல ஒரு போதனையாளரல்லர். அவர் ஒரு கலைஞர். கதை மாந்தர்களை, அவர்களுடைய உணர்வுகளையும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளையும் 'இரத்தமும் சதையுமாக' அவ்வவற்றுக்குரிய சூழ்நிலைசார் வருணனைகளுடன் வாசகர்(சுவைஞர்) முன் காட்சிப்படுத்துபவர். அவ்வகையில் புராணங்களைவிட காவியங்கள் இலக்கியப் பண்பு மிக்கனவாகவும் கட்டமைப்பு நிலைகளில் வளர்ச்சி பெற்றனவாகவும் திகழ்வன. ஆவ்வகையில் 'இலக்கிய வகையியல்' வரலாற்றில் புராணங்கள் தொன்மையானவையாகவும் காவியங்கள் பிற்பட்டவையாகவும் கொள்ளப்படுகின்றன.

புராணங்களில் பயின்றுவந்த கதையம்சங்களிற் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்பனை வளத்துடன் கட்டமைத்த செயற்பாடுகளாகவே இந்தியக் காவியங்கள் பல திகழ்கின்றன என்பதும் இங்கு நமது சிந்தனைக்குரியதாகும்.

இவ்வகையில் நாம் இங்கு நோக்கும் பெரியபுராணமானது கதையம்ச அடிப்படையில் புராணத்தன்மை கொண்டதேயாகும். அதாவது சைவத்தமிழ்ச் சமூகத்தில் ஏறத்தாழ பொ.ஆ.பி. 6 முதல் 9வரையான காலப்பகுதியில் வாழ்ந்தவர்களாக அறியப்படும் நாயன்மார்கள் தொடர்பாக வழங்கிவந்துள்ள கதைகளை தொகுத்து ஒரு குறிப்பிட்ட நூலமைப்பில் தர முற்பட்

தொடர்தல் 109ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்கால இலக்கி...

107ம் பக்கத் தொடர்ச்சி...

டுள்ள ஆக்கம், இது. அவ்வாறான கதைகளில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளை எடுத்துரைப்பது, அவை உணர்த்தும் நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டுமுறைகள் முதலியவற்றை வலியுறுத்துவது ஆகிய பண்புகளில் அது ஒரு புராணம் என்ற கணிப்புக்குரியது.

ஆனால் இலக்கியக் கட்டமைப்பு நிலையிலே அது காவியத்துக்குரிய வருணனை மரபுகள் கற்பனையம்சங்கள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமைந்துளது. அதன் தொடக்கப்பகுதியிலமைந்த 'திருமலைச் சிறப்பு', 'திருநாட்டுச்சிறப்பு', 'திருநகரச் சிறப்பு', திருக்கூட்டச்சிறப்பு ஆகியனவும் நாயன்மார்களின் கதைப்பகுதிகள் சிலவற்றிலமைந்த இயற்கை வருணனைகள், கதைமாந்தர் சித்திரிப்பு முதலியனவும் அதனைக் காவியப் பண்புவாய்ந்த ஒரு ஆக்கமாகக் காட்டி நிற்பனவாகும்.

இதற்கான காரணத்தை ஊகிப்பது சிரமமன்று. இலக்கிய ஆர்வலர் பலரும் சீவக சிந்தாமணி என்ற காவியத்தின் சிறப்பில் மனம் பறிகொடுத்திருந்த ஒரு வரலாற்றுச் சூழலில் நாயன்மார் கதைகளைக் கூற வந்த சேக்கிழார் மேற்படி காவியத்தின் இலக்கியச் சுவைக்குச் சற்றும் குறைவு-படாத வகையில் தனது ஆக்கத்தையும் கட்டமைக்க முற்பட்டுள்ளார் என்பதே இங்கு நாம் ஊகித்துணரவேண்டிய செய்தியாகும்.

உள்ளடக்கநிலையிலே இவ்வாக்கமானது 63 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்களின் கதைகளைக் கூறுவது என்பதை மேலே நோக்கினோம். தனியடியார்கள் பலரும் தென்னிந்திய மண்ணின் பல்வேறு பிரதேசங்களையும் சார்ந்தவர்களாவர். பெரும்பாலோர் சோழ நாட்டின் பல்வேறு ஊர்களைச் சார்ந்தோர். சிலர் பாண்டியநாடு சார்ந்தோர். சேரமான் பெருமாள் நாயனார் சேர நாட்டினர். வேடுவரான கண்ணப்ப நாயனார் வடக்கிலுள்ள (இன்றைய ஆந்திரப் பிரதேசம் சார்ந்த) காளஹஸ்தி (காளத்தி) சார்ந்தவராவார்.

சமூகநிலைகளிலும் இவர்கள் பலநிலை வேறுபாடுகளைக் கொண்டோராவர். அந்தணர்கள், அரசர்கள், அமைச்சர், படைத் தலைவர், விவாசாயிகள், பாணர், குயவர், வேடர் என்பனவாக இவர்களின் தொழில்சார் பிரிவுகள் வேறுபடுவன. தத்தம் பிரதேசச் சூழல்கள் மற்றும் தொழில் முறைகளுக்கு ஏற்பத் தனித்தனியான வாழ்வியல் நடைமுறைகளையும் இவர்கள் பேணிவந்துள்ளனர். இவ்வாறான வேறுபாடுகளுக்கேற்ப இவர்களது வாழ்க்கை முறைகள் பழக்கவழக்கங்கள் ஆகியனவும் வேறுபடுவனவாகும். இவ்வாறான பன்மைப் பண்புகள் கொண்ட சமூகத்தினரை ஒருங்கிணைத்து நிற்கும் அம்சம் சிவநெறியைப் பேணுவதில் அவர்கள் புலப்படுத்தி நிற்கும் தீவிரத்தன்மையேயாகும்.

மேற்படி தீவிரத்தன்மைசார் செயன்முறைகள் பலவகைப்படுவன. சிவபக்தியில் திளைத்தல், சிவசின்னங்களெனப்படும் திருநீறு உருத்திராக்கம் முதலியவற்றை அணிதல், சிவவழிபாட்டை மேற்கொள்வதில் உறுதியாக நிற்றல், சிவாலயங்கள் தோறும் சென்று பாடிப்பணிதல் சிவனடியார்களையும் சிவசின்னங்களைத் தரித்தவர்களையுங் கூட சிவனாகவே கருதி மதித்துப்போற்றல், அவர்களுக்கு உணவு முதலியவற்றையும் தேவையான பிற உதவிகளையும் வழங்கி உபசரித்தல், இவ்வாறான செயற்பாடு களுக்குத் தடைகள் ஏற்படும் சூழல்களில் அத்தடைகளை நீக்குவதற்காக உடைமைகளையும், உறவுகளையும் உயிரையும் கூடத்தியாகம் செய்ய முன்வருதல் முதலியனவாக இவை விரிவுபடுவன.

இவ்வாறானவற்றில் ஒன்றையோ பலவற்றையோ கடைப்பிடிப்பதில் முன்னின்றவர்கள் மேற்படி அடியார்கள் என்ற செய்தியையே சேக்கிழார் இப்பேரிலக்கியத்தில் அவ்வவர்களின் கதைகள் ஊடாக நமக்குக் காட்சிப்படுத்துகிறார். அவ்வகையில் அவர்களின் பெருமையை விதந்து போற்றுகிறார்.

மேற்படி பல நிலைகளிலும் சிவநெறியைக் கடைப்பிடித்தவர்களின் கதைகளைக் கூறும் முறைமையில் சேக்கிழார் புலப்படுத்தி நிற்கும் சிறப்பம்சமொன்றை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. அவ்வம்சம் அவர்களை, 'அவர்களுடைய இயற்கைச் சூழல்கள்சார்ந்த பின்புலக் கூறுகளுடனான செய்திகளுடன் காட்சிப்படுத்தியுள்ள முறைமை' ஆகும்.

நாயன்மார்கள், பல்வேறு சமூகத்தினர் எனவும் பல்வேறு பிரதேசங்கள் சார்ந்தோர் எனவும் மேலே நோக்கினோம். நாயன்மாருட் சிலர் - நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் பயணங்கள் மேற்கொண்டு பதிகங்கள் பாடியவர்களுமாவர். இவர்களனைவரையும் சேக்கிழார், அவர்கள் பிறந்து வளர்ந்த வாழ்வியற்சூழல்கள் மற்றும் பயணங்கள் மேற்கொண்ட ஊர்கள் ஆகியன தொடர்பான புவியியல் விவரணங்களுடனும் சமூகநிலைகள்சார் பழக்கவழக்கங்கள் வாழ்வியல் நோக்குகள் முதலியவற்றுடனும் நமது பார்வைக்கு இட்டுவர முயன்றுள்ளார் என்பது அவருடைய படைப்புச் செயற்பாட்டில் தெளிவாகவே தெரிகிறது. இன்றைய மொழியிலே கூறுவதானால், நாயன்மார் பலரின் வாழ்க்கை முறைகள் பற்றிய தகவல்களை ஒரு கள ஆய்வாளருக்குரிய தேடலூக்கத்துடனும் பொறுப்புணர்வுடனும் திரட்டித் தொகுத்துக் கொண்ட பின்னரே அவர்கள் பற்றிய கதைகளை அவர் கட்டமைக்க முற்பட்டுள்ளார்' எனலாம்.

> நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் மேற்கொண்ட பயணங்களில் தரிசித்த கோயில்கள் பலவற்றையும் ஆங்காங்கு நிலவிய சமய உணர்வுச் சூழ்நிலைகளையுங்கூட சேக்கிழார் இவ்வாக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

குறிப்பாகச் சம்பந்தரை அவர்வாழ்ந்த சீர்காழியின் அந்தணச் சூழலுடன் நமது காட்சிக்கு இட்டுவரும் அவர், காளஹஸ்திச் சூழலின் வேடுவ சமூகத்தினரான கண்ணப்பரையும் ஆதனூரின் புலையர் சமூகத்தினரான நந்தனாரையும் அவ்வவர்களின் சமூகச் சூழல்சார் பண்பாட்டம்சங்களுடனேயே நமது தரிசனத்துக்கு இட்டுவந்துள்ளார். மேலும் அவ்வவர்களின் தொழில்முறைகளோடு ஒட்டியவகையி-லேயே அவர்களின் பக்தியுணர்வுகளின் உருவாக்கநிலைகளையும்கூட அவர் அடையாளங் காட்டியுள்ளார்.

அத்துடன், நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் மேற்கொண்ட பயணங்களில் தரிசித்த கோயில்கள் பலவற்றையும் ஆங்காங்கு நிலவிய சமய உணர்வுச் சூழ்நிலைகளையுங்கூட சேக்கிழார் இவ்வாக்கத்தில் பதிவுசெய்துள்ளார். குறிப்பாக, 'அவர்களுடைய பயணங்களில் அவர்களுடன் இணைந்திருந்து அவதானித்தவாறு தொடர்ந்த ஒரு செய்தியாளரின் எடுத்துரைப்புகள் போல இப்பதிவுகள் திகழ்கின்றன' எனலாம்.

சேக்கிழாரின் இவ்வாறான கதைகூறும் முறைமை தொடர்பான இரு விடயங்கள் இங்கு நமது சிந்தனைக்குரியன. அவற்றுளொன்று சேக்கிழாரின் பார்வை விரிவு பற்றியதாகும். அதாவது ஒரு பேரரசின் முதலமைச்சராக உயர்பதவி வகித்த அவர் அப்பேரரசுப் பரப்பு மற்றும் அதனை அடுத்த நிலப்பரப்புகள் அவற்றின் சமூக - பண்பாட்டு நிலைகள் ஆகியன பற்றி விரிவாக அறிந்திருந்தார் என்பதை இவ்வாக்கம் உணர்த்திநிற்கிறது. குறிப்பாக ஒரு வரலாற்றாய்வாளனுக்குரிய பொறுப்புணர்வுடனும் தேடலூக்கத்துடனும் அவர் செயற்பட்டுள்ளார் என்பதை இவ்வாக்கம் உறுதிசெய்கிறது.

இதனை நோக்கும்போது சோழப்பேரரசின் முதலமைச்சர் என்ற நிலையில் தமக்கிருந்திருக்கக்கூடிய அதிகார நிலைசார் வாய்ப்புகளை உரியவாறு பயன்படுத்திக் கொண்டு ஊர்கள் தோறும் பயணங்கள் மேற்கொண்டு தேவையான தகவல்களைத் திரட்டி, இவ்வாக்கத்தை அவர் கட்டமைத்திருப்பார் என்பதை உய்த்துணர்ந்துகொள்ள முடிகிறது.

கவனத்துக்குரிய இன்னொரு அம்சம், மேற்குறித்தவாறான சித்திரிப்பு முறைமையின் 'பண்பாட்டு வரலாற்றுப் பயன்பாட்டுநிலை' பற்றியதாகும். அதாவது பொ.ஆ.பி. 6ம் நூற்றாண்டு முதல் 13ம் நூற்றாண்டு வரையான காலகட்டத் தமிழகத்தின் பல்வேறு கிராமங்களின் புவிச்சூழல் மற்றும் அவற்றின் அரசியல், சமூகம், சமயம், மொழி, கலை முதலான பண்பாட்டுநிலைசார் பல்வேறு அம்சங்களையும் தெரிந்து தெளியமுற்படும் வரலாற்றாய்வாளர் ஒருவருக்கு இலக்கிய ஆக்கம் என்ற நிலையில் துணைநிற்கும் முக்கியமான ஒரு 'தகவற்களஞ்சிய'மாகப் பெரியபுராணம் திகழ்கிறது என்பதே இங்கு நாம் கவனத்துட் கொள்ளவேண்டிய முக்கிய செய்தியாகும்.

இலக்கியமானது, பண்பாட்டு வரலாற்றுப் பதிவாகவும் பயன்படுவது என்ற வகையிலே பெரியபுராணத்துக்கு முற்பட்ட சான்றுகள் சிலவற்றை இங்கு தொடர்புபடுத்திக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக்கருதுகிறேன். குறிப்பாக, பொ.ஆ.பி. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழர் சமூகத்தின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக் கோலங்கள் ஆகியவற்றை அறிய விழைவோருக்கு சங்கப்பாடற்பரப்பில் இடம்பெறும் பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி மற்றும் பட்டினப்பாலை முதலியனவும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய முதற்பேரிலக்கியங்களும் இலக்கண நூலான தொல்காப்பியமும் முக்கிய தகவற் களஞ்சியங்களாகத் திகழ்வன என்பதை முன்னரே அவ்வவ்வாக்கங்கள்பற்றிய கட்டுரைகளில் நோக்கியுள்ளோம்.

அவற்றைப்போல பொ.ஆ.பி. 6ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட (13ம் நூற்றாண்டு வரையான) தமிழ்நாட்டின் பல்வேறு சமூகங்கள்சார் வாழ்வியல்கள் பற்றிய தகவல்களைத் தரத்தக்க ஒரே பேரிலக்கியப் பதிவாகத் திகழ்வது பெரியபுராணமேயாகும். இவ்வாறு அது திகழ்வதன் காரணம் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்களின் அநுபவ நிலைகளை அவர்களின் சூழல்கள் சார்ந்து எடுத்துரைத்துள்ளமையேயாம்.

இவ்வாறான பண்பாட்டு வரலாற்றுத் தகவற்களஞ்சியமாகத் திகழும் பெருமையானது ஏனைய சோழர்காலப்பேரிலக்கியங்களாக முன்னர் நோக்கப்பட்ட சீவகசிந்தாமணி, சூளாமணி முதலியவற்றுக்கும் இனி நோக்கவுள்ள கம்பராமாயணம், கந்தபுராணம் முதலியவற்றுக்கும் கூட இல்லை. காரணம் அவற்றின் கதையம்சங்கள் சராசரி சமூகமாந்தரின் நடைமுறை வாழ்வியல் அநுபவங்களின் தளத்தில் உருவானவையல்ல என்பதேயாகும். (அவை கடவுளர் மற்றும் வடநாட்டு அரச குடும்பத்தினர் சார் கதைகளாகவும் 'புராண-இதிகாச மரபு' மற்றும் 'தத்துவ மரபு' முதலியவற்றின் தொடர்ச்சிகளாகவும் உருவானவையேயாம். சீவகசிந்தமாமணி, சூளாமணி ஆகியன வடநாட்டு அரச குடும்பக் கதைகள் என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். ஏனைய ஆக்கங்களின் கதையம்சங்கள் அடுத்து வரும் கட்டுரைகளிலேயே நோக்கப்படவுள்ளன.)

பெரியபுராணம் பற்றிய பார்வையிலே இதுவரை அவ்வாக்கம் உருவான பின்புலம், அதன் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்க நிலை ஆகியன பற்றிய முக்கிய செய்திகளும் பண்பாட்டு வரலாற்று நிலையிலான அதன் பயன்பாடு பற்றிய மதிப்பீடுகளும் சுருக்கமாக முன்வைக்கப்பட்டன. இவற்றை அடுத்து அந்நூல் பற்றிய பார்வையில் இங்கு கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கியசெய்தி, தனியடியார்களுள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர்களுக்கும் அவ்வாக்கம் வழங்கியுள்ள முக்கியத்துவம் தொடர்பானதாகும்.


4286 பாடல்கள் கொண்ட இப்பேரிலக்கியத்தில் சம்பந்தரின் கதையை நேரடியாகக் கூறும் பகுதியானது 1256 பாடல்களைக் கொண்டதாகும். இவ்வாறு கூறும் பகுதி தவிர, அவரோடு தொடர்புகொண்டிருந்த ஏனைய நாயன்மார்களின் கதைகள் கூறப்படும் பகுதிகளிலும் அவரைப்பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. சம்பந்தர் மீது இவ்வாறு பெருந்தொகையான பாடல்கள் பாடப்பட் டுள்ளமையால் 'பிள்ளைபாதி புராணம்பாதி' என்ற சொல்வழக்கும் உருவாகி நிலைத்துவிட்டது. ('பிள்ளை' என்ற சொல் இங்கு திருஞானசம்பந்தரைக்குறிப்பதாகும்.)

நாவுக்கரசர் கதைப் பகுதியானது 429 பாடல்களைக்கொண்டது. சம்பந்தர்பாடற் பகுதியிலும் அவரைப்பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. சுந்தரருடைய கதையானது திருமலைச் சிறப்பு என்ற தொடக்கப்பகுதியிலே ஆரம்பித்து தடுத்தாட்கொண்டபுராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் கழறிற்றறிவார் நாயனார் புராணம் என்பவற்றினூடாக எடுத்துரைக்கப்பட்டுவந்து ஈற்றில் 'வெள்ளானைச் சருக்கம்' என்ற பகுதியில் நிறைவுறுகிறது. இவ்வகையில் 800க்கு மேற்பட்ட பாடல்களில் அவரது கதை எடுத்துரைக்கப்பட்டுளது. இவ்வாறு இம் மூவருக்கும் சேக்கிழார் அளித்துள்ள முக்கியத்துவத்துக்கான காரணம் அவர்களே சைவ பக்தி இயக்கத்தை உருவாக்கி வழிநடத்துவதிலும் வரலாறமைப்பதிலும் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்பதேயாகும். அதாவது தாம் பக்தராகத் திகழ்ந்தது மட்டுமன்றி சமூக மாந்தரையும் தம்மோடு இணைத்துக்கொண்டு செயற்பட்டவர்கள், இவர்கள்.

நாவுக்கரசருக்குள்ள முக்கியத்துவம், 7ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சைவபக்தியியக்கத்தைத் தோற்றுவித்த முதல்வர் அவரே என்பதாகும். நாவுக்கரசர் தோற்றுவித்த இவ்வியக்கத்தைத் தலைமை தாங்கி வழிநடத்தியதன் மூலம் அதனை ஒரு பேரியக்கம் என்ற நிலைக்கு இட்டுச் சென்றவர் சம்பந்தர். இவ்வாறு இவ்விருவராலும் உருவாக்கி வழிநடத்தப்பட்ட இவ்வியக்கத்துக்கு வரலாறமைப்பதற்கான தொடக்கநிலை முயற்சியை மேற்கொண்டவர் சுந்தரர் ஆவார். அவரது திருத்தொண்டத்தொகை என்ற பதிகமே பின்னாளில் நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் திருத்தொண்டர் பெருமைகளைப் பாட முற்பட்டமைக்கான உணர்வுந்துதலைத் தருவதாகவும் முதல்நிலைத் தரவாகவுங் கூட அமைந்ததாகும்.

பெரியபுராணத்தில் இம்மூவருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமைக்கான காரணிகள் இவையேயாகும்.

*(தொடரும்)*



subramanian.n@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினையும் கார்ட்டூன்களும்

# விகட விமர்சன ஓவியம்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் அரசியல் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. சூரியன் அஸ்த மிக்காத பிரிட்டிஷ் சாம்ராச்சியம் உருக் குலைந்தது. சுதேச விடுதலை இயக்கங் கள் ஆங்காங்கே முகிழ ஆரம்பித்தன. பின்விளைவுகளை விளங்காது அரசியல் சித்தாந்தங்கள் நாகரிக உலகில் பீறிட்ட காலத்தில் இந்துமா சமுத்திர இந்திய உபகண்டத்தின் தென்கோடியில் அமைதி யில் திளைத்த இலங்கைத் தீவில் சிறு-பான்மையினரின் உரிமைகள் மறுக்கப் பட்டதால் இனமுரண்பாடுகள் பூதாகார-மாக வெளிக்கிளம்பிற்று.







முன்பு கத்தோலிக்கர்களுக்கு எதிராக மேற் கொண்ட வன்செயல்கள் 1983ம் ஆண்டு ஜுலையில் இனவெறித்தீச்சுவாலை பீறிட அது தமிழர்களுக்கெதிராகத் திரும்பியது. இதன் பின் தமிழர்கள் பாரபட்சமாக நடத் தப்பட்டு அவர்களது நிலங்களும் அபக ரிக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின் சிங் களம் மட்டும் அரச கரும மொழியானது. தவிரவும், மலைநாட்டுத்தமிழர்கள் நாடற் றவர்களாகியதும், கல்வியில் பாரபட்சம், தொழில்வாய்ப்பில் பாரபட்சம் ஆகியவை யெல்லாம் திரண்டு இனப்பிரச்சினையை இலங்கையில் உருவாக்கிற்று எனலாம். நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்கள அரசினால் தமிழ்மக்கள் அநியாயமாகவும், கொரூரமாகவும் ஒடுக்கப்பட்டதன் வரலாறு அனைத்துலக மனிதநேய அமைப்புக்க ளினால் செம்மையாக ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது. நீடித்துச் செல்லும் இன நெருக்கடிக்குத் தீர்வுகாணத் தமிழ், சிங்கள இனங்களின் தலைவர்கள் செய்து கொண்ட அரசியல் ஒப்பந்தங்களும், உடன்படிக் கைகளும் செயலிழந்து செத்துப்போயின. இதனால் இரண்டு இனங்களுக்கிடையே யும் பகைமையும், நம்பிக்கையீனமும் ஆழ மாகியது. கண்மூடித்தனமான கைது, கொடுமையான சித்திரவதை, காணாமல் போதல், சட்டம் மீறிய கொலைகள் ஆகி யவை சிங்கள அரச படைகளின் நடவ டிக்கைகளில் ஓர் அங்கமாயின.

மேலும், தமிழ்ப்பகுதிகள் மீது அரச படை கள் நிகழ்த்திய இன ஆக்கிரமிப்பும், அடக்குமுறைகளும் அரசினால் கோலமி டப்பட்டுச் சிங்களக் காடையரால் நிறை வேற்றப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இனக்கலவரங்களும் ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்தன. தீவிரம-டைந்த அரச ஒடுக்குமுறையும், சிங்கள இனவாத அரசியல் தலைமை மீதும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனமும், விரக்தியும் பிரிந்துசென்று தனியான தமிழ ரசை நிறுவுவதைத்தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கே தமிழ் மக்களைத் தள் ளியதுடன் இற்றைவரை இவ் இன முரண் பாட்டிற்கான தீர்வுகள் எதுவுமே இன்றி தமிழர்கள் துன்பச் சுமைகளைத் தோள்க ளில் தாங்கி முள் வேலிகளின் மத்தியில் ஏதிலிகளாய் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இனப்பிரச்சினையை மையப் படுத்தியதாக அதன் வன்மத்தினை எளிய சில கோடுகள் மூலம் விபரிக்கும் ஊடகமாக கார்டூன்கள் காணப்படுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து நடந்தேறிய இனவன்முறைகளின் நினைவுப்பெட்டக மாக வெளிக்கிளம்பிய இலங்கையின் வெளிப்பாட்டுக் கலைகளின் அங்கமான இதழியல்களில் வெளியாகிய அரசியல் காட்டுன்கள் தன்னிச்சையான படங்களல்ல. ஆனால் இவற்றை உருவாக்கிய சமூகத் தைப் பாதித்த வரலாறு, மற்றும் அரசிய லில் இருந்து அர்த்தத்தையும், தமக்குரிய அர்த்தத்தையும் பெற்றுக்கொண்டவை. இந்த வரலாறும், அரசியலும் சமூக மற் றும் அரசியல் ஞாபகங்களை மாத்திரம் உள்வாங்கவில்லை. மாறாக ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞர்களின் உறவுகள் மற் றும் நண்பர்கள் ஆகிய சகலரதும் சமூக அசைவியக்கத்தின் அனுபவங்களையும், நினைவுகளையும் உள்ளீர்த்துக்கொண்டுள் ளன.

குறிப்பாகக் காட்டுன் என்றால் 'விகடமும் விமர்சனமும் கலந்த வரைபுகள்' என வரை யறுக்கலாம். இன்று தமிழில் காட்டுனை 'கேலிச்சித்திரம்', 'கருத்தோவியம்', 'நகை யகம்', 'கருத்துப்படம்' எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது

ஆனால் காட்டுன்களை அது பிரயோகிக் கப்படும் மெய்யான அர்த்தத்தில் கூறுவ தானால் அது கேலிச்சித்திரமுமல்ல, கருத் தோவியமுமல்ல. காட்டுனைக் கேலிச்சித் திரம் என்போர் அதன் விகடச்சுவையை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். அதன் விமர்சனப் பண்பை அல்ல. மாறாகக் கருத்தோவியம் என்போர் அதில் தரப்படும் செய்தி அல்லது விமர்சனத்தைத்தான் கருதுகின்றனர். அதன் விகடச்சுவையை அல்ல. ஆனால் காட்டுன்கள் என்பது 'விக டத்தனத்தில் செய்யப்படும் ஒரு விமர்சன மாகும். எனவே அதனை 'விகட விமர்சன ஓவியம் என அழைப்பது அனேக பொருத் தமானதாக அமையும்.

காட்டுன்களின் தந்தை என அழைக்கப்ப டுபவர் பீட்டர்ரார்னோ (Peterarno) என்ப வராவார். பொதுவில் மூன்றுவகைக் காட் டுன்கள் உள்ளன.

- தனிக் கேலிச்சித்திரம்
  - பொழுதுபோக்குக் காட்டுன் (Gag Cartoon)
  - அரசியல் காட்டுன் (political or Editorial Cartoon)
- நகைச்சித்திர வரிசை (Comic strip)
- உயிருள்ள கேலிச்சித்திரம்

காட்டுன்களின் தன்மையை நோக்கின்...

**Gag Cartoon:** ஒற்றைக்கோட்டுரகக் காட்

தொடர்தல் 110ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்...

109ம் பக்கத் தொடர்ச்சி...

டுன்களை Gag என அழைப்பர்.

**Editorial Cartoon:** பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரையப்படும் காட்டுன்கள் Editorial Cartoon எனப்படும். பத்திரிகைத் தலைப்பிற்கு வரையப்படும் காட்டுன்களில் பலூன் வடிவ அமைப்பிற்குள் பேசுவர். சிலவேளை பல பட்டியல் அமைப்பை உள்ளடக்கியிருக்கும்.

**ஊடகக் காட்டுன்கள் (Movie Cartoons):** குழந்தைகளைக் கவரும் காட்டுன்களாக வெளிவருகின்றன. 'மிக்கி மவுஸ்' எனும் நகைச்சுவை movie cartoonsy வரும். இதன் ஆரம்பம் 1928 ஆகும். குழந்தைகள் மத்தியில் இது பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளது.

தவிரவும், சிறுசிறு கதைக் கருப்பொருளைக் கதை வடிவத்துடன் சேர்த்துக்காட்டுன்கள் மூலமாகவும் எடுத்துக்காட்டப்படுகிறது.

உதாரணமாகத் தெனாலிராமன் கதைகளினூடாகச் சிரிக்கவும், சிந்திக்கவும் செய்வதுடன் மனதில் ஆழமாகப் பதிகின்றன. (ரவிராஜ்-1994:3)

இவ்வகைப்பாடுகள் மத்தியில் இவ் ஆய்வானது 'Political Cartoons'ஐ மையப்படுத்தியதாகவுள்ளது. இங்கு அரசியல் கருத்தை ஒரு புது வகையில் வெளியிடும் முறையாகக் காட்டுன்கள் தொழிற்படுகின்றன. காட்டுன்களின் சமூகப்பெறுமதி அரசியலிலேயே உச்சம் பெறுகின்றது. ஏனெனில் அரசியலில் தான் சமூகத்தின் சகல கூறுகளும் மையங்கொள்கின்றன. இலங்கை அரசியலில் மிகப் பூதாகாரமாக முகிழ்ந்து, முகிழ்ந்துகொண்டிருக்கின்ற, முகிழப்போகின்ற பிரச்சினை இனப்பிரச்சினையே. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான வரலாற்றுக் காலத்துடன் இப்பிரச்சினையின் விஸ்தீரணம் இன்று வரை சுருக்கப்படாத, இன்னும் அதழ வேகமாக, தீவிரமாக வியாபித்துள்ளமையை நோக்கமுடியும். இந்த இன மோதல்களின் விலை இந்நாட்டு மக்களது உயிரும், உடமைகளுமே. தற்கால உலகம் பல்லினப் பண்பாடு கொண்ட சமூகத்தினை வேண்டி நிற்கும் இந்நிலையில் இனங்களுக்கிடையிலான பிணக்குகள் நாட்டை அதளபாதாளத்தினுள் தள்ளிவிடும் என்ற உண்மை எம் கண்முன்னே நிகழ்ந்தேறியுள்ளது. இக்கொரூர ரணத்தின் காலப்பதிவுகளாகிய இதழியல்களில் வெளியாகிய அரசியல் காட்டுன்களைத் தெரிந்தெடுத்து நாளைய தலைமுறையினருக்காகப் பாதுகாக்காவிடின் எமது கலாசாரத்தைப் பற்றிய அவர்களது அறிவும், அனுபவமும் வறுமைப்பட்டுப் போய்விடும்.

### கார்ட்டூன் ஓவியத்தின் அறிகமும், கலை வெளிப்பாடுகளில் அதன் பெறுமானமும்:

விகடமும், விமர்சனமும் கலந்த வரைபுகளைக் காட்டுன் என அழைக்கின்றனர். அவை சமூக அசைவியக்கத்தில் நின்று அச்சமூக நிலவரங்களை, அடுக்கமைவுகளை, சமயக் கலாசார விழுமியங்களை வெளிக்கொணர்கின்ற ஓர் எளிய ஊடகமாகத் தொழிற்படுகின்றன. சிக்கல் வாய்ந்த சமூக வரலாற்றை சுவைபட விளக்கிக் கொள்வதற்கு எம்முன் உள்ள முக்கிய ஆவணங்களுள் ஒன்று நகைச்சுவைப் பிரதிகளே. அவற்றுள் காட்டுன் முக்கியமான ஊடகமாகின்றது.

19ம் நூற்றாண்டின் அச்சுக்கலை முகிழ்ப்புடன் ஆரம்பமான இதழியல் துறை (Print Media) சமூக ஊடாட்டங்களை வெளிப்படுத்தும் பணியை மேற்கொள்ளத்தொடங்கிற்று. இதழியலின் வளர்ச்சியின் ஊடாகக் காட்டுன் எனும் விடயமும் சமூக அரசியல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகத் தொழிற்படத் தொடங்கியது. இதில் மின்னியக்க ஊடகங்கள் (Electronic Media)காட்டுன்களை வேறு பரிமாணங்களுக்கு விரித்துச் சென்றது.

'Cartoon' என்ற ஆங்கிலச்சொல்லின் மூலவேர் இத்தாலியச் சொல்லான 'Cartone' என்பதிலிருந்து முகிழ்ந்ததாகும். 'Cartone' என்பது 'காகிதம்' என அர்த்தப்படும்.

இன்று காட்டுன், கேலிச் சித்திரம், கருத்தோவியம், நகையம், கருத்துப்படம் எனும் பெயர்களால் வழங்கப்படுகின்றது.

காட்டுன் என்பது கருத்தூண்கள் (Though Providing) எனவும், கண்ணுக்குத் தெரியக்கூடிய பட விளக்கமுடைய அர்த்தம் காட்டும் அமைப்பு (Various forms of visual art and inustration) எனவும் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

மனித இனத்தின் பண்பாடு, அறிவு வளர்ச்சி ஆகியவை எப்படித்தொடங்கின என்பதைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்று பாறைக் கலைகளே. மனித இனம் நாகரிமடைவதற்கு முன்பிருந்து மனிதர் தோன்றி வளர்ந்து பல்வேறு சமுதாய அமைப்புக்களை உருவாக்கியது வரையிலான வரலாற்றின் மிகப் பெரும் சான்றாக இவை திகழ்கின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மையான காலப்பகுதியில்(Primitive period) செதுக்கல்களின் ஊடாகவும், வரைகோடுகளின் மூலமாகவும் உருவங்களை ஆதிகால மனிதர் தன் எண்ணங்களை, தமக்கிடையேயான கருத்துப் பரிமாற்றப் புரிதல்களுக்காகவும், பயிற்சிக்காகவும் உருவங்களை வரைந்துள்ளனர். அவ்வுருவங்கள் மந்திர தந்திர சக்திகளுடன் (Magical power) வேட்டைக்கும், விளைச்சலுக்கும் உறுதுணையாக அமைதற்காக வரைந்துள்ளனர். அதில் இயல்பான தன்மைகள் அற்ற அருவ உருவங்களாக (Abstract), உருத் திரிப்புக்களாக வரையப்பட்டிருப்பதனைக் காணலாம். இதுவே காட்டுன் ஓவியங்களுக்கு முன்னோடியாக அமைந்தன எனலாம்.

புராதன எகிப்திய நாகரிக காலத்தில் கதை சொல்லும் பாணியிலான ஓவியங்கள் (Naïve painting) காணப்பட்டன. குறிப்பாக இத்தாலியில் இருந்து எடுக்கப்பட்ட பப்பிரஸ் தாளில் வரையப்பட்ட ஓவியம் ஒன்றில் ஆடு மாதிரியான உருவமுடைய Gazelle எனும் விலங்குடன் சிங்கம் செஸ் விளையாடுவது போன்றும், மற்றும் ஆடுகளை மேய்த்துச் செல்லும் ஒரு நாய் போன்ற விலங்கும் காணப்படுகின்றது. இது காட்டுன் பாணியில் அமைந்த, அக்காலத்திலேயே ஐனரஞ்சக விடயங்கள் மாற்றமடைந்து வந்தமைக்கு இது ஒரு நல்ல சான்றாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் எகிப்திய சிற்பங்களிலும் உருச்சிதைப்புமுறை தோன்றலாயிற்று. பரோவா அகேனதன் (Ahenaton) காலத்திலேயே காட்டுன் பாணியிலமைந்த சிற்பங்கள் தோற்றம் பெறலாயிற்று.

கிரேக்க உரோமர் காலத்தில் காட்டுன் இன்னோர் பரிமாணத்திற்குள் ஊடுருவுகின்றது. இவர்கள் வித்தியாசமான உருவங்களை எல்லாம் காட்டுனில் வெளிப்படுத்தியுள்ளனர். அதிலும் உளவியல் தன்மைகளை அக்காலத்திலேயே வெளிப்படுத்தியிருப்பதனைக் காணலாம். இதில் நகைச்சுவை எனும் விடயம் காட்டுனில் உள்வாங்கப்படுகின்றது. இங்கு Fauns எனச்சொல்லப்படும் கொம்பு, வால் வைத்த இலத்தீன் கிராமியக்கடவுள், Satyrs எனப்படும் குதிரை அல்லது ஆடு மாதிரி உருவைக் கொண்ட காட்டுப் பகுதிக் கடவுள் போன்றவை கருக்களாகக் காணப்பட்டன.

பெரும்பாலும் கிரேக்க, உரோம மட்பாண்டங்களிலேயே இவ்வகையான காட்டுன் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் 'Poson' எனும் கிரேக்க ஓவியர் கிரேக்கத்திலுள்ள வழமைக்கு மாறான, வித்தியாசமான உருவ அமைப்புக்களைக் கொண்ட மக்களை அப்படியே ஓவியங்களாக வரைந்துள்ளார். இது நகைச்சுவை உணர்வுக்காகவே இவ்வாறு வரையப்பட்டிருப்பதனைக் காணலாம்.

14ம் நூற்றாண்டில் வந்த காட்டுன்களில் மிகப்பிரகாசமான வர்ணங்கள், மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு படம் காணப்படுகின்றது. இதில் எழுத்துக்களுடன் அதேமாதிரியான படங்களும் மீளுருவாக்கம் செய்ய முனைந்திருந்தனர். இது சர்வதேச அளவில் நகைச்சுவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இப்படத்தில் கோட்டையைத் தாக்க வெளிப்படும் மக்களை விலங்குகளாக 14ம் நூற்றாண்டில் வெளிவந்த 'Flemish book of house' எனும் நூலில் காணப்படுகின்றது.

மறுமலர்ச்சிக் காலத்தில் காட்டுன் என்ற சொல் அது இன்று பெற்றுள்ள அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. மறுமலர்ச்சிக்கால ஓவிய வரைபடங்களில் ஓவியம் அல்லது சுவரோவியம் அல்லது திரையோவியம் போன்றவற்றை வரைவதற்கு முன் வரையப்படும் ஆயத்த வரைபுகளில் இறுதியானதாகவும், வரையப்படப்போகும் ஓவியத்தின் அதே அளவினதாகவும் இருந்ததையே காட்டுன் என அழைத்தனர். முழு அளவில் வரையப்பட்ட படங்களையும் காட்டுன் என விளம்பினர்.

பத்திரிகைகளின் காலம் தொடங்குமுன் 'ஹோகார்த்' (Hogarth), 'கோயா' (Goya), 'டேமியர்'(Daumier), 'ரோலண்சன்' (Rowandson) போன்ற புகழ்பெற்ற ஓவியக் கலைஞர்கள் ஒரே விடயத்தைப் பற்றிச் சித்திரத் தொடர்களை வரைந்தனர். இச் சித்திரத் தொடர்களில் வீரர்களின் சாகசச் செயல்கள் வரையப்பட்டன. இச் சித்திரத் தொடர்களே இன்றைய காட்டுன்களுக்கும் சித்திரத் தொடர்களுக்கும் முன்னோடிகளாக அமைந்தமையை நினைவுகூறலாம்.


15ம் நூற்றாண்டில் இருந்து இக்காட்டுன்கள் சுவர் சித்திர ஓவியங்களிலும், வண்ணக் கண்ணாடிக் கலைஞர்களாலும் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பிய மறுமலர்ச்சி விளிப்பின் அங்கங்களில் ஒன்றாகிய காட்டுன் 17ம் நூற்றாண்டளவில் இத்தாலியில் கையாளப்பட்டது. பின்பு இது ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வளர்ந்து 18ம் நூற்றாண்டளவில் பிரித்தானியாவை வந்தடைகின்றது. இன்று எல்லா நாடுகளிலும் இது முக்கிய துறையாகக் காணப்படுகின்றது.

18ம் நூற்றாண்டில் பிரிட்டனில் மிகச் சிறந்த முதல் காட்டுன் ஓவியராக வில்லியம் ஹோகார்த் இருந்தார். 18ம் நூற்றாண்டில் காட்டுன்களைப் பத்திரிகைகளில் பயன்படுத்த ஆரம்பித்தனர். முதன்முதலாகப் பத்திரிகை உலகிற்குக் காட்டுனை அறிமுகம் செய்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆஸ்பெர்ட் லஸ்காண்டர் ஆவார். இவரது காட்டுன் Daily Express என்ற செய்திப் பத்திரிகையில் வெளிவந்தது. அரசியல் கருத்துரையாடல்களால் இது தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது. 1880களில் ஒளிப்பட உருவங்கள் செதுக்கும் முறை குறைந்த செலவில் செய்தித்தாள்கள் தயாரிப்பதையும், விளக்கப்படங்கள் வெளிப்படுத்துவதையும் சாத்தியமாக்கியதால் காட்டுன்கள் பொதுமக்களைச் சென்றடைந்தன.

19ம் நூற்றாண்டில் தான் காட்டுன் என்ற சொல் அது இன்று பெற்றுள்ள அர்த்தத்தைப் பெற்றது எனலாம். காட்டுன் இன்றுள்ள நவீன வடிவத்தைப் பெற்றது நெதர்லாந்திலாகும். வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் பார்த்தால் இன்றுள்ள காட்டுனின் ஆரம்ப வடிவத்தினைக் கரிக் கேச்சரிலும் காணமுடியும். 19ம் நூற்றாண்டில் இச்சொல் நகைச்சுவைச் சித்திரம் அல்லது பரிகாசச் சித்திரம் என்று பிரசித்தமான பொருள் பெற்றது. இன்று அரசியல் சார்ந்த கருத்து, ஆசிரியரின் கருத்து, சமூகம் சார் கருத்து, நகைச்சுவை ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

19ம் நூற்றாண்டில் பிரான்ஸில் 'ஹோனோர்', 'டேமியர்' என்போர் தமது கதாபாத்திரங்கள் பேசாத எண்ணங்களை வெளிக்காட்டுவதனை விளக்கவுரையில் அறிமுகப்படுத்தினர். பிரிட்டனின் 'The punch', பாரிசின் 'Charivari', அமெரிக்காவின் 'The life', 'Judge' ஆகியன காட்டுன் ஓவியங்களைக் கொண்ட மிகப்பிரபல்யமான பத்திரிகைகளாகும்.

20ம் நூற்றாண்டிலும் 'த நியூயார்க்கர்' காட்டுன்களுக்கான அமெரிக்கத் தரநிர்ணயத்தை அமைத்தது. அமெரிக்காவில் 1922ல் ஆசிரியர் கருத்தைத் தொனிக்கின்ற காட்டுன்களுக்கு (Editorial Cartoons) ஒரு 'புலிட்சர்' பரிசு வழங்கப்பட்டது. 20ம் நூற்றாண்டுகளிலிருந்து காட்டுன்கள் நாளேடுகளில் ஆசிரியர் பகுதி, விளையாட்டுச் செய்திகள், திரைப்படம் தொடர்பான பகுதிகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.



tharmathas.s@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்...

416 264 6400

2641 Eglinton Avenue East
( Brimley & Eglinton)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்வலை - 39

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | | | | ■ | ■ | 3 |
| 4 | ■ | ■ | 5 | ■ | ■ | ■ | 6 | ■ | |
| | ■ | 7 | | ■ | 8 | 9 | | ■ | |
| 10 | | | | | | | | | ■ |
| | ■ | | ■ | ■ | ■ | 11 | | ■ | ■ |
| | ■ | 12 | 13 | | ■ | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | | ■ | 16 | | | | |
| 17 | | ■ | | ■ | ■ | | ■ | | ▒ |
| ■ | | ■ | ■ | 18 | | | 19 | ■ | ■ |
| 20 | | | | | ■ | ■ | 21 | | |

## தமிழ்வலை-39 வினா

**இடமிருந்து வலம்**

1 பாதுகாப்பாளர்

7 நுகரு

8 திமிர்

10 காவிய நாயகன் (5+4)

11 அஞ்சி நடுங்கு

12 மறைந்த தமிழக எழுத்தாளர் (1-1-1)

15 தகவல் கொடு

16 காளிதாசரின் காவியம்

17 கல்

18 செப்பு பாத்திரத்தில் பிடிக்கும் கறை

20 இராவணனின் பட்டத்து மனைவி

21 மேற்படு

**மேலிருந்து கீழ்**

2 செவியோரம்

3 பலசரக்கு

4 வீரமாமுனிவரின் காவியம்

6 அடித்து மிதித்து தாக்குதல்

7 நட்சத்திர அடையாளம்

8 சமய

9 ஒரு சங்க இலக்கிய நூல்

13 திடீர் பட்டம் பதவி

14 மேற்சபை

15 கீழ்த்தரை

18 சமி

19 உலகு

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல்
அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து
அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுபவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 38க்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | து | ர | ன் | ■ | ■ | 2 இ | ர | 3 வி |
| லை | ■ | ■ | ■ | 4 மு | தி | ரை | ■ | ப |
| 5 போ | க் | 6 கி | ரி | ■ | ■ | ச் | ■ | ரு |
| ■ | ■ | ட | ■ | 7 அ | த் | ச | [illegible] | ம் |
| 8 அ | டி | ப் | 9 ப | டை | ■ | த் | ■ | ■ |
| ர் | ■ | 10 பி | ளை | ம | லி | ■ | ■ | 10 அ |
| பா | ■ | ல் | ■ | ர | ■ | 12 து | ஞ் | ச |
| லை | ■ | 13 போ | 14 கி | ■ | ■ | ற | ■ | ர |
| ■ | 15 தொ | ழி | டை | ம | செ | வி | ப | ன் |

## தமிழ்வலை-38 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சதாசிவம் சண்முகவடிவேல், ஸ்காா்பரோ.
திருமதி. சரசுவதி கனகு, மிஸ்சிசாகா
திருமதி. சசி இரவீந்திரன், மார்க்கம்
திருமதி. சாந்தி மயில்வாகனம், எஜக்ஸ்
திரு. புண்ணியமூர்த்தி நாகநாதன், ஸ்கார்பரே.

### பரிசுபெறும் போட்டியாளர்

**திருமதி. மரகதம் சின்னப்பு,** மார்க்கம்.

thamilvalai@thaiveedu.com

**தமிழ்வலை போட்டியில் பரிசுபெறும் ஒருவருக்கு**
**25 டொலர் பெறுமதியான**
**நூல்கள் வாங்குவதற்கான கொள்வனவு அட்டை**
**வழங்கப்படும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

## மாசி மாத இலக்கியக் கலந்துரையாடல்

## "தமிழர் மனநல பிரச்சினைகள்"

**பிரதம பேச்சாளர் உரை:**

"ரொறன்ரோ தமிழ்ச் சமூகத்தில் மனநல பிரச்சினைகள்" - செந்தூரன் குணரட்ணம் (மனநல மருத்துவ நிபுணர்)

**சிறப்புப் பேச்சாளர்கள் உரை:**

"ரொறன்ரோ தமிழ்ச் சமூகத்துக்கான மனநல சேவைகள்" - கலாநிதி பார்வதி கந்தசாமி

"ரொறன்ரோ தமிழ்ச் சமூகத்துக்கான உளவளத்துணைச் சேவைகள்" - சதா விவேகானந்தன் (உளவளத்துணையாளர்)

"பாடசாலை மாணவர்களின் மனநலப் பிரச்சினைகள்" - யுனிட்டா நாதன் (மார்க்கம் கல்விச்சபை உறுப்பினர்)

**ஐயந்தெளிதல் அரங்கு**

**நாள்: 23-02-2019**

**நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை**

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)

**தொடர்புகளுக்கு: அகில் – 416-822-6316**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**


**அனுமதி இலவசம்!**

## ரொறன்ரோ தமிழ் சங்கத்தின் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வு 26.01.2019 அன்று ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் "தமிழர் பண்பாட்டு மரபின் இயங்குநிலை" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில...


திரு. வைரமுத்து திவ்வியராஜன்


திரு. சிவபாலு M.A


கலாநிதி. சு.சிவநாயகமூர்த்தி M.A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும் இடம் நாடி

- செல்வம் அருளானந்தம் -

## சொல்வது எழுதல்: 8

கோயில் வளவுக்கை தேவசகாயத்தின்ர கூத்து நடந்து-கொண்டிருந்தது.

"என் மகளே.. பொன்மகளே, என் இப்பரச பைங்கிளியே..." எண்டு சந்தியோ ஐந்து கட்டை சுருதிக் குரல் சோளகக் காத்தோட இறங்கி என்ரை காதைத் துளைச்சுக்கொண் டிருந்திச்சுது.

"பங்குனி 24. எல்லாருக்கும் தெரியுந்தானே... அண்டைக்குத்தான் ஊர்ப் பெருநாள்" மாஸ்டர் சொல்லுறதை நிப்பாட்டிப் போட்டு எல்லாரையும் பார்த்தார்.

ஆனா, மாஸ்டர் சொல்லவந்த கதை பாதியில நிண்டு போச்சுது. எனக்குக் கனகாலமாய்த் தெரியும், மாஸ்டருக்கும் ஊரில அப்ப நடந்த அந்தக் கொலைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்குதெண்டு. அதை எப்பிடியாவது மாஸ்டரிட்டையிருந்து பிடுங்கவேணும் எண்ட ஆவல் எனக்கு.

"சொல்லுங்கோ மாஸ்டர்" நான் வில்லங் கப்படுத்தினன். மாஸ்டர் சிரிச்சுப்போட்டு சொல்லத் தொடங்கினார்.

"எனக்கும் அண்டைக்கு நித்திரையே வரேல்லை".

"மாஸ்டர் அப்ப நீங்கள் அந்தக் கூத்துக் குப் போகேலையோ?" நான் குறுக்கால கேட்டன்.

"கூத்தாடுறதும் குண்டிய நெளிக்கிறதும் ஆத்தாதவன் செயல் எண்ட எண்ணம் எனக் கிருந்த காலம் அது. இப்ப எல்லாம் மாறித் தலைகீழ். நான் அப்ப 'ரெயினிங் கொலிச்'சிலை இரண்டாவது வருசம்... எனக்கொரு 21 வயசிருக்கும். இப்ப எனக்கு 68 முடியுது." எண்டவர் விஸ்கியை எடுத்து ஒரு முடறு குடிச்சார்.

"திடீரெண்டு பாட்டு, தாளம் எல்லாம் நிண்டு போச்சுது. பெரிசாக் குழறிக் கேட்டுது. நான் சட்டையைத் தேடி எடுத்துகொண்டு வெளிக்கிடுவம் எண்டுறதுக்குள்ள..."மாஸ டர் திருப்பியும் நிப்பாட்டிப்போட்டு மறுபடி யும் ஒரு முடறு விஸ்கியை ஆறுதலாய்க் குடிச்சார்.

கதை கேட்டுக்கொண்டிருந்த எங்கட பொறு மைய மாஸ்டர் சோதிக்க வேணும் எண்டு முடிவெடுத்திட்டார் போல.

நான் பொறுமையிழந்திட்டன். ஒரு கிளாஸ் விஸ்கியை மடமட எண்டு குடிச்சுப் போட்டு, "பிறகு என்ன நடந்தது மாஸ்டர்?" கொஞ் சம் உரமாய்த்தான் கேட்டன்.

"படலைக்குள்ளை என்னை யாரோ கூப் பிட்டுக்கேட்டுது...எட்டிப்பார்க்க... அவன் தான் ஒல்லியன் யேசுமணி... இரத்தம்... தோய்ஞ்சி கிடந்த சேட்டோட நிண்டுகொண் டிருந்தான்."

"சண்டியன் ஆரோக்கியநாதனை நான் கொண்டு போட்டன்...என்னைக் கொண்டு போய் ஒருக்கால் பொலிஸ் ஸ்டேசனில விட்டுவிடு." யேசுமணி அழுதான்.

"என்னாலை நம்ப முடியேலை. எங்கட யேசுமணியா? கோழி இறக்கையத் தட்டிப் பறந்தாலே பயப்படுறவன். இவனாவது... சண்டியன் ஆரோக்கியநாதனைக் கொல் லுறதாவது?"

"என்னடா யேசுமணி விசர்க்கதை கதைக் கிறாய்"

"கிருபதயாபரத்துக்கு மாதாவாய் இருக்கிற எங்கள் ஜீவமே, எங்கள் ராக்கினியே வாழ்க, எங்கள் ஜீவமே, எங்கள் மதுரமே, எங் கள் தஞ்சமே வாழ்க! கிருபாகரியே, தயா நிதியே, பேரின்ப இரக்கமுள்ள கன்னி-மாமரியே! சர்வேசனுடைய புனித மாதாவே..."

நடுங்கிக் கொண்டே கிருபதயாபர மந்தி ரத்தை சொல்லிக்கொண்டேயிருக்கிறானே ஒழிய என்ர கேள்விக்குப் பதில் சொல்லு றான் இல்லை.

"ஏறடா சைக்கிளிலை எண்டான். அழுதபடி ஏறிட்டான். அவனை ஏத்திக்கொண்டு விளா வெளிக்காலை சைக்கிலை உழக்கிறன்... உழக்கிறன்... சைக்கிள் அரக்குது இல்லை. தலைச்சோளகம் வேறை".

என்னடா நடந்தது? எப்படியடா அவனை நீ குத்தினனீ? திருப்பித் திருப்பிக் கேட்டன். அவன் ஒண்டுமே பறையேல்ல.

பொலீஸ் ஸ்டேசனில சாஜன் மரியாம்பிள் ளைதான் இருந்தார். வேறை ஆரையும் காணேல்ல. எங்கட ஊர்க்காரன். ஊர்க்கா ரரை நல்லத் தெரிஞ்ச ஆள்.

"நீ... ஆரோக்கியநாதனை குத்தினனீ?... என்னை நம்பச் சொல்லுறாய்?" சாஜன் மரியாம்பிள்ளை சத்தமாய்ச் சிரிச்சார்.



எங்கடை ஊர்க்காரர், சாஜன் மரியாம் பிள்ளையே இந்தக் கதையை நம்பேல் லையெண்டால் பாத்துக்கொள்ளுங்கோ" என்று சொல்லிப்போட்டு "சிகரட் இருக்கா?" என்று மாஸ்டர் கேட்க, சுவாரசியமா கதை கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் அவசர அவசரமா மாஸ்டரின்ர வாயில சிகரட்டைத் திணிச்சு, பத்தியும் விட்டார்.

தொடர்தல் 114ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எள்ளிருக்கும் ...

113ம் பக்கத் தொடர்ச்சி...

புகைய அனுபவிச்சு இழுத்துவிட்ட மாஸ்டர் கதையத் தொடர்ந்தார்.

“சாஜனையும் என்னையும் பார்த்து முழுசின யேசுமணி, சண்டிக்கட்டுக்கை இருந்த கிறீசுக் கத்தியை எடுத்து மேசையில் வைச்சான். கத்தியில இருந்த பச்சை இரத்தம் காயேல்ல...

சாஜன் மட்டுமில்லை நானும் ஒருக்கா அதிர்ந்து போனன்.”

திடீரென அந்தநேரம் பார்த்து பொலிஸ் ஸ்டேசனுக்குள்ளை யாரோ சிலபேர் வார மாதிரி இருந்தது.

எங்களை அங்கால போய் இருக்கச் சொல்லிட்டு, முன்னால போனார் மரியாம்பிள்ளை.

“வந்தவங்கள் எங்கட ஊர்க்கார மூப்பர் செபமாலை முத்து, உன்டை மாமா துரைராசா...மற்றது யாரெண்டு...ஞாபகம் வருகுதில்லை...”

“அதை விடுங்கோ மாஸ்டர்... மிச்சத்தை சொல்லுங்கோ” நான் அவசரப்படுத்தினன்.

மூப்பர்தான் குழறினார். “ஐயா... எங்கடை கோயில்வளவுக்கை ஒரு கொலை விழுந்திட்டுது... இவன் சண்டியன் ஆரோக்கிய நாதனை யாரோ சரமாரியாய்க் குத்திப் போட்டான்கள்...”

“யாரடா குத்தினது” மரியாம்பிள்ளை தெரியாதமாதிரிக் கேட்டார்.

“யாரெண்டு தெரியாது ஐயா!” மூன்று பேரும் ஒன்றாகச் சொன்னார்கள்.

“தெரியாதோ... இல்லாட்டி சொல்லப்படாது என்ற முடிவோடதான் வந்திருக்கிறியளோ?” மரியாம்பிள்ளை கொஞ்சம் அதட்டினார்.

“உண்மையாய்த் தெரியாது ஐயா” மூன்று பேரும் நடுங்கினாங்கள்.

“என்னென்டடா அவன் செத்துப்போனான் எண்டு தெரியும்? நீங்கள் என்ன டாக்குத்தர்மாரே? ஏனடா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகாமல் இங்க வந்தனீங்கள்...? அவன் உயிரோடை இருந்தால் உங்கள் மூன்று பேரையும் தான் அரஸ்ட் பண்ணுவன்” குரலில பொலிஸ்காரத்தனம் தெரிஞ்சுது.

“இல்லை ஐயா... தேகம் முழுக்க கத்திக் குத்து...நெஞ்சில் குத்தின ஒரு குத்து முதுகுப் பக்கத்தாலேயே வெளியில வந்திட்டுது.” துரைராசாதான் சொன்னான்.

“அவனுக்கு இது வேணும்.” சாஜன் திடீரென சொன்னார். “குத்தினவன் வலுகெட்டிக்காரன்தான்...” இதில யேசுமணிக்குப் பாராட்டு வேறை.

“நான் கோயிலடிக்கு வரேக்கை என்னையே இவன் ஆரோக்கியநாதன் படுத்தினபாடு?... உன்னை என்னெண்டு சாஜன் ஆக்கினவங்கள்? எண்டெல்லே கேட்டவன். நான் ஒரு பூட்டுப் போடுவன் ஏலுமென்டால் கழட்டு பாப்பம் எண்டு அவன் எனக்கு சவால் விடுறான்” கோபத்தில் முறுகினார் சாஜன்.

“பொலிஸ்மாரை அடிக்கிறது... தேடினால்... வங்காலை, பேசாலை, பள்ளிமுனைக்கு ஓடுறது... பணத்தாலையும் சண்டித்தனத்தாலையும் என்னவெல்லாம் செய்யலாம் எண்டு எத்தனை அட்டகாசம் எல்லாம் செய்தவன்...” ஆத்திரத்தில் பல்லைக் கடித்தார் சாஜன் மரியாம்பிள்ளை.

திடீரென்று “உண்மையாய்ச் செத்துத்தான் போனான் என்ன?” என்றார்.

“ஓம் ஐயா” பயபக்தியோட மூண்டுபேரும் சொன்னாங்கள்.

“சரி நீங்கள் போங்கோ... நான் இன்ஸ்பெக்ட்ரோடை வாறன்.”

“அவர்கள் போன பிறகு சாஜன் எங்களிட்ட வந்தார். யேசுமணியோட சேர்ந்து இப்ப நானும் நடுங்கிக் கொண்டிருந்தன்.”

“டேய்... யேசுமணி... இந்தக் கிறீசையும், உன்ர சேட்டு, சாரம் எல்லாத்தையும் விளாவெளிக்குள்ளை எங்கையாவது புதைச்சுப்போட்டு உன்ர மனிசியின்ட ஊரில போய் ஒளிச்சிடடா... ஒரு இரண்டு மூன்று நாளில சந்தேகத்தில நான் உன்னை வந்து அரஸ்ட் பண்ணுறன்... நல்லா ஞாபகம் வைச்சுக்கொள்... அப்ப நீ எனக்கு ஒண்டுமே தெரியாது எண்டு சொல்லவேணும்” என்னிடம் “நீ உன்ர பெயரே இதில வராம பார்த்துக்கொள். உன்ரை வேலைக்குப் பழுதடா. ஓடுங்கோ!” எங்களை கலைச்சு விட்டார் மரியாம்பிள்ளை. எங்கள அப்ப காப்பாத்தினது மரியாம்பிள்ளைக்கு ஆரோக்கியநாதனில இருந்த கோபந்தான் எண்டுறது எனக்கு விளங்கியிருந்தது. யேசுமணி பாவம்.

நான்தான் யேசுமணியை அவனின்ட மனிசியின்ட ஊரிலை விட்டிட்டு வந்தன். ஊருக்குத் திரும்பி வரேக்கை சோளகம் எதிர்த்து நிற்கேலை... மனசும் பதட்டம் குறைஞ்சிருந்தது.”

“ஆரோக்கியநாதன் அவ்வளவு பெரிய சண்டியனே மாஸ்டர்” வண்டன் கேட்டான்.

“அவன் சின்னனிலேயே பெரிய குழப்படி. எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு... அப்ப ஒரு வெள்ளைக்கார சுவாமி இருந்தவர்... அவர் வளர்த்த அல்சேசன் நாய்க்கு தன்ரை வீட்டுப் பெட்டை நாயை விட்டு..., பெரிய அட்டகாசம் செய்தவன். அதால சுவாமி ஒருநாள் முழுக்க இவனை கோயிலறை வீட்டில கட்டி வைச்சிட்டார்.”

ஒருநாள் பிரசங்கத்திலேயே சுவாமி இவன்ட தாயைப் பார்த்து சொன்னார். “மரியம்மா... உன்ர ஆடு எங்கை எண்டு கேட்டா? குருசுமுத்துவின்ட வளவுக்கை எண்டு சொல்லுவாய்... ஆனா மகன் ஆரோக்கியநாதன் எங்கையெண்டா மட்டும் தெரியாது சுவாமி எண்டு சொல்லுகிறாய்... பிள்ளையளை எப்படி வளர்த்திருக்கிறியள்? எண்டிருக்கிறார்.

“ஒரு கலியாணத்தை அவனுக்கு முடிச்சுக் குடுத்திருந்தால் அடங்கியிருப்பான்.” அதுக்குள்ளை இருந்து யாரோ சொன்னாங்கள்.

“முடிச்சுக்குடுத்ததுதான், எங்கேயோ தூரத்தில...ஆனா ஆறுமாதத்துக்குள்ள பெண் சாதிக்கு முதல் மச்சாள்காரி கர்ப்பம் ஆயிட்டாள். அதால அந்த ஊரைவிட்டே அடிச்சுத்துரத்திட்டாங்கள்.” மாஸ்டர் இன்னொரு வாய் விஸ்கிய உள்ள விட்டார்.

“அதுசரி மாஸ்டர், அந்தப் பெரிய சண்டியனை என்னெண்டு இந்த நோஞ்சான் யேசுமணியால கொலை செய்ய முடிஞ்சது?”

ஒருநாள் இரண்டுநாள் இல்ல, வருசக்கணக்கா புதைஞ்சு கிடந்த கேள்விக்கு இண்டைக்கு எப்பிடியும் விடை கிடைச்சிடும் என்ற நம்பிக்கையில கேட்டன்.

“யாருமே செய்யலாம். ஒண்டும் கஸ்டம் இல்ல.” மாஸ்டர் அமைதியாச் சொல்லிப் போட்டு கொஞ்சம் நிப்பாட்டினார். நாங்கள் அதிசயமாய்ப் பாத்தம். ஒரு சண்டியனை கொல்லுறது என்ன அவ்வளவு சுலபமா?

“கடைக்கு முன்னாலை வைச்சு மனிசியின்ட கையைப்பிடிச்சு இழுத்தால் அந்தச் சண்டியனை யாருமே லேசாய்க் கொல்லலாம்” மாஸ்டர் எழும்பினார்.

நாங்கள் அதிர்ந்துபோய் இருக்க, வண்டன்தான் திருப்பிக்கேட்டான். “என்ன மாஸ்டர் இது? கையைப் பிடிச்சு இழுத்ததுக்கு ஆளக் கொல்லுறதே?”

“கையைப் பிடிச்சு இழுத்ததுக்காக எண்டு தான் எல்லாரும் நினைச்சவை... நானும் அப்படித்தான் நினைச்சனான்... ஆனா அப்படியில்லைத் தம்பி..?

இப்ப நாங்கள் பெரிசாய்த்தான் அதிர்ந்து போனம். இதென்னடா புது சஸ்பென்ஸ். மாஸ்டரின்ர வாயை மட்டுமே நாங்கள் பாத்தம்.

“ஒல்லியனை விட்டிட்டு என்னோடை வாடி... எப்படியும் அடுத்த பெருநாளுக்குள்ளை உன்னை...எண்டு ஆரோக்கியநாதன் ஏதோ சொல்லிட்டான். ஒல்லிய இருந்தாலும் அவனின்ர ஓர்மம் பெரிசா இருந்திருக்கு. அதுதான் ஆரோக்கியநாதனை முடிச்சிருக்கு.”

“அந்த சிவனையே பாடாய்ப்படுத்தின இராவணனின் மனசுக்குள்ள சீதை புகுந்ததாலை, இராமனின் அம்பு அவன்ரை நெஞ்சத்தைப்படுத்தினபாடு இருக்கெல்லோ... அதை மண்டோதரி சொல்லிச் சொல்லி அழேக்கைதான் இராமனைப் பற்றித் தெரிய வந்தது.

அன்பின்ர வடிவம் எண்டு சொல்லப்பட்ட இராமனே கொடூரமாய் இராவணனின்ர மார்பை அம்புகளால துளைச்சிருக்கிறான் எண்டால்... யேசுமணி எந்த மூலைக்கு?

இந்தக் கம்பராமாயணப் பாட்டை மட்டும் சொல்லுறன் கேளுங்கோ...எனக்கு பிடிச்சமான பாட்டு...”

*வெள்ளெருக்கம் சடைமுடியான்*
*- வெற்பெடுத்த திருமேனி,*
*மேலும் கீழும் எள்ளிருக்கும் இடமின்றி,*
*உயிர் இருக்கும் இடம் நாடி,*
*- இழைத்தவாறோ*
*‘கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை*
*மனச்சிறையில் கரந்த காதல்*
*- உள்ளிருக்கும்*
*எனக்கருதி உடல் புகுந்து*
*தடவியதோ ஒருவன் வாளி?*

இராமனுடைய அம்பு, சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்ற கயிலையங்கிரியைத் தூக்கி எடுத்த இராவணனுடைய அழகிய உடலில் எள்ளிடுதற்கும் உரிய இடமில்லாதபடி நுழைந்து தேடிச் சென்றதற்குக் காரணம் என்ன? என்று மண்டோதரி அழுது புலம்புகிறாள்.

இராமனின் அம்பு, இராவணனுடைய உயிர் அந்த உடலில் எங்கு இருக்கின்றது என்று இவ்வாறு சல்லடை போட்டுத்தேடி அலைந்ததா? இல்லையேல் சீதையின்மேல் கொண்ட காதலை இந்த இராவணன் இன்னமும் தனக்குள் எங்காவது ஒளித்து வைத்திருக்கின்றானா? என்று தேடித்தேடி அவன் உடலைச் சல்லடை இட்டதா?

மாஸ்டர் எழும்பிப் போயிட்டார். எங்களால உடன எழும்ப முடியேல்ல.

எங்களுக்குத்தான் மாஸ்டர் கதை சொன்னார். அவருக்கு அது கதை இல்லை. எழுதி முடியாத ஒரு பக்கம்.



selvam.a@thaiveedu.com

TUTORING
Kindergarten to grade 8
English & Math
Evening & Weekend Classes
416-289-3641





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக உலகில் ஒரு நடிகமணி

**அமரர் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் 95வது பிறந்ததினம் எதிர்வரும் பதினோராம் திகதியாகும்.**

**அன்னாரை நினைவுகூரும் வகையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் 'நடமாடி' இராஜரத்தினம் அவர்களால் 'புதிய உலகம்' ஆடி - ஆவணி 1989 இதழில் எழுதப்பட்ட கட்டுரையினை மீள் பிரசுரம் செய்கிறோம்.**

**இக்கட்டுரை அதே காலப்பகுதியில் திரு. வி.என். மதியழகன் அவர்களால் இலங்கை வானொலியில் வாசித்து ஒலி பரப்பப்பட்டது.**

நாடக உலகில் ஒரு 'நடிகமணி' என்றால் அது காங்கேசன்துறை வசந்தகான சபா வி.வி. வைரமுத்து அவர்களைக் குறிக்கும் 'காங்கேயன்' வந்து இறங்கிய துறையில் அவர் பிறந்தார். வாழையடி, வாழையாகத் தழைத்து வந்த அண்ணாவி மரபிலே வந்தவர் நடிகமணி. ஆகவே அந்த மீன் குஞ்சுக்கு இசை நாடக உலகில் நீந்தக் கற்றுக் கொடுக்கும் அவசியம் ஏற்படுமா? தானாகவே நீந்தினார். இசை நாடகக்கடலில் கரை சேர்ந்தார். அதில் வெற்றிக்கு மேல் வெற்றி கண்டார்.

ஒரு காலத்தில் வளர்ந்து, விரிந்து பரந்திருந்த தமிழ் நாடகம் இடைக்காலத்தில் ஒருக்கால் எமது தமிழ் மண்ணில் வாடி, வதங்கி, சுருங்கி வந்த போதில் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் நாடகத்துறையில் ஏறுநடை போடத் தொடங்கினார்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நடிகமணியின் இசையில், அரங்க நடிப்பில் கவர்ந்து இழுக்கப்பட்டவர். அந்த முதுபெரும் கலைஞனின் வாய் எப்பொழுதும் நடிகமணியின் புகழ்பேசிக் கொண்டேயிருந்தது. ஒரு கலைஞன் இன்னொருலைஞனைப் போற்றிப் பேசுவது அபூர்வம். ஆனால் நடிகமணி வைரமுத்து அவர்களோ எல்லாக் கலைஞர்களாலும் போற்றப்பட்டவர், புகழ்சேர்க்கப்பட்டவர்.

அவர் மேடை ஏறிய ஆரம்பகால நாடகங்களில் ஒலிபெருக்கி இல்லை. ஒளி விளக்குகள் இல்லை. காட்சி சோடனைகள் கூடக் கூறைவு. ஆனால் ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் தாராளமான வகையிலே அவர்கள் பேச்சைக் கேட்க முடிந்தது. நடிகமணியின் பாட்டுக்கள் கோடை இடிகளாயிருக்கும். குரல் வளம் அவரைக் கைகொடுத்துத் தூக்கிவைத்தது.

இன்றைய நாடகங்களில் சிலருக்குப் பாட்டு இரவல், சிலருக்குப் பேசும் குரல் இரவல், இன்னும் சிலருக்கு நடிப்புக் கூட இரவல் தான்! அவை எல்லாம் இன்றைய நவீனச் சினிமாப் பாணியில் அமைந்திருப்பன. இந்த நிலையில் நாடகக் கலை உருப்படியாக வளருமா? அதற்கு உயிர் வேண்டும், உணர்வு வேண்டும், எல்லாம் சொந்தத்தில் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாடகக் கலைக்கு உய்வுண்டு. அது வாழவும் முடியும்.

நடிகமணி வைரமுத்து அவர்களின் பாட்டுக்கள் நெறிமுறை சார்ந்த கர்நாடக இசை. நடிப்புத் தன் சொந்தப்பாணி. பேச்சு இயற்தமிழ். மொத்தத்தில் இயல், இசை, நாடகம் சேர்ந்ததே முத்தமிழ் ஆகும். நடிகமணி ஒரு முத்தமிழ் வித்தகனாக விளங்கினார்.

நாடகம் தோன்றியதன் காரணம் மக்களை நல்வழிப்படுத்துவதற்காகும். பலமுறை ஒன்றைப் படித்துத் தெரிந்து கொள்வதிலும் பார்க்க ஒருமுறை வாயால் சொல்லக் கேட்டால் எளிதில் புரிந்துகொள்ளலாம். இப்படிப் பலமுறை சொல்லிக் கேட்பதிலும் பார்க்க ஒருமுறை பேசி, நடித்துக் காண்பித்தால் மிக எளிதாகப்புரிந்துகொள்வதுடன், வாழ்நாளில் மறக்காமலும் இருக்க முடிகிறது. இதற்காகத்தான் நாடகங்கள் உருவாகின.

இந்த அடிப்படையில் உருவாகிய நாடகங்களில் ஒன்றுதான் அரிச்சந்திரா. இப் பழைய கொட்டகைக் கூத்துக்குப் புத்துயிர் அளித்து வந்தவர் நடிகமணி வைரமுத்து அவர்கள். 'மயான காண்டம்' என்னும் பெயரில் இந்நாடகத்தை இரண்டாயிரம் தடவைகளுக்கு மேலாக மேடை ஏற்றினார் என்றால் அதன் சிறப்புச் சொல்லுந்தரமுடையதா?

பழம்பெரும் பண்புகளை வளர்க்கும் 'நந்தனார்' நாடகமும் இவரால் பலமுறை மேடையேற்றப்பட்டன. 'சத்தியவான் சாவித்திரி', 'சங்கதாரால்', பறங்கியர் காலத்து தமிழ் மண்ணின் வரலாறு கூறும் 'பூதத்தம்பி', கத்தோலிக்க மதத்துப் பெருமை கூறும் 'ஞானசௌந்தரி', நாடு போற்றும் 'நல்ல



தங்காள்' இவைகள் எல்லாம் நடிகமணியின் நடிப்புயர்வால் மீண்டும் மீண்டும் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.

1961-ல் கொழும்பு மாநகரில் கலைக்கழக நாடகக்குழுவினரால் நடத்தப்பட்ட நாடக விழாவிலே நடிகமணி வைரமுத்து அவர்களின் 'நந்தனார்' நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தைப்பற்றி அன்று விமர்ச்சித்த, ஆய்வுசெய்த, மதிப்புரை வழங்கிய அறிஞர்கள் பலர்.

'நந்தனார்' அண்ணாவி மரபு நாடகம் என்றனர் சிலர். 'அண்ணாவி மரபு நாடகமானால் ஒரு அண்ணாவியார் முன் நின்று தாளம்போட, அதனோடு சேர்ந்து ஆடிப் பாடி நடிப்பதுதான் அண்ணாவி மரபு நாடகம்' என்றனர் இன்னும் சிலர்.

'நந்தனார் அண்ணாவி மரபு நாடகமல்ல! ஓர் இசை நாடகம்' என்றனர் வேறுசிலர்.

'இசை நாடகம் என்று சொல்வதானால் முழுக்கமுழுக்க இசையினாலேயே நாடகம் இருக்கவேண்டும். இன்று நடைபெறும், மற்றைய நாடகங்களும் இடையிடையே இசையோடு வசனமும் சேர்ந்து இருப்பதனால் அவைகளையும் இசை நாடகங்கள் என்று கூறலாமல்லவா? எனவே, நந்தனார் அண்ணாவி மரபு நாடகம் அல்ல! இசை நாடகமும் அல்ல! அது ஒரு கொட்டகைக் கூத்து' என்றனர் இன்னும் சிலர்.

இப்படி அந்த நாட்களிலேயே நடிகமணியின் 'நந்தனார்' பலவிதமான ஆய்வுகளை அறிஞர்கள் செய்ய அடிகோலி வைத்துள்ளது.

புராண, இதிகாச, வரலாற்று நாடகங்களை மட்டும் மேடையேற்றவில்லை நடிகமணி. 'பாசம்' என்ற சமூக நாடகத்தில் நடித்துப் புகழ்பெற்றவர் அவர். பகுதி நேரக்கலைஞனாக நாடகங்களை நடத்தவில்லை நடிகமணி. அன்னாருக்குத் தொழில் இசையும் நாடகமுமே! முழுநேர நாடகக் கலைஞன் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள்.

'பிறப்பது மண்மேல் இறப்பதற்கெனறே' என அரிச்சந்திரனாகப் பாடிய நடிகமணி, தன் இறப்புக்கு முன்னும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்கும், ரூபவாஹினி தொலைக்காட்சிக்கும் நிகழ்ச்சிகள் கொடுப்பதற்காகத் தலைநகர் கொழும்புக்கு வந்தார். நிகழ்ச்சிகள் கொடுத்தார். ஆனால் அவர் உயிரோடு வீடு திரும்பவில்லை. 08.07.1989ல் காலன் அவர் உயிரைக் கொழும்பில் வைத்தே பறித்துவிட்டான். வெறும் உடல் வீடு சேர்ந்தது.

நடிகமணியின் மரணச்செய்தியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியில் கேட்டபோது மக்கள் திடுக்குற்றனர். அழுதனர். 'இனி ஓர் அரிச்சந்திரனை எப்போது காணப்போகிறோம்' என்று அழுதவர்கள் எண்ணில் அடங்காதவர்கள்.

நாடக உலகில் பல்கலையிலும் பயிற்சி பெற்ற நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுக்கு வீட்டிலே அஞ்சலிக்கூட்டம் நிகழ்ந்தது. சட்டத்தரணி குமரகுரு அவர்கள் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் அஞ்சலியுரை செலுத்தினர்.

'மறைந்த நடிகமணி வைரமுத்து ஒரு வரலாற்ற நாயகன். அவர் நாடகத்துறைக்கு ஆற்றிய பணிகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். எமது எதிர்காலச் சந்ததி அவரைப்பற்றி அறிந்துகொள்ள நாம் வசதிசெய்யவேண்டியது அவசியம்' என இரங்கல் உரையில் அழுத்திச்சொன்னவர் விரிவுரையாளர் சண்முகலிங்கம் அவர்கள்.

'நடிகமணி சாதாரண மனிதனாக வாழ்ந்து மறையவில்லை. மக்கள் பாரம்பரியத்தின் சின்னமாகவும் எமது கலைச்செழுமைகளின் எடுத்துக்காட்டாகவும் விளங்கியவர். இசையையும் நாடகத்தையும் ஒன்றுசேரக் கையாண்டு அதன் மூலம் சிறந்த கலைஞனாக விளங்கினர் நடிகமணி வைரமுத்து' என அஞ்சலி செய்தவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்.

'நடிகமணி புராண நாடக மரபைக் கட்டி வளர்த்தவர். தனக்காக மட்டும் வாழாமல் சமூகத்தின் காப்பாக, நாடகக் களமாக, நாடகத்துக்காக வாழ்ந்தார்' என விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தமது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார்.

'எளிமையான வாழ்வும், அன்புடன் பழகும் நற்பண்பும் நடிகமணியின் சிறப்பியல்புகள். எமது இளம் தலைமுறையினர் கற்பதற்கு அநேக பண்புகள் அவரிடம் விளங்கின. அவரைப்பற்றி அறிவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டம் இட்டுள்ளோம்' என நம்பிக்கையுரை தந்தவர் நுண்கலை விரிவுரையாளர் சி. மௌனகுரு அவர்கள்.

'நடிகமணி தான்பிறந்த காங்கேசன்துறை மண்ணுக்கு மட்டுமல்லாமல் இந்த இலங்கைத்தீவு முழுவதுக்குமே இசையினாலும், நாடகத்தினாலும் பெருமைதேடித்தந்தவர் அவர் நாடக உலகில் ஏற்றிவைத்த 'நந்தா விளக்கு' இனிமேல் சுடர்விட்டுப் பிரகாசிக்கப்போகிறது' என உறுதியாக உரை செய்தவர் கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள்.

நடிகமணி வைரமுத்து அவர்களின் நாடகங்கள் பல்கலைக்கழக மட்டத்தில் மட்டும் பிரசித்தம் பெற்றவைகள் அல்ல. கற்றறிந்த அறிஞர்களால் சொல்லப்படுகின்றவை! கனதியானவை! காத்திரமானவை! கணிக்கப்படக் கூடியவை!

நடிகமணியின் நாடகங்கள் இலங்கைத் தீவின் பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் மேடை ஏற்றப்பட்டன பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம் அவரின் நாடகங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்தனர். குப்பை மேட்டிலிருந்து கோபுர உச்சிவரை நடிகமணிக்கு ரசிகர்கள் இருந்தனர்.

காலஞ்சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடகத் தயாரிப்பாளர்கள் சானா, கே.எம். வாசகர் ஆகியோர் நடிகமணியின் நடிப்பை நன்குணர்ந்து புரிந்தவர்கள். வேகமாக வளர்ந்து வரும் அறிவியலை ஒட்டி நாடகங்களைத் தயாரிக்க ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து நாடக உலகில் நடிகமணி வைரமுத்து அவர்களை அணையாத விளக்காக எரிய வைத்தார்கள்.

இசைஞானம் கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பகுதிக் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்த திரு. வீ.ஏ. சிவஞானம் அவர்கள் நடிகமணியின் இசையைக் கொண்டு பழைய நாடகமேடைப் பாடல்களை ஒலிப்பதிவாக்கி வானொலியில் கானமழை பொழியக் கேட்கச் செய்திருக்கும் பெருமை அவருக்கு உரியது.

அன்றைய நாடகங்கள் விடிய விடிய நடைபெற்றன காலத்தைச் சுருக்கிக் காரியத்தில் ஈடுபடும் இன்றைய மக்களுக்கு ஏற்ற விதத்தில் எடுத்த கருவையும், கொண்ட குறிக்கோளையும் சுருக்கிப் பழைய நாடகங்களைப் புதுப்பொலிவோடு நடத்திய வர் நடிகமணி. அவர் ஓர் இசைக்கலைஞர். எந்தவகை இசைக்கருவிகளையும் கையாளும் வாத்தியக் கலைஞன்.

நான் முதன் முதலில் வி.வி. வைரமுத்து அவர்களை ஒரு பெண் பாத்திரமாகவே மேடையில் கண்டேன். 'மோகனாங்கி' யாக நடித்தார். அந்தப்பெண்ணாக அவர் ஆடிய நர்த்தனம் இன்றும் என் மனத்திரையில் மறையாமல் தெரிகிறது.

மேடையில் நின்று முழக்கமிடும் நடிகமணி எந்த மயானத்தைக் காத்தாரோ அதே மயானத்தில் அவரும் இன்று சங்கமமாகி விட்டார். 'காற்பணமும், முழுத்துண்டும்' கேட்பதற்கு நடிகமணி இனி இல்லை! நாடக உலகின் ஒளிவிளக்கு நடிகமணி மறைந்துவிட்டார்.

நாடக உலகில் இருந்து ஒரு நடிகமணி மறைந்துவிட்டாலும், அந்த நடிகமணி நாடகக் கலைக்கும், இசைக் கலைக்கும் ஏற்றிவைத்த தூண்டாமணி விளக்கு என்றும் அணையாது எரிந்து கொண்டிருக்கும்.

'நீ நடந்து காட்டினாய்!
அரங்கம் அதிர்ந்தது!
நீ நடித்துக் காட்டினாய்!
சிரங்கள் அசைந்தன!
இசைக்குயிலே... எங்கே நீ போனாய்?
ஏன் இன்று பொய்யானாய்?'

நடிகமணி பிறந்து, தவழ்ந்து, ஓடி, ஆடி, விளையாடித் திரிந்த காங்கேசன்துறை மண்ணின் மக்கள் நடிகமணிக்காக விட்ட கண்ணீர் துளிகள் இவை!

இசையால் புகழ் பரப்பி, நடிப்பால் நெடிதுயர்ந்து, உள்ளத்தால் பொய்யாது, பண்பிலே பாலகன்போல் பலரோடும் இணைந்து வாழ்ந்து வந்த 'நடிகமணி' வி.வி. வைரமுத்து அவர்கள் இனி என்றென்றும் தமிழ் மக்கள் உள்ளங்களில் நீங்காது இருப்பார் என்பது உறுதி.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியாவை மாற்றி எழுதும் தனிமைக் கலாச்சாரம்

- உமை பற்குணரஞ்சன் -

தனிமை மனதிற்கு அமைதி தருவது, இனிமையானது இதனால் ஓட்டமாக ஓடுகின்ற வாழ்க்கையிலே, கூட்டத்திலிருந்து விலகி ஒருமணி நேரமாவது தினம், தனிமையில் அமர்ந்து சிந்திக்கப் பழக வேண்டும் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அன்றாட வேலைகளில் மூழ்கிப்போகும் மனிதர்களுக்கு தனிமை தேவையாக இருக்கிறது. தனிமையை விரும்பி நாம் தேர்வு செய்யும் போது அந்தத் தனிமையில் ஒரு மன நிறைவை நிம்மதியைக் காணமுடியும். ஆனால், இதற்கு மாறாக தனிமை எனும் சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படும் போது அது மன அமைதிக்கு கேடாக அமைந்து விடுகிறது.

கடந்த கால நிகழ்வுகளை அசைப்போட்டுப் பார்க்க தனிமை நமக்கு இன்றியமையாததாக அமைகிறது. மனதிற்குள் புதைந்து கிடக்கும் நினைவுகள், எண்ணங்களை வெளிக்கொண்டுவரும் தன்மை தனிமைக்கு உண்டு. சிலசமயங்களில் உறவுகளும் நட்புக்களும் சூழ்ந்து இருக்கும் போது கூட சிலருக்குத் தனிமைப்பட்டு இருப்பதாய் தோன்றும். உணர்வு சார்ந்த தனிமைக்கு ஒவ்வொருவர் உளவியலைப் பொறுத்து அர்த்தங்கள் பல முன்வைக்கப்படுகின்றன. எல்லோரது வாழ்விலும் ஏதாவது ஒரு தருணத்தில் எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ கண்டிப்பாக தனிமை எட்டிப்பார்க்கவே செய்யும். பொதுவாக மனிதர்கள் வாழும் சூழ்நிலைகளைப் பொறுத்து தனிமைகள் வேறுபடும்.

எட்டு வகையான தனிமை இருக்கிறது எனச் சொல்கிறார் கலை விமர்சகர் ஒகுமுரா.

இயல்பு வாழ்வில் இருந்து தன்னை விடுவித்து ஆசைகளைத் துறந்து வாழும் துறவியின் தனிமை, உடல் நலிவுற்று நடமாட முடியாத நிலையில் ஏக்கமும் அச்சமும் நிராகரிப்பும் கொண்ட நோயாளியின் தனிமை, காதலித்திருக்கும் போது கற்பனையில் சஞ்சரிப்பதும் கனவு காண்பதும் அதே காதல் கசந்த பின் வாழ்வை வெறுத்துதனித்திருப்பதும் காதலின் தனிமை. யுத்தமுனையில் எதிரியின் இலக்கைத் தாக்க காவல் அரங்களில் நிலையெடுத்துக் காத்திருக்கும் போர் வீரரின் தனிமை, வாழ்வியல் கடமைகளைச் செய்து முடித்த பிறகு உடல் ஓய்ந்து ஒதுங்கியிருக்கும் முதியவரின் தனிமை, கற்பனைகளில் கரைந்து எண்ணற்ற சிந்தனைக்கு உயிர் கொடுக்க இயற்கையை நாடி ஓடும் கவிஞரின் தனிமை, தன்னைச்சுற்றி ஒரு கூட்டம் அமையாதா என ஏங்கும் பிரபலங்களின் தனிமை, விடுதலையை எதிர்பார்த்து நாட்களை நகர்த்தும் அல்லது தண்டனையை எண்ணி வலியுடன் வாழும் கைதியின் தனிமை என மனிதர்களின் வாழ்வில் பல வாறான சூழ்நிலைகளில் பலவகையான தனிமை முகம் காட்டும்.

பணிக்காக வேறிடங்களுக்குச் செல்லுதல், வெளிநாட்டு வாழ்க்கை, தனிக்குடும்ப அமைப்பு, விவாகரத்துகள், தாய் - தந்தை இல்லாத குழந்தைகள், ஒருங்கிணைப்பு இல்லாத குடும்பங்கள் போன்ற காரணிகள் நாம் விரும்பாமலே தனிமைச்சூழலை நம் மீது திணிக்க காரணமாக அமைகின்றன. காலப்போக்கில் அச் சூழலுக்கு இசைவாகி அவ்வாறே வாழவும் பழகிக் கொள்கிறோம். ஒரு சமுதாயத்தில் வாழும் கணிசமான மக்களின் மத்தியில் இவ்வாறான வாழ்க்கை அமைப்பு தொடர்ச்சியாக பேணப்பட அது காலப்போக்கில் காலச்சாரமாக மாறத் தொடங்குகிறது.

கொரிய மக்கள் ஆசிய மக்களுக்கே உரிய தனித்துவ இயல்புகளில் ஒன்றான குடும்ப அமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். கூட்டு வாழ்க்கை, சடங்குகள், கொண்டாட்டம் என்பன இவர்களின் வாழ்வு முறைமையோடு பின்னிப்பிணைந்தவை. வட தென் கொரியாவின் நிரந்தரப் பிரிவானது பல்வேறு அரசியல் அமைப்புகளால் இரு நாடுகளிலும் மத வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. வட கொரியா ஒரு மதச்சார்பற்ற அரசாகக் கருதப்படுகையில் தென்கொரியா கிறித்துவம் மற்றும் பௌத்த மதங்களின் எழுச்சியின் ஆளுகைக்குட்பட்டுள்ளது. 2016ம் ஆண்டில் தென் கொரியாவின் புள்ளிவிவர தகவல் சேவை அடிப்படையில், கிட்டத்தட்ட 28 சத விகிதமான வீடுகளில் சுமார் 5 மில்லியனுக்கும் அதிகமான தனி நபர்கள் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 50 வருடங்களுக்கு முன்பு பெரும்



பாலான கொரியாக் குடும்பங்கள் 5 தொடக்கம் 7 குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அண்மைக்காலமாக தென் கொரியாவில் தனித்து வாழும் வாழ்க்கை முறையினால் பல பொருளாதார நன்மைகள் உள்ளன எனும் காரணத்தை முன் வைத்து அங்கு வாழும் இளைய தலைமுறைகளிடையே Honjok எனப்படும் தனித்து வாழும் கலாச்சாரம் வேகமாக வளர்ந்து வருகிறது.

இத்தனிமைக் கலாச்சாரம் மூன்று உப பிரிவுகள் கொண்டது.

Hon-bap எனப்படும் தனிமையில் உணவருந்தும் பழக்கமுடையவர்கள். இவர்கள் உண்ணும்போது யாருடனும் தங்கள் உணவைப் பகிர்வதோ, அருகில் இருப்பதோ இல்லை. தென்கொரியத்தலைநகர் சியோலில் பெரும்பாலான சிறு சிறு அறைகள் (cubicle)வடிவில் அமைக்கப்பட்ட சிறப்பான உணவகங்கள் இவர்களுக்கென உள்ளன. ஆரம்பத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியிலேயே தனியாக உணவுண்ணும் பழக்கம் அதிகமாக காணப்பட்டது. பின்னர், படிப்படியாக இவ்வழக்கம் பணியிடங்களில் வேலைபுரிவோர் மத்தியிலும் பரவத் தொடங்கியது.

கொரியா சுகாதார ஊக்குவிப்பு நிறுவனம் (Korea Health Promotion Foundation) சமீபத்தில் நடத்திய ஆய்வில், 30-59 வயதிற்குட்பட்ட உழைக்கும் கொரியர்கள், குழுமமாக சேர்ந்து உணவருந்துவதை விட தனியாக உணவருந்தும் போது, அவர்கள் கணிசமான நேரத்தைச் சேமிக்கிறார்கள் எனத்தெரிவிக்கிறது. பணியிடங்களில் ஊழியர்கள் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொள்ளுகின்றனர். வேலை கிடைத்த பின்னரும், வேலை இடத்தில் பதவி உயர்வு அல்லது கிடைத்த வேலையைத் தக்க வைப்பதற்கு அவர்கள் கடுமையான போட்டியை எதிர்கொள்கிறார்கள். அவர்களில் சிலர் தனியாக உண்பதன் மூலம் மதிய உணவு இடைவேளையை சிறப்பான முறையில் சேமித்துக் கொள்கின்றனர் தங்கள் தொழிற்துறைப் பகுதியுடன் தொடர்புடைய திறன்களைக்கற்க, தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்த மிச்சப்படுத்தும் இந்த நேரங்களை பயன்படுத்துகின்றனர். இவ்வாறான போக்கு காலப்போக்கில் அவர்களை இயல்பு வாழ்விலும் தனியே உணவருந்தும் முறைமைக்கு இட்டுச்சென்றுள்ளது.

Hon-sul: மதுபான விடுதிகளுக்கு தனியே சென்று, தனியாக அமர்ந்து, மது அருந்தும் இவர்கள் யாருக்கும் சியர்ஸ் (cheers) சொல்லி அருந்தவேண்டிய தேவை இல்லை.

Hon-nol திரைப்படம் பார்த்தல், பயணங்கள், கேளிக்கை விளையாட்டுக்கள், நீச்சல் போன்ற பொழுதுபோக்குகளை தனித்து மேற்கொள்ளுவார்கள். சியோலில் hon-nol நீச்சல் குளங்கள், திரையரங்குகள் பல இவர்களுக்கெனச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

தென்கொரியாவின் அண்மைக்கால சமூக கலாச்சார மாற்றங்களுக்கு முக்கியமான காரணம் அந்த நாட்டிலுள்ள வயதானவர்களின் எண்ணிக்கையாகும். 1953ல் கொரியப் போர் முடிந்ததைத் தொடர்ந்து 1960களில் இருந்து கொரிய சமூகமானது ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டது. மக்கள் தொகை மாற்றம், நகர்ப்புறம், குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் உருவாக்கம் ஆகியவை மாற்றத்தின் முக்கிய அம்சங்களாக அமைந்தன. உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இருந்த தென் கொரியா படிப்படியாக பொருளாதாரத்தில் எழுச்சி பெற்றது. 1950-53 யுத்தத்தின் போது ஜப்பானிலும், மஞ்சூரியாவிலும் குடியேறிய கொரியர்கள் படிப்படியாத திரும்பினார்கள். அவர்களில் சுமார் 80 வீதமானோர் தென் கொரியாவில் குடியேறினர். இம்மக்கள் தொகை மொத்த தென் கொரிய மக்கள் தொகையில் சுமார் 15% என மதிப்பிடப்பட்டது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்கத்திய மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளின் காரணமாக பிறப்பு வீதம் அதிகரித்து இறப்பு விகிதம் குறைந்தது. கொரியாவில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் இக்காலப் பகுதிகளில் அதிகரித்த சனத்தொகைக்குக் காரணமாக இருக்கும் வயதுக் கூட்டத்தினரை Baby boomers என அழைப்பர்.

இவர்களில் பெரும்பாலானோர் 64 முதல் 68 வயதுக்குட்பட்டவர்கள். கடந்த சில தசாப்தங்களில் துரித தொழில்துறை மயமாக்கல் மற்றும் சமூக மாற்றம் காரணமாக, பழைய தலைமுறையினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் இடையேயான பாரிய கலாச்சார இடைவெளிகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த வயதான மக்களின் அதிகரித்துவரும் தேவைகள் தென் கொரியாவின் இளைஞர்களுக்கு பாரிய அழுத்தங்களை வைத்துள்ளது. Baby boomers என அழைக்கப்படும் முதியவர்களின் சமூக நல கொடுப்பனவுக்கு செலவிடப்படும் பணம் கொரிய அரசின் நிதி நிலைமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் 2014ல் இருந்து கட்டாய ஓய்வூதிய வயதெல்லையை 58 முதல் 60 வயது வரை அதிகரிப்பதன் மூலம் பல முதியவர்களை தொடர்ந்து பணியாற்ற அரசு அனுமதி அளித்தது.

இந்த நிலைமையினால் தற்போதுள்ள வேலை வாய்ப்புச் சந்தையை முதியவர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர், இதனால் இளம் தொழிலாளர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள் குறைந்து, இந்த மாற்றமானது நாட்டின் இளைஞர் வேலையின்மை விகிதத்தை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. Millennials எனப்படும் இளைய தலைமுறைக்கூட்டத்தினர் மிகக்குறைந்த ஊதியத்துடன் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த தற்காலிக பதவிகளில் உள்ள இளம் ஊழியர்கள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி வேலையில் இருந்து நீக்கப்படுகின்றனர். தென் கொரியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகக் குறைந்த ஊதியத்தில் தொழிற்சாலைகளில் பணியாற்றும் இளம் பணியாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

சிலகாலங்களுக்கு முன்பு ஆண்கள் மட்டுமே செய்யும் தொழில்களாக கருதப்பட்ட வேலைகளை தற்போது பெண்களும் செய்கிறார்கள். அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு இருந்த போதிலும் தென் கொரியாவின் தொழில்துறை வாய்ப்புக்களில் பெண் பணியாளர்களின் பங்களிப்புக்கு சரியான அங்கீகாரம் அளிக்கப்படுவதில்லை. திருமணமான பெண்கள் குழந்தைப்பேறு காரணமாக பணியில் இருந்து அவர்களுக்கு பேறுகால விடுப்பு வழங்க வேண்டுமென்ற காரணத்திற்காக பெரும்பாலான தொழிற்றுறை நிறுவனங்கள் பெண் பணியாளர்களை வேலையில் சேர்த்துக் கொள்வதில்லை. அது மட்டுமல்லாது தங்களோடு பணிபுரியும் எதிர்ப்பாலினரைப் போல் தாங்கள் பணியிடங்களில் நடத்தப்படாது பாகுபாட்டிற்கு உட்படுத்தப்படுவதாக பெண்கள் தரப்பில் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதைத் தடுக்கும் சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் அவை பணியிடங்களில் பெரியளவு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.


இதன் காரணமாக தற்போது பணிசெய்யும் பல பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதில்லை. குடும்ப உறுப்பினராக வாழ்வதை விட தனிமையில் வாழ்ந்து தமது வாழ்வின் இலட்சியத்தை அடைய விரும்புவதாக அங்கு பல்வேறு துறைகளிலும் முன்னணியில் உள்ள பெண்கள் தெரிவிக்கின்றனர். பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பின் (Economic Co-operation and Development) கூற்றுப்படி, பிற வளர்ந்த நாடுகளில் உள்ள தொழிலாளர்களைக் காட்டிலும் தென் கொரியாவின் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினம் மற்றும் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டிய கட்டாயம் போன்ற சூழ்நிலைகள், அங்குள்ள மக்களின் மீது பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துவதால் இந்த நிலைப்பாடு திருமணமாகாது தனியே வாழுதல், விவாகரத்து, வீழ்ச்சியுறும் பிறப்பு விகிதம் போன்றவற்றுக்கு முக்கிய காரணியாக அமைகிறது. இதன் விளைவாக, தென் கொரியா தலைநகரில் உள்ள பெரும்பாலான குடியிருப்புக்களில் தனி ஒரு நபர் மட்டுமே வசிப்பதாக அரசாங்க புள்ளி விவரங்கள் தெரிவிக்கினறன.

சியோலில் உள்ள தேசிய ஒருங்கமைப்பு ஆய்வாளர் சேவை ஒன்றியம் (National Assembly Research Service in Seoul) நடத்திய ஒரு சமீபத்திய ஆய்வில் இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால் தற்போதுள்ள 50 மில்லியன் தென் கொரிய சனத்தொகையானது 2136ம் ஆண்டளவில் 10 மில்லியனாக இருக்கும். 2750ம் ஆண்டில் தென் கொரிய மக்கள் தொகை பூஜ்ஜியத்தை எட்டும் என்று அஞ்சப்படுகிறது. அதாவது அந்நாடு மக்களே இல்லாத நாடாகும் எனத்
தெரிவிக்கப்படுகிறது.

umai.p@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தையா சட்ட நிறுவனம்

**எனக்கு இருக்கும் பிரச்சினை ஒரு சட்டப் பிரச்சினையா?**

**எனக்கு ஒரு வழக்கறிஞர் தேவையா?**

எனது சட்டப் பிரச்சினையை நானே கையாள விரும்புகிறேன் !

ஒரு வழக்கறிஞரை முழு நேரமாக வேலைக்கு அமர்த்த வசதி இல்லையெனில் எனது தேவைக்கு ஏற்றபடி ஒரு குறிப்பிட்ட சட்ட நுணுக்கங்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் சேவைக்கு அமர்த்த முடியுமா?

எமது சட்ட சேவையை உங்கள் தேவைக்கேற்ப
பெற்றுக் கொள்ள முடியும்

**ஒரு மணி நேர சட்ட சேவை $250 மட்டுமே**

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting

**தயா PK கந்தையா**
**வழக்கறிஞர்**


**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**
**416-333-1001**

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002



**Thaya PK Kandiah** BAS, LLB
Barrister, Solicitor & Notary Public

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org